# பாமரனின் பைபிள் குறிப்புகள்

## நீதிமொழிகள்
## &
## சபை உரையாளர் / பிரசங்கி



க. வி. பால் பாஸ்கர்

# பாமரனின்
# பைபிள் குறிப்புகள்

## நீதிமொழிகள்

## &

## சபை உரையாளர் / பிரசங்கி

க. வி. பால் பாஸ்கர்,
(MCS from Serampore University / TTS, Madurai)
A Bible Student and a Retired Banker

திருவிவிலியம் என்னும் பொது மொழிபெயர்ப்பு இந்த நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவையான இடங்களில், பவர் மொழிபெயர்ப்பு (OV) வசனங்கள் ஒப்பிடப்பட்டுள்ளன.

Contact Information:
K. W. Paul Baskar
WhatsApp & Telegram: +919443338739
Facebook: https://facebook.com/groups/orae.vazhi/
Email: paul_palk@yahoo.co.in

# பாமரனின் பைபிள் குறிப்புகள்

## பொதுவான முன்னுரை

***<u>பொது மொழிபெயர்ப்பு – சில புரிதல்கள்</u>:***

*திருவிவிலியம் - பொது மொழிபெயர்ப்பில், கடவுள், ஆண்டவர், இறைவன், தலைவர் - என்று வெவ்வேறு பெயர்களில் கடவுள் அழைக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இவை ஒவ்வொன்றின் அடிப்படை என்ன என்பதைப் பார்க்கலாம்.*

*எபிரேய பைபிளில், தொடக்க நூல் 1:1ல், படைப்பாளரைக் குறிக்க, ஏலொஹிம் (Yelohim) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏல் என்ற சொல்லின் பன்மையே ஏலொஹிம் என்பது. இந்த வார்த்தையை, சீகன்பால்க் தனது மொழிபெயர்ப்பில் (1715) சருவேசுவரன் என்று குறிப்பிட்டார். இது தமிழ்ச் சொல் அல்ல.*

*ஃபேப்ரீசியஸ் திருப்புதலில் (1772), ஏலொஹிம் என்பது பராபரன் என்று மாறியது. இது ஒரு தமிழ்ச் சொல் என்கிற அளவில் ஒத்துக் கொள்ளலாம்.*

*1850ல் இலங்கையில், பீட்டர் பெர்சிவல் என்பவரது தலைமையில் ஒரு மொழிபெயர்ப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில், சைவ சமயத் தமிழ் அறிஞர்களும் இடம் பெற்றனர். ஏலொஹிம் என்பதற்குத் தனித்துவமான சொல் ஒன்றைக் "கண்டுபிடிக்க" வேண்டும் என்ற முயற்சியில், சைவ சமயப் பெருமகனார் ஆறுமுக நாவலர்*

"கண்டுபிடித்து" அருளிய சொல்லே "தேவன்" என்பது. இங்கு எழும் கேள்வி, **கடவுள் ஒருவரே என்றால், அவருக்கு ஏன் புதிய பெயர்?**

ஏலொஹிம் என்கிற பன்மைப் பெயரை, விண்ணையும் மண்ணையும் அவற்றில் உள்ள அனைத்தையும் படைத்த ஆற்றல் மிக்க கடவுளை, ஒருமையில் "தேவன்" என்று அழைக்கலாமா? **முப்பத்து முக்கோடி தேவர்கள் உள்ள நாட்டில், படைப்பாளரும் ஒரு "தேவனா?"**

பொதுவாக, இப்போது நாம் பழைய மொழிபெயர்ப்பு (Old Version, OV) என்று அழைக்கும் பவர் (Henry Bower) திருப்புதல், 1871ல் வெளிவந்தது. இதற்கு முந்தைய எல்லா மொழிபெயர்ப்புகளிலும் இருந்து திரட்டி, ஐக்கியத் திருப்புதலாக இந்தப் பரிசுத்த வேதாகமம் அமைந்தது. ஆனால், ஆறுமுக நாவலர் அவர்களால் தானமாக அருளப்பட்ட "தேவன்" என்ற சொல் விடாமல் ஒட்டிக் கொண்டது.

கடவுள் ஒருவரே என்றால் அவருக்கு ஒரு பொதுவான பெயர் மட்டுமே இருக்க முடியும். பல மொழிபெயர்ப்புகள் ஆங்கிலத்தில் இருந்தாலும், God, Lord என்கிற பொதுப் பெயர்கள் மாற்றப்படுவதில்லை என்பதை நாம் அறிவோம் - ஆனால் உணர்ந்தோமா?

தமிழ்ப் பொது மொழிபெயர்ப்பில், கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களைப் பார்ப்போம்.

1. ஏலொஹிம் (Elohim) என்கிற பன்மைச் சொல்லுக்கு, ஒருமைப் பன்மையற்ற, கடவுள் என்ற சொல்; ஆங்கிலத்தில், GOD (all capitals). கடவுள் என்பதற்கு, கடந்து உள்ளத்துள் வந்து உறைபவர் என்று பொருள்; மூவொரு கடவுளாக விளங்கும் ஏலொஹிம்; அவரே உள்கடந்து வருபவர் - ஒருமைப் பன்மையற்ற கடவுள் என்ற பெயரில் அழைத்தலே சிறப்பு.

2. யெஹொவா (Yehovaw), என்கிற சொல்லுக்கு "ஆண்டவர்"; ஆங்கிலத்தில், LORD (all capitals).

3. ஏல் (El) என்ற ஒருமைச் சொல்லுக்கு, இறைவன்; ஆங்கிலத்தில், God அல்லது god.

4. அடொனாய் (Ad-o-noy, எஜமானர்) என்கிற சொல்லுக்கு, தலைவர்; ஆங்கிலத்தில், Lord.

இவ்வாறு பொது மொழிபெயர்ப்பில், கடவுள், ஆண்டவர், இறைவன், தலைவர் என்கிற பொதுப் பெயர்களில், கடவுள் அழைக்கப்படுகிறார்.

தவிர, வேற்றின மக்களின் கடவுள், எபிரேய பைபிளில், ஏல் என்று குறிப்பிடப்படுகிறது; அவை பொது மொழிபெயர்ப்பில், தெய்வம் அல்லது தெய்வங்கள் (ஆங்கிலத்தில் god அல்லது gods!) என்று வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு எபிரேயச் சொல்லுக்கும் தமிழ் எவ்வாறு சொற்களை வழங்குகிறது!

பெயரில் என்ன இருக்கிறது என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். மனிதர்களின் பெயர்களைப் போல, கடவுளின் பெயரைக் கருதக் கூடாது; அவரின் நாமம் அதிசயம்; ஆண்டவர் தமது திருப்பெயரில் உறுதியாக இருப்பதை பைபிளில் பார்க்கிறோம். தமது பெயரை அவர் உறுதியோடு, "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" (I AM THAT I AM) என்று மோசேயிடம் உரைக்கிறார். மகிமையும் மாட்சிமையும் நிறைந்த அவருடைய திருப்பெயரை அற்பமாக அழைக்கலாமா?

## மொழிபெயர்ப்புகள் ஏன் வேண்டும்?

தலைமுறைக்குத் தலைமுறை மொழிநடை மாறிக்கொண்டே இருக்கிறது. ஆங்கில மொழியில் பலப்பல மொழிபெயர்ப்புகள் உள்ளன. பல திருப்புதல்களையும், மொழிபெயர்ப்புகளையும் மக்கள் வாசிக்கிறார்கள். இங்கோ, கடினமான மொழி நடையின் பொருட்டு, இளம் தலைமுறையினர் தமிழில் பைபிள் வாசிப்பை விட்டுவிட்டு, ஆங்கில பைபிளை வாசிக்க மாறிவிடுகிறார்கள். எந்தப் பெற்றோரும், ஆங்கில மொழியில் KJV-தான் வாசிக்க வேண்டும் என்று அப்போது சொல்லுவதில்லை. இந்தப் பரந்த மனம் ஏன் தமிழ் பைபிள் வாசிப்பில் பெற்றோருக்கும் திருச்சபைகளுக்கும் இல்லை? எனவே, ஒவ்வொரு திருப்புதலையும் வாசியுங்கள் - வாசிக்க ஊக்குவியுங்கள். ஒப்பிட்டு வாசிக்கப் பழகுங்கள் - பழக்குங்கள்.

திருவிவிலியம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி, "... பழைய ஏற்பாடு, எபிரேய பாடமான 'பிபிலியா எபிராயிக்கா' நூலையும் (Biblia Hebraica, Stuttgart Edition – Masoretic Text) புதிய ஏற்பாடு, விவிலியச் சங்கங்களின் இணையத்தின் வெளியீடான கிரேக்க புதிய ஏற்பாட்டு நூலின் மூன்றாம் பதிப்பையும் (The Greek New Testament, UBS, Third Edition) சார்ந்து மொழிபெயர்க்கப்பட்டன. தொன்மையும் தரமுமான மூலப்பாடங்களையே அடிப்படையாகக் கொண்டாலும், மரபு மொழிபெயர்ப்புகளுக்கு மதிப்புத் தரும் வகையில் சில இடங்களில் காலத்தால் பின்னைய பாடங்களும் இடம்பெறுகின்றன. அவை சதுர அடைப்புக்குறிக்குள் [.........] இடப்பட்டுள்ளன. ... பொருள் துல்லியம், தெளிவு, எளிமை, மக்கள் மொழிநடை, மனிதநேயம், இருபால் சமத்துவநோக்கு ஆகியவற்றைக் கண்முன்கொண்டு செய்யப்பட்ட இம்மொழியாக்கம் கிறிஸ்தவ சமுதாயம் மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் இறையுளத்தை அறிந்து செயல்படத் தூண்டும் என நம்புகிறோம். திருவிவிலியம் திருச்சபை வழிபாடுகளிலும், கருத்தரங்குகளிலும், விவிலியப் பள்ளிகளிலும், வீதிகளிலும் பயன்பட வேண்டும்; இல்லங்களிலும் உள்ளங்களிலும் இடம் பெற வேண்டும்.

இதன் மூலம் இறையாட்சி வருக!
இறைவாக்கு ஒளிர்க!"

**_பைபிள் விளக்க நூல்கள்:_**

*பிள்ளைகள் பள்ளியில் படிக்கும்போது, பாட நூல்கள் தவிர, துணை நூல்களை வாங்கித் தரும் நாம், தொன்மையும் ஆழமுமான பைபிளைத் தெளிவாக வாசிக்க ஏன் துணை நூல்களை வாசிப்பதில்லை?*

*இந்த மின்னூலை வாசியுங்கள்; உங்கள் அனுபவங்களைப் பகிருங்கள். மகிழ்வுறும் வேளைகளில், கடவுளுக்கே துதி! குறை ஏதும் தென்படின், தொடர்பு கொண்டு தெரிவியுங்கள்.*

*நல்ல வாசிப்பு அனுபவத்திற்குள் தூய ஆவியார் வழிநடத்துவாராக!*

**_முன்னுரையை முடிக்கும் முன்:_**

*எனது பைபிள் குறிப்புகளுக்கு உறுதுணையாக இருப்பவை:* King James Concordance *மற்றும்* Strong's Hebrew and Greek Dictionaries.

*பைபிள் குறிப்புகளையோ, எனது இறையியல் எண்ணங்களையோ வெளிப்படுத்தும் தகுதி ஏதும் எனக்கு இல்லை; ஆவியில் உந்தப்படுகிறேன். நாள்தோறும் வாட்சப் / டெலிகிராம் வழியாக நான் எழுதத் தொடங்கியபோது, தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் என்னுடன் பயின்று, திருச்சபைகளை நடத்திவரும் சகோதரர்கள், அவர்களுடைய வாட்சப் குழுக்களில் என்னை இணைத்து, எனக்குத் தளம் அமைத்துத் தந்தார்கள். அவர்களுக்கு என் அன்பும் நன்றிகளும்! பின்னர், இதனை வாசிக்க நேர்ந்த அருள்பணியர், திருப்பணியர், சபைத் தலைவர்கள்*

பலரும், அவர்களுடைய வாட்சப் குழுக்களில் என்னை இணைத்துக் கொண்டு, அனேகம் பேரை இந்தக் குறிப்புகள் சென்றடைய ஊக்கமளித்தனர்; நேரில் பழகாமல், ஆவியால் இந்தப் பணியில் இணைந்த அவர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றி! இந்தக் குழுக்களில் இணைந்து பயணிக்கும் இறைமக்கள் பலரும் கரம் தட்டி எனக்கு ஊக்கமூட்டுகின்றனர்; அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியும் வாழ்த்துகளும்! இதன் வழியாக ஆண்டவராகிய ஆவியார் என்னை என் எழுத்துப் பணியில் அன்றாடம் வலுப்படுத்துகிறார். எல்லாப் புகழ்ச்சியும் மேன்மையும் மாட்சியும் கடவுளாகிய ஆண்டவருக்கே! சற்றும் எண்ணிப் பாராத விதத்தில், கடவுளின் அநாதி திட்டத்தின்படி சந்திக்க நேர்ந்த, சகோதரர் ஏசுதாஸ் சாலமன் (wordofgod.in - கிறிஸ்தவத் தமிழ் நூல்களை, இலவசமாகத் தரவிறக்க) அவர்களின் ஊக்கமான வார்த்தைகளுக்காக ஆண்டவரைத் துதிக்கிறேன். எபிரேய சொற்குறிப்புகளுக்குத் துணை நிற்கும், எங்கள் குடும்ப நண்பர், திருப்பணியர் சகோதரர் இராஜேந்திரனுக்கு என் அன்பும் நன்றியும்.

38 அகவையில் இரட்சிக்கப்பட்ட எனக்கு, பைபிள் வாசிப்பில் ஆவிக்குள் அனலூட்டிய / அனலூட்டும், அருட்திரு சாமுவேல்ராஜ் (கொல்கத்தா), அருட்திரு மோசஸ் ஜெயக்குமார் (பெங்களூரு), அருட்திரு ரிச்சர்ட் (மதுரை), அருட்திரு மா. ஞானவரம் (மதுரை), அருட்திரு கிறிஸ்டோபர் ஜாக்சன் (மதுரை), அருட்திரு இரவீந்திர விக்டர் சிங் (மதுரை), அருட்திருமிகு ஐவி சிங், அருட்திரு ச. வேதமுத்து (மதுரை), சகோதரர் திருப்பூர் சாலமன் (Theos

Gospel Hall வலையொளி), சகோதரர் ஆபிரகாம் டேவிட் ஜான் (World Tamil Christian Fellowship வலையொளி), கிறிஸ்துவுக்குள் இளைப்பாறும் என் அருமை அண்ணன் விக்டர் P. லாரன்ஸ் (மதுரை) - ஆகிய அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கங்கள்! இந்த நூலின் சிறப்புகள் இவர்களையே சாரும். இந்தப் பணியில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொள்ளத் துணையாக இருக்கும், என் இணையர் மற்றும் குடும்பத்தினரே என் பெருமை.

இறை அருள் பெருகட்டும்! கடவுளுக்கே மாட்சி!

"பெத்சூர்," ஒசூர் அன்பன்,
19-04-2023 க. வி. பால் பாஸ்கர்

# பொருளடக்கம்

## நீதிமொழிகள்


| அதிகார எண் | பக்க எண் | அதிகார எண் | பக்க எண் |
|---|---|---|---|
| முன்னுரை | 15 | 16 | 181 |
| 01 | 23 | 17 | 197 |
| 02 | 36 | 18 | 207 |
| 03 | 44 | 19 | 215 |
| 04 | 57 | 20 | 225 |
| 05 | 68 | 21 | 238 |
| 06 | 76 | 22 | 248 |
| 07 | 86 | 23 | 261 |
| 08 | 92 | 24 | 275 |
| 09 | 104 | 25 | 289 |
| 10 | 110 | 26 | 301 |
| 11 | 123 | 27 | 311 |
| 12 | 135 | 28 | 321 |
| 13 | 146 | 29 | 332 |
| 14 | 156 | 30 | 343 |
| 15 | 168 | 31 | 360 |

## சபை உரையாளர் / பிரசங்கி

| அதிகார எண் | பக்க எண் | அதிகார எண் | பக்க எண் |
|---|---|---|---|
| முன்னுரை | 378 | 07 | 453 |
| 01 | 389 | 08 | 468 |
| 02 | 403 | 09 | 478 |
| 03 | 415 | 10 | 489 |
| 04 | 426 | 11 | 499 |
| 05 | 435 | 12 | 508 |
| 06 | 446 | | |

# நீதிமொழிகள்

# 20 நீதிமொழிகள் 00

## முன்னுரை

*நீதிமொழிகள் – சில பொதுவானவை; சில நகைச்சுவையானவை; சில அனைவரும் அறிந்தவை; சில உலகோரால் பொதுவில் சொல்லப்படும் பழமொழிகள் அல்லது சொலவடை போன்றவை; சிலவே தனிப்பட்ட அல்லது கூட்டுப் பற்றுறுதி வாழ்வுக்கு உரியவை.*

*வாழ்க்கையை உள்ளவாறு பேசும் ஒரு நூல், நீதிமொழிகள் எனும் இந்நூல்; இந்நூல் பேசுவது நேரடியான நமது திருச்சபை வாழ்க்கையை அல்ல; மாறாக, நம் ஒவ்வொருவரின் குடும்ப வாழ்க்கையில், பணித் தளங்களில், பொது இடங்களில், நாம் ஒவ்வொருவரும் வாழும் வாழ்க்கையை. எனவே இதை ஏன் பைபிளில் நமக்குச் சொல்ல வேண்டும் என்று தோன்றக்கூடும். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" என்கிறது திருக்குறள் (குறள்#140). அதுபோலவே, வாழ்வில் நாள்தோறும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய நற்சிந்தனைகளைத் தெளிவோடும் சுருக்கமாகவும் உரைப்பன நீதிமொழிகள். நாடு, இனம், மொழி மற்றும் சமயம் கடந்த பொதுமையான நூல் இதுவாகும்.*

*திருக்குறள் பாக்கள் போன்ற, ஈரடியில் அமைந்த, ஒன்றோடு ஒன்று முரண்படும் குணங்களை (சான்றாக, சோம்பேறித்தனமும் சுறுசுறுப்பும்) இணைத்துச் சொல்லும் நீதிமொழிகள் உள (சான்றாக, 2:21-22, 11:6, 12:6, 14:11, 15:8, 21:29 மற்றும் 29:27). அதிகாரம் 10 முதல் அதிகாரம் 22 வரை, பெரும்பாலான வசனங்கள், இரட்டை வாக்கியங்களாக உள்ளன; அவற்றுள், அதிகாரம் 10 முதல் அதிகாரம் 15 வரை, பெரும்பாலான*

*வசனங்கள், முதல் பகுதியின் முரணான பின்பகுதியைக் கொண்டனவாக உள்ளன. அதேவேளையில், கதை போன்ற அமைப்பையும், நீதி அறிவுறுத்தப்படும் தன்மையையும் நூலில் காணலாம். கதை மாந்தர் போலப் புத்தியுள்ள பெண்ணும் வருவார், ஒடுக்கப்பட்ட தெருமுனைப் பெண்ணும் வருவாள்!*

*தீதும் நன்றும் மோதிக்கொள்ளுவதே பைபிள் என்றால், அதன் ஓர் அத்தியாயமே நீதிமொழிகள் என்னும் இந்நூல். தீமைக்கு விலகி, நன்மையில் நாட்டங்கொண்டு, வையத்துள் வாழ்வாங்கு வாழ நம்மை வழிநடத்தும் நூல் நீதிமொழிகள்.*

*நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட மற்றும் பொதுவான வாழ்க்கையைச் செம்மைப்படுத்திட வழிகாட்டும் நூல் நீதிமொழிகள். அன்னையர் பலரும் தங்கள் பதின்பருவக் குழந்தைகளை நாளொரு அதிகாரமாக இந்நூலைப் படிக்கச் சொல்வதுண்டு; நல்வாழ்வை நாடுவோர் தவறாமல் அவ்வாறு தங்கள் குழந்தைகளை நெறிப்படுத்துங்கள்.*

Δ

*நாம் நமது கடவுளை மீட்பர் என்கிறோம். மீட்பரைக் குறித்து எழுதப்பட்ட பைபிளில், மீட்பு குறித்துப் பேசாத இந்நூல் எதற்கு என்று தோன்றலாம். தீய பழக்கங்களிலிருந்து நம்மை விடுவிப்பதால் இந்நூல் பைபிளில் இருக்கத்தக்கதே! "குப்பைகளை மறுசுழற்சி செய்து பயனுக்குக் கொண்டுவருவதுபோல, இவ்வுலகில் வாழத் தகுதியற்றோராக நரகத்தின் வழியில் செல்லும் மக்களை, நல்வாழ்வுக்கு ஆயத்தம் செய்ய ஆண்டவர் இந்நூல் வழியாக இடைபடுகிறார்" என்று சொல்கிறார் டேவிட் பாசன் எனும் அறிஞர். அந்த வகையில், எதிலிருந்து எதை நோக்கி ஒவ்வொருவரும் மீட்கப்பட்டோம் என்பதை இந்நூல் சித்தரிக்கிறது என்று அவர் கூறுகிறார். அவரே மேலும் கூறுகிறார்: 'பைபிளுக்கு வெளியேயும்*

*ஞானம் இருக்கிறது; ஏனெனில் எல்லா மக்களும் கடவுளால் அவருடைய சாயலில் படைக்கப்பட்டோரே! ஆனால் அந்த ஞானம் முழுமையடைவது இல்லை; கிறிஸ்துவால் மீட்கப்படும் ஒருவரே வாழ்வின் பொருளை, இறைநோக்கத்தை உணர்கிறார். எனவே உலக ஞானம் மடமையானது; கிறிஸ்து அருளும் ஞானமோ நிலைவாழ்வைத் தெளிவுபடுத்துவது.'*

*பழங்காலத்தில், உலகம் போற்றும் சிந்தனையாளர்களாக, ஞானிகளாக, கன்ஃபூசியஸ், எபிகுரஸ், ஹிபோகிரடிஸ், பிளேட்டோ, சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில் போன்றோர் அறியப்பட்டோர்; கிட்டத்தட்ட அவர்களின் காலத்தில், மகாவீரர், மாசாத்தன் (மன்கலி கோசாலர் / ஐயனார்), புத்தர், திருவள்ளுவர் (காலம் அறுதியிடப்படவில்லை) போன்றோர் இங்கு வாழ்ந்து, ஞானத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஞானிகள் அனைவரும், கிறிஸ்து இயேசு பிறப்பதற்கு 600 ஆண்டுகளுக்குள் வாழ்ந்தோர். ஆனால் நீதிமொழிகள் நூல் தொகுக்கப்பட்டதோ கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 950 ஆண்டுகளுக்கு முன்பாக என்பது வியப்பிற்குரியது.*

*திருப்பாடல்களை இயற்றியவர் தாவீது என்பது எப்படியொரு பொதுப் புத்தியோ அதுபோன்றதுவே, நீதிமொழிகள் நூலின் ஆசிரியர் சாலமோன் என்பது. திருப்பாடல்களில் அதிகமானவை எப்படி தாவீதுக்கு உரியனவோ அதுபோன்றே நீதிமொழிகளில் அதிகமானவை சாலமோனுக்கு உரியவை.*

*22:17 மற்றும் 24:23 வசனங்களில் வழியாக, சில பொதுவான ஞானிகளின் மொழிகளை சாலமோன் தொகுத்துள்ளார் என்பது தெளிவு. அதிகாரம் 25 முதல்*

அதிகாரம் 29 வரை உள்ளவை: எசேக்கியா அரசரின் காலத்தில் ஏற்கனவே வழக்கத்தில் இருந்த சாலமோனின் நீதிமொழிகள் பல இந்த நூலோடு சேர்க்கப்பட்டுள்ளன. அதிகாரம் 30, ஆகூர் என்பவரின் ஞானமொழிகள்; அதிகாரம் 31, இலமுவேல் எனும் மாசாவின் மன்னருக்கு அவருடைய தாயின் அறிவுரைகள். இந்த அதிகாரத்தில், அரமேயச் சொற்களின் பயன்பாடு இருப்பதையும், அதனால் இலமுவேலின் தாயார் வேற்றினத்தார் என்பதையும் பைபிள் அறிஞர்கள் சுட்டுகின்றனர். தம் சாயலால் தாம் படைத்த மனிதர்கள் அனைவருக்கும் கடவுள் தமது ஞானத்தை அருளுகிறார் என்பதையே இது குறிக்கிறது.

மேலே சொல்லப்பட்ட எதுவும் சாலமோனின் ஞானத்தின் மதிப்பைக் குறைத்துவிடாது; அவரது இன்னும் இரண்டு நூல்கள் ஞான இலக்கியங்களாக நமது பைபிளில் உள்ளன. அவருடைய ஞானம் சிறந்தது, நிறைவானது, அது கடவுளே அருளியது என்பதை நாம் அறிவோம் (1 அரசர்கள் 3:5-14, 4:29-34, 5:7&12, 10:4-9&23-24, 11:41; 2 குறிப்பேடு 1:7-12, 9:1-8&22-23). அவர் உரைத்த நீதிமொழிகள் 3000 (1 அரசர்கள் 4:32). மேலும், இந்நூல் சாலமோனுக்கு உரியது என்பதை 1:1, 10:1 & 25:1 வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த அடிப்படையில், இந்நூல் கி.மு. பத்தாம் நூற்றாண்டிற்கு உரியது என்பது உறுதியாகிறது. சாலமோனின் காலத்திய இஸ்ரயேலின் செல்வமும் செல்வாக்கும் இந்த ஞானத்தின் அடிப்படை.

இந்நூல் அடிக்கோடிட்டு வலியுறுத்துவது **ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்,** 1:7, 9:10 & 31:30. இதுவே நூலின் கருப்பொருளாக நூலெங்கும் இழையோடுகிறது. இந்த நூலின் நோக்கத்தை சாலமோன் அரசர் முன்னுரை போல முதல் ஆறு வசனங்களில் வெளிப்படுத்துகிறார்.

*நீதிமொழி / Proverb என்பது maw-shawl (மாஷால்) என்னும் எபிரேயச் சொல். இந்தச் சொல், எண்ணிக்கை 23:7&18 மற்றும் 24:3&15ல், "திருஉரை (oracle)" என்றும், இணைச் சட்டம் 28:37ல், "கேலிப் பழமொழி" என்றும், திருப்பாடல்கள் 44:14ல், "பழிச்சொல்" என்றும், எசாயா 14:4ல் "ஏளனப் பாடல்" என்றும், எசேக்கியேல் 17:2ல், "விடுகதையின் வடிவில் உவமை" என்றும் பொருள்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இந்த மூலச்சொல் பரந்த பொருளுடையது என்று அறியலாம். நூலிலும் இந்த உண்மையை நாம் உணர இயலும் (பார்க்க, 1:6); இந்நூலின் வசனங்கள் பழமொழிகளாக, திருஉரைகளாக, விடுகதைகளாக, தெளிவிக்கும் உவமைகளாக இருக்கின்றன. ஈரடிக் கவிதைகளாகவும், சிந்திக்கத் தூண்டும் கேள்விகளாகவும், முரண் சுட்டி விளக்குவனவாகவும், ஒப்பிட்டு விளக்குவனவாகவும் நூலின் மொழிநடை உள்ளது. அதேவேளையில், அனைத்துமே சுருக்கமாக, நறுக்குத் தெறித்தார்ப்பொால அமைவது வசனங்களின் தனிச்சிறப்பு.*

*நூலின் சில பகுதிகள், ஞானத்தை ஒரு பெண்ணாக உருவகப்படுத்துவதைக் காணலாம், 1:20-33, அதி.8 & அதி.9. நூலின் இலக்கான இளைஞரை ஈர்க்கும் வண்ணம், அத்தகைய மொழிநடை பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அதேவேளையில், இந்தப் பகுதிகள் நமக்கு கிறிஸ்து இயேசுவையே ஞானமாக முன்னிறுத்துவனவாக உள்ளன (ஒப்பிடுக, 1:20-23, 8:1-3 & யோவான் 7:37-39).*

*குறிப்பாக, வ.8:22-30 பகுதியை, கடவுளின் வாக்காகிய கிறிஸ்து இயேசுவோடு யோவான் ஒன்றித்து எழுதியிருப்பது உணர்ந்து அறியத்தக்கது, (யோவான் 1:1-5). அவ்வாறே, கொலோசையர் 1:16-20ன்*

திருமொழிகளையும் வாசித்து, இப்பகுதியில் கிறிஸ்துவை நாம் உணரலாம்.

## நூலின் அமைப்பு:

1. முன்னுரை, 1:1-1:7; ஞானம் மற்றும் ஞான வழியின் மேன்மை, 1:8 ~ 9:18
2. சாலமோனின் நீதிமொழிகள், 10:1 ~ 22:16
3. ஞானிகளின் முதுமொழிகள் முப்பது, 22:17 ~ 24:22
4. ஞானிகளின் இதர முதுமொழிகள், 24:23-34
5. எசேக்கியா அரசரின் காலத்தில் தொகுக்கப்பட்ட சாலமோன் அரசரின் நீதிமொழிகள், அதி.25 ~ 29
6. ஆகூரின் மொழிகள், அதி.30
7. இலமுவேலின் மொழிகள், 31:1-31; அவற்றுள், எபிரேய அகரவரிசையில் அமைந்த, நிறைவான பண்பமை மனைவி குறித்த கவிதை, 31:10-31

## நினைவில்கொள்ள வேண்டிய வசனங்கள்:

சிறப்பானதொரு நூலில், மொத்தத்தையும் நினைவில் வைத்தலே நலம். எனவே, கருப்பொருளின் அடிப்படையில், இறையச்சம் குறித்த வசனங்கள் பலவற்றுள் சில இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன:

உன்னை நீ ஒரு ஞானி என்று எண்ணிக்கொள்ளாதே; ஆண்டவருக்கு அஞ்சித் தீமையை அறவே விலக்கு. (3:7)

ஆண்டவருக்கு அஞ்சுவது தீமையைப் பகைக்கச் செய்யும்; ஆணவத்தையும் இறுமாப்பையும் தீமையையும் உருட்டையும் புரட்டையும் நான் (ஞானம்) வெறுக்கின்றேன். (8:13)

கடவுளுக்கு அஞ்சிநடப்போரின் சொல்லில் இனிமை சொட்டும்; பொல்லாரின் சொற்களிலோ வஞ்சகம் பொங்கி வழியும். (10:32)

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் ஒருவருக்குத் திடநம்பிக்கை அளிக்கும்; அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு அடைக்கலமாயிருப்பார். *(14:26)*

பெருஞ்செல்வமும் அதனோடு கவலையும் இருப்பதைவிட, சிறுதொகையும் அதனோடு ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமும் இருப்பதே மேல். *(15:16)*

எழில் ஏமாற்றும், அழகு அற்றுப் போகும்; ஆண்டவரிடம் அச்சம்கொண்டுள்ள பெண்ணே புகழத்தக்கவள். *(31:30)*

***நினைவில் கொள்ளுங்கள்:***

*வாக்குத்தத்தம் போலமைந்த எந்தவொரு வசனமும் இந்த நூலில் இல்லை. அறிவுரைகளும், கட்டளைகளும், நெறிமுறைகளுமே நீதிமொழிகள் என்னும் இந்த நூல்.*

***அதனால்தானோ என்னவோ, இந்த நூலின் வசனங்கள் நமது பிரசங்க பீடங்களை ஈர்ப்பதில்லை!***

## *மொழிபெயர்ப்பு குறித்து:*

*ஓரிரு மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் அல்லது முரண்களை எனது உள்ளத்தில் உணர்ந்தேன். ஆனாலும், பிற ஞான இலக்கியங்களான யோபு, திருப்பாடல்கள் நூல்களோடு ஒப்பிடுகையில், புரிதலுக்கும் வாசிப்புச் சுவைக்கும் ஏற்ற சிறப்பான மொழிபெயர்ப்பாக, பொது மொழிபெயர்ப்பில் இந்நூல் விளங்குகிறது. எபிரேய பைபிளின் **அதே** ஆங்கிலத் திருப்புதலாக, KJV உட்பட எந்தத் திருப்புதலும் இல்லை. புரிதலுக்காக ஒவ்வொரு வாக்கியத்திலும் ஓரிரு சொற்கள் எந்தத் திருப்புதலிலும் சேர்ப்பது தவிர்க்க முடியாதது.*

***மொழிபெயர்ப்பு இலக்கணத்தோடு பைபிள் நமக்குரைத்த (பார்க்க, இணைச் சட்டம் 4:2, 12:32; நீதிமொழிகள் 30:6; திருவெளிப்பாடு 22:18-19) எச்சரிக்கையைக் குழப்பிக்கொள்ளாதிருப்பது நலம்.*** *அந்த வகையில், நீதிமொழிகள் நூலைப் பொது மொழிபெயர்ப்பில் வாசிப்பது, தெளிந்த புரிதலைத் தரும் என்பதில் எனக்குச் சற்றும் ஐயமில்லை.*

## *முடிக்கும் முன்பு ஓர் எச்சரிக்கை:*

*எனது குறிப்புகளின் ஊடே, திருக்குறள் மற்றும் நமது சில நீதி நூல்களின் செய்யுள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை பைபிளின் கருத்தை அப்படியே வெளிப்படுத்துவன அல்ல; இணையானவையும் அல்ல; ஏற்கனவே நாம் குறிப்பிட்டபடி, சமகாலத்தவையும் அல்ல. நம் மண்ணின் நீதி இலக்கியங்களில் சொல்லப்பட்ட நீதி, அதற்கு நெடுங்காலம் முன்பே பைபிளில் சொல்லப்பட்டது என்பதை ஒப்புநோக்கவே அவை எடுத்தாளப்பட்டுள்ளன.*

*"ஆமென்! புகழ்ச்சியும் பெருமையும் ஞானமும் நன்றியும் மாண்பும் வல்லமையும் வலிமையும் எங்கள் கடவுளுக்கே என்றென்றும் உரியன; ஆமென்!"*

*"பெத்சூர்," ஒசூர்* — *அன்பன்,*
*15-06-2023* — *க. வி. பால் பாஸ்கர்*

# 20 நீதிமொழிகள் 01

## (நூலின் நோக்கம்)

*1 தாவீதின் மகனும் இஸ்ரயேலின் அரசனுமாகிய
சாலமோனின் நீதிமொழிகள். 2 இவற்றைப்
படிப்பவர் ஞானமும் நற்பயிற்சியும் பெறுவர்;
ஆழ்ந்த கருத்தடங்கிய நன்மொழிகளை
உணர்ந்துகொள்வர்; 3 நீதி, நியாயம், நேர்மை நிறைந்த
விவேக வாழ்க்கையில் பயிற்சி பெறுவர்; 4
அறிவற்றோர் கூரறிவு பெறுவர்; இளைஞர் அறிவும்
விவேகமும் அடைவர். 5 ஞானமுள்ளோர் இவற்றைக்
கேட்டு அறிவில் இன்னும் தேர்ச்சியடைவர்;
விவேகிகள் அறிவுரைகூறும் திறமை பெறுவர்; 6
நீதிமொழிகளையும் உவமைகளையும் ஞானிகளின்
நன்மொழிகளையும் புதிர்மொழிகளையும் அவர்கள்
உய்த்துணர்வர்.*

## (இளைஞருக்கு நல்லுரை)

*7 **ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின்
தொடக்கம்**; ஞானத்தையும் நற்பயிற்சியையும்
மூடரே அவமதிப்பர். 8 பிள்ளாய்! உன் தந்தை தந்த
நற்பயிற்சியைக் கடைப்பிடி; உன் தாய் கற்பிப்பதைத்
தள்ளிவிடாதே; 9 அவை உன் தலைக்கு அணிமுடி;
உன் கழுத்துக்கு மணிமாலை. 10 பிள்ளாய்! தீயவர்கள்
உன்னைக் கவர்ச்சியூட்டி இழுப்பார்கள்; நீ
அவர்களுடன் போக இணங்காதே. 11 அவர்கள்
உன்னைப் பார்த்து, "எங்களோடு வா; பதுங்கியிருந்து
எவரையாவது கொல்வோம்; யாராவது ஓர்
அப்பாவியை ஒளிந்திருந்து தாக்குவோம்; 12
பாதாளத்தைப்போல நாம் அவர்களை உயிரோடு
விழுங்குவோம்; படுகுழிக்குச் செல்வோரை அது
விழுங்குவதுபோல, நாமும் அவர்களை*

முழுமையாக விழுங்குவோம். 13 எல்லா வகையான அரும்பொருள்களும் நமக்குக் கிடைக்கும்; கொள்ளையடித்த செல்வத்தால் நம் வீடுகளை நிரப்புவோம். 14 நீ எங்களோடு சேர்ந்துகொள்; எல்லாவற்றிலும் உனக்குச் சமபங்கு கிடைக்கும்" என்றெல்லாம் சொல்வார்கள். 15 பிள்ளாய்! அவர்களோடு சேர்ந்து அவர்கள் வழியில் செல்லாதே; அவர்கள் செல்லும் பாதையில் அடிவைக்காதே. 16 அவர்கள் கால்கள் தீங்கிழைக்கத் துடிக்கின்றன; இரத்தம் சிந்த விரைகின்றன. 17 பறவையைப் பிடிக்க, அதன் கண்முன்னே அன்று, மறைவாகவே கண்ணி வைப்பார்கள். 18 அவர்கள் பதுங்கியிருப்பது அவர்களுக்கே ஊறுவிளைவிக்கும் கண்ணியாகிவிடும்; அவர்கள் ஒளிந்து காத்திருப்பது அவர்களையே அழிக்கும் பொறியாகிவிடும். 19 தீய முறையில் பணம் சேர்க்கும் அனைவரின் முடிவும் இதுவே; அந்தப் பணம் தன்னை வைத்திருப்போரின் உயிரைக் குடித்துவிடும்.

## (ஞானம் விடுக்கும் அழைப்பு)

20 ஞானம் வீதிகளிலிருந்து உரத்துக் கூறுகின்றது; பொதுவிடங்களிலிருந்து குரலெழுப்புகின்றது; 21 பரபரப்பு மிகுந்த தெருக்களிலிருந்து அழைக்கின்றது; நகர வாயிலிருந்து முழங்குகின்றது; 22 "பேதையரே, நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் உங்கள் பேதைமையில் உழல்வீர்கள்? இகழ்வார் இன்னும் எவ்வளவு காலம் இகழ்ச்சி செய்வதில் மகிழ்ச்சி காண்பர்? முட்டாள்கள் இன்னும் எவ்வளவு காலம் அறிவை வெறுப்புடன் நோக்குவார்கள்? 23 என் எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்வீர்களானால், நான் என் உள்ளத்திலிருப்பதை உங்களுக்குச் சொல்வேன்; என் செய்தியை உங்களுக்குத் தெரிவிப்பேன். 24 நான் கூப்பிட்டேன், நீங்களோ செவிசாய்க்க மறுத்தீர்கள்; உங்களை அரவணைக்கக் கையை நீட்டினேன்; எவரும் கவனிக்கவில்லை. 25 என் அறிவுரைகளுள் ஒன்றையும்

*பொருட்படுத்தவில்லை; என் எச்சரிக்கை
அனைத்தையும் புறக்கணித்தீர்கள். 26 ஆகையால்,
உங்களுக்கு இடுக்கண் வரும்போது, நான்
நகைப்பேன்; உங்களுக்குப் பெருங்கேடு
விளையும்போது ஏளனம் செய்வேன். 27 பேரிடர்
உங்களைப் புயல் போலத் தாக்கும்போது, இடுக்கண்
உங்களைச் சுழற்காற்றென அலைக்கழிக்கும்போது,
துன்பமும் துயரமும் உங்களைச்
சூழ்ந்துகொள்ளும்போது, நான் எள்ளி
நகையாடுவேன். 28 அப்பொழுது, நீங்கள் என்னை
நோக்கி மன்றாடுவீர்கள்; நான் பதிலளிக்க
மாட்டேன்; ஆவலோடு என்னை நாடுவீர்கள்;
ஆனால் என்னைக் காணமாட்டீர்கள்.*

*29 ஏனெனில், நீங்கள் அறிவை வெறுத்தீர்கள்;*
**ஆண்டவரிடம் அச்சம் கொள்வதில் உங்களுக்கு
விருப்பமில்லை.** *30 நீங்கள் என் அறிவுரையை
ஏற்கவில்லை; என் எச்சரிக்கை அனைத்தையும்
அவமதித்தீர்கள். 31 நீங்கள் உங்கள் நடத்தையின்
பயனைத் துய்ப்பீர்கள்; சூழ்ச்சிசெய்து நீங்களே
சலித்துப் போவீர்கள். 32 பேதையரின் தவறுகள்
அவர்களையே கொன்றுவிடும்; சிறுமதியோரின்
தற்பெருமை அவர்களை அழித்துவிடும். 33 எவர்
எனக்குச் செவி கொடுக்கின்றாரோ அவர் தீங்கின்றி
வாழ்வார்; தீமை வருகையிலும் அச்சமின்றி அவர்
மன அமைதியுடன் இருப்பார்."*

*நீதிமொழிகள் 1:1-33*

## *சிந்தனைக்கு*

*வசனம் 1:1-7*
*சாலமோன் அரசர் இந்த நூலின் முன்னுரையாக இந்த அறிமுகத்தை அளிக்கிறார். அவரது ஆட்சிக் காலத்தில், "யூதா மற்றும் இஸ்ரயேல் மக்கள் கடற்கரை மணலைப் போல் இருந்தனர்; உண்டு குடித்து மகிழ்ந்து இருந்தனர்" (1 அரசர்கள் 4:20ஆ).*

செழிப்பு நமது கவனத்தைக் கடவுளிடமிருந்து திருப்பிவிடும், 30:8-9. இது சாலமோனுக்கே நேர்ந்ததை நாம் அறிவோம்; இதுபோன்ற சூழலில், கடவுளுக்கு அஞ்சுதல் நமக்கு அறிவூட்டும்; நெறிப்படுத்தும்; செழிப்பின் விளைவான வீழ்ச்சியிலிருந்து காக்கும். அதையே தனது முன்னுரையாக சாலமோன் எழுதுகிறார்.

வசனம் 1:1
சாலமோன், நூலின் ஆசிரியரும் தொகுப்பாளரும். தாவீது அரசரின் மகன்; அரண்மனையில் பிறந்த இஸ்ரயேலின் முதல் அரசர். மொத்த இஸ்ரயேலையும் ஆண்ட மூன்றாம் மற்றும் கடைசி அரசர். அவர் இஸ்ரயேலின் அரசராக இருந்த காலம், கி.மு. 970 முதல் கி.மு. 930 வரை. அவர் உதிர்த்த நீதிமொழிகள், அவருடைய வாழ்நாளின் இறுதிக்காலத்தில் நூலாகத் தொகுக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

Δ

நீதிமொழிகள், சொல் குறிப்பு, பார்க்க - முன்னுரை.

வசனம் 1:2
"...ஞானமும் நற்பயிற்சியும்..." –
நூலின் முதன்மையான நோக்கம். நீதிமொழிகளைப் படித்து ஞானம் பெறலாம்; அதன் வழியில் நடந்து பயிற்சி பெறாமல், அதன் ஆழத்தை உணர்ந்து, அதன் வழியில் நிலை நிற்க முடியாது. ஆக ஞானம் என்பது ஒரு நாணயம் போல, இரண்டு பக்கங்களை உடையது; ஒன்று, அறிதல்; மற்றது, அறிந்ததைப் பற்றிக் கொண்டு நடத்தல். கற்கக் கசடற, கற்றபின், நிற்க அதற்குத் தக (குறள்#391). மேலும் பார்க்க, 2 பேதுரு 1:5-7.

வசனம் 1:3-4
முதியோர் மற்றும் இளையோர் என இரண்டு குழுக்களை சாலமோன் இங்கு முன்நிறுத்துகிறார். இளையோர் ஞானத்தைப் படித்து அறிவு பெற்று

விவேகமாக நடப்பர்; அவர்களே இன்னும் வயதான நிலையிலும் மீண்டும் மீண்டும் பயில, மென்மேலும் நுண்ணறிவு பெறுவர். படிப்பு -> பயிற்சி -> படிப்பு எனும் சுழற்சி நுண்ணறிவைத் தரும். தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; கற்றனைத்து ஊறும் மாந்தர்க்கு அறிவு (குறள்#396).

வசனம் 1:3-5
இந்த வசனங்களில் மீண்டும் மீண்டும் இடம்பெறும் சொல் "**பெறுவர்**."

**கொடுப்பதை விடப் பெறுதல் சிறப்பு**. விலையின்றி ஆண்டவர் அருளுகிறார் - அது கடவுளின் இயல்பு; ஆனால் இவ்வுலகில் எத்தனை பேர் பெற்றுக் கொள்கிறோம்? செல்வத்துள் செல்வம் அருட்செல்வம்; பூரியார் கண்ணும் உள பொருள் செல்வம் (குறள்#241). பொருளற்றார் ஒருகால் பூப்பர்; அருளற்றார் அற்றார்; மற்று ஆதல் அரிது (குறள்#248).

வசனம் 1:5
ஞானமுள்ளோர் –
ஏற்கனவே ஞானமுள்ளோர் எனில் அவர்களுக்கு ஞானம் இன்னும் வேண்டுமா? ஞானமுள்ளோர் திறந்த மனமுடையோர்; புதிய புதிய புரிதலில் நாட்டமுடையோர்; ஆகவே அவர்கள் மென்மேலும் ஞானம் அடைவர். பார்க்க, 2:1-5, 9:9, 10:8, 12:1, 13:1, 15:31.

Δ
"...கேட்டு..." –
ஞானம் பெறுதலின் / கற்றலின் அடிப்படைத் தகுதி கேட்டல். செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை (குறள்#411). செவி உணவின் கேள்வி உடையார், நிலத்து அவி உணவின் ஆன்றாரோடு ஒப்பர் (குறள்#413). எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் (குறள்#416).

*பட்டறிவு, படிப்பறிவு என இரண்டு விதமாக அறிவைப் பெறலாம். பட்டு அறிவது வாழ்க்கைக் கல்வி; அடுத்தவரின் வாழ்க்கையைப் படித்து அல்லது கேட்டு அறிவது படிப்பறிவு. கல்வி கரையில, கற்பவர் நாள் சில! (நாலடியார்#135). கற்றது கையளவு, கல்லா(த)து உலகளவு (ஔவையார்). எல்லையற்ற கல்வியைப் பெறக் கற்றலின் கேட்டலே நன்று என்பது பழமொழி.*

‡‡

*நமது பைபிளுக்கு நூல் கணக்கு உண்டு; அதிகாரக் கணக்கு உண்டு; வசனக் கணக்கு உண்டு; ஆனால் அதன் வெளிப்படுத்தலுக்கு எல்லைகளே இல்லை. அந்த வெளிப்படுத்தலை நாம் பெறவே – தளரா இறைநம்பிக்கையும், மீண்டும் மீண்டும் வாசிப்பும், ஆவியாரின் துணையும் நமக்கு இன்றியமையாதது (யோவான் 16:7-15).*

*வசனம் 1:5-6*

*ஞானமடைதலின் நன்மைகள்:*

** அறிவில் தேர்ச்சி*

** அறிவுரை வழங்கும் திறன்*

** நீதிமொழிகளை, ஞானிகளின் மொழிகளை அறியும் திறன்*

** புதிர்களை விடுவிக்கும் ஆற்றல்*

*இவைகளை இளம்வயதிலேயே பெற்றிருந்த யோசேப்பையும் தானியேலையும் நாம் அறிவோம். நிறைவுக் காலத்தில் நிகழ்வதை அறிந்தவராக தானியேல் தன் முதிர்வயதில் விளங்கினார்.*

*வசனம் 1:6*

*"ஞானிகளின் நன்மொழிகள்" –*

*பைபிளுக்கு வெளியேயும் சொல்லப்படும் ஞானத்தைப் பகுத்து அறியும் திறன். இவ்வாறு பெறப்படும் ஞானம், ஓர் அறிவுத்திறள் போலாகிறது. நம்மை வழிநடத்தும் மேய்ப்பரின் கோல் போல ஆகிறது, பார்க்க, சபை உரையாளர் 12:11; மேலும் வாசிக்க, சபை உரையாளர் 9:1-18.*

*வசனம் 1:7*

*“ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்” –*

*நூலின் கருப்பொருளை முன்னுரையில் அறிமுகம் செய்யும் ஆசிரியர் – இந்த அதிகாரத்திலும் (வ.29), இனிவரும் அதிகாரங்களிலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் நற்பண்பு.* ***அச்சம் இல்லாமல் கீழ்ப்படிதல் இல்லை.*** *கீழ்ப்படிதலே முதல் ஆதாமிடம் இல்லாதது, இரண்டாம் ஆதாமில் நிறைவு பெறுவது. பைபிளில் நாம் பார்க்கும் உயர்நிலையை அடைந்தோர் எல்லோரும் கடவுளுக்கு அஞ்சியோர்; மாறாக இறையச்சம் இல்லாதோர், தங்கள் உயர்நிலையிலிருந்து வீழ்ந்தனர்.*

*மோசே முதல் (இணைச் சட்டம் 10:12-13) அனைவரும் இறையச்சம் குறித்துப் பேசினர் எனினும், நேரடியான சொற்களில் முதலில் சொன்னவர், யோபு (23:15 & 28:28). பின்னர் திருப்பாடல் 111:10ல் இதனை வாசிக்கிறோம். முத்தாய்ப்பாக, சாலமோனே எழுதுகிறார்: "கடவுளுக்கு அஞ்சி நட; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படி. இதற்காகவே மனிதர் படைக்கப்பட்டனர்" (சபை உரையாளர் 12:13).*

***அச்சங்களை வெல்லும் அச்சம், இறையச்சம்*** *(திருப்பாடல் 34:4&7).*

*ஞானத்தைப் பெறப்பெற, நமக்கு ஏற்படும் தெளிவும், ஆண்டவருக்கு அஞ்ச வேண்டும் என்பதே! (15:33)*
*மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற்குத் தன் உயிர் அஞ்சும் வினை இல்லை (குறள்#244).*

*வசனம் 1:8 ~ 9:18*

*மகனுக்கு அறிவுறுத்துவது போல, இளையோருக்குப் போதிக்கும் சாலமோன்.*

*வசனம் 1:8-9*
*இளையோருக்கு முதல் அறிவுரையே, பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, அவர்களின் அறிவுரைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே! அதன் சிறப்பைத் தக்க எடுத்துக்காட்டுகளோடு சாலமோன் விளங்கவைக்கிறார்.*

*வசனம் 1:8*
*பிள்ளாய் –*
*தந்தை நிலையிலிருந்து இளைஞன் ஒருவனுக்கு எடுத்துரைப்பது போன்ற ஒருமுறை; ஞான நூல்களில் சாலமோன் கையாளும் ஒரு வழிமுறை, வ.10&15, 3:1,11&21, இன்னும் பல வசனங்கள்; மேலும் பார்க்க, சபை உரையாளர் 12:12.*

*KJVல் my (son) என்பதும், OVல் என் (மகனே) என்பதும் ஓர் இணைப்புச் சொல் மட்டுமே – சாலமோன் இவ்வாறு குறிப்பிடுவது தன் மகனை அல்ல.*
Δ

*"உன் தாய் கற்பிப்பதைத் தள்ளி விடாதே" –*
*தாயின் அறிவுரைகளும் மதிப்பற்றவை, கடைப்பிடிக்கத்தக்கவை; மேலும் பார்க்க, 6:20, 10:1, 15:20, 20:20, 30:17. தந்தையைப் போலவே தாயையும் போற்றவும், அவருடைய அறிவுரைகளைக் கடைப்பிடிக்கவும் சாலமோன் வலியுறுத்துகிறார்.*

*வசனம் 1:10-19*
*களவு, வழிப்பறி மற்றும் வன்முறைக்கு எதிரான அறிவுரை. எளிதாகப் பொருள் சேர்க்கும் மனப்போக்குக்கு எதிரான அறிவுரை.*

*கேடு விளைவிப்பதும் தீங்கு பயப்பதுமான வழிகளில் செல்ல ஈர்ப்பை ஏற்படுத்தும் நயமான சொற்களுக்கு இளையோரை எச்சரிக்கும் சாலமோன்.*

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் இளையோர் கவனமாக இருக்க வேண்டும். சேராத இடம் தனிலே சேர வேண்டா (உலகநீதி#8). சேரிடம் அறிந்து சேர் (ஆத்திசூடி#51). நல் இணக்கம் அல், அது அல்லல் படுத்தும் (கொன்றைவேந்தன்#48). நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலம்மிக்க நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே, நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே, நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே (மூதுரை#9).

*வசனம் 1:15*

*"...வழி... பாதை..." –*

*நாம் எந்த வழியில் செல்கிறோம் என்பதை மீண்டும் மீண்டும் நினைவூட்டும் நீதிமொழிகள் நூல். இங்கு தீயோரின் வழிகளுக்கு விலகி நிற்கச் சொல்லும் சாலமோன், நேரிய வழியில் செல்ல அறிவுறுத்துகிறார், 4:13-15.*

*வசனம் 1:17*

*பறவைகளுக்கு இருக்கும் எச்சரிக்கை உணர்வுகூட இல்லாதோராக இளையோர் இருப்பதை சாலமோன் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறார். மேலும் பார்க்க, 7:22-23.*

*வசனம் 1:18-19*

*விதைப்பதே விளையும்.*

*வினை விதைப்போர் வினை அறுப்பர். அவரை விதைக்கச் சுரையா முளைக்கும்? பார்க்க, 5:22; திருப்பாடல்கள் 7:15-16, 9:15, 35:8.*

*வசனம் 1:20-33*

*இளையோரை வருந்தி அழைக்கும், உருவம் பெற்ற ஒன்றாக ஞானம்.*

*ஞானத்திற்கு இங்கு சொல்லப்பட்ட உருவகம் ஒரு பெண். ஆனால் இங்கு ஒலிக்கும் குரல், புறக்கணிக்கப்பட்ட கிறிஸ்து இயேசுவினுடையது, யோவான் 7:37-39. இந்தப் பகுதியில் நாம் வாசிக்கும்*

*வ.28டை, இயேசு நேரடியாகவே அறிவிக்கிறார் (யோவான் 7:34). இயேசுவே இறைஞானத்தின் நிறைவான முழு வடிவம், யோவான் 1:1-14; 1 கொரிந்தியர் 1:24; கொலோசையர் 1:15-17 & 2:3; எபிரேயர் 1:1-4.*

*நல்வாழ்வுக்கு உரத்த குரலில் அழைக்கும் கிறிஸ்து இயேசுவின் குரலுக்குச் செவிசாய்த்து, நிலைவாழ்வைப் பெறுவோம்.*

*வசனம் 1:20-21*
*"... வீதிகளிலிருந்து ... பொதுவிடங்களிலிருந்து ... பரபரப்பு மிகுந்த தெருக்களிலிருந்து ... நகர வாயிலிலிருந்து ..." –*
*நற்செய்தி நூல்களை நினைவூட்டும் வசனங்கள். எத்தனை முறை கிறிஸ்து இயேசு பொதுவிடங்களிலிருந்து, தெருக்களிலிருந்து அறைகூவல் விடுத்தார்? (பார்க்க, லூக்கா 13:31-35 & 19:41-44).*

*வசனம் 1:21*
*நகர வாயில் –*
*போக்குவரத்து நிறைந்த இடம்; வணிகம் நடக்கும் இடம், 2 அரசர்கள் 7:1; நகரின் தலைவர்கள் கூடி நீதி வழங்கும் இடம், தொடக்க நூல் 19:1; ரூத் 4:1; யோபு 29:7.*

*வசனம் 1:22*
*"...எவ்வளவு காலம்..." –*
*இந்தக் கேள்வி எழும்பி இப்போது மூவாயிரம் ஆண்டுகள் ஓடிவிட்டன! இன்றைக்கும், உலகோர் பேதைமையில் உலழ்கிறார்கள்; அடுத்தவரை இகழ்ந்து மகிழ்ச்சி அடைகிறார்கள்; நல்லறிவை வெறுக்கிறார்கள். ஆனாலும், நற்செய்தி அறிவித்தல் என்றும் தொடரும் பணி.*

Δ

*மூன்று வகையான மக்களை இங்கு நாம் பார்க்கிறோம்:*
** பேதையர் -*
*எதையும் ஏற்றுக் கொள்ளும் போக்குடையோர்; அதனாலேயே தீயோருக்குப் பலியாகும் வாய்ப்புள்ளோர்; திருந்திவாழவும், கடவுளின் வழிகளில் வலுப்படவும் வாய்ப்புடையோர்.*

** இகழ்வார் -*
*எதையும் இகழும் தன்மையுடையோர்; இத்தகையோர், அருவருக்கத்தக்க அளவுக்குப் பிடிவாதமும், யாராலும் உணர்த்த இயலாத அளவுக்கு மடமையும் கொண்டோர். இவர்கள் செருக்குடையோர், 21:24; சச்சரவை உண்டாக்குவோர், 22:10; தங்கள் போக்கைத் திருத்திக் கொள்ளாதோர், 9:7-8, 13:1, 15:12; ஆதலால் அவர்கள் தண்டிக்கப்படுவர், 3:34, 9:12, 19:29. இகழ்ச்சி செய்வோரை அடித்துப் பேதைகளுக்கு உணர்வூட்ட சாலமோன் ஆலோசனை தருகிறார், 19:25, 21:11.*

** முட்டாள்கள் -*
*கடவுளின் வழியையும் அறிந்துள்ளவர்கள்; ஆனால் அவ்வழியில் நடப்பதை எதிர்ப்போர்.*

*வசனம் 1:23*
*கடவுளாகிய ஆண்டவர், தமது ஆவியை அருளுவார் எனும் இறைவாக்கின் தொனி, எசாயா 44:3; யோவேல் 2:28-29.*

*வசனம் 1:24-25*
*இறை அழைப்பை ஒத்த அழைப்பு, எசாயா 65:1-2. கிறிஸ்து இயேசுவின் அழைப்பு, மத்தேயு 11:28-30.*

*வசனம் 1:24*
*"நீங்களோ செவிசாய்க்க மறுத்தீர்கள்" –*

*ஞானத்தை அருளும் ஆண்டவரையே புறக்கணித்த இஸ்ரயேலர் மற்றும் புறக்கணிப்பின் விளைவு, எசாயா 1:4, 5:24; ஒசேயா 2:13, 11:2.*

*வசனம் 1:25*
*மாறாக, ஒரு கட்டளையாக, 8:33.*

*வசனம் 1:26-31*
*அழைக்கப்பட்டும் புறக்கணிப்போரைக் குறித்து, ஆண்டவரிடம் அச்சம் கொள்வதில் விருப்பமற்றோரைக் குறித்து இந்த வசனங்கள் பேசுகின்றன. ஒப்பிடுக, லூக்கா 7:30-35; யோவான் 3:30-36.*

*வசனம் 1:26-27*
*"... நகைப்பேன் ... ஏளனம் செய்வேன் ... எள்ளி நகையாடுவேன்" –*
*சுயமதியைச் சார்ந்து, ஞானத்தை ஏற்றுக்கொள்ளாதோரின் வீழ்ச்சியில் ஞானத்தின் ஆர்ப்பரிப்பு.*
Δ

*"...இடுக்கண் ... பெருங்கேடு ... பேரிடர்..." –*
*திடீரென நேரிடும் பேரழிவு; தப்பிப் பிழைத்தோருக்கு என்றும் - என்றென்றும் அச்சம் தரும் நிகழ்வு. அந்த அச்சத்தால், நலமானவற்றை நாடி மக்கள் வருவர் என்று, அத்தகைய நிகழ்வுகளில் ஞானம் மகிழ்கிறது.*

*வசனம் 1:28*
*"நான் பதிலளிக்க மாட்டேன்" –*
*பாவத்தில் வீழ்ந்த இஸ்ரயேலரைப் பாராத ஆண்டவர் போல, இணைச் சட்டம் 1:45; எசாயா 1:15. காலம் கடந்த, உண்மையற்ற, நம்பகத் தன்மையற்ற தேடல், எசாயா 1:15, 59:2-3; எரேமியா 11:11, 14:12; எசேக்கியேல் 8:17-18; ஒசேயா 5:5-6.*

*வசனம் 1:32-33*
*செல்வச்செழிப்பு பொய்யானதொரு பாதுகாப்பு உணர்வைத் தரும்; அதனை நாடுவோரும் இருக்கிறார்கள், திருப்பாடல் 30:6; எரேமியா 22:21. மாறாக, ஆண்டவரே அருளுவதால், ஞானத்தை ஏற்றுக்கொள்வோர், பாதுகாப்போடும் மன அமைதியோடும் வாழ்வர், 2:6-8, 11:28, 28:26.*

*இது கிருபையின் காலம்; தேடுவோர் ஆண்டவரைக் கண்டு, அன்பின் அடைக்கலத்தை அடையும் காலம். ஏற்றுக் கொண்டோர் நலவாழ்வையும், பாதுகாப்பையும், வளத்தையும் அடையும் காலம் (எசாயா 32:17-20; எசேக்கியேல் 34:24-27). ஞானத்தின் வழியில் பயணிக்க, தூய ஆவியார் வழிநடத்துவாராக!*

# 20 நீதிமொழிகள் 02

## *(ஞானம் அளிக்கும் பயன்)*

*1 பிள்ளாய்! நீ ஞானத்திற்குச் செவிசாய்த்து,
மெய்யறிவில் உன் மனத்தைச் செலுத்தி, 2 என்
மொழிகளை ஏற்று, என் கட்டளைகளைச் சிந்தையில்
இருத்திக்கொள். 3 ஆம், நீ உணர்வுக்காக வேண்டுதல்
செய்து, மெய்யறிவுக்காக உரக்க மன்றாடு. 4
செல்வத்தை நாடுவதுபோல் ஞானத்தை நாடி,
புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோடு அதைத்
தேடு. 5 அப்பொழுது,* ***ஆண்டவரிடம் கொள்ளும்
அச்சம்*** *இன்னதென்பதை உணர்ந்து கொள்வாய்.
கடவுளை அறியும் அறிவைப் பெறுவாய். 6 ஏனெனில்
ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும்
விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே. 7
நேர்மையாளருக்கு அவர் துணை செய்யக்
காத்திருக்கின்றார்; மாசற்றோருக்குக் கேடயமாய்
இருக்கின்றார். 8 நேர்மையாளரின் பாதைகளை அவர்
பாதுகாக்கின்றார்; தம் அடியாரின் வழிகளைக் காவல்
செய்கின்றார். 9 எனவே, நீ நீதியையும் நியாயத்தையும்
நேர்மையையும் நலமார்ந்த நெறிகள் அனைத்தையும்
தெரிந்துகொள்வாய். 10 ஞானம் உன் உள்ளத்தில்
குடிபுகும்; அறிவு உன் இதயத்திற்கு இன்பம் தரும். 11
அப்பொழுது, நுண்ணறிவு உனக்குக் காவலாய்
இருக்கும்; மெய்யறிவு உன்னைக் காத்துக்கொள்ளும்.
12 நீ தீயவழியில் செல்லாமலும், வஞ்சகம் பேசும்
மனிதரிடம் அகப்படாமலும் இருக்கும்படி, அது
உன்னைப் பாதுகாக்கும். 13 நேர்மையான
வழியைவிட்டு விலகி, இருளான பாதையில்
நடப்போரின் கைக்கு உன்னைத் தப்புவிக்கும். 14
அவர்கள் தீமைசெய்து களிக்கின்றவர்கள். 15
அவர்களுடைய வழிகள் கோணலானவை.*

*அவர்களுடைய பாதைகள் நேர்மையற்றவை. 16*
*ஞானம் உன்னைக் கற்புநெறி தவறியவளிடமிருந்தும்,*
*தேனொழுகப் பேசும் விலைமகளிடமிருந்தும்*
*விலகியிருக்கச் செய்யும். 17 அவள் இளமைப்*
*பருவத்தில் தான் மணந்த கணவனைக் கைவிட்டவள்;*
*தான் கடவுளோடு செய்த உடன்படிக்கையை*
*மறந்தவள். 18 அவளது வீடு சாவுக்கு வழிகாட்டிக்*
*கொண்டிருக்கின்றது; அவளின் வழிகள்*
*இறந்தோரிடத்திற்குச் செல்கின்றன. 19 அவளிடம்*
*செல்லும் எவனும் திரும்பி வருவதேயில்லை;*
*வாழ்வெனும் பாதையை அவன் மீண்டும்*
*அடைவதில்லை. 20 எனவே, நீ நல்லாரின் நெறியில்*
*நடப்பாயாக! நேர்மையாளரின் வழியைப்*
*பின்பற்றுவாயாக! 21 நேர்மையாளரே உலகில்*
*வாழ்வர்; மாசற்றாரே அதில் நிலைத்திருப்பர். 22*
*பொல்லாரோ உலகினின்று பூண்டோடு அழிவர்;*
*நயவஞ்சகர் அதனின்று வேரோடு*
*களைந்தெறியப்படுவர்.*

*நீதிமொழிகள் 2:1-22*

## *சிந்தனைக்கு*

*முதல் அதிகாரத்தில் வன்முறைக்கு இழுக்கும் நண்பர்களைப் பார்த்தோம். இந்த அதிகாரத்தில், அழிவுக்கு இழுக்கும் பெண்ணைக் குறித்து சாலமோன் எச்சரிக்கிறார். பாதை மற்றும் வழி என்ற சொற்கள் நீதிமொழிகள் நூலில் அதிகம் இடம்பெறுவன. நல்லதையும் கெட்டதையும் எடுத்துரைத்து, நல்வழியில் பயணிக்க ஞானம் நம்மை நெறிப்படுத்துகிறது.*

*வசனம் 2:1-4*
*ஞானத்தின் வழியில் பயணிக்க வேண்டியதன் சிறப்பை, ஒரு தந்தை தன் மைந்தனுக்கு*

*எடுத்துரைப்பது போல, சாலமோன் தொடர்கிறார். ஞானத்தை ஆர்வத்தோடு தேடும்போது என்ன நிகழும் என்பதை 5-8 மற்றும் 9-13 வசனங்களில் சாலமோன் வெளிப்படுத்துகிறார். வ.1-4 என்பது செயலாகவும், வ.5-13 என்பது அதன் விளைவாகவும் அமைகிறது.*

*வசனம் 2:2*
*"என் மொழிகளை ஏற்று, என் கட்டளைகளைச் சிந்தையில் இருத்திக் கொள்" –*
*கற்றலின் முதற்படி, ஏற்றுக் கொள்ளுதல். ஞானத்தைச் செல்வத்தோடும் புதையலோடும் ஒப்பிடும் சாலமோன், தன் சொற்களைச் செல்வம் போலப் பெற்று, சிந்தை எனும் பெட்டகத்தில் சேர்த்து வைத்து, ஏற்ற வேளைகளில் எடுத்துப் பயன்படுத்த இளையோரை அழைக்கிறார். பார்க்க, திருப்பாடல் 119:11.*

*வசனம் 2:3*
*கடவுளிடம் மன்றாடி ஞானத்தைப் பெற்றுக்கொண்ட சாலமோன், அதே வழியைக் கடைப்பிடிக்க இளையோரைத் தூண்டுகிறார்.*

*வசனம் 2:4*
*"...புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோடு..." –*
*ஒப்பிடுக, கிறிஸ்து இயேசு சொன்ன உவமை, மத்தேயு 13:44.*
*அத்தகைய ஆர்வத்தோடு வேதத்தின் அதிசயங்களைத் தேடிப் படிக்கிறோமா?*

*வசனம் 2:5*
*ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் (1:7அ) என்ற சாலமோன், ஞானத்தைத் தேடும் போது, ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் என்னவென்று அறிந்து கொள்வோம் என்கிறார். இவ்வாறு, இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து நமக்குள் இயங்குகின்றன; ஒன்றுக்கொன்று*

இலக்காகவும் அதேவேளையில் ஒன்றுக்கொன்று வழியாகவும் அவை இருக்கின்றன. அதுமட்டுமின்றி, **ஞானத்தைத் தேடுவது என்பது ஆண்டவரை நாடுவதுதான்.** ஏனெனில் ஞானத்தை அருளுபவர் ஆண்டவரே! (வ.6 & யாக்கோபு 1:5). செல்வத்தை நாடுவது போல் ஞானத்தைத் தேட சாலமோன் தூண்டுகிறார், வ.4.

நம்பிக்கையோடு ஐயப்பாடின்றிக் கேட்டால், முகம் கோணாமல் தாராளமாய் கடவுள் ஞானத்தை அருளுவார் என்று யாக்கோபு (1:6) வலியுறுத்துகிறார்.

வசனம் 2:7
"...துணை செய்ய..." –
OV, "மெய்ஞானத்தை"; KJV, "sound wisdom"; எபிரேயத்தில் "too-shee-yaw," டூஷீயா; இதற்கு, support, (by implementation) ability, (direct) help, (in purpose) undertaking, (intellectual) an understanding என்றெல்லாம் பொருள்கொள்கிறார், ஸ்ட்ராங்.
Δ

"நேர்மையாளருக்கு அவர் துணைசெய்யக் காத்திருக்கிறார்" –
உள்ளத்தில் தாகத்தோடு தேடுவோருக்கு அருள ஆண்டவர் காத்திருக்கிறார் (மத்தேயு 7:7).
Δ

"மாசற்றோருக்குக் கேடயமாய்..." –
ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்கு, தொடக்க நூல் 15:1; இஸ்ரயேலருக்கு மோசேயின் இறுதி ஆசி, இணைச் சட்டம் 33:29; தாவீது தன் வாழ்வில் உணர்ந்து செய்த அறிக்கை, 2 சாமுவேல் 22:3; கடவுளாகிய ஆண்டவரே நமக்கும் கேடயமாக இருக்கிறார், திருப்பாடல் 84:11.

வசனம் 2:8
"...பாதுகாக்கிறார் ... காவல் செய்கின்றார்" –

*கடவுள் அருளும் பாதுகாப்பு, திருப்பாடல் 91:3-7 & 11-12.*

*வசனம் 2:9*
*இணை, 1:3.*

*வசனம் 2:10-13*
*ஞானத்தை நாடி அடைந்தோர் பெறும் நலன்கள். நாம் வாழும் ஒவ்வொரு தருணத்திற்கும் சரியான முடிவுகளை எடுக்கவும், அவற்றைச் செயல்படுத்தும் வழிகளைத் தெரிந்து கொள்ளவும் நம்மை நடத்துவது, உள்ளத்துள் உறையும் ஞானம்.*

*வசனம் 2:10*
*"அறிவு இதயத்திற்கு இன்பம் தரும்" –*
*இணை, 3:17, 16:24.*

*வசனம் 2:13*
*"இருளான பாதை..." –*
*தீங்கு செய்வோர் நாடுவது, யோவான் 3:19-20. மேலும் பார்க்க, யோபு 24:14-17; எசாயா 29:15.*

*வசனம் 2:14-15*
*வ.13ல் குறிப்பிடப்பட்ட, இருளான பாதை என்பதன் விளக்கமாக இந்த வசனங்கள் உள்ளன. தீமை செய்வதில் இன்பம் காண்போராக இருளின் வழிகளில் பயணிப்போர் உள்ளனர். மேலும் பார்க்க, 2 தெசலோனிக்கர் 2:12.*

*வசனம் 2:14*
*பொது மொழிபெயர்ப்பில், பின்வரும் பொருளுள்ள பகுதி விடுபட்டுள்ளது: "அவர்கள் தீயோராதலால் தங்கள் கெடுமதியில் அகமகிழ்பவர்கள்."*

*வசனம் 2:15*
*"அவர்கள் வழிகள் கோணலானவைகள்" –*
*விரிவாக, எசாயா 59:7-8.*

*வசனம் 2:16-19*
*இருளான வழிகளில் நடக்க விரையும் உள்ளம், தீமை செய்வதை நாடித் தன்னை அழித்துக் கொள்ளும் தீங்கைக் குறித்து இங்கு சாலமோன் பேசுகிறார். வரைமுறைகளற்ற பெண் எத்தகையவள் என்பதை வ.16-17ல் குறிப்பிட்டுச் சொல்லும் சாலமோன், எத்தகைய பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதை வ.18-19ல் விளக்குகிறார்.*

*மைவிழியார்தம் மனை அகன்று ஒழுகு (கொன்றைவேந்தன்#78). கெடுவழியில் நடக்கும் பெண்ணின் வீடு அழிவின் வாசலைத் திறந்து சாவுக்குள் மூழ்குதல் போன்றதும், மீள முடியாததும் ஆகும் என இளையோருக்கு சாலமோன் அறிவுறுத்துகிறார் (வ.18). ஞானத்தந்தையாகத் திமொத்தேயுவுக்குப் பவுலடிகள் எழுதியதும் நினைவுகூரத்தக்கது (2 திமொத்தேயு 2:22). அதுபோலவே, இளைஞர் யோசேப்பும் நினைவில் கொள்ளத்தக்கவர் (தொடக்க நூல் 39:7-12).*

*வசனம் 2:16*
*"கற்பு நெறி தவறியவள்... விலைமகள்..." –*
*மீண்டும் 5:20&7:5.*

Δ

*"தேனொழுகப் பேசும் விலைமகள்..." –*
*மீண்டும், 5:3, 6:24, 7:21.*

Δ

*விலைமகள் –*
*OV, பரஸ்திரீ; KJVல் strange woman. பர என்பது வேறு என்றும், பொது என்றும் அகண்ட / பரந்த என்றும் பொருள்படும். வரைவின் மகளிர், இருமனப் பெண்டிர், பொதுப் பெண்டிர், பண்பில் மகளிர், மாய மகளிர், வரைவிலா மாணிழையார், பொருட் கொருளாளர் என்றும் தமிழில் பரத்தையர் குறிப்பிடப்படுவர் (குறள்#911 முதல் 920 வரை).*

*OV மற்றும் KJVல், வேசி, விபசாரி, பரத்தை / harlot, whore, prostitute என்று வெவ்வேறு சொற்களில் பாலியல் ஒழுக்கம் தவறிய பெண்ணைக் குறிக்கலாம் எனும்போது, பரஸ்திரீ அல்லது / strange woman என்ற சொற்கள் எதற்கு?*

*எபிரேய மொழியில், தொடக்க நூல் 38:15ல் ked-ay-shaw (கேடேய்ஷா) என்ற சொல்லும், லேவியர் 19:29ல் zaw-naw (ஸானா) என்ற சொல்லும் khaw-lal (காலல்) என்ற சொல்லும் பாலின ஒழுக்கம் தவறிய பெண்ணைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதுபோல, இங்கும் இந்நூலின் சில இடங்களிலும், ish-shaw (இஷ்ஷா) + naw-sheem (நாஷ்ஷீம்) + zoor (ஷூர்) என்ற முச்சொற்களின் கூட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள், இஷ்ஷா என்ற சொல் பெண்ணையும், ஷூர் என்ற சொல் அன்னியத்தையும், நாஷ்ஷீம் என்ற சொல் பாலியல் ஒழுக்கம் தவறியவரையும் குறிப்பன. அதுபோலவே, nok-ree / நொக்ரீ என்ற சொல்லும் min-nee / மின்னீ என்ற சொல்லோடு இணைந்து, வேற்றினப் பரத்தையைக் குறிக்க இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பரத்தைமையையும் வேற்றினத்தையும் சாலமோன் மட்டுமே இணைத்துப் பேசுவதை இதன் வழியாக, பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்க முடிகிறது. பாலியல் ஒழுக்கம் தவறிய பொருளில், பரஸ்திரீ அல்லது strange woman என்ற சொற்கள், பழைய ஏற்பாட்டின் வேறு நூல்களில் இல்லை.*

*மோசேயின் திருச்சட்டத்தின் அடிப்படையில், எபிரேயருள் எந்தவொரு ஆணோ பெண்ணோ பரத்தைமையில் ஈடுபட முடியாது (இணைச் சட்டம் 23:17); இஸ்ரயேலில் வாழ்ந்த வேற்றினப் பெண்கள் மட்டுமே பாலியல் தொழிலில் ஈடுபட முடியும். எனவே, சாலமோன் தனது நீதிநூலில், பாலியல் தொழிலில் ஈடுபடும் வேற்றினப் பெண் என்ற பொருளில் சொற்களைப் பயன்படுத்துகிறார்*

*என்றும், அவர் மோசேயின் திருச்சட்டத்தின் வழியில் ஆட்சி செய்தார் என்றும் கருத இடமுண்டு.*

*வசனம் 2:17*
*"கடவுளோடு செய்த உடன்படிக்கை..." –*
*திருமண உடன்படிக்கை, எசேக்கியேல் 16:8; மலாக்கி 2:14. பத்துக் கட்டளைகள் வழியே கடவுளோடு ஏற்பட்ட உடன்படிக்கையின் ஏழாவது கட்டளை, விடுதலைப் பயணம் 20:14.*

*வசனம் 2:18*
*"அவளது வீடு சாவுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது" –*
*இன்னும் தெளிவாக, 7:27.*

*வசனம் 2:20-22*
*கெடுமதியின் வழியையும் அதன் விளைவையும் விவரித்த சாலமோன் மீண்டும் நல்வழியில் நடப்பதன் மேன்மையையும், அதன் நலன்களையும் வலியுறுத்தி நிறைவு செய்கிறார்.*

*மெய்யறிவுடைய நல்லோரைச் சார்ந்து வாழ்ந்து நலமானவைகளைக் கற்றுத் தேறி இவ்வாழ்க்கையில் நிலைவாழ்வைப் பெற இளையோரை சாலமோன் அழைக்கிறார்.*

✝

# 20 நீதிமொழிகள் 03

## (ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை)

*1 பிள்ளாய்! என் அறிவுரையை மறவாதே; என்
கட்டளைகளை உன் இதயத்தில் இருத்திக்கொள்; 2
அவை உனக்கு நீண்ட ஆயுளையும் பல்லாண்டு
வாழ்வையும் நிலையான நலன்களையும் அளிக்கும். 3
அன்பும் வாய்மையும் உன்னிடம் குன்றாதிருப்பதாக!
அவற்றைக் கழுத்தில் அணிகலனாய்ப் பூண்டுகொள்.
4 அப்பொழுது, நீ கடவுளுக்கும் மனிதருக்கும்
உகந்தவனாவாய்; அவர்களது நல்லெண்ணத்தையும்
பெறுவாய். 5 முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு;
உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே. 6 நீ
எதைச் செய்தாலும் ஆண்டவரை மனத்தில் வைத்துச்
செய்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச்
செம்மையாக்குவார். 7 உன்னை நீ ஒரு ஞானி என்று
எண்ணிக்கொள்ளாதே;* **ஆண்டவருக்கு அஞ்சித்**
*தீமையை அறவே விலக்கு. 8 அப்பொழுது உன்
உடல், நலம் பெறும்; உன் எலும்புகள், உரம் பெறும்.
9 உன் செல்வத்தைக்கொண்டு அவரைப் போற்று;
உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும்
ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு. 10 அப்பொழுது
உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்; குடங்களில்
திராட்சை இரசம் வழிந்தோடும். 11 பிள்ளாய்!
ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை
வேண்டாமென்று தள்ளிவிடாதே; அவர்
கண்டிக்கும்போது அதைத் தொல்லையாக
நினையாதே. 12 தந்தை தன் அருமை மகனை
கண்டிப்பதுபோல், ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு
கொண்டிருக்கின்றாரோ அவர்களைக்
கண்டிக்கின்றார்.*

## *(ஞானத்தில் களிகூருதல்)*

*13 ஞானத்தைத் தேடி அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; மெய்யறிவை அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; 14 வெள்ளியை விட ஞானமே மிகுநலன் தருவது; பொன்னைவிட ஞானத்தால் வரும் செல்வம் மேலானது. 15 ஞானம் பவளத்தைவிட விலைமதிப்புள்ளது; உன் அரும்பொருள் எதுவும் அதற்கு நிகராகாது. 16 அதன் வலக்கை நீடித்த ஆயுளை அருள்கின்றது. அதன் இடக்கை செல்வமும் மேன்மையும் கிடைக்கச் செய்கின்றது. 17 அதன் வழிகள் இன்பம்தரும் வழிகள்; அதன் பாதைகள் யாவும் நலம்தருபவை. 18 தன்னை அடைந்தோர்க்கு அது வாழ்வெனும் கனிதரும் மரமாகும்; அதனைப் பற்றிக்கொள்வோர் நற்பேறு பெற்றோர். 19 ஆண்டவர் ஞானத்தால் பூவுலகிற்கு அடித்தளமிட்டார்; விவேகத்தால் வானங்களை நிலைபெறச் செய்தார். 20 அவரது அறிவாற்றலால் நிலத்தின் அடியிலிருந்து நீர் பொங்கி எழுகின்றது; வானங்கள் மழையைப் பொழிகின்றன. 21 பிள்ளாய்! விவேகத்தையும் முன்மதியையும் பற்றிக்கொள்; இவற்றை எப்போதும் உன் கண்முன் நிறுத்திவை. 22 இவை உனக்கு உயிராகவும், உன் கழுத்துக்கு அணிகலனாகவும் இருக்கும். 23 நீ அச்சமின்றி உன் வழியில் நடப்பாய்; உன் கால் ஒருபோதும் இடறாது. 24 நீ படுக்கப்போகும்போது உன் மனத்தில் அச்சமிராது; உன் படுக்கையில் நீ அயர்ந்து தூங்குவாய். 25 பொல்லார் திகிலடைவதையும் அவர்களுக்கு அழிவு வருவதையும் காணும்போது நீ அஞ்சாதே. 26 ஆண்டவர் உனக்குப் பக்கத்துணையாய் இருப்பார்; உன் கால் கண்ணியில் சிக்காதபடி உன்னைக் காப்பார்.*

## *(அயலாரோடு உறவு)*

*27 உன்னால் நன்மை செய்யக் கூடுமாயின்,
தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச் செய்ய
மறுக்காதே. 28 அடுத்திருப்பார் உன்னிடம் கேட்கும்
பொருளை நீ வைத்துக் கொண்டே, 'போய் வா,
நாளைக்குத் தருகிறேன்' என்று சொல்லாதே. 29
அடுத்திருப்பார்க்கு தீங்கிழைக்கத் திட்டம் தீட்டாதே;
அவர்கள் உன் அருகில் உன்னை நம்பி
வாழ்கின்றவர்கள் அல்லவா? 30 ஒருவர் உனக்கு ஒரு
தீங்கும் செய்யாதிருக்கும்போது, அவரை
வீண்வாதத்திற்கு இழுக்காதே. 31
வன்முறையாளரைக் கண்டு பொறாமை
கொள்ளாதே; அவர்களுடைய அடிச்சுவடுகளைப்
பின்பற்றாதே. 32 ஏனெனில், நேர்மையற்றோரை
ஆண்டவர் அருவருக்கின்றார்; நேர்மையாளரோடு
அவர் உறவுகொள்கின்றார். 33 பொல்லாரது
வீட்டின்மேல் ஆண்டவரது சாபம் விழும்; அவருக்கு
அஞ்சி நடப்போரின் உறைவிடங்களில் அவரது ஆசி
தங்கும். 34 செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன்
நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ
கருணை காட்டுவார்; 35 ஞானமுள்ளவர்கள்
தங்களுக்குரிய நன்மதிப்பைப் பெறுவார்கள்;
அறிவிலிகளோ இகழப்படுவார்கள்.*

*நீதிமொழிகள் 3:1-35*

## சிந்தனைக்கு

*மாறி மாறி வாசிக்கும் (responsive reading) திருப்பாடல் (சங்கீதம்) போல, இந்த அதிகாரத்தின் முதல் பத்து வசனங்களின் ஒற்றை இலக்க வசனங்கள் பெரியோராலும், இரட்டை இலக்க வசனங்கள் ('என் / எங்கள்' என்று மாற்றி) இளையோராலும் மாறி மாறி வாசிக்கத்தக்கவை. ஏனெனில், வ.1,3,5,7&9*

*ஆலோசனைகளாகவும், வ.2,4,6,8&10 ஆசிகளாகவும் அமைந்துள்ளமை ஒரு சிறப்பு. கடவுளின் ஆலோசனைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆண்டவர்தம் வாக்கு நிறைவேறும் அன்றோ!*

*வசனம் 3:1*
*இணை, 2:2.*

*வசனம் 3:2*
*ஒப்பிடுக, 19:23.*

*வசனம் 3:3*
*அணிகலன் போல் நற்பண்புகளை அணிதல் –*
*மேலும் பார்க்க, 1:9, 3:22, 4:9, 6:21, 7:3, இன்னும் சில வசனங்கள்.*

*அணிகலன்களை விரும்பி அணிவது போலவும், நெருக்கமாக வைத்துக் கொள்வது போலவும், நற்பண்புகளைக் காத்துக்கொள்ள வேண்டும்.*

Δ

*OV, "உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள்" –*
*இப்பகுதி, பொது மொழிபெயர்ப்பில் விடுபட்டுள்ளது. ஒப்பிடுக, இணைச் சட்டம் 6:6-9. மேலும் பார்க்க, எரேமியா 31:33.*

*வசனம் 3:4*
*"...கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவனாய்..." –*
*ஒப்பிடுக, தொடக்க நூல் 6:8, 7:1; 1 சாமுவேல் 2:26; லூக்கா 2:52.*

*வசனம் 3:5-6*
*"... நம்பு ... சார்ந்து நில்லாதே ... மனத்தில் வைத்துச் செய்..." –*
*நெருக்கமான தொடர்புடைய மூன்று கட்டளைகள். ஆண்டவரை நம்பு என்பது அவரைச் சார்ந்து வாழ்வதே!*

*நம்புதல் என்பது 'நான் இறைநம்பிக்கை கொண்டவன்' என்று* ***அறிவிப்பது அல்ல****; நமது உள்ளத்தின் ஆழத்தில் இறை இருப்பையும், நமது வாழ்க்கை அவருடைய கட்டுப்பாட்டில் உள்ளதையும் உணர்ந்து வாழ்வது.*

*ஆண்டவருடைய கட்டளைகளை நாம் கடைப்பிடிக்கும்போது, நமது கால்கள் எங்கே நடக்கவேண்டும் என்றும், எங்கே நுழையாமல் நிற்கவேண்டும் என்றும் பிரிவுச் சாலைகளில் (in crossroads) எங்கே மாறிச் செல்லவேண்டும் என்றும்* ***நாம் உள்ளுணர்வு பெறுகிறோம்****. அவ்வாறு நாம் செல்கிற வழியில் நமக்குச் சிக்கலே இராது என்பதல்ல; சிக்கல்கள் தோன்றும் போதும், இலக்கை நோக்கிப் பயணிக்க, நல்முடிவுகளை எடுக்க, உற்சாகத்தோடு வேகமெடுக்க ஆண்டவர் உதவுவார்,* ***நம் உள்ளுறை வார்த்தையால் வழிநடத்துவார்****.*

*வசனம் 3:7*
*பவுலடிகளின் எடுத்தாளுகை, உரோமையர் 12:16. மேலும் பார்க்க, எசாயா 5:21.*
*நமது தன்னம்பிக்கை இறைப்பற்றின் வெளிப்பாடா?*

*வசனம் 3:8*
*உள்ளத்தின் நலன் உடல் நலத்தைக் காக்கும். மன அமைதியையும், உள ஊக்கத்தையும், உடல் ஆற்றலையும் தரும்.*

*வசனம் 3:9*
*ஆண்டவர் அருளும் ஆசியில் சிறந்ததை ஆண்டவருக்கு அர்ப்பணித்துப் போற்றுதல், தொடக்க நூல் 4:3-4; விடுதலைப் பயணம் 13:2; லேவியர் 23:9-14; எண்ணிக்கை 18:12&29.*

*வசனம் 3:11-12*
*அன்பின் வெளிப்பாடே கண்டித்தல்.*

*ஏதோ ஒரு காரணத்தால், "என் அப்பா என்னோடு பேசுவதே இல்லை" என்று இளையோர் சிலர் சொல்வதுண்டு; அந்தப் பெற்றோருக்குத் தெரிந்த வகையில், அதுவும் ஒரு கண்டித்தலே, அன்பின் வெளிப்பாடே!*

*கடவுளால் கண்டிக்கப்படுதல் நற்பேறு என்று யோபு 5:17ல் வாசிக்கிறோம்.* ***ஆண்டவரால் கண்டிக்கப்பட்டும் திருந்தாதிருந்தால், தண்டிக்கப்படுவோமே!***

*இவ்விரு வசனங்களுக்கான விளக்கத்தை எபிரேயருக்கான மடல் வரைவாளர் அழகாக எழுதியுள்ளார், எபிரேயர் 12:5-11.*

*தாவீதைப் போல மன்றாடுவோம்:*
*"இறைவா! நீர் என் உள்ளத்தை ஆய்ந்து அறியும்; என் எண்ணங்களை அறியுமாறு என்னைச் சோதித்துப் பாரும். உம்மை வருத்தும் வழியில் நான் செல்கின்றேனோ என்று பாரும்; என்றுமுள வழியில் என்னை நடத்தியருளும்." (திருப்பாடல் 139:23-24)*

*வசனம் 3:13-18*
*நற்பேறு என்று தொடங்கி, நற்பேறு என முடியும், ஞானத்தின் மேன்மை குறித்த கவிதை. புதிய ஏற்பாட்டின் நற்பேறு / பாக்கிய வசனங்களைப் போல (மத்தேயு 5:3-12) அமைந்ததொரு பகுதி. கடவுள் படைத்த நோக்கத்தை உணர்ந்து, அதன்படி நடந்து, நல்வாழ்வை அடைவதே நற்பேறு, 8:32&34, 16:20, 28:14. மேலும் பார்க்க, திருப்பாடல் 1:1-3. இறைவரின் மன்னிப்பும், அவர் நம்மை ஏற்றுக் கொள்ளுதலுமே நமது வாழ்வில் நாம் பெறக்கூடிய ஆகச் சிறந்த நற்பேறு, பார்க்க, திருப்பாடல் 32:1.*

*வசனம் 3:13*
*"ஞானத்தைத் தேடி..." –*

தேடுவோர் கண்டடைகின்றனர், மத்தேயு 7:7-8. தேடல் நமது அடிப்படைத் தன்மையாக இருக்கவேண்டும். **தேடல் இல்லையெனில் நமது இயக்கமே இராது.** நாம் தேட வேண்டியவற்றில் முதன்மையானது ஞானம். ஞானத்தைத் தேடுவோர் வாழ்க்கையில் செல்வத்தையும், சமுதாயத்தில் நன்மதிப்பையும், நீடித்த நற்பேரையும் புகழையும் அடைகின்றனர். ஆதலால், ஞானத்தைத் தேடி அடைதலே நற்பேறு.

வசனம் 3:14-15
விலைமதிப்பற்ற யாதொன்றையும்விட உயர்வானது ஞானம். மேலும் ஒப்பிடுக, திருப்பாடல் 19:10, 119:72.

சாலமோன் அரசரின் செல்வச் செழிப்பு குறித்து நாம் முன்பே பார்த்தோம், வ.1:1-7 குறிப்பு. இதனை விரிவாக நாம் வரலாற்று நூல்களில் வாசிக்கிறோம், 1 அரசர்கள் 10:14-29; 2 குறிப்பேடு 9:13-28. சாலமோனின் நாட்களில், வெள்ளியை யாரும் உயர்வாக மதிக்கவில்லை; அது எருசலேமில் கற்களைப் போல மிகுதியாக இருந்தது. சாலமோனின் 'லெபனோனின் வனம்' எனும் மாளிகை பொன்னால் நிறைந்திருந்தது; ஆண்டுதோறும் கப்பமாகவும், வணிகம் வழியாகவும் பொன் சாலமோனிடம் குவிந்தது. பொன்னால் செய்யப்பட்ட கேடயங்கள், நூற்றுக்கணக்கில் மாளிகையில் இருந்தன. சாலமோனின் அரியணை, தந்தத்தாலும் தங்கத்தாலும் செய்யப்பட்டது. உலகின் மன்னர்களைவிட சாலமோன் செல்வத்திலும் ஞானத்திலும் உயர்ந்து விளங்கினார்.

அவ்வளவு செல்வமும் என்னாயின?
ஆனால் அவரது ஞானம் இன்றைக்கும் நாம் படிக்கத்தக்க வகையில் நூல்களாக உள்ளன. மகா அலெக்சாண்டரின் பேரரசு சிதைந்தது; ஆனால் அரிஸ்டாட்டில், சாக்ரடீஸ் போன்றோரின் படைப்புகள் இன்றும் நம்மிடையே உள்ளன. **கிறிஸ்து இயேசு, விண்ணகத்தில் சேர்க்கத்தக்க,**

**அழிவில்லாத செல்வத்தைச் சேர்க்க நமக்கு ஆணையிடுகிறார்,** *மத்தேயு 6:19-21.*

*வசனம் 3:15*
*பவளம் –*
*பார்க்க, 8:11, 20:15 & 31:10. நாம் விலை உயர்ந்தவை என்று கருதும் மணி, முத்து மற்றும் பவளத்தை விடவும் ஞானமே உயர்ந்தது, யோபு 28:18.*

*வசனம் 3:16*
*"...நீடித்த ஆயுளை..." –*
*கீழ்ப்படிதல் நீடித்த ஆயுளைத் தரும், 19:23; கட்டளையாக, மோசே வழியாக ஆண்டவர் அருளியது, விடுதலைப் பயணம் 20:12.*

Δ

*"...வலக்கை ... இடக்கை..." –*
*சிறப்பான சொல் ஆளுகை என்ற அளவில் இதனைப் பாருங்கள். நாம் நினைவில்கொள்ள வேண்டியது, நமது வலப்பக்கத்தில் இருப்பது யார் என்பதே (திருப்பாடல் 16:8).*

Δ

*"...மேன்மை..." –*
*OV, "கனம்"; எபிரேயத்தில் kaw-bode (காபோட்), எடை மிகுந்த எனும் பொருள்கொண்டது. உருவகமாக, மேன்மை, புகழ், மாண்பு என்று சொல்லப்படுவது.*

*வசனம் 3:17*
*'ஞானத்தின் வழிகள் இன்பம் தரும் வழிகள்' –*
*பேரின்பம் இருக்கும் இடம், ஆண்டவரின் வலப்பக்கம், திருப்பாடல் 16:11.*

Δ

*"... நலம் தருபவை" –*
*OV, சமாதானம். எபிரேயத்தில் shaw-lome / சாலோம் எனும் சொல், அமைதி என்றும் நலம் / வளம் / செழுமை என்றும் பொருள்படும்.*

*வசனம் 3:18*

*"...வாழ்வெனும் கனிதரும் மரம்..." –*

*மீண்டும் 11:30, 13:12, 15:4.*

*தொடக்க நூல் (2:9, 3:22&24) மற்றும் திருவெளிப்பாடு (2:7, 22:2&14) நீங்கலாக, வாழ்வுதரும் மரம் நீதிமொழிகள் நூலில் மட்டுமே இடம்பெறுகிறது. வாழும் நாட்களில், ஞானத்தைப் பயன்படுத்தி, செம்மையான வழியில் நடப்பதுவே அமைதியையும் மகிழ்ச்சியையும் தந்து, நமது வாள்நாள்களைப் பெருக்கும்; அதோடு ஆண்டவர் வாக்களித்த, நிலைவாழ்வை அருளும்.*

*வசனம் 3:19-20*

*படைப்பில் செயல்பட்ட ஞானம், விரிவாக, 8:22-32.*

*வசனம் 3:20*

*மழை –*

*OV, பனி; எபிரேயத்தில் tal (டல்), பனி எனப் பொருள்படும். மழைப்பொழிவு குறைந்த இஸ்ரயேல் நிலப்பரப்பில், பனிப்பொழிவே மரம், செடி, கொடிகள் வாழ்வதற்கான ஈரத்தைத் தரும் முதன்மையான ஆதாரம்.*

*வசனம் 3:21-26*

*ஞானத்தின் வழியில் நடக்கையில், மேலும் நாம் அடையும் நலன்கள்: வழியில் தெளிவு (வ.23), அமைதலான வாழ்க்கை (வ.24), ஆண்டவர் அருளும் பாதுகாப்பு (வ.26).*

*வசனம் 3:21*

*ஞானம் பெறப்பட்டு, உள்ளத்துள் உறைவது; விவேகமும் முன்மதியும் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டு, செயலாக வடிவெடுப்பவை.*

Δ

*"...பற்றிக் கொள் ... உன் கண்முன் நிறுத்தி வை" –*

*மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் செயல், வ.1&3 மற்றும் இணைச் சட்டம் 6:6-9.*

*வசனம் 3:23*
*ஒப்பிடுக, 119:105.*

*வசனம் 3:24*
*"நீ படுக்கப் போகும்போது, உன் மனத்தில் அச்சமிராது" –*
*கீழ்ப்படிந்து கடைப்பிடித்தலின் விளைவு, 1:33 மற்றும் குறிப்பு.*
*உடன்படிக்கையின் ஆசிகளில் ஒன்று, லேவியர் 26:6. மேலும் பார்க்க, யோபு 11:19; செப்பனியா 3:13.*

*வசனம் 3:25-26*
*கடவுளின் வார்த்தைகளை நாடி ஞானத்தைத் தேடுவோருக்கு அவர் அருளும் பாதுகாப்பு, திருப்பாடல் 91.*

*வசனம் 3:27-30*
*ஒரு தேவையோடு நம்மை நாடி வருவோருக்கு நாம் நிறைவேற்றவேண்டிய கடமைகளை வலியுறுத்தும் வசனங்கள். நமது பாவ அறிக்கை ஜெபத்தில் ஒரு சொற்றொடர் உண்டு: "செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து..." – இதில் முதல் பகுதியே இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.*

*வசனம் 3:27*
*தேவையில் உழல்வோரை இங்கே பார்க்கிறோம். சாலைச் சந்திகளில் / ஆலய வாயில்களில் உங்கள் கரத்தை எதிர்பார்த்து இருப்போர்; அவர்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்காமல் இருப்பதற்கு ஓராயிரம் வாதங்களை முன்வைப்போர் நம் நடுவே உண்டு. அப்படிப்பட்டோருக்கே இந்த அறவுரை. மிகவும் தெளிவாக யோவான் அறிவுறுத்துவதை வாசிக்கவும், 1 யோவான் 3:17-18. இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல், குலன் உடையான் கண்ணே உள (குறள்#223).*

*வசனம் 3:28*

*வைத்துக் கொண்டு வஞ்சகம் செய்தல்!*

*தேவைகளை உங்களால் நிறைவேற்ற முடியும் என்று அறிந்து, நம்பிக்கையோடு அயலார் ஒருவர் வரும்போது, உங்கள் மறுமொழி என்ன? இதுபோன்றதோர் உவமையைக் கிறிஸ்து இயேசு சொல்வதை வாசிக்க, லூக்கா 11:5-8. நமக்கான நேரடியான அறிவுரைக்கு வாசிக்க, யாக்கோபு 2:15-16.*

*வசனம் 3:29*

*அடுத்திருப்போர் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வோர்; ஒருவரை ஒருவர் நம்பி வாழ்வோர். எனவே நம்பிக்கை மேலும் மேலும் வளரத்தக்கதாக நல்லுறவைப் பேண வேண்டும்.*

*வசனம் 3:30*

*"ஒருவர் உனக்கு ஒரு தீங்கும் செய்யாதிருக்கும் போது" –*

*இந்த வசனத்திற்குப் பொருள், காரணத்தோடு அடுத்தவரிடம் வம்பிழுக்கலாம் என்பதல்ல; தாவீதைப் போலக் கடவுளிடம் முறையிட்டு அவருடைய வழிகாட்டுதலின்படிச் செயல்படக் காத்திருப்பதே. ஏனெனில், பழிவாங்குதல் கடவுளுக்கு உரியது (இணைச் சட்டம் 32:35).*

*வசனம் 3:31-32*

*நேர்மையாளரோடும், தம் வார்த்தைகளை ஏற்று நம்பிச் செயல்படுவோரோடும், நல்லுறவில் கடவுள், மத்தேயு 13:11-17.*

*வசனம் 3:31*

*வன்முறையாளர் –*

*சக மனிதர் மற்றும் சமுதாயத்தின் மீது, பகையும் வெறுப்பும் கொண்டு, அடக்குமுறையையும், சுரண்டலையும் நிகழ்த்துவோர்; ஒப்பிட்டு அறிக, 10:6&11, 13:2, 16:29.*

Δ

*"பொறாமை கொள்ளாதே" –*
*இரண்டாவது பாவத்திற்கு வழி நடத்திய தன்மை, தொடக்க நூல் 4:5. மேலும் பார்க்க, 23:17, 24:19; திருப்பாடல் 37:1&7.*

*வசனம் 3:32*
*ஆண்டவர் அருவருக்கும் நேர்மையற்றோர், 8:7,11:20. மேலும் விரிவாக, 6:16-19.*

Δ

*நேர்மையாளரில் நம்பிக்கை கொள்ளும் கடவுள், தொடக்க நூல் 18:17. மேலும் பார்க்க, திருப்பாடல் 25:14; ஆமோஸ் 3:7; யோவான் 15:15.*

*வசனம் 3:33*
*கீழ்ப்படியாமையின் விளைவு, இணைச் சட்டம் 27:26.*

Δ

*'அவருக்கு அஞ்சி நடப்போர்' –*
*"கடவுளுக்கு அஞ்சி நடப்போர்,"*
*OV, நீதிமான்; எபிரேய மொழியில் tsad-deek / ட்ஸாடீக், இதனை just, lawful, righteous என்று பொருள் கொள்ளலாம்.*
*நீதிமொழிகள் பொது மொழிபெயர்ப்பில், இந்த எபிரேயச் சொல் -*

*நேர்மையாளர் (2:20, 10:16, 11:31, 12:3,5&12, 21:18, 29:6&7),*

*நல்லார் (10:3,11,21&28, 11:10, 12:7&10, 13:5, 15:6, 24:15),*

*கடவுளுக்கு அஞ்சி நடப்போர் (3:33, 10:24,25,30&32, 11:8,21&23, 13:21&25, 14:32, 15:29, 18:10),*

*கடவுளை நம்பி வாழ்வோர் (11:28),*

*நேர்மையான நடத்தை (11:30),*

*சான்றோர் (12:26, 13:9, 14:19, 15:28, 21:26),*

*நேர்மையானவர் (18:5, 24:24, 25:26, 28:1,12&28, 29:2),*

*நேர்மையான பிள்ளை (23:24)*

*- என்று பல்வேறு வகையில் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. கடவுளுக்கு அஞ்சி வாழுதல்*

*என்பதுதான் இந்நூலின் கருப்பொருள் என்பதால், இப்படியொரு முறை கடைப்பிடிக்கப்பட்டு இருக்கலாம். பிரபலமான ஆங்கில மொழிபெயர்ப்புகளில், NLT மட்டுமே godly என்று இந்தச் சொல்லுக்குப் பொருள்கொண்டுள்ளது. KJV, righteous அல்லது just என்று பொருள்கொண்டுள்ளது.*

***சரியாகச் சொன்னால், பைபிள் முழுமையும் வலியுறுத்தப்படும் செய்தி, கடவுளிடம் அச்சம் என்பதுதான் (தொடக்க நூல் 18:15 தொடங்கி, திருவெளிப்பாடு 19:5 வரை, பல வசனங்கள்).***

*வசனம் 3:34*
*என்றைக்கும் மாறாத இறைத்தன்மை; புதிய ஏற்பாட்டில் எடுத்தாளப்பட்டுள்ளமை, பார்க்க, லூக்கா 1:52; யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5.*

*வசனம் 3:35*
*இவ்வுலகில் தீயோரால் ஞானிகள் ஒதுக்கப்பட்டாலும், அவர்களே கடவுளுக்கு ஏற்புடையோராக மேன்மை அடைவர். மேலும் பார்க்க, வ.16.*

✝

# 20 நீதிமொழிகள் 04

## (ஞானத்தை அறிவுறுத்தும் பெற்றோர்)

*1 பிள்ளைகளே! தந்தையின் போதனைக்குச்
செவிசாயுங்கள்; மெய்யுணர்வை அடையும்படி
அதில் கவனம் செலுத்துங்கள். 2 நான் உங்களுக்கு
நற்போதனை அளிக்கின்றேன்; நான் கற்பிப்பதைப்
புறக்கணியாதீர்கள்; 3 நான் என் தந்தையின் அருமை
மைந்தனாய், தாய்க்குச் செல்லப் பிள்ளையாய்
வளர்ந்து வந்தேன். 4 அப்பொழுது என் தந்தை
எனக்குக் கற்பித்தது இதுவே: "நான் சொல்வதை உன்
நினைவில் வை; என் கட்டளைகளை மறவாதே; நீ
வாழ்வடைவாய். 5 ஞானத்தையும்
மெய்யுணர்வையும் தேடிப் பெறு; நான் சொல்வதை
மறந்துவிடாதே; அதற்கு மாறாக நடவாதே. 6
ஞானத்தைப் புறக்கணியாதே; அது உன்னைப்
பாதுகாக்கும்; அதை அடைவதில் நாட்டங்கொள்;
அது உன்னைக் காவல் செய்யும். 7 ஞானத்தைத் தேடிப்
பெறுவதே ஞானமுள்ள செயல்; உன் சொத்து
எல்லாம் கொடுத்தாயினும் மெய்யுணர்வைத் தேடிப்
பெறு. 8 அதை உயர்வாய்க் கொள்; அது உன்னை
உயர்த்தும்; அதை நீ தழுவிக்கொள்; அது உன்னை
மாண்புறச் செய்யும். 9 அது உன் தலையில் மலர்
முடியைச் சூட்டும்; மணிமுடி ஒன்றை உனக்கு
அளிக்கும்."*

## (தீயாரைக் காண்பதுவும் தீதே)

*10 பிள்ளாய்! கவனி; நான் சொல்வதை ஏற்றுக்கொள்;
அப்பொழுது உன் ஆயுட்காலம் நீடிக்கும். 11
ஞானத்தின் வழிகளை உனக்குக்
கற்பித்திருக்கின்றேன்; நேரிய பாதைகளில் உன்னை
நடத்தி வந்தேன். 12 நீ நடக்கும்போது உன் கால்
சறுக்காது; நீ ஓடினாலும் இடறி விழமாட்டாய். 13
பெற்ற நற்பயிற்சியில் உறுதியாக நிலைத்துநில்;*

*அதை விட்டுவிடாதே; அதைக் கவனமாய்க் காத்துக்கொள்; அதுவே உனக்கு உயிர். 14 பொல்லார் செல்லும் பாதையில் செல்லாதே; தீயோர் நடக்கும் வழியில் நடவாதே. 15 அதன் அருகில் செல்லாதே; அதில் கால் வைக்காதே; அதை விட்டு விலகி உன் வழியே செல். 16 தீமை செய்தாலன்றி அவர்களுக்குத் தூக்கம் வராது; யாரையாவது கீழே வீழ்த்தினாலன்றி அவர்களுக்கு உறக்கம் வராது. 17 தீவினையே அவர்கள் உண்ணும் உணவு; கொடுஞ் செயலே அவர்கள் பருகும் பானம். 18 நேர்மையாளரின் பாதை வைகறை ஒளி போன்றது; அது மேன்மேலும் பெருகி நண்பகலாகின்றது. 19 பொல்லாரின் பாதையோ காரிருள் போன்றது; தாங்கள் எதில் இடறி விழுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது.*

## *(நல்வழியில் வழுவாது நடத்தல்)*

*20 பிள்ளாய்! என் வார்த்தைகளுக்குச் செவிகொடு; நான் சொல்வதைக் கவனி. 21 உன் கவனத்தினின்று அவை விலகாதிருக்கட்டும்; உன் உள்ளத்தில் அவற்றைப் பதித்துவை. 22 அவற்றைத் தேடிப் பெறுவோருக்கு அவை உயிரளிக்கும்; அவர்களுக்கு உடல் நலமும் தரும். 23 விழிப்பாயிருந்து உன் இதயத்தைக் காவல் செய்; ஏனெனில், அதனின்று பிறப்பவை உன் வாழ்க்கையின் போக்கை உறுதிசெய்யும். 24 நாணயமற்ற பேச்சு உன் வாயில் வரக்கூடாது; வஞ்சகச் சொல் உன் வாயில் எழக்கூடாது. 25 உன் கண்கள் நேரே பார்க்கட்டும்; எதிரே இருப்பதில் உன் பார்வையைச் செலுத்து. 26 நேர்மையான பாதையில் நட; அப்பொழுது, உன் போக்கு இடரற்றதாயிருக்கும். 27 வலப்புறமோ இடப்புறமோ திரும்பாதே; தீமையின் பக்கமே காலெடுத்து வைக்காதே.*

*நீதிமொழிகள் 4:1-27*

## சிந்தனைக்கு

*சாலமோன் அரசரின் தன்வரலாற்றுக் குறிப்பு இடம்பெறும் பகுதி இது. இதில் தாவீது அரசர் தன் மகனுக்குத் தந்த அறிவுரை இடம்பெற்றுள்ளது. சில பைபிள் அறிஞர்கள் அதி.4 ~ 9 முழுவதும் தாவீது தன் மகனுக்கு வழங்கிய வார்த்தைகளே என்கின்றனர். ஆனால் இந்த ஒன்பது வசனங்கள் மட்டுமே தாவீதின் வார்த்தைகளாக சாலமோன் உரைத்தது என்பது பொதுவான கருத்து. பிள்ளாய் / பிள்ளைகளே என்று தொடங்கும் வசனங்கள், புதியதொரு தொடக்கத்தைக் குறிப்பதாக உள்ளதால், தாவீதின் வார்த்தைகள் அடங்கிய பகுதி, ஒன்பதாவது வசனத்தோடு முடிகிறது எனலாம். முதல் மூன்று வசனங்கள் முன்னுரை போலவும், அடுத்த ஆறு வசனங்கள் பெற்றோரின் அறிவுரையாகவும் உள்ளன.*

*வசனம் 4:1*
*பிள்ளைகளே -*
*பன்மையில் மீண்டும் இதே தொனியில், (5:7), 7:24, 8:32.*
*அழைப்பு பொதுவானது என்றாலும் ஏற்றுக் கொள்வது தனிப்பட்ட தெரிவு.*
*உங்கள் தெரிவு என்ன?*

Δ

*"தந்தையின் போதனைக்குச் செவிசாயுங்கள்" –*
*தந்தை எப்போது போதிப்பார்? அவரின் பிள்ளைகள் தவறும்போது அல்லது அவர்களின் ஒரு குறையைத் திருத்துவதற்காக.*

*பிள்ளைகளுக்கு எது பிடிக்காது?*
*அவர்கள் செய்தது தவறு எனச் சொல்வது!*
*எனவே அவர்கள் செவி கொடுக்கும் மனநிலைக்குக் கொண்டு வருதல் முதன்மையானது. அடுத்த இரு வசனங்களும் அதற்குத் துணை செய்கின்றன.*

*வசனம் 4:3*

*"என் தந்தை ... தாய்..." –*
*தாவீது மற்றும் பத்சேபா; 1:8 மற்றும் 6:20 வசனங்களில் பொதுவாகச் சொல்லப்பட்டது இங்கு தனிப்பட்ட முறையில்.*

*தாவீது அரசருக்குப் புதல்வர்கள் பலர் இருந்தாலும், சாலமோனுக்கு சிறுவயதிலேயே அவரோடு இருந்த சிறப்பான முன்னுரிமையை இங்கு சாலமோன் வெளிப்படுத்துகிறார். அந்தச் சிறப்பான முன்னுரிமை, இறைவாக்கினர் நாத்தான் வழியே தாவீது பெற்ற வெளிப்பாட்டினாலா? (2 சாமுவேல் 12:24-25).*

*தாய்க்கு ஒரே பிள்ளை என்ற பொருள் உள்ளதால், மற்ற மகன்களின் பிறப்புக்கு முன்னர் (1 குறிப்பேடு 3:5) என்று நாம் புரிந்து கொள்ளலாம்.*

Δ

*"...வளர்ந்து வந்தேன்" –*
*சாலமோனின் இளவயதை நினைவூட்டுவது. கோவில் கட்டும் இடத்தை தாவீதுக்கு ஆண்டவர் வெளிப்படுத்திய காலம், 1 குறிப்பேடு 22:5, 29:1.*

*வசனம் 4:4-9*
*சிறுவன் சாலமோனுக்கு தந்தை தாவீதின் எளிமையான தெளிவான அறிவுரை; காணக்கூடிய செல்வங்கள் யாவையும்விட விலைமதிப்பற்ற ஞானத்தைத் தேடி, கண்டறிந்து, விடாது பற்றிக்கொள்ள வலியுறுத்தும் அறிவுரை. தாவீதின் இறுதி அறிவுரையையும் பார்க்க, 1 குறிப்பேடு 28:9. ஞானத்தைத் தேடி அடையச் சொன்ன தந்தையின் அறிவுரையே, சாலமோனை ஆண்டவரிடம் அதற்காக மன்றாடச் செய்தது (1 அரசர்கள் 3:5-14).*

**வழியும் வாழ்வும் வாக்கும் ஆனவரை நமது பிள்ளைகள் அறிந்து கொள்ள நாம் எவ்வாறு உதவுகிறோம்?** *(மேலும், யோவான் 17:3)*

*வசனம் 4:4*
*"என் கட்டளைகளை..." –*
*தந்தையர் கடவுளின் கட்டளைகளை உணர்ந்தோர்; அவர்களின் தந்தையர் போலவே, கடவுளின் கட்டளைகளில் போதிக்கப்பட்டோர் (திருப்பாடல் 78:1-4). எனவே தந்தையின் கட்டளைகள் என்பவை கடவுளின் கட்டளைகளே!*

*தொன்மையான வழிகளே நல்ல வழிகள்! (எரேமியா 6:16)*
*மற்றபடி, மானிடர் கற்பிக்கும் மனனம் செய்த மரபுகள் வெற்றுச் சடங்குகளே! (எசாயா 29:13)*

*வசனம் 4:5-7*
*இங்குள்ள சொற்களைக் கவனியுங்கள்:*
*நாடு ... தேடு ... பெறு ->*
*பாதுகாக்கும் ... காவல் செய்யும்... ->*
*தந்தை "சொல்வதை மறந்துவிடாதே... அதற்கு மாறாக நடவாதே... ஞானத்தைப் புறக்கணியாதே." - இந்தப் படிநிலைகள், வாழ்க்கை முழுவதும் கடைப்பிடிக்க வேண்டியவை.*

*வசனம் 4:5*
*"...மறந்து விடாதே" –*
*மறத்தல் என்பது 'நினைவில் வை' என்னும் கட்டளையின் மீறல்; கீழ்ப்படியாமையின் தொடக்கம். மீண்டும் சரியான வழியில் நிறுத்த, பக்குவமான நினைவூட்டல் அவசியம்.*

*வசனம் 4:7*
*"உன் சொத்து எல்லாம் கொடுத்தாயினும்..." –*
*கிறிஸ்து இயேசு சொன்ன உவமை, பார்க்க, மத்தேயு 13:44-46.*

*வசனம் 4:8*

*"... உயர்த்தும் ... மாண்புறச் செய்யும்" –*

*ஞானத்தை வேண்டிப் பெற்ற சாலமோன், அன்றைய மன்னர்கள் எவரையும் விட அறிவையும் செல்வத்தையும் புகழையும் பெற்றார் (1 அரசர்கள் 10:23). அது இன்றும் உலகோர் அறிந்த உண்மை. இத்தகைய உயர்வு எல்லோரும் பெறமுடியாது என்றாலும், ஒவ்வொருவரும் அவரவர் தெரிந்து கொண்ட வழியில், தன் தன் வாழ்க்கையில் உயரிய இலக்குகளை எட்டுவர்.*

*வசனம் 4:9*

*"...மலர்முடி ... மணிமுடி..." –*

*மேலும், 1:9.*

*வெற்றி அல்லது கொண்டாட்டங்களில் தலையில் சூட்டப்படுவது, இனிமைமிகு பாடல் 3:11; எசேக்கியேல் 16:12, 23:42; 1 பேதுரு 5:4. வாழ்வின் உயரிய வெற்றிகளைத் தருவது ஞானம்.*

*தந்தை தன் பிள்ளைகளுக்கு வழங்கும் அறிவுரையே நீதிமொழிகள் நூல். அதில் தாத்தா, தந்தைக்கு வழங்கிய அறிவுரையே இந்தச் சிறிய பகுதி. பெற்றோரின் ஆகச் சிறந்த கடமை, தங்கள் பிள்ளைகளை ஞானத்தோடு வளர்த்தல். இவ்வாறுதான் ஞானம் தலைமுறைகள்தோறும் கடத்தப்படுகிறது. ஞானத்தின் தொடக்கம் ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்; கடவுளே ஞானத்தின் ஊற்று. எனவே அவருக்கு அஞ்சி, அவருடைய வார்த்தைகளை நாடித் தேடிக் கற்பதே ஞானம். இந்த வழியில் தங்கள் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர், தங்கள் குழந்தைகளின் வாழ்வைக் காத்துக் கொள்கின்றனர்.*

*வசனம் 4:10-19*

*வாழ்க்கையில் நமக்கு முன்பாக இரண்டு வழிகள் வைக்கப்பட்டுள்ளன - அதில் சரியான ஒன்றைத்*

*தேர்ந்தெடுத்து வாழ்வதுதான் நமது வாழ்க்கைப் பயணம். இதுதான் நீதிமொழிகள் நூல் எடுத்தியம்பும் இறையியல். பார்க்க, இணைச் சட்டம் 11:26-28; மத்தேயு 7:13-14.*

*இரண்டு வழிகள்:*

*ஒன்று, ஞானத்தின் வழி; மற்றொன்று, தீமையின் வழி.*

*ஒன்று, நேரியது, இடறல் அற்றது, பாதுகாப்பானது; மற்றொன்று, வன்மையானது, தீதானது, கொடுமையானது.*

*ஒன்று, ஒளி மிக்கது; மற்றொன்று, இருளானது.*

*ஒன்று, நல்வாழ்வை அளிப்பது; மற்றொன்று, அழிவுக்குள் ஆழ்த்துவது.*

*வசனம் 4:10*

*ஞானத்தைக் கைக்கொள்வோருக்கு, நீடு வாழ்தல் கடவுள் அருளுவது, 9:11.*

*வசனம் 4:11*

*ஞானத்தை அறியும் இளையோரின் வளர்ச்சிப் படிநிலையில், ஏற்கனவே கற்றறிந்த படிநிலையை இங்கு உணர முடிகிறது.*

*வசனம் 4:12*

*"...நட ... ஓடு..."-*

*ஏற்கனவே அறிவுறுத்திய வழியில், விடாமல், உறுதியாக, கவனத்தோடு, இடம் வலம் விலகாமல் நடக்க வலியுறுத்தும் சாலமோன்.*

Δ

*"...சறுக்காது ... விழ மாட்டாய்" –*

*இணை, 3:23, 10:9; திருப்பாடல் 18:36; எசாயா 5:27, 40:30-31.*

*வசனம் 4:13-15*

*பெற்ற நற்பயிற்சியை உயிர் போலப் பற்றிக்கொள்ள இளையோரை சாலமோன் வற்புறுத்துகிறார்; தீய*

*வழியில் கால் வைக்காதே என்று வலியுறுத்துகிறார். தீயது எதற்கும் முதல்முறையே முடியாது என்று சொல்லுங்கள், அதன் பின்னர் ஒவ்வொரு முறையும் சொல்லுங்கள் (say no the first time and everytime). இவ்வாறு தீதை முற்றிலும் நம் வாழ்க்கையிலிருந்து அகற்றலாம்.*

*வசனம் 4:16-17*
*தீதை உண்டு, கொடுமையைப் பருகி, தீங்கிழைப்பதற்கே வெறியூட்டப்பட்டவர்களாகத் தீயோர் இருக்கின்றனர் (13:2; யோபு 15:16).*

*இவர்களை விடவும் கொடியோராக, வன்முறைக்கென்றே திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டவர்கள் (programmed and designed) இன்று நம்மிடையே வாழ்கிறார்கள். கண்ணசைவில் மாற்று மதத்தினரைக் கொலைசெய்யத் தொடங்கி, அடுத்த கண்ணசைவில் தங்கள் வன்முறை வெறியாட்டத்தை நிறுத்திக்கொள்வார்கள். ஆனால் ஞானத்தின் வழியில் நடப்போருக்கோ, தீயவை தீய பயத்தலால், தீயவை தீயினும் அஞ்சப்படும் (குறள்#202).*

*வசனம் 4:16*
*தீமை செய்வதில் தீவிரம், திருப்பாடல் 36:1-4; மீக்கா 2:1.*

*வசனம் 4:18*
*"நேர்மையாளரின் பாதை வைகறை ஒளி போன்றது" – நேரம் செல்லச் செல்ல இன்னும் மிகுதியாக ஒளிரும் ஒளி, பார்க்க, தானியேல் 12:3.*

*வியத்தகு ஒளியை நமக்கு அளிப்பவர் கடவுள், யோபு 29:3; 1 பேதுரு 2:9; திருவெளிப்பாடு 21:23-24.*

*வசனம் 4:19*
*"... அவர்களுக்குத் தெரியாது" –*

*இணை, 5:6, 7:23, 9:18, 28:22. ஏனெனில் தீயோர் ஒளியை விரும்பாதோர்; தங்கள் செயல்கள் வெளிப்பட்டு விடுமே என்று அவர்கள் ஒளியை வெறுக்கின்றனர் (யோவான் 3:19-20). இவ்வாறு அவர்கள் இருளின் மக்களாக, அழிவின் பிள்ளைகளாக இருக்கின்றனர்.*

*வசனம் 4:20-27*

*அலைபாயா உள்ளம் (17:24), நேர்கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, தெளிவான இலக்கு - இவற்றை சாலமோன் இங்கு அறிவுறுத்துகிறார். நம் உடல் உறுப்புகளால் ஞானத்தைக் கொண்டாடுதல் என்று இந்தப் பகுதியைச் சொல்லலாம்.*

*வசனம் 4:20*

*"...செவிகொடு ... கவனி" –*

*ஒவ்வொரு புதிய பாடத்தைத் தொடங்கும்போது, சாலமோன் விடுக்கும் கவன ஈர்ப்புச் சொற்கள்.*

*வசனம் 4:22*

*"...உயிரளிக்கும்" –*

*உயிர் அல்லது வாழ்வு குறித்த திருமொழிகளை இந்நூலில் மீண்டும் மீண்டும் பார்க்கிறோம். நீதிமொழிகள் சொல்லும் வாழ்வு என்பது, நீண்ட ஆயுள், நலவாழ்வு என்பன ஆகும்.*

*வசனம் 4:23*

*யா காவார் ஆயினும் நா காக்க.*

*கிறிஸ்து இயேசுவின் சுருக்கமான கூற்று: 'உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்' (மத்தேயு 12:34).*

*முன்னைக் காலத்தில், இதயம் மனிதனின் அறிவு இருக்கும் இடமாகவும், முடிவுகள் எடுக்கும் இடமாகவும் கருதப்பட்டது. அதனால் இங்கு இதயம் என்று சொல்லப்படுவது உள்ளமே. அங்கிருந்தே சொல்லும் செயலும் தொடங்குகின்றன, 16:9&23; லூக்கா 6:45; 2 கொரிந்தியர் 9:7. நாம் உணர்வோடு*

அதைச் செய்யாவிட்டாலும், கடவுள் நமது உள்ளத்தை வழிநடத்துபவராக இருக்கிறார், திருத்தூதர் பணிகள் 16:14. மேலும் பார்க்க, யோவான் 7:38; எரேமியா 24:7; எசேக்கியேல் 36:26-27.

Δ

இன்றைக்கு நமது பிள்ளைகளின் உள்ளங்கள் எவற்றால் நிறைகின்றன? இரண்டு வயதிலேயே செல்பேசிகளைக் கைகளில் எடுக்கும் அவர்கள் எவற்றைப் பார்க்கிறார்கள்? எவற்றைக் கேட்கிறார்கள்?

வீணான பொழுதுபோக்கு உள்ளத்தைச் சோர்வூட்டும் - உணர்வூட்டி ஊக்கப்படுத்தாது.

வசனம் 4:24
பார்க்க, எபேசியர் 4:29, 5:4; கொலோசையர் 3:8; யாக்கோபு 3:4-6.
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல்; வஞ்சகமாகப் பேசுதல்.

எவர் ஒருவரிடமும் பேசும்போது, நமது உதடுகள், நம் உள்ளத்தில் இருப்பதையே பேசுகின்றனவா?

வசனம் 4:25-27
காண இயலாத உள்ளம்; இப்போது, காணக்கூடிய ஒருவரின் பார்வையும் நடையும்.
தேர்வு செய்யும் பாதை செம்மையாக இருக்க வேண்டும், வ.13-15 & 1:15-16. அந்தப் பாதையில் உறுதியாக நடக்க வேண்டும்.

ஞானத்தின் பாதை வகுக்கப்பட்ட பாதை – கட்டமைக்கப்பட்ட சாலை போல; சாலையில் பயணிக்காமல், இடமோ வலமோ வண்டியைத் திருப்பினால், பள்ளத்தில் கவிழ நேரும். மேலும் பார்க்க, இணைச் சட்டம் 5:32, 17:11&20, 28:14; யோசுவா 1:7.

*வசனம் 4:26*
*சற்று மாறுதலுடன், எபிரேயர் 12:13.*

*ஞானத்தின் வழியில் நடப்பதுவே நல்லது, சிறப்பானது ஆனால் இயல்பானதோ எளிதானதோ அல்ல! "இதயமே அனைத்திலும் வஞ்சகம் மிக்கது; அதனை நலமாக்க முடியாது" (எரேமியா 17:9). அதனாலேயே சாலமோன் உள்ளத்தைக் காத்துக்கொள்வதில் விழிப்பாயிருக்க வலியுறுத்துகிறார்; உள்ளத்தில் நல்வார்த்தைகளைப் பதித்துவைக்க அறிவுறுத்துகிறார். உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்; மற்று அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து (குறள்#596). வெள்ளத்தனைய மலர் நீட்டம், மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு (குறள்#595). இறைவார்த்தைகளை மீண்டும் மீண்டும் வாசிப்பதும், அவற்றை நெஞ்சில் நிறுத்துவதுமே உள்ளத்தைக் காத்துக் கொள்ளும் சிறந்த வழி! அந்த வழியில் நம் பிள்ளைகளை வளர்த்து நல்வாழ்வு பெற உதவுவோம்.*

# 20 நீதிமொழிகள் 05

## (கற்புநெறி தவறாமை)

*1 பிள்ளாய்! என் ஞானத்தில் உன் கவனத்தைச்*
*செலுத்து; என் அறிவுரைக்குச் செவிகொடு. 2*
*அப்பொழுது விவேகத்துடன் நடந்துகொள்வாய்;*
*அறிவு உன் நாவைக் காவல்செய்யும். 3 விலைமகளின்*
*பேச்சில் தேன் ஒழுகும்; அவள் உதடுகள்*
*வெண்ணெயினும் மிருதுவானவை. 4 ஆனால் அவள்*
*உறவின் விளைவோ எட்டியினும் கசக்கும்;*
*இருபுறமும் கூரான வாள் வெட்டுதலை ஒக்கும். 5*
*அவள் கால், சாவை நோக்கிச் செல்லும்; அவள் காலடி*
*பாதாளத்திற்கு இறங்கிச் செல்லும். 6 வாழ்வுக்குச்*
*செல்லும் பாதையை அவள் கவனத்தில்*
*கொள்வதில்லை; அவளுடைய வழிகள்*
*மாறிக்கொண்டே இருக்கும்; அதைப்பற்றி*
*அவளுக்குக் கவலையே இல்லை.*

*7 ஆகையால், பிள்ளாய்! எனக்குச் செவிகொடு; நான்*
*சொல்வதற்கேற்ப நடக்க மறவாதே. 8*
*அவளிடமிருந்து நெடுந்தொலையில் இருந்துகொள்;*
*அவள் வீட்டு வாயிற்படியை மிதியாதே. 9*
*இல்லையேல், பிறர் முன்னிலையில் உன் மானம்*
*பறிபோகும்; கொடியவர் கையில் உன் உயிரை*
*இழப்பாய். 10 அன்னியர் உன் சொத்தைத் தின்று*
*கொழுப்பார்கள்; நீ பாடுபட்டுச் சம்பாதித்தது*
*வேறொரு குடும்பத்திற்குப் போய்ச் சேரும். 11 நீ*
*எலும்பும் தோலுமாய் உருக்குலைந்து போவாய்; உன்*
*வாழ்க்கையின் இறுதியில் கலங்கிப் புலம்புவாய். 12*
*"ஐயோ, அறிவுரையை நான் வெறுத்தேனே!*
*கண்டிக்கப்படுவதைப் புறக்கணித்தேனே! 13*
*கற்பித்தவர்களின் சொல்லைக் கேளாமற்*
*போனேனே! போதித்தவர்களுக்குச் செவிகொடாமல்*
*இருந்தேனே! 14 இப்பொழுது நான் மீளாத் துயரத்தில்*

*மூழ்கியவனாய், மக்கள் மன்றத்தில் மானமிழந்து நிற்கிறேனே" என்று அலறுவாய்.*

## *(பிறன்மனைவி நயவாமை)*

*15 உன் சொந்த நீர்த்தொட்டியிலுள்ள நீரையே குடி;
உன் வீட்டுக் கிணற்றிலுள்ள நல்ல தண்ணீரையே
பருகு. 16 உன் ஊற்றுநீர் வெளியே பாய வேண்டுமா?
உன் வாய்க்காலின் நீர் வீதியில் வழிந்தோட
வேண்டுமா? 17 அவை உனக்கே
உரியவையாயிருக்கட்டும்; அன்னியரோடு
அவற்றைப் பகிர்ந்து கொள்ளாதே. 18 உன் நீருற்று
ஆசி பெறுவதாக! இளமைப் பருவத்தில் நீ மணந்த
பெண்ணோடு மகிழ்ந்திரு. 19 அவளே உனக்குரிய
அழகிய பெண்மான், எழில்மிகு புள்ளிமான்; அவளது
மார்பகம் எப்போதும் உனக்கு மகிழ்வூட்டுவதாக!
அவளது அன்பு உன்னை எந்நாளும்
ஆட்கொண்டிருப்பதாக. 20 மகனே, விலைமகளைப்
பார்த்து நீ மயங்குவதேன்? பரத்தையை நீ அணைத்துக்
கொள்வதேன்? 21* ***மனிதரின் வழிகளுள் ஒன்றும்
ஆண்டவர் கண்களுக்குத் தப்புவதில்லை;
அவர்களுடைய பாதைகளையெல்லாம் அவர்
சீர்தூக்கிப் பார்க்கின்றார்.*** *22 பொல்லார் தம் குற்றச்
செயல்களில் தாமே சிக்கிக் கொள்வர்; தம் பாவ
வலையில் தாமே அகப்பட்டுக் கொள்வர். 23
கட்டுப்பாடு இல்லாததால் அவர்கள் மடிந்து போவர்;
தம் மதிகேட்டின் மிகுதியால் கெட்டழிவர்.*

*நீதிமொழிகள் 5:1-23*

## சிந்தனைக்கு

*வசனம் 5:1-23*

*சுருக்கமாக, 2:16-19. ஒழுக்கக்கேடான பெண் குறித்த விரிவான பார்வை இங்கு. இதே கருப்பொருள் மீண்டும் 6 மற்றும் 7 அதிகாரங்களில். பாலின*

*ஒழுக்கம் எந்த அளவுக்கு முதன்மையானது என்பதை இது உணர்த்துகிறது (1 கொரிந்தியர் 5:8, 7:2-5; கலாத்தியர் 5:19-21; எபேசியர் 5:5-6; எபிரேயர் 13:4; 2 பேதுரு 2:18-22).*

*வசனம் 5:2*
*இணை, மலாக்கி 2:7, கூடுதலாகக் குரு ஒருவரின் தகுதியாக.*

*வசனம் 5:3&4*
*"...தேன் ... எட்டி..." –*
*ஓர் உறவு, எவ்வளவு விரைவாக முற்றிலும் முரணாக மாறிப் போகிறது! இன்பமாகவும், சடுதியில் அருவருப்பாகவும் மாறிவிடும் உணர்வு. அதனாலேயே முற்றிலும் வெறுக்கத்தக்க உறவு.*

*வசனம் 5:3*
*பார்க்க வ.2:16 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 5:5*
*"...சாவை நோக்கி ... பாதாளத்திற்கு இறங்கி..." –*
*தான் மட்டுமல்லாமல், தன்னோடு சேருபவர்களையும் அழிவின் வழியில் அவள் இழுத்துச் செல்கிறாள். ஒழுக்கத்தை மீறுவதன் கைம்மாறு சாவு (லேவியர் 20:10).*

*வசனம் 5:7-9*
*தடுமாற்றத்திற்கு எதிராக, இளையோருக்குக் கண்டிப்பான எச்சரிக்கை. மேலும் பார்க்க, 2 திமொத்தேயு 2:22. மேலான எச்சரிக்கையை இறைமகன் இயேசு தருகிறார், மத்தேயு 5:27-30. குற்றத்தை முளையிலேயே கிள்ளி விடுதலே சிறந்தது.*

*வசனம் 5:9*
*"...கொடியவர்..." –*
*பார்க்க, 6:34-35.*

வசனம் 5:10-11
ஆளுமையின் அழிவு. வளமும் நலமும் அழிதல் பரத்தைமையின் விளைவு.

வசனம் 5:12-14
துயர்மிகு நிலை குறித்த பயனற்ற புலம்பல்.

வசனம் 5:13
ஞானத்தின் அழைப்பு, வ.1&7, 1:8, 4:1, இன்னும் பல வசனங்கள்.

பைபிளின் போதனைகள் ஆணாதிக்க மனப்பான்மையை ஊக்குவிப்பது போலத் தோன்றலாம். ஓர் ஆராய்ச்சிப் பார்வையில் இதனைப் பார்த்தோமானால், கற்பு நெறியை பைபிள் பொதுவாக வைத்திருப்பதை அறிய முடியும். "இஸ்ரயேலின் புதல்வியருள் எவளும் விலைமகளாய் இருத்தலாகாது. இஸ்ரயேலின் புதல்வர் எவனும் விலைமகனாய் இருத்தலாகாது." (இணைச் சட்டம் 23:17). இந்தக் கட்டளையை மோசே வழியாக ஆண்டவர் வழங்கியது, உறுதியாக இன்றைக்கு 3400 ஆண்டுகளுக்கு முன்பு. பாலின சமத்துவத்தை கிறிஸ்து இயேசுவும் உறுதி செய்கிறார் (யோவான் 8:7). ஆனால் கற்புஒழுக்கம் என்று வரும்போது, சாலமோன் கூடுதல் அழுத்தத்தைப் பெண்கள் மீது வைக்கிறார் என்பதில் ஐயமில்லை (அதி.1,5,7&8); மன்னராட்சி இருந்தவரை, அது போர்கள் சார்ந்த சமுதாயம்; உழவுக்கு ஒரு காலம் இருந்தது போல, போரிட ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு காலமுண்டு (2 சாமுவேல் 11:1அ). போர்களில் ஆண்களின் இறப்பு காரணமாக, மக்கள்தொகையில் பெண்கள் கூடுதலாக இருப்பர்; இத்தகைய பாலின சமனற்ற சமுதாயச் சூழல், பாலின சமத்துவமின்மைக்கு வழிவகுத்தது. இன்றைக்கு நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாக வாழ்கிறோம்; கிறிஸ்துவுக்குள் புதிய படைப்பாக

வாழும் நாமனைவரும் ஒன்றாக இருப்பதால், நமக்குள் இனம், மொழி, சமயம், வண்ணம், வர்க்கம், பாலினம் என்று எந்த வேறுபாடும் இல்லை (கலாத்தியர் 3:28).

ஆயினும் திருச்சபைக்குள் பேதங்கள் இருக்கின்றன. தீண்டாமை இல்லை என்றாலும், ஜாதி பார்க்கும் கேவலமும் இருக்கிறது; ஏனெனில், திருச்சபை இதே சமுதாயத்தில்தான் சேவை செய்கிறது. மூழ்கி எழுதல் எந்தக் கிரியையும் நமக்குள் செய்யாது; ஆனால், **நான் கிறிஸ்துவுக்குள் மூழ்கி எழுந்தவன் என்கிற உணர்வே நம்மைச் செயல்பட வைக்கும் ஆற்றல்.** எனவே, கிறிஸ்துவுக்குள் வாழும் நாம் ஒவ்வொருவரும், மெய்யுணர்வு கொண்டவர்களாக, எல்லாவிதப் பாகுபாடுகளையும் நம்மிடமிருந்து அகற்ற உறுதியோடு செயல்படுவோம். ஆண்டவர் நம்முள் ஆற்றலோடு செயல்படுவாராக! ஆமென்!

வசனம் 5:15-17
"எனைத் துணையர் ஆயினும் என்னாம், தினைத் துணையும் தேரான் பிறன்இல் புகல்" என்று ஆணுக்கும், "தற்காத்துத் தற்கொண்டான் பேணித், தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்று பெண்ணுக்கும் மணவாழ்க்கையின் அறன் வகுத்தது தமிழ் (குறள்#144&56).

மனமிசைந்து இருத்தலும், மனமொத்து வாழ்தலுமே இல்லற உறவின் கடப்பாடு. அது அந்த இணையர் இருவருக்கும் இடையில் மட்டுமே உயிர்ப்போடு இயங்க வேண்டுவது. ஒவ்வொரு இணையரும் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுவது. கடவுள் முன்னிலையில் இல்லற வாழ்வில் இணைக்கப்பட்ட இருவருக்குள், இந்த நிறைவேற்றலே ஆண் பெண் உறவின் களிப்பு. இந்த வரையறையைக்

*கவித்துவமாகவும் கண்டிப்போடும் இந்த வசனங்கள் விளக்குகின்றன.*

*வ.15-18ல், கிணற்று நீர், ஊற்று நீர், நீரூற்று என்று தண்ணீரை உவமைகளாகக் கொண்டு சாலமோன் மணவுறவை விளக்குகிறார். இஸ்ரயேல், வறண்ட மலைப்பாங்கான நாடு; மலைப்பொழிவும் குறைவு. அப்படிப்பட்ட நில அமைப்பில், நீரூற்றுகளும் கிணறுகளும் வான்மழையும் இறையாசியாகப் போற்றப்படுகின்றன. விலைமதிப்பற்ற அத்தகைய ஆசியை, ஒரு நல்லறமான இல்லறம் கட்டப்படுவதோடு ஆசிரியர் ஒப்பிடுகிறார். மேலும் பார்க்க, இனிமைமிகு பாடல் 4:12&15.*

*வசனம் 5:16*
*"...ஊற்று நீர் வெளியே பாய வேண்டுமா?" –*
*நன்னீர் நல்ல மணவாழ்க்கைக்கு உவமையாக.*
*ஊற்றிலும் கிணற்றிலும் இருக்கும் வரை மட்டுமே அது குடிநீர்! வீதியில் ஓடினால், அதற்குப் பெயர் வேறு!*

*வசனம் 5:18-19*
*ஆண் பெண் உறவு தூயது; கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டது; அதன் தூய்மைக்குள் இணையரின் பெற்றோரே நுழைய முடியாது. இதனைக் கிறிஸ்து இயேசுவும் உறுதி செய்கிறார். பார்க்க, தொடக்க நூல் 1:26-28 & 2:23-25; மலாக்கி 2:13-16; மாற்கு 10:2-12; 1 கொரிந்தியர் 7:1-5; 1 திமொத்தேயு 4:1-5; எபிரேயர் 13:4. மணவாழ்க்கையின் நெருக்கமான உணர்வை வேறு எந்த உறவும் தரமுடியாது.*

*நம்மில் ஒவ்வொரு கணவனும் மனைவியும் உங்களுக்குள் இவ்வாறு சொல்ல முடியுமா என்று பாருங்கள்: "கடவுளுக்கு அடுத்த நிலையில், வேறு*

*எந்த ஓர் உறவை விடவும், என் இணையருடன் உள்ள உறவே எனக்கு மகிழ்ச்சியானது."*

*வசனம் 5:19*
*பார்க்க, இனிமைமிகு பாடல் 4:5 & 8:14.*
*பெண் என்பவர் மானா?*
*மான் மருட்சியுடையது; பளபளக்கும் தோலோடு பேரெழில் கொண்டது. பைபிளிலேயே சொல்லியாயிற்று என்பதால், மான் போன்ற பெண் வேண்டும் என்று யாரும் கேட்டுவிடாதீர்கள்!*

*ஆணையும் பெண்ணையும் தமது சாயலாகவே கடவுள் படைத்தார் என்றால், இருவரையும் சமமாகவும், தமது ஆற்றலை உடையோராகவும் அவர் படைத்தார் என்றால், பெண்ணை எந்த அளவுகோலில் மதிப்பிட்டாலும் அவர் ஆணுக்குச் சமமானவரே; கூடுதலாக, வாரிசைப் பெற்றுத்தரும் அரும்பெரும் பொறுப்பால், ஓர் ஆணால் செய்ய முடியாத ஒன்றைச் செய்ய வல்லவராகப் பெண் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளார். படைப்பின் இரகசியங்களை உணர்வோர், இந்த உண்மையை அறிவர். எனவே ஆண்கள் (பார்க்க, 31:28) தங்கள் தங்கள் வாழ்விணையராகிய பெண்களைப் போற்றுங்கள்!*

*வசனம் 5:20*
*பார்க்க வ.2:16-19 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 5:21*
*கடவுளின் கண்காணிப்பில் நாம் ஒவ்வொருவரும் வாழ்வதை உணர்த்தி, எச்சரிக்கை விடுக்கும் சாலமோன். தெளிவுபெற வாசிக்க, திருப்பாடல் 139. மேலும் பார்க்க, சபை உரையாளர் 12:13-14; எரேமியா 29:23; எபிரேயர் 4:13 & 13:4.*

*வசனம் 5:22*
*பார்க்க, யோவான் 8:34; உரோமையர் 6:16.*

*பரத்தைமையில் தொடர்ந்து ஈடுபடும் பொல்லார், தான் மட்டும் பாவ வலையில் சிக்குவதில்லை; தன்னோடு பாவம் செய்பவரையும் பாவத்தில் சிக்கவைக்கிறான்/ள். இவ்வாறு இது தனியொருவரின் பாவமாக இராமல், சமபங்குப் பாவத்தை உடன்படுவோருக்கும் தருகிறது.*

***பாவம் செய்யும் எவரும், கடவுளுக்கு எதிராகவே பாவம் செய்கிறார், தொடக்க நூல் 39:9.***

*வசனம் 5:23*
*"கட்டுப்பாடு இல்லாததால், அவர்கள் (பொல்லார்) மடிந்து போவர்" –*
*'குற்றமிழைக்கும் அனைவரும் இறந்துவிட்டார்களா? இவ்வுலகில் பிறக்கும் எல்லாரும் மரிப்பவர்கள்தானே!?' - குற்றம் செய்யும் ஒவ்வொருவருடைய எண்ணமும் இதுவே. ஆனால் குற்றம் செய்தோர், வாழும் போதே செத்தவர்கள்.*

***ஒருவர் தன்னைக் கட்டுப்படுத்தி, நெறியோடு வாழ்வதே உயிர்ப்பு!***
*கட்டுப்பாடின்றி மனம் பொல வாழ்தல் என்பது காற்றில் பறக்கும் குப்பை போல வாழ்வது. கோபுரத்தில் கிடந்தாலும், குப்பை குப்பைதான்!*

🕎

*சாலமோனின் வார்த்தைகளில் இறுதியாக ஒரு திருமொழி: "இவ்வுலக வாழ்க்கை வீணெனினும், உனக்குக் கிடைத்துள்ள வாழ்நாள் முழுதும் நீ உன் அன்பு மனைவியோடு இன்புற்றிரு. ஏனெனில், உன் வாழ்நாளில் உலகில் நீ படும்பாட்டிற்கு ஈடாகக் கிடைப்பது இதுவே." (சபை உரையாளர் 9:9)*

✝

# 20 நீதிமொழிகள் 06

## (சில நல்லுரைகள்)

*1 பிள்ளாய்! உன் அடுத்திருப்பவரின் கடனுக்காக நீ பொறுப்பேற்றிருந்தால், அல்லது அன்னியர் ஒருவருக்காகப் பிணையாய் நின்றால், 2 அல்லது உன் வார்த்தைகளை முன்னிட்டு ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டால், அல்லது உன் வாய்ச் சொல்லிலேயே நீ பிடிபட நேரிட்டால், 3 பிள்ளாய்! உன்னை விடுவித்துக் கொள்ள இப்படிச் செய்: நீ அடுத்திருப்பவரின் கையில் அகப்பட்டுக் கொண்டதால், விரைந்தோடிச் சென்று அவரை வருந்தி வேண்டிக்கொள். 4 அதைச் செய்யும் வரையில் கண்ணயராதே; கண் இமைகளை மூடவிடாதே. 5 நீ (வேடன்) கையில் அகப்பட்ட மான் போலிருப்பாய்; கண்ணியில் சிக்கிய குருவிக்கு ஒப்பாவாய்; உன்னைத் தப்புவித்துக் கொள்ளப்பார்.*

## (சோம்பேறியாக இராதே)

*6 சோம்பேறிகளே, எறும்பைப் பாருங்கள்; அதன் செயல்களைக் கவனித்து ஞானமுள்ளவராகுங்கள்; 7 அதற்குத் தலைவனுமில்லை, கண்காணியுமில்லை, அதிகாரியுமில்லை. 8 எனினும், அது கோடையில் உணவைச் சேர்த்துவைக்கும்; அறுவடைக் காலத்தில் தானியத்தைச் சேகரிக்கும். 9 சோம்பேறிகளே, எவ்வளவு நேரம் படுத்திருப்பீர்கள்? தூக்கத்திலிருந்து எப்போது எழுந்திருப்பீர்கள்? 10 இன்னும் சிறிது நேரம் தூங்குங்கள், இன்னும் சிறிது நேரம் உறங்குங்கள்; கையை முடக்கிக்கொண்டு இன்னும் சிறிது நேரம் படுத்திருங்கள். 11 வறுமை உங்கள் மீது வழிப்பறிக் கள்வரைப்போல் பாயும்; ஏழ்மை நிலை உங்களைப் போர் வீரரைப் போல் தாக்கும்.*

## *(கயவனின் போக்கு)*

*12 போக்கிரி அல்லது கயவன் தாறுமாறாகப்*
*பேசிக்கொண்டு அலைவான். 13 அவன் கண்*
*சிமிட்டுவான்; காலால் செய்தி தெரிவிப்பான்;*
*விரலால் சைகை காட்டுவான். 14 அவன் தன் வஞ்சக*
*உள்ளத்தில் சதித்திட்டம் வகுப்பான்; எங்கும் சண்டை*
*மூட்டிவிடுவான். 15 ஆகையால் அவனுக்கு*
*எதிர்பாராத நேரத்தில் கேடு வரும்; திடீரென்று*
*அழிந்துபோவான்; மீளமாட்டான்.*

## *(கடவுள் வெறுப்பவை)*

*16 ஆண்டவர் வெறுப்பவை ஆறு, ஏழாவது ஒன்றும்*
*அவரது வெறுப்புக்கு உரியது. 17 அவை*
*இறுமாப்புள்ள பார்வை, பொய்யுரைக்கும் நாவு,*
*குற்றமில்லாரைக் கொல்லும் கை, 18*
*சதித்திட்டங்களை வகுக்கும் உள்ளம், தீங்கிழைக்க*
*விரைந்தோடும் கால், 19 பொய்யுரைக்கும்*
*போலிச்சான்று, நண்பரிடையே சண்டை*
*மூட்டிவிடும் செயல் என்பவையே.*

## *(கற்பு நெறி வழுவாமை)*

*20 பிள்ளாய்! உன் தந்தையின் கட்டளையைக்*
*கடைப்பிடி; தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே.*
*21 அவற்றை எப்போதும் உன் இதயத்தில்*
*இருத்திவை; உன் கழுத்துக்கு மாலையென அணிந்து*
*கொள். 22 நீ நடந்து செல்லும்போது அவை உனக்கு*
*வழிகாட்டும்; நீ படுத்திருக்கும்போது அவை*
*உன்னைக் காவல் காக்கும்; விழித்திருக்கும்போது*
*உன்னுடன் உரையாடும். 23* ***கட்டளை என்பது ஒரு***
***விளக்கு; அறவுரை என்பது ஒளி; கண்டித்தலும்***
***தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி.*** *24 அவை உன்னை*
*விலைமகளிடமிருந்து, தேனொழுகப் பேசும்*
*பரத்தையிடமிருந்து விலகியிருக்கச் செய்யும். 25 உன்*

*உள்ளத்தால் அவளது அழகை இச்சியாதே; அவள் கண்ணடித்தால் மயங்கிவிடாதே.*
*26 விலைமகளின் விலை ஒரு வேளைச் சோறுதான்; ஆனால், பிறன் மனையாளோ உயிரையே வேட்டையாடி விடுவாள். 27 ஒருவன் தன் மடியில் நெருப்பை வைத்திருந்தால், அவனது ஆடை எரிந்துபோகாமலிருக்குமா? 28 ஒருவன் தழல்மீது நடந்து சென்றால், அவன் கால் வெந்துபோகாமலிருக்குமா? 29 பிறன்மனை நயப்பவன் செயலும் இத்தகையதே; அவளைத் தொடும் எவனும் தண்டனைக்குத் தப்பமாட்டான். 30 திருடன் தன் பசியைத் தீர்க்கத் திருடினால், அவனை மக்கள் பெருங்குற்றவாளியெனக் கருதாதிருக்கலாம்.*
*31 ஆனால், அவன் பிடிபடும்போது ஏழு மடங்காகத் திருப்பிக்கொடுக்க வேண்டும்; தன் குடும்பச் சொத்து முழுவதையுமே கொடுத்துவிட நேரிடும். 32 கற்புநெறி தவறுகிறவன் மதிகேடன். அவ்வாறு செய்வோன் தன்னையே அழித்துக்கொள்கின்றான். 33 அவன் நைய நொறுக்கப்படுவான், பழிக்கப்படுவான்; அவனது இழிவு ஒருபோதும் மறையாது. 34 ஏனெனில், தன் மனைவி தனக்கே உரியவள் என்னும் உணர்ச்சி ஒரு கணவனிடம் சினவெறியை உண்டாக்கும்; பழி தீர்த்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் நாளில், அவன் இரக்கம் காட்டமாட்டான்; 35 சரியீடு எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டான்; எவ்வளவு பொருள் கொடுத்தாலும் அவன் சினம் தணியாது.*

*நீதிமொழிகள் 6:1-35*

## சிந்தனைக்கு

*வசனம் 6:1-5*
*பொதுவாக நமது அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சில சிக்கல்களை எடுத்து வைத்து, அதற்கான தீர்வை முன்வைக்கும் பகுதி.*

*வசனம் 6:1*

*பிணையாக நிற்றல் –*

*இங்குக் குறிப்பிடப்படுவது, கடனுக்குப் பிணையாக நிற்பது / ஜாமீன் கொடுப்பது. இதே அறிவுரையை மீண்டும் இந்நூலில், 11:15, 17:18, 20:16, 27:13 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம்.*

*கடன் வாங்கும் ஒருவர், தான் கடனாக வாங்கி அனுபவித்ததைத் திருப்பிச் செலுத்தக் கடனாளியாக இருக்கிறார். ஆனால் கடனுக்குப் பிணையாக நிற்கும் ஒருவருக்கோ, வாங்கிய கடனில் எந்தப் பங்கும் இல்லை; ஆனால்,* ***தான் வாங்கிய கடனைக் கடனாளி திருப்பிச் செலுத்தவில்லை என்றால், அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முழுப் பொறுப்புள்ளவராகப் பிணையாளி இருக்கிறார்.*** *இந்தப் பொறுப்பை அவரால் சட்டப்படி மறுக்கவே முடியாது. இன்றைக்கும், கடனுக்குப் பிணையாக நிற்போர் பின்னாளில் பாதிப்படைய வாய்ப்புள்ளது. இந்த விதியைத் தெளிவாக அறிவுறுத்தும் சாலமோன், மீண்டும் மீண்டும் அதனை இந்நூலில் வலியுறுத்துகிறார்.*

*வசனம் 6:2*

*வார்த்தையை முன்னிட்டு எழும் சிக்கல் –*

*"சொல்லாத சொல்லுக்கு நீ எஜமான், சொல்லிய சொல் உனக்கு எஜமான்" என்பது ஒரு சொலவடை.*

*வசனம் 6:3-5*

*முந்தைய வசனங்களில் இரண்டு சிக்கல்களை எடுத்து வைத்து, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளை சாலமோன் இங்கு விளக்குகிறார்.*

*எந்தவொரு சிக்கலும் நம் வீட்டுக் கதவைத் தட்டும் வரை காத்திருக்கக் கூடாது; தீவிரமாகச் செயல்பட்டு சிக்கலை முளையிலேயே கிள்ளி எறிய முனைப்பாய் இருக்க வேண்டும்.*

*இந்த இடத்தில் ஓர் எச்சரிக்கை:*
*கடனுக்கு ஒருவர் தந்த பிணையை, நமது நாட்டின் இன்றைய சட்டங்களின்படி, இரத்து செய்வது அவ்வளவு எளிதல்ல.*

*வசனம் 6:6-11*
*சோம்பேறித்தனத்தை சாலமோன் கடுமையாகச் சாடுகிறார், 10:4&26, 13:4, 15:19, 19:24, 20:4, 21:25-26, 22:13, 24:30-34, 26:13-16.*

*ஆங்காங்கு மற்ற உயிரினங்களை மேற்கோள் காட்டும் சாலமோன், இங்கு சுறுசுறுப்புக்கு மாதிரியாக எறும்பை நிறுத்துகிறார். சுறுசுறுப்புக்கு மட்டுமல்லாமல், ஏற்ற காலத்தில் சரியான செயலைச் செய்வதற்கும் எறும்பே சான்று என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். எதனை எவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தவும், கண்காணிக்கவும், எறும்புக்கு எவரும் தேவையில்லை. ஆனால் சோம்பேறிக்கு?*

*வசனம் 6:9*
*சோம்பேறிகளைத் தன் கடுமையான கேள்விகளால் துளைக்கும் சாலமோன்.*

*வசனம் 6:10*
*"...இன்னும் சிறிது நேரம் ... இன்னும் சிறிது நேரம் ... இன்னும் சிறிது நேரம் ..." –*
*இன்றைக்கு நமது பிள்ளைகளின் உதடுகள் உச்சரிக்கும் சொற்கள்,* ***'இன்னும் கொஞ்சம்'****; அது கள விளையாட்டாக இருக்கலாம், செல்பேசி விளையாட்டாக இருக்கலாம், கணினியாக இருக்கலாம், தொலைக்காட்சியாக இருக்கலாம், காலையில் எழுவதில் இருக்கலாம் - எதுவாயினும், கவனமாக இருங்கள். அந்தக் கொஞ்ச நேரமே பின்னர் சிறிது சிறிதாகப் பெரிதாக வளரும்.*

***சலிப்பும் ஓய்வும் தற்கொலைக்கு ஒப்பானது.***

*வசனம் 6:11*
*சோம்பேறிக்கு நேரிட இருப்பதை எடுத்துச் சொல்லி எச்சரிக்கை விடுக்கும் சாலமோன்; இணை, 24:34.*
*மடி, நெடுநீர், மறவி, துயில் நான்கும் - கெடும் நீரார் காமக் கலன் (குறள்#605). மடி மடிக் கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி, தன்னினும் முந்து மடியும் (குறள்#603). சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர் (கொன்றைவேந்தன்#36).*

*வசனம் 6:12-15*
*எதையும் செய்ய இயலாத சோம்பேறியைக் குறிப்பிட்ட சாலமோன், வஞ்சகமாகத் திட்டமிட்டு எதையும் செய்யக்கூடிய கயவனை அடுத்துக் குறிப்பிடுகிறார்.*

*போக்கிரி என்ற சொல் மூலத்தில் bel-e-yah-al (பேலியால்) ஆகும். இதன் பொதுப் பொருள், பயனற்ற அல்லது வீணான. பயன்பாட்டு அளவில், தொல்லை தருபவன் / கலகக்காரன் / நன்மைக்கு எதிர் நிற்பவன் / கடவுளுக்கு எதிரானவன் என்றெல்லாம் பொருள்படும். பவுலடிகள் பேலியால் என்பவனைச் சாத்தான் என்று நேரடியாகக் குறிப்பிடுகிறார், 2 கொரிந்தியர் 6:15.*

*கயமை எப்படியெல்லாம் செயல் வடிவமடைகிறது என்பது இங்கு விளக்கம் பெறுகிறது. கயமைத்தனத்தைக் கயவனின் சொற்கள் ஒருபோதும் வெளிப்படுத்துவதில்லை, 16:30. மாறாக, கயவன் தனது மறைவான செய்கைகள் வழியாகத் தனது கயமையை வெளியிடுகிறான். இவ்வாறு, அவனுடைய செய்கைகள் வழியாகக் கயமையை அறிந்து கொண்டு, எச்சரிக்கை உணர்வடைய இளையோருக்கு சாலமோன் கற்றுத் தருகிறார்.*

*வசனம் 6:16-35*
*ஒருவன் தன் உடலுறுப்புகளின் செயல்களைக் காத்துக் கொள்வதன் வழியே, தன்னையே காத்துக்*

*கொள்கிறான். கவித்துவமாகத் தொடங்கும் சாலமோன், கடுமையான எதிர்வினையைக் குறிப்பிட்டு எச்சரிக்கிறார்.*

*வசனம் 6:16-19*
*போக்கிரி அல்லது கயவன் என்று வ.12ல் குறிப்பிடப்பட்டவனைக் குறித்த விளக்கம் என்று இந்த வசனங்களைச் சொல்லலாம். இவ்வசனங்கள், உடலுறுப்புகளின் செயல்பாடுகளில் வெளிப்படுவனவற்றை விளக்கும் ஞானக் கவிதை. கண்கள், நாக்கு, கைகள், கால்கள், இதயம் (மூளை) ஆகியவை செய்யத் துணியும், கடவுள் வெறுக்கும் செயல்களைச் சொல்லி சாலமோன் எச்சரிக்கிறார்.*
*கடவுள் வெறுப்பவற்றை நாம் விரும்பலாமா?*

Δ

*"... ஆறு ... ஏழாவது ஒன்றும்..." –*
*ஏறு வரிசையில் எண்களைப் பயன்படுத்தி மனதில் பதிய வைக்கும், எபிரேயக் கவிதை மரபு; மேலும் பார்க்க, 30:15,18,21&29; யோபு 5:19. தமிழில் ஒரு சான்றாக - ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின், எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள்#126).*

*வசனம் 6:17*
*"இறுமாப்புள்ள பார்வை" –*
*மேட்டிமையான உள்ளத்தின் வெளிப்பாடு, 21:4, 30:13; திருப்பாடல் 18:27, 101:5.*

Δ

*"பொய்யுரைக்கும் நாவு" –*
*பார்க்க, 12:19, 17:7, 21:6.*
*கடவுளோ பொய்யுரையாதவர், தீத்து 1:3; எபிரேயர் 6:18.*

Δ

*"குற்றமில்லாரைக் கொல்லும் கை" –*
*பார்க்க, 1:11&16.*

*வசனம் 6:18*
*"சதித்திட்டங்களை வகுக்கும் உள்ளம்" –*
*பார்க்க, 1:31, 24:2; தொடக்க நூல் 6:5.*

*வசனம் 6:19*
*"பொய்யுரைக்கும் போலிச் சான்று" –*
*மோசே வழியாக அருளப்பட்ட பத்துக் கட்டளைகளில் ஒன்று, விடுதலைப் பயணம் 20:16; மேலும் பார்க்க, 12:17, 25:18; இணைச் சட்டம் 19:16-19.*

*வசனம் 6:20-35*
*பாலியல் குற்றங்களுக்கு எதிராக, இளையோருக்கு சாலமோனின் மூன்றாவது எச்சரிக்கை.*

*வசனம் 6:20*
*இணை, 1:8.*

*வசனம் 6:21*
*"எப்போதும் உன் இதயத்தில் இருத்தி வை" –*
*நமது உடலுறுப்புகள் எந்தப் பாவத்தையும் செய்யும் முன்பே, உள்ளம் பாவம் செய்கிறது, எரேமியா 17:9.*
*பாலியல் குற்றங்களுக்கு விலகி வாழ, உடலைக் காப்பதற்கு முந்தையது உள்ளத்தைக் காப்பது, மத்தேயு 5:28.*

*வசனம் 6:22*
*பார்க்க, 3:3 மற்றும் குறிப்பு.*

*வசனம் 6:23*
*"... விளக்கு ... ஒளி" –*
*நம்மை ஒளிர்விக்கும் இறைவார்த்தை; அறிவூட்டி வழிநடத்துவதும் அதுவே. பார்க்க, திருப்பாடல் 119:105. மேலும் பார்க்க, 10:17; திருப்பாடல் 19:8.*

*வசனம் 6:26-35*
*விலைமகளிடம் ஒருவன் செல்லுவதைவிட, பிறனில் விழைதல் எவ்வளவு ஆபத்தானது என்று சாலமோன்*

*விளக்குகிறார். பிறன்மனை புகாமை அறம் எனத் தகும் (கொன்றைவேந்தன்#61). பிறன்மனை நோக்காத பேராண்மை, சான்றோர்க்கு அறன் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு (குறள்#148).*

*தீர்வற்ற, உறுதியாக உயிர்ப்பலியில் முடியக்கூடிய ஒன்று பிறனில் விழைதல். "பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே; பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை, அல்லது பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே" (விடுதலைப் பயணம் 20:17) என்பது மோசே வழியாக ஆண்டவர் வழங்கிய பத்தாவது கட்டளை. இந்தப் பட்டியலில், திரும்பக் கொடுத்தும், அபராதம் செலுத்தியும் தீர்க்க இயலாத குற்றம், பிறன்மனைவி கொள்ளல்.*

*களவை வேறுபடுத்தி விளக்கும் (வ.30-33) சாலமோன், பொறாமையும், எரிச்சலும், அவமானமும் அடையும் கணவன், ஒருபோதும் தண்டிக்காமல் விடமாட்டான் (வ.34-35) என்று திட்டவட்டமாக எச்சரிக்கிறார்.*

*வசனம் 6:26*
*மேலும் பார்க்க, 5:10, 7:22-23.*
*இரண்டு பாவங்களை எடுத்துரைத்து எதில் தீமை குறைவு என்று சாலமோன் சொல்லவில்லை. ஒன்று பாவம் எனில், மற்றொன்று கடுமையான தண்டனைக்குரிய பாவம் (இணைச் சட்டம் 22:22).*

$\Delta$

*பாலியல் குற்றங்களுக்கு எதிராக, மிகவும் தெளிவான அறிவுறுத்தலை நமக்குப் பவுலடிகள் தருகிறார், 1 கொரிந்தியர் 6:15-20.*

*வசனம் 6:27-29*
*நிச்சயமாகவே தண்டனை உண்டு (11:21, 16:5, 17:5, 28:20) என்று உறுதிபடத் தெரிவிக்க, சரியான இரண்டு சான்றுகளை எடுத்துரைக்கிறார் சாலமோன்.*

*வசனம் 6:31*
*"...ஏழு மடங்காக..." –*
*எந்த வகைத் திருட்டுக்கும் மோசேயின் சட்டப்படியான தண்டனைகள், விடுதலைப் பயணம் 22:1-9. இங்கு "ஏழு மடங்கு" என்பதை ஒரு சொலவடை என்றே கருத வேண்டும், பார்க்க, மத்தேயு 18:22.*

*பாலியல் பாவங்கள் குறித்து பைபிளில் அதிகமாக நாம் எச்சரிக்கப் படுகிறோம். ஊடகம் மற்றும் சமூக ஊடகங்களின் வழியாக, பாலியல் ஈர்ப்பு இன்றைய காலத்தில் மிகுதியாக விதைக்கப்படுகிறது. பாவத்தில் விழுபவன் கடவுளின் வார்த்தையை மீறுகிறான்; தனக்கும் தன் குடும்பத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்துகிறான்; கடும் தண்டனைக்கு அவன் தப்பமாட்டான். பவுலடிகள் திமொத்தேயுவுக்குக் கற்பித்தபடி: "நீ இளவயதின் இச்சைகளை விட்டு ஓடிவிடு. தூய்மையான உள்ளத்தோடு ஆண்டவரது பெயரை அறிக்கையிட்டு வழிபடுவோருடன், நீதி, நம்பிக்கை, அன்பு, அமைதி ஆகியவற்றை நாடித் தேடு." (2 திமொத்தேயு 2:22)*

# 20 நீதிமொழிகள் 07

## (பாலியல் ஒழுக்கக்கேடு - ஈர்ப்பும் வீழ்ச்சியும்)

*1 என் பிள்ளையே, என் வார்த்தைகளை மனத்தில் இருத்து; என் கட்டளைகளைச் செல்வமெனப் போற்று. 2 என் கட்டளைகளைக் கடைப்பிடி, நீ வாழ்வடைவாய்; என் அறிவுரையை உன் கண்மணி போல் காத்துக் கொள்வாய். 3 அவற்றை உன் விரல்களில் அணியாகப் பூண்டு கொள்; உன் இதயப் பலகையில் பொறித்துவை. 4 ஞானத்தை உன் சகோதரி என்று சொல்; உணர்வை உன் தோழியாகக் கொள். 5 அப்பொழுது நீ விலைமகளிடமிருந்து தப்புவாய்; தேனொழுகப் பேசும் பரத்தையிடமிருந்து காப்பாற்றப்படுவாய்.*

*6 ஒரு நாள் நான் என் வீட்டின் பலகணியருகில் நின்றுகொண்டு, பின்னல்தட்டி வழியாகப் பார்த்த போது, 7 பேதைகளிடையே ஓர் இளைஞனைக் கண்டேன்; மதிகேடான அவனை இளைஞரிடையே பார்த்தேன். 8 அவன் தெரு வழியாக நடந்துபோய், அதன் கோடியில் அவள் வீட்டை நோக்கிச் சென்றான்.*
*9 அது மாலை நேரம், பொழுது மயங்கும் வேளை; அந்த இரவிலே, இருட்டும் நேரத்திலே, 10 அங்கே ஒரு பெண் அவனைக் காண வந்தாள். அவள் விலைமகளைப் போல உடுத்தி, வஞ்சக நெஞ்சினளாய் வந்தாள். 11 அவள் வெளிப் பகட்டு மிகுந்தவள்; வெட்கத்தை ஒழித்தவள்; வீட்டில் அவளது கால் தங்காது; 12 அவள் நடுத்தெருவிலும் நிற்பாள்; முச்சந்தியிலும் நிற்பாள்; மூலைமுடுக்குகளிலும் பதுங்கியிருப்பாள். 13 அவள் அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு, நாணமிலாத் துணிவுடன் அவனைப் பார்த்து, 14 "நான் பலிகளைப் படைக்க வேண்டியிருந்தது; இன்று நான் என் பொருத்தனைகளை நிறைவேற்றிவிட்டேன்; 15 அதனாலேதான் உன்னைக் காணவந்தேன்; உன்னை*

*ஆவலோடு தேடினேன்; கண்டுகொண்டேன். 16 என்*
*மஞ்சத்தை மெத்தையிட்டு அழகு*
*செய்திருக்கின்றேன்; எகிப்து நாட்டு வண்ணக்*
*கம்பளம் விரித்திருக்கின்றேன். 17*
*வெள்ளைப்போளம், சந்தனம், இலவங்கக்*
*கலவையிட்டு, என் படுக்கையை மணம் கமழச்*
*செய்திருக்கின்றேன். 18 நீ வா; விடியற்காலம்*
*வரையில் இன்பத்தில் மூழ்கியிருப்போம்; இரவு*
*முழுவதும் காதலாட்டத்தில் களித்திருப்போம். 19*
*என் கணவன் வீட்டில் இல்லை. நெடுந்தொலைப்*
*பயணம் செய்யப் புறப்பட்டுப் போய் விட்டான். 20*
*அவன் பை நிறையப் பணம் கொண்டு*
*போயிருக்கின்றான்; முழுநிலா நாள்வரையில்*
*திரும்பிவர மாட்டான்" என்று சொன்னாள். 21*
*இவ்வாறு பல இனிய சொற்களால் அவனை அவள்*
*இணங்கச் செய்தாள்; நயமாகப் பேசி அவனை*
*மயக்கிவிட்டாள். 22 உடனே அவனும் உணர்வு*
*மழுங்கினவனாய் அவள் பின்னே சென்றான்;*
*வெட்டுவதற்காக இழுத்துச் செல்லப்படும்*
*காளைமாட்டைப் போலவும், வலையில்*
*சிக்கிக்கொள்ளப் போகும் கலைமானைப் போலவும்,*
*23 கண்ணியில் விழப்போகும் பறவையைப்*
*போலவும் சென்றான். ஓர் அம்பு அவன் நெஞ்சில்*
*ஊடுருவிப் பாயும் வரையில் தன் உயிர்*
*அழிக்கப்படும் என்பதை அறியாமலே சென்றான்.*

*24 ஆகையால் பிள்ளைகளே! எனக்குச்*
*செவிகொடுங்கள்; நான் சொல்வதைக் கவனியுங்கள்.*
*25 உங்கள் மனத்தை அவள் வழிகளில்*
*செல்லவிடாதீர்கள்; மயக்கங்கொண்டு அவள்*
*பாதைகளில் நடவாதீர்கள். 26 அவள் பலரைக் குத்தி*
*வீழ்த்தியிருக்கின்றாள்; வலிமை வாய்ந்தோரையும்*
*அவள் கொன்றிருக்கின்றாள். 27 அவள் வீடு*
*பாதாளத்திற்குச் செல்லும் வழி; சாவுக்கு இட்டுச்*
*செல்லும் பாதை.*

*நீதிமொழிகள் 7:1-27*

## சிந்தனைக்கு

*முந்தைய அதிகாரத்தின் தொடர்ச்சியாக வரும் அதிகாரம். பாலியல் ஒழுக்கக்கேட்டைத் தொடர்ந்து சாடிய சாலமோன் (2:16-19, 5:1-23, 6:20-35), இங்கு தனது கருத்தை ஒரு நன்னெறிக் கதைபோலச் சொல்லி விளக்குகிறார். முன்னுரையும் (வ.1-5) முடிவுரையும் (வ.24-27) கொண்ட முழுமையான கதை போல இந்த அதிகாரம் அமைந்துள்ளது.*

*வசனம் 7:1*
*"...மனத்தில் இருத்து" –*
*இறைவார்த்தைகளை மனத்தில் இருத்தினால், நாம் பாவத்தில் வீழோம், திருப்பாடல் 119:11.*

*வசனம் 7:2*
*"...கண்மணி போல்..." –*
*பார்க்க, இணைச் சட்டம் 32:9-10; திருப்பாடல் 17:8; செக்கரியா 2:8.*

*நம் ஒவ்வொருவரையும் தம் கண்ணின் மணி போலக் காக்கும் கடவுள், தம் கட்டளைகளை நம் ஒவ்வொருவரின் கண்ணின் மணி போல நாம் காத்து வாழ வலியுறுத்துகிறார்.*

*வசனம் 7:3*
*"...பலகையில் பொறித்து வை..." –*
*பத்துக் கட்டளைகளைக் கடவுள் கற்பலகைகளில் எழுதி மோசேயிடம் அளித்தார் (இணைச் சட்டம் 4:13, 10:4). அவர்தம் கட்டளைகள் நமது உள்ளத்தில் உறைந்தும், அவற்றை நிறைவேற்றுவதே நமது மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் (திருப்பாடல் 40:8). நமது விருப்பமும் முயற்சியும் மட்டுமல்லாமல், கடவுளின் கிருபையும் இருந்தாலே இது நிறைவேறும் (எரேமியா 31:33; 2 கொரிந்தியர் 3:3).*

*வசனம் 7:4-5*
*ஞானத்தை உருவகப்படுத்தி, பரத்தைக்கு எதிராக நிறுத்துதல். இங்கு சகோதரி என்று சாலமோன் குறிப்பிடுவது, மணமகள் என்பது போன்ற பொருளில்; பார்க்க, இனிமைமிகு பாடல் 4:9,10&12, 5:1&2.*

*வசனம் 7:7*
*ஒப்பிடுக, 6:32.*

*வசனம் 7:8*
*பார்க்க, 4:14-15. எவ்வளவு அழுத்தமாக அறிவுறுத்தினாலும், தீய வழியில் நடக்கும் கால்கள், 6:18.*

*வசனம் 7:9*
*"... பொழுது மயங்கும் வேளை ... இரவிலே ... இருட்டும் நேரத்திலே..." –*
*பொழுது மயங்கும் வேளை, உணர்வு மழுங்கும் வேளை. தீச்செயல்களுக்கு மனம் துணியும் காலம், இரவு. ஆனால் கடவுளின் பார்வைக்கு எதுதான் மறைவாக இருக்க முடியும்? (திருப்பாடல் 139:11-12)*

*வசனம் 7:14-20*
*தீயன செய்ய ஊக்கமூட்டும் தீயோரின் மொழிகள் போல் (1:11-14), ஒழுக்கக்கேட்டுக்கு ஈர்க்கும் நெறிகெட்ட பெண்ணின் மொழிகள்.*

*வசனம் 7:14*
*"நான் பலிகளை ... நிறைவேற்றி விட்டேன்" –*
*பார்க்க, லேவியர் 15:28-33, 2 சாமுவேல் 11:4.*
*தீயோரும் நெறியற்றோரும், சில சடங்குகளைச் செய்து, இறைப்பற்று உடையோர் போலத் தங்களைக் காட்டிக் கொள்வது இவ்வுலக இயல்பு. இதனைப் பவுலடிகள் கடுமையாகச் சாடுகிறார், உரோமையர் 2:21-24.*

*வசனம் 7:16-17*
*ஒருவனைப் பெருமைப்படுத்துவது போலப் பேசித் தன் வலையில் விழ வைப்பது.*

*வசனம் 7:16*
*"எகிப்து நாட்டு வண்ணக் கம்பளம்..." –*
*செல்வம் மற்றும் பெருமையின் அடையாளம், எசேக்கியேல் 27:7.*

*வசனம் 7:19*
*அச்சத்தை அகற்றும் சொற்கள்.*

*வசனம் 7:22*
*"உடனே..." –*
*அவன் அந்த மனநிலையிலேயே அங்கு வந்தவன் (வ.8) என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.*

*வசனம் 7:23*
*"...உயிர் அழிக்கப்படும்..." –*
*பார்க்க, 6:26 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 2:18, 5:5, 14:12, 16:25; உரோமையர் 6:23.*

Δ
*நெஞ்சு –*
*OV, ஈரல்; எபிரேயத்தில் kaw-bade / கா-பேட்; ஈரல் என்று பொருள்படும்.*

*வசனம் 7:24*
*இணை, 5:7.*

*வசனம் 7:24-27*
*வலிமைமிக்க வீரர்களே ஆனாலும், நெறி கெட்ட பெண்ணின் மொழிகளில் சிக்குண்டு வீழ்ந்து போவார்கள். எனவே, சாலமோன் இளையோரை எச்சரிக்கிறார். வரைவு இலா மாண் இழையார் மென் தோள், புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு (குறள்#919); மதி நலத்தின் மாண்ட அறிவினவர், பொது நலத்தார் புன் நலம் தோயார் (குறள்#915).*

*வசனம் 7:25*

*“செல்லவிடாதீர்கள்” –*

*OV, சாய வேண்டாம்; KJV, decline. மூலச்சொல், saw-taw / ஸாடா; பழைய ஏற்பாட்டில் ஆறு வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல்; இங்கும் 4:15லும் சாலமோன் இச்சொல்லைக் கையாளுகிறார். உங்கள் மனத்தை அவள் வழிகளில் செல்ல விடாதீர்கள் என்று சாலமோன் எச்சரிக்க, பவுலடிகளோ, 'இளவயதின் இச்சைகளுக்கு விலகி ஓடு' என்று, யோசைப்பைப் போல விலகி ஓட நம்மை விரட்டுகிறார். அறிவுரைகளுக்குச் செவிசாய்த்து, நற்சான்றுகளைப் பின்தொடர்வோம்.*

# 20 நீதிமொழிகள் 08

## (எழில்மிகு நங்கையாக ஞானம்)

*1 ஞானம் அழைக்கிறதன்றோ?*
*மெய்யறிவு குரல் எழுப்புகிறதன்றோ?*
*2 வழியருகிலுள்ள உயரமான இடத்திலும்,*
*தெருக்கள் கூடும் இடத்திலும் அது நிற்கின்றது.*
*3 நகருக்குள் நுழையும் வாயிலருகே,*
*நகர வாயிலை நெருங்கும் இடத்திலே,*
*அது நின்று கொண்டு இவ்வாறு உரத்துச்*
*சொல்லுகிறது:*
*4 மானிடரே! உங்களுக்கே நான் இதை*
*உரைக்கின்றேன்;*
*ஒவ்வொரு மனிதருக்கும் சொல்லுகின்றேன்.*
*5 முன்மதியற்றோரே! விவேகமாயிருக்கக்*
*கற்றுக்கொள்ளுங்கள்;*
*மதிகேடரே! உணர்வைப் பெறுங்கள்.*
*6 நான் சொல்வதைக் கவனியுங்கள்;*
*மிகத் தெளிவாகச் சொல்கின்றேன்;*
*நான் ஒளிவு மறைவின்றிக் கூறுகின்றேன்.*
*7 ஏனெனில், என் வாய் உண்மையே பேசும்;*
*பொல்லாங்கான பேச்சு என் நாவுக்கு அருவருப்பு.*
*8 என் வார்த்தைகளெல்லாம் நேர்மையானவை;*
*உருட்டும் புரட்டும் அவற்றில் இல்லை.*
*9 உணர்வாற்றல் உள்ளோர்க்கு அவை யாவும் மிகத்*
*தெளிவு;*
*அறிவை அடைந்தோர்க்கு அவை நேர்மையானவை.*
*10 வெள்ளியைவிட மேலாக என் அறிவுரையை*
*ஏற்றுக்கொள்ளுங்கள்;*
*பசும் பொன்னைவிட மேலாக அறிவை*
*விரும்புங்கள்.*
*11 பவளத்திலும் ஞானமே சிறந்தது;*
*நீங்கள் விரும்புவது எதுவும் அதற்கு நிகராகாது.*

## *(ஞானம் அருளும் பரிசில்)*

*12 நானே ஞானம்; நான் விவேகத்தோடு*
*வாழ்கின்றேன்;*
*அறிவையும் சிந்திக்கும் ஆற்றலையும்*
*கொண்டுள்ளேன்.*
*13* **ஆண்டவருக்கு அஞ்சுவது தீமையைப் பகைக்கச்**
**செய்யும்***;*
*ஆணவத்தையும் இறுமாப்பையும் தீமையையும்*
*உருட்டையும் புரட்டையும் நான் வெறுக்கின்றேன்.*
*14 திட்டம் இடுவதும் நானே;*
*இட்டதைச் செய்வதும் நானே.*
*உணர்வும் நானே.*
*வலிமையும் எனதே.*
*15 அரசர் ஆட்சி செலுத்துவதும் என்னால்;*
*ஆட்சியாளர் சட்டம் இயற்றுவதும் என்னால்.*
*16 அதிகாரிகள் ஆளுவதும் என்னாலே;*
*உலக நீதிபதிகள் அனைவரும் உண்மைத் தீர்ப்பு*
*வழங்குவதும் என்னாலே.*
*17 எனக்கு அன்பு காட்டுவோர்க்கு நானும் அன்பு*
*காட்டுவேன்;*
*என்னை ஆவலோடு தேடுகின்றவர்கள் என்னைக்*
*கண்டுபிடிப்பார்கள்.*
*18 என்னிடம் செல்வமும் மேன்மையும்,*
*அழியாப் பொருளும் அனைத்து நலமும் உண்டு.*
*19 என்னை அடைந்தவர்கள் பெறும் பயன்,*
*பசும்பொன்னைவிடச் சிறந்தது;*
*என்னை அடைந்தவர்களுக்குக் கிடைக்கும்*
*விளைச்சல்*
*தூய வெள்ளியை விட மேலானது.*
*20 நான் நேர்மையான வழியைப் பின்பற்றுகின்றேன்;*
*என் பாதை முறையான பாதை.*
*21 என்மீது அன்புகூர்வோருக்குச் செல்வம்*
*வழங்குகின்றேன்;*
*அவர்களுடைய களஞ்சியங்களை நிரப்புகின்றேன்.*

## *(படைப்பில் கடவுளோடு செயலாற்றிய ஞானம்)*

*22 ஆண்டவர் தம் #படைப்பின் தொடக்கத்திலேயே#*
*தொல்பழங்காலத்தில் எதையும் படைக்கும் முன்னரே,*
*என்னைப் படைத்தார்.*
*23 தொடக்கத்தில், பூவுலகு உண்டாகுமுன்னே,*
*நானே முதன்முதல் நிலைநிறுத்தப் பெற்றேன்.*
*24 கடல்களே இல்லாத காலத்தில் நான் பிறந்தேன்;*
*பொங்கி வழியும் ஊற்றுகளும் அப்போது இல்லை.*
*25 மலைகள் நிலைநாட்டப்படுமுன்னே,*
*குன்றுகள் உண்டாகுமுன்னே நான் பிறந்தேன்.*
*26 அவர் பூவுலகையும் பரந்த வெளியையும் உண்டாக்குமுன்னே,*
*உலகின் முதல் மண்துகளை உண்டாக்குமுன்னே நான் பிறந்தேன்.*
*27 வானத்தை அவர் நிலைநிறுத்தினபோது,*
*கடல்மீது அடிவானத்தின் எல்லையைக் குறித்தபோது,*
*நான் அங்கே இருந்தேன்.*
*28 உலகத்தில் மேகங்களை அவர் அமைத்தபோது,*
*ஆழ்கடலில் ஊற்றுகளை அவர் தோற்றுவித்தபோது,*
*நான் அங்கே இருந்தேன்.*
*29 அவர் கடலுக்கு எல்லையை ஏற்படுத்தி*
*அந்த எல்லையைக் கடல் நீர் கடவாதிருக்கும்படி செய்தபோது,*
*பூவுலகிற்கு அவர் அடித்தளமிட்டபோது,*
*30 நான் அவர் அருகில் அவருடைய ∆சிற்பி∆யாய் இருந்தேன்;*
*நாள்தோறும் அவருக்கு மகிழ்ச்சியூட்டினேன்;*
*எப்போதும் அவர் முன்னிலையில் மகிழ்ந்து செயலாற்றினேன்.*
*31 அவரது பூவுலகில் எங்கும் மகிழ்ந்து செயலாற்றினேன்;*
*மனித இனத்தோடு இருப்பதில் மகிழ்ச்சி கண்டேன்.*

*32 எனவே, பிள்ளைகளே, எனக்குச்*
*செவிகொடுங்கள்;*
*என் வழிகளைப் பின்பற்றுகின்றோர் நற்பேறு பெற்றோர்!*
*33 நற்பயிற்சி பெற்று ஞானத்தை அடையுங்கள்;*
*அதைப் புறக்கணியாதீர்கள்.*
*34 என் வாயிற்படியில் நாள்தோறும் விழிப்புள்ளோராய் நின்று,*
*என் கதவு நிலையருகில் காத்திருந்து,*
*எனக்குச் செவிகொடுக்கின்றோர் நற்பேறு பெற்றோர்!*
*35 என்னைத் தேடி அடைவோர் வாழ்வடைவர்;*
*ஆண்டவரின் கருணை அவர்களுக்குக் கிடைக்கும்.*
*36 என்னைத் தேடி அடையாதோர்*
*தமக்குக் கேடு வருவித்துக் கொள்வர்;*
*என்னை வெறுக்கும் அனைவரும்*
*சாவை விரும்புவோர் ஆவர்!*

*வ.22ல், #......# 'வழியின் தொடக்கம்' என்பது எபிரேயப் பாடம்*

*வ.30ல்,* Δ...Δ *'செல்லப்பிள்ளை' எனவும் பொருள்படும்.*

*நீதிமொழிகள் 8:1-36*

## சிந்தனைக்கு

*நலம் தரும் பெண் போன்ற உருவகம் ஞானத்திற்கு இந்த அதிகாரத்தில் மட்டுமல்லாமல் முதல் அதிகாரத்திலேயே (1:20-33) தரப்பட்டுள்ளது. நன்மைக்கும் தீமைக்கும் பெண் வடிவம் கொடுப்பது தொன்மையான ஒன்று (சீதேவி -எதிர்- மூதேவி!) என்று இதற்கு எளிமையான விளக்கம் தரலாம்.*

*ஆழமான பார்வையில், ஞானம் என்பது கடவுளின் வாக்கு என்பதும், அந்த வாக்கே மனித வடிவெடுத்த கிறிஸ்து இயேசு என்பதும் பைபிளை முறையாக வாசிப்போருக்குக் கிடைக்கும் வெளிப்பாடு ஆகும். இந்த அதிகாரத்தை ஆழ்ந்து வாசித்தால் அந்த உண்மை நமக்கு விளங்கும். ஞானத்தின் தொடக்கம் கடவுளே என்பது இங்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது (வ.22-30). ஆக, கடவுளின் வாக்கே ஞானம் என்பதையும், அந்த வாக்கே மனித வடிவெடுத்த கிறிஸ்து இயேசு என்பதையும் யோவான் (யோவான் 1:1) நமக்கு உறுதி செய்கிறார்.*

*இந்த அதிகாரத்தில் நாம் வாசிக்கும், ஞானம் நமக்குக் கற்பிக்கும் பண்புகள்:*

** விவேகம், வ.5&12*
** தெளிந்த உணர்வு, வ.5-6&9*
** உண்மை, வ.7*
** கனிவான, நேர்மையான பேச்சு, வ.7-8*
** நேர்மை, வ.8-9*
** சிந்திக்கும் ஆற்றல், வ.12*
** அறிவு, வ.12*
** இறையச்சம், வ.13.*

*மேலும் நாம் வாசித்து அறியும் ஞானத்தின் மேன்மை:*

** வளத்தையும், பெருமையையும், நலன்கள் அனைத்தையும் அருளுகிறது ஞானம், வ.18*
** மதிப்புமிக்க எச்செல்வத்தையும் விட, விலைமதிப்பற்றது ஞானம், வ.10,18&19*
** நாடாள இன்றியமையாதது ஞானம், வ.15-16*
** நீதியான தீர்ப்புக்கு வழிநடத்துவது ஞானம், வ.16*
** தேடி அடைந்தோர்க்கு நற்பேறாவது ஞானம், வ.32&34*
** ஞானத்தை அடைந்தோர் பெறுவது வாழ்வு, வ.35*
** ஞானத்தை வெறுப்போர் பெறுவது சாவு, வ.36.*

இவ்வாறு இந்த அதிகாரத்தை நாம் புரிந்து கொள்ளலாம்; இந்தப் புரிதலோடு கிறிஸ்து இயேசுவை ஒப்பிட்டு நோக்கினால், அவரே மனித வடிவில் வாழ்ந்த ஞானம் என்பதை உணரலாம். மேலும் இந்த அதிகாரம், ஞானம் தன்னைக் குறித்துப் பாடும் பாடல் போல உள்ளது.

வசனம் 8:1-11
இருள் கவிழும் வேளையில் பதுங்கி இருக்கும் நெறிதவறிய பெண்ணையும், அவளின் குழைவான சொற்களையும் முந்தைய அதிகாரத்தில் பார்த்தோம். இங்கு, தெருவில் இறங்கிய ஞானத்தைப் பார்க்கிறோம். ஞானத்தின் மொழியோ, உரத்த முழக்கம்; பகலில் ஒலிப்பது; கண்டிப்பான அறிவுரையாக அமைவது.

வசனம் 8:1-3
பார்க்க, 1:20-21 மற்றும் குறிப்புகள்.

வசனம் 8:4-36
தன்னைக் குறித்து உரையாடும் ஞானம். நான், என் எனத் தன்னிலை ஒருமை சார்ந்த சொற்கள் நிறைந்த பகுதி.

வசனம் 8:4
ஞானத்தின் அழைப்பு எல்லா மனிதர்களுக்கும் உரியது. பார்க்க, திருப்பாடல்கள் 49:1-3.

வசனம் 8:5
"முன்மதியற்றோரே ... மதிகேடரே..." –
ஞானம் அதிகமாக, அவசரமாகத் தேவைப்படுவோர்; ஆனால் அக்கறையோடு தேடாதோர். மெய்யுணர்வு இல்லாதவர்க்கு, ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்று (குறள்#354).

நினைவில் கொள்க, ஞானிகளை வெட்கப்படுத்த மடமையானவற்றைத் தெரிந்து கொள்ளும் கிறிஸ்து

*இயேசு, 1 கொரிந்தியர் 1:26-28. கூடுதலாக வாசிக்க, எசாயா 35:8.*

*வசனம் 8:6-9*
*ஞானமான பேச்சின் அடையாளங்கள்: தெளிவு, உண்மை, வெளிப்படைத்தன்மை, நேர்மை. பவுலடிகளின் அறிவுரை, பிலிப்பியர் 4:8.*

*வசனம் 8:7-8*
*பார்க்க, 3:32 மற்றும் குறிப்பு.*

*வசனம் 8:9*
*விரிவாக, 2:1-5.*

*வசனம் 8:10-11*
*அறிவுரையும் அறிவும் வெள்ளி மற்றும் பொன்னோடு ஒப்பிடப்படுதல். பார்க்க, 3:14-15 மற்றும் குறிப்பு. அதேவேளையில், ஞானத்தை நாடுவோருக்கு, அதனோடு வளமான வாழ்வும் கிடைக்கும், வ.18-21; 1 அரசர்கள் 3:11-14.*

***பிந்தையவை கிடைக்கவில்லை என்றாலும், ஞானத்தை அடைவதில் முனைப்பாக இருப்போம். ஏனெனில் ஞானமே நேர்மையில் உறுதியான உள்ளத்தையும், அமைதியையும் அருள்வது.***

*வசனம் 8:12-21*
*தன்னையே முன்னிலைப்படுத்தும் ஞானம். தன்னை நாடித் தேடுவோர்க்கு வழங்கும் பரிசில்கள் (rewards) எவை என்பதை இந்த வசனங்களில் பார்க்கிறோம். இவையனைத்தும் கிறிஸ்து இயேசுவில் வெளிப்படும் என்பதை எசாயா (11:1-5) முன்னுரைத்தார்.*

*வசனம் 8:12*
*இணை, 1:4.*

*வசனம் 8:13*
*பார்க்க, 1:7 & 2:5 மற்றும் குறிப்புகள்.*
*ஆண்டவரை நேசிக்க நேசிக்க, அவர்தம் அன்பைப் பருகப் பருக, நாம் தீயனவற்றை (6:16-19) வெறுப்போம்; நம்மை விட்டுத் தீமையை அகற்றுவோம்.*

*வசனம் 8:14*
*திட்டமிடுதலும், அதனை செயல்படுத்தலும் - அதற்குரிய உணர்வையும், ஆற்றலையும் வழங்குவது ஞானமே!*

*வசனம் 8:15-16*
*"அரசர் ... ஆட்சியாளர் ... அதிகாரிகள் ... நீதிபதிகள்..." – ஆளுகை செய்வோருக்கு இன்றியமையாதது ஞானம். ஞானத்தின் வழியில் நன்மை செய்து ஆளுகை செய்வோர், கடவுளின் தொண்டர்கள் என்கிறார், பவுலடிகள் (உரோமையர் 13:4). அறிவு அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும் உள் அழிக்கலாகா அரண் (குறள்#421).*

*வசனம் 8:17*
*"எனக்கு அன்பு காட்டுவோர்க்கு நானும் அன்பு காட்டுவேன்" –*
*கிறிஸ்து இயேசுவின் அருள்மொழியாக, யோவான் 14:21. மேலும் பார்க்க, 1 யோவான் 4:10&19.*

Δ

*"என்னை ஆவலோடு தேடுகின்றவர்கள் என்னைக் கண்டுபிடிப்பார்கள்" –*
*பார்க்க, 2:4-5, 3:13, 4:22; யாக்கோபு 1:5. கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளில், மத்தேயு 7:7.*

*வசனம் 8:18-19*
*இணை, 3:16, 22:4.*
*வ.19ல் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு சொற்கள்:*
** பயன்; OV, பலன்; per-ee / பெரீ, fruit அல்லது bough.*

** விளைச்சல்; OV, வருமானம்; teb-oo-aw / டெபூஆ, income அல்லது produce.*
*Bough என்பது கொப்பு; மரத்தின் கிளையிலிருந்து கொப்பு உடைக்கப்பட்டாலும் இன்னும் கிளர்ந்து எழும்; உடைக்கப்பட்ட கொப்பும், நடப்பட்டால் மரமாக வளரும். Produce அல்லது விளைச்சல் என்பது விதைக்கப்பட்டால் மீண்டும் வளர்ந்து விளைச்சல் பெருகும். ஆக, இந்த வசனத்தின் இரண்டு சொற்களிலும் சாலமோன் உணர்த்துவது, அழியக் கூடிய பொன் வெள்ளியை விட,* ***தழைப்பதும், விளைவதுமாகத் தொடர்ந்து உயிர்ப்போடு வளர்ந்து பெருகும் ஒன்றாக, ஞானத்தின் விளைச்சல் இருக்கிறது.*** *தொட்டனைத்தூறும் மணற்கேணி.*

*"ஞானமும் அறிவுமாகிய செல்வங்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மறைந்துள்ளன" (கொலோசையர் 2:3) எனும் பவுலடிகளின் கூற்றை நினைவில் வையுங்கள்.*

*வசனம் 8:22-36*
*இந்த வசனங்களின் பகுதிகள் பலவும், கிறிஸ்து இயேசுவைச் சுட்டும் குறியீடுகள். குறிப்பாக, வ.22, படைப்பின் தொடக்கத்தில் செயல்பட்ட வாக்கைக் குறிப்பிடுகிறது, யோவான் 1:1-3&10; 1 கொரிந்தியர் 8:6; கொலோசையர் 1:15-17; 1 யோவான் 1:1-2; திருவெளிப்பாடு 3:14.*

*ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத் திறன், ஆற்றல் மற்றும் நுண்மதியின் வடிவானவரே கிறிஸ்து (எசாயா 11:2). கிறிஸ்துவே கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார், 1 கொரிந்தியர் 1:24.*

*வசனம் 8:22*
*"...என்னைப் படைத்தார்" –*
*OV, "... என்னை... கொண்டிருந்தார்".*
*ஞானத்தைக் கடவுள் படைத்தார் என்று பொருள்கொள்வது சரியல்ல. ஞானம் தொடக்கத்திலேயே கடவுளோடு, அவருக்கே*

*உரியதாக இருந்தது. kaw-naw / கானா என்பதற்கு உண்டுபண்ணுதல், படைத்தல், கொள்ளுதல், பெறுதல் என்று பொருளுண்டு என்றாலும், படைப்பின் தொடக்கத்தில் ஞானம் கடவுளுக்கே உரியதாக இருந்தது. படைப்பிற்கு முன்பே கிறிஸ்துவும் கடவுளிடமிருந்து புறப்படும் வாக்காக இருந்தார் (யோவான் 1:1-3).*

*வசனம் 8:23*
*பூவுலகு உண்டாகும் முன்பே திருநிலைப்படுத்தப்பட்ட ஞானம்; அதுபோலவே, பூவுலகின் படைப்புக்கு முன்பே, நம்மை மீட்டு, கடவுளோடு இணைக்கும் இணைப்பாளராக கிறிஸ்து இயேசு விளங்குகிறார் (எபேசியர் 1:4; 2 திமொத்தேயு 1:9).*
*இந்த வசனத்திலும் குறிப்பிடத்தக்க சொல் ஒன்று உள்ளது: நிலைநிறுத்தப்பெறுதல், OV, அபிஷேகம்; naw-sak / நாஸக். ஊற்றுதல், உருகுதல் என்பது. திருநிலைப்படுத்தல் என்ற பொருளில் இங்கும், திருப்பாடல் 2:6ல் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது; ஒன்று, ஞானத்தின் தொடர்பிலும், மற்றொன்று, அரசராகிய கிறிஸ்துவின் தொடர்பிலும்.*

*வசனம் 8:24-31*
*தொடக்கத்தின் முன்னரே கடவுளோடு இருந்து செயல்பட்ட ஞானம்; ஒப்பிடுக, யோவான் 1:1-3,14&18. படைப்பில் கடவுளின் ஞானம், தொடக்க நூல் 1:3-30.*

*வசனம் 8:25-26*
*"...முன்னே ... முன்னே ... முன்னே ... முன்னே..." –*
*கிறிஸ்து இயேசுவும் அனைத்திற்கும் முந்தியவர், கொலோசையர் 1:15-17.*

*வசனம் 8:25*
*"...பிறந்தேன்" –*

*OV, ஜநிப்பிக்கப்பட்டேன்; kheel / கீல்; முறுக்கி ஆடுதல், வலியில் துடித்தல், அஞ்சி நடுங்குதல் என்று பொருள்படும். இதில் பிறந்தேன் / ஜநிப்பிக்கப்பட்டேன் என்பது நேரடியான பொருள் அல்ல.*

*வசனம் 8:27-29*
*படைப்பில், நமது கண்களுக்குப் புலப்படாத உயரங்களையும் ஆழங்களையும் குறிப்பிடும் ஞானம் (தொடக்க நூல் 1:3-10). படைப்பு என்பதே காணப்படாதவற்றினின்று காணப்படுகிறவை உண்டாயின என்பதுவே; கடவுளினின்று வெளிப்பட்ட வாக்கே அவற்றை உருவாக்கியது என்பதுவே நமது நம்பிக்கை (எபிரேயர் 11:3).*

*வசனம் 8:30-31*
*"... மகிழ்ச்சி ... மகிழ்ந்து ... மகிழ்ந்து ... மகிழ்ச்சி..." –*
*படைப்பில் மகிழ்ந்து செயல்பட்ட ஞானம், மனித இனத்தோடு இருப்பதிலும் மகிழ்ச்சி கொள்கிறது. கடவுளையும் மகிழ்விக்கிறது. மக்கள் மட்டுமல்லாமல், கிறிஸ்து இயேசுவில் மகிழும் தந்தையாம் கடவுள், மத்தேயு 3:17.*

*வசனம் 8:30*
*சிற்பி –*
*OV, செல்லப்பிள்ளை; aw-mone / ஆமோன், பொருள் விளங்காத, வேறு எங்கும் பயன்படுத்தப்படாத சொல். aw-man அல்லது aw-mawn என்ற வேறு சொற்களின் தொடர்பில், சிற்பி அல்லது செல்லப்பிள்ளை என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது.*

*வசனம் 8:32*
*"எனவே பிள்ளைகளே" –*
*தனது தொன்மையையும், அப்போது முதலே கடவுளோடு இருந்ததையும் விரிவாக விவரித்த ஞானம், தனக்குரிய மதிப்பை அளித்து, தனக்குச்*

*செவிமடுத்து வாழ விடுக்கும் அழைப்பு. பார்க்க, மாற்கு 7:14; மேலும் பார்க்க, மத்தேயு 17:5.*

*வசனம் 8:33*
*"அதைப் புறக்கணியாதீர்கள்" –*
*ஞானத்தின் கண்டிப்பைப் புறக்கணிப்பவர், தமக்கே கேடு வரவழைக்கிறார், பார்க்க, வ.36, 1:25, 13:18, 15:32.*

*வசனம் 8:34*
*"வாயிற்படி" - ஒப்பிடுக, 5:8.*
Δ

*"...நாள்தோறும் விழிப்புள்ளோராய் நின்று, ...காத்திருந்து..." –*
*ஒட்டுமொத்த வாழ்க்கைக்கும் ஒரே நாளில், பெறுவதல்ல ஞானம்; மாறாக, அது ஒவ்வொரு நாளின் தேடல். அதற்காகவே, அனுதினமும் பைபிள் வாசிப்பும், இறைவேண்டலும்.*

*வசனம் 8:35*
*"என்னைத் (ஞானத்தைத்) தேடி அடைவோர் வாழ்வடைவர்" –*
*பார்க்க, 3:22-24, 4:13, 9:6; வ.17ன் நிறைவே இந்த வசனம்.*
*கிறிஸ்து இயேசுவே வாழ்வு, யோவான் 14:6; அவரை அறிந்து கொள்வதே நிலைவாழ்வு, யோவான் 17:3.*

*வசனம் 8:36*
*"என்னை வெறுக்கும் அனைவரும் சாவை விரும்புவோர்" –*
*பார்க்க, 1:28-33, 2:21-22, 3:33, 5:22-23, 7:27, 9:18, 14:12, 15:32, 16:25, 21:6, 29:24.*

*யார்தான் சாவை விரும்புவார்?*

✝

# 20 நீதிமொழிகள் 09

## (ஞானமும் மதிகேடும்)

*1 ஞானம் தனக்கு ஒரு வீட்டைக் கட்டியிருக்கின்றது;
அதற்கென ஏழு தூண்களைச் செதுக்கியிருக்கின்றது. 2
அது தன் பலிவிலங்குகளைக் கொன்று, திராட்சை
இரசத்தில் இன்சுவை சேர்த்து, விருந்து ஒன்றிற்கு
ஏற்பாடு செய்தது; 3 தன் தோழிகளை
அனுப்பிவைத்தது; நகரின் உயரமான இடங்களில்
நின்று, 4 "அறியாப் பிள்ளைகளே, இங்கே வாருங்கள்"
என்று அறிவிக்கச் செய்தது; மதிகேடருக்கு அழைப்பு
விடுத்தது; 5 "வாருங்கள், நான் தரும் உணவை
உண்ணுங்கள்; நான் கலந்துவைத்துள்ள திராட்சை
இரசத்தைப் பருகுங்கள்; 6 பேதைமையை
விட்டுவிடுங்கள்; அப்பொழுது வாழ்வீர்கள்;
உணர்வை அடையும் வழியில் செல்லுங்கள்" என்றது.*

*7 இகழ்வாரைத் திருத்த முயல்வோர் அடைவது
ஏளனமே; பொல்லாரைக் கண்டிப்போர் பெறுவது
வசைமொழியே. 8 இகழ்வாரைக் கடிந்து
கொள்ளாதே; அவர்கள் உன்னைப் பகைப்பார்கள்.
ஞானிகளை நீ கடிந்து கொண்டால், அவர்கள்
உன்னிடம் அன்புகொள்வர். 9 ஞானிகளுக்கு
அறிவுரை கூறு; அவர்களது ஞானம் வளரும்;
நேர்மையாளருக்குக் கற்றுக் கொடு; அவர்களது
அறிவு பெருகும். 10* ***ஆண்டவரிடம் கொள்ளும்
அச்சமே ஞானத்தின் தொடக்கம்; தூயவராகிய
அவரைப்பற்றிய உணர்வே மெய்யுணர்வு.*** *11
என்னால் உன் வாழ்நாள்கள் மிகும்; உன் ஆயுட்காலம்
நீடிக்கும். 12 நீங்கள் ஞானிகளாய் இருந்தால்,
அதனால் வரும் பயன் உங்களுக்கே உரியதாகும்;
நீங்கள் ஏளனம் செய்வோராய் இருந்தால், அதனால்
வரும் விளைவை நீங்களே துய்ப்பீர்கள்.*

*13 மதிகேடு என்பதை வாயாடியான, அறிவில்லாத, எதற்கும் கவலைப்படாத ஒரு பெண்ணுக்கு ஒப்பிடலாம். 14 அவள் தன் வீட்டு வாயிற்படியிலோ, நகரின் மேடான இடத்திலோ உட்கார்ந்துகொண்டு, 15 தம் காரியமாக வீதியில் செல்லும் வழிப்போக்கரைப் பார்த்து, 16 "அறியாப் பிள்ளைகளே, இங்கே வாருங்கள்" என்பாள்; மதிகேடரைப் பார்த்து, 17 "திருடின தண்ணீரே இனிமை மிகுந்தது; வஞ்சித்துப் பெற்ற உணவே இன்சுவை தருவது" என்பாள். 18 அந்த ஆள்களோ, அங்கே செல்வோர் உயிரை இழப்பர் என்பதை அறியார்; அவளுடைய விருந்தினர் பாதாளத்தில் கிடக்கின்றனர் என்பது அவர்களுக்குத் தெரியாது.*

*நீதிமொழிகள் 9:1-18*

## சிந்தனைக்கு

ஞானம் கட்டிய வீடும் வாழ்வும் *(வ.1-7)*, மதிகேடு இருக்கும் வீடும் கேடும் *(வ.13-18)* விளக்கப்பட்டு, இவை இரண்டில் பங்கேற்போருக்கு நேரிடும் விளைவுகள் காட்சிகளாக விரிகின்றன, வ.7-12. விருந்துக்கு அழைக்கும் ஞானத்தை, கிறிஸ்து இயேசு சொன்ன விருந்து உவமையோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் (லூக்கா 14:15-24).

*வசனம் 9:1*
*ஞானம் –*
*khok-moth / கொக்மோத், ஓர் உயர்திணை பன்மைத் தன்மையில் ஞானம் சிறப்பாகக் குறிப்பிடப்படுதல் - இங்கும் 1:20, 14:1 மற்றும் 24:7 வசனங்களில். மேலும் பார்க்க, திருப்பாடல் 49:3. பழைய ஏற்பாட்டின் ஏனைய இடங்களில் ஞானத்தைக் குறிக்க, khok-mah / கொக்மா என்ற ஒருமைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

Δ

*"ஏழு" –*
*இஸ்ரயேலருக்குச் சிறப்பான ஓர் இலக்கம். படைப்பின் நிறைவான ஏழாம் நாளை ஓய்வு நாளாகக் கடவுள் தூயதாக்கினார். அதனால் ஏழு என்பதைச் சிறப்பான இலக்கமாக இஸ்ரயேலர் போற்றினர். ஆனால் ஏழு என்பதை சம்பிரதாயமாக ஆக்கிய அவர்களே, ஓய்வுநாள் விதியையும் சடங்காக மாற்றி விட்டனர்.*

***எனவே இதுபோன்ற "சிறப்பு," "சம்பிரதாயம்," "சடங்குகளை" நம்மை விட்டு அகற்றுவோம்.***

Δ

*"...ஏழு தூண்கள்..." –*
*ஏழு தூண்களைக் கொண்டு எழுப்பப்பட்ட சிறப்பான, அகண்ட, எழில்மிகு வீடு என்று புரிந்து கொள்ளலாம்.*

*கிறிஸ்து இயேசுவும் தம்மை ஏற்றுக் கொண்டு வாழ்வோர்க்கு ஓர் இடத்தை ஆயத்தம் செய்கிறார் என்பதை நினைவுகூருவோம்.*

*வசனம் 9:2*
*"...பலிவிலங்குகளைக் கொன்று..." –*
*பார்க்க, மத்தேயு 22:4. பலியோடு சேர்ந்த விருந்தாக இருக்கலாம்; அல்லது பலியிடத் தகுதியுள்ள கொழுத்த விலங்குகள் அடிக்கப்பட்ட சிறப்பான விருந்தாக இருக்கலாம்.*

Δ

*"...திராட்சை இரசத்தில் இன்சுவை சேர்த்து..." –*
*பார்க்க, இனிமை மிகு பாடல் 8:2. இஸ்ரயேலரின் விருந்தில் திராட்சை இரசம் சிறப்பிடம் பெறுவது; இரசத்தின் அடர்த்தியைக் குறைத்து, மணமூட்டிகளும் சுவையூட்டிகளும் சேர்த்து, விருந்துக்கான திராட்சை இரசம் சிறப்பாகத் தயாரிக்கப்படும்.*

*வசனம் 9:3*
*ஒப்பிட்டு அறிக, வ.14.*

*வசனம் 9:4*
*"அறியாப் பிள்ளைகளே" –*
*OV, எவன் பேதையோ அவன்.*

*தவறான வழியில் சென்றவன் மீண்டும் திரும்பிப் பயணித்து சரியான இடம் வந்து சேர்தல் கடினமானது. பயணத்தைத் தொடங்கும்போதே சரியாகத் தொடங்குதல் சிறப்பான பயணமாக அமையும். ஒப்பிடுக, எபிரேயர் 5:13-14.*

*வசனம் 9:5*
*"...உண்ணுங்கள் ... பருகுங்கள்" –*
*உருவகமாக, வார்த்தையைக் கற்றுத் தேறுதல். தம்மை, தமது வார்த்தைகளை உண்டு பருக அழைக்கும் கிறிஸ்து இயேசு, யோவான் 6:35, 7:37-38; இணைத்து வாசிக்க, எசாயா 55:1-8.*

*வசனம் 9:7*
*இகழ்வார் –*
*பார்க்க, 1:22; திருப்பாடல் 1:1.*
*கடவுளையும் ஞானத்தையும் இகழ்வோர்; இகழ்வாரைச் சரிசெய்தல் அரிதிலும் அரிய செயல்.*

*வசனம் 9:7-9*
*கிறிஸ்து இயேசு கூறும் உவமையோடு ஒப்பிடுங்கள், மத்தேயு 7:6. இணைத்து வாசிக்க, மத்தேயு 13:12.*

*வசனம் 9:10*
*ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம், நூலின் கருப்பொருள் மீண்டும் வலியுறுத்தப் பெறல், 1:7 & 2:5 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, தானியேல் 2:20-22; எபேசியர் 1:17; யாக்கோபு 3:17.*

Δ

*"தூயவராகிய அவரைப் பற்றிய உணர்வே மெய்யுணர்வு" –*
*பார்க்க, 30:3; எசாயா 6:3. அறிதல் மட்டுமல்லாமல் உணர்தல். அறிந்து அதனையே நமது உணர்வாகக் கொள்ளுதல். அந்த உணர்வில் நாம் செயல்படுதலே ஆவிக்குள்ளான நடத்தை. உணர்வடைதல் ஒரே நாளில் நிகழ்வதல்ல. வார்த்தையில் மறைந்துள்ள உண்மைகளை வெளிப்படுத்துமாறு வேண்டுதலுடன் ஒவ்வொரு நாளும் பைபிள் வாசித்துத் தியானித்தலே கடவுளை அறிந்து உணர்வடைதல்.*

Δ

*"...தொடக்கம்" –*
*எபிரேயத்தில் ray-sheeth / ரேஷீத் என்பது படைப்பின் தொடக்கத்தைக் குறிப்பது (முன்பு எப்போதும் இருந்ததில்லை) (தொடக்க நூல் 1:1). இங்கு பயன்படுத்தப்படும் சொல், tekh-il-law / டெகில்லா. அனைத்திற்கும் முன்பு செய்ய வேண்டியது என்பது போன்ற பொருளில்.*

**ஞானத்தைத் தேடுவோர் முதலில் அறிய வேண்டியது - கடவுள் எந்த அளவுக்குத் தூயவர், அஞ்சத் தக்கவர், பேராற்றல் மிக்கவர், மாறாத அன்புடையவர், அளவற்ற அருளாளர், பேரிரக்கம் கொண்டவர் என்பதை ஏற்றுக் கொள்வதே.**

*வசனம் 9:11*
*ஆண்டவருக்கு அஞ்சுவோருக்கு அவர் அருளும் வாக்கு, 3:2, 10:27; இணைச் சட்டம் 5:16, 11:9&21. நமக்கு இருக்க வேண்டிய வாஞ்சையைக் குறித்துப் பவுலடிகள் தெளிவாகக் காட்டுகிறார், பிலிப்பியர் 1:21-24.*

***இந்த உலகில் நீண்ட ஆயுளா?***
***கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வா?***

*வசனம் 9:12*
*அதனதன் பலன் அவரவர்க்கே, எசேக்கியேல் 18:1-32.*

*வசனம் 9:13-18*
*வ.1-6க்கு ஒப்பீட்டளவில் நேரெதிரான சூழல்.*

*வசனம் 9:13*
*பெண் என்ற உருவகம்; பார்க்க 7:10-12.*

*வசனம் 9:17*
*ஒப்பிடுக, 5:15, 20:17.*
*மேலும், திருடிய தண்ணீர் என்பது உருவகமாக, தீய வழிகளில் குவிக்கும் செல்வத்தையும் குறிக்கும்.*

*"பாவத்தில் சிறிது காலம் இன்புறுவதைவிட, கடவுளுடைய மக்களோடு சேர்ந்து துன்புறுவதையே அவர் (மோசே) தெரிந்து கொண்டார்" (எபிரேயர் 11:25).*

*வசனம் 9:18*
*விருந்தினர் –*
*உண்மையில் நாம் அனைவரும் இந்த உலகில் விருந்தினரே! அதிலும், தீங்குசூழ் உலகில், தீங்கின் விருந்தினரே (எபேசியர் 2:3; தீத்து 3:3). கடவுளின் பெரிதான கிருபை நம்மைத் தீங்குக்கும் தீங்கின் விளைவுகளுக்கும் மீட்டுக் காக்கிறது. நலமானதைப் பற்றிக் கொண்டு, கிறிஸ்து இயேசு நமக்காக ஆயத்தம் செய்து கொண்டுள்ள வாழ்விடத்தை வாஞ்சித்து வாழ்வோம். ஆமென்.*

✝

# 20 நீதிமொழிகள் 10

## (சாலமோனின் நீதிமொழிகள்)

*1 சாலமோனின் நீதிமொழிகள்:*
*ஞானமுள்ள பிள்ளைகள் தம் தந்தையை*
*மகிழ்விக்கின்றனர்;*
*அறிவற்ற மக்களோ தம் தாய்க்குத் துயரமளிப்பர்.*
*2 தீய வழியில் ஈட்டிய செல்வம் பயன் தராது;*
*நேர்மையான நடத்தையோ சாவுக்குத் தப்புவிக்கும்.*
*3 நல்லாரை ஆண்டவர் பசியால் வருந்த விடார்.*
*ஆனால் பொல்லார் விரும்புவதை அவர்களுக்குக்*
*கொடுக்க மாட்டார்.*
*4 வேலை செய்யாத கை வறுமையை வருவிக்கும்;*
*விடாமுயற்சியுடையோரின் கையோ செல்வத்தை*
*உண்டாக்கும்.*
*5 கோடைக் காலத்தில் விளைச்சலைச் சேர்த்து*
*வைப்போர் மதியுள்ளோர்;*
*அறுவடைக் காலத்தில் தூங்குவோர்*
*இகழ்ச்சிக்குரியர்.*
*6 நேர்மையாளர் மீது ஆசி பொழியும்;*
*பொல்லார் பேச்சிலோ கொடுமை மறைந்திருக்கும்.*
*7 நேர்மையாளரைப் பற்றிய நினைவு ஆசி*
*விளைவிக்கும்;*
*பொல்லாரின் பெயரோ அழிவுறும்.*
*8 ஞானமுள்ளோர் அறிவுரைகளை மனமார ஏற்பர்;*
*பிதற்றும் மூடரோ வீழ்ச்சியுறுவர்.*
*9 நாணயமாக நடந்து கொள்வோர் இடையூறின்றி*
*நடப்பர்;*
*கோணலான வழியைப் பின்பற்றுவோரோ*
*வீழ்த்தப்படுவர்.*
*10 தீய நோக்குடன் கண்ணடிப்போர் தீங்கு*
*விளைவிப்பர்;*
*பிதற்றும் மூடரோ வீழ்ச்சியுறுவர்.*
*11 நல்லாரின் சொற்கள் வாழ்வளிக்கும் ஊற்றாகும்;*

*பொல்லாரின் பேச்சிலோ கொடுமை மறைந்திருக்கும்.*
*12 பகைமை சண்டைகளை எழுப்பிவிடும்;*
*தனக்கிழைத்த தீங்கு அனைத்தையும் அன்பு மன்னித்து மறக்கும்.*
*13 விவேகமுள்ளவர்களின் சொற்களில் ஞானம் காணப்படும்;*
*மதிகெட்டவர்களின் முதுகிற்குப் பிரம்பே ஏற்றது.*
*14 ஞானமுள்ளோர் அறிவைத் தம்மகத்தே வைத்திருப்பர்;*
*மூடர் வாய் திறந்தால் அழிவு அடுத்து வரும்.*
*15 செல்வரின் சொத்து அவருக்கு அரணாயிருக்கும்;*
*ஏழையரின் வறுமை நிலை அவர்களை இன்னும் வறியோராக்கும்.*
*16 நேர்மையாளர் தம் வருமானத்தை வாழ்வதற்குப் பயன்படுத்துகின்றனர்;*
*பொல்லாதவரோ தம் ஊதியத்தைத் தீய வழியில் செலவழிக்கின்றனர்.*
*17 நல்லுரையை ஏற்போர் மெய்வாழ்வுக்கான பாதையில் நடப்பர்;*
*கண்டிப்புரையைப் புறக்கணிப்போரோ தவறான வழியில் செல்வர்.*
*18 உள்ளத்தின் வெறுப்பை மறைப்போர் பொய்யர்;*
*வசைமொழி கூறுவோர் மடையர்.*
*19 மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும்;*
*தம் நாவை அடக்குவோர் விவேகமுள்ளோர்.*
*20 நல்லாரின் சொற்கள் தூய வெள்ளிக்குச் சமம்;*
*பொல்லாரின் எண்ணங்களோ பதருக்குச் சமம்.*
*21 நல்லாரின் சொற்கள் பிறருக்கு உணவாகும்;*
*செருக்கு நிறைந்தோரின் மதிகேடு அவர்களை அழித்துவிடும்.*
*22* ***ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும்;***
***அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம்.***
*23 தீங்கிழைப்பது மதிகெட்டோர்க்கு மகிழ்ச்சிதரும் விளையாட்டு;*

ஞானமே மெய்யறிவு உள்ளோர்க்கு மகிழ்ச்சி தரும்.
24 பொல்லார் எதற்கு அஞ்சுவரோ, அதுவே
அவர்களுக்கு வரும்;
கடவுளுக்கு அஞ்சி நடப்போர் எதை
விரும்புகின்றனரோ,
அது அவர்களுக்குக் கிடைக்கும்.
25 சுழல் காற்றுக்குப்பின் பொல்லார்
இராமற்போவர்;
கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்களோ
என்றுமுள்ள அடித்தளம் போல நிற்பார்கள்.
26 பல்லுக்குக் காடியும் கண்ணுக்குப் புகையும்
எப்படி இருக்குமோ,
அப்படியே சோம்பேறிகள் தங்களைத் தூது
அனுப்பினோர்க்கு இருப்பர்.
27 **ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்** ஆயுளை
நீடிக்கச் செய்யும்;
பொல்லாரின் ஆயுட்காலம் குறுகிவிடும்.
28 நல்லார் தாம் எதிர்பார்ப்பதைப் பெற்று மகிழ்வர்;
பொல்லார் எதிர்பார்ப்பதோ அவர்களுக்குக்
கிட்டாமற் போகும்.
29 **ஆண்டவரின் வழி நல்லார்க்கு அரணாகும்;
தீமை செய்வோர்க்கோ அது அழிவைத் தரும்.**
30 கடவுளுக்கு அஞ்சி நடப்போரை ஒருபோதும்
அசைக்க இயலாது;
பொல்லாரோ நாட்டில் குடியிருக்கமாட்டார்.
31 கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் வாயினின்று
ஞானம் பொங்கி வழியும்;
வஞ்சகம் பேசும் நா துண்டிக்கப்படும்.
32 கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் சொல்லில்
இனிமை சொட்டும்;
பொல்லாரின் சொற்களிலோ வஞ்சகம் பொங்கி
வழியும்.

நீதிமொழிகள் 10:1-12

## சிந்தனைக்கு

*முதலாம் அதிகாரம் தொடங்கி ஒன்பதாம் அதிகாரம் வரை உள்ள பகுதி, ஞானத்திற்குப் புகழ் மாலை! இனி வருவன ஞானத்தின் விளைவான நீதிமொழிகள். சாலமோனின் ஆயிரக்கணக்கான நீதிமொழிகளில் (1 அரசர்கள் 4:32), இந்த நூலில் சில நூறு நீதிமொழிகளே இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

*திருக்குறள் ஓர் ஈரடிக் கவிதை நூல் என்போம். ஒவ்வொரு குறளும் ஈரடியில், ஏழு சீர் அமைப்பில் இயற்றப்பட்டது. நீதிமொழிகள் 10:1 முதல் 22:16 வரை உள்ள சாலமோனின் நீதிமொழிகள், இரட்டை வாக்கியக் கவிதைகள். இந்தப் பகுதியில் மொத்தம் 375 நீதிமொழிகள் உள்ளன.*

*ஞானம் -எதிர்- மடமை, நன்மை -எதிர்- தீமை என்பது போல, இதற்கு முந்தைய அதிகாரங்களின் தொடர்ச்சியாக, வரும் ஆறு அதிகாரங்கள் (திருமொழிகள் 10:2 முதல் 15:32 வரை) அமைகின்றன; இந்தப் பகுதியில், ஒரு வாக்கியத்தின் இணையான எதிர்மறையாக இரண்டாவது வாக்கியம் அமைந்துள்ளது (முரணிசைவான நீதிமொழிகள்).*

*பின்னர் 16:1 முதல் 22:16 வரை வெவ்வேறு தளங்களில், இணையாக அல்லது சில வசனங்களில் எதிர்மறையாக, வெவ்வேறு நீதிநெறிகளை அறிவுறுத்தி நூல் பயணிக்கிறது.*

*திருக்குறள் போன்ற தமிழ் நன்னெறி நூல்களின் பாக்கள் ஒவ்வொரு கருப்பொருளில் தொகுக்கப்பட்ட அதிகார அமைப்பில் உள்ளன. அதுபோன்ற தொகுப்பான அமைப்பு ஏதும் இல்லாமல், கலவையான கருப்பொருளில் அமைந்த நீதிநெறி வாக்கியங்களால் அமைந்ததாக இந்நூல்*

*உள்ளது. அவ்வாறு அமைந்துள்ளதாலேயே ஒவ்வொரு வாக்கியமும் மீண்டும் மீண்டும் சிந்தனைக்கு உரியதாக உள்ளது.*

*பழைய மொழிபெயர்ப்பு, ஞானமுள்ள மகன் அல்லது மூடன் என்று ஆண் பால் ஒருமையில் சுட்டுகிறது. மகன் அல்லது மகள் என்ற பாலின வேறுபாடின்றி, பொது மொழிபெயர்ப்பில், ஞானமுள்ள பிள்ளைகள் அல்லது அறிவற்ற மக்கள் என, பொதுமைப் பாலில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*கடவுளுக்கு அஞ்சி நடப்போர் என்ற சொற்றொடர், இந்த அதிகாரத்தில் மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது. பார்க்க, மொழிபெயர்ப்புக் குறிப்பு, 3:33.*

*வசனம் 10:1*

*பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியே பெற்றோரின் மகிழ்ச்சி, 15:20, 17:21&25, 23:24-25; 28:7, 29:3. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல் (குறள்#70). ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள்#69). சான்றோன் என்கை ஈன்றோர்க்கு அழகு (கொன்றைவேந்தன்#27).*

*வசனம் 10:2*

*பார்க்க, 21:6; மேலும் பார்க்க, திருப்பாடல் 49:9-12; சபை உரையாளர் 5:15; 1 திமொத்தேயு 6:6-9. தீய வழிகளில் செல்வம் சேர்த்தல் கடவுளின் ஒன்பதாவது மற்றும் பத்தாவது கட்டளைகளுக்கு எதிரானது, விடுதலைப் பயணம் 20:15-17.*

*ஆதாயம் வரும் வழிகள் இரண்டு - ஒன்றின் விளைவு செல்வம் எனினும் பலன் ஏதுமில்லை. மற்றொன்றான, நேர்மையின் விளைவும் பலனுமோ, நீண்ட வாழ்வு.*

*இந்த இடத்தில், நேர்மறையாளர் மட்டுமா நெடுங்காலம் வாழ்கின்றனர்? அல்லது நேர்மையாளர் குறைந்த ஆயுளில் சாவதில்லையா? - என்ற வினாக்கள் எழலாம். நேர்மையாளர் மரித்தாலும் இவ்வுலகில் அவர்களின் புகழ் வாழ்ந்து கொண்டிருக்கும் (திருப்பாடல் 112:6). கூடுதலாக, கடவுள் நேர்மையாளருக்கு நிலைவாழ்வை அருளுகிறார்.*

*வசனம் 10:3*
*நல்லவர்கள் இவ்வாழ்க்கையில் பசியால் வாட மாட்டார்களா?*
*பசி வரலாம், துன்பம் நேரலாம், இடருறலாம்; ஆனால் நேர்மையின் பொருட்டு இவை அனைத்தையும் மேற்கொண்டு, உள நிறைவோடு வாழ, கடவுளின் ஞானம் வழி நடத்துகிறது. பார்க்க, உரோமையர் 8:35-39. வறிஞர்க்கு அழகு, வறுமையில் செம்மை (நறுந்தொகை#15).*

*வசனம் 10:4-5*
*பார்க்க, 6:6-11, 13:4, 19:15, 24:30-34, 28:19.*
*சோம்பேறித்தனம், செயலற்று இருத்தல், வேலை செய்வது போல் பாவனை செய்தல் - இவையனைத்தும் ஒருவனைத் துன்பத்தில் ஆழ்த்தும்; கொடிய வறுமையைக் கொண்டு வரும்.*

*வசனம் 10:6*
*இந்த வசனம் தொடங்கி, இந்த அதிகாரத்தின் சில வசனங்களில், வாயின் வார்த்தைகளைக் குறித்த எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. மேலும் பார்க்க, வ.11 மற்றும் குறிப்பு.*

*வசனம் 10:7*

*"பொல்லாரின் பெயரோ அழிவுறும்" –*

*பொல்லாரின் செயல்களால் விளையும் சாபம், அவர்களின் பெயரை மட்டுமல்லாமல் வழிமரபே அற்றுப் போகச் செய்யும், விடுதலைப் பயணம் 17:14; திருப்பாடல் 109:13.*

*வசனம் 10:8&10*

*"பிதற்றும் மூடரோ வீழ்ச்சியுறுவர்" –*

*ஓட்டை வாயன், உளறித் திரிபவன். அத்தகையோரின் வாயே அவர்களுக்குத் துன்பத்தைக் கொண்டு வரும். பல்லார் முனியப் பயனில சொல்லுவான் எல்லாரும் எள்ளப்படும் (குறள்#191).*

*வசனம் 10:9*

*நாணயமாக நடப்போர் இடையூறுகளை வென்று நேர்வழியில் நடக்க, கடவுள் துணை நிற்கிறார், 2:7.*

*வசனம் 10:10*

*"தீய நோக்குடன் கண்ணடிப்போர்..." –*

*பார்க்க, 6:13; திருப்பாடல் 35:19.*

*வசனம் 10:11*

*இதனோடு, வ.20&21. மேலும் இணைத்து வாசிக்க, 3:18, 11:30 & 13:14.*

*ஒரு சொல் வெல்லும்; ஒரு சொல் கொல்லும்! கனியிருப்பக் காய் கவர்ந்தற்று! உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்! நேர்மையாளரின் உள்ளமே நலம் தரும் சொற்களால் நிறைந்திருக்கும்!*

*கிறிஸ்து இயேசுவின் சொற்களுக்காக ஏங்கிய பேதுருவை நினைவில் கொள்க, யோவான் 6:68.*

*வசனம் 10:12*

*"பகைமை சண்டைகளை எழுப்பி விடும்" –*

*பகை என்னும் பண்பு இலதனை, ஒருவன் நகையேயும் வேண்டற் பாற்றன்று (குறள்#871); பகை*

*நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண், தங்கிற்று உலகு (குறள்#874). பகைமையை உள்ளத்திலிருந்து அகற்ற அறிவுறுத்தல், லேவியர் 19:17; பகைமையினால் நேரிடும் தீங்குக்குத் தண்டனை, எண்ணிக்கை 35:21. பகைவர்க்கும் நன்மை செய்தல், விடுதலைப் பயணம் 23:4; பகைவரிடம் அன்புகூர அறிவுறுத்தும் கிறிஸ்து இயேசு, மத்தேயு 5:44.*

Δ

*"...அன்பு மன்னித்து மறக்கும்" –*
*பார்க்க, கொலோசையர் 3:13; 1 பேதுரு 4:8; மேலும் பார்க்க, 1 கொரிந்தியர் 13:7.*
*ஒருவர் பொறை இருவர் நட்பு (பழமொழி). குறை சொல்லிப் பிரிவை வளர்க்காமல், உள்ளார்ந்த அன்பால் உந்தப்படும் நேர்மையாளர்கள், ஆறுதலான சொற்களால் மன்னித்து உறவைப் புதுப்பிக்கின்றனர்.*

*மன்னிப்பு அருளும் தயாபரர் ஆண்டவர், திருப்பாடல் 32:1-2. மன்னிப்பை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டு நற்பேறு பெற்ற நாம், கடவுளுக்குள் நமது உடன்பிறப்புகள் அனைவருக்கும் மன்னிக்கக் கடனாளிகளாக இருக்கிறோம், 1 யோவான் 4:10-12. அத்தகைய அன்பே, திரளான பாவங்களைப் போக்கி, மனங்களை மாற்றி, வாழ்வு தரும் அன்பு, யாக்கோபு 5:20.*

*வசனம் 10:13*
*"விவேகமுள்ளவர்களின் சொற்களில் ஞானம் காணப்படும்" –*
*நேர்மறை எண்ணங்களைத் தங்கள் சொற்களின் வழியே விவேகமுள்ளவர்கள் விதைக்கின்றனர். கல்விக்கு அழகு, கசடற மொழிதல் (நறுந்தொகை#2).*

Δ

*"மதிகெட்டவர்களின் முதுகிற்குப் பிரம்பே ஏற்றது" –*

இணை, 19:29, 26:3. அறிவுரைக்குத் திருந்தாதவன் தண்டனைக்குத் திருந்துவான் என்ற நோக்கிலும் பிரம்பு பயன்படுத்தப்படும், 19:25, 20:30.

வசனம் 10:14
"ஞானமுள்ளோர் அறிவைத் தம்மகத்தே வைத்திருப்பர்" –
அறிஞர்க்கு அழகு, கற்று உணர்ந்து அடங்கல் (நறுந்தொகை#14). அறிவுரைகளை ஏற்கும் ஞானமுள்ளோர் (வ.8அ), அவற்றைத் தம்முள் சேர்த்து வைத்து (வ.14அ), ஏற்ற வேளைகளில் எடுத்துரைத்து (வ.13அ), தங்கள் சொற்களை வாழ்வளிக்கும் ஊற்றாகப் (வ.11அ) பயனுறச் செய்கின்றனர். செல்வரின் சொத்து அவருக்கு அரணாக இருப்பது போல் (வ.15அ), ஞானமுள்ளோருக்கு ஞானமே காப்பரண்.

வசனம் 10:15
ஏழைகளோடு ஒப்பிடுகையில், இவ்வுலகில் வாழும்போது, செல்வம் ஒரு பாதுகாப்பை அளிக்கிறது. ஆனால் மெய்யான பாதுகாப்பை அருளுபவர் கடவுளே, திருப்பாடல் 52:1-8.

வசனம் 10:18-21
ஒருவரது பேச்சு எவ்வாறு அமைய வேண்டும் என்று சாலமோன் உரைக்கிறார்.

வசனம் 10:18
பொய் சொல்லவோ, வெறுப்பை ஊக்குவிக்கவோ இந்த வசனம் சொல்லப்படவில்லை. பார்க்க, வ.12.

வசனம் 10:19
பார்க்க, 11:12, 26:4-5.
யா காவார் ஆயினும் நா காக்க; காவாக்கால் சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு (குறள்#127). பேசாமல் இருப்பவரின் அறிவை யாராலும் அறிந்து கொள்ள இயலாது. ஆகவே அறிவில் குறைந்தவரும்

*பேசாமலிருந்து தன் மதிப்பைக் காத்துக் கொள்ள இயலும். அதுபோன்றே, சொற்களின் மிகுதியும் தீதாக முடியலாம்; மாசற்ற சில சொல்லல் தேற்றாதவர், பல சொல்லக் காமுறுவர் (குறள்#649). எனவே தேவையற்ற பேச்சையும், பேச நேரிடும்போது தேவையற்ற சொற்களையும் தவிர்த்தலே சிறப்பு.*

*வசனம் 10:21*
*"நல்லாரின் சொற்கள் பிறருக்கு உணவாகும்" –*
*ஒப்பிட்டு அறிக, திருப்பாடல் 42:1; எரேமியா 3:15; யோவான் 6:35.*

*வசனம் 10:22*
*ஒப்பிடுக, வ.2, 15:6&16. மேலும் ஒப்பிட்டு உணர்க, சபை உரையாளர் 5:18-19 & திருப்பாடல் 127:1-2. பார்க்க, இணைச் சட்டம் 8:17-18.*

Δ

*"ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும்" –*
*OV, கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; KJV, the blessing of the Lord, it maketh rich. அறிவையும் ஆற்றலையும் அருளுபவர் ஆண்டவர். அவற்றில் நாம் உண்மையோடு நடக்க, அவரே ஆசிகளையும் அளிக்கிறார்.*

**செல்வம் ஈட்டலே வாழ்க்கையின் இலக்கு அல்ல; இவ்வுலக வாழ்க்கையில் நாம் நமது உயர் இலக்குகளை எட்ட அது ஒரு மூலம், ஓர் ஆதாரம்.**

*ஆண்டவரைப் போற்றவே செல்வம், 3:9. ஈகையே உண்மையான வளம், 11:25. ஏழைகளுக்கு ஈதல், பெற்ற செல்வத்தை ஆண்டவருக்கே திருப்பித் தருதல், 19:17. இவற்றின் விளைவு இன்னும் மேலான ஆசி, மத்தேயு 6:19-21; கொலோசையர் 3:1-2.*

*நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன, யாக்கோபு 1:17.*

Δ

*செல்வம் நிலையற்றது, 23:5, 27:24. ஆனால், அதனைக் கொண்டு, நிலையானவற்றை நாம் அடைய முடியும். அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது பெற்றால், அற்குப ஆங்கே செயல் (குறள்#333).*

Δ

*"துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம்" – ஒப்பிடுக, வ.4.*

*லோத்து தனக்கெனத் தெரிந்து கொண்ட செழிப்பான வாழ்க்கை, அவரை எங்கே தள்ளியது என்பதை நாம் நினைவில் கொள்வோம் (தொடக்க நூல் 13:10-11 > 14:12 & 19:15).*

Δ

*செப்டுவஜிண்டு பைபிளில், இந்த வசனம் வேறு விதமாகப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் நாம் கவனத்தில் கொள்வோம்:*

*The blessing of the Lord is upon the head of the righteous; it enriches him, and grief of heart shall not be added to it. (கடவுளுக்கு அஞ்சி வாழ்பவரின் தலைமீது இறையாசி இறங்கும்; அது அவரைச் செழுமைப்படுத்தும்; உள்ளத்திற்குத் துயரற்ற ஆசி அதுவே!).*

Δ

*சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனிது - இதைவிடவும் மிகப்பெரிய ஆசி இருக்கக்கூடுமோ!*

*இந்த ஆசியை நீங்கள் உளமார உணர்ந்துய்ய, மும்பை, கொல்கத்தா, புதுதில்லி அல்லது துபாயில் ஒரு தமிழ்த் திருச்சபைக்குள் நுழைந்து பாருங்கள்!*

*வசனம் 10:23*

*"தீங்கிழைப்பது மதிகெட்டோர்க்கு மகிழ்ச்சிதரும் விளையாட்டு" –*

*sekh-oke, சேகோக் என்ற சொல், சிரிப்பு, ஏளனம், நகைப்புக்கு ஆளாகுதல் என்று பொருள்படும். இங்கு மட்டுமே விளையாட்டு என்று பொருள்கொள்ளப்பட்டுள்ளது.*

*விளையாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டது. தீயோரோ அவர்களின் செயல்களுக்கு அவர்களே விதிமுறைகளை ஏற்படுத்திக்கொண்டு, அவற்றில் வெற்றிபெறுவது மட்டுமன்றி, அதைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.*

*வசனம் 10:25*

*ஒப்பிடுக, திருப்பாடல் 1:3-4 & மத்தேயு 7:24-27.*

*அடித்தளமற்ற பொல்லார்; கடவுள் அருளிய ஞானத்தால் இறைநம்பிக்கையில் அடித்தளமிட்ட நல்லோர்.*

*வசனம் 10:26*

*சோம்பேறி, பார்க்க, 6:6 மற்றும் குறிப்பு.*

Δ

*"பல்லுக்குக் காடியும் கண்ணுக்குப் புகையும்..." –*

*காடி பற்கூச்சத்தை ஏற்படுத்தும்; புகை கண்ணெரிச்சலை உண்டாக்கும்; தூதுபோகும் சோம்பேறி, தனது மதிகேட்டினால், தூதனுப்பியவனுக்கே துன்பத்தைத் தருவிப்பான்.*

*வசனம் 10:27*

*ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் –*

*சாலமோனின் நீதிமொழிகள் என்னும் இப்பகுதியில் (அதி.10 ~ 22) முதல் முறையாக நூலின் கருப்பொருள்.*

*வசனம் 10:28*

*நல்லாரின் எதிர்பார்ப்பு கடவுளை அறிதல்; கடவுள் ஒருபோதும் அவர்களைப் புறக்கணிக்கமாட்டார்.*

*பொல்லாரின் எதிர்பார்ப்புக்கு வரையறையே கிடையாது; ஒருபோதும் அவர்கள் நிறைவுபெறமாட்டார்கள்.*

*வசனம் 10:29*
*பார்க்க, வ.9, 18:10; திருப்பாடல் 91:1.*
*ஆண்டவரின் வழியில் பயணிக்கும் நல்லாருக்கு அவரே அரண்; அவருடைய வழியை அறியாத பொல்லார் தங்கள் வழிகளிலேயே சிக்கிக் கொள்வர்.*

*வசனம் 10:30*
*திருப்பாடல் 16:8ன் விளக்கமாக இந்த வசனம் அமைந்துள்ளது. மேலும், வாக்களிக்கப்பட்ட நாட்டின் வாழ்வோடும் இதனைப் புரிந்துகொள்ளலாம்.*

*வசனம் 10:31-32*
*பார்க்க, யாக்கோபு 3:1-18.*
*வ.6ல் தொடங்கி, "பேச்சு" "சொல்" "மொழி" "நா" "வாய்" என இந்த அதிகாரத்தின் கருப்பொருள் போல நாம் பேசும் சொல் விரிவடைகிறது. கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல் (குறள்#643). அல்லவை தேய அறம் பெருகும், நல்லவை நாடி இனிய சொலின் (குறள்#96). கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் சொற்கள் இனியவை; ஞானமுள்ளவரின் சொற்கள் கேட்போரை நல்வழிப்படுத்தி, நேரிய வழியில் வாழ அவர்களை ஆற்றுப் படுத்தும்; ஊக்கம் தரும். ஆகவே கடவுள் அருளும் நல்லறிவை உள்ளத்தில் நிறுத்துவோம் (வ.14; லூக்கா 6:45).*

# 20 நீதிமொழிகள் 11

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 கள்ளத் துலாக்கோல் ஆண்டவருக்கு
அருவருப்பானது;
முத்திரையிட்ட படிக்கல்லே அவர் விரும்புவது.
2 இறுமாப்பு வரும் முன்னே, இகழ்ச்சி வரும்
பின்னே;
தன்னடக்கம் இருக்குமாயின் ஞானமும் இருக்கும்.
3 நேர்மையானவர்களின் நல்லொழுக்கம் அவர்களை
வழிநடத்தும்;
நம்பிக்கைத் துரோகிகளின் வஞ்சகம் அவர்களைப்
பாழ்படுத்தும்.*
*4* **கடவுளின் சினம் வெளிப்படும் நாளில் செல்வம்
பயன்படாது;
நேர்மையான நடத்தையோ சாவுக்குத் தப்புவிக்கும்.**
*5 குற்றமில்லாதவர்களின் நேர்மை அவர்களின்
வழியை நேராக்கும்;
பொல்லார் தம் பொல்லாங்கினால் வீழ்ச்சியுறுவர்.
6 நேர்மையானவர்களின் நீதி அவர்களைப்
பாதுகாக்கும்;
நம்பிக்கைத் துரோகிகள் தங்கள் சதித்திட்டத்தில்
தாங்களே பிடிபடுவார்கள்.
7 பொல்லார் எதிர்நோக்கியிருந்தது
அவர்கள் சாகும்போதும் கிட்டாமலே மறைந்து
போகும்;
அவர்கள் எதிர்நோக்கியிருந்த செல்வம்
கிடைக்காமற் போகும்.
8 கடவுளுக்கு அஞ்சி நடப்போர் துயரினின்று
விடுவிக்கப்படுவர்;
பொல்லார் அதில் அகப்பட்டு உழல்வர்.
9 இறைப்பற்று இல்லாதோர் தம் பேச்சினால்
தமக்கு அடுத்திருப்பாரைக் கெடுப்பர்;
நேர்மையாளர் தம் அறிவாற்றலால் விடுவிக்கப்
பெறுவர்.*

*10 நல்லாரின் வாழ்க்கை வளமடைந்தால், ஊரார்*
*மகிழ்ந்து கொண்டாடுவர்;*
*பொல்லார் அழிந்தால் அவர்களிடையே ஆர்ப்பரிப்பு*
*உண்டாகும்.*
*11 நேர்மையாளரின் ஆசியாலே, நகர்*
*வளர்ந்தோங்கும்;*
*பொல்லாரின் கபடப் பேச்சாலே அது இடிந்தழியும்.*
*12 அடுத்திருப்போரை இகழ்தல் மதிகெட்டோரின்*
*செயல்;*
*நாவடக்கம் விவேகமுள்ளோரின் பண்பு.*
*13 வம்பளப்போர் மறைசெய்திகளை*
*வெளிப்படுத்திவிடுவர்;*
*நம்பிக்கைக்குரியோரோ அவற்றை மறைவாக*
*வைத்திருப்பர்.*
*14 திறமையுள்ள தலைமை இல்லையேல், நாடு*
*வீழ்ச்சியுறும்;*
*அறிவுரை கூறுவார் பலர் இருப்பின், அதற்குப்*
*பாதுகாப்பு உண்டு.*
*15 அன்னியருக்காகப் பிணை நிற்போர்*
*அல்லற்படுவர்;*
*பிணை நிற்க மறுப்போர்க்கு இன்னல் வராது.*
*16 கனிவுள்ள பெண்ணுக்குப் புகழ் வந்து சேரும்;*
*முயற்சியுள்ள ஆணுக்குச் செல்வம் வந்து குவியும்.*
*17 இரக்கமுள்ளோர் தம் செயலால் தாமே நன்மை*
*அடைவர்;*
*இரக்கமற்றோரோ தமக்கே ஊறு விளைவித்துக்*
*கொள்வர்.*
*18 பொல்லார் பெறும் ஊதியம் ஊதியமல்ல;*
*நீதியை விதைப்போரோ உண்மையான ஊதியம்*
*பெறுவர்.*
*19 நீதியில் கருத்தூன்றியோர் நீடு வாழ்வர்;*
*தீமையை நாடுவோர் சாவை நாடிச் செல்வர்.*
*20 வஞ்சக நெஞ்சினர் ஆண்டவரின்*
*இகழ்ச்சிக்குரியவர்;*
*மாசற்றோர் அவரது மகிழ்ச்சிக்கு உரியவர்.*
*21 தீயோர் தண்டனைக்குத் தப்பமாட்டார்; இது*
*உறுதி;*

*கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் மரபினருக்கோ
தீங்கு வராது.*
*22 மதிகெட்டு நடக்கும் பெண்ணின் அழகு
பன்றிக்குப் போட்ட வைர மூக்குத்தி.*
*23 கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் விருப்பங்கள்
எப்போதும் நன்மையே பயக்கும்;
எதிர்காலம் பற்றிப் பொல்லார் கொள்ளும்
நம்பிக்கை
தெய்வ சினத்தையே வருவிக்கும்.*
*24 அளவின்றிச் செலவழிப்போர் செல்வராவதும்
உண்டு;
கஞ்சராய் வாழ்ந்து வறியவராவதும் உண்டு.*
*25 ஈகைக் குணமுள்ளோர் வளம்பட வாழ்வர்;
குடிநீர் கொடுப்போர் குடிநீர் பெறுவர்.*
*26 தானியத்தைப் பதுக்கி வைப்போரை மக்கள்
சபிப்பர்;
தானியத்தை மக்களுக்கு விற்போரோ ஆசி பெறுவர்.*
*27 நன்மையானதை நாடுவோர், கடவுளின் தயவை
நாடுவோர் ஆவர்;
தீமையை நாடுவோரிடம் தீமைதான் வந்தடையும்.*
*28 தம் செல்வத்தை நம்பி வாழ்வோர் சருகென
உதிர்வர்;
கடவுளை நம்பி வாழ்வோரோ தளிரெனத் தழைப்பர்.*
*29 குடும்பச் சொத்தைக் கட்டிக் காக்காதவர்களுக்கு
எஞ்சுவது வெறுங்காற்றே;
அத்தகைய மூடர்கள் ஞானமுள்ளோர்க்கு
அடிமையாவர்.*
*30 நேர்மையான நடத்தை வாழ்வளிக்கும் மரத்திற்கு
இட்டுச் செல்லும்;
ஆனால், வன்செயல் உயிராற்றலை இழக்கச்
செய்யும்.*
*31 நேர்மையாளர் இவ்வுலகிலேயே கைம்மாறு
பெறுவர் எனில்,
பொல்லாரும் பாவிகளும் தண்டனை பெறுவது
திண்ணமன்றோ!*

*நீதிமொழிகள் 11:1-31*

## சிந்தனைக்கு

*வசனம் 11:1*
*இணை, 16:11, 20:10&23.*
*"நீட்டல், நிறுத்தல், கொள்ளல் ஆகிய அளவுகளில் நேர்மையைக் கடைப்பிடியுங்கள்," லேவியர் 19:35(-36). இன்னும் விரிவாக, இணைச் சட்டம் 25:13-16. கூடுதலாகப் பார்க்க, ஆமோஸ் 8:4-6; மீக்கா 6:10-13.*
Δ

*கள்ளத் துலாக்கோல் –*
*வணிகத்தில் செய்யப்படும் திருட்டுத்தனமான, ஏமாற்று அளவைகள் மற்றும் உத்திகள் அனைத்தையும் இந்த ஒற்றை வார்த்தையில் உள்ளடக்கலாம். வணிகரின் ஆதாய வெறியை இது காட்டுகிறது. சிறிய ஆசை, கடவுள் அருளும் ஆசிகளுக்குத் தடையாகிறது.*
Δ

*முத்திரையிட்ட படிக்கல் –*
*திருட்டுத்தனம் வரும்போது அரசுக் கட்டுப்பாடு வருகிறது. எடைக் கற்களும் துலாக்கோல்களும் ஆண்டுதோறும் முத்திரையிடப்பட வேண்டும்; அதற்காக வழங்கப்படும் சான்றிதழ், வணிக நிறுவனங்களில் வாடிக்கையாளர்களின் பார்வையில்படும்படி வைக்கப்பட வேண்டும்.*

***நீங்கள் வணிகராக இருந்தால், இவற்றையெல்லாம் முறையாகக் கடைப்பிடிக்கிறீர்களா? எச்சரிக்கை - நெறியற்ற வணிகரைக் கடவுள் கொடியவர்களாகத் தீர்த்து வெறுத்து ஒதுக்கிவிடுவார் (ஓசேயா 12:7).***

*வசனம் 11:2*
*இணை, 3:34, 16:18, 18:12, 29:23.*

*"தாழ்விடத்தில் நீர் நிரம்புவது போல, தன்னைத் தாழ்த்தும் ஆன்மா ஞானத்தால் நிரம்பும்" என்பது*

*எபிரேயக் கூற்று (ஆல்பர்ட் பார்ன்ஸ்). காக்க பொருளா அடக்கத்தை, ஆக்கம் அதனின் ஊங்கு இல்லை உயிர்க்கு (குறள்#122). அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப் பெறின், செறிவு அறிந்து சீர்மை பயக்கும் (குறள்#123).*

*பெருமை கொள்பவன் தன்னைக் குறித்தே எண்ணுகிறான். இவ்வாறு அவன், தான் கற்றுக் கொள்ளும் வழியை அடைத்து விடுகிறான்; அதனால் தன்மீது இகழ்ச்சியை வருவிக்கிறான். தன்னடக்கமோ கடவுளை மேன்மைப்படுத்தி, மென்மேலும் ஞானத்தை அடைகிறது. (பார்க்க, எரேமியா 9:24; கிறிஸ்து இயேசுவின் அருள்மொழி, லூக்கா 14:11; பவுலடிகளின் எடுத்தாளுகை, 1 கொரிந்தியர் 1:29-31; 2 கொரிந்தியர் 10:17.)*

*வசனம் 11:3*
*நல்லொழுக்கமே நேரிய வழியில் ஒருவரை நடத்துவது. பரிந்து ஓம்பி ஒழுக்கம் காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை (குறள்#132).*

*இளைஞர் யோசேப்பின் நேர்மையும் நல்லொழுக்கமும் அவரைக் காத்தது மட்டுமல்லாமல், நினைத்துப் பார்க்க முடியாத உயரத்தில் அவரை அமர்த்தியது.*

*வசனம் 11:4-8*
*நிறைவுக் கால நிகழ்வுகளை நினைவூட்டும் திருமொழிகள்.*

***நீதித் தீர்ப்பு நாள் உலகிற்குப் பொதுவானது. ஒவ்வொரு மனிதனுக்குமான நீதியோ, ஒருவர் வாழும் நாட்களில் அவருடைய தனிப்பட்ட அறவொழுக்கம் சார்ந்தது. வாழும் நாட்களோ நிலையற்றது! எனவே ஒவ்வொருவரும் தன் நேரிய வாழ்வை ஒவ்வொரு நாளும் பேணவேண்டும்.***

*வசனம் 11:4*
*விரிவாக, செப்பனியா 1:15-18; மேலும், திருவெளிப்பாடு 6:15-17.*

*வசனம் 11:5*
*வேறு சொற்களில், 12:28.*

*வசனம் 11:5-8*
*பார்க்க, 10:28 மற்றும் குறிப்பு.*

*"பொல்லாங்கினால் வீழ்ச்சி"*
*"சதித்திட்டத்தில் தாங்களே பிடிபடுதல்"*
*'துயரில் அகப்படும் பொல்லார்'*
*- சான்றாக, தூக்கப்பட்ட ஆமான், எஸ்தர் 7:10; காக்கப்பட்ட தானியேல், தானியேல் 6:23-24.*

*வசனம் 11:9*
*"இறைப்பற்று இல்லாதோர்..." –*
*OV, மாயக்காரன். khaw-nafe / கானெஃப்; hypocrite, impious என்று இரண்டு விதத்திலும் பொருள்கொள்ளலாம். மாயக்காரர் என்பதே சரி (பார்க்க, 1 திமொத்தேயு 4:1-4). இறைப்பற்றுடையோர் இறைப்பற்றற்றோரைத் திண்ணமாக அறிந்திருக்கிறபடியால் ஏமாறமாட்டார்கள்.*

*வசனம் 11:10-11*
*பார்க்க, 28:12, 29:2; எசாயா 3:10; நாகூம் 3:19. மேலும் பார்க்க, அத்தலியாவின் மரணத்தில் மகிழ்ந்த மக்கள், 2 அரசர்கள் 11:19-20; வருந்துவார் எவருமின்றிச் செத்துப் போன யோராம், 2 குறிப்பேடு 21:20.*

*நல்லோரின் வளம் அவர்களுக்கு மட்டுமன்றி, அவரைச் சார்ந்து வாழ்வோருக்கும் பலனளிக்கும். செல்வம் நயன் உடையான்கண் படின், பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று (குறள்#216). உலகு அவாம்*

*பேரறிவாளன் திரு, ஊருணி நீர் நிறைந்தற்று (குறள்#215).*

*வசனம் 11:11*
*சான்றாக, சோதோம், கொமோரா குறித்த ஆபிரகாமின் கேள்வியும், பின்னர் அவற்றின் அழிவும் (தொடக்க நூல் 18:23 - 19:25).*

*வசனம் 11:12*
*இகழ்தல் –*
*இணை, 14:21. கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளில், மத்தேயு 5:22.*

*நாவடக்கம், பார்க்க, 10:19 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 17:28. அறிஞர்க்கு அழகு, கற்று உணர்ந்து அடங்கல் (நறுந்தொகை#14).*

*வசனம் 11:13*
*"...வம்பளப்போர்..." –*
*இணை, 20:19, 25:9. கைம்பெண்கள் குறித்துச் சொல்லப்பட்டதாயினும், பார்க்க, 1 திமொத்தேயு 5:13. மேலும் பார்க்க, லேவியர் 19:16; எரேமியா 6:28, 9:4; எசேக்கியேல் 22:9.*

*வசனம் 11:14*
*பார்க்க, 15:22, 20:18, 24:6.*
*ஆலோசனை சொல்வோர் பலர் இருந்தாலும், முதியோர் ஆலோசனையைப் புறக்கணித்த ரெகபெயாம், 1 அரசர்கள் 12:6-7&13-14.*

*ஆண்டவரின் ஒழுங்குமுறைகளே சிறந்த அறிவுரையாளர், திருப்பாடல் 119:24. மேலும் பார்க்க, எசாயா 1:26. தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல், வன்மையுள் எல்லாம் தலை (குறள்#444). தெரிந்த இனத்தோடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றும் இல் (குறள்#462).*

*வசனம் 11:15*
*பிணையாக நிற்றல், பார்க்க 6:1 மற்றும் குறிப்பு.*

*வசனம் 11:16*
*கனிவுள்ள பெண்ணுக்குப் புகழ்; முயற்சியுள்ள ஆணுக்குச் செல்வம் {ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு (கொன்றைவேந்தன்#86)}. திரண்ட செல்வத்தைவிட நற்பெயரைத் தெரிந்து கொள்வதே மேல் (22:1அ).*

*ஒப்பீடாய்ச் சொல்வதானால், ஆற்றல்மிக்க ஆண்களைவிட, கனிவுள்ள பெண்களே சிறப்பானதைத் தெரிந்து கொண்டோர்! ஏனெனில் ஈரம் வெய்யோர்க்கு நசைகொடை எளிது (முதுமொழிக்காஞ்சி#73); ஈதலே ஈட்டலின் இலக்கு.*

*வசனம் 11:17-21*
*அடுத்தடுத்து இடம் பெறும் "நேரிய மனத்தினர் - எதிர்- தீய மனத்தினர்" குறித்த வசனங்கள். தீயோர் தங்களுக்கே தீங்கு விளைவிக்கின்றனர், வ.17; பயனற்ற ஊதியம் பெறுகின்றனர், வ.18; ஆண்டவரின் இகழ்ச்சிக்கு உரியோர், வ.20; அவரின் தண்டனைக்குரியோர், வ.21; சாவுக்கு உரியோர், வ.19.*

*வசனம் 11:17*
*இரக்கமுள்ளோரின் செயல்கள் அதனைப் பெறுபவரை விட அவருக்கே நன்மை செய்கின்றன, மத்தேயு 5:7; அவர் கடவுளுக்கு ஏற்புடையோராக விளங்குவார்; விரிவாக வாசிக்க, எசாயா 58:5-11; மத்தேயு 25:34-40; கலாத்தியர் 6:7-10.*

*வசனம் 11:18*
*பொல்லாரின் ஊதியம் –*
*செயலின் பலன். தங்கள் செயல்களால் பொல்லார் பெற்ற பலன் அவர்களுக்குப் பயனற்றது; அவர்களுக்கு நலமான எதையும் தராது (வ.4).*

Δ

*நீதியை விதைப்போர்–*
*நீதியை விதைப்போர், அன்பின் கனியை அறுவடை செய்வர், ஒசேயா 10:12.*

*வசனம் 11:19*
*நீண்ட வாழ்வு–*
*பார்க்க, 10:2 மற்றும் குறிப்பு.*

*வசனம் 11:21*
*பார்க்க, 16:5 & திருப்பாடல் 84:11.*

Δ

*இது உறுதி–*
*OV, கையோடு கை கோர்த்தாலும்; KJVல் hand in hand; கை மீது கை வைத்து உறுதி அளித்தல் / தலைமுறைக்குத் தலைமுறை கை மாறுதல் என்று பொருள் கொள்ளலாம். நியாயமற்றுக் கை கோர்த்துச் சேர்ந்து செயல்படுவோர் தண்டனைக்குத் தப்பார்.*

*வசனம் 11:22*
*கிண்டலான முதல் ஒப்பீடு!*
*மூக்கில் துளைகளையிட்டு பெண்கள் அலங்காரமாக அணிகலன்கள் அணிவர். ஆனால் பன்றிக்கு மூக்குக் குத்துவார்களா? சுவாரசியமான கேள்வி. மூக்கின் மேல் பகுதியைக் கொண்டு, மண்ணை நோண்டி, கிழங்கு போன்ற ஏதேனும் உண்ணக் கிடைக்குமா என்று பார்ப்பது பன்றிகளின் இயல்பு. அதனால் பயிர்கள் பாழ்படும். அதைத் தவிர்க்கப் பன்றிகளின் மூக்கின் மேல்பகுதியில் துளைகளிட்டு, வலிதரும் வகையில் இரும்பு வளையங்களைப் பொருத்துவர். இதனை வைர மூக்குத்தியாக்கி, மதியற்ற பெண்ணின் அழகுக்கு ஓர் உவமையாக சாலமோன் குறிப்பிடுகிறார்.*

*வசனம் 11:23*
*கடவுளின் சினத்தை வருவிக்கும் பொல்லாரின் நம்பிக்கை, பார்க்க வ.4 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, உரோமையர் 2:8.*

*வசனம் 11:24-26*
*ஈகையை ஊக்குவிக்கும் சாலமோன். விரிவாக, திருப்பாடல் 112:1-9; 2 கொரிந்தியர் 9:6-15.*

*வசனம் 11:26*
*படைக்கப்பட்ட அனைவரின் மகிழ்ச்சிக்கே உலகில் அனைத்தும் படைக்கப்பட்டன. ஒவ்வொரு பொருளும், மனிதர்களின் நுகர்வுக்கும், மகிழ்ச்சிக்கும், பலனுக்கும் - இவ்வாறு அழிவுறவும் மீண்டும் உற்பத்தியாகவுமே படைக்கப்பட்டுள்ளன. மாறாக, பொல்லார் தங்களுக்கே ஆதாயம் என்று விளைபொருள்களைக் குவித்துப் பதுக்கி வைக்கின்றனர். செயற்கையாகத் தட்டுப்பாட்டை உருவாக்கி, தேவை இன்னும் உயரும்போது, அநியாய விலைக்கு விற்றுப் பொருள் குவிப்போர் மக்களின் சாபத்திற்கு ஆளாவர்; இறையாசியையும் இழப்பர். பார்க்க, உணவும் நீரும் விலைக்குத் தரமறுத்த எஸ்போனின் மன்னனாகிய சீகோனுக்கு நேர்ந்தது, இணைச் சட்டம் 2:26-33.*

*வசனம் 11:27*
*சான்றாக மொர்தக்காய், எஸ்தர் 7:10.*

*வசனம் 11:28*
*செல்வம் நிலையற்றது; செல்வத்தோடு வாழ்வோரும் வறியவர் ஆகலாம்; வறியவரும் செல்வராகலாம். நிலையற்ற ஒன்றில் நம்பிக்கை வைத்தல் மெய்யறிவுடையோரின் செயலல்ல. பார்க்க, 23:5, 27:24; திருப்பாடல் 62:10; 1 திமொத்தேயு 6:9-10; யாக்கோபு 1:11. விரிவாக, 10:22 குறிப்பு.*

*வசனம் 11:29*
*குடும்பச் சொத்தைக் காவாதார் –*
*அன்றைய உலகில், நிலமும் நிலம் சார்ந்த கால்நடைகளுமே ஒருவரின் சொத்து. இஸ்ரயேலின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டவரின் ஆசியே வாக்களிக்கப்பட்ட நிலத்தின் ஒரு பங்கு. எனவே,*

*குடும்பச் சொத்தை இழப்பது இறையாசியை இழப்பதாகும். அவர்களுக்கு எஞ்சியிருக்கும் இறையாசி, சுவாசிக்கும் காற்று மட்டுமே! மூச்சிருக்கும் நாள்களும் சுமையான நாட்களே! (சபை உரையாளர் 5:14&16)*

*வசனம் 11:30*
*வாழ்வளிக்கும் மரம் –*
*பார்க்க 3:18 மற்றும் குறிப்பு.*
Δ

*"ஆனால், வன்செயல் உயிராற்றலை இழக்கச் செய்யும்" –*
*மொழிபெயர்ப்புச் சிக்கலுள்ள ஒரு வாக்கியம்.*
*OV, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்; KJV, "and he that winneth souls (is) wise". "கடவுளே அவர்களை எடுத்துக் கொள்வார்" அல்லது "உள்ளங்களை வெல்பவரே ஞானி" என்று பொருள்கொள்ளும் மொழிபெயர்ப்புகளும் உள்ளன. பொது மொழிபெயர்ப்பு, NRSV, HCSB போன்றவை செப்டுவஜிண்டு மொழிபெயர்ப்பை அடியொற்றி உள்ளன.*

*எதுவாயினும், இன்றைக்குப் பொதுவாகச் சொல்லப்படும் ஆத்தும ஆதாயத்தோடு இது தொடர்பற்றது.*

*வசனம் 11:31*
*நேர்மைக்கான கைம்மாறு வாழும் நாட்களிலேயே கிடைக்கும் என்றால், பொல்லாருக்குரிய தண்டனையும் அவர்கள் வாழும் நாட்களிலேயே உறுதியாகக் கிடைக்கும். இவ்வுலக வாழ்க்கையில் ஒருவன் தண்டிக்கப்பட்டு, அவன் திருந்தினால், அவன் தண்டனைத் தீர்ப்புக்குத் தப்புவான் (1 கொரிந்தியர் 11:32 & 2 கொரிந்தியர் 5:10).*

*இந்த அதிகாரத்தை நாம் வாசிக்கும் போது, ஒருவரின் ஒரு செயலால் எவ்வாறு மனிதர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்வதாக இருக்கிறது.* **குறிப்பாக, ஏழைகள் பாதிக்கப்படுவதை இந்த அதிகாரம் விளக்குகிறது.** *கள்ளத் துலாக்கோல், பதுக்கல், செல்வம் குவிக்கும் போக்கு, வஞ்சித்தல், தீங்கிழைத்தல் போன்ற பழக்கங்களால் நேரக்கூடிய பாதிப்புகளை உணர்த்துவதாக இந்த அதிகாரம் அமைகிறது. ஒருவன் தன்னை நேசிப்பது போலப் பிறனையும் நேசிக்க நாம் அறிவுறுத்தப்படுகிறோம் (மத்தேயு 22:39). பிறன் யார் என்பதை கிறிஸ்து இயேசு நமக்குத் தெளிவாக விளக்குகிறார் (லூக்கா 10:29-37). கட்டளைகளைப் பிறழாது கடைப்பிடித்தலே மேன்மையானது.*

✝

# 20 நீதிமொழிகள் 12

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 அறிவை விரும்புவோர் கண்டித்துத்
திருத்தப்படுவதை விரும்புவர்;
கண்டிக்கப்படுவதை வெறுப்போர் அறிவற்ற
விலங்குகள் ஆவர்.
2 நல்லார் ஆண்டவரது கருணை பெறுவர்;
தீய சூழ்ச்சி செய்வோரை அவர் கண்டிப்பார்.
3 பொல்லாங்கு செய்து எவரும் நிலைத்ததில்லை;
நேர்மையாளரின் வேரை அசைக்கமுடியாது.
4 பண்புள்ள மனைவி தன் கணவனுக்கு
மணிமுடியாவாள்;
இழிவு வருவிப்பவள் அவனுக்கு எலும்புருக்கி
போலிருப்பாள்.
5 நேர்மையானவர்களின் கருத்துகள் நியாயமானவை;
பொல்லாரின் திட்டங்கள் வஞ்சகமானவை.
6 பொல்லாரின் சொற்கள் சாவுக்கான
கண்ணிகளாகும்;
நேர்மையாளரின் பேச்சு உயிரைக் காப்பாற்றும்.
7 பொல்லார் வீழ்த்தப்பட்டு வழித் தோன்றலின்றி
அழிவர்;
நல்லாரின் குடும்பமோ நிலைத்திருக்கும்.
8 மனிதர் தம் விவேகத்திற்கேற்ற புகழைப் பெறுவர்;
சீர்கெட்ட இதயமுடையவரோ இகழ்ச்சியடைவர்.
9 வீட்டில் உணவில்லாதிருந்தும் வெளியில்
பகட்டாயத் திரிவோரைவிட,
தம் கையால் உழைத்து எளிய வாழ்க்கை
நடத்துவோரே மேல்.
10 நல்லார் தம் கால்நடைகளையும் பரிவுடன்
பாதுகாப்பர்.
பொல்லாரின் உள்ளமோ கொடுமை வாய்ந்தது.
11 உழுது பயிரிடுவோர் மிகுந்த உணவு பெறுவர்;
வீணானவற்றைத் தேடியலைவோர் அறிவு அற்றவர்.
12 தீயோரின் கோட்டை களிமண்ணெனத் தூளாகும்.*

*நேர்மையாளரின் வேரோ உறுதியாக ஊன்றி நிற்கும்.*
*13 தீயோர் தம் பொய்யுரையில் தாமே*
*சிக்கிக்கொள்வர்;*
*நேர்மையாளர் நெருக்கடியான நிலையிலிருந்தும்*
*தப்புவர்.*
*14 ஒருவர் தம் பேச்சினால் நற்பயன் அடைகிறார்;*
*வேறொருவர் தம் கைகளினால் செய்த*
*வேலைக்குரிய பயனைப் பெறுகிறார்.*
*15 மூடர் செய்வது அவர்களுக்குச் சரியெனத்*
*தோன்றும்;*
*ஞானிகள் பிறருடைய அறிவுரைக்குச் செவி*
*கொடுப்பர்.*
*16 மூடர் தம் எரிச்சலை உடனடியாக வெளியிடுவர்;*
*விவேகிகளோ பிறரது இகழ்ச்சியைப்*
*பொருட்படுத்தார்.*
*17 உண்மை பேசுவோர் நீதியை நிலைநாட்டுவோர்;*
*பொய்யுரைப்போரோ வஞ்சகம் நிறைந்தோர்.*
*18 சிந்தனையற்ற பேச்சு வாள் போலப்*
*புண்படுத்தும்;*
*ஞானிகளின் சொற்களோ புண்களை ஆற்றும்.*
*19 ஒருவர் உரைக்கும் உண்மை என்றும் நிலைக்கும்;*
*பொய்யுரையின் வாழ்வோ இமைப்பொழுதே.*
*20 சதித்திட்டம் வகுப்போர் தம்மையே*
*ஏமாற்றிக்கொள்வர்;*
*பொது நலத்தை நாடுவோர் மகிழ்ச்சியோடிருப்பர்.*
*21 நல்லாருக்கு ஒரு கேடும் வராது;*
*பொல்லாரின் வாழ்க்கையோ துன்பம் நிறைந்ததாய்*
*இருக்கும்.*
*22 பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர்*
*அருவருக்கின்றார்;*
*உண்மையாய் நடக்கின்றவர்களை அவர்*
*அரவணைக்கிறார்.*
*23 விவேகமுள்ளோர் தம் அறிவை மறைத்துக்*
*கொள்வர்;*
*மதிகேடரோ தம் மூட எண்ணத்தை*
*விளம்பரப்படுத்துவர்.*
*24 ஊக்கமுடையோரின் கை ஆட்சி செய்யும்;*

*சோம்பேறிகளோ அடிமை வேலை செய்வர்.*
*25 மனக்கவலை மனிதரின் இதயத்தை வாட்டும்;*
*இன்சொல் அவர்களை மகிழ்விக்கும்.*
*26 சான்றோரின் அறிவுரை நண்பர்களுக்கு நன்மை பயக்கும்;*
*பொல்லாரின் பாதை அவர்களைத் தவறிழைக்கச் செய்யும்.*
*27 சோம்பேறிகள் தாம் வேட்டையாடியதையும் சமைத்துண்ணார்;*
*விடாமுயற்சியுடையவரோ அரும் பொருளையும் ஈட்டுவர்.*
*28 நேர்மையாளரின் வழி வாழ்வு தரும்;*
*முரணானவரின் வழி சாவில் தள்ளும்.*

*நீதிமொழிகள் 12:1-28*

## சிந்தனைக்கு

*வசனம் 12:1*
*"...கண்டித்துத் திருத்தப்படுவதை..." –*
*மேலும், 10:17. பார்க்க, 10:13 மற்றும் குறிப்பு. அதுபோலவே, 8:36 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, திருப்பாடல் 119:67&71. இணை, வ.15, 13:1,13&18, 15:5,10,12&31-32.*

*முன்னெப்போதையும் விட, கிண்டலும் நையாண்டியும் மிக்க இன்றைய இளைஞர்களுக்கு, மிகவும் தேவையான பண்பு - அறிவுரைக்கும், கண்டித்து உணர்த்தப்படுதலுக்கும் செவி கொடுத்தல். அதேவேளையில், பெற்றோரும் பெரியோரும் இளையோரைக் கனிவோடு திருத்த வேண்டும் (திருப்பாடல் 141:5அ). இறைவார்த்தையின் வழியில் திருத்தப்படுதல், நேரிய வாழ்வுக்கும், எதிர்கால மகிழ்ச்சிக்கும் வழிவகுக்கும் (எபிரேயர் 12:10-11).*

Δ

*"கண்டிக்கப்படுவதை வெறுப்போர்" –*

*இவர்கள் மனிதருள் மதிகேடர் மட்டுமல்லாமல் (30:2), கொடிய விலங்குகள் போன்றோர் (திருப்பாடல் 73:22); கடும் தண்டனைக்கு உள்ளாவர் (15:10).*

*வசனம் 12:2*
*"நல்லார் ஆண்டவரது கருணை பெறுவர்" –*
*ஞானத்தை அடைந்தோர் பெறும் பேறு, 8:35.*

*வசனம் 12:3*
*"நேர்மையாளரின் வேரை அசைக்க முடியாது" –*
*மேலும் வ.12. பார்க்க, 10:25; திருப்பாடல் 1:3; எசாயா 27:6; எரேமியா 17:8; எபேசியர் 3:17; கொலோசையர் 2:7. கடவுள் அருளிய ஞானத்தில் வேரூன்றி, அதன் வழியே பலன் தரும் நேர்மையாளர் சலனமின்றி வாழ்வர்.*

*வாக்களிக்கப்பட்ட நாட்டில் வேரூன்றி வாழும் இஸ்ரயேலர், கடவுளின் நேரிய வழியை விட்டு விலகினால், அந்த மண்ணிலிருந்து சிதறடிக்கப்படுவர் (இணைச் சட்டம் 28:25) என்பதையும் அவர்கள் உணர்ந்து எச்சரிப்போடு வாழ வேண்டும் என்பதை சாலமோன் குறிப்பிடுகிறார்.*

*வசனம் 12:4*
*"பண்புள்ள மனைவி..." –*
*பார்க்க, 31:10&29; மனைவியாக விரும்பியவருக்கு போவாசு வழங்கிய நற்சான்று, ரூத் 3:9-11.*

*எபிரேய மொழியில், khah-yil / கஹ்இல்; நற்பண்பு மட்டுமல்லாமல், ஆற்றல் மிக்கவர் / துணிவு மிக்கவர் என்றும் பொருள்படும். போர்ப்படையோடு அதிகமாக இணைத்துப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்.*

*பண்புள்ள பெண் என்ற பொருளில், இங்கும், 31:10 மற்றும் ரூத் 3:11 வசனங்களில் மட்டுமே*

*பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பார்க்க, 31:10 குறிப்பு.*

*வசனம் 12:5-7*

*நேர்மையாளர் -எதிர்- பொல்லார் என்று மூன்று வசனங்கள். நோக்கம் (வ.5), பேச்சு (வ.6), விளைவு (வ.7) ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வசனங்கள் அமைத்துள்ளன.*

*வசனம் 12:6*

*"பொல்லாரின் சொற்கள் சாவுக்கான கண்ணிகள்" – மற்றவர்களுக்கு மட்டுமன்றி, அவர்களுக்கே அவர்களின் சொல்லும் செயலும் கண்ணிகளாகின்றன, 1:11&18.*

*வசனம் 12:7*

*பொல்லார் உறுதியாக வீழ்த்தப்படுவர், 11:21, 16:5; திருப்பாடல் 37:35-37, 84:11. மேலும் பார்க்க, மத்தேயு 7:24-27.*

*வசனம் 12:8*

*"சீர்கெட்ட இதயமுடையவரோ இகழ்ச்சி அடைவர்" –*

*இழிவு கயமையோடு சேர்ந்தே வருவது, 18:3. எனவே இழிவையும் இகழ்ச்சியையும் அகற்ற விரும்புவோர், நேர்மையான வாழ்க்கையை நாடி, அதன் வழியே உறுதியோடு நடக்க வேண்டும்.*

*வசனம் 12:9*

*இணை, 13:7. மேலும் பார்க்க, 15:16-17.*

*ஒரு புழு தன்னைச் சுற்றி ஒரு கூட்டைப் பின்னி, அதை விட்டு வெளியே வரும்போது, அழகியதொரு வண்ணத்துப்பூச்சியாகச் சிறகடித்துப் பறக்கிறது. ஆனால் சமுதாயத்தில் தங்களுக்கு ஒப்பனை செய்து கொண்டு, போலியான வாழ்க்கை வாழும் மனிதர்கள், அத்தகைய வாழ்க்கைக்குத் தரும் விலை அதிகம்; அடைவதோ அவமானம் மட்டுமே.*

*வசனம் 12:10*
*“நல்லார் தம் கால்நடைகளையும் பரிவுடன் பாதுகாப்பர்” –*
*மீண்டும், 27:23.*
*காடுகளில் வாழும் விலங்குகள் அவைகளின் தேவைகளை அவைகளே நிறைவேற்றிக்கொள்ளும்; ஆனால் மனிதர்கள் வளர்க்கும் கால்நடைகளால் அவ்வாறு செய்துகொள்ள இயலாது. அவைகளின் தேவைகளை அறிந்து நிறைவேற்றுதல் மனிதர்களின் கடமை. போர் அடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே (இணைச் சட்டம் 25:4) என்பது மோசேயின் வழியே தரப்பட்ட கட்டளை.*

*வசனம் 12:11*
*இணை, 28:19.*
*உழுது பயிரிடுதல் முதன்மையான தொழில், தொடக்க நூல் 3:19, 4:3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் (குறள்#1033).*

*வசனம் 12:12*
*பார்க்க, வ.3 மற்றும் குறிப்பு.*

*வசனம் 12:13*
*பார்க்க, 18:7; 2 பேதுரு 2:9.*

*இந்த அதிகாரத்தில், 6,13,14,17,18,19&22 ஆகிய வசனங்கள் பேச்சு குறித்த ஆலோசனைகளைத் தருகின்றன.*

*பொய்யுரைத்தல் ஓர் இறைக் கட்டளை மீறல் (விடுதலைப் பயணம் 20:16).* ***உண்மையை உரைத்தவரை அந்த வாய்மையே காக்கும்; ஆனால் பொய்யுரைத்தவரோ அந்தப் பொய்யைக் காக்கப் போராட வேண்டும்!*** *உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன் (குறள்#294).*

*வசனம் 12:14*
*பார்க்க, 13:2, 15:23, 18:20; எசாயா 3:10-11.*

Δ

*"...பேச்சினால் நற்பயன்..." –*
*நீர்மை உடையார் பயனில சொலின், சீர்மை சிறப்பொடு நீங்கும் (குறள்#195). அல்லவை தேய அறம் பெருகும், நல்லவை நாடி இனிய சொலின் (குறள்#96). நயன் ஈன்று நன்றி பயக்கும் பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல் (குறள்#97). சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும் (குறள்#98).*

Δ

*"...செய்த வேலைக்கு உரிய பயன்..." –*
*பார்க்க, 1:31, 24:12; யோபு 34:11; ஒசேயா 4:9.*

*வசனம் 12:15*
*பார்க்க, 3:7 மற்றும் குறிப்பு.*
*இந்த வசனத்திற்கு பைபிளில் சான்றாக நிற்போர், பரிசேயர் (லூக்கா 18:11). இவர்கள் திருந்துவதற்குச் சற்றும் வாய்ப்பில்லாதோர்.*

*வசனம் 12:16*
*பார்க்க, 10:12 & 11:13 மற்றும் குறிப்புகள்; மேலும் பார்க்க, 17:9 & 29:11.*
*தாவீது அரசரின் பண்பட்ட சொற்களையும், அவரை நோக்கி சிமயி சொன்ன பழிச்சொற்களையும், அதற்குப் பின்னர் நடந்தவற்றையும் நாம் இங்கு நினைவு கூறலாம் (2 சாமுவேல் 16:5-12 & 19:18-23).*

*வசனம் 12:17*
*மேலும் பார்க்க, 6:19, 14:5&25, 19:5&9; எபேசியர் 4:29-30.*

*வசனம் 12:18*
*புண்படுத்தும் சொற்கள் –*
*எதிர், 15:4அ; பார்க்க, திருப்பாடல் 57:4.*

*தீயினால் சுட்ட புண் உள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு (குறள்#129).*

*அகத்தின் அழகு முகத்தில் தெரியும். அதுபோலவே, ஒருவரது பண்புகள் அவருடைய சொற்களில் வெளிப்படும். கனிவான சொற்கள் புண்பட்ட உள்ளத்தை ஆற்றுப்படுத்தி, நல்வாழ்வு வாழத் துணை செய்யும்.*

*வசனம் 12:19*
*பொய்யுரையும் நிலைப்பதில்லை; பொய் உரைப்போரும் அழிந்து போவர், 19:9. மேலும் பார்க்க, திருப்பாடல் 52:4-5. சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல, பொய்யா விளக்கே விளக்கு (குறள்#299).*

*வசனம் 12:20*
*"சதித்திட்டம் வகுப்போர்..." –*
*பார்க்க, 3:29.*
Δ

*"...பொது நலத்தை நாடுவோர்..." –*
*ஒப்பிடுக, மத்தேயு 5:9 & யாக்கோபு 3:18.*

*shaw-lome / சாலோம் என்னும் எபிரேயச் சொல்லுக்கு நலம், மகிழ்ச்சி, நல்லுறவு, சமூக நலம், செழிப்பு, அமைதி, உடல்நலம் என்றெல்லாம் பொருள் படும். நல்லுறவைப் பலப்படுத்தும் அத்தகையோரே, முரண்கள் மிகுந்த இன்றைய சமுதாயத்தில் நல்லிணக்கமும் அமைதியும் நிலவ அடிப்படையாக உள்ளனர். அவர்கள் பேறுபெற்றோர் மட்டுமல்லாமல், மனிதகுலம் வாழ வழிகாட்டுவோர்; அவர்களே கடவுளின் மக்கள்.*

*வசனம் 12:21*
*பார்க்க, திருப்பாடல் 91:8-10; 1 பேதுரு 3:13; 2 பேதுரு 2:9.*

*வசனம் 12:22*
*பார்க்க, வ.13, 3:32, 6:17 மற்றும் குறிப்புகள்; மேலும் பார்க்க, 11:20; திருவெளிப்பாடு 22:15.*

*வசனம் 12:23*
*பார்க்க, வ.16, 1:4, 13:16, 15:2, 26:4&5.*
*நிறைகுடம் தளும்பாது; குறைகுடம் கூத்தாடும்.*

**எங்கு** பேச வேண்டும், **எப்போது** பேச வேண்டும், **என்ன** பேச வேண்டும், **எவ்வாறு** பேச வேண்டும், **எவ்வளவு** பேச வேண்டும் என்ற தெளிவுடையோர், *விவேகமுள்ளோர் (சபை உரையாளர் 3:7).*

*வசனம் 12:24*
*இணை, 10:4 மற்றும் குறிப்பு பார்க்க. மேலும் பார்க்க, 13:4.*

Δ

*"ஊக்கமுடையோரின் கை..." –*
*OV, ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை; khaw-roots / காரூட்ஸ்; கூர்மையான, ஆழமான, தீர்மானமான, முடிவான, விடாமுயற்சியுடைய என்று பொருள்படும். எடுத்துக் கொண்ட செயலில் தீவிரமாக முனைந்து செயல்படுபவர் ஆளுகை / மேலாண்மை செய்வார். மடி இலா மன்னவன் அடி அளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு எய்தும் (குறள்#610). அசைவிலா ஊக்கம் உடையான் உழை, ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் (குறள்#594).*

Δ

*"சோம்பேறிகளோ அடிமை வேலை செய்வர்" –*
*முயற்சி திருவினை ஆக்கும்; முயற்சி இன்மை, இன்மை புகுத்தி விடும் (குறள்#616).*

*வசனம் 12:25*
*இணை, 15:13 & 17:22. பார்க்க, எசாயா 50:4; பிலிப்பியர் 4:6-7.*

*சைப்ரஸ் தீவைச் சேர்ந்த யோசேப்பு குறித்து எழுதப்பட்டிருப்பதைத் திருத்தூதர் பணிகள் 4:36 & 9:27ல் வாசிக்க. மேலும் வாசிக்க, திருத்தூதர் பணிகள் 11:19-24.*

Δ

*"மனக்கவலை..." –*
*பார்க்க, திருப்பாடல் 94:19; 1 பேதுரு 5:6-7. கவலைப்படுவது குறித்த கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகள், மத்தேயு 6:24-34.*

*கவலை ஆழமாகப் பாயக் கூடியதொரு சோர்வூட்டும் அம்பு. மன உளைச்சலுக்கு உள்ளானவர் அந்தச் சூழலிலிருந்து எளிதாக வெளிவர முடியாது. மற்றவர்களைச் சந்திக்கத் துணிவற்றுத் தன்னைத் தானே அறைக்குள் முடக்கிக் கொள்பவரும் உண்டு. இறைப்பற்றே அல்லது இறைவார்த்தையின் வழியில் ஆற்றுப்படுத்தும் சொல்வன்மை உடையவர்களே ஒருவனின் மனக்கவலையை மாற்றவல்லோர். தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால், மனக்கவலை மாற்றல் அரிது (குறள்#7).*

*வசனம் 12:26*
*இணை, 18:24, 22:24. மேலும் பார்க்க, 1 கொரிந்தியர் 15:33. புளித்தமாவைப் போன்றது நட்பு (1 கொரிந்தியர் 5:6).*
*ஒவ்வொருவரின் வாழ்விலும் நண்பர்களைத் தெரிவு செய்தல் சிறப்பான பங்களிக்கிறது. "உன் நண்பன் யார் என்று சொல், நீ எப்படிப்பட்டவன் என்று சொல்கிறேன்" என்பர். அந்த அளவுக்கு நட்பு ஒவ்வொருவரின் வாழ்விலும் ஆதிக்கம் செலுத்துகிறது. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை; அதற்கு உப்பாதல் சான்றோர் கடன் (குறள்#802).*

*வசனம் 12:27*
*பார்க்க, வ.24.*

*வேலையைத் தொடங்காதவன் மட்டுமல்லாமல் தொட்ட வேலையை முடிக்காதவனும் சோம்பேறியே!*

*வசனம் 12:28*
*பார்க்க, 10:2 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 3:2, 14:32, 19:23.*

*வாழ்வு தரும் வழி மற்றும் சாவுக்குச் செல்லும் வழி என இரண்டு வழிகளும் நம் முன்னே உள்ளன (இணைச் சட்டம் 30:15). எந்த வழியைத் தேர்ந்தெடுக்கிறோம் எனும் பொறுப்பு நம்மிடம் உள்ளது. தெரிவு சிறிய பொறுப்பு தான்; ஆனால் விளைவு மகத்தானது என்பதால் சிறந்ததைத் தெரிந்து கொள்ளவும், பிசகாது பயணிக்கவும் எச்சரிக்கையாக இருப்போம்.*

✝

# 20 நீதிமொழிகள் 13

## (சாலமோனின் நீதிமொழிகள் - தொடர்ச்சி)

*1 ஞானமுள்ள மகன் தந்தையின் நற்பயிற்சியை ஏற்றுக்கொள்வான்;*
*இருமாப்புள்ளவனோ கண்டிக்கப்படுதலைப் பொருட்படுத்த மாட்டான்.*
*2 நல்லோர் தம் சொற்களின் பலனான நல்லுணவை உண்கிறார்;*
*வஞ்சகச் செயல்களே வஞ்சகர் உண்ணும் உணவு.*
*3 நாவைக் காப்பவர் தம் உயிரையே காத்துக் கொள்கிறார்;*
*நாவைக் காவாதவன் கெட்டழிவான்.*
*4 சோம்பேறிகள் உண்ண விரும்பகிறார்கள், உணவோ இல்லை;*
*ஊக்கமுள்ளவரோ உண்டு கொழுக்கிறார்.*
*5 நல்லார் பொய்யுரையை வெறுப்பர்;*
*பொல்லாரோ வெட்கக்கேடாகவும் இழிவாகவும் நடந்துகொள்வர்.*
*6 நேர்மையாக நடப்போரை நீதி பாதுகாக்கும்;*
*பொல்லாரை அவர்களின் பாவம் கீழே வீழ்த்தும்.*
*7 ஒன்றுமில்லாதிருந்தும் செல்வர் போல நடிப்போருமுண்டு;*
*மிகுந்த செல்வமிருந்தும் ஏழைகள் போல நடிப்போருமுண்டு.*
*8 அச்சுறுத்தப்படும்போது செல்வர் தம் பொருளைத் தந்து*
*தம் உயிரை மீட்டுக்கொள்வர்.*
*ஏழையோ அச்சுறுத்துதலுக்கு அஞ்சான்.*
*9 சான்றோரின் ஒளி சுடர்வீசிப் பெருகும்;*
*பொல்லாரின் விளக்கோ அணைக்கப்படும்.*
*10 மூடன் தன் இறுமாப்பினாலே சண்டை மூட்டுவான்;*
*பிறருடைய அறிவுரைகளை ஏற்போரிடம் ஞானம் காணப்படும்.*

*11 விரைவில் வரும் செல்வம் விரைவில் கரையும்;*
*சிறிது சிறிதாய்ச் சேர்ப்பவனின் செல்வமே பெருகும்.*
*12 நெடுநாள் எதிர்நோக்கியிருப்பது மனச்சோர்வை உண்டாக்கும்;*
*விரும்பியது கிடைப்பது சாகாவரத்தைப் பெறுவது போலாகும்.*
*13 அறிவுரையைப் புறக்கணிக்கிறவர் அழிவுறுவார்;*
*போதிக்கிறவரின் சொல்லை மதிக்கிறவர் பயனடைவார்.*
*14 ஞானமுள்ளவரது அறிவுரை வாழ்வளிக்கும் ஊற்றாகும்;*
*அது ஒருவரைச் சாவை விளைவிக்கும் கண்ணிகளிலிருந்து தப்புவிக்கும்.*
*15 நல்லறிவு மக்களின் நல்லெண்ணத்தை வருவிக்கும்;*
*நம்பிக்கைத் துரோகமோ கேடு அடையச் செய்யும்.*
*16 கூர்மதிவாய்ந்த எவரும் நல்லறிவோடு நடந்துகொள்வார்;*
*மூடர் தன் மடமையை விளம்பரப்படுத்துவார்.*
*17 தீய தூதர் தொல்லையில் ஆழ்த்துவார்;*
*நல்ல தூதரோ அமைதி நிலவச் செய்வார்.*
*18 நல்லுரையைப் புறக்கணிப்பவர் வறுமையும் இகழ்ச்சியும் அடைவார்;*
*கண்டிப்புரையை ஏற்பவரோ புகழடைவார்.*
*19 நினைத்தது கிடைப்பின் மனத்திற்கு இன்பம்;*
*மூடர் தம் தீமையை வெறுக்காதிருப்பதும் இதனாலேயே.*
*20 ஞானமுள்ளவர்களோடு உறவாடுகிறவர் ஞானமுள்ளவராவர்;*
*மூடரோடு நட்புக்கொள்கிறவர் துன்புறுவார்.*
*21 பாவிகளைத் தீங்கு பின்தொடரும்;*
*கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு நற்பேறு கிட்டும்.*
*22 நல்லவரது சொத்து அவருடைய மரபினரைச் சேரும்;*
*பாவி சேர்த்த செல்வமோ கடவுளுக்கு அஞ்சி நடப்போரை வந்தடையும்.*
*23 தரிசு நிலம் ஏழைக்கு ஓரளவு உணவு தரும்;*

*ஆனால் நியாயம் கிடைக்காத இடத்தில் அதுவும் பறிபோகும்.*
*24 பிரம்பைக் கையாளாதவர் தம் மகனை நேசிக்காதவர்;*
*மகனை நேசிப்பவரோ அவனைத் தண்டிக்கத் தயங்கமாட்டார்.*
*25 கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு வயிறார உணவு கிடைக்கும்;*
*பொல்லாரின் வயிறோ பசியால் வாடும்.*

*நீதிமொழிகள் 13:1-25*

## சிந்தனைக்கு

*வசனம் 13:1*
*பார்க்க 10:1 மற்றும் குறிப்பு.*
*தந்தையே பிள்ளைகளின் முதல் ஆசான். கற்பிக்க வேண்டிய முதல் அறிவுரையே, "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை!" கூடவே, "தாய் சொல்லைத் தட்டாதே" என்பதும்தான்! காணக் கூடாத ஒளியில் வாழும் கடவுளைக் காணச் செய்வோர், குழந்தை தன் கண் திறந்து பார்க்கும் பெற்றோரே! பள்ளிக்கு முந்தைய கல்விக் கூடம் இல்லமே! கண்காணித்து வளர்த்தல் என்பது இல்லத்தில் மட்டுமே இயலும்; இன்றைக்குப் பள்ளிகளின் நோக்கம் நேர்மையான மாந்தர்களை உருவாக்குவது அல்ல!*

*இந்த வசனத்திற்கு ஏற்ற சான்றாக, ஏலியின் மைந்தர்களைப் பார்க்கிறோம் (1 சாமுவேல் 2:22-25).*

*வசனம் 13:2*
*பார்க்க, 12:14 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 13:3*
*இணை, 21:23; யாக்கோபு 3:2-8. தாவீதின் உறுதிப்பாடு, திருப்பாடல் 39:1.*

சொல்லாத சொல்லுக்கு நீங்கள் முதலாளி; சொல்லிய சொல் உங்களுக்கு முதலாளி! மேலும் பார்க்க, 4:23 மற்றும் குறிப்புகள்.

வசனம் 13:4
சோம்பேறி, 6:6-11, 10:26, 12:24&27, 15:19, 19:24, 20:4, 21:25-26, 22:13, 24:30-34, 26:13-16, 28:19.
பார்க்க, 12:24 மற்றும் குறிப்புகள்.

வசனம் 13:5
பொய்யுரை, 6:16-19, 12:13,17,19&22, 17:7, 19:5&9, 21:6.
பார்க்க 12:13,17&19 குறிப்புகள்.

வசனம் 13:6
பார்க்க, 6:2-5 குறிப்புகள். மேலும் பார்க்க, 11:3,5-6&27.

வசனம் 13:7
ஒப்பிடுக, 11:24.
வாழும் வாழ்க்கையில் ஒருவர் நடிப்பது என்பது வஞ்சக நோக்கமுடையது. அது ஒரு மனக் கோட்டை. செல்வர் போல நடிப்பவர் இருப்பதையும் இழக்க நேரிடும். ஏழை போல நடிக்கும் செல்வரின் செல்வம் அவருக்கோ அவரைச் சார்ந்தோருக்கோ, சமுதாயத்திற்கோ எவ்விதப் பயனுமின்றி அழியும். ஒருவரிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறது என்பதை விட, அது எவ்வாறு பயன்படுகிறது என்பதே சிறப்பானது. மேலும் பார்க்க, 12:9 மற்றும் குறிப்பு.

வசனம் 13:8
பார்க்க, 10:15 மற்றும் குறிப்பு.
இருப்பவர் அதனைக் காக்கப் போராட வேண்டும். இல்லாதவருக்கோ எதற்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. அவருடைய போராட்டம் எல்லாம் தன்னுடைய நற்பண்புகளைக் காத்துக் கொள்ள மட்டுமே. "உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" (மத்தேயு 6:21).

*வசனம் 13:9*
*பார்க்க, 24:20; யோபு 18:5-6.*
Δ

*"... ஒளி ... விளக்கு..." –*
*நிலைவாழ்வின் உருவகமாக, பார்க்க, தானியேல் 12:2-3.*

*வசனம் 13:10*
*பார்க்க, 10:17.*

*வசனம் 13:11*
*பார்க்க 10:2 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 20:21, 21:6; திருப்பாடல் 62:10; எரேமியா 17:11.*
*வஞ்சனையால் அன்றி ஒருவர் விரைந்து செல்வம் சேர்க்க இயலாது; அப்படிச் சேரும் செல்வம் அவரிடம் நிலைத்து நிற்காது. உழைப்பின் பயனாகச் சிறிது சிறிதாகச் சேர்க்கும் செல்வமே பெருகி நிற்கும்.*

*செல்வம் குவித்தல் என்பதே சமுதாயத்தை வஞ்சிப்பதுதான். உலகப் பணக்காரர்கள் வரிசையில் 609ம் இடத்தில் உள்ள ஒருவர் எட்டே ஆண்டுகளில் மூன்றாம் இடத்திற்கு உயர முடியுமானால், அவரே ஒரு மாதத்திற்குள் 35ம் இடத்திற்கு இறங்கவும் முடியும். ஆனால் எது நிலையானது என்ற தெளிவு ஒவ்வொருவருக்கும் வேண்டும்.*

*இந்த வசனத்தில், வஞ்சனை என்று OVலும், விரைவில் என்று பொது மொழிபெயர்ப்பிலும் உள்ள எபிரேயச் சொல் heh-bel / ஹெபேல் - இது வெறுமை, வீண், மாயை, ஆவியாக மறைதல் என்று பொருள்படும். எனவே நம்மில் நிலைத்திருப்பதையே நாடுவோம். "கடவுள் செய்யும் ஒவ்வொன்றும் எப்போதும் நிலைத்திருக்கும்" (சபை உரையாளர் 3:14) என்று கூறும் சாலமோன், "ஒருவர் தம் வேலையைச் செய்வதில் இன்பம் காண்பதே அவருக்கு நல்லது" (சபை உரையாளர் 3:22) என்று*

*கண்டார். நினைவில் கொள்வோம்: "ஒவ்வொருவருக்கும் அவரவர் செயல்களுக்கு ஏற்பக் கடவுள் கைம்மாறு செய்வார்" (உரோமையர் 2:6).*

*வசனம் 13:12*
*இணை, வ.19.*
*ஒன்றை எதிர்நோக்கிக் காத்திருத்தல் மனச்சோர்வைத் தரும்; நம்பிக்கை குன்றச் செய்யும்; உள்ளம் கலங்க வைக்கும். மேலும் வாசிக்க, திருப்பாடல் 27:14, 43:5. எதிர்நோக்கி இருப்பதில் ஊக்கம் பெற வாசிக்க, புலம்பல் 3:22-26.*

Δ
*"சாகாவரம்" –*
*OV, ஜீவவிருட்சம்.*
*மேலும் பார்க்க, 3:18, 11:30, 15:4. ஜீவவிருட்சம் அதாவது வாழ்வின் மரம் குறித்த செய்தி, தொடக்க நூல் (2:9, 3:22&24) மற்றும் திருவெளிப்பாடு (2:7, 22:2&14) நூல்கள் தவிர, நீதிமொழிகள் நூலில் மட்டுமே காணப்படுகிறது.*

*வசனம் 13:13*
*வேறு சொற்களில், 12:1. மேலும் பார்க்க, எசாயா 5:24.*

*வசனம் 13:14*
*பார்க்க 10:11 மற்றும் குறிப்பு.*

*மேலும் ஒப்பிடுக, 14:27.*
*அங்கு ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் என்று முன்னிலைப்படுத்துவது, இங்கு ஞானமுள்ளவரது அறிவுரை என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால், ஞானமுள்ளவர் யார்? ஆயரா? அருட்தந்தையா? இன்றைய பன்னாட்டு நற்செய்தி ஊழியரா? இவர்களில் எவர் தன்னலம் இல்லாதவர்? தன் வாரிசுகளை, தன் அமைப்பின் சொத்துகளை வளர்க்காதவர்? அப்படியானால் ஞானமுள்ளவரை எப்படி அறிந்து கொள்வது? வார்த்தையை நம்புவோம். வார்த்தையை வெளிப்படுத்தும்*

*ஆவியாரை நம்புவோம் (யோவான் 14:17). வேறெந்த வாக்குத்தத்தத்தையும் விட ஆவியாரை அருளும் வாக்குத்தத்தம் நம்மில் நிறைவேற மன்றாடுவோம்.*

*“கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்” (உரோமையர் 8:14).*

*வசனம் 13:15*
*பார்க்க, 3:4 மற்றும் குறிப்பு. நல்லறிவோ ஆண்டவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் விளைவு, திருப்பாடல் 111:10.*

Δ

*"நல்லறிவு மக்களின் நல்லெண்ணத்தை வருவிக்கும்"*
*–*
*திருத்தொண்டர்களைத் திருத்தூதர்கள் தெரிவு செய்யும்போது விதித்த முதல் அளவுகோல், நற்சான்று (திருத்தூதர் பணிகள் 6:3).*

*அடக்கி வைப்பதல்ல அறிவு, அது வெளிப்படுவது; அது சொல்லில் மட்டுமல்லாமல் செயல்களிலும் வெளிப்பட வேண்டும், வ.16. அப்போது மட்டுமே மக்களின் நல்லெண்ணத்தை ஒருவர் பெற இயலும். ஆவியாரால் பயிற்றுவிக்கப்பட்டு, இறை வழியில் நடப்போரே மக்கள் நடுவே நன்மதிப்பைப் பெறுவர்.*

*வசனம் 13:16ஆ*
*இணை, 12:23ஆ & 14:33ஆ.*

*வசனம் 13:17*
*இணைத்து வாசிக்க, 25:13.*
*தொலைத்தொடர்புக் கருவிகள் இல்லாத தொன்மையான காலத்தில், தூது அனுப்புதல் மட்டுமே ஒரே வழி. எழுதப்பட்ட மடலைத் தூது செல்பவர் கொண்டு கொடுத்தாலும், அதன் உண்மை நோக்கத்தை வெளிப்படுத்துபவராக அவர் இருக்க வேண்டும். இல்லையெனில், மடல் தவறாகப் புரிந்து கொள்ளப்பட வாய்ப்புண்டு (பார்க்க, 2 அரசர்கள் 5:5-*

*7). எனவே இருவருக்கும் இடையே, தூதுவர் நல்லெண்ணத்தை வளர்த்து, அமைதி நிலவச் செய்யும் விவேகத்துடன் இருக்க வேண்டும். அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை - தூதுரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று. தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி பயப்பதாம் தூது (குறள்#685).*

*வசனம் 13:18*
*பார்க்க, 12:1 மற்றும் குறிப்பு.*

*வசனம் 13:19*
*ஒப்பிடுக, வ.12.*
*தீயோன் விரும்புவது இன்றைய சமுதாயத்தில் எளிதாக நிறைவேறுகிறது; அதுவே தீமையில் அவனுக்கு நாட்டத்தை மிகுதியாக்கி, அவனது வாழ்க்கை முறையாக அது ஆகிறது. தீய வழிகளில் பயணிப்பது எளிதாக இருப்பதால், தீமையை விட்டு விலகத் தீயோன் விரும்புவதே இல்லை. ஆனால் தீயவை செய்தார் கெடுதல், நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று (குறள்#208). பொல்லாரை அவர்களின் பாவமே கீழே வீழ்த்தும் (வ.6ஆ); அவர்கள் சாவை நோக்கிச் செல்வோர் (11:19ஆ).*

*வசனம் 13:20*
*பார்க்க, 12:26 மற்றும் குறிப்பு.*
*எச்சரிப்பின் வசனங்களுக்கு மேலும் பார்க்க, 1:10, 2:12, 4:14, 5:8, 14:7, 22:24-25; திருப்பாடல் 1:1-6; 1 கொரிந்தியர் 15:33.*

*நட்பு உயர்வு தாழ்வு பார்ப்பதில்லை; உளச் சமனில் இருப்போரில், ஒருவரின் எண்ணங்கள் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துதல் இயல்பானது. எனவே நண்பர்களைத் தெரிவு செய்வதில் கவனம் தேவை. ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை தான் சாம் துயரம் தரும் (குறள்#792). மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்று ஈத்தும் ஒருவுக ஒப்பு இலார் நட்பு (குறள்#800).*

*வசனம் 13:21*
*பார்க்க, திருப்பாடல் 32:10; எசாயா 47:11.*

*வசனம் 13:21-22*
*பார்க்க, 28:8; யோபு 27:16-17; சபை உரையாளர் 2:26.*
*ஒரு நல்லவருக்கும் ஒரு தீயவனுக்கும் நடக்கும் நீதிமன்றப் போராட்டத்தில் இத்தகைய விளைவு ஏற்படக்கூடும். ஒருவேளை, இவ்வாறு நடக்கவில்லை என்றால் இறைவாக்கு நிறைவேறாது என்று எண்ணிவிட முடியாது. இளைஞர் மூவர் நேபுகாத்நேச்சார் மாமன்னனுக்கு மறுமொழி சொன்னது போல (தானியேல் 3:16-18), கடவுளுக்கு அஞ்சி நடப்போர், அன்றைய வீழ்ச்சி குறித்துக் கலங்காமல், இறைஞானத்தின் வழியில் தொடர்ந்து பயணிக்க உறுதியாக இருப்பர்.*

*வசனம் 13:23*
*பார்க்க, 12:11 மற்றும் குறிப்பு.*
*நன்செய் நிலமே பெரும் பலன் தரும். புன்செய் நிலமோ, தரிசு நிலமோ, ஓரளவுக்கேனும் பலன் தரக்கூடியது. (பார்க்க, விடுதலைப் பயணம் 23:10-11; லேவியர் 25:1-7). தரிசு நிலம் உழைப்பும் கவனிப்பும் செலுத்தப்படாத நிலம். நியாயமற்ற சமுதாயத்தில், ஏழைகளிடமிருந்து சொற்பமான காணியும் வலியோரால், செல்வர்களால், சில சமயங்களில் அவர்களுக்காகச் செயல்படும் அரசாங்கங்களால் பறிக்கப்படும். பார்க்க, திருப்பாடல் 35:10; ஆமோஸ் 2:6-7.*

*வசனம் 13:24*
*கடவுளின் கண்டிப்போடு ஒப்பிடுக, 3:11-12 மற்றும் குறிப்பு.*

*பெற்றோர்க்கு இல்லை, செற்றமும் சினமும் (கொன்றைவேந்தன்#65). அன்பும் அக்கறையுமே கண்டிப்பின் அடிப்படை, எபிரேயர் 12:6.*

*கரிசனையோடு பெற்றோர் பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டும்; பெற்றோரின் கைகளை மீறி அவர்கள் வளருமுன், கண்டிக்க வேண்டிய பருவத்திலேயே அவர்களைக் கண்டித்து நெறிப்படுத்த வேண்டும் (19:18). மேலும் பார்க்க, 22:15, 23:13-14, 29:15; எபேசியர் 6:4.*

*அதேவேளையில், பிரம்பை இன்றைய காலத்தில் கையாள முடியுமா என்பது சிக்கலான கேள்வி. வளர்ந்த சமுதாயங்களில் பிரம்பு மட்டுமல்லாமல், குழந்தைகளை அடித்துத் திருத்துதலே சட்ட விரோதம். இதற்கு ஓர் அடிப்படைக் காரணம், இன்றைய குழந்தைகளின் அறிவாற்றல் முந்தைய காலங்களைக் காட்டிலும் மிகுதி. ஆனால், குழந்தைகளைச் சிறுவயதிலேயே பண்படுத்த வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது; குழைந்த நிலையில்தான் களிமண்ணை வனைய முடியும்.*

*வசனம் 13:25*
*பார்க்க, 10:3 மற்றும் குறிப்பு.*
*தாவீதின் சொற்களில், "...ஆண்டவரை நாடுவோர்க்கு நன்மை ஏதும் குறையாது" (திருப்பாடல் 34:10ஆ).*

# 20 நீதிமொழிகள் 14

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றனர்;
அறிவற்றவரோ தம் கைகளைக் கொண்டே அதை அழித்துவிடுகின்றனர்.
2 நேர்மையாக நடப்பவர்* **ஆண்டவரிடம் அச்சம் கொள்வார்;**
*நெறிதவறி நடப்பவன் அவரைப் பழிப்பான்.
3 மூடனது இறுமாப்பு அவனை மிகுதியாகப் பேசச் செய்யும்;
ஞானமுள்ளவருடைய சொற்களோ அவரைப் பாதுகாக்கும்.
4 உழவு மாடுகள் இல்லையேல் விளைச்சலும் இல்லை;
வலிமைவாய்ந்த காளைகள் மிகுந்த விளைச்சலை உண்டாக்கும்.
5 வாக்குப் பிறழாத சாட்சி பொய்யுரையான்;
பொய்ச்சாட்சியோ மூச்சுக்கு மூச்சு பொய் பேசுவான்.
6 ஒழுங்கீனன் ஞானத்தைப் பெற முயலுவான்;
ஆனால் அதை அடையான்;
விவேகமுள்ளவரோ அறிவை எளிதில் பெறுவார்.
7 மூடனைவிட்டு விலகிச் செல்;
அறிவுடைய பேச்சு அவனிடம் ஏது?
8 விவேகமுள்ளவரது ஞானம் அவரை நேர்வழியில் நடத்தும்;
மதிகேடர் மடமை அவனை ஏமாறச் செய்யும்.
9 பாவக்கழுவாய் தேடுவதை மூடர் ஏளனம் செய்வர்;
மூடரின் இல்லத்தில் குற்றப்பழி தங்கும்;
நேர்மையாளரின் இல்லத்தில் மகிழ்ச்சி தவழும்.
10 ஒருவரது இன்பமோ துன்பமோ, அது அவருடையதே;
வேறெவரும் அதைத் துய்க்க இயலாது.
11 பொல்லாரின் குடி வேரோடழியும்;*

*நேர்மையாளரின் குடும்பம் தழைத்தோங்கும்.*
*12 ஒரு பாதை ஒருவருக்கு நல்வழி போலத் தோன்றலாம்;*
*முடிவிலோ அது சாவுக்கு நடத்தும் பாதையாகிவிடும்.*
*13 நகைப்பிலும் துயரமுண்டு;*
*மகிழ்ச்சியை அடுத்து வருத்தமும் உண்டு.*
*14 உண்மையற்றவர் தம் நடத்தையின் விளைவைத் துய்ப்பார்;*
*நல்லவர் தம் செயல்களின் பயனை அடைவார்.*
*15 பேதை தன் காதில் விழும் எதையும் நம்புவார்;*
*விவேகமுள்ளவரோ நேர்வழி கண்டு அவ்வழி செல்வார்.*
*16 ஞானமுள்ளவர் விழிப்புடையவர்; தீமையை விட்டு விலகுவர்.*
*மதிகேடரோ மடத்துணிச்சலுள்ளவர்; எதிலும் பாய்வார்.*
*17 எளிதில் சினங்கொள்பவர் மதிகேடானதைச் செய்வார்;*
*விவேகமுள்ளவரோ பொறுமையோடிருப்பார்.*
*18 பேதையர் அறியாமையுடையோர்;*
*விவேகமுள்ளவர்கள் சூடும் மணிமுடி அறிவாகும்.*
*19 தீயவர் நல்லார்முன் பணிவர்;*
*பொல்லார் சான்றோரின் வாயிற்படியில் காத்து நிற்பர்.*
*20 ஓர் ஏழையை அடுத்திருப்போர் அவரை அருவருப்பானவர் எனக் கருதுவர்;*
*செல்வருக்கோ நண்பர் பலர் இருப்பர்.*
*21 அடுத்திருப்பாரை இகழ்தல் பாவமாகும்;*
*ஏழைக்கு இரங்குகிறவர் இன்பம் துய்ப்பார்.*
*22 தீய சூழ்ச்சி செய்பவர் தவறிழைப்பர் அன்றோ?*
*நலம் தரும் திட்டம் வகுப்போர் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்.*
*23 கடும் உழைப்பு எப்போதும் பயன் தரும்;*
*வெறும் பேச்சினால் வருவது வறுமையே.*
*24 ஞானிகளுக்கு அவர்களது விவேகமே மணிமுடி;*
*மதிகேடருக்கு அவர்களது மடமைதான் பூமாலை.*

25 உண்மைச் சான்று உயிரைக் காப்பாற்றும்;
பொய்ச் சான்று ஏமாற்றத்தையே தரும்.
26 **ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்** ஒருவருக்குத்
திடநம்பிக்கை அளிக்கும்;
அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு
அடைக்கலமாயிருப்பார்.
27 **ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்** வாழ்வளிக்கும்
ஊற்றாகும்;
சாவை விளைவிக்கும் கண்ணிகளுக்கு அது
மனிதரைத் தப்புவிக்கும்.
28 மக்கள் தொகை உயர, மன்னரின் மாண்பும்
உயரும்;
குடி மக்கள் குறைய, கோமகனும் வீழ்வான்.
29 பொறுமையுள்ளவர் மெய்யறிவாளர்;
எளிதில், சினங்கொள்பவர் தம் மடமையை
வெளிப்படுத்துவார்.
30 மன அமைதி உடல் நலம் தரும்;
சின வெறியோ எலும்புறுக்கியாகும்.
31 ஏழையை ஒடுக்கிறவர் அவரை
உண்டாக்கினவரை இகழ்கிறார்;
வறியவருக்கு இரங்குகிறவர் அவரைப்
போற்றுகிறார்.
32 பொல்லார் தம் தீவினையால் வீழ்ச்சியுறுவார்;
கடவுளுக்கு அஞ்சி நடப்பவர் சாகும்போதும்
தம் நேர்மையைப் புகலிடமாகக் கொள்வார்.
33 விவேகமுள்ளவர் மனத்தில் ஞானம்
குடிகொள்ளும்;
மதிகேடரிடம் அதற்கு இடமேயில்லை.
34 நேர்மையுள்ள நாடு மேன்மை அடையும்;
பாவம் நிறைந்த எந்த நாடும் இழிவடையும்.
35 கூர்மதியுள்ள பணியாளனுக்கு அரசர் ஆதரவு
காட்டுவார்;
தமக்கு இழிவு வருவிப்பவன்மீது சீற்றங்கொள்வார்.

நீதிமொழிகள் 14:1-35

## சிந்தனைக்கு

*வசனம் 14:1*
*இல்லத்தைக் கட்டுதல் –*
*கட்டுமானப் பொருட்களால் கட்டப்படுவது வீடு. அன்பால் கட்டப்படுவது இல்லம். தங்கள் அன்பால் அமைதியையும் களிப்பையும் ஏற்படுத்தும் பெண்கள் ஞானமுள்ளோர். அத்தகையதொரு பெண் மனைவியாக அமைவது, ஆண்டவர் அருளும் கொடை, 19:14.*

Δ

*அறிவற்ற –*
*இங்குக் காணப்படும் மூலச்சொல், iv-veh-leth / இவ்வெலெத் என்பது. நீதிமொழிகள் நூலுக்கு வெளியே திருப்பாடல்கள் (69:5) நூலில் மட்டுமே இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*வசனம் 14:2*
*நேர் எதிர் பொருளில் இரு சொற்கள், அஞ்சுதல் மற்றும் பழித்தல். அச்சமின்மையே நெறிதவறி நடக்க ஊக்கம் தருகிறது. கடவுள் இல்லை என்றோ கடவுள் தங்கள் செயல்பாடுகளைக் கண்டுகொள்ள மாட்டார் என்றோ இத்தகையோர் இறுமாப்புடன் நடப்பார்கள். இவர்கள் கடவுளின் அளவற்ற பரிவையும் சகிப்புத்தன்மையையும் பொறுமையையும் ஏளனம் செய்கின்றனர் என்று பவுலடிகள் சாடுகிறார் (உரோமையர் 2:4).*

*வசனம் 14:3*
*மூடனது மிகுதியான பேச்சு என்பது கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி, தானும் அதுவாகப் பாவித்துத் தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலுமே, கல்லாதான் கற்ற கவி! (மூதுரை#14)*

ஞானமுள்ளவருடைய சொற்கள், பார்க்க, சபை உரையாளர் 9:17.

வசனம் 14:4
தொன்மையான காலத்தில், கால்நடைகளே ஒருவரின் செல்வம், யோபு 1:3. உழவுத் தொழில் செழிக்கக் கால்நடைகள் இன்றியமையாதவை. சிறந்த கால்நடைகளில் முதலீடு செய்வோர், பெரும் விளைச்சலைத் திரும்பப் பெறுவர்.

வசனம் 14:5
பார்க்க, 6:19, 12:17 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, விடுதலைப் பயணம் 23:1. பொய் பொய்களைப் பிறப்பிக்கும். ஒரு பொய்யைக் காக்கப் பல பொய்கள் தேவை என்பதால், பொய்யர்கள் பேச்சுக்குப் பேச்சு பொய்களை உதிர்க்கிறார்கள்.

வசனம் 14:6
வாசிக்க, 8:9 & 17:24.

வசனம் 14:7
வாசிக்க, 23:9. மேலும் பார்க்க, திருப்பாடல் 1:1.

வசனம் 14:8
விவேகமுள்ளோர் -எதிர்- மதிகேடர். ஒரு செயலை ஏன் செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும், யாரைக் கொண்டு செய்ய வேண்டும் என்ற தெளிவுடையோர் விவேகமுள்ளோர். அத்தகைய தன்மையற்ற மூடர், தங்கள் செயல்களில் வெற்றி பெற மாட்டார்கள்.

வசனம் 14:9
பார்க்க, 10:23.
பலி செலுத்திப் பாவக் கழுவாய் செய்தலை, 'செய்யக்கூடாததைச் செய்து விட்டு, பலி செலுத்தினால் சரியாகிவிடுமா' என்று கேலி

*செய்வோர் மூடர்; அவர்கள் தீங்கிழைப்பதை வாடிக்கையாக்கிக் கொள்வர். அதனால், குற்றப்பழி அவர்கள் மீது தங்கும். பலி செலுத்துவோர் மன்னிப்பை வேண்டுவதால், மன்னிப்பின் உறுதியோடு மகிழ்ச்சியோடு வாழ்வர்.*

*வசனம் 14:10*
*பகிர்வதில் இன்பம் பெருகும், துயர் குறையும் என்று சொல்வார்கள். ஆனால் அதனை அனுபவிப்பவர் அதில் தொடர்புடையவர் மட்டுமே. மகிழ்வாரோடு மகிழுங்கள், அழுவாரோடு அழுங்கள் என்கிறார் பவுலடிகள் (உரோமையர் 12:15). ஆனால், அன்னா அடைந்த துயர் அவருடையது மட்டுமே; அதனை உணர்ந்தாலும் எல்கானா அனுபவிக்க முடியாது (வாசித்து உணர்க, 1 சாமுவேல் 1:8&10).*

*வசனம் 14:11*
*பார்க்க 12:7 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 3:33, 15:25; யோபு 8:13-15.*

*வசனம் 14:12*
*இணை, 16:25. பார்க்க: 3:17-18, 8:35-36, 12:15. ஒப்பிட்டு வாசிக்க, உரோமையர் 6:20-21.*

*வழியே ஏகுக! வழியே மீளுக! (நறுந்தொகை#81)*
*ஆண்டவர் காட்டும் வழி இதுதானா என்று நிதானித்துப் பார்க்காமல், நல்வழி என்று தனக்குத் தானே கற்பித்துக் கொண்டு, திரும்பிவர முடியாத அளவுக்கு நெடுந்தொலைவு வந்த பிறகு, சுயநீதியின்படிச் செயல்படுவோர் திகைத்து நிற்க நேரிடும்.*

*வசனம் 14:13*
*ஒப்பிடுக, வ.10. துன்பம் துய்ப்பவர் ஆயினும், அதனை வெளிக்காட்டாமல் வாழ்வோரும் உள்ளனர். இடுக்கண் வருங்கால் நகுக; அதனை அடுத்து ஊர்வது*

*அஃது ஒப்பது இல் (குறள்#621). பார்க்க, திருப்பாடல் 30:4-5.*

*வசனம் 14:14*
*‘செயல்களின் பயன்’ –*
*பார்க்க, 1:31, 13:2, 24:12; யோபு 34:11; ஓசேயா 4:9. அவரை விதைக்கச் சுரையா முளைக்கும்?*

*வசனம் 14:15*
*மேலும் பார்க்க, வ.18.*
*பேதைமையை சாலமோன் தொடர்ந்து சாடுகிறார், 1:32, 7:7&22-23.*

*பூவாதே காய்க்கும் மரமும் உள; மக்களுளும் ஏவாதே நின்றுணர்வார்தாம் உளரே. தூவா விரைத்தாலும் நன்றாகா வித்து; எனவே பேதைக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வே! (நல்வழி#35)*

*ஆனாலும், பேதையரும் வாழ்வடைய வழி உண்டு, 9:6, 19:25, 21:11. மேலும் பார்க்க 1:22 குறிப்பு.*

*வசனம் 14:16*
*இணை, 22:3. அறிவு எது என்றால், தீமையை விட்டு விலகுவதே (யோபு 28:28; திருப்பாடல் 34:14).*

*வசனம் 14:17*
*மேலும் பார்க்க, வ.29.*
*சினமே தீது; எளிதில் சினம் கொள்ளுதல் என்பது விளைவை எண்ணிப் பார்க்காமல் வெளிப்படுவது. விளைவை எண்ணிப் பார்ப்போர் சினம் கொள்ளார். செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான்; அல்லிடத்துக் காக்கின் என், காவாக்கால் என்? (குறள்#301)*

*திருச்சபைக் கண்காணி (பேராயர்) எவருக்கும் இருக்கக்கூடாத ஒரு பண்பு முன்கோபம் என்று சொல்கிறார் பவுலடிகள் (தீத்து 1:7).*

*வசனம் 14:19*
*தங்கள் பொல்லாங்கினால் குரு ஏலியின் வழிமரபிற்கு என்ன நேரிடும் என்று ஆண்டவர் உரைத்தது, 1 சாமுவேல் 2:36.*

*வசனம் 14:20*
*பார்க்க, 19:4&7.*

Δ

*ஒதுக்கப்படும் ஏழை –*
*அற்ற குளத்தின் அறு நீர்ப்பறவை போல, வறுமை வரும் போது ஒருவரை அனைவரும் கைவிட்டு விடுவர். கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் எல்லாரும் சென்றங்கு எதிர்கொள்வர்; இல்லானை இல்லாளும் வேண்டாள், மற்றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாது அவன் வாயிற் சொல் (நல்வழி#34).*

*வசனம் 14:21*
*முந்தைய வசனத்திற்கு இவ்வசனம் மறுமொழி தருகிறது. வறுமையின் பொருட்டு ஒருவரை இகழ்தலும் ஒதுக்குதலும் பாவம். மாறாக, அவருக்கு இரங்கி உதவி செய்வதே இன்பம் தரும். மேலும் பார்க்க, 19:17; திருப்பாடல் 112:9. செல்வர்க்கு அழகு, செழும் கிளை தாங்குதல் (நறுந்தொகை#3).*

*வசனம் 14:23*
*பார்க்க, 10:4 மற்றும் குறிப்பு; மற்றும் 21:5.*
*பேசிக்கொண்டே இருப்பவன் செயலற்றவன், சோம்பேறி. ஆனால், உழப்பின் வாரா உறுதிகள் உளவோ? (பட்டினத்தார்)*

*செயல் குறித்துப் பேசும் சாலமோன், "நினைக்கும் செயலைச் செய்; அதையும் ஆற்றல் இருக்கும் போதே செய்; ஏனெனில் பாதாளத்திற்கு இறங்கிய பிறகு, சிந்தனையோ செயலோ இல்லை" என்கிறார் (சபை உரையாளர் 9:10). மேலும் பார்க்க, சபை உரையாளர் 11:6; 2 தெசலோனிக்கர் 3:10-12.*

*வசனம் 14:24*
*"மணிமுடி" –*
*பார்க்க, 4:9 குறிப்பு.*

*வசனம் 14:25*
*பார்க்க, வ.5 மற்றும் குறிப்பு.*
*உண்மைச் சான்று கிறிஸ்து இயேசுவே; அவரே நமது நம்பிக்கைக்குரிய சாட்சி (திருவெளிப்பாடு 1:5 & 3:14). அவர்தம் வழியே, நிலைவாழ்வுக்கான வழி.*

*வசனம் 14:26*
*"ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்" –*
*பார்க்க, 1:7, 2:5, 3:7, 8:13, 9:10 மற்றும் குறிப்புகள்.*
Δ

*'ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்கு அடைக்கலம்' –*
*பார்க்க, 18:10; திருப்பாடல் 71:7; எசாயா 33:6.*

*வசனம் 14:27*
*பார்க்க, 13:14 மற்றும் குறிப்பு.*
Δ

*"வாழ்வளிக்கும் ஊற்று" –*
*கிறிஸ்து இயேசுவின் அருள்வாக்கை நினைவில் கொள்க, யோவான் 4:14.*

*வசனம் 14:28*
*இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ள இயலாமை, கொள்ளை நோய்கள், ஆண்டு தவறாத போர்கள் போன்றவைகளால், மக்கள் மடிந்த காலம். நாட்டின் செல்வத்தைப் பெருக்கவும், காக்கவும் மக்கள்திரள் வேண்டும். 'பிறக்கும் ஒவ்வொருவரும் வயிற்றோடு மாத்திரமல்ல, மூளையோடும், கை கால்களோடுமே பிறக்கிறார்' என்றார் மால்துஸ் எனும் பொருளாதார அறிஞர். இன்றைக்கு ஒரு கோடிக்கும் குறைந்த*

*மக்கள் தொகை கொண்ட இஸ்ரயேல், மக்கள் திரளால் அல்ல - அந்த மக்களின் அறிவாற்றலால் உயர்ந்திருக்கிறது. ஆனால் அதன் மனித வளம், அறமற்ற, நேர்மையற்ற வழிகளில், பல நாடுகளுக்கு உதவி வருவது வருத்தத்திற்குரியது.*

*வசனம் 14:29*
*பார்க்க, 16:32; எபேசியர் 4:26; யாக்கோபு 1:19.*
*தன்னைத் தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால் தன்னையே கொல்லும் சினம் (குறள்#305).*

*வசனம் 14:30*
*பார்க்க, 3:7-8&16-18. மேலும் பார்க்க, திருப்பாடல் 37:7-8.*
*உடல் நலம் பேணுவது மனநலமே!*

*அச்சம், கவலை, சினம், வெறுப்பு, பொறாமை போன்ற எதிர்மறை எண்ணங்களின் விளைவாக, நமது உடலின் சுரப்பிகள் செயல்படும் அளவுகள் மாறி, அதனால் நமது உடல் நலம் சீரழிகிறது. சாதாரணத் தலைவலி தொடங்கி, மாரடைப்பு அல்லது பக்கவாதம் வரை உடலில் பாதிப்புகள் ஏற்படுகின்றன.*

*நினைவில் நிறுத்துங்கள்: "ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டுவிடு; அவர் உனக்கு ஆதரவளிப்பார்; அவர் நேர்மையாளரை ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார்." (திருப்பாடல் 55:22)*

*வசனம் 14:31*
*பார்க்க, வ.20&21 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, 17:5, 19:4,7&17, 22:2.*
*கிறிஸ்து இயேசு தாம் மாட்சியுடன் வரும்போது, தாம் எவ்வாறு மக்களை நல்லோர் என்றும் தீயோர் என்றும் பிரிப்பார் (மத்தேயு 25:31-46) என்பதை உணர்ந்து அறவழியில் நடப்போம்.*

*வசனம் 14:32*
*பார்க்க, 1:23-29. மேலும் பார்க்க, 12:28, 24:16.*

*தீச்செயலால் வீழ்ந்த ஒருவன், மாமன்னன் பெல்சாட்சர் (தானியேல் 5:1-30).*

*அதேவேளையில், இறுதி வரை நேர்மையைப் புகலிடமாகக் கொண்ட நேர்மையாளராக, துன்பங்களை இன்முகத்துடன் சகித்த பவுலடிகளை நாம் காண்கிறோம் (2 கொரிந்தியர் 1:8-10; 2 திமொத்தேயு 4:17-18).*

*ஆசாபின் உள உறுதியையும் பார்ப்போம்: "உமது திருவுளப்படியே என்னை நடத்துகின்றீர்; முடிவில் மாட்சியோடு என்னை எடுத்துக்கொள்வீர்." (திருப்பாடல் 73:24)*

*நமக்கு முன் நிற்கும் இந்த உறுதியான சாட்சிகளை மனதில் கொண்டு, நாம் நேர்மையான வழியில் இறுதி வரை தளராது வாழ்வோம்.*

*வசனம் 14:33*
*"மதிகேடரிடம் அதற்கு (ஞானத்திற்கு) இடமேயில்லை" –*
*OV, "மதியீனரிடத்தில் உள்ளதோ வெளிப்படும்."*
*பார்க்க, எசாயா 32:6.*

*விவேகமுள்ளோர் அவசியமின்றித் தங்கள் அறிவாற்றலைக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் மூடரோ, தாங்கள் அறிவுள்ளவர்கள் என்று காட்டிக் கொள்ள, தங்களுக்குள் இருப்பதை வெளிப்படுத்தி, தங்கள் முட்டாள்தனத்தை அம்பலப்படுத்திக் கொள்வர்.*

*வசனம் 14:34*
*பார்க்க, 11:11.*

*'No Bible, No Freedom; More Bible, More Freedom'* என்று சொல்வார்கள். *"Where the mind is without fear, | Where the mind is lead forward by Thee, | Into ever-widening thought and action, | Into that heaven of freedom, my Father, let my country awake!"* என்கிறார் இரவீந்திரநாத் தாகூர். எந்த நாட்டில் அச்சம் என்பது இல்லையோ, அங்கு உண்மையும் நீதியும் கோலோச்சும். இதனடிப்படையில், நமது நாட்டின் நிலை என்ன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

வசனம் *14:35*
கூர்மதியுள்ள பணியாளர், பார்க்க, மத்தேயு *24:45-47*. எதிர்பாராத நாளில் திரும்ப வரும் அரசர், தமக்கு இழிவு வருவிப்பவனாக நம்மில் எவரையும் காணாதபடி, நமக்கு அளிக்கப்பட்ட பொறுப்பு எதுவாயினும், அதனை இறுதி வரை உண்மையோடும் நேர்மையோடும் நிறைவேற்றுவோம்.

✝

# 20 நீதிமொழிகள் 15

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றிவிடும்;
கடுஞ்சொல்லோ சினத்தை எழுப்பும்.
2 ஞானமுள்ளவர்களின் நா அறிவை வழங்கும்;
மதிகேடரின் வாயோ மடமையை வெளியிடும்.
3 ஆண்டவருடைய கண்கள் எங்கும் நோக்கும்;
நல்லாரையும் பார்க்கும், பொல்லாரையும் பார்க்கும்.
4 சாந்தப்படுத்தும் சொல், வாழ்வளிக்கும் மரம் போன்றது;
வஞ்சகப் பேச்சாலோ மனமுடைந்துபோகும்.
5 தன் தந்தையின் நல்லுரையைப் புறக்கணிப்பவர் மூடர்;
கண்டிப்புரையை ஏற்பவர் விவேகமுள்ளவர்.
6 நல்லாரின் வீட்டில் நிறைசெல்வம் நிலைத்திருக்கும்;
பொல்லாரின் வருவாயால் விளைவது தொல்லையே.
7 ஞானிகளின் பேச்சு அறிவை வளர்க்கும் தன்மையது;
மதிகேடரின் உள்ளம் அத்தகையதல்ல.
8 பொல்லார் செலுத்தும் பலி ஆண்டவருக்கு அருவருப்பைத் தரும்;
நேர்மையானவர்களின் மன்றாட்டு அவருக்கு உகந்ததாயிருக்கும்.
9 பொல்லாரின் செயல்கள் ஆண்டவருக்கு அருவருப்பு;
நீதியைப் பின்பற்றுவோரிடம் அவர் அன்புகொள்கிறார்.
10 நெறிதவறிச் செல்பவருக்குத் தண்டனை கடுமையாயிருக்கும்;
கண்டிப்பை வெறுப்பவர் மரணம் அடைவார்.*

11 பாதாளமும் படுகுழியுமே ஆண்டவர் பார்வையில்
இருக்க,
மனிதரின் உள்ளம் அவர் பார்வைக்கு
மறைவாயிருக்குமா?
12 ஏளனம் செய்வோர் தம்மைக் கடிந்து
கொள்பவரை விரும்பார்;
ஞானமுள்ளவரிடம் செல்லவும் மாட்டார்.
13 அகமகிழ்ச்சியால் முகம் மலரும்;
மனத்துயரால் உள்ளம் உடையும்.
14 விவேகமுள்ளவர் மனம் அறிவை நாடும்;
மதிகேடர் வாய்க்கு மடமையே உணவு.
15 ஒடுக்கப்பட்டோருக்கு ஒவ்வொரு நாளும்
தொல்லை நாளே;
மனமகிழ்ச்சி உள்ளவருக்கோ எல்லா நாள்களும்
விருந்து நாள்களே.
16 பெருஞ்செல்வமும் அதனோடு கவலையும்
இருப்பதைவிட,
சிறுதொகையும் அதனோடு
**ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமும்** இருப்பதே
மேல்.
17 பகை நெஞ்சம் கொண்டோர் படைக்கும் நல்ல
இறைச்சி உணவைவிட,
அன்புள்ளம் உடையவர் அளிக்கும் மரக்கறி உணவே
மேல்.
18 எளிதில் சினங்கொள்பவர் சண்டையை
மூட்டுவார்;
பொறுமை உடையவர் சண்டையைத் தீர்த்து
வைப்பார்.
19 சோம்பேறிக்கு எவ்வழியும் முள் நிறைந்த
வழியே;
சுறுசுறுப்பானவர்கள் செல்லும் பாதையோ
நெடுஞ்சாலையாகும்.
20 ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விப்பான்;
அறிவற்ற மகனோ தன் தாயை இகழ்வான்.
21 மூடன் தன் மடமை குறித்து
மகிழ்ச்சியடைகின்றான்;
மெய்யறிவுள்ளவன் நேர்மையானதைச் செய்வான்.

*22 எண்ணிப் பாராமல் செய்யும் செயல்*
*தோல்வியடையும்;*
*பலர் திட்டமிட்டுச் செய்யும் செயல்*
*வெற்றியடையும்.*
*23 தக்க மறுமொழி அளிப்பவன் மிக்க மகிழ்ச்சி*
*அடைவான்;*
*காலமும் வேளையும் அறிந்து சொல்லும்*
*சொல்லால் வரும் மகிழ்ச்சி இன்னும் பெரிது.*
*24 விவேகமுள்ளவன் செல்லும் பாதை*
*பாதாளத்திற்குச் செல்லும் பாதை அல்ல;*
*அது வாழ்விற்குச் செல்லும் பாதையாகும்.*
*25 இறுமாப்புள்ளவர் வீட்டை ஆண்டவர் இடித்துத்*
*தள்ளுவார்;*
*கைம்பெண்ணினது நிலத்தின் எல்லைகளைப்*
*பாதுகாப்பார்.*
*26 தீயோரின் எண்ணங்களை ஆண்டவர்*
*அருவருக்கிறார்;*
*மாசற்றோரின் சொற்களே உவப்பளிப்பவை.*
*27 வன்முறையில் செல்வம் சேர்ப்பவர்*
*தம் குடும்பத்திற்குத் தொல்லை வருவிப்பார்;*
*கைக்கூலி வாங்க மறுப்பவர் நீடித்து வாழ்வார்.*
*28 சான்றோர் எண்ணிப் பார்த்து மறுமொழி கூறுவர்;*
*பொல்லாரின் வாய் தீய சொற்களைப் பொழியும்.*
*29 ஆண்டவர் பொல்லாருக்கு நெடுந்தொலையில்*
*இருக்கிறார்;*
தமக்கு அஞ்சி நடப்போரின் *மன்றாட்டுக்குச்*
*செவிசாய்க்கிறார்.*
*30 இன்முகம் மனத்திற்கு மகிழ்ச்சி தரும்;*
*நல்ல செய்தி உடம்புக்கு உரமளிக்கும்.*
*31 நலம் தரும் அறிவுரையைக் கவனமாகக்*
*கேட்பவர்,*
*ஞானிகளோடு உறவு கொண்டிருப்பதை*
*விரும்புவார்.*
*32 கண்டிக்கப்படுவதைப் புறக்கணிக்கிறவர்*
*தமக்கே கேடு வருவித்துக் கொள்கிறார்;*
*அறிவுரையைக் கவனமாகக் கேட்பவர் உணர்வை*
*அடைவார்.*

*33* **ஆண்டவரிடம் அச்சம்கொள்ளுதல் ஞானத்தைத் தரும் பயிற்சி; மேன்மை அடையத் தாழ்மையே வழி.**

*நீதிமொழிகள் 15:1-33*

## சிந்தனைக்கு

*வசனம் 15:1*

*"கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றி விடும்" –*

*என்ன சொல்கிறோம் என்பதை விட, எப்படிச் சொல்கிறோம் என்பதே விளைவைத் தீர்மானிக்கிறது. பார்க்க, 25:15.*

*தீயன நிகழும் போது, நடந்து கொள்ள வேண்டிய முறை குறித்துப் பவுலடிகளின் அறிவுரை, உரோமையர் 12:17-21.*

*சீற்றமுடன் வந்த எப்ராயிம் மக்களை எதிர்கொண்ட கிதியோனின் பொறுமை, நீதித் தலைவர்கள் 8:1-3.*

*சினங்கொண்ட தாவீதைப் பக்குவமாக எதிர்கொண்ட அபிகாயில், 1 சாமுவேல் 25:13-35.*

*இனிய உளவாக இன்னாத கூறல், கனி இருப்பக் காய் கவர்ந்தற்று (குறள்#100).*

Δ

*"கடுஞ்சொல்லோ சினத்தை எழுப்பும்" –*

*நாபால் தன் கடுஞ்சொற்களால் தாவீதின் சினத்தை எழுப்பினான், 1 சாமுவேல் 25:10-13. நாடு உடையக் காரணமான ரெகபெயாமின் கடுஞ்சொற்கள், 1 அரசர்கள் 12:13-19. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல் (குறள்#643).*

*வசனம் 15:2*

*ஒப்பிடுக, 12:23 மற்றும் குறிப்பு.*

*வசனம் 15:3*

*"ஆண்டவருடைய கண்கள்" –*

*பார்க்க, 5:21 & 22:12; யோபு 34:21; திருப்பாடல் 33:13-14; எரேமியா 16:17, 17:10, 32:19; எபிரேயர் 4:13.*

*வசனம் 15:4*
*பார்க்க, 3:18 & 12:18 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 15:5*
*பார்க்க, 12:1 & 13:1 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 15:6*
*பார்க்க, 10:2 மற்றும் குறிப்பு. அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடையவர் ஏனும் இலர் (குறள்#430).*

*வசனம் 15:7*
*ஒப்பிடுக, வ.2.*

*வசனம் 15:8*
*"பொல்லார் செலுத்தும் பலி ஆண்டவருக்கு அருவருப்பு" –*
*பார்க்க, 21:27, 28:9; எசாயா 1:11&13; எரேமியா 6:20, 7:22; ஆமோஸ் 5:22; மீக்கா 6:7.*
Δ
*"நேர்மையானவர்களின் மன்றாட்டு ..." –*
*மீண்டும் வ.29; பார்க்க, திருப்பாடல் 34:15.*
*கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளில், யோவான் 9:31.*

*வசனம் 15:10*
*கண்டித்து மீக்காயா சொல்லிய இறைவாக்கைப் புறக்கணித்த ஆகாபு, தந்திரமாக யோசபாத்தை அரச உடையில் களமிறங்கச் செய்தும், கடவுள் முன்னுரைத்தபடியே போரில் உயிர் விட்டான், 1 அரசர்கள் 22:6-38.*

*வசனம் 15:11*
*"பாதாளமும் படுகுழியுமே ஆண்டவர் பார்வையில்..." –*

பார்க்க, யோபு 26:6; திருப்பாடல் 139:8&23-24.
நாம் நமது கண்களால் காணக்கூடிய உலகில் மட்டுமல்லாமல், நாம் காண இயலாத உலகையும் காண்கிறவர் கடவுள். மனித மனங்களையும் அறிந்திருக்கிறவர் அவரே, திருப்பாடல் 7:9.

வசனம் 15:12
பார்க்க, 12:1 மற்றும் குறிப்பு.
செருக்கும் இறுமாப்பும் கொண்டோரே ஏளன மனம் கொண்டோர் (21:24; திருப்பாடல் 119:51). அவர்கள் கடிந்து கொள்ளுதலையும், அறிவுறுத்துவோரையும் ஒருபோதும் விரும்பார். அத்தகையோரை அந்த இடத்திலிருந்து அகற்றிவிட்டால், அங்கே அமைதி நிலவும் என்கிறார் சாலமோன் (22:10). செருக்குடையோரை ஆண்டவரும் வெறுக்கிறார் (இணைச் சட்டம் 17:12).

வசனம் 15:13
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
Δ
மனத்துயர் –
பார்க்க, 12:25 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 17:22.

வசனம் 15:14
"விவேகமுள்ளவர் மனம் அறிவை நாடும்" –
அறிவின் செயல்பாடே விவேகம். இருப்பினும் விவேகமாக நடப்போர் மென்மேலும் அறிவை நாடுவர். ஞானத்தை நாடி, அறிவைப் பெற்றுக் கொண்டே இருப்பதுவே விவேகமுள்ளோரின் செயல்.

வசனம் 15:15
"ஒடுக்கப்பட்டோருக்கு ஒவ்வொரு நாளும் தொல்லை நாளே" –
நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை (நறுந்தொகை#47).

*ஜாதியாலும், பொருளாதார அடிப்படையிலும், ஒடுக்கப்பட்ட மக்கள்மிகுந்த நாட்டில் நாம் வாழ்கிறோம். கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் இந்த மக்கள் வாழ்கிற நிலைமை உள்ளது. ஒடுக்கப்பட்டு, துன்புறும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பவராக ஆண்டவர் இருக்கிறார் (நீதித் தலைவர்கள் 2:18). மண்ணுலகில் ஒடுக்கப்பட்டோரைக் காப்பவரும், அவர்களுக்கு நீதி செய்கிறவரும், அவர்களின் உரிமைகளை மீட்பவரும் அவரே (திருப்பாடல் 76:8-9, 103:6 & 146:7). ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாக நிற்க ஆண்டவர் நம்மை அழைக்கிறார் (எசாயா 1:17).*

***சதி ஏற்றும் கொடுமையை ஒழித்ததில் வில்லியம் கேரி அவர்களின் பங்களிப்பையும், தோல் சீலைப் போராட்டத்தில் லண்டன் திருப்பணியரின் பங்கையும், இந்திய வரலாறு மறக்கலாம்; ஆனால், திருச்சபை மறந்து, உணர்வற்று இருக்கலாமா?***

*வசனம் 15:16*
*செல்வமும் கவலையும் –*
*பார்க்க, 10:22 மற்றும் குறிப்பு; மேலும் பார்க்க, 16:8; திருப்பாடல் 37:16; 1 திமொத்தேயு 6:6-8. கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகள், மத்தேயு 6:19-21.*
Δ

*"ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்" –*
*பார்க்க, 1:7, 2:5, 3:7, 8:13 & 9:10 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 15:17*
*மேலும் பார்க்க, 17:1. சேர்த்து வாசிக்க, உரோமையர் 12:13; 1 பேதுரு 4:9. மோப்பக் குழையும் அனிச்சம், முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து (குறள்#90).*

*அன்பு பகிர்தல், விருந்து பகிர்தலில்தான் நிறைவடைகிறது. அது பேராயருக்கு இருக்க*

வேண்டிய அடிப்படைத் தகுதிகளில் ஒன்று (1 திமொத்தேயு 3:2; தீத்து 1:8). பயன் கருதாது செய்வதே விருந்தோம்பல் என்றாலும், உண்மையில் அதன் பயன் அளவிட முடியாதது (எபிரேயர் 13:2). இனைத்துணைத்து என்பது ஒன்றில்லை; விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன் (குறள்#87).

வசனம் 15:18
பார்க்க, 26:21, 29:22. மேலும் பார்க்க, வ.1 மற்றும் குறிப்பு. ஒப்பிடுக, 28:25.

வசனம் 15:19
பார்க்க, 6:6 மற்றும் குறிப்பு. ஒப்பிடுக, 22:5. எறும்பு ஊரக் கல்லும் தேயும். நடக்க நடக்க, அடர் காட்டுள்ளும் வழி அமையும்.

வசனம் 15:20
பார்க்க, 10:1 மற்றும் குறிப்பு.

வசனம் 15:21
"மூடன் தன் மடமை குறித்து மகிழ்ச்சியடைகின்றான்" –
பார்க்க, 10:23அ மற்றும் குறிப்பு.

Δ

"மெய்யறிவுள்ளவன் நேர்மையானதைச் செய்வான்" – பவுலடிகள் தரும் அறிவுரை, எபேசியர் 5:15.

வசனம் 15:22
பார்க்க, 20:18, 24:6.

Δ

"பலர்" –
OV, ஆலோசனைக்காரர் அநேகர்; KJV, in the multitude of councellors; ESV / NRSV / NIV, many advisers. மூலச் சொற்களின் (robe & yaw-ats) அடிப்படையில், மிகுந்த ஆலோசகர்கள். நமது வாழ்வின் ஆலோசகர்களாக, பைபிளின் அறுபத்து ஆறு நூல்கள் விளங்குகின்றன!

*அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை, தேர்ந்து திறன் அறிந்து கொளல் (குறள்#441). சிறப்பான செயல்களைத் திட்டமிடவும் செயல்படுத்தவும், ஆலோசகர்களும் ஆற்றல்மிக்கோரும் வேண்டும். அந்த அநேகர் ஒத்த நோக்கம் கொண்டோராக இருப்பது அவசியம். எனவே நமது ஆலோசகர்களைத் தெரிவு செய்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.* ***தலைசிறந்த ஆலோசகர் தூய ஆவியாரே! அவருடைய துணையைப் பெற, நாள்தோறும் மன்றாடிச் செயலில் இறங்குவதே சிறப்பு!***

*வசனம் 15:23*
*முந்தைய வசனத்தின் தொடர்ச்சியாக வரும் வசனம். பார்க்க, வ.28, 25:11; எசாயா 50:4.*

*சூழலுக்குத் தக்க மறுமொழி, சொன்னவரை மட்டுமல்லாமல், கேட்பவரையும் ஊக்கப்படுத்தும்.*

*வசனம் 15:24-33*
*வ.25 நீங்கலாக ஏனைய வசனங்கள் ஒவ்வொன்றும், நேரடியாக அல்லது மறைமுகமாக, இறையன்பர்களின் பண்பு நலன்கள் பற்றிப் பேசுகின்றன:*

*வ.24, விவேகம்;*
*வ.26, தூய்மை;*
*வ.27, நேர்மை;*
*வ.28, கவனம்;*
*வ.29, மன்றாட்டு;*
*வ.30, மகிழ்ச்சி;*
*வ.31, ஞானிகளோடு உறவு;*
*வ.32, அறிவுரையை ஏற்றல்;*
*வ.33, இறையச்சம்.*

*இந்தத் தொகுப்பில் உள்ள பண்புநலன்கள் நம்முள் இருக்கின்றனவா? தன்னாய்வு செய்து, நலமானவற்றை உறுதியோடு பற்றிக் கொள்வோம்.*

வசனம் 15:24

பார்க்க, 14:16 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 22:3. ஞானம் தருவதே வாழ்வின் வழி, 3:2&16, 4:10, 9:11, 10:27, 14:27. மேலும் பார்க்க, 3:16 குறிப்பு.

வசனம் 15:25

கைம்பெண்களின் இன்றைய வாழ்க்கையே பாதுகாப்பற்றதாக உள்ளது; தொன்மைக்காலத்தில் அவர்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. செல்வாக்கு மிக்கோரின் ஒடுக்குதலிலிருந்து அவர்களைப் பாதுகாப்பவர் ஆண்டவரே, இணைச் சட்டம் 10:18; திருப்பாடல் 68:5. மேலும் பார்க்க, திருப்பாடல் 146:9; எரேமியா 49:11.

நிலத்தின் எல்லைகளைத் தன்னிச்சையாக மாற்றி, அடுத்தவரின் நிலத்தை அபகரித்தலை ஆண்டவர் கண்டிக்கிறார், இணைச் சட்டம் 19:14. மேலும் பார்க்க, 22:28, 23:10-11. நில அபகரிப்பின் பொருட்டு, ஈசபேலும் ஆகாபும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர் (1 அரசர்கள் 21:17-24, 22:34-38 & 2 அரசர்கள் 9:30-37).

வசனம் 15:26

பார்க்க, 6:16-19; திருப்பாடல் 19:14. மனத்துக்கண் மாசிலன் ஆதல், அனைத்து அறன்; பிற ஆகுல நீர (குறள்#34).

Δ

"தீயோரின் எண்ணங்கள்" –

OV, துன்மார்க்கருடைய நினைவுகள்; மூலச்சொல் mack-ash-aw-baw என்பது வஞ்சக எண்ணத்தோடு திட்டம் தீட்டுதல் என்றும் பொருள்படும்.

வசனம் 15:27

பார்க்க, எசாயா 5:8; அபக்கூக்கு 2:5. ஒப்பிட்டு அறிக, வ.6 & 11:29. மேலும் வாசிக்க, வ.25 குறிப்பு.

Δ

*"வன்முறையில் செல்வம் சேர்ப்பவர்..." –*
*OV, பொருளாசைக்காரன்; KJV, greedy of gain; மூலமொழியில், baw-tsah & beh-tsah; வேட்கையோடு செல்வம் குவிப்போர் என்று சொல்லலாம்.*

*பொருளாசை சாராத / தன்னலமற்ற உள்ளம் கேட்டார் திருப்பாடகர், திருப்பாடல் 119:36. சாலமோன் அரசரும் பொருளாசையைக் கடுமையாகக் கண்டிக்கிறார், 1:19 & 28:16. இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் பொருளாசையைக் கண்டிக்கிறார், எசாயா 57:17; எரேமியா 6:13 & 8:10; எசேக்கியேல் 22:12 & 33:31. கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளில், லூக்கா 12:15.*

Δ

*கைக்கூலி –*
*OV, கையூட்டு. கையூட்டு வாங்காதே என்பது ஆண்டவர் தந்த கட்டளை, விடுதலைப் பயணம் 23:8; இணைச் சட்டம் 16:19. மேலும் பார்க்க, சபை உரையாளர் 7:7; எசாயா 1:23.*

*வசனம் 15:28*
*ஓர் அறிவுரையாக, யாக்கோபு 1:19 மற்றும் 1 பேதுரு 3:15. முகத்தான் அமர்ந்து, இனிது நோக்கி, அகத்தானாம் இன்சொலின், அதே அறம் (குறள்#93).*

*வசனம் 15:29*
*பார்க்க, வ.8&9; திருப்பாடல் 34:15-17, 145:18; 1 பேதுரு 3:12.*

*வசனம் 15:30*
*"இன்முகம்" –*
*OV, கண்களின் ஒளி; KJV, light of the eyes. எபிரேய மொழியில் ah-yin என்ற சொல் பொதுவாக கண் என்றும் சில வேளைகளில் முகம் என்றும் பொருள்படும்; maw-ore என்பது ஒளிர்தல், மிளிர்தல், மலர்ச்சி என்று பொருள்படும்.*

ஒப்பிடுக, வ.13. சான்றோரின் நேர்மறை எண்ணங்களைப் பெறும் மற்றவர்களின் மகிழ்ச்சி, அனைவரின் மகிழ்ச்சியாகப் பெருகுகிறது.

வசனம் 15:31
பார்க்க 12:1 மற்றும் குறிப்பு.

Δ

"ஞானிகளோடு உறவு..." –
சிந்தனைகளைச் செழுமைப்படுத்த ஆகச் சிறந்த வழி பெரியாரோடு தொடர்பில் இருத்தல். இன்றைய சமூக ஊடகங்கள் நமக்கொரு நல்வாய்ப்பு. பைபிளில் ஆழ்ந்த ஞானமுடைய சான்றோர் பேசுவதைத் தவறாமல் கேட்டு, தெளிவான அறிவு பெறலாம்.

இறையறிவு பெருக, சமூக ஊடகங்களை நாம் பயன்படுத்துகிறோமா?

வசனம் 15:32
பார்க்க, 8:36 & 12:1 மற்றும் குறிப்புகள்.

வசனம் 15:33
பார்க்க, வ.16.

நீதிமொழிகள் நூலின் கருப்பொருள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுதல். இறையச்சத்தோடு நாள்தோறும் பைபிளை வாசித்து, மெய்யறிவோடு வாழ்க்கையை நடத்துதலே ஞானத்தை அடையும் வழி. அதிலும் இளமைப் பருவத்தில் படைத்தவரைப் பற்றிக் கொண்டு, இறைவழியில் நடைபயில்தல் செம்மையான வாழ்வைத் தரும்.

Δ

"மேன்மை அடையத் தாழ்மையே வழி" –
இணை, 18:12ஆ. பார்க்க, யாக்கோபு 4:10.

கடவுள் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கும் நற்பண்பு தாழ்ச்சி, மீக்கா 6:8. செவிகொடுத்தல்

*தாழ்மை; அதன் செயல்பாடு கீழ்ப்படிதல். ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது நம் ஒவ்வொருவரின் கீழ்ப்படிதல், 1 சாமுவேல் 15:22. கடவுள் முன் நம்மைத் தாழ்த்துவோம், அவர்தம் வாக்குக்குக் கீழ்ப்படிந்து நல்வாழ்வு பெறுவோம்.*

✝

# 20 நீதிமொழிகள் 16

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 எண்ணங்களை மனிதர் எண்ணலாம்;*
*ஆனால், எதற்கும் முடிவு கூறுபவர் ஆண்டவர்.*
*2 மனிதருடைய நடத்தையெல்லாம் அவர்*
*பார்வையில் களங்கமற்றதாய்த் தோன்றலாம்;*
*ஆனால், அவர் உள்ளெண்ணத்தை ஆண்டவர்*
*சீர்தூக்கிப் பார்க்கிறார்.*
*3* ***உன் செயல்களை ஆண்டவரிடம் ஒப்படை;***
***அவற்றை வெற்றியுடன் நிறைவேற்றுவாய்.***
*4 ஆண்டவர் படைத்த ஒவ்வொன்றிற்கும்*
*குறிக்கப்பட்ட ஒரு முடிவு உண்டு;*
*பொல்லாத மனிதரை*
*அழிவு நாளுக்கென்று குறித்து வைத்திருக்கிறார்.*
*5 இறுமாப்புள்ளவர் யாராயிருந்தாலும் அவரை*
*ஆண்டவர் அருவருக்கிறார்;*
*அவர் தண்டனைக்குத் தப்பவேமாட்டார்; இது*
*உறுதி.*
*6 அன்பும் வாய்மையும் தீவினையைப் போக்கும்.*
***ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்*** *ஒருவரைத்*
*தீமையினின்று விலகச் செய்யும்.*
*7 ஒருவருடைய செயல்கள் ஆண்டவருக்கு*
*உகந்தவையாயிருக்குமானால்,*
*அவர் அவருடைய எதிரிகளையும் அவருக்கு*
*நண்பராக்குவார்.*
*8 தீய வழியில் சம்பாதிக்கும் பெரும் பொருளைவிட,*
*நேர்மையோடு ஈட்டும் சிறு தொகையே மேல்.*
*9 மனிதர் தம் வழியை வகுத்தமைக்கின்றார்;*
*ஆனால் அதில் அவரை வழிநடத்துபவரோ*
*ஆண்டவர்.*
*10 அரசன் வாயினின்று பிறக்கும் வாக்குப்*
*பொய்க்காது;*
*தீர்ப்பு வழங்கும்போது அவன் தவறு*
*செய்யமாட்டான்.*

*11 நிறைகோலும் துலாக்கோலும் ஆண்டவருக்கே உரியன;*
*பையிலுள்ள எடைக்கற்களெல்லாம் அவரால் உண்டானவை.*
*12 தீச்செயலை அரசர்கள் அருவருப்பார்கள்;*
*ஏனெனில், நீதியே அரியணையின் உறுதியான அடிப்படையாகும்.*
*13 நேர்மையான பேச்சை அரசர் வரவேற்பார்;*
*நேரியவற்றைச் சொல்லுகிறவரிடம் அவர் அன்பு செலுத்துவார்.*
*14 அரசரின் சீற்றம் மரண தூதன் போன்றது;*
*ஆனால் ஞானமுள்ளவர் அதைத் தணித்துவிடுவார்.*
*15 அரசரின் முகமலர்ச்சி வாழ்வளிக்கும்;*
*அவரது கருணை பருவமழை பொழியும் மேகம் போன்றது.*
*16 பொன்னைவிட ஞானத்தைப் பெறுவதே மேல்;*
*வெள்ளியைவிட உணர்வைப் பெறுவதே மேல்.*
*17 நேர்மையானவர்கள் செல்லும் பாதை தீமையை விட்டு விலகிச் செல்லும்;*
*தன் நடையைக் குறித்து அவ்வாறு விழிப்புடனிருப்பவன்*
*உயிரைக் காப்பாற்றிக் கொள்வான்.*
*18 அழிவுக்கு முந்தியது அகந்தை;*
*வீழ்ச்சிக்கு முந்தியது வீண்பெருமை.*
*19 மேட்டிமையானவர்களோடு*
*கொள்ளையடித்த பொருளைப் பகிர்ந்து மகிழ்வதைவிட,*
*மனத்தாழ்மையுடன் சிறுமைப்படுகிறவர்களோடு கூடியிருப்பது நலம்.*
*20* ***போதனைக்குச் செவிகொடுப்பவன் வாழ்வடைவான்;***
***ஆண்டவரை நம்புகிறவன் நற்பேறு பெற்றவன்.***
*21 ஞானமுள்ளவர் பகுத்துணரும் ஆற்றல் பெற்றவர் என்று கொள்ளப்படுவார்;*
*இனிமையாகப் பேசினால், சொல்வதை எவரும் ஏற்பர்.*
*22 விவேகமுள்ளவர்களுக்கு அவர்களது*

*விவேகமே வாழ்வளிக்கும் ஊற்றாகும்;*
*மூடருக்கு அவரது மடமையே போதிய*
*தண்டனையாகும்.*
*23 ஞானமுள்ளவரின் மனம் அவரது பேச்சை*
*விவேகமுள்ளதாக்கும்;*
*அவருடைய சொற்களை எவரும் ஏற்பர்.*
*24 இன்சொற்கள் தேன்கூடு போன்றவை;*
*மனத்திற்கு இனிமையானவை, உடலுக்கு நலம்*
*தருபவை.*
*25 ஒரு பாதை ஒருவருக்கு நல்ல வழிபோலத்*
*தோன்றலாம்;*
*முடிவிலோ அது சாவுக்கு நடத்தும்*
*பாதையாகிவிடும்.*
*26 உழைப்பவர் பசி அவரை மேலும் உழைக்கச்*
*செய்கிறது;*
*உண்ண விரும்பும் அவரது வயிற்றுப்பசி அவரை*
*அதற்குத் தூண்டுகிறது.*
*27 பிறர் குற்றங்களைக் கிண்டிக் கிளறித் தூற்றுபவர்*
*கயவர்;*
*எரிக்கும் நெருப்புப் போன்றது அவரது நாக்கு.*
*28 கோணல் புத்திக்காரரர் சண்டையை மூட்டிவிடுவர்;*
*புறங்கூறுவோர் நண்பரைப் பிரித்துவிடுவர்.*
*29 வன்முறையாளர் அடுத்தவரை ஏமாற்றி,*
*கெட்ட வழியில் அவரை நடக்கச் செய்வார்.*
*30 கண்ணை மூடிக்கொண்டிருப்போர்*
*முறைகேடானதைச் சிந்திப்பர்;*
*வாயை மூடிக்கொண்ருப்போர் தீமை செய்யத்*
*திட்டமிடுவர்.*
*31 நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி;*
*அது நேர்மையான நடத்தையால் வரும் பயன்.*
*32 வலிமை உடையவரைவிடப் பொறுமை*
*உடையவரே மேலானவர்;*
*நகரை அடக்குகிறவரைவிடத் தன்னை*
*அடக்குகிறவரே சிறந்தவர்.*
*33 மடியிலுள்ள திருவுளச் சீட்டை ஒருவர் குலுக்கிப்*
*போடலாம்;*

ஆனால், திருவுளத் தீர்ப்பை வெளிப்படுத்துபவர் ஆண்டவரே.

நீதிமொழிகள் 16:1-33

## சிந்தனைக்கு

அதிகாரம் 10 முதல் 15 வரை உள்ள வசனங்கள், வசனங்களின் முதல் பகுதிக்கு முரணான உண்மையைப் பேசுவதாக இரண்டாம் பகுதி அமைந்துள்ளது. ஆனால் இது முதல் 22:16 வரை வரும் வசனங்களில், முதல் பகுதிக்கு இரண்டாம் பகுதி ஒத்ததாகவும், முதல் பகுதியை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளன. இது ஒரு பொதுவான போக்கு - விதிவிலக்கான வசனங்களும் உள்ளன.

வசனம் 16:1-3&9

முதல் வசனம் முதல் ஒன்பதாம் வசனத்திற்குள், வ.1,2,3&9 ஆகியவை ஒன்றுக்கு ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பதைக் காணலாம். முன்மொழிபவன் மனிதன், முடித்து வைக்கிறவர் கடவுள் (Man proposes, God disposes) என்று சொல்லப்படுவதை இங்கு நாம் நினைவுகூரலாம். இந்த வசனங்களின் அடிப்படையில், தாவீதின் மன்றாட்டை (திருப்பாடல் 26:1-2) நாம் எண்ணிப் பார்த்தல் தகும். நமது எண்ணங்களையோ செயல்களையோ சிறப்பு என்று நாம் முடிவு செய்தாலும், ஆண்டவரின் பார்வையில் அது அற்பமாயும், கீழான ஒன்றாயும் அமையலாம். அதனால்தான் தாவீது, "ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டு விடு; அவர் உனக்கு ஆதரவளிப்பார்; அவர் நேர்மையாளரை ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார்" என்கிறார் (திருப்பாடல் 55:22).

*இவ்வாறு சொல்வது எளிது, ஆனால் அப்படி எதையும் நம்மால் விட்டுவிட முடிகிறதா? எந்தவொரு சிக்கலையும் தீர்க்க, நமக்குத் தெரிந்த அத்தனை வழிகளையும் முயன்று பார்ப்பதே நமது அன்றாடப் போராட்டமாக உள்ளது! அந்த வகையில், தனது அனுபவ முடிவாக பவுலடிகள் சொல்வதை நினைவில் நிறுத்துதல் நன்று: 'நமது எண்ணங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் வருமாறு கட்டாயப்படுத்துகிறோம்' (2 கொரிந்தியர் 10:5).*

***கிறிஸ்துவைத் தாண்டி எதனையும் எண்ணுவதில்லை என்று முடிவு செய்து விட்டால், வேறு விதமான எந்த முடிவையும் நாம் எடுக்க முடியாது அல்லவா!***

*வசனம் 16:1*
*பார்க்க, 1 சாமுவேல் 16:7.*

*வசனம் 16:2*
*வேறு சொற்களில், 21:2.*
*தங்கள் பார்வையில் மனிதர்கள் தங்கள் செயல்களில் தாங்களே சரியென்று உறுதியோடு இருப்பது, அவர்கள் சுயநீதியைச் சார்ந்தவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. கடவுளின் தூய நிலையில் தங்கள் செயல்களை அத்தகைய மனிதர்கள் மறு மதிப்பீடு செய்வதில்லை.*

*வசனம் 16:3*
*பார்க்க, திருப்பாடல் 37:5; 1 பேதுரு 5:7. இதன் அடிப்படையில் கிறிஸ்து இயேசுவின் வழிநடத்துதல், மத்தேயு 6:27&34.*

*வசனம் 16:4*
*சில பைபிள் அறிஞர்கள், சாலமோனின் நீதிமொழிகள் என்ற இந்தப் பகுதியின் (10:1 ~ 22:16) மைய வசனமாக இந்த வசனத்தைக் குறிப்பிடுகின்றனர். வெறுமனே, புள்ளிவிவர*

*அடிப்படையில் இவ்வாறு சொல்லப்படவில்லை என்பதை இந்த வசனம் நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது.*

*ஆண்டவர்தம் படைப்பு தெளிவான நோக்கோடு திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. எதுவும் தற்செயலானதோ, உடன் விளைவோ (incidental or side effect / by-product) அல்ல (பார்க்க, கொலோசையர் 1:16). அதன் அடிப்படையில்தான், பொல்லாரும் இருக்கின்றனர். படைப்பு அனைத்தும் கடவுளைப் போற்றுதல் போல (திருப்பாடல் 145:10), இன்றைக்குக் கீழ்ப்படியாத அவர்களும் வெற்றுச் சொற்களால் கடவுளைப் போற்றுவர். ஆனால் தீர்ப்பிட ஆண்டவர் வரும்போது அவர்கள் தீர்ப்புக்கு உள்ளாவர் (யோபு 21:30).*

*அப்படியானால், தீயோர் கடவுளால் அவ்வாறே படைக்கப்பட்டனர் என்று சொல்வோமா? அப்படியல்ல, நலமானவையே அவரிடமிருந்து வெளிப்பட முடியும் (யாக்கோபு 1:16:18). தாம் படைத்த மனிதரையும் அவர் நல்லோர் என்று கண்டாரே! (தொடக்க நூல் 1:27-31). அவர் மனிதரைச் சோதிப்பது இல்லை; மனிதர் தங்கள் தீய நாட்டங்களாலேயே சோதனைக்கு ஆளாகின்றனர் (சபை உரையாளர் 7:29; யாக்கோபு 1:13-15).*

*எவரும் பாவத்தோடு சாக வேண்டும் என்பது அவருடைய விருப்பம் அல்ல; மாறாக எல்லோரும் மனம் திருந்தி, நல்மனம் பொருந்துவதே அவருடைய கட்டளையாக இருக்கிறது (எசேக்கியேல் 33:11; திருத்தூதர் பணிகள் 17:30 & உரோமையர் 9:22).*

*வசனம் 16:5*
*பார்க்க, 6:17 & 15:12 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, 8:13; எசாயா 2:11-12.*

*ஆண்டவர் முன், தாவீது செய்த அறிக்கை, திருப்பாடல் 131:1-2.*
*ஆணவம் கொண்ட உசியா அரசனின் அழிவு, 2 குறிப்பேடு 26:16&20-21.*

*வசனம் 16:6*
*உண்மையில் மகிழ்வது அன்பு; அன்பு தீங்கு நினையாது (1 கொரிந்தியர் 13:4-7). திரளான பாவங்களைப் போக்குவது அன்பு (1 பேதுரு 4:8).*

*வசனம் 16:7*
*ஆண்டவருக்கு உகந்த செயல்களைச் செய்வோர், எதிர்ப்புகளையும் அடக்குமுறைகளையும் எதிர்கொள்ள நேரிட்டாலும், எதிர்பாராத இடங்களிலிருந்து நண்பர்களைப் பெறுவார்கள். மேலும் பார்க்க, தொடக்க நூல் 26:28-29, 32:6-7&33:4, 39:21; 2 குறிப்பேடு 14:2-7, 17:10; மத்தேயு 10:17-20; யோவான் 15:18-21; திருத்தூதர் பணிகள் 2:46-47; உரோமையர் 12:17-18; எபிரேயர் 12:14.*

*வசனம் 16:8*
*ஒப்பிடுக, 15:16. பார்க்க, திருப்பாடல் 37:16.*

*வசனம் 16:9*
*ஒப்பிடுக, 20:24; மேலும் பார்க்க, திருப்பாடல் 37:23-24; எரேமியா 10:23.*
*மனிதர்கள் பல்வேறு நிலைகளிலும் வழி அறியாமல் தடுமாறுகின்றனர். இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் வழியைத் திட்டமிடுவோரும் இடர்ப்பாடுகளை எதிர்கொள்ளும்போது தடுமாறுகின்றனர்.* ***தாம் உவகை கொள்ளும் நடத்தையைக் கொண்ட மனிதரின் காலடிகளை உறுதிப்படுத்துகிறவர் ஆண்டவரே!***

*வசனம் 16:10-15*
*அரசரின் தன்மைகளைக் குறிக்கும் ஐந்து வசனங்கள் (வ.11 நீங்கலாக). சாலமோன் உள்ளிட்ட*

*இஸ்ரயேலின் அரசர்கள் உட்பட, உலகில் நாடாண்ட மன்னர்கள் பலரும் இத்தன்மைகளைக் கொண்டு சிறந்து விளங்கியோராக இருந்திருக்க முடியாது. அப்படிப்பட்ட ஓர் அரசராக ஒருவர் திகழ முடியுமானால், அவர் அரசர்களின் அரசரான கிறிஸ்துவே! ஆனாலும், நாடாளுவோர் தங்களுக்குரிய பண்புகளாக இவைகளை வளர்த்துக் கொள்ளுதல் சிறப்பு. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினரான நாமும், அரசக் குருக்களின் கூட்டம் (இராஜரீகமான ஆசாரியக் கூட்டம்) என்ற பொறுப்புணர்வோடு, எண்ணம், சொல், செயலில் உயர்ந்த பண்புகளோடு இருப்பதுவே சிறப்பு.*

*வசனம் 16:10*
*அரசர்கள் கடவுளின் பிரதிநிதிகள் என்று போதிக்கப்பட்ட காலம்; அப்போதும், கடவுளின் ஊழியனாக அரசாண்ட தாவீது போன்ற வேறு எவரும் உண்டா? நெபுகத்னெச்சர் போல, தன்னையே கடவுளாக உயர்த்திக் கொண்டோரும் உண்டே. தீர்ப்பு வழங்கும் அரசர் (முடிவுகளை எடுக்கும் ஆள்வோர்) தவறு செய்ய மாட்டார் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் அளவுக்கு அரசரின் (ஆள்வோரின்) சொல் இருக்க வேண்டும் (பார்க்க, 1 அரசர்கள் 3:28).*

Δ
*"வாக்கு" –*
*OV, திவ்விய வாக்கு; KJV, divine sentence; ESV, oracle; NRSV, inspired decisions. எபிரேய மொழியில், keh-sem / கெஸெம்; குறிசொல்லுதல், சூனியம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல், இங்கு மட்டுமே நேர்மறையான பொருளில்.*

*வசனம் 16:11*
*பார்க்க, 11:1 மற்றும் குறிப்பு.*
*நிறுத்தலும் அளத்தலும் நாட்டில் முறையாக நடக்கிறதா என்று வணிகத்தைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உரியது என்ற*

*அளவில், இந்த வசனத்தையும் அரசரோடு இணைத்துப் பார்க்கலாம். அதேவேளையில்,* **"ஆண்டவருக்கே உரியன" என்கிற அழுத்தம் உணரத் தக்கது. தூயவருக்கான யாதொன்றும் தூயது; தூய்மையாகப் பேணத்தக்கது.** *இறைச் சட்டம் செயல்படத் தொடங்குவதே அடுத்து இருப்பவர் என ஒருவர் இருக்கும் போதே!*

*பையில் உள்ள எடைக் கற்கள், பார்க்க, மீக்கா 6:11.*

*வசனம் 16:12*
*ஒப்பிடுக, 20:8 & 25:5. பார்க்க, இறையாட்சியின் மாட்சி, திருப்பாடல் 97:1-2.*
Δ
*"நீதியே அரியணையின் உறுதியான அடிப்படையாகும்" –*
*எங்கே நீதி மறுக்கப்படுமோ அங்கே மக்களின் எதிர்ப்பும் கலகமும் பிறக்கும்; நினைவில் கொள்க: அப்சலோமின் கற்பிதமும் கலகமும், 2 சாமுவேல் 15:1-6 & 10-16.*

*வசனம் 16:13*
*துதிபாடிகள் நிறைந்த இடம் அரசவை. ஆனால் அரசருக்கு மிகவும் தேவை, நேர்மையோடு உண்மையை எடுத்துரைப்போர் (சான்றாக, யோவாபும் ஏனைய படைத் தலைவர்களும், 2 சாமுவேல் 24:3-4). இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன், கெடுப்பார் இலானும் கெடும் (குறள்#448).*

*வசனம் 16:14*
*இணைத்து வாசிக்க, 25:15. மேலும் பார்க்க, 15:1 மற்றும் குறிப்பு. ஒப்பிடுக, 19:12, 20:2. சான்றாக, மன்னரின் சீற்றத்தைத் தணித்த தானியேல், தானியேல் 2:12-18. சொலல் வல்லன், சோர்வு இலன், அஞ்சான் - அவனை வெல்லல் யார்க்கும் அரிது (குறள்#647). நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின், ஞாலம் விரைந்து தொழில் கேட்கும் (குறள்#648).*

*வசனம் 16:15*
*நிலமும் நிலம் சார்ந்த தொழில்களைச் சார்ந்த நாட்டிற்குப் பருவமழை இன்றியமையாத ஒன்று. மழைப்பொழிவு குறைவாக உள்ள நாடுகளில் இஸ்ரயேலும் ஒன்று. மழைக்கான மன்றாட்டு அங்கு வழக்கமான ஒன்று (செக்கரியா 10:1; மேலும் பார்க்க, இணைச் சட்டம் 11:14).*

*பருவத்தில் வரும் மழை மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், கடவுள் மீது புதிய நம்பிக்கையையும் தருவது. அத்தகைய மழைக்கால மேகத்தோடு அரசரின் கருணை ஒப்பிடப்படுகிறது, 19:12. மேலும் பார்க்க, 2 சாமுவேல் 23:3-4; திருப்பாடல் 72:6.*

*வசனம் 16:16*
*பார்க்க, 8:10-11&18-19 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, திருப்பாடல் 19:9-10, 119:72.*

*வசனம் 16:17*
*பார்க்க, 19:16 & 22:5.*

Δ

*"தன் நடையைக் குறித்து ... விழிப்புடன் இருப்பவன்..." –*
*நேர்மையாளராக ஒருவர் திகழ்வது மட்டுமல்ல, நேரிய வழியில் அவர் நடப்பது மட்டுமல்ல, வழியோரத் தடுமாற்றங்கள் ஏதுமின்றி, தொடங்கிய வழியை விட்டு விலகிவிடாமல், இறுதி இலக்கை நோக்கிக் கவனத்தோடு முன்னேற வேண்டும் (பிலிப்பியர் 3:14). தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின், கெடுவல் யான் என்பது அறிக (குறள்#116).*

*வசனம் 16:18*
*பார்க்க, 11:2 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, யாக்கோபு 4:6.*

*வசனம் 16:19*
*ஒன்றைவிட ஒன்று மேல் என்ற "ஒப்பீட்டு நீதிமொழிகளில்" இதுவும் ஒன்று; பார்க்க, 3:14, 8:10,11&19, 12:9, 15:16&17, 16:8,16,19&32, 17:1, 19:1&22, 21:9&19, 25:7&24, 27:5&10, 28:6. இதே உத்தியை, சபை உரையாளர் நூலிலும் சாலமோன் கையாண்டிருப்பதைக் காணலாம்.*

*கொள்ளைப் பொருளைப் பங்கிடுதல் என்பது போரில் வென்று திரும்புகையில் நிகழ்வது; அந்த வேளையில், கூடுதல் பங்கை ஈர்க்க, ஒருவரில் ஒருவர் தன் தன் வீரதீரச் செயல்கள் பற்றிய பெருமையும் பிதற்றலுமே விஞ்சி நிற்கும். ஒவ்வொருவரும் அடுத்தவரைப் பாராட்டுதலோ, விட்டுக் கொடுத்தலோ கொஞ்சமும் இருக்காது. தோற்றுத் திரும்பும் போதோ, அந்தச் சூழலிலும் தீரமாகச் செயல்பட்டோரைக் குறித்த பாராட்டும், இழப்புகளைக் குறித்த ஆறுதலும், அடுத்த வாய்ப்பில் சிறப்பாகச் செயல்பட ஊக்கமும் நிலவும். எதிர் எதிர் சூழல்களை ஒப்பிட்டு, சிறந்ததை விளக்குவதாக இந்த வசனம் உள்ளது.*

*வசனம் 16:20*
*பார்க்க, திருப்பாடல் 2:12, 34:8, 118:8-9; எரேமியா 17:7.*
Δ
*“போதனைக்குச் செவிகொடுப்பவன் வாழ்வடைவான்” –*
*பார்க்க, 1:32-33, 8:32&34 மற்றும் குறிப்புகள்.*

***செவிகொடுப்பவர் என்றால், அதன்படிச் செயல்படுபவர்.*** *கடவுள் அருளும் நல்வாழ்வை நோக்கிய நமது நெடும் பயணத்தில், நாம் எடுத்து வைக்கும் முதல் அடி, கீழ்ப்படிதல்.*

*வசனம் 16:21-24*
*விவேகமுள்ளோரின் மேன்மை.*

*வாழும் வரை கல். கற்றலே ஞானத்தைப் பெருக்கும்; புரிதலை வளர்க்கும். அவருக்கு மட்டுமன்றி, அவரைக் காண்போர்க்கும் அந்த ஞானமே வாழ்வளிக்கும் ஊற்று, 10:11, 13:14.*

*வசனம் 16:23*
*மனமும் சொற்களும், விரிவாக, 4:20-23.*

*வசனம் 16:24*
*பார்க்க, 2:10, 3:17, 24:13-14.*
*ஆண்டவரின் அருள்மொழிகளே தேனினும் தேனடையினின்று சிந்தும் தெளிதேனினும் இனிமையானவை, திருப்பாடல் 19:9-11.*

*வசனம் 16:25*
*பார்க்க, 8:36, 14:12 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 16:26*
*பார்க்க, சபை உரையாளர் 6:7; 2 தெசலோனிக்கர் 3:10-12. உணவும் உடையும் உறைவிடமுமே தேவை என்றிருந்த காலம் முடிந்து விட்டது. கல்வி, மருத்துவம், பொழுதுபோக்கு, தொடர்பு கருவிகள், வாகனங்கள் என்று தேவைகள் பெருகிவிட்ட காலத்தில், உழைப்புக்கான ஊக்கம் என்பதும் மாறியுள்ளது. ஆனால், ஆடம்பரம் அகற்றி / பகட்டின்றி, நமது ஊழியம் அல்லது வாழ்க்கைக்குப் போதுமான அளவில் வாழக் கற்றுக் கொள்ளுதலே நலம்.*

*வசனம் 16:27-30*
*அறுவகை ஆபத்தான மனிதர்கள்; நாம் எச்சரிக்கை உணர்வோடு தவிர்க்க வேண்டிய மனிதர்கள். மேலும் பார்க்க, 6:16-19.*

*வசனம் 16:27*
*பார்க்க, 17:9. விரிவாக அறிய, யோவான் 8:3-11.*
Δ

*கயவன் -*
*OV, பேலியாலின் மகன்; பார்க்க, 6:12-15 மற்றும் குறிப்பு.*
Δ
*"எரிக்கும் ... நாக்கு" –*
*பார்க்க, 26:18-19; யாக்கோபு 3:6.*

*வசனம் 16:28*
*புறங்கூறுதல், பார்க்க, 11:13, 18:8, 20:19, 26:20&22.*

*வசனம் 16:30*
*உடல்மொழி உணர்த்தும் கெடு மனம், 6:13.*

*வசனம் 16:31*
*கூடுதலாக, 20:29.*
*நரைமுடி மணிமுடியா?*
*அப்படி நாம் நம்புவோமானால், முடிக்கு வண்ணம் தீட்டும் தொழிலே இருக்காது.*

*நம்புங்கள்:*
*நரைமுடி மற்றோர் நம்மை மதிப்பிடும் மணிமுடி, லேவியர் 19:32.*

*வசனம் 16:32*
*பார்க்க, 14:17&29, 15:18, 19:2&11, 25:15, 29:11; திருப்பாடல் 40:1; சபை உரையாளர் 7:8; 1 கொரிந்தியர் 13:4. பொறுமை மிகவும் மேலான பண்பு; அது ஆவியின் கனிகளில் ஒன்று, கலாத்தியர் 5:22. மற்ற பண்பு நலன்களைக் காக்கும் பண்பு, பொறுமை. ஒருவர் பொறுமையை இழக்கும் போது, மற்ற நற்பண்புகளையும் இழந்து விடுவார். ஆண்டவரின் மிகப் பெரிய பண்பு, நீடிய பொறுமை - அதனால்தான் நாம் வாழ்கிறோம், 2 பேதுரு 3:9.*

*வசனம் 16:33*
*"திருவுளச் சீட்டு" –*
*முடிவெடுக்கும் ஒரு முறை.*

பழைய ஏற்பாட்டில் இந்த முறையின் பங்களிப்பு மிகுதி, சான்றாகப் பார்க்க: 18:18; லேவியர் 16:8; எண்ணிக்கை 26:55; நீதித் தலைவர்கள் 20:9; 1 சாமுவேல் 10:17-21; 1 குறிப்பேடு 24 ~ 25. நம் மண்ணிலும் குடவோலை முறை என்ற பெயரில் இதுபோன்ற தேர்ந்தெடுக்கும் முறை இருந்தது.

Δ

"மடியிலுள்ள..." –
உறுதியான தெளிவான விளக்கம் ஏதுமில்லை. “தலைமைக் குரு / பிரதான ஆசாரியன், தமது மேலாடையின் (ஏபோது) மடிப் பகுதியில், வெவ்வேறு வண்ணங்களில் வைத்திருக்கும் கூழாங்கற்களைப் பயன்படுத்தித் திருவுளம் அறிவார்” என்பது சரியாக இருக்கலாம்.

🕎

சீட்டுப் போட்டுத் திருவுளம் அறிதல் என்பது மோசேயின் காலம் தொட்டுப் பழைய ஏற்பாட்டு வழக்கம்:

* பலி ஆடை முடிவு செய்ய ஆண்டவர் மோசே வழியாகச் சீட்டுப் போடும் முறையை வழங்கினார் (லேவியர் 16:8).

* வாக்களிக்கப்பட்ட நாட்டைக் குலப் பெயர்கள் வாரியாக உரிமைப் பங்காகப் பிரிக்க, ஆண்டவர் திருவுளச் சீட்டு முறையை வகுத்தார் (எண்ணிக்கை 26:55). அதன்படியே யோசுவா பங்கிட்டு முடித்தார் (யோசுவா 18:10, 23:4).

* கிபயா நகருக்கு எதிராகப் போரிடச் செல்பவர்களை இஸ்ரயேலர் சீட்டுப் போட்டு முடிவு செய்தனர் (நீதித் தலைவர்கள் 20:9).

* இஸ்ரயேலின் முதல் அரசராக சவுலை ஆண்டவர் முன்னரே தெரிவு செய்த போதிலும், மக்கள் முன் திருவுளச் சீட்டு முறையில் அவரை அனைவரும் ஏற்றுக் கொள்ளச் செய்தார் (1 சாமுவேல் 10:17-21). திருவுளச் சீட்டு முறை சரியானது என்பதை இங்கு ஆண்டவர் உறுதிப்படுத்துகிறார்.

* பாவம் செய்தவன் யார் என்று அறிய, சவுல் இந்த முறையைப் பயன்படுத்தினார் (1 சாமுவேல் 14:40-42).
* திருக்கோவில் பணிகளை முடிவு செய்யவும், முறைப்படுத்தவும் இந்த முறை பயன்படுத்தப்பட்டது (1 குறிப்பேடு 24 ~ 25; நெகேமியா 10:34).
* விவாதத்தை இறுதி செய்ய சீட்டுப் போடும் முறை உதவியது (18:18).

புதிய ஏற்பாட்டிலும்:
* கிறிஸ்து இயேசுவின் உடையின் மீது சீட்டுப் போட்டார்கள் (மாற்கு 15:24).
* யூதாசுக்குப் பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுக்கச் சீட்டுப் போட்டார்கள் (திருத்தூதர் பணிகள் 1:26).

அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கடவுளிடம் விளைவை விட்டுவிடக் கூடிய, முழுமையும் நம்பிக்கையின்பாற்பட்ட ஒரு முடிவே திருவுளச் சீட்டு முறை.

Δ

நிகழ்தகவுக் கோட்பாடு (Theory of Probability) அல்லது சீட்டு விழுந்தவனுக்கு யோகம் என்ற எண்ணம் திருவுளச் சீட்டு முறைக்கு எதிராக ஒருவரின் மனதில் இன்று எழும் இடறல். இருப்பினும், நமது நாட்டில், தேர்தல்களில், இரண்டு பேர் சம எண்ணிக்கையில் வாக்குகள் பெற்று இருந்தால், திருவுளச் சீட்டு முறையே வெற்றியை முடிவு செய்யும்.

ஆனால் திருச்சபைகளில் இன்றைக்கு நாம் என்ன விதமாக முடிவுகளை எடுக்கிறோம்?
* ஆயக்குழுத் தேர்தலில் எந்த அடிப்படையில் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம்? அதில் ஜாதியின் பங்களிப்பு இல்லாமல் இருக்கிறதா? ஒரே ஜாதியிலும், அவன் சாத்தான்குளமா? திருநெல்வேலியா? தூத்துக்குடியா? நாசரேத்தா? நாகர்கோவிலா?

** எந்தத் திருச்சபைக்கு எந்த ஆயரை அனுப்புவது? அதில் பேராயர் மற்றும் ஆயர்களின் ஜாதிக் குழுக்களின் ஆதிக்கம்!*
** எந்தவொரு சிக்கலும் பேசித் தீரவில்லை என்றால், இருக்கவே இருக்கிறது நீதிமன்றம்!*
** மாடரேட்டர் தேர்தல்களில் புலங்கும் சூட்கேஸ்கள் / ஸ்வீட் பாக்ஸ்களுக்குக் கணக்கு என்ன?*
** சுயாதீனத் திருச்சபைகளில், குடும்பத்திற்கு வெளியிலிருந்து இடம்பெறும் டிரஸ்டீக்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு ஏதேனும் அதிகாரம் உண்டா?*

*இது சீட்டுப் போட்டுத் திருவுளம் அறியும் காலம் அல்ல. எல்லாருக்கும் தூய ஆவியார் அருளப்பட்டிருக்கிறார். எந்தச் சிக்கலையும் தீர்க்க, ஆவியாரை விடச் சிறந்தவர் எவரும் உண்டா? முதலில் ஜெபித்துவிட்டு, அப்புறம் முடிவு செய்யுங்கள் என்பதெல்லாம் பிரசங்க பீடத்தில் மட்டுமா?*

*உலகத்தினரின் உதவியால் தீர்க்கமுடியாத சிக்கலுக்கு மட்டும் கடவுளை நாடுவதை விடுவோம். தூங்குமுன் துதியும், தூங்கி எழுந்த பிறகு பைபிள் வாசிப்பும் மன்றாட்டும் நம் வழக்கமாகட்டும்.*

*இன்றைக்கு பைபிள் நம் கரங்களில்.*
*மன்றாடும் யாவருக்கும் தூய ஆவியார் (யோவான் 16:13) அருளப்பட்டிருக்கிறார்.*
*திருச்சபை ஆயினும், பணித்தளம் ஆயினும், பணியிடம் ஆயினும், இல்லம் ஆயினும் ஜெபிப்போம் - தெளிவான முடிவெடுப்போம்.*

*முழங்காலில் ஜெபம், குதிகாலில் ஜெயம்!*
*(சகோ. விக்டர் P லாரன்ஸ்)*

# 20 நீதிமொழிகள் 17

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 சண்டை நடக்கும் வீட்டில் விருந்துண்பதைவிட,*
*மன அமைதியோடு பழஞ்சோறு சாப்பிடுவதே*
*மேல்.*
*2 முதலாளியின் மகன் ஒழுக்கம்*
*கெட்டவனாயிருந்தால்,*
*அறிவுள்ள வேலைக்காரன் அவனை அடக்கி*
*ஆள்வான்;*
*ஏனைய சகோதரர்களோடு உரிமைச் சொத்தில் பங்கு*
*பெறுவான்.*
*3* ***வெள்ளியை உலைக்கலமும்***
***பொன்னைப் புடக்குகையும் சோதித்துப் பார்க்கும்;***
***உள்ளத்தைச் சோதித்துப் பார்ப்பவர் ஆண்டவர்.***
*4 தீங்கு விளைவிக்கும் பேச்சைத்*
*தீயவன் விருப்பத்தோடு கேட்பான்;*
*அவதூறான கூற்றினைப்*
*பொய்யன் ஆவலோடு கேட்பான்.*
*5* ***ஏழையை ஏளனம் செய்கிறவர்***
***அவரை உண்டாக்கினவரையே இகழுகிறார்;***
***பிறருடைய இக்கட்டைப் பார்த்து மகிழ்கிறவர்***
***தண்டனைக்குத் தப்பமாட்டார்.***
*6 முதியோருக்கு அவர்களுடைய பேரப்பிள்ளைகள்*
*மணிமுடி போன்றவர்கள்;*
*பிள்ளைகளின் பெருமை அவர்கள் தந்தையரே.*
*7 பயனுள்ள பேச்சுக்கும்*
*மதிகேடனுக்கும் தொடர்பேயில்லை;*
*பொய்யான பேச்சும்*
*அரசனுக்குப் பொருந்தவே பொருந்தாது.*
*8 கைக்கூலி கொடுப்பவர்*
*அதை ஒரு மந்திரத் தாயத்தைப் போலப்*
*பயன்படுத்துகிறார்;*
*அதைக் கொண்டு*

அவர் எடுத்த காரியமனைத்தையும்
நிறைவேற்றுவார்.
9 குற்றத்தை மன்னிப்பவர் நட்பை நாடுகிறவர்;
குற்றத்தைத் திரும்பத் திரும்ப நினைப்பூட்டுகிறவன்
நட்பை முறிப்பான்.
10 சொரணை கெட்டவனுக்கு நூறு அடி
கொடுப்பதைவிட
உணர்வுள்ளவருக்கு ஒரு சொல் சொல்வது
மிகுந்த பயனைத் தரும்.
11 தீயவர் கலகம் செய்வதையே நாடுவர்;
அவர்களை அழிக்கக் கொடிய தூதர்
அனுப்பப்படுவார்.
12 மடமையில் மூழ்கிக் கிடக்கும் மதிகேடனுக்கு
எதிர்ப்படுவது,
குட்டியைப் பறிகொடுத்த
கரடிக்கு எதிர்ப்படுவதைவிடக் கேடானது.
13 நன்மை செய்தவருக்கு எவர் தீமை செய்கிறாரோ,
அவர் வீட்டை விட்டுத் தீமை அகலாது.
14 வாக்குவாதத்தைத் தொடங்குவது
மதகைத் திறந்துவிடுவது போலாகும்;
வாக்குவாதம் மேலும் வளருமுன்
அதை நிறுத்திவிடு.
15 குற்றம் செய்தவரை நேர்மையானவரென்றும்,
நேர்மையானவரைக் குற்றம் செய்தவரென்றும்
தீர்ப்புக் கூறுகிறவர்களை ஆண்டவர்
அருவருக்கிறார்.
16 மதிகேடர் கையில் பணம் இருப்பதால்
பயனென்ன?
ஞானத்தைப் பெற்றுக்கொள்ளச் செலவிடுவாரா?
அவருக்குத் தான் மனமில்லையே!
17 நண்பன் எப்போதும் அன்பு காட்டுவான்;
இடுக்கணில் உதவுவதற்கே
உடன் பிறந்தவன் இருக்கின்றான்.
18 அடுத்தவர் கடனுக்காகப் பொறுப்பேற்று,
அவருக்காகப் பிணையாய் நிற்பவன்
அறிவில்லாதவனே.

*19 வாதத்தை நாடுகிறவன் குற்றப் பழியை நாடுகிறான்;*
*இறுமாப்பான பேச்சு இக்கட்டை வருவிக்கும்.*
*20 கோணல் மதியுள்ளவர் நன்மையைக் காணார்;*
*வஞ்சக நாவுள்ளவர் தீமையில் சிக்குவார்.*
*21 மதிகேடனைப் பெற்றவர் கவலைக்குள்ளாவார்;*
*மூடருடைய தகப்பனுக்கு மகிழ்ச்சியே இராது.*
*22 மகிழ்வார்ந்த உள்ளம் நலமளிக்கும் மருந்து;*
*வாட்டமுற்ற மனநிலை எலும்பையும் உருக்கிவிடும்.*
*23 கயவர் மறைவாகக் கைக்கூலி வாங்கிக்கொண்டு,*
*நியாயத்தின் போக்கையே மாற்றிவிடுவார்.*
*24 உணர்வுள்ளவர் ஞானத்திலேயே கண்ணாயிருப்பார்;*
*மதிகேடரின் கவனமோ நாற்புறமும் அலையும்.*
*25 மதிகெட்ட மகனால் தந்தைக்குக் கவலை;*
*பெற்ற தாய்க்குத் துயரம்.*
*26 நேர்மையானவருக்கு அபராதம் விதிப்பதும் நன்றல்ல;*
*மேன்மக்களுக்குக் கசையடி கொடுப்பதும் முறையல்ல.*
*27 தம் நாவைக் காத்துக்கொள்பவரே அறிவாளி;*
*தம் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்பவரே மெய்யறிவாளர்.*
*28 பேசாதிருந்தால் மூடனும் ஞானமுள்ளவன் என்று கருதப்படுவான்;*
*தன் வாயை மூடிக்கொள்பவன் அறிவுள்ளவன் எனப்படுவான்.*

*நீதிமொழிகள் 17:1-28*

## சிந்தனைக்கு

*வசனம் 17:1*

*அன்பால் கட்டப்படுவதே இல்லம். அன்பு குலைந்த இல்லத்தில், வேறு எந்த உயர்வும் கீழானதே! மாளிகையில் மிதமிஞ்சி எல்லாம் இருந்தாலும், அன்பு இல்லாவிட்டால், அது அந்தக் குடும்பத்தினரையே ஈர்க்காது.*

## *குறைவில் நிறைவு! நிறைவில் இராதது குறைவு!*

*வசனம் 17:2*
*ஒப்பிடுக, 11:29 மற்றும் குறிப்பு & 19:10.*
*ஒழுக்கக்கேடான மகன், பார்க்க, 10:1, 19:26, 28:7, 29:15.*
Δ
*"அறிவுள்ள வேலைக்காரன் ... உரிமைச் சொத்தில் பங்கு பெறுவான்" –*
*இதற்கு பைபிளில் சான்று ஏதுமில்லை. பண்டைய இஸ்ரயேலில் இதற்கு வாய்ப்புமில்லை (எண்ணிக்கை 27:7-11 & 36:2-9).*

*வசனம் 17:3*
*பார்க்க, திருப்பாடல் 26:2, 66:10; எரேமியா 17:10; மலாக்கி 3:3. ஒப்பிடுக, 27:21.*

*வசனம் 17:4*
*நேர்மையில் நாட்டம் உடையவர், ஞானியின் அறிவுரையை ஆர்வத்துடன் கவனிப்பார் (திருத்தூதர் பணிகள் 22:3). தீயோரும் அதுபோன்றே வளர்கின்றனர்.*

*வசனம் 17:5*
*பார்க்க, 14:31 மற்றும் குறிப்பு.*
*ஒடுக்கப்பட்டோரின் கடவுள் நமது ஆண்டவர், 15:25, 22:16&22-23.*

*வசனம் 17:6*
*பார்க்க, 127:3 & 128:3.*
*இல்லம் களிப்பின் இடம். ஒவ்வொரு உறவிலும் மகிழ்ச்சி.*

*முதிர் வயதினருக்கு அவர்களின் பேரன் பேத்திகளில் மகிழ்ச்சி. அச்சிறியோர் அவர்களுக்கு அவர்களின் மகனை / மகளை நினைவூட்டி, முதியோரை அவர்களின் இளமைக் காலத்திற்கு அழைத்துச் செல்வர். ஒவ்வொரு தலைமுறையும் அதற்கு அடுத்த*

*அல்லது முந்தைய தலைமுறையில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது. இது ஆண்டவர் அருளும் பரிசு.*

## *இல்லத்தின் தலைவராக இயேசு – இருந்தால் என்றும் இன்பமே!*

*வசனம் 17:7*

*ஒப்பிடுக, 16:10&13.*

*எப்படிப் பயனுள்ள பேச்சுக்கும் மதிகேடனுக்கும் தொடர்பிருக்க முடியாதோ, அதுபோலவே அரசனுக்கும் பொய்யான பேச்சுக்கும் தொடர்பு இருக்கக் கூடாது. பொய்மையை அரசன் / ஆட்சியாளன் தன்னை விட்டு விலக்கி வைக்க வேண்டும்.*

*வசனம் 17:8*

*பார்க்க, வ.23, 21:14. மேலும் பார்க்க, 15:27 மற்றும் குறிப்பு.*

*வசனம் 17:9*

*பார்க்க, 10:12&16:27 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, 1 கொரிந்தியர் 13:5-7.*

*குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை (பழமொழி). மன்னித்தலும் மறத்தலும் உறவைக் காக்கும். மன்னிக்காத ஒருவர் மன்னிப்புக் கோரும் தகுதியை இழக்கிறார் (மத்தேயு 6:12). மன்னித்தால் மட்டுமே மன்னிப்பைப் பெறுவோம் (மத்தேயு 6:14-15). நாம் வாழ்வது வெறுமனே ஒரு வாழ்க்கை அல்ல - அது மன்னிப்பின் ஊழியம் (2 கொரிந்தியர் 5:18-20).*

## *அன்பு இல்லாமல் மன்னிப்பு இல்லை; மன்னிப்பு இல்லாமல் ஒப்புரவாகுதல் இல்லை!*

*வசனம் 17:10*

*வேறு மொழியில், 9:8&9, 10:17.*

Δ

*"நூறு அடி" –*
*மோசேயின் திருச்சட்டத்தை மீறுவது சாலமோனின் நோக்கம் அன்று (இணைச் சட்டம் 25:3).*

*உணர்வுள்ளோருக்கு அறிவுறுத்த, அன்புடையோரின் ஒரு முகக் குறிப்பே போதும்.*

*வசனம் 17:11*
*நீதியை நிலைநாட்டுவதற்கு ஏற்ற தூதர் அனுப்பப்படுவார் (16:14ஆ; 1 அரசர்கள் 2:25). வருகையைக் குறித்துக் கிறிஸ்து இயேசுவின் உவமை, பார்க்க, லூக்கா 20:9-16.*

*வசனம் 17:12*
*"குட்டியைப் பறிகொடுத்த கரடி" –*
*பார்க்க, 2 சாமுவேல் 17:8; ஒசேயா 13:8.*

*எதிர்கொள்ள ஆபத்தான, வெறிகொண்ட, மூர்க்கமான தாய்க் கரடி.*
*கரடியால் உங்கள் உடலை மட்டுமே தாக்க முடியும்; ஆனால் மதிகேடரால் வரும் துயர் எத்தகையது என்று முடிவு செய்ய இயலாது!*

*வசனம் 17:13*
*நன்மைக்குத் தீமை செய்தல், 1 சாமுவேல் 19:4; திருப்பாடல் 35:12, 38:20, 109:4-5; எரேமியா 18:20.*

*தீமைக்கும் நன்மை செய்தலே நம்மிடம் ஆண்டவர் எதிர்பார்ப்பது, லூக்கா 6:27-31&35-36. மேலும் பார்க்க, உரோமையர் 12:17; 1 தெசலோனிக்கர் 5:15; 1 பேதுரு 3:9.*

*கண்ணுக்குக் கண் என்பது உலகோரைப் பார்வையற்றோராக மாற்றிவிடும் (காந்தியடிகள்).*

*வசனம் 17:14*
*பார்க்க, 20:3.*

முடிவெடுக்க நடப்பது விவாதம்; முட்டுச் சந்தில் நிறுத்துவது வாக்குவாதம். சமூக வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், அரசியலுக்கும் இது பொருந்தும். கடந்த சில ஆண்டுகளாகவே, நமது நாடாளுமன்றம் இதற்குச் சிறந்த சான்று. ஒடுக்கப்பட்ட மக்களையும் விட்டு வைக்காமல், கசக்கிப் பிழிந்து பெறப்படும் வரிப்பணம் இவ்வாறு நெறியற்ற முறையில் விரயமாக்கப்படுகிறது.

வசனம் 17:15
பார்க்க, 3:32 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 18:5, 24:23-25; விடுதலைப் பயணம் 23:7; இணைச் சட்டம் 25:1; திருப்பாடல் 94:20-21; எசாயா 5:23.

நேர்மையற்ற தீர்ப்பை ஆண்டவர் அருவருக்கிறார். உலகனைத்தும் அதனை வெறுக்கும்.

நீதிபதிகள் தீர்ப்பளிக்கிறார்கள், ஆனால் தீர்ப்பில் நீதி இருக்கிறதா?
ஒரு தலைமை நீதிபதி பணி ஓய்வுக்குப் பிறகு, சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக விரும்புகிறார் என்றால் -ஏதேனும் ஒரு பதவியில் சாகும் வரை தொடர விரும்புகிறார் என்றால்- அவர் எப்படிப்பட்ட நீதியைத் தன் பணிக்காலத்தில் வழங்கியிருப்பார்? அவர் கடவுளின் பார்வையில் எப்படி மதிப்பிடப்படுவார்? இன்று உலகு அவரை எப்படிக் கருதுகிறது?

வசனம் 17:16
ஒப்பிடுக, 4:7, 23:23.

வசனம் 17:17
நண்பர்கள், யோவான் 15:13-15.
சகோதரர்கள் என்ற சொல் பைபிளில் அகண்ட பொருள் தருவது, திருப்பாடல் 133:1. பழைய ஏற்பாட்டில், யாக்கோபின் வழி வந்த அனைவரும்

*சகோதரர்; அதுவே திருக்கோவிலில், திருநாளில் திரளும் கூட்டம். புதிய ஏற்பாட்டில், நமது நம்பிக்கையின் அடிப்படையில், கடவுளை ஏற்றுக் கொள்ளும் யாவரும், அவருடைய மக்கள்; கிறிஸ்து இயேசுவின் உடன் பிறப்புகள் (மத்தேயு 12:49-50, 28:10; எபிரேயர் 2:11-12).*

***நாம் அனைவரும் சகோதரர்கள் என்ற நல்லுறவு திருச்சபைக்குள் நிலவுகிறதா?***

*வசனம் 17:18*
*பிணை நிற்றல் –*
*பார்க்க, 6:1 மற்றும் குறிப்பு.*

*வசனம் 17:19*
*பார்க்க, வ.14.*
Δ
*இறுமாப்பு –*
*பார்க்க, 11:2 & 16:5 மற்றும் குறிப்புகள்.*
Δ

*"இறுமாப்பான பேச்சு..." –*
*OV, தன் வாசலை உயர்த்திக் கட்டுகிறவன்; பழைய மொழிபெயர்ப்பு நேரடிப் பொருளிலும், பொது மொழிபெயர்ப்பு, வசனத்தின் பொருள் அடிப்படையிலும் உள்ளன.*

*வசனம் 17:20*
*ஒப்பிடுக, 16:20.*
Δ
*"வஞ்சக நாவு" –*
*OV, புரட்டு நாவு; பார்க்க, 2:12.*

*வசனம் 17:21 ~ 19:13*
*மதிகேடர் / மூடரால் மற்றவர்களுக்கு வரக்கூடிய துயரங்கள் குறித்த வசனங்கள் உள்ள ஒரு பகுதி.*

*வசனம் 17:21&25*
*பார்க்க, 10:1 மற்றும் குறிப்பு.*
*வ.21ல், மதிகேடு என்பதற்கு kes-eel / கேஸீல் என்ற பதமும், மூடர் என்பதற்கு naw-bawl / நாபால் என்ற பதமும் மூலமொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முந்தையது "மந்த அறிவுடைய" என்றும், பிந்தையது "ஆவிக்குரிய உணர்வற்ற" என்றும் பொருள்படும்.*

*வசனம் 17:22*
*பார்க்க, 12:25 & 15:13 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 17:23*
*ஒப்பிடுக, வ.8 மற்றும் குறிப்பு.*
*வ.15ல் நீதித் தலைவர்களைக் குறித்துச் சொன்ன சாலமோன், கையூட்டு வாங்கிக் கொண்டு, நியாயம் உரியவருக்கு மறுக்கப்படுவதை இங்கு சொல்கிறார். பொய்ச்சான்று சொல்கிறவரும் இதில் அடங்குவார். சாட்சி இன்றி அல்லது ஆதாரமின்றி எந்தத் தீர்ப்பும் அமைய முடியாது (எண்ணிக்கை 35:30; இணைச் சட்டம் 17:6, 19:15; மத்தேயு 18:16).*

Δ

*"மறைவாக" –*
*OV, மடியிலுள்ள; மூலச்சொற்களின் அடிப்படையில், மார்பு.*

*வசனம் 17:24*
*பார்க்க, 2:1-5 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, 8:8-9, 14:6.*
*இந்த வசனத்தில், கூடுதலாக வலியுறுத்தப்படுவது, கவனக் குவிப்பு.*
*ஞானத்தை அடைவதில் மட்டுமல்லாமல், அதன்படி நடப்பதிலும் குறியாக இருத்தல்.*

*வசனம் 17:26*
*நீதி என்பது குற்றம் தீர்த்தல். தண்டனை என்பது குற்றத்தின் விளைவு. வ.15துடன் இணைத்து வாசிக்க.*

*வசனம் 17:27*
*நாவைக் காத்தல், 10:19, 13:3 & 16:32 மற்றும் குறிப்புகள்.*
Δ
*"உணர்ச்சிகளை அடக்கிக் கொள்பவர்" –*
*OV, குளிர்ந்த மனமுள்ளவன்.*
*உணர்ச்சிகளை அடக்குதல் என்பது தன்னைத் தானே அடக்குதல்.*

*உணர்வடைதல் வேறு - உணர்ச்சிவயப்படுதல் வேறு. உணர்வடைதல், கண்டும், கேட்டும், கற்றும் அறிந்தவற்றைத் தன்வயப்படுத்தி வாழ்தல். ஆனால் உணர்ச்சிகள் உயிரோடு தொடர்புடையவை, இரண்டும் பிரிக்க முடியாதவை. உணர்ச்சிகளில் நல்லவையும் உண்டு, தீயவையும் உண்டு. தீயவை தீயன பயத்தலால், அவற்றை அடக்குதல் அவசியமாகிறது.* **எவையெல்லாம் தீது என்று நமக்குக் கற்பிப்பதே இறைச் சட்டம். தீதை அடக்கத் தூண்டுவதே இறையச்சம்.** *தீய உணர்ச்சிகளை அறிந்து அடக்குபவரே மெய்யறிவுடையோர் - அடக்காதோர், மூடரும் கயவரும். ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப் பேதையின் பேதையார் இல் (குறள்#834).*

*வசனம் 17:28*
*உண்மைக்கு மாறாகப் பிதற்றிய தன் நண்பர்களுக்கு யோபின் கிண்டலான ஆலோசனை, யோபு 13:5. ஒப்பிடுக, சபை உரையாளர் 10:3&14.*

*முந்தைய வசனத்தோடு தொடர்புடைய வசனம். ஓடாத கடியாரமும் ஒரு நாளில் இரண்டு முறை சரியான நேரம் காட்டும் என்பர்! அதுபோன்றதுதான், ஓர் அவையில், பேசாதிருக்கும் மூடனின் நிலை!*

✝

# 20 நீதிமொழிகள் 18

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 பிறரோடு ஒத்துவாழாதவர் தன்னலத்தை நாடுகின்றார்;*
*பிறர் கூறும் தக்க அறிவுரையும் அவருக்கு எரிச்சலை உண்டாக்கும்.*
*2 மதிகேடர் எதையும் அறிந்து கொள்ள விரும்பமாட்டார்;*
*தம் மனத்திலுள்ளதை வெளியிடவே விரும்புவார்.*
*3 கயமையும் இழிவும் சேர்ந்தே வரும்;*
*மதிப்பை இழப்பவர் இழிசொல்லுக்கு ஆளாவார்.*
*4 மனிதரின் சொற்கள் ஆழ்கடல் போன்றவை,*
*அவை பாய்ந்தோடும் ஒரு நீரோட்டம்,*
*ஞானம் சுரக்கும் ஊற்று.*
*5 பொல்லாருக்குக் கருணை காட்டுவது முறையல்ல;*
*நேர்மையானவருக்கு நீதி கிடைக்காமல் தடுப்பது நேரியதல்ல.*
*6 மதிகேடர் பேசத் தொடங்கினால் வாக்குவாதம் பிறக்கும்;*
*அவரது பேச்சு அவருக்கு அடிவாங்கித் தரும்.*
*7 மதிகேடர் தம் வாயால் அழிவார்;*
*அவர் பேச்சு அவர் உயிருக்கே கண்ணியாகிவிடும்.*
*8 புறணி கேட்பது பலருக்கு அறுசுவை உண்டி உண்பது போலாம்;*
*அதை அவர்கள் பேராவலோடு விழுங்குவார்கள்.*
*9 தன் வேலையில் சோம்பலடைகிறவன்*
*அழிவை உண்டாக்குகிறவருக்கு உடன் பிறந்தவன்.*
*10 ஆண்டவரது திருப்பெயர் உறுதியான கோட்டை;*
**அவருக்கு அஞ்சி நடப்பவர்** *அதனுட் சென்று அடைக்கலம் பெறுவார்.*
*11 செல்வர் தம் செல்வத்தை அரண் என்றும்*
*உரமான மதில் என்றும் எண்ணிக்கொள்கிறார்.*
*12 முதலில் வருவது இறுமாப்பு;*
*அதனை அடுத்து வருவது அழிவு;*

*மேன்மை அடையத் தாழ்மையே வழி.*
*13 வினாவைச் செவ்வனே கேட்பதற்குமுன்*
*விடையளிப்பவர்களுக்கு*
*அச்செயலே அவர்களுக்கு மடமையும் இகழ்ச்சியும்*
*ஆகும்.*
*14 மன வலிமை நோயைத் தாங்கிக்கொள்ளும்;*
*மனம் புண்பட்டால் அதைக் குணப்படுத்த யாரால்*
*இயலும்?*
*15 உணர்வுள்ளவர் மனம், அறிவைப்*
*பெருக்கிக்கொள்ளும்;*
*ஞானமுள்ளவர் செவி, அறிவுபெறுவதில்*
*நாட்டங்கொள்ளும்.*
*16 ஒருவர் கொடுக்கும் அன்பளிப்பு*
*அவருக்கு நல்வழி பிறக்கச் செய்யும்,*
*அவரைப் பெரியோர்முன் கொண்டு போய்ச்*
*சேர்க்கும்.*
*17 வழக்கில் எதிரி வந்து குறுக்குக் கேள்வி கேட்கும்*
*வரையில்*
*வாதி கூறுவது நியாயமாகத் தோன்றும்.*
*18 திருவுளச் சீட்டு விவாதத்தை முடிவுறச் செய்யும்;*
*வாதிடும் வலியோரின் வழக்கைத் தீர்க்கும்.*
*19 உன் இனத்தானுக்கு உதவி செய்,*
*அவன் உனக்கு அரணாயிருப்பான்;*
*அவனோடு நீ சண்டையிட்டால்*
*அவன் கதவைத் தாழிட்டுக் கொள்வான்.*
*20 ஒருவர் நாவினால் எதை விதைக்கிறாரோ*
*அதையே உண்பார்;*
*தம் பேச்சின் விளைவையே அவர் துய்த்தாக*
*வேண்டும்.*
*21 வாழ்வதும் நாவாலே,*
*சாவதும் நாவாலே;*
*வாயாடுவோர் பேச்சின் பயனைத் துய்ப்பர்.*
*22 மனைவியை அடைகிறவன் நலமடைவான்;*
*அவன் ஆண்டவரது நல்லாசியையும் பெறுவான்.*
*23 ஏழை கெஞ்சிக் கேட்பார்;*
*செல்வரோ கடுகடுப்புடன் மறுமொழி கொடுப்பார்.*
*24 கேடு வருவிக்கும் நண்பர்களுமுண்டு;*

*உடன்பிறந்தாரைவிட மேலாக*
*உள்ளன்பு காட்டும் தோழருமுண்டு.*

*நீதிமொழிகள் 18:1-24*

## சிந்தனைக்கு

*வசனம் 18:1*
*தன்னலம் நாடுவோர் உறவுகளைப் பேணார்!*

*வசனம் 18:2*
*பார்க்க, 12:23 மற்றும் குறிப்பு; சபை உரையாளர் 5:3, 10:3.*
*மூடிய செவிகள், திறந்த உதடுகள்!*
*மூடனின் உதடுகளில் வெளிப்படுவது, மடமை (15:2ஆ); மேலும் பார்க்க, வ.6-7. ஒப்பிடுக, 17:28.*

*வசனம் 18:3*
*ஒப்பிடுக, 11:2.*
*இங்கு மறைபொருளாக இருப்பது, பாவ வாழ்க்கை; பாவத்தில் நிலைப்பவர் அடைவது இழிநிலை.*

*வசனம் 18:4*
*ஒப்பிடுக, வ.6-7. பார்க்க, 10:11 மற்றும் குறிப்பு; யாக்கோபு 3:17.*
*ஞானிகளின் சொற்கள் ஆழ்கடல் போன்றவை; அவற்றில் ஆழ்ந்த பொருள் உண்டு. சுரந்து ஓடும் நீரூற்று போல், ஞானிகளின் சொற்கள் புதியவை, புத்துயிர் அளிப்பவை.*

**பைபிளைத் தவிர வேறெங்கு இத்தகைய சொற்களைப் பெற முடியும்!**
*(எசாயா 55:1&3; யோவான் 7:38).*

*வசனம் 18:5*
*பாகுபாடு காட்டுவது கண்டிக்கத்தக்கது, 17:15,23&26, 24:23-24, 28:21.*

*கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை (உரோமையர் 2:11).*

*வசனம் 18:6-8*
*கேடு விளைவிக்கும் மூடத்தனமான பேச்சு. பார்க்க, 10:13-14, 12:13, 13:3, 14:3 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 18:6*
*பார்க்க, 17:14.*

*வசனம் 18:7*
*பார்க்க, 12:13 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, சபை உரையாளர் 10:12ஆ.*

*வசனம் 18:8*
*இணை, 26:22. பார்க்க, 11:13 மற்றும் குறிப்பு & 16:28ஆ, 26:20.*
*இரண்டு பேரோ அதற்கு மேற்பட்டோரோ இணைந்தால், அங்கு இல்லாத ஒருவரைக் குறித்துக் குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும். அது எந்த வகையிலும், யாருக்கும் உதவப் போவதில்லை; மாறாக உறவுகளைச் சிதைக்கும். மேலும், அவரைக் குறித்து நாம் குற்றம் தீர்ப்பதால், அதில் தொடர்புடைய ஒவ்வொருவரும் அதுபோலவே தீர்க்கப்படுவர்.*

*வசனம் 18:9*
*பார்க்க, 6:9-11.*
*சோம்பலும் அழிவும் இரட்டையர்கள். அவற்றில், சோம்பலே மூத்தது!*

*வசனம் 18:10-11*
*பார்க்க, 10:15, 11:4&28; திருப்பாடல் 61:3. ஒப்பிடுக, 29:25. நினைவில் வைக்க, மாற்கு 10:24-25.*
*தன் சுகமான சுமைகளைச் சுமந்துகொண்டு எவரும் ஆண்டவரைச் சேர்ந்து கொள்ள முடியாது; மாறாக, தன்னையே வெறுமையாக்கி, ஒன்றும் அற்றவராக*

*அவரைச் சரணடைவோருக்கே அவர்தம் அடைக்கலம் கிட்டும் (பிலிப்பியர் 3:4-8); அங்கு உள்ளே நுழைவதற்கான கடவுச்சொல், இ-யே-சு! (யோவான் 14:6).*

*வசனம் 18:12*
*பார்க்க, 11:2 & 15:33 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 18:13*
*பதில்தருமுன், முழுமையாகக் கேட்பதும், நிதானித்துச் சொல்லுவதும் நல்லது. பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார், இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர் (குறள்#417).*

*வசனம் 18:14*
*பார்க்க, 12:25 மற்றும் குறிப்பு. புதை அம்பின் பட்டுப் பாடு களிறு ஊன்றும்; உரவோர் சிதைவிடத்து ஒல்கார் (குறள்#597).*

*வசனம் 18:15*
*பார்க்க, 4:4-9 மற்றும் குறிப்புகள்.*
Δ
*"செவி அறிவு பெறுவதில்..." –*
*கற்றலின் கேட்டல் நன்று. செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம். கற்றிலன் ஆயினும் கேட்க, அஃது ஒருவற்கு, கொற்கத்தின் ஊற்றாம் துணை (குறள்#414).*

*வசனம் 18:16*
*"அன்பளிப்பு" –*
*OV, வெகுமதி; மூலமொழியில், mat-tawn / மட்டான்; இது, அன்பளிப்பு (18:16), பரிசில், நன்கொடை (19:6 & 21:14) என்று பொருள்படும்.*
*அன்பளிப்பும் நன்கொடையும் சரியானது என்று தோன்றும். நீதிமொழிகள் நூலில், அது சரியான செயலாகப் பார்க்கப்படவில்லை என்பது ஆழ்ந்த வாசிப்பில் விளங்கும்.* ***பயன் கருதி வழங்கும் எதுவும் தவறானதே!*** *நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால்,*

*அந்நன்றி என்று தருங்கோல் என வேண்டா (மூதுரை#1).*

*எண்ணிப் பாருங்கள்: நமது திருச்சபையில் ஓர் ஏழை விசுவாசியின் இல்லத் திருமணத்திற்கு நாம் என்ன பரிசு தருவோம்?*
*செல்வரான விசுவாசியின் இல்லத் திருமணத்திற்கு என்ன பரிசு தருவோம்?*
🕎
*பயன் கருதி நன்கொடை வழங்கும் இதுபோன்ற வழக்கம், இன்று தேர்தல் பத்திரங்கள் என்ற மாபெரும் முறைகேட்டில் இந்த நாட்டை நிறுத்தியுள்ளது.*

*வசனம் 18:17*
*பார்க்க, வ.13. முழுமையாகக் கேட்காத ஒரு நிலையை இந்த வசனம் முன்வைக்கிறது.*

*பிரதிவாதியின் நியாயத்தைக் கேட்கும்வரை, வாதியின் தரப்பே சரி என்பது போலத் தோன்றும்; கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய் (25:2ஆ).*

*நீதிமன்ற நடைமுறைகளுக்கு மட்டுமல்ல; இன்றைய சமூக ஊடகங்களில் கொட்டிக் கொண்டிருக்கும் "செய்திகளுக்கும்" இது பொருந்தும்.*

*வசனம் 18:18*
*பார்க்க, 16:33.*
*வ.17ன் பொருளில் தொடரும் வசனம்; பார்க்க, இணைச் சட்டம் 1:16-17.*
*இரு தரப்பினரும் வலுவான வாதங்களை வைக்கும்போது, உண்மையைக் கண்டறிய முடியாத நிலையில், இரு சாராருக்கும் நடுவே அமைதியை ஏற்படுத்த, ஒரு முடிவை எடுத்தே ஆக வேண்டும் என்ற நிலையில், இறைவேண்டலின் அடிப்படையிலான திருவுளச் சீட்டு வழங்கும் நீதியே*

*இறைவழிகாட்டலாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

*வசனம் 18:19*

*வேறு மூலத்தின் வழியில் இந்த வசனம்: "அரண்சூழ் நகரைக் கைவசப்படுத்துவதை விட, சினங்கொண்ட சகோதரனைத் தன்வயப்படுத்துவது கடினம்; அவனது பகைமை, கோட்டைத் தாழ்ப்பாள்களைப் போன்றதாகும்." பவர் மொழிபெயர்ப்பு இந்த அடிப்படையில் உள்ளது.*

*உடைந்த உறவைப் புதுப்பிப்பது எவ்வளவு அரிது என்பதை இங்கு சாலமோன் குறிப்பிடுகிறார். ஆனால் மெய்யான "அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மனவுறுதியாய் இருக்கும்" (1 கொரிந்தியர் 13:7).*

*வசனம் 18:20-21*

*பார்க்க, 10:11&19 மற்றும் குறிப்புகள்.*

*கிறிஸ்து இயேசுவின் அருள்மொழி, மத்தேயு 12:37.*

*வசனம் 18:22*

*பார்க்க, 12:4, 19:14, 31:10. மேலும் பார்க்க, 31:10-31 குறிப்பு.*

*விவேகமுள்ள மனைவியை அடைவதே ஆண்டவரின் நல்லாசிதான்!*

*நல்ல மணப்பெண்ணைத் தேடுவதும் முடிவு செய்வதும் மிகவும் கடினமான ஒன்று. இன்றைக்கு இது மணமகனுக்கும் பொருந்தும். "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது" என்பதே பலரின் மெய்யான சாட்சியாக இருக்கும்.*

*வசனம் 18:23*

*பார்க்க, 14:20,21&31 மற்றும் குறிப்புகள்.*

*ஏழையும் செல்வனும் குறித்த தெளிவான விளக்கத்திற்கு வாசிக்க, யாக்கோபு 2:1-9.*

*வசனம் 18:24*
*பார்க்க, 17:17 மற்றும் குறிப்பு.*
*உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா - உடன்பிறந்தே கொல்லும் வியாதி; உடன்பிறவா மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும் - அம்மருந்து போல்வாரும் உண்டு (மூதுரை#20).*

*தொடர்புகள் அமையும் போதே, நட்பைத் தெரிவு செய்வதில் கவனமாக இருத்தல் நலம். சிக்கல் வந்த பிறகு, எவரால் வந்தது என்று எண்ணிப் பார்ப்பதில் பயன் இராது. வியத்தகு நண்பர் ஆண்டவரே, (எசாயா 41:8-9; மத்தேயு 11:19).*

✝

# 20 நீதிமொழிகள் 19

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 முறைகேடாய் நடக்கும் செல்வரைவிட,*
*மாசற்றவராய் இருக்கும் ஏழையே மேல்.*
*2 எண்ணிப் பாராமல் செயலில் இறங்குவதால்*
*பயனில்லை;*
*பொறுமையின்றி நடப்பவர் இடறிவிழுவார்.*
*3 மனிதர் தம் மடமையாலேயே*
*வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வர்;*
*ஆனால் அவர்கள் ஆண்டவர்மீது சினங்கொண்டு*
*குமுறுவர்.*
*4 பணம் உடையவருக்கு நண்பர் பலர் இருப்பர்;*
*ஏழைக்கு இருக்கும் ஒரே நண்பரும் அவரை விட்டுப்*
*பிரிவார்.*
*5 பொய்ச் சான்று சொல்பவர் தண்டனைக்குத்*
*தப்பமாட்டார்;*
*பொய்யுரையே கூறுபவர் தப்பித்துக்*
*கொள்ளமாட்டார்.*
*6 வள்ளலின் தயவை நாடி வருவோர் பலர்;*
*நன்கொடையாளருக்கு எல்லாருமே நண்பர்.*
*7 வறியவரை அவருடைய உடன்பிறந்தாரே*
*வெறுப்பர்;*
*அவருடைய நண்பர் அவரைவிட்டு*
*அகலாதிருப்பரோ?*
*அவர் கெஞ்சி வேண்டினாலும் அவர்கள்*
*ஓடிவிடுவார்கள்.*
*8 ஞானத்தைப் பெறுதலே உண்மையான*
*தன்னலமாகும்;*
*மெய்யறிவைப் பேணிக்காப்பவர் நன்மை*
*அடைவார்.*
*9 பொய்ச் சான்று சொல்பவர் தண்டனைக்குத்*
*தப்பமாட்டார்;*
*பொய்யுரை கூறுபவர் அழிந்து போவார்.*
*10 அரண்மனை வாழ்வு அறிவிலிக்கு அடுத்ததல்ல;*

*மேலானோரை ஆளும் பதவி அடிமைக்குச் சற்றும் ஏற்றதல்ல.*
*11 விவேகமுடையோர் எளிதில் சினமடையார்;*
*குற்றம் பாராதிருத்தல் நன்மதிப்பைத் தரும்.*
*12 அரசரின் சீற்றம் சிங்கத்தின் முழக்கம் போன்றது;*
*அவர் காட்டும் கருணை பயிர்மீது பெய்யும் பருவ மழைக்கு ஒப்பாகும்.*
*13 மதிகெட்ட மகனால் அவன் தந்தைக்குக் கேடு வரும்;*
*மனைவியின் நச்சரிப்பு,*
*ஒட்டைக் கூரையினின்று ஓயாது ஒழுகும் நீர் போன்றது.*
*14 வீடும் சொத்தும் ஒருவனுக்கு வழிவழிச் சொத்தாய் வரலாம்;*
*ஆனால், விவேகமுள்ள மனைவியோ ஆண்டவர் அளிக்கும் கொடை.*
*15 சோம்பல் ஒருவரைத் தூங்கிக் கொண்டே இருக்கச் செய்யும்;*
*சோம்பேறி பசியால் வருந்துவார்.*
*16 திருக்கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறார்;*
*ஆண்டவருடைய வழிகளைக் கவனியாது நடப்பவர் அழிந்து போவார்.*
*17* ***ஏழைக்கு இரங்கி உதவிசெய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்;***
***அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார்.***
*18 மகன் திருந்துவான் என்கிற நம்பிக்கை இருக்கும்போதே*
*அவனைக் கண்டித்துத் திருத்து;*
*இல்லாவிடில், அவன் கெட்டழிந்து போவதற்கு நீ காரணமாயிருப்பாய்.*
*19 கடுஞ்சினங்கொள்பவர் அதற்குரிய தண்டனையைப் பெறவேண்டும்.*
*இக்கட்டினின்று அவரை விடுவிப்பாயானால், மீண்டும் அவ்வாறே செய்ய வேண்டியிருக்கும்.*

20 அறிவுரைக்குச் செவிகொடு, கண்டிப்பை
ஏற்றுக்கொள்;
பின்வரும் காலமெல்லாம் ஞானமுள்ளவனாய்
வாழ்வாய்.
21 **மனிதர் மனத்தில் எழும் எண்ணங்கள் ஏராளம்;
ஆனால் ஆண்டவரது திட்டமே நிலைத்து நிற்கும்.**
22 _நற்பண்பாளர் வாக்குப் பிறழாமையை நாடுவர்.
_பொய்யராயிருப்பதைவிட ஏழையாயிருப்பதே
மேல்.
23 ஆண்டவருக்கு அஞ்சி நடந்தால் ஆயுள் நீடிக்கும்;
அவ்வாறு நடப்பவருக்கு மனநிறைவு கிட்டும்;
தீங்கும் அவரை அணுகாது.
24 சோம்பேறி உண்கலத்தில் கையை இடுவார்;
ஆனால் அதை வாய்க்குக் கொண்டுபோகச்
சோம்பலடைவார்.
25 ஏளனம் செய்வோரை அடி;
அதைக் காணும் பேதையராவது படிப்பினை
பெறுவர்;
உணர்வுள்ளவரைக் கடிந்துகொள்,
அவர் மேலும் அறிவுடையவராவார்.
26 தந்தையைக் கொடுமைப்படுத்தித்
தாயைத் துரத்திவிடும் மகன்,
வெட்கக்கேட்டையும் இழிவையும்
வருவித்துக்கொள்வான்.
27 பிள்ளாய், நல்லுரை கேட்பதை நிறுத்தாதே;
நிறுத்தினால்
அறிவுதரும் நன்மொழிகளைப் புறக்கணிக்கிறவன்
ஆவாய்.
28 தீக்குணமுள்ள சாட்சி நியாயத்தை மதிக்காதவர்.
பொல்லாரின் சான்று குற்றத்தைப் பெருகச் செய்யும்.
29 இகழ்வாருக்குத் தண்டனை காத்திருக்கிறது;
முட்டாளின் முதுகுக்குப் பிரம்பு காத்திருக்கிறது.
நீதிமொழிகள் 19:1-29

# சிந்தனைக்கு

*வசனம் 19:1*
*இணை, 28:6; பார்க்க, 16:8 மற்றும் குறிப்பு.*
Δ
*"செல்வரைவிட" –*
*OV, மூடனைப் பார்க்கிலும்; மூலச்சொல், kes-eel / கெஸீல், stupid அல்லது fool என்று பொருள்படும்.*

*வசனம் 19:2*
*சேர்த்து வாசிக்க, 21:5.*
Δ
*"எண்ணிப் பாராமல் செயலில் இறங்குவதால் பயனில்லை" –*
*OV, ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல. பவர் மொழிபெயர்ப்பு மூலச்சொற்களின்படி உள்ளது.*
Δ
*"பொறுமையின்றி நடப்பவர்..." –*
*உடலளவிலும், மனதளவிலும், பொறுமை, சகிப்புத்தன்மை இறைமக்களுக்கு இன்றியமையாத பண்புகள். யோசேப்பு, தாவீது போல, பொறுமை காத்தவர்களே பின்னாளில் உயர்த்தப்பட்டனர்.*

*வசனம் 19:3*
*பார்க்க, யாக்கோபு 1:13.*
*இதுபோன்ற அங்கலாய்ப்பு நாம் அடிக்கடிக் கேட்கும் ஒன்று.*
*கடவுள் நமக்கென்று வைத்திருக்கும் திட்டம் என்ன என்று அறியாமல், அவருடைய ஆலோசனையை நாடாமல், தனது ஆற்றலில் நம்பிக்கை வைத்துச் செயல்பட்டு, தான் விரும்பியது நடக்கவில்லை எனும்போது, மொத்தப் பழியையும் கடவுள் மீது போடுவது எப்படி? தன் செயலுக்குத் தானே பொறுப்பு ஏற்காமல், கடவுளைப் பழிசொல்வது சரியா?*

*எச்சரிக்கை: இத்தகையோர் கடும் தண்டனைக்குரியோர் (திருவெளிப்பாடு 16:10-11).*

*வசனம் 19:4*
*வேறு சொற்களில், வ.7. பார்க்க, 14:20, 18:23 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 19:5*
*வேறு சொற்களில், வ.9. பார்க்க, 6:19 மற்றும் குறிப்பு.*

*வசனம் 19:6*
*வள்ளன்மை அரிதான நற்பண்பு. பயன் கருதாது செய்வதே வள்ளன்மை. ஊருக்கு நலம் பயக்கும் செயலுக்கென ஈந்த கொடையும் அத்தகையதே.*

*வசனம் 19:7*
*பார்க்க, வ.4.*
*சான்றாக, இழப்புகளை எதிர்கொண்டபோது, மனைவி உட்பட அனைவராலும் கைவிடப்பட்ட யோபு.*

*வசனம் 19:8*
*குற்றமாய்ப் பார்க்க முடியாத ஒரே தன்னலம், ஞானத்தைத் தேடுவதுதான். அளவற்ற தேடலுக்கு உரியதும் ஞானமே! கல்வி கரையில; ஆதலால் தான், "வாழும் வரை கல்" என்பர்.*

*அறிவுத் தேடல் என்பது ஆண்டவரை அறிதல். நமது ஒவ்வொரு பருவத்திலும், ஒவ்வொரு வாசிப்பிலும் புதிய வெளிப்பாடுகளை நமக்குத் தருவது பைபிள். "பற்றுறுதியின் பரிசிலே புரிதல்" ("Understanding is the reward for faith") என்கிறார் தூய அகஸ்டின். எனவே, விசுவாசித்து வாசிப்போம்.*

*கற்றலுக்கு ஒரு சூத்திரம் வேண்டுமானால், விசுவாசி > வாசி > சுவாசி (உள்வாங்கிப் பயிற்சி செய்) > விசுவாசி.*

*வசனம் 19:10*
*ஒப்பிடுக, 17:2.*
*இதனை "உலகத்தை நிலைகுலைப்பவற்றில்" ஒன்றாக சாலமோன் குறிப்பிடுகிறார், 30:21-22; ஆனாலும், இது நடக்கக் கூடியதே என்கிறார், சபை உரையாளர் 10:6-7.*

*வசனம் 19:11-12*
*சினம் தவிர்த்தலும், சீற்றம் கொள்ளுதலும்.*

*வசனம் 19:11*
*இரண்டு சிறந்த பண்புகள்: சினம் தவிர்த்தல், குற்றம் பாராமை. ஒன்று, உறவுகளைப் பெருக்கும்; மற்றது, உறவுகளைப் பேணும். மேலும் பார்க்க, 14:17&29 & 17:9 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 19:12*
*"அரசரின் சீற்றம்" –*
*மேலும் பார்க்க, 20:2.*

*படிநிலையில், எரிச்சல் > சினம் > சீற்றம். எல்லாம் தீதே! எனினும், முதல் இரு நிலைகளில் இருக்கும் போதே, எரிச்சல் தணிக்கப்படட்டும்; சினம் ஆற்றப்படட்டும் (பார்க்க, திருப்பாடல் 37:8; எபேசியர் 4:26. மேலும் பார்க்க, தொடக்க நூல் 4:5-6).*

*எழுவது சீற்றம்; செயலைக் கோருவது சீற்றம். அரசருக்குச் சீற்றம் எழுந்தால், அதனைச் சரியான செயலால் தணிக்க முடியும். பார்க்க, 16:14 மற்றும் குறிப்பு.*

Δ
*"பருவமழை" –*
*பார்க்க, 3:20 & 16:15 குறிப்புகள்.*
*காலத்தில் பொழிவது பருவமழை; அதுபோலவே, துயரில் இருப்போருக்கு அச்சமயத்தில் வேண்டியது, கருணை.*

*வசனம் 19:13-14*
*ஆண் சார்ந்த மதிப்பீட்டில் குடும்பம் குறித்த பார்வை.*

*வசனம் 19:13*
*மதிகெட்ட மகன், 10:1 மற்றும் குறிப்பு.*
Δ
*நச்சரிக்கும் மனைவி, 21:9&19, 25:24, 27:15.*
*வீடானாலும், சபையானாலும், சமுதாயமானாலும் – அன்றைக்கும் இன்றைக்கும் இல்லத்தரசிகளின் பங்களிப்பு முற்றிலும் மாறியுள்ளது. அன்றைக்கு ஆணின் சொத்தும் உழைப்புமே குடும்பத்தின் மூலாதாரம். ஆனால் கணவனும் மனைவியும் இணைந்து உழைக்கும் - உயரும் காலமிது. கல்வியிலும், பணியிலும் பெண்கள் உயரிய நிலையில் இருக்கிறார்கள்.*

*அதற்கேற்ற மாறுதல்கள் இல்லற வாழ்க்கையிலும் அவசியம் ஆகின்றன. வீட்டில் சுமைகளைப் பங்கு போடுவதை விட, இருவரும் பங்கேற்று வாழ்வது குடும்பத்திற்கு அமைதி தரும்.* ***படைப்பின் திட்டத்தில், இருபாலரும் சமமானோரே*** *(தொடக்க நூல் 1:27) என்பதை நினைவிற்கொள்க.*

*வசனம் 19:14*
*பார்க்க, 18:22 மற்றும் குறிப்பு.*

*வசனம் 19:15*
*பார்க்க, 12:24&27 & 13:4 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 19:16*
*பார்க்க, 16:17 மற்றும் குறிப்பு.*
*பொது மொழிபெயர்ப்பில், "ஆண்டவருடைய" என்ற சொல் சேர்ப்பு, இந்த வசனத்திற்குக் கூடுதல் பொருள் சேர்க்கிறது.*

*வசனம் 19:17*
*பார்க்க, 14:21&31, 22:9, 28:8. ஒப்பிடுக, மத்தேயு 6:19-20.*

வறியவருக்கு உதவும் வள்ளன்மையை ஊக்குவிக்கும் ஆகச் சிறந்த வசனம். நாட்டில் என்றும் வாழும் ஏழைகளுக்கு உதவக் கைகளைத் தாராளமாகத் திறக்க திருச்சட்டம் வழியாக ஆண்டவர் உற்சாகமூட்டுகிறார் (இணைச் சட்டம் 15:7-11). இயல்பாகவே, திருச்சட்டத்தை மீறுவது சாபத்தை வருவிக்கும் (14:31, 21:13, 22:16, 28:27). மாறாக, இவ்வசனம் ஏழைகளுக்கு உதவ நேரடியாக ஊக்கமூட்டுகிறது.
ஆண்டவருக்குக் காணிக்கை போடுகிறோமா? கடனும் கொடுக்கிறோமா?

வசனம் 19:18
பார்க்க, 10:1 & 13:24 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, 22:15, 23:13-14.

Δ

"இல்லாவிடில்" –
இங்கும், 26:5&20 ஆகிய வசனங்களிலும். இப்போது முடியாவிட்டால் இனி எப்போதும் முடியாது என்கிற எச்சரிப்பும் ஆணையும்.

வசனம் 19:19
எளிதில் சினம் கொள்ளுவதன் விளைவு, 15:18, 22:24, 29:22.
கடுஞ்சினம் கொள்வோர், தங்கள் தவறுகளிலிருந்து எதையும் கற்றுக் கொள்வதில்லை. 'ஆத்திரம் அறிவுக்குப் பகை' என்பர். அத்தகையோரைத் தண்டனைக்குத் தப்புவிப்பது பயனற்றது என்கிறார் சாலமோன்.

வசனம் 19:20
பார்க்க, 1:8, 2:1, 4:10, 10:8. செவிகொடுத்தல் இல்லையேல் ஞானமடைதல் இல்லை, 4:1. மேலும் பார்க்க, 15:33 குறிப்பு.

வசனம் 19:21
பார்க்க, 16:1-3&9 குறிப்பு. மேலும் பார்க்க, 20:24.

Δ

*இறையாண்மை –*
*பார்க்க, 5:21, 15:3, 16:1-9, 20:24, 21:1-2&30-31. மேலும் பார்க்க, எசாயா 46:10.*

*கடவுளின் இறையாண்மை மனிதரின் கற்பனைக்கு அப்பாற்பட்டது. படைப்பு அனைத்தின் இயக்கங்கள் அனைத்தும் அவர்தம் கட்டுக்குள். ஆனால் அதற்காக மனிதரை, அவர்களின் எண்ணங்களை அவர் ஒருபோதும் முடக்கிப் போடுவதில்லை. மாறாக நமது ஒவ்வொரு முயற்சியிலும், ஒவ்வொரு தோல்வியிலும், ஒவ்வொரு வெற்றியிலும் கரம் பிடித்து வழிநடத்துபவராக, விழுந்த வேளைகளில் தூக்கி நிறுத்துபவராக, துவண்ட பொழுதுகளில் தூக்கிச் சுமப்பவராக, இமைப் பொழுதும் நம்மை விட்டு நீங்காத பேராற்றல் ஆண்டவரே! "ஆண்டவரின் எண்ணங்களோ என்றென்றும் நிலைத்திருக்கும்; அவரது உள்ளத்தின் திட்டங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்." (திருப்பாடல் 33:11)*

*வசனம் 19:22*
*ஒப்பிடுக, வ.1, 16:8.*

*வசனம் 19:23*
*"ஆண்டவருக்கு அஞ்சி நடந்தால் ... மனநிறைவு கிட்டும்" –*
*வாழும் ஒவ்வொரு நாளிலும், நமக்கு இன்றியமையாத ஒன்று, மனநிறைவு. அது நம் அமைதியான வாழ்க்கைக்கு அடிப்படை. நமது ஒவ்வொரு நாளின் செயல்களின் முடிவுகள், அதே நாளில் தெரிய வாய்ப்பு இருப்பதில்லை; ஆனால் ஆண்டவரின் வழிகளில் பயணிப்போர், விளைவுகள் குறித்த உறுதியோடு, மனநிறைவுடன் வாழ்வர்.*

*வசனம் 19:24*
*பார்க்க, 6:6-11 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 19:25*
*பார்க்க, 1:22, 9:7-9, 10:13, 15:12, 21:11.*

*வசனம் 19:26*
*பார்க்க, 20:20, 28:7&24, 29:3.*
*மோசேயின் திருச்சட்டத்தின்படி, பெற்றோருக்குக் கீழ்ப்படியாத, கெட்ட மகன் சாவுக்கு உள்ளாவான், இணைச் சட்டம் 21:18-21. ஆனால் கிறிஸ்து இயேசு, மனம் திருந்திய மைந்தனின் உவமை வழியாக, தீய மகனும் திருந்தி வாழ வழிகாட்டுகிறார். உயிர்வாழும் வரை, ஒருவன் திருந்தி வாழ வாய்ப்பளிப்பதே கிறிஸ்துவின் நற்செய்தி.*

*வசனம் 19:27*
*"நல்லுரை கேட்பதை நிறுத்தாதே ..." –*
*இதற்கு ஒரு மோசமான சான்றாக, சாலமோன் அரசரின் பிந்தைய வாழ்க்கை அமைந்தது (1 அரசர்கள் 11:1-13).*

*வசனம் 19:28*
*பார்க்க, 6:19, 12:17, 14:5 மற்றும் குறிப்புகள்.*
Δ
*"தீக்குணமுள்ள சாட்சி ... பொல்லாரின் சான்று ..." –*
*பொய்ச் சான்று சொல்லாதே என்பது இறைக் கட்டளை. அவ்வாறு சொல்வது, கடும் தண்டனைக்குரிய குற்றம், இணைச் சட்டம் 19:16-21. அதிலும் இங்குச் சொல்லப்படுவது, அடுத்தவர்க்கு எதிராகத் தீய எண்ணத்தோடு, திட்டம் தீட்டிச் சொல்லப்படும் பொய்ச் சான்று. பொய்ச் சான்று தன்னுள் குற்றமுள்ளது என்பதுமல்லாமல், குற்றம் செய்வோர் தண்டனைக்குத் தப்புவதால், இன்னும் துணிகரமான குற்றங்களுக்கு வழிவகுக்கும்.*

*வசனம் 19:29*
*பார்க்க, 10:13 மற்றும் குறிப்பு.*

✝

# 20 நீதிமொழிகள் 20

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 திராட்சை இரசம் ஒழுங்கீனத்தைத் தோற்றுவிக்கும்;*
*போதை தரும் குடி அமளியைத் தோற்றுவிக்கும்;*
*அவற்றில் நாட்டங்கொள்பவர் மடையரே.*
*2 அரசரின் சினம் சிங்கத்தின் முழக்கத்திற்கு நிகர்;*
*அரசருக்குச் சினமூட்டுகிறவர் தம் உயிரை இழப்பார்.*
*3 விவாதத்தில் ஈடுபடாதிருத்தல் மனிதருக்கு அழகு;*
*ஏனெனில் மூடராயிருக்கும் எவரும்*
*விவாதத்தை விரும்புகின்றனர்.*
*4 சோம்பேறி பருவத்தில் உழுது பயிர்*
*செய்யமாட்டார்;*
*அவர் அறுவடைக் காலத்தில்*
*விளைவை எதிர்பார்த்து ஏமாறுவார்.*
*5 மனிதர் மனத்தில் மறைந்திருக்கும் எண்ணம்*
*ஆழமான நீர்நிலை போன்றது;*
*மெய்யறிவுள்ளவரே அதை வெளிவரச் செய்வார்.*
*6 பலர் தம்மை*
*வாக்குப் பிறழாதவரெனக் கூறிக்கொள்வர்;*
*ஆனால், நம்பிக்கைக்குரியவரைக் கண்டுபிடிக்க*
*யாரால் இயலும்?*
*7 எவர் களங்கமற்ற*
*நேர்மையான வாழ்க்கை நடத்துகிறாரோ,*
*அவருடைய பிள்ளைகள்*
*அவரின் காலத்திற்குப்பின் நற்பேறு பெறுவார்கள்.*
*8 மன்னன் நீதிவழங்கும் இருக்கையில்*
*வீற்றிருக்கும்போது,*
*தன் பார்வையாலேயே*
*தீமையான யாவற்றையும் சலித்துப்*
*பிரித்துவிடுவான்.*
*9 "என் இதயத்தைக் தூயதாக்கி விட்டேன்;*
*நான் பாவம் நீக்கப்பெற்றுத் தூய்மையாயிருப்பவன்"*
*என்று யாரால் சொல்லக்கூடும்?*
*10 பொய்யான எடைக் கற்களையும்*

*பொய்யான அளவைகளையும்*
*பயன்படுத்துகிறவரை*
*ஆண்டவர் அருவருக்கின்றார்.*
*11 சிறுவரையும் அவருடைய செயல்களைக்*
*கொண்டே அறியலாம்;*
*அவர் உண்மையும் நேர்மையுமானவரா என்று*
*சொல்லிவிடலாம்.*
*12 கேட்கும் காது, காணும் கண்;*
*இவ்விரண்டையும் ஆண்டவரே படைத்தார்.*
*13 தூங்கிக்கொண்டேயிருப்பதை நாடாதே;*
*நாடினால் ஏழையாவாய்.*
*கண் விழித்திரு; உனக்கு வயிறார உணவு கிடைக்கும்.*
*14 ஒரு பொருளை வாங்கும் போது,*
*தரம் குறைவு, விலை மிகுதி என்று ஒருவர்*
*சொல்வார்;*
*வாங்கிச் சென்றபின்,*
*தாம் திறம்படச் செய்ததாக நினைத்துத் தம்மையே*
*மெச்சிக் கொள்வார்.*
*15 பொன்னையும் முத்துகளையும் விட,*
*அறிவுள்ள பேச்சே விலையுயர்ந்த அணிகலன்.*
*16 அன்னியருடைய கடனுக்காகப் பிணை*
*நிற்கிறவருடைய*
*ஆடையை எடுத்துக்கொள்;*
*அதை அந்தக் கடனுக்காகப் பிணையப் பொருளாக*
*வைத்திரு.*
*17 வஞ்சித்துப் பெறும் உணவு சுவையாயிருக்கும்;*
*ஆனால் பின்னர் அது வாய் நிறைய*
*மணல் கொட்டியது போலாகும்.*
*18 நல்ல அறிவுரை கேட்டுத்*
*திட்டமிட்டால் வெற்றி பெறுவாய்;*
*சூழ்ச்சி முறையை வகுக்குமுன்*
*போரைத் தொடங்காதே.*
*19 வம்பளப்போன் மறைசெய்திகளை*
*வெளிப்படுத்திவிடுவான்;*
*வாயாடியோடு உறவாடாதே.*
*20 தாயையும் தந்தையையும் சபிக்கிறவனின் விளக்கு,*
*காரிருள் வேளையில் அணைந்துபோகும்.*

*21 தொடக்கத்திலே விரைவில் கிடைத்த உரிமைச் சொத்து,*
*இறுதியிலே ஆசி பெற்றதாய் இராது.*
*22* ***"தீமைக்குத் தீமை செய்வேன்" என்று சொல்லாதே;***
***ஆண்டவரையே நம்பியிரு; அவர் உன்னைக் காப்பார்.***
*23 பொய்யான எடைக்கற்களைப் பயன்படுத்துகிறவரை*
*ஆண்டவர் அருவருக்கிறார்;*
*போலித் துலாக்கோலைப் பயன்படுத்துவது முறையற்றது.*
*24* ***மனிதனுடைய வாழ்க்கைப் பாதையை ஆண்டவர் அமைக்கின்றார்;***
***அப்படியிருக்க, தன் வழியை மனிதனால் எப்படி அறிய இயலும்?***
*25 எண்ணாமல் ஒன்றைக் கடவுளுக்குப் படையல் என நேர்ந்துவிட்டு,*
*அப்பொருத்தனையைப்பற்றிப் பிறகு எண்ணுவது கண்ணியில் கால் வைப்பதாகும்.*
*26 ஞானமுள்ள அரசன் பொல்லாரைப் பிரித்தெடுப்பான்;*
*அவர்கள் மீது சக்கரத்தை ஏற்றி நசுக்குவான்.*
*27* ***ஆண்டவர் மனிதருக்குத் தந்துள்ள ஆவி ஒரு விளக்கு;***
***அது அவர்களின் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் ஆய்ந்தறியும்.***
*28 அன்பும் உண்மையும் மன்னவனை ஆட்சியில் நீடித்திருக்கச் செய்யும்;*
*அன்பாகிய அடிப்படையிலேதான் அவனது அரியணை நிலைத்து நிற்கும்.*
*29 இளைஞருக்கு உயர்வளிப்பது அவர்களது வலிமை;*
*முதியோருக்குப் பெருமை தருவது அவர்களது நரைமுடி.*
*30 நையப் புடைத்தலே மனத்தின் மாசகற்றும்;*

*கசையடி கொடுத்தலே உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும்.*

*நீதிமொழிகள் 20:1-30*

## சிந்தனைக்கு

*வசனம் 20:1*
*விரிவாக, 23:19-21&29-35, 31:4-5.*
*ஒப்பிடுக 9:2&5. அங்குப் பருக அழைப்பு விடுக்கும் ஞானம் சரியா? 9:2க்குரிய குறிப்பை வாசிக்கவும். திராட்சை இரசம் அருந்துதல் என்பது ஒருபோதும் ஆல்கஹால் குடிப்பதை ஆதரிப்பது அல்ல.*

*மேலும் ஒப்பிடுக, 31:6-7. குடியினால் நோவா கிடந்த நிலையையும், பிறகு காம் பெற்ற சாபத்தையும் நினைவில் கொள்வோம் (தொடக்க நூல் 9:21-27). மேலும் வாசிக்க, லேவியர் 10:9; எண்ணிக்கை 6:1-3; எசாயா 5:11 & 28:7.*

*தீய பழக்கங்களிலும் தீயது மது அருந்துதல். அது மூளையின் செயல்பாட்டைச் சிதைப்பது. நல்வழியிலிருந்து தடுமாறச் செய்வது.* ***பைபிள் நம்மை நல்வாழ்வுக்கு அழைப்பது, நெறிப்படுத்துவது, நிலைவாழ்வை நோக்கி வழிநடத்துவது. எனவே தீய பழக்கங்களுக்கு உறுதியாக விலகி நிற்போம் (எபேசியர் 5:18).***

*வசனம் 20:2*
*பார்க்க, 14:35.*

*வசனம் 20:3*
*பார்க்க, 17:14 மற்றும் குறிப்பு.*

*வசனம் 20:4*
*பார்க்க, 10:4. மேலும் பார்க்க, 6:6-11 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 20:5*
*ஆலோசனை வழங்கல் அல்லது ஆற்றுப்படுத்தல் என்பது மெய்யுணர்வு அடைந்தோருக்கே இயல்பு. மனதளவில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, ஏற்ற விதமாக எடுத்துரைத்து, கடவுளுக்குள் வழிநடத்த, மெய்யுணர்வு அடைந்தோராலேயே ஆகும்.*

*வசனம் 20:6*
*பெருமைப்படுத்தும் வகையில் தன்னைத் தானே முன்னிறுத்துதல் நம் ஒவ்வொருவரின் இயல்பு. எனவே, தன்னைக் குறித்து ஒருவர் சொல்வதை வைத்து அவரை நம்ப முடியாது.*

*கடவுளே நம்பத்தக்கவர், இணைச் சட்டம் 7:9; திருப்பாடல் 36:5, 89:1, 92:2; எசாயா 11:5; புலம்பல் 3:23; 1 யோவான் 1:9; 1 கொரிந்தியர் 10:13; திருவெளிப்பாடு 19:11.*

*கடவுளே நம்மை நம்பத்தக்கவராக மாற்றுகிறார், எண்ணிக்கை 12:7; மத்தேயு 25:21; 1 கொரிந்தியர் 7:25; எபேசியர் 1:1; 1 திமொத்தேயு 1:12; 2 திமொத்தேயு 2:2; திருவெளிப்பாடு 2:10.*

*வசனம் 20:7*
*இணை, திருப்பாடல் 37:26, 112:2.*
*நேரிய மனிதர் அவருடைய வாழ்நாளுக்குப் பிறகும் பல தலைமுறைகளுக்கு நினைவுகூரப்படுவார்.*

*நாட்டளவில், அண்ணல் அம்பேத்கரின் பேத்தி என்றால் உடனே ஒரு மரியாதை அவருக்குக் கிடைக்கிறதே! அதற்குப் பிறகுதான், அவரின் தனிப்பட்ட மதிப்பீட்டை நாம் செய்கிறோம். எனவே, சொத்துகளைவிட, நற்பெயரை நமது தலைமுறைக்கு விட்டுச் செல்வோம்.*

*வசனம் 20:8*
*பார்க்க, 16:10.*

*நல்ல அரசருக்குரிய இலக்கணம். அதேவேளையில், மன்னர்கள் பலரும் இத்தகைய ஆற்றல் உடையோர் அல்ல.*

Δ

*"சலித்துப் பிரித்து விடுவான்" –*

*OV, சிதறப் பண்ணுகிறான்; எபிரேய மூலச்சொல் zaw-raw / ஷாரா; toss about, diffuse, winnow, strew, scatter, disperse என்றெல்லாம் பொருள்படும். சலித்தெடுத்தல், தூற்றுதல் என்பதன் முந்தைய செயல் - கதிரடித்தல், சூடடித்தல், விளாசுதல்! உழவுத் தொழிலில், அடித்தல் இல்லாமல் புடைக்க முடியாது.*

*எச்சரிக்கை:*

*"அவர் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார். கோதுமையைத் தம் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்" (லூக்கா 3:17).*

*வசனம் 20:9*

*எவரும் தன்னைத் தானே தூயவன் என்று சொல்லிக்கொள்ள முடியுமா? பவுலடிகள் இது குறித்து மிகவும் விரிவாகப் பேசுகிறார் (பார்க்க, உரோமையர் 3:9-23). அப்படித் தங்களைப் பாவமற்றோர் என்று சொல்வோர் பொய்யர் என்கிறார் யோவான் (1 யோவான் 1:8-9). பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுவோர் பேறுபெற்றோர் (உரோமையர் 4:7).*

*வசனம் 20:10 & 23*

*பார்க்க, 11:1 மற்றும் குறிப்பு.*

*வசனம் 20:11*

*சிறுவர் –*

*OV, பிள்ளை; nah-ar / நார்.*

*குழந்தைப் பருவம் தாண்டிய - பதின்ம வயதிற்கு முந்தைய சிறுவர், சிறுமியர். பைபிளில், இளைஞர்,*

வேலைக்காரரர் என்ற பொருள்களிலும் இந்த எபிரேயச் சொல் அதிகமுறை பொருள்கொள்ளப்பட்டுள்ளது.

*வசனம் 20:12*
*கண்களையும் செவிகளையும் திறப்பவர் ஆண்டவர், 40:6, 94:9, 119:18.*
முந்தைய வசனம் சிறுவரைக் குறிக்கிறது என்போமானால், அவர்களுக்குக் கேள்வியையும் பார்வையையும் அந்த வயதிலேயே ஆண்டவர் அருளுகிறார் என்று பொருள்படும்.

அதேவேளையில், வேலைக்காரரர் என்று எடுத்துக் கொண்டால், இதன் பொருள் இன்னும் மேலானது. பண்டு முளைப்பது அரிசியே, ஆனாலும், விண்டு உமி போனால், முளையாதாம்; கொண்ட பேராற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி ஏற்ற கருமம் செயல் (மூதுரை#11).

வேலைக்கு வருவோர், இஸ்ரயேலருள் நிலத்தை இழந்தோர் அல்லது அந்த மண்ணில் வாழ்ந்த அன்னியர். எல்லாருக்குமான கடவுளாக, அவர்களுக்கும் கேள்வியையும் பார்வையையும் அருளுபவர் ஆண்டவர். குறைவுகளை நிறைவு செய்யும் ஆற்றல்மிக்க அருளாளர் கடவுளே, விடுதலைப் பயணம் 4:11; 2 கொரிந்தியர் 12:9.

*வசனம் 20:13*
*பார்க்க, 6:6-11 மற்றும் குறிப்புகள். பவுலடிகளின் அறிவுரை, உரோமையர் 12:11.*
இழந்த ஆற்றலை மீட்டு, புத்துணர்வு தருவது தூக்கம்; அமைதியான உறக்கம் ஆண்டவரின் கொடை. ஆனால், படுத்துக் கிடப்பதில் விருப்பம், சோம்பலின் விளைவு.

*வசனம் 20:14*
*ஒப்பிடுக, தற்புகழ்ச்சி, 25:14, 27:2.*

*குறைவான விலைக்குத் தரமான பொருளை வாங்கிவிட்டு, அது குறித்துத் தன் பேரம் பேசும் திறன் என்று பிறரிடம் பெருமையடிப்போரை நாம் பார்க்கிறோம். விற்பவருக்கு இருக்கக்கூடிய நெருக்கடியைத் தன் ஆதாயத்திற்குப் பயன்படுத்துதலே பேரத்தில் ஒருவரின் வெற்றி.*

*அதேபோல், விற்பவரும், ஒரு பொருளுக்கான தேவை, அந்தப் பொருளின் கையிருப்பு, சூழற்சிக் காலம் போன்றவற்றை மனதில் வைத்துக் கூடுதல் ஆதாயம் தேடுவர். இதனை அவர்கள் தங்களின் தர்மம் என்று சொன்னாலும், இதுவும் நியாயமற்றதே.*

*வசனம் 20:15*
*பார்க்க, 3:14-15 & 8:10-11 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 20:16*
*இணை, 27:13.*
*அடகாக வாங்கும் போர்வை குறித்து விடுதலைப் பயணம் 22:26-27ல் வாசிக்கிறோம். அன்னியருக்குப் பிணை நிற்பது குறித்து இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. அடகாயினும் பிணையாயினும், கருணையின் அடிப்படையில் நமக்கு அருளப்பட்ட திருச்சட்டம் மீறப்படக் கூடாது. மேலும் பார்க்க, இணைச் சட்டம் 24:10-13.*

*வசனம் 20:17*
*ஒப்பிடுக, 9:17. வஞ்சனையால் அல்லது பாவத்தால் மகிழ்ச்சி இராது என்பது அல்ல – அது நீடித்திராது என்பதே உண்மை, 9:18.*

*வசனம் 20:18*
*இணைத்துப் பார்க்க, 24:6; பார்க்க, 11:14 & 15:22 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, லூக்கா 14:31-32.*

*வசனம் 20:19*
*பார்க்க, 11:13, 16:28, 18:8 மற்றும் குறிப்புகள்.*

*ஒருவருடைய மறைசெய்தி அல்லது இரகசியம், அவரிடம் மட்டும் இருக்கும் வரைதான் இரகசியம். அடுத்தவரிடம் சொல்லிவிட்ட பிறகு, அது இரகசியமே அல்ல. வெறும் வாயை மெல்லும் ஒருவனுக்கு அவல் போட்டது போல, வம்பனுக்கு அடுத்தவரின் இரகசியம்!*

*இரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும், துக்கத்தை வெளிப்படுத்தாதவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது!*

*வசனம் 20:20*

*பார்க்க, 1:8, 3:12, 4:1, 6:20-23, 10:1, 13:1, 15:5&20, 17:21, 19:13&26, 23:22&24-26, 28:24, 29:3, 30:11; விடுதலைப் பயணம் 20:12.*

*மேற்கண்ட வசனங்களில், தாய் - தந்தைக்குப் பணிந்து நடத்தல், அதனால் அடையும் ஆசி, பணியாமையின் தீமை குறித்துப் பேசிய சாலமோன், இப்போது பெற்றோருக்குக் கீழ்ப்படியாமையின் தண்டனை குறித்துப் பேசுகிறார்; மேலும் பார்க்க, 30:17.*

*பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் நற்பேறு எனும் திருச்சட்டம், கீழ்ப்படியாமையின் தண்டனையையும் வலியுறுத்துகிறது (விடுதலைப் பயணம் 21:17; லேவியர் 20:9; இணைச் சட்டம் 27:16. மேலும் பார்க்க, எபேசியர் 6:2-3.)*

Δ

*காரிருளில் அணையும் விளக்கு –*

*அவமானத்தோடு அகாலத்தில் சாதல், 13:9, 24:20; 2 சாமுவேல் 21:17; யோபு 18:5-6&18; மத்தேயு 22:13 & 25:30; யூதா 1:12-13.*

*வசனம் 20:21*

*பார்க்க, 28:20. சான்றாக, கிறிஸ்து இயேசு உரைத்த 'மனம் திருந்திய மைந்தன்' உவமையில் கவனிக்க, லூக்கா 15:11-14.*

*வசனம் 20:22-24*
*மனிதரின் தன்னியல்பான (சுபாவமான) செயல்களை எடுத்துரைத்து, அவற்றில் கடவுளின் இடைபடுதலை விளக்குவனவாக உள்ள திருமொழிகள்.*

*வசனம் 20:22*
*இணை, 24:29.*
*பழிவாங்கும் எண்ணமே தீது, நமக்கு ஆகாதது; அது ஆண்டவருக்கே உரியது. பார்க்க, விடுதலைப் பயணம் 23:4-5; லேவியர் 19:18; இணைச் சட்டம் 32:35; மத்தேயு 5:44-48; லூக்கா 6:27-28; உரோமையர் 12:19-21; 1 தெசலோனிக்கர் 5:15; எபிரேயர் 10:30; 1 பேதுரு 3:9. தாவீது அரசரின் தண்மையான முடிவு, 2 சாமுவேல் 16:11-12.*

Δ

*"நம்பியிரு" –*
*OV, காத்திரு; மூலச்சொல், kaw-wah / காவா; இணைத்தல், ஒன்று சேர்த்தல், எதிர்நோக்கல், பொறுத்தல், காத்திருத்தல் என்றெல்லாம் பொருள்படும். பார்க்க, யோபு 17:13; திருப்பாடல் 25:3,5&21, 27:14, 37:9&34, 39:7, 40:1, 52:9, 69:6&20, 119:95, 130:5. நீதிமொழிகள் நூலில், இங்கு மட்டுமே இடம்பெறும் மூலச்சொல்.*
**நம்பியிரு என்பது நம்பிக்கையோடும் பொறுமையோடும் ஆண்டவரின் வேளை வரக் காத்திரு என்பதாம்.**

*வசனம் 20:23*
*பார்க்க, 11:1 மற்றும் குறிப்பு.*

*வசனம் 20:24*
*பார்க்க, 16:1-4&9, 19:21 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, உரோமையர் 11:33.*

Δ

*மனிதனுடைய –*
*OV, மனுஷருடைய; இங்குள்ள மூலச்சொல், gheh-ber / கெபெர்; வலிய மனிதன், சமரன், மனிதன். ஆனால்,*

*மொழிபெயர்ப்புகளில் பொதுவாக man / மனிதன் என்றே பொருள்கொள்ளப்பட்டுள்ளது. KJVல், எசாயா 22:17 மற்றும் எரேமியா 41:16 வசனங்களில் மட்டுமே mighty என்று பொருள்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மனிதனுடைய என்பதை வலிமையான மனிதனுடைய என்று உணர்க.*

*இதுபோன்றே, வலிமையான / அதிகாரமிக்க / பெருமைமிக்க என ஒப்பீட்டளவில் மேலான பொருளில் இச்சொல் இந்நூலில் இடம்பெறும் வசனங்கள்: 6:34, 24:5, 28:3&21, 29:5, 30:1&19.*

*வசனம் 20:25*
*நேர்ச்சை / பொருத்தனை –*
*பார்க்க, இணைச் சட்டம் 23:21-23; திருப்பாடல் 50:14. சாலமோனின் எச்சரிக்கை, சபை உரையாளர் 5:2&4-5.*

*பொருத்தனை செய்யும் நாளில், அந்தப் பொருத்தனை நம்மால் நிறைவேற்றக்கூடியதே என்று உண்மையாகவே நாம் நம்பலாம். ஆனால் அந்த ஆசி உறுதிப்படும்போது, அது இயலாமற் போகலாம். இன்றைய உலகில், எவரும் நீதித் தலைவர் இப்தா போல மகளைப் பலியிட முடியாது (நீதித் தலைவர்கள் 11).*

*நேர்ச்சை, பொருத்தனை என்று பெயர் சொல்லப்பட்டாலும் அதுவும் நன்றிப் பலிதான். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட பலிகள் அனைத்தையும், மகத்தான, இணையற்ற, தமது ஒரே உயிர்ப்பலியின் வழியே கிறிஸ்து இயேசு செய்து முடித்து விட்டார் (எபிரேயர் 7:27). அந்தப் பலியின் வழியே மட்டுமே நாம் ஒவ்வொருவரும் மீட்கப்பட்டு, பேராற்றல்மிக்க கடவுளோடு, அவராலும், அவருக்கென்றும் ஒப்புரவாக்கப்பட்டோம் (2 கொரிந்தியர் 5:18-20).*

*எல்லாப் பலிகளையும் கிறிஸ்து இயேசு சிலுவையில் நிறைவேற்றியிருக்க, நேர்ச்சையும் பொருத்தனையும் செய்து, மாசற்ற இரத்தத்தை நாம் குற்றப்படுத்தக் கூடாது.*
*அப்படியானால், நேர்ச்சையோ பொருத்தனையோ செய்யக் கூடாதா?*

*இதற்கு நேர்மையான பதில்:*
***பொருத்தனை செய்யுங்கள்.***
*'தினமும் ஜெபம் செய்வேன்' என்று பொருத்தனை செய்யுங்கள்.*
*'தினமும் பைபிள் படிப்பேன்' என்று நேர்ச்சை செய்யுங்கள்.*
*'தவறாமல் ஆலயம் செல்வேன்' என்று பொருத்தனை செய்யுங்கள்.*
*'விஷ்வவானி, ஆசீர்வாத இயக்கம், கிதியோன் போன்ற திருப்பணி இயக்கங்களோடு இணைந்து திருப்பணி செய்வேன்' என்று நேர்ச்சை செய்யுங்கள்.*
*'ஆலயப் பணிகளை ஆர்வத்தோடு நேர்மையான வழியில் செய்வேன்' என்று பொருத்தனை செய்யுங்கள்.*

*ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் அவருக்கென்று செயல்படவே ஆதாயப்படுத்தி உள்ளார்; அப்படியிருக்க, அவர் அருளிய சொல்லி முடியாத ஆசியில்* ***ஒரு சிறு பகுதியை*** *நேர்ச்சையாகச் செலுத்துவதில் உங்களுக்கு என்ன பெருமை!*

*வசனம் 20:26*
*பார்க்க, வ.8 மற்றும் குறிப்பு.*
*ஒப்பிட்டு உணர்க, ஓர் அரசனாக தாவீதின் உறுதிமொழி, திருப்பாடல் 101:1-8.*

*வசனம் 20:27*
*ஒப்பிடுக, 1 கொரிந்தியர் 2:11.*

*வசனம் 20:28*
*பார்க்க, 3:3. சான்றாக, அரசன் ரெகபெயாமின் செயல்களில் அன்போ உண்மையோ இல்லை, 1 அரசர்கள் 12:1-19. அவனது கடுமையான செயல் இஸ்ரயேலை இரண்டாகப் பிரித்தது.*

*வசனம் 20:29*
*பார்க்க, 16:31 மற்றும் குறிப்பு. வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு சவால்கள் – எதிர்கொள்ள வெவ்வேறு விதமான ஆற்றல்கள். முதியோரின் ஆற்றல் அவர்களின் நுண்ணறிவு (மதிநுட்பம்).*

*வசனம் 20:30*
*பார்க்க, 10:13 மற்றும் குறிப்பு. வலிகளின் வழியே ஒருவனைத் தூய்மைப்படுத்தல், திருப்பாடல் 66:10-12 & 141:5.*

✝

# 20 நீதிமொழிகள் 21

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 மன்னவன் மனம்*
*ஆண்டவரின் கைக்குள் அடங்கியிருக்கிறது;*
*வாய்க்கால் நீரைப்போல அவர்*
*அதைக் தம் விருப்பப்படித் திருப்பி விடுகிறார்.*
*2 மனிதருடைய நடத்தையெல்லாம்*
*அவர் பார்வையில் குற்றமற்றதாய்த் தோன்றலாம்.*
*ஆனால் ஆண்டவர்*
*அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார்.*
*3* ***பலிசெலுத்துவதைவிட,***
***நேர்மையாகவும் நியாயமாகவும் நடப்பதே***
***ஆண்டவருக்கு உவப்பளிக்கும்.***
*4 மேட்டிமையான பார்வை,*
*இறுமாப்புக்கொண்ட உள்ளம் –*
*இவை பொல்லாரிடம்*
*பளிச்சென்று காணப்படும் பாவங்கள்.*
*5 திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைப்பவரிடம்*
*செல்வம் சேரும் என்பது திண்ணம்;*
*பதற்றத்துடன் வேலைசெய்பவர்*
*பற்றாக்குறையில் இருப்பார்.*
*6 ஒருவர் பொய் பேசிச் சேர்க்கும் பொருள்*
*காற்றாய்ப் பறந்துவிடும்;*
*அவரது உயிரையும் அது வாங்கி விடும்.*
*7 பொல்லார் நேர்மையானதைச் செய்ய மறுப்பதால்,*
*அவர்களது கொடுமை*
*அவர்களையே வாரிக் கொண்டுபோகும்.*
*8 குற்றம் செய்பவர் வழி கோணலானது;*
*குற்றமற்றவர் செய்கை நேர்மையானது.*
*9 மாடி வீட்டில்*
*நச்சரிக்கும் மனைவியோடு வாழ்வதைவிட,*
*குடிசை வாழ்க்கையே மேல்.*
*10 பொல்லார் மனம்*
*தீமை செய்வதில் நாட்டங்கொள்ளும்;*

தமக்கு அடுத்திருப்பாரை
அவர்கள் கனிவுடன் பார்ப்பதும் இல்லை.
11 ஏளனம் செய்வோரை அடிக்கும்போது
அதைக் காணும் பேதையராவது படிப்பினை
பெறுவர்;
உணர்வுள்ளவருக்கு அறிவு புகட்டும்போது
அவர் மேலும் அறிவுடையவராவார்.
12 நீதிமிகு இறைவன்
பொல்லாருடைய வீட்டைக் கவனித்துக்
கொண்டிருக்கிறார்;
அவர்களைத் தீச்செயல் காரணமாகத்
தூக்கி எறிந்து அழித்துவிடுகிறார்.
13 ஏழை கூக்குரலிடும்போது
எவன் காதைப் பொத்திக்கொள்கிறானோ,
அவன் தானே உதவிக்காக மன்றாடும்போது
எவரும் அவனுக்குச் செவி கொடுக்கமாட்டார்.
14 மறைவாக நன்கொடை கொடுத்துச்
சினத்தைத் தணிப்பார்கள்;
மடியில் கைக்கூலி திணித்துச்
சீற்றத்தை ஆற்றுவார்கள்.
15 நீதி நிலைநாட்டுவது
நேர்மையானவருக்கு மகிழ்ச்சியளிக்கும்;
தீமை செய்வோருக்கோ அது திகிலுண்டாக்கும்.
16 விவேகம் காட்டும் வழியை விட்டு விலகிச்
செல்பவர்,
செத்தாரிடையே தங்க விரைபவர்.
17 ஒய்யாரமான வாழ்க்கையை நாடுகிறவர்
ஏழையாவார்;
மதுவையும் நறுமணப் பொருள்களையும்
விரும்புகிறவர் செல்வராகமாட்டார்.
18 நல்லவருக்குப் பொல்லாங்கு செய்யப் பார்ப்பவர்
தாமே அவருக்குப் பதிலாள் ஆகிவிடுவார்;
நேர்மையானவரை வஞ்சிக்கப் பார்ப்பவர்
அவருக்குப் பதிலாகத் தாமே வஞ்சனைக்கு
ஆளாவார்.
19 நச்சரிப்பவளும் சிடுசிடுப்பவளுமான
மனைவியுடன் வாழ்வதைவிட,

*பாலை நிலத்தில் தனியே வாழ்வதே மேல்.*
*20 ஞானமுள்ளவர் வீட்டில்*
*செல்வமும் அரும்பொருள்களும் இருக்கும்;*
*மதிகேடர் தம் செல்வத்தைக் கரைத்துவிடுவார்.*
*21 நேர்மையையும் இரக்கத்தையும்*
*கடைப்பிடித்து நடப்பவர்,*
*நீடித்து வாழ்வார், மேன்மையும் அடைவார்.*
*22 வீரர் நிறைந்த பட்டணத்தையும் நல்வாழ்வையும்*
*ஞானமுள்ளவர் கைப்பற்றுவார்;*
*அவர்கள் நம்பியிருந்த அரணையும்*
*இடித்துத் தள்ளுவார்.*
*23 தம் வாயையும் நாவையும் காப்பவர்,*
*இடுக்கண் வராமல் தம்மைக் காத்துக்கொள்வார்.*
*24 ஏளனம் செய்யும்*
*செருக்குடையோரின் பெயர் இறுமாப்பு;*
*அளவு கடந்த பெருமையுடன் நடப்பதே*
*அவர் போக்கு.*
*25 சோம்பேறியின் அவா அவரைக் கொல்லும்;*
*ஏனெனில், அவர் கைகள்*
*வேலை செய்ய மறுக்கின்றன.*
*26 அவர் நாள் முழுதும்*
*பிறர் பொருளுக்காக ஏக்கங்கொண்டிருப்பார்;*
*ஆனால் சான்றோர்*
*தம் பொருளை இல்லையென்னாது வழங்குவர்.*
*27 பொல்லார் செலுத்தும் பலி அருவருக்கத்தக்கது;*
*தீய நோக்கத்தோடு அவர்கள் செலுத்தும் பலி*
*இன்னும் அருவருக்கத்தக்கதன்றோ?*
*28 பொய்ச்சான்று கூறுபவன் கெட்டழிவான்;*
*உன்னிப்பாய்க் கேட்பவன் பேச்சோ*
*என்றைக்கும் ஏற்புடையதாகும்.*
*29 பொல்லார் முகத்தில் போலி வீரம் காணப்படும்;*
*நேர்மையானவர் தம் நடத்தை சீரானது*
*என்னும் உறுதியுடனிருப்பார்.*
*30 ஆண்டவரின் எதிரில் நிற்கக் கூடிய*
*ஞானமுமில்லை,*
*விவேகமுமில்லை,*
*அறிவுரையுமில்லை.*

*31* **போர் நாளுக்கென்று**
**குதிரையை ஆயத்தமாக வைத்திருக்கலாம்;**
**ஆனால் வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே.**

*நீதிமொழிகள் 21:1-31*

## சிந்தனைக்கு

*வசனம் 21:1*
*வாய்க்கால் நீரைப் போல மடைமாற்றி, கடவுளால் வழிநடத்தப்பட்ட மன்னர்கள், சில சான்றுகள்:*
*- யோசேப்புக்குச் செவிமடுத்த பார்வோன் (தொடக்க நூல் 41:38-44)*
*- எரேமியாவுக்குச் செவிமடுத்த நெபுகாத்னெச்சர் (எரேமியா 25:9)*
*- தானியேலுக்குச் செவிமடுத்த சைரசு மற்றும் தாரியு (தானியேல் 6:28)*

*வேற்றினத்தார் நடுவே தமது மாட்சி இலங்க, கடவுள் எத்தனை முறைகள் பார்வோனின் உள்ளத்தைப் புரட்டிப் போட்டார் என்பதை விடுதலைப் பயணம் 7 ~ 14 பகுதியில் நாம் வாசிக்கிறோம். மேலும் பார்க்க, திருவெளிப்பாடு 17:12-13&17.*

*வசனம் 21:2*
*பார்க்க,16:1-3&9 & 17:3 மற்றும் குறிப்புகள். கேள்வியாக, 24:11-12.*

*வசனம் 21:3*
*கடவுள் ஏற்கும் பலிகள், பார்க்க, 15:8 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 1 சாமுவேல் 15:22; திருப்பாடல் 40:6; எசாயா 1:11&16-17; ஒசேயா 6:6; ஆமோஸ் 5:21-24; மீக்கா 6:6-8.*

*வசனம் 21:4*
*பார்க்க, 6:17 & 11:2 மற்றும் குறிப்புகள்.*

வசனம் 21:5-8
நுண்ணறிவோடு ஊக்கமாகச் செயல்படுவோர், தீய எண்ணத்தோடு வஞ்சிப்போர் – ஒப்பீட்டு வசனங்கள்.

வசனம் 21:5-6
செல்வத்தோடு தொடர்புடைய இரு வசனங்கள்.

வசனம் 21:5
பார்க்க,10:4 & 19:2 மற்றும் குறிப்புகள்; மேலும் பார்க்க, 28:20.
பதறாத காரியம் சிதறாது. நம்பிக்கை கொண்டோன் பதற்றம் அடையான் (எசாயா 28:16).

வசனம் 21:6
பார்க்க, 10:2 & 13:11 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, 2 பேதுரு 2:3.

வசனம் 21:7
பார்க்க, 1:18-19 & 12:6 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, எரேமியா 7:9-11&15.

வசனம் 21:8
பார்க்க, 2:13-15; எசாயா 59:7-8.

வசனம் 21:9
பார்க்க, 18:22 & 19:13 மற்றும் குறிப்புகள்.

வசனம் 21:10
பார்க்க, யாக்கோபு 4:6.

வசனம் 21:11
இணை, 19:25.

வசனம் 21:12
தீயோரின் செயல்களைக் கண்ணோக்கும் கடவுள், திருப்பாடல் 37:34-39, 73:17-20.

*வசனம் 21:13*
*பார்க்க, 14:31 மற்றும் குறிப்பு. உதவாதோர், உதவி பெறுவதில்லை; இணை, மத்தேயு 7:2 & 18:30-34; யாக்கோபு 2:13. மேலும் பார்க்க, எசாயா 1:15; மீக்கா 3:4; செக்கரியா 7:13.*

*உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர், தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும், பரிவு காட்டவில்லையென்றால், அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்? (1 யோவான் 3:17)*

*வசனம் 21:14*
*மறைவான நன்கொடை, வேறு வகையில், 15:27 மற்றும் குறிப்பு. பார்க்க, 17:8. மேலும் பார்க்க, 17:23 & 18:16 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 21:15*
*பார்க்க, 11:10 மற்றும் குறிப்பு.*
*நீதிக்காகப் போராடிய, எங்கோ ஒரு நெல்சன் மண்டேலா விடுவிக்கப்பட்டால், உலகமெங்கும் மகிழ்ச்சி பொங்குகிறது. நீதியும் அதன் அடிப்படையில் எழும் அன்பும், பொதுவானது – நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் அன்றோ! (மத்தேயு 5:6).*

*நம்முள் நீதி உணர்வுள்ளோரில் எத்தனை பேர் போராட ஆயத்தம்? கிறிஸ்து இயேசு நீதிக்காகச் சாட்டையை எடுத்தாரே! நாம் பாவத்திற்குச் செத்து நீதிக்கென்று வாழ, அவர் சிலுவை சுமந்தாரே! (உரோமையர் 6:11-13)*

Δ
*"...திகிலுண்டாக்கும்" –*
*OV, அழிவுமாம்; எபிரேய மொழியில், mekh-it-taw / மெகிட்டா; dissolution, terror, ruin என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டில் 11 முறை பயன்படுத்தப்பட்டுள்ள இச்சொல், நீதிமொழிகள் நூலில் மட்டும் 7 முறை இடம்பெற்றுள்ளது.*

*வசனம் 21:16*
*பொல்லாரின் அழிவு, பார்க்க, திருப்பாடல் 49:13-14.*

*வசனம் 21:17*
*விரயமான செலவுகளை விரும்புவோர் ஒருபோதும் செல்வராக முடியாது.*

Δ

*"... ஏழையாவார்" –*
*OV, தரித்திரனாவான்; மூலச் சொல், makh-sore / மக்சோர்; deficiency, penury, poverty என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டில் 13 முறையும், நீதிமொழிகள் நூலில் மட்டும் 7 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*வசனம் 21:18*
*மொர்தக்காய்க்கெனத் தானே நாட்டிய தூக்கு மரத்திலேயே தூக்கிலிடப்பட்ட, தீயோன் ஆமான் (எஸ்தர் 7:9-10). பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா பிற்பகல் தாமே வரும் (குறள்#319).*

*வசனம் 21:19*
*பார்க்க, வ.9. மேலும் பார்க்க, 19:13 மற்றும் குறிப்பு. குடிசை வீடு (மூலச் சொல்லின் பொருளில், மொட்டை மாடியின் ஓரத்தில்) என்று அங்கு சொல்லப்பட்டது, இங்கு அதனினும் கடுமையான பாலை நிலத்தில் துணையேதுமின்றி இன்பமாக வாழலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.*

*வசனம் 21:20*
*ஒப்பிடுக, வ.17. வேறு சொற்களில், 8:21; பார்க்க, திருப்பாடல் 112:3.*
*மழைக்காலத்திற்காக உணவைச் சேகரிக்கும் எறும்புகள் போல (6:6-8), ஞானமுள்ளோர் நடந்து கொள்வர். யோசேப்பு அப்படிப்பட்ட ஞானத்தோடு செயல்பட்டார் (தொடக்க நூல் 41:47-49).*

*வசனம் 21:21*
*பார்க்க, 8:17-18, 15:9, 22:4; மத்தேயு 5:6; 1 கொரிந்தியர் 15:58.*

*இரக்கமுடைய நேர்மையாளரிடம் அன்புகூரும் ஆண்டவர், மன உறுதியோடு நற்செயல்புரிந்து, மாட்சி, மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடும் அவர்களுக்கு, நிலைவாழ்வை வழங்குவார். (உரோமையர் 2:7)*

*வசனம் 21:22*
*வேறு சொற்களில், 20:18 & 24:5-6. ஞானமே வலியது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தும் சாலமோன் அரசர், சபை உரையாளர் 7:19, 9:15-16.*

*சான்றாகப் பார்க்க: யோசுவாவின் காலந்தொட்டு, அதுவரையில் வெல்ல முடியாததாக இருந்த எபூசியரின் கோட்டையைக் கைப்பற்றிய தாவீது அரசர், 2 சாமுவேல் 5:6-7&9.*

*வசனம் 21:23*
*உள்ளத்தின் நிறைவையே பேசும் வாய் மற்றும் நாவடக்கம் குறித்த முந்தைய குறிப்புகள், பார்க்க, 4:23, 13:3, 18:21. இந்த வசனத்தின் அழுத்தம், காத்தல் என்ற சொல்லில் உள்ளது.*

*வசனம் 21:24*
*வ.4ன் நீட்சி.*
*செருக்கு, இறுமாப்பு – இவற்றோடு எள்ளி நகையாடிப் பெருமை கொள்ளும் போக்குடையோர் அழிவின் வழியில் விரைந்து பயணிப்போர். மேலும் பார்க்க, 6:17 & 11:2 மற்றும் குறிப்புகள். யான் எனது என்னும் செருக்கு அறுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் (குறள்#346). செருக்கும், சினமும், சிறுமையும் இல்லார் பெருக்கம் பெருமித நீர்த்து (குறள்#431).*

*வசனம் 21:25-26*

*கனவிலும் நினைவிலும் ஆசைகளை மட்டுமே விதைத்துக் கொண்டு நாள்களைப் போக்கும் சோம்பேறி, தன் வாழ்வின் தேவைகளுக்காகச் சிறிதும் முயலான். மேலும் பார்க்க, 6:6 மற்றும் குறிப்பு.*

*வசனம் 21:26*

*பார்க்க, 22:9.*

*திருட்டை விட்டு மீளத் திருடர்களை அழைக்கும் பவுலடிகள், (எபேசியர் 4:28), 'உழைப்பின் நோக்கமே ஈகை' என்று அறிவுறுத்துகிறார். ஈதல், இசைபட வாழ்தல் அதுவல்லது, ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள்#231).*

*வசனம் 21:27*

*பார்க்க, 15:8 மற்றும் குறிப்பு.*

*பொல்லார் செலுத்தும் பலி, பொல்லாங்கினால் விளைந்தது; மனம் திருந்தாத அவர்கள், இன்னும் தீய எண்ணங்களைச் சுமந்து வாழ்கின்றனர். அத்தகையோரின் பலி ஒருபோதும் கடவுளின் திருமுன் ஏற்றுக் கொள்ளப்படாது. நினைவுகூருக, மனம் திருந்திய சக்கேயுவின் அறிக்கையும், ஆண்டவரின் ஆசியும், லூக்கா 19:8-9.*

*வசனம் 21:28*

*பொய்ச் சான்று, பார்க்க, 6:19 மற்றும் குறிப்பு.*

Δ

*"உன்னிப்பாய் கேட்பவன்..." –*

*இந்த வசனத்தில், குற்றம் - அதன் விசாரணையின் தொடர்பில் இவ்வாறு சொல்லப்பட்டது எனலாம். நடந்த குற்றம், அதன் பின்னணி, அதில் தொடர்புடையோர் குறித்த விசாரணையை நடத்தும் ஒருவர், உன்னிப்பாகக் கேட்டு, நுண்ணறிவோடு வினவினால் மட்டுமே சரியான அறிக்கை தர இயலும்.*

*வசனம் 21:29*
*பொல்லார் முகத்தில் தெரிவது வீரத்தின் போலியான தோற்றம். நேர்மையாளரின் முகப் பொலிவோ அவர்களின் உளவுறுதியின் வெளிப்பாடு.*

*வசனம் 21:30*
*பார்க்க, 16:1-9.*
*நாம் அறிந்ததும் அறியாததுமான நுண்ணறிவின் வடிவம் கடவுள்; நமது அறிவின் ஆழத்திற்கும், ஆற்றலின் விரிவுக்கும் எட்டாத மாட்சியே இறை. அத்தகைய ஆண்டவரின் எதிரில் நிற்கக்கூடியது, நமது தாழ்மை மட்டுமே.*

*வசனம் 21:31*
*வெற்றி அருளும் ஆண்டவர், பார்க்க, திருப்பாடல் 20:7, 33:16-18; எசாயா 31:1; எரேமியா 9:23-24; எசேக்கியேல் 39:20-21; ஒசேயா 1:7; செக்கரியா 12:4-5.*

✝

# 20 நீதிமொழிகள் 22

## (சாலமோனின் நீதிமொழிகள் – தொடர்ச்சி)

*1 திரண்ட செல்வத்தைவிட*
*நற்பெயரைத் தெரிந்துகொள்வது மேல்;*
*வெள்ளியையும் பொன்னையும்விடப்*
*புகழைப் பெறுவதே மேல்.*
*2 செல்வருக்கும் வறியவருக்கும்*
*பொதுவான ஒன்று உண்டு:*
*ஏனெனில்,*
*அனைவரையும் உண்டாக்கியவர் ஆண்டவரே.*
*3 எதிரில் வரும் இடரைக் கண்டதும்*
*விவேகமுள்ளவர் மறைந்து கொள்வார்;*
*அறிவற்றோர் அதன் எதிரே சென்று*
*கேட்டுக்கு ஆளாவர்.*
*4 தாழ்மையுள்ளவர்களுக்கும்*
***ஆண்டவரிடம் அச்சம் உடையவர்களுக்கும்***
*கிடைக்கும் பயன்,*
*செல்வமும் மேன்மையும் நீடித்த ஆயுளுமாகும்.*
*5 நேர்மையற்றவர் வழியில்*
*முள்ளும் கண்ணியும் இருக்கும்;*
*விழிப்புடன் இருப்பவர்*
*அவற்றினருகில் செல்லமாட்டார்.*
*6 நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு;*
*முதுமையிலும் அவர்*
*அந்தப் பழக்கத்தை விட்டு விடமாட்டார்.*
*7 செல்வர் ஏழையை அடக்கி ஆளுவார்;*
*கடன்பட்டவர் கடன் கொடுத்தவருக்கு அடிமை.*
*8 அநீதியை விதைப்பவன் கேட்டை அறுப்பான்;*
*அவனது சீற்றம் அவனையே எரித்துவிடும்.*
*9 கருணை நிறைந்தவர் தம் உணவை*
*ஏழைகளோடு பகிர்ந்து உண்பார்;*
*அவரே ஆசி பெற்றவர்.*
*10 ஏளனம் செய்வோனை வெளியே துரத்து,*
*சண்டை நின்றுவிடும்;*

சச்சரவும் பழிச்சொல்லும் ஒழியும்.
11 ஆண்டவர் தூய உள்ளத்தினரை விரும்புகிறார்;
இன்சொல் கூறுவோர் அரசனது நட்பைப் பெறலாம்.
12 அறிவுடையோரைக் காப்பதில்
ஆண்டவர் கண்ணாயிருக்கிறார்;
கயவனின் வழக்கைத் தள்ளுபடி செய்கிறார்.
13 "வெளியே சிங்கம் நிற்கிறது;
வீதியில் கால் வைத்தால் கொல்லப்படுவேன்"
என்கிறான் சோம்பேறி.
14 பரத்தையின் வாய் ஓர் ஆழமான படுகுழி;
ஆண்டவரின் சினத்திற்காளானவர்
அதில் போய் விழுவார்.
15 பிள்ளையின் இதயத்தில்
மடமை ஒட்டிக்கொண்டிருக்கும்;
கண்டித்துத் திருத்தும் பிரம்பால்
அதை அகற்றி விடலாம்.
16 செல்வராகும் பொருட்டு
ஏழைகளை ஒடுக்குகிறவனும்,
செல்வருக்குப் பொருள் கொடுக்கிறவரும்
ஏழையாவார்கள்.

## (முதுமொழிகள் முப்பது)

(வசனங்கள் 22:17 ~ 24:21)

(பைபிள் வசனங்களுக்கு இடையே, ஒவ்வொரு முதுமொழி அல்லது அதன் தொகுப்புகளுக்கு இடப்பட்டுள்ள தலைப்புகள் என்னுடையவை - அவை அடைப்புக்குறிகளுக்குள் தரப்பட்டுள்ளன.)

## (முன்னுரை)

17 ஞானிகள் போதித்ததை நான் உனக்குக் கூறுகின்றேன், செவி கொடுத்துக் கேள்; நான் புகட்டும் அறிவை மனத்தில் ஏற்றுக்கொள். 18 அவற்றை நீ உள்ளத்தில் பதிய வைத்துக்கொண்டு, தேவைப்படும்போது எடுத்துரைக்கக் கூடுமானால் உனக்கு மகிழ்ச்சியுண்டாகும். 19 நீ ஆண்டவரை நம்ப

*வேண்டுமென்று அவற்றை நான் உனக்கு இன்று தெரியப்படுத்துகிறேன். 20 அறிவும் நல்லுரையும் தரக்கூடிய முப்பது முதுமொழிகளை நான் உனக்கென்றே எழுதி வைத்திருக்கிறேன் அல்லவா? 21 அவற்றைக்கொண்டு மெய்ம்மையை உன்னால் விளக்கக் கூடும்.*

## ***முதுமொழி # 1***
## ***(ஆதரவற்றோரை வஞ்சித்தல்)***

*22 ஒருவர் ஏழையாய் இருக்கிறார் என்று அவரை வஞ்சிக்காதே; ஒருவர் ஆதரவின்றி இருக்கிறார் என்று அவரை நீதிமன்றத்தில் சிறுமைப்படுத்தாதே. 23 ஏனெனில்,* **ஆண்டவர் அவர்களுக்காக வாதாடுவார்***; அவர்களது உயிரை வாங்கப் பார்க்கிறவர்களின் உயிரை அவர் பறித்துக்கொள்வார்.*

## ***முதுமொழி # 2***
## ***(சினம்)***

*24 கடுஞ்சினங்கொள்பவனோடு நட்புக்கொள்ளாதே; எரிச்சல்கொள்பவனோடு தோழமை கொள்ளாதே. 25 அப்படிச் செய்தால் அவர்களின் போக்கை நீயும் கற்றுக்கொள்வாய்; உன் உயிர் கண்ணியில் சிக்கிக் கொள்ளும்.*

## ***முதுமொழி # 3***
## ***(பிணை நிற்றல்)***

*26 பிறருக்காக ஒருபோதும் பிணையாய் நில்லாதே; பிறர் கடனுக்காக ஒருநாளும் பிணையாய் நிற்காதே. 27 அந்தக் கடனைத் திருப்பிக்கொடுக்க உனக்கு ஒரு வழியும் இல்லாதிருந்தால், நீ படுத்திருக்கையில் உன் படுக்கையும் பறிபோய்விடுமன்றோ?*

## *முதுமொழி # 4*
## *(நில எல்லையை மாற்றுதல்)*

*28 வழிவழிச் சொத்துக்கு உன் மூதாதையர் குறித்து வைத்த எல்லையை நீ மாற்றி அமைக்காதே.*

## *முதுமொழி # 5*
## *(அலுவலில் திறமை)*

*29 தம் அலுவலில் திறமை காட்டுகின்ற ஒருவரைப் பார்; அவர் பாமர மனிதரிடையே இரார்; அரசு அவையில் இருப்பார்.*

*நீதிமொழிகள் 22:1-29*

## சிந்தனைக்கு

*வசனம் 22:2,7,9,16&22-23*
*செல்வத்தின் அடிப்படையில் அன்பர்கள் நடுவே பாகுபாடு செய்வது, பார்க்க, யோபு 31:13-23. மேலும் வாசிக்க, யாக்கோபு 2:1-9.*

*ஐந்து விரல்களும் ஒன்று போல் இராது என்கிறோம். ஏனெனில் வேறுபாடுகள் இயல்பு, இயற்கை. ஆனால் பாகுபாடு செய்வது மனிதர்களாகிய நாம். எந்தவொரு அடிப்படையிலான பாகுபாட்டையும் பைபிள் ஆதரிக்கவில்லை. பார்க்க, 1 கொரிந்தியர் 12:12-26. மேலும் பார்க்க, கலாத்தியர் 3:28; கொலோசையர் 3:11.*

*வசனம் 22:1*
*பார்க்க, 3:4 & 10:7.*
*இதற்கு முன்னர் செல்வத்தை ஞானத்தோடு ஒப்பிட்டு, ஞானமே சிறந்தது என்று அறிவுறுத்திய சாலமோன், நற்பெயரையும் புகழையும்*

*செல்வத்தோடு ஒப்பிட்டு, புகழே நாம் விரும்பி அடையத்தக்கது என்கிறார்.*

*ஒருவருக்கு அவரை அறிந்தோர் தருவது, நற்பெயர்; புகழோ அறியாதோரிடமும் பரவுவது. இரண்டுமே ஒருவரின் வாழ்விற்குப் பிறகும் நிலைத்திருப்பது. எனவேதான் சாலமோன் சொல்கிறார்: "விலையுயர்ந்த நறுமணத் தைலத்தைவிட நற்புகழே மேல். பிறந்த நாளைவிட இறக்கும் நாளே சிறந்தது" (சபை உரையாளர் 7:1). நத்தம் போல் கேடும், உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கு அல்லால் அரிது (குறள்#235).*

*வசனம் 22:2*
*இணை, 29:13; பார்க்க, யோபு 31:15.*
*Δ*
*செல்வரும் வறியவரும் –*
*ஒப்பிடுக, 14:31 & 19:17. மேலும் பார்க்க, 14:19, 15:3. மேலும் ஒப்பிடுக, கிறிஸ்து இயேசுவின் அருள்மொழி, மத்தேயு 5:45.*

*செல்வருக்கான அறிவுரையே முந்தைய வசனம். செல்வர் குவிக்கும் பொருள்களை ஆண்டவர் கண்ணோக்குவதில்லை; ஆனால் அவர்களின் ஈகையை அவர் மனதில் கொள்வார். ஈகையே செல்வரின் மணிமுடி ஆகும். உரைப்பார் உரைப்பவை எல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ் (குறள்#232).*

*வசனம் 22:3*
*இணை, 14:16 & 27:12; பார்க்க, 14:16 குறிப்பு. மேலும் பார்க்க, எசாயா 26:20.*

*வசனம் 22:4*
*வேறு சொற்களில், 21:21; அதன் குறிப்பு காண்க.*
*"ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கின்றாரே! நேர்மையைக்*

*கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுளுக்கு முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர, வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்?" (மீக்கா 6:8)*

*வசனம் 22:5*
*வேறு சொற்களில், 16:17; அதன் குறிப்பு காண்க.*

*வசனம் 22:6*
*ஒப்பிடுக, 19:18. பார்க்க, எபேசியர் 6:4. சிறு வயதிலிருந்தே இறைமொழிகளில் பயிற்றுவிக்கப்பட்ட திமொத்தேயு, 2 திமொத்தேயு 3:15.*

*இளமையில் கல்.*
*ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?*
*பசுமரத்து ஆணி போல், இள மனதில் பதித்தல் எளிது.*

*இறைவழியில் குழந்தைகளைப் பயிற்றுவிப்பது பெற்றோர்களின் பொறுப்பு, இணைச் சட்டம் 11:19, 32:46; மேலும் பார்க்க, 1:8-9&6:20. இது பொறுப்பு என்பதால் தப்பிக்கவோ, சாக்குப்போக்குச் சொல்லவோ இடமேயில்லை. இந்தப் பொறுப்பு, பெற்றோரோடு முடிந்து விடாமல், பெற்றோரின் பெற்றோர் வரை நீள்கிறது, இணைச் சட்டம் 4:9.*

*நமது இல்லங்களில் உறுதியோடு நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று: நற்பழக்கங்களைப் பிள்ளைகளுக்குள் சிறு வயதிலேயே ஏற்படுத்துதல்.*

***அழுது அடம் பிடிக்கும் பிள்ளைக்கு அப்போதே கண்டித்து உணர்த்தாவிடில், வளர்ந்த பிறகு, அதற்காகக் குடும்பமே கண்ணீர் விட நேரிடும்.***

*வசனம் 22:7*
*பார்க்க, 18:23 மற்றும் குறிப்பு.*

*வசனம் 22:8*
*விதைப்பது எதுவோ அதையே அறுப்போம், யோபு 4:8; வேறு சொற்களில், 11:18; கலாத்தியர் 6:7-9. கிறிஸ்து இயேசுவின் அருள்மொழி, மத்தேயு 26:52.*

*வசனம் 22:9*
*பார்க்க, 21:26 மற்றும் குறிப்பு. பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (குறள்#322).*

*வசனம் 22:10*
*பார்க்க, 15:12 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 6:14, 15:18, 16:28; திருப்பாடல் 101:5.*

*வசனம் 22:11-12*
மொழிபெயர்ப்புச் சிக்கலுள்ள வசனங்கள். எபிரேய மற்றும் கிரேக்க பைபிள்களின் அடிப்படையில் பொது மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

*வசனம் 22:11*
*"ஆண்டவர் தூய உள்ளத்தினரை விரும்புகிறார்" – OV, சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள்; KJV, he that loveth pureness of heart; ஆங்கில செப்டுவஜிண்டு, The Lord loves holy hearts. பார்க்க, திருப்பாடல் 17:15, 73:1; மத்தேயு 5:8; எபிரேயர் 12:14.*

Δ

*"இன்சொல் கூறுவோர் அரசனது நட்பைப் பெறலாம்" –*
*யார் மாட்டும் இன்புறூஉம் இன் சொலவர்க்கு, துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் (குறள்#94). பெருமை தேடித் தரும் வாய்மொழி, சபை உரையாளர் 10:12. அத்தகையோரை அரசருக்கரசரான ஆண்டவரும் ஏற்றுக் கொள்கிறார், திருப்பாடல் 24:3-5; மத்தேயு 5:8.*

*வசனம் 22:12*
*அறிவுடையோர்–*
*பார்க்க, 2:2 மற்றும் குறிப்பு.*
*ஆண்டவரும் மீட்பருமாகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவே மெய்யறிவு, 2 பேதுரு 1:2-8.*

Δ

*"அறிவுடையோரைக் காப்பதில் ஆண்டவர் கண்ணாயிருக்கிறார்" –*
*OV, கர்த்தருடைய கண்கள் ஞானத்தைக் காக்கும்; பொது மொழிபெயர்ப்பில், பண்பாகுபெயராக "அறிவுடையோர்" ஆனது.*

*வசனம் 22:13*
*இணை, 26:13. பார்க்க, 6:6-11 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 22:14*
*பார்க்க, 2:16, 5:3, 7:5, 9:18.*
*ஒப்பிடுக, 23:27. அங்கு செயலின் விளைவு சொல்லப்பட்டுள்ளது. இங்கு, பரத்தையின் வாய் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். வஞ்சக மொழிகளால் ஒருவனை வீழ்த்துவதற்கு எச்சரிக்கையாக இருக்க சாலமோன் இவ்வாறு குறிப்பிடுகிறார். ஆக, தொடக்கத்திலேயே தீங்குக்கு விலகிவிட அவர் அறிவுறுத்துகிறார்.*

Δ

*"ஆண்டவரின் சினத்திற்காளானவர் அதில் போய் விழுவார்" –*
*ஒரு நிலைமையில், தீயோரை ஆண்டவர் கைவிட்டு விடுவார்; அத்தகையோரே பரத்தையின் சொல்லில் மயங்கி விழுவர் (சபை உரையாளர் 7:26).*

*வசனம் 22:15*
*பார்க்க, 13:24, 23:13-14.*

Δ

*பிள்ளைகளின் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் மடமை –*

*அகற்றப்பட வேண்டிய, ஆனால் உறுதியாக ஒட்டிக்கொண்டு, நிலைத்து விட்ட மடமைகள்; நாம் நமது பிள்ளைகளை இறை ஒழுங்கில் வளர்க்க முயன்றாலும், நமது பிள்ளைகள் சமுதாயத்திற்குள் வளர்கின்றனர். சமுதாயத்திலிருந்து ஜாதி, சமய, இன வெறுப்புகளைக் கற்றுக்கொள்ளாமல் இறைவழியில் வாழக் கற்றுத்தரவேண்டியது, காக்க வேண்டியது பெற்றோரின் கடமை.*

*வசனம் 22:16*
*செல்வரையும் ஏழையையும் உண்டாக்கியவர் கடவுள், வ.2. அவரே ஒவ்வொருவரையும் அவரவர் செய்கைகளுக்கு ஏற்பத் தண்டிப்பவர் (12:14, 24:12).*

## முதுமொழிகள் முப்பது - முன்னுரை

*வசனம் 22:17 ~ 24:34*
*தொகுக்கப்பட்ட வெவ்வேறு ஞானிகளின் முதுமொழிகள். சாலமோனுக்குக் கடவுள் அருளிய ஞானத்தைச் சோதித்து அறிய, அனேக அரச வழிமரபினரும், ஞானிகளும் அவரைக் காண வந்தனர் (1 அரசர்கள் 4:29-34 & 10:24; 2 குறிப்பேடு 9:1-2&23). அப்படி வந்தோரோடு நடந்த உரையாடல்களின் வழியே அவர் பெற்ற முதுமொழிகளின் தொகுப்பே இந்தப் பகுதி எனலாம்.*

*கி.பி. 19ம் நூற்றாண்டில், அமின்-எம்-ஒப் தந்த அறிவுரைகள் (The Instructions of Amen-em-Ope) என்ற எகிப்திய சிந்தனைத் தொகுப்பு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இந்த "முப்பது முதுமொழிகளில் பதினோரு முதுமொழிகள் அந்த நூலின் ஒன்பது அறிவுரைகளாக உள்ளன" என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எகிப்திய நூலின் காலம், கி.மு. 11ம் நூற்றாண்டு முதல் 6ம் நூற்றாண்டு வரை இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எது முந்தையது என்பதோ, எது சிறந்தது என்பதோ*

*நீதிமொழிகள் நூலோடு ஒப்பிட்டு விவாதிக்கப்பட வேண்டியதில்லை; ஏனெனில் இந்தப் பகுதி ஏனைய ஞானிகளின் முதுமொழிகளின் தொகுப்பு என்பதை சாலமோனே குறிப்பிடுகிறார், 22:17. தனது நூலில் இடம்பெற இவை தகுதியுள்ள அறிவுரைகள் என்ற முடிவோடு அவர் தொகுத்துள்ளார் என்று கருதலாம்.*

*இந்தப் பகுதியை எஸ்றா தொகுத்திருக்கலாம் என்று சில பைபிள் அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறு சொல்லச் சரியான ஆதாரங்கள் ஏதும் இல்லை.*

*10:1 முதல் 22:16 வரை உள்ள வசனங்களில், ஒரே வசனத்தில், ஒன்றுக்கு ஒன்று முரணான இரு நிலைகள் அல்லது ஒன்றை வலியுறுத்தும் பின் பகுதி என்று இருக்கிறது. ஆனால் 22:17 முதல் 24:34 வரை உள்ள பகுதியில், ஒரே கருத்தை வலியுறுத்த, பெரும்பாலும் ஒன்றுக்கு மேற்பட்ட வசனங்கள் உள்ளன (எட்டு வசனங்கள் மட்டுமே ஒற்றை வசன அறிவுரைகள்).*

*இந்தப் பகுதியின் அறிவுரைகள் "படுத்தாதே," "நில்லாதே" போன்று எதிர்மறை அறிவுரைகளாகவும், அதற்கான காரணத்தை அறிவுறுத்துவனவாகவும் உள்ளன.*

*22:17 ~ 24:34 வரை உள்ள இந்தப் பகுதியில், முதுமொழிகள் முப்பது ஒரு பகுதியாகவும் (22:17 ~ 24:22), பல்வகை முதுமொழிகள் மற்றுமொரு பகுதியாகவும் (24:23-24:34) உள்ளன.*

*பிள்ளாய் / மகனே என்ற விழிப்புச் சொல், அதிகாரம் 1 ~ 9 பகுதியில் 15 முறையும், 10:1 ~ 22:16 பகுதியில் 1 முறையும், 22:17 ~ 24:34 பகுதியில் 5 முறையும், 25:1 ~ 29:27 பகுதியில் 2 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சொற் குறிப்புக்குப் பார்க்க, 1:8 குறிப்பு.*

*வசனம் 22:17-21*
*முப்பது முதுமொழிகளுக்கான ஓர் அறிமுகம்.*

*வசனம் 22:17-18*
*"...கேள்...ஏற்றுக் கொள்...பதிய வை... ...எடுத்துரை" – கேட்பதன் நோக்கமும் பயனும். பார்க்க, 2:2, 5:1-2, 23:12.*

*வேறு ஞானிகளின் முதுமொழிகள் என்ற போதிலும், இளையோர் செவிமடுக்க சாலமோன் அழைக்கிறார், அறிவுறுத்துகிறார். குழந்தைகளின் மொழியிலும், பாலகரின் மழலையிலும் வலிமையை உறுதிப்படுத்தும் கடவுள், பிலயாமுக்குத் தமது வாக்கை அருளிய கடவுள், இந்த ஞானிகளுக்கும் தமது ஞானத்தை அருளி ஆசீர்வதித்திருக்கிறாரே!*

*வசனம் 22:18*
*நுண்ணறிவோடு எடுத்துரைத்தல், 8:6-9 & 10:13 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, கொலோசையர் 4:6; 1 பேதுரு 3:15.*

*வசனம் 22:19*
*ஒப்பிடுக, 3:5-6 மற்றும் குறிப்பு.*

*வசனம் 22:20*
*OV, "நீ உன்னை அனுப்பினவர்களுக்குச் சத்திய வார்த்தைகளை மறுமொழியாகச் சொல்லும்படி..." – உண்மையோடு, நம்பிக்கைக்குரிய வழியில் செயல்படும் தூதர், பார்க்க, 13:17 மற்றும் குறிப்பு.*

*இன்றைக்கு நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவின் வாக்கைச் சுமந்து செல்லும் தூதர்களே! சிறந்த தூதர்களாக, வினாக்களுக்கு சரியான, தெளிவான விளக்கத்தை இனிய சொற்களில் தர ஆயத்தத்தோடே இருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 3:3 & 8:23; எபேசியர் 6:20, OV, 6:19). அன்பு, அறிவு,*

*ஆராய்ந்த சொல்வன்மை - தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று (குறள்#682).*

*வசனம் 22:22-23*
*தேவையில் வாடுவோருக்கு ஆதரவாக விளங்கும் கடவுள், பார்க்க, 14:31 மற்றும் குறிப்பு. கூடுதலாக, விடுதலைப் பயணம் 23:6. மேலும் பார்க்க, யோபு 5:15-16 & 31:16-21; திருப்பாடல் 12:5; செக்கரியா 7:10.*

Δ
*வழக்காடும் ஆண்டவர், 23:10-11; திருப்பாடல் 140:12; எரேமியா 51:36.*

*வசனம் 22:24-25*
*பார்க்க, 12:16 மற்றும் குறிப்பு; மேலும் பார்க்க, 29:22. தீய நட்பு நல்லொழுக்கத்தைக் கெடுக்கும், 1 கொரிந்தியர் 15:33.*

*மனதில் தோன்றும் எரிச்சல் சினமாக வளர்ந்து வெளிப்படும். இத்தகைய இயல்புடையோரைத் தவிர்க்க சாலமோன் அறிவுறுத்துகிறார். அறச்சீற்றமும், சிறுமை கண்டு பொங்குவதும் ஏற்புடையதே! சவுக்கைக் கையிலெடுத்த கிறிஸ்து இயேசுவை, நம்பிக்கையாளரைப் பாவத்தில் விழச் செய்வோரின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டிக் கடலில் தள்ளுதல் நல்லது என்று போதித்த கிறிஸ்து இயேசுவை நினைவில் கொள்வோம். இறைத் திட்டம் அறிந்து, இறைவழியில் செயல்படக் கற்றுத் தேருவோம்.*

*வசனம் 22:26-27*
*பிணை நிற்றல், விரிவாக, 6:1-5 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 22:28*
*மேலும், 23:10. வழிவழிச் சொத்தின் எல்லையை மாற்றுதல், பார்க்க, 15:25 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, இணைச் சட்டம் 27:17; யோபு 24:2.*

*வசனம் 22:29*

*"...பாமர மனிதரிடையே..." –*

*பாமரன், khaw-shoke / காஷோக், 'mean' in KJV, 'obscure men' in ESV / NIV, 'common people' in NRSV; இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல்; நேரடிப் பொருள், இருண்ட; பாமர அல்லது சாமானிய மனிதன் என்று பொருள்கொள்ளலாம்.*

*அலுவலில் திறமையோடும் ஈடுபாட்டோடும் செயலாற்ற வேண்டும். சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரிய பணியாளர், பெரிய பொறுப்புகளில் அமர்த்தப்படுவார், மத்தேயு 25:21. இவ்வுலகில் ஆண்டவர் அமரவைத்த பணியில் நேரிய வழியில் செயல்படுவோர், தங்கள் உரிமைப் பேறை, அவரிடமிருந்தே பெறுவர், கொலோசையர் 3:23-25.*

*நிர்வாகத் திறன் கொண்ட யோசேப்பு, இசைத் திறனுடைய தாவீது, வெண்கலத்தில் வடிவாற்றல் கொண்ட ஈராம், நுண்ணறிவு மிக்க தானியேல் போன்றோர் அரசர்களோடு அமர்ந்த பாமரர்கள். பேரரசராகிய கடவுளும், தாம் அருளிய பணிகளில் சீராகச் செயல்படுவோரை எப்போதும் கண்ணோக்குகிறார்; இதனை உணர்ந்து பொறுப்போடு நமது பணிகளை நிறைவேற்றுவோம்.*

✝

## முதுமொழி # 6
## (ஆளுவோரோடு இணக்கம்)

*1 ஆளுநர் வீட்டில் நீ உணவுகொள்ள உட்காரும்போது, உனக்குமுன் இருப்பதை நன்றாய்க் கவனித்துப் பார். 2 உனக்கு அப்போது அடங்காப் பசி இருந்தாலும், உன் தொண்டையில் கத்தி இருப்பதாக நினைத்துக்கொள். 3 அவர் தரும் சுவையான உண்டியை உண்ண ஆவல் கொள்ளாதே; அது உன்னை வஞ்சிக்க விழையும் உணவாயிருக்கலாம்.*

## முதுமொழி # 7
## (பொருள் தேடும் அவா)

*4 செல்வராக வேண்டுமென்று பாடுபட்டு உருக்குலைந்து போகாதே; அதனால் உனது அறிவை இழந்து விடாதே. 5 இல்லாமற்போகும் பொருள் மேல் நீ கண்ணும் கருத்துமாய் இருப்பானேன்? கழுகுபோல அது தனக்குச் சிறகுகளை வளர்த்துக்கொண்டு வானத்தில் பறந்து போகுமன்றோ?*

## முதுமொழி # 8
## (விருப்பமின்றித் தரும் விருந்து)

*6 கஞ்சர் தரும் உணவை உண்ணாதே; அவரது அறுசுவை உண்டியை உண்ண ஆவல் கொள்ளாதே. 7 அவர் தமக்குள் கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பார்; "உண்டு பருகு" என்று அவர் சொன்னாலும், அவருக்கு உன்மீது அக்கறை இல்லாதிருக்கலாம். 8 நீ உண்ட உணவை வாந்தியெடுக்க நேரிடும்; நீ உரைத்த புகழுரை பயனற்றதாகும்.*

## *முதுமொழி # 9*
## *(ஆள் அறிந்து பேசுதல்)*

*9 மதிகேடர் காதில் விழும்படி எதையும் பேசாதே; உன் அறிவுரைகளை அவர் மதிக்கமாட்டார்.*

## *முதுமொழி # 10*
## *(ஆதரவற்றோரின் உரிமைகளை மதித்தல்)*

*10 வழிவழிச் சொத்தின் எல்லையை மாற்றி அமைக்காதே; உன் நிலத்தின் எல்லையைத் தள்ளித் தள்ளி, திக்கற்றவர்களின் நிலத்தை எடுத்துக்கொள்ள முயலாதே.*
*11 ஏனெனில் அவர்களின் மீட்பர் வல்லவர். அவர் அவர்கள் சார்பில் உனக்கு எதிராக வழக்காடுவார்.*

## *முதுமொழி # 11*
## *(செவிச் செல்வத்தில் நாட்டம்)*

*12 நல்லுரை கேட்பதில் சிந்தனையைச் செலுத்து; அறிவூட்டும் மொழிகளுக்குச் செவிகொடு.*

## *முதுமொழி # 12*
## *(இளமையில் திருத்துதல்)*

*13 பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்தத் தயங்காதே; பிரம்பினால் அடித்தால் சாகமாட்டார்கள்.*
*14 நீ பிரம்பினால் அவர்களை அடித்தால், அவர்களைப் பாதாளத்துக்குத் தப்புவிக்கிறவனாவாய்.*

## *முதுமொழி # 13*
## *(ஞானமுள்ள தந்தையின் மகிழ்ச்சி)*

*15 பிள்ளாய், நீ ஞானமுள்ளவனாயிருந்தால், நான் மனமகிழ்ச்சி அடைவேன்.*
*16 உன் நாவு*

*நேர்மையானவற்றைப் பேசினால், என் உள்ளம் களிகூரும்.*

## *முதுமொழி # 14 (இறையச்சம் அருளும் பரிசில்)*

*17 வளமுடன் இருக்கும் பாவிகளைப்போல நீயும் இருக்கவேண்டுமென்று ஏங்காதே; ஆண்டவரிடம் எப்போதும் அச்சம் உள்ளவனாயிரு. 18 அப்பொழுது உன் வருங்காலம் வளமானதாயிருக்கும்; உன் நம்பிக்கையும் வீண்போகாது.*

## *முதுமொழி # 15 (வரம்பற்ற குடியும் தீனியும்)*

*19 பிள்ளாய், இதைக் கவனி; ஞானமுள்ளவனாயிரு; உன் மனத்தை நன்னெறியில் செலுத்து. 20 குடிகாரரோடு சேராதே; பெருந்தீனியரோடு சேர்ந்துகொண்டு அவர்களைப் போலப் புலால் உண்ணாதே. 21 குடிகாரரும் பெருந்தீனியரும் முடிவில் ஏழைகளாவர்; உண்டு குடித்த மயக்கம் கந்தையை உடுத்தும்.*

## *முதுமொழி # 16 (தாய் தந்தையின் மகிழ்ச்சி)*

*22 பெற்ற தந்தைக்குச் செவிகொடு; உன் தாய் முதுமை அடையும்போது அவளை இழிவாக எண்ணாதே. 23 மெய்ம்மையை விலைகொடுத்தாயினும் வாங்கு; ஆனால் அதை விற்பனை செய்யாதே; அவ்வாறே ஞானத்தையும் நல்லுரையையும் உணர்வையும் விலை கொடுத்துப்பெறு. 24 நேர்மையான பிள்ளையின் தந்தை மிகவும் களிகூர்வார்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்ற தகப்பன் அவர் பொருட்டு மகிழ்ச்சி அடைவார். 25 நீ உன்*

*தந்தையையும் உன் தாயையும் மகிழ்விப்பாயாக; உன்னைப் பெற்றவளைக் களிகூரச் செய்வாயாக.*

## *முதுமொழி # 17*
## *(பரத்தைமை)*

*26 மகனே, நான் சொல்வதைக் கவனி; என் வழிகளில் உன் கவனத்தைச் செலுத்து. 27 விலைமகள் ஒரு படுகுழி; பரத்தை ஓர் ஆழ்கிணறு. 28 அவள் கள்வனைப்போலப் பதுங்கி இருப்பாள்; அவள் ஏராளமான பேரை வஞ்சிப்பவள்.*

## *முதுமொழி # 18*
## *(தீதினும் தீது மது)*

*29 துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், காரணம் தெரியாமல் கிடைத்த புண்கள், கலங்கிச் சிவந்திருக்கும் கண்கள் – இவை அனைத்தையும் அனுபவிப்பவர் யார்? 30 திராட்சை இரச மதுவில் நீந்திக் கொண்டிருப்பவர்களே, புதுப்புது மதுக் கலவையைச் சுவைத்துக் களிப்பவர்களே, 31 மதுவைப் பார்த்து, "இந்த இரசத்தின் சிவப்பென்ன! பாத்திரத்தில் அதன் பளபளப்பென்ன!" எனச் சொல்லி மகிழாதீர். அது தொண்டைக்குள் செல்லும்போது இனிமையாயிருக்கும்; 32 பிறகோ அது பாம்புபோலக் கடிக்கும்; விரியனைப் போலத் தீண்டும். 33 உன் கண் என்னென்னவோ வகையான காட்சிகளைக் காணும்; உன் உள்ளத்திலிருந்து ஏறுமாறான சொற்கள் வெளிப்படும். 34 கடல் அலைமீது மிதந்து செல்வது போலவும், பாய்மர நுனியில் படுத்துறங்குவது போலவும் உனக்குத் தோன்றும். 35 "என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், நான் அதை உணரவில்லை; நான் எப்போது விழித்தெழுவேன்? அதை இன்னும் கொடுக்கும்படி கேட்பேன்" என்று நீ சொல்வாய்.*

*நீதிமொழிகள் 23:1-35*

# சிந்தனைக்கு

*வசனம் 23:1-3*
*ஆளுநர் அல்லது ஆளுவோர்; இன்றைய நமது வாழ்வில், உயர்பதவி வகிக்கும் அலுவலர்கள் என்று சொல்லலாம். அத்தகைய ஒருவர் தனக்குக் கீழ் பணிபுரியும் ஒருவரை விருந்துக்கு அழைத்தால், அந்த அழைப்புக்குப் பின்னால் வேறு நோக்கம் இருக்கக்கூடும் (வ.7). அப்படி ஏதும் இல்லாவிடினும், உணவு மேசைப் பழக்கங்கள் (table manners / etiquettes) போன்ற பண்பாட்டு மறிப்புகள் உள்ளன. இவையெல்லாம், ஒருவரின் எதிர்காலத்தை, அமைதியான நல்வாழ்வை முடிவுசெய்யக் கூடியவை. இதுகுறித்த எச்சரிக்கை உணர்வோடு ஒருவர் நடந்துகொள்ள வேண்டும். ஒப்பிடுக, 16:14 மற்றும் குறிப்பு.*

*வசனம் 23:2*
*தொண்டையில் கத்தி –*
*முயன்று வலிந்து ஒரு தவறைத் தவிர்த்தல். ஒப்பிடுக, பாவத்தைத் தவிர்க்கும் வாழ்க்கையை வலியுறுத்தும் கிறிஸ்து இயேசு, மத்தேயு 18:8-9. பவுலடிகளின் சாட்சியுள்ள வாழ்க்கை, 1 கொரிந்தியர் 9:27. மேலும் பார்க்க, பிலிப்பியர் 3:19.*

*வசனம் 23:4-5*
*பார்க்க, 28:20-21; மத்தேயு 6:19; யோவான் 6:27; உரோமையர் 12:13&16; எபிரேயர் 13:5. பொருளாசை குறித்த பவுலடிகளின் எச்சரிக்கை, 1 திமொத்தேயு 6:9-10. மேலும் பார்க்க, 11:28 மற்றும் குறிப்பு.*

*சோம்பேறித்தனத்தை மீண்டும் மீண்டும் கண்டிக்கும் சாலமோன் (6:6-11 மற்றும் குறிப்புகள்), இங்கு செல்வம் சேர்க்க, ஒருவர் வருந்தி உழைப்பதைக் கண்டிக்கிறார். சபை உரையாளர் சாலமோனின் திருமொழிகள், சபை உரையாளர் 2:1-11.*

**செல்வம் குவிக்கும் வெறி:**
*பணம் வாழ்க்கைக்குத் தேவையான ஒன்று. ஆனால் அதுவே இறுதி நோக்கமாக ஒருக்காலும் இருக்க முடியாது. மனிதராக வாழும் ஒவ்வொருவருக்கும் ஓர் இலக்கு இருக்க வேண்டும்; அதனை அடைவதற்கு எந்த அளவுக்குப் பணம் தேவையோ அந்த அளவுக்குப் பணம் இருந்தால் போதுமானது; அதற்கு மேல் சேர்க்கும் பணம் ஒருவருக்கு வீணே! தலைமுறைக்குத் தேடிச் சேர்க்கும் செல்வம், இளம் தலைமுறையினரின் இறைப்பற்றைக் குலைத்து, பொருளாசை கொண்டோராக அவர்களை மாற்றும் ஆபத்து உள்ளது.*

*பற்றுள்ளம் என்னும் இவறன்மை, எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று (குறள்#438). பணத்தைப் பணமாக / பொருளாக வைத்திருப்பது பாவம், ஏனெனில் அதனைக் கொண்டு பயனுள்ள நன்மைகளைப் பலருக்கும் செய்ய இயலும்.*

***இன்று நமது இலக்கு என்ன? நமது பிள்ளைகளுக்குக் கல்வியின் இலக்கு என்று எதனை நாம் குறிக்கிறோம்?***
*ஒவ்வொரு திருச்சபையின் வங்கி இருப்பு எவ்வளவு?*
*நாள்தோறும் திருச்சபைகள் செய்யும் அறச்செயல்கள் என்னென்ன?*
*சபைகளைப் பெரும் பெரும் மாளிகைகள் போலக் கட்டி எழுப்புகிறோம்!*
*பல இலட்சங்கள் சபைக் கோபுரத்திற்கு மட்டும் செலவு செய்கிறோம்.*
*ஆதரவற்றோருக்கு நாளும் ஒருவேளை உணவு தரும் திருச்சபை ஏதேனும் உண்டா?*
*ஏன் சபைகளில் ஈகை இல்லை?*
***ஏனெனில் நமது குடும்பங்களில் ஈகை இல்லை. இதனைக் குறித்துச் சபைகளில் யாரும் எண்ணிப் பார்ப்பதுமில்லை.***

*வசனம் 23:4*

*"உனது அறிவை இழந்து விடாதே" –*

*பொன், வெள்ளி போன்ற எந்தச் செல்வத்தையும் கொடுத்து ஞானத்தை அடைவதே இலக்கு என்பதை வலியுறுத்தும் சாலமோன், அதிலிருந்து விலகிவிடாமல் உறுதியாக இருப்பதை அறிவுறுத்துகிறார்.*

*வசனம் 23:6-8*

*மேலும் மேலும் பொருள் சேர்ப்பதில் மட்டுமே குறியாக இருக்கும் கஞ்சர் தரும் அறுசுவை உணவு, ஒப்பிடுக, 22:9 & 28:22; இணைச் சட்டம் 15:9.*

*வசனம் 23:8*

*உண்ட உணவை வாந்தி எடுத்தல் –*

*விருந்தளிப்பவரின் உண்மையற்ற தன்மை வெளிப்படும்போது நேர்மையாளரின் உள்ளத்தில் ஏற்படும் அருவருப்பான உணர்வு.*

*வசனம் 23:9*

*சொல் செல்லுமிடத்தில் சொல்லுதல்; உவமை வழியாக ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்மொழி, மத்தேயு 7:6. பார்க்க, 12:1 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 9:7-8, 14:7; திருப்பாடல் 1:1.*

*வசனம் 23:10-11*

*ஆதரவற்றோரின் உரிமைகளை மதித்தல், 22:28&23 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 23:11*

*"...மீட்பர்..." –*

*பொதுவாகப் பழைய ஏற்பாட்டில் சொல்லப்படுவது, மீட்கவும் காக்கவும் பொறுப்புடையதொரு நெருங்கிய உறவினர், லேவியர் 25:25-28&47-55; ரூத் 2:20, 3:12-13 & 4:1-4. அப்படி ஒரு மீட்பர் இல்லாதோர்க்கு ஆண்டவரே மீட்பர், யோபு 19:25; திருப்பாடல் 68:5 & 78:35, 103:4; எசாயா 59:20.*

*இறைப்பற்று மிக்க வாழ்வில், கைவிடப்பட்டோர் என்று எவரும் இல்லை. அல்லேலூயா!*

*வசனம் 23:12*

*22:17 வசனத்துடன் இந்த வசனத்தை ஒப்பிட்டு, அடுத்து வரும் வசனங்களுக்கு ஒரு முன்னுரை போல, அறிமுகம் போல இவ்வசனம் உள்ளது என்ற கருத்து உள்ளது. ஆனால் இதனை அடுத்து வரும் வசனங்கள், அறிவுரையின் தொடர்ச்சியாகவே உள்ளன. மேலும் பார்க்க, வ.19&26.*

*நீதிமொழிகள் நூல் இளையோருக்கு அறிவுரையாக எழுதப்பட்ட நூலாகும். எனவே செவி மடுக்க, ஏற்று நடக்க இளையோருக்கான அறைகூவலை சாலமோன் தொடர்ந்து தருகிறார்.*

Δ

*"நல்லுரை கேட்பதில் சிந்தனையைச் செலுத்து" –*

*நல்லுரை / புத்திமதி என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள மூலச் சொல், moo-sawr / மூசார் என்பது; இது chastisement, correction, discipline, instruction என்றெல்லாம் பொருள்படும். எனவே இதனை நாம் ஒழுங்குபடுத்தல், சீர் பொருந்துதல், பயிற்றுவித்தல் என, செயல்பாட்டோடு இணைத்துப் புரிந்துகொள்ளுதல் சிறப்பு.*

*வசனம் 23:13-14*

*பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்துதல், பார்க்க, 13:24 மற்றும் குறிப்பு.*

*வசனம் 23:13*

*"பிரம்பினால் அடித்தால் சாக மாட்டார்கள்" –*

*குழந்தைகளைக் கொடுமைப்படுத்துவதை ஊக்கப்படுத்துவதாக நாம் இதனைப் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, அளவுக்கு அதிகமான செல்லத்தால், கண்டிப்பதையே தவிர்க்கும் பெற்றோரை, சரியான முறையில் குழந்தைகளை வளர்த்தெடுக்க ஊக்குவிக்கும்*

*வகையில் இவ்வாறு சாலமோன் சொற்களைப் பயன்படுத்துகிறார்.*

*அன்போடும் அக்கறையோடும், சிறந்த மனிதனாக நம் குழந்தைகளை வளர்ப்பதில் நமக்குள்ள பொறுப்பை அவர்கள் புரிந்துகொள்ளுமாறு செய்துவிட்டால், இந்தச் சவால் எளிதானதே!*

*வசனம் 23:15-16*
*பார்க்க, 10:1 மற்றும் குறிப்பு. நமது நேரிய வாழ்வில் மகிழ்ச்சி அடையும் தந்தையாம் கடவுள், திருப்பாடல் 147:11; அவரே வெற்றி அருள்வார், திருப்பாடல் 149:4.*

*வசனம் 23:16*
*உள்ளம் –*
*OV, உள்ளிந்திரியங்கள்; KJV, reins; மூல மொழியில், kil-yaw / கில்யா; சொற்படி, சிறுநீரகம் என்று பொருள்படும்; உருவகமாக உள்ளம்.*

*வசனம் 23:17-18*
***வாழ்வளிக்கும் அச்சம் என்றால் அது இறையச்சம் மட்டுமே.** நீதிமொழிகள் நூலில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் பண்பு நலம்; நூலின் கருப்பொருள். மேலும் பார்க்க, 1:7 மற்றும் குறிப்பு.*

*வசனம் 23:17*
*"வளமுடன் இருக்கும் பாவிகளைப் போல நீயும் இருக்க வேண்டும் என்று ஏங்காதே" –*
*வேறு சொற்களில், 3:31. மேலும் பார்க்க, 24:19; திருப்பாடல் 37:1&7, 73:3-12.*

*வசனம் 23:18*
*இறையச்சத்தோடு நேரிய வழியில் நடக்கும் ஒருவருக்கு, பின்னடைவோ, தேக்க நிலையோ வாழ்வில் இருக்க வாய்ப்புண்டு; அத்தகைய நிலையை எதிர்கொள்வோருக்கு, சாலமோனின் ஊக்கம் தரும் திருமொழி.*

*வசனம் 23:19-21*
*பார்க்க, 20:1 மற்றும் குறிப்பு.*
*குடியும் தீனியும் - இன்றைக்கு நாம் மிகவும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள். குடியும் தீனியும் ஒன்றோடு ஒன்று இணைந்து பயணிப்பவை, இணைச் சட்டம் 21:20; குடித்து உண்பாரோடு சேர்ந்திருக்கும்போது, எவர் ஒருவராலும் கட்டுப்படுத்த முடியாதது, 'இன்னும் கொஞ்சம்' என்ற இச்சை. அந்த வழியில் தொடர்ந்து பயணிப்பவர், ஊக்கமான உழைப்பை இழந்து, ஆக்கத்தை இழந்து, வறுமையில் வாட நேரிடும்.*

Δ

*பெருந்தீனியர்–*
*"ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்; இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய்; ஒருநாளும் என் நோவு அறியாய் - இடும்பைகூர் என் வயிறே, உன்னோடு வாழ்தல் அரிது!" (நல்வழி#11). ஆனால் தீனி என்பது வயிற்றின் விருப்பம் என்பதைவிட, சுவை நாடும் நாவின் தொல்லை - அடக்க முடியாத மனதின் இச்சை. பாலோடு ஆயினும், காலம் அறிந்து உண் (கொன்றைவேந்தன்#61). இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம் போல், கழி பேர் இரையான்கண் நோய் நிற்கும் (குறள்#946). தெரியான் தீ அளவு அன்றிப் பெரிது உண்ணின், நோய் அளவின்றிப் படும் (குறள்#947).*

*மோசமான உணவுப் பழக்கத்தின் உடனடி விளைவு, பசிச் சுழற்சி மாறுபாடு. உண்ட உணவைச் செரிக்க நமது உள்ளுறுப்புகள் கூடுதலாக வேலை செய்வதால், நாம் சோர்வாகவும், அயர்வாகவும் உணர்வோம்; உண்ட உணவு செரிமானம் ஆகாது; கூடுதலாகச் சுரக்கும் ஹைட்ரோ குளோரிக் அமிலம் இதயம் உட்பட உள்ளுறுப்புகளில் எரிச்சலை உண்டாக்கும். இன்சுலின் தொடர்பிலான சிக்கல்கள் விளையும். கொழுப்பு படிந்த கல்லீரல் போன்ற நிலைகளும், உடல் பருமனும் நேரிடும்.*

*சிறுவயதிலேயே உடல் பருமனோடு வளரும் இன்றைய இளையோர், பணிக்குச் சென்ற பிறகு அமையும் பணிச் சூழல், கற்றுக் கொள்ளும் நலமற்ற உணவுப் பழக்கங்கள், தகுதியாகக் கருதப்படும் குடி – இவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டால், நன்கு வாழ வேண்டிய வயதில், இளையோருக்கு இவை நோய்களைப் பரிசளிக்கின்றன. பவுலடிகள் 1 கொரிந்தியர் 10:23ல் உரைத்ததை நினைவில் கொள்வோம்.*

*தக்கவற்றைத் தேவைக்கேற்ற அளவு உண்ணுதலும், நேரத்தில் உண்ணுதலும் இன்றியமையாதவை - பயிற்றுவிக்கப்பட வேண்டியவை. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின், உயிர்க்கு ஊறுபாடு இல்லை (குறள்#945).*

*வசனம் 23:20*
*"... புலால் உண்ணாதே" –*
*புலால் உண்ணவே உண்ணாதே என்று சொல்லப்படவில்லை – மாறாக, பெருந்தீனியரோடு (KJV, riotous eaters; ESV / NRSV, gluttonous eaters) புலால் உண்ணாதே என்று சொல்லப்பட்டுள்ளது.*

*புலால் உணவும் உண்ண, நாம் அனுமதிக்கப்பட்டுள்ளோம், தொடக்க நூல் 9:3. எனவே தேவையற்ற உணவுச் சர்ச்சைகள் நமக்கு வேண்டாம் (பார்க்க, மத்தேயு 15:11; 1 திமொத்தேயு 4:3-4).*

*வசனம் 23:22-25*
*வ.15-16ன் நீட்சியே இந்த முதுமொழி. அங்கு தந்தைக்குச் சொல்லப்பட்டது, இங்கு தாய்க்கும் சொல்லப்படுகிறது.*

*தாயும் தந்தையும் இயைந்து செயல்படுவோர். அந்த இணக்கம் இல்லாவிடில், இல்லம் இல்லறமாக இருக்காது. இளையோரின் வெற்றி, பெற்றோராக*

*அது தாய் தந்தையின் வெற்றி. அதைத் தனித் தனியாகப் பங்கு பிரிக்க வேண்டியதில்லை.*
*வெற்றி மூவரின் பெருமையே!*

*வசனம் 23:22*
*பார்க்க, 1:8 மற்றும் குறிப்பு.*
Δ
*"உன் தாய் முதுமை அடையும் போது, அவளை இழிவாக எண்ணாதே" –*
*ஓர் ஆணின் வாழ்க்கையில் தந்தையின் இடத்தை நிரப்ப வேறு ஒருவர் வருவதில்லை; ஆனால் திருமணத்திற்குப் பிறகு, ஓர் இளைஞனுக்குத் தாயின் இடத்தை நிரப்ப ஒரு பெண் வருகிறார் (தொடக்க நூல் 24:67). அதன் பொருட்டு, தாய் தன் மகனிடம் ஆறுதல் தேடும் முதிர் வயதின் காலத்தில், மகன் தன் தாயைப் புறக்கணிக்கலாகாது; கணவனாக, தந்தையாக, புதிய பொறுப்புகள் அந்த இளைஞனுக்கு வந்துவிட்டது என்பதால், அவன் தன் தாய்க்கு ஆறுதல்தரும் பொறுப்பை உதாசீனப்படுத்தக் கூடாது.*

*நீளும் முதிர் காலத்தில், மருத்துவ உதவி தேவைப்படும் இன்றைய நாட்களில், தாய் தந்தையரைப் பேணுதல் இன்றியமையாதது. இது வாக்குத்தத்தத்தோடு இணைந்த இறைக் கட்டளை என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது (விடுதலைப் பயணம் 20:12).*

*இன்றைய சூழலில், திருமணமான பெண்ணுக்கும் அவளுடைய பெற்றோருக்கான பொறுப்புகள் உள்ளன; அதற்கு அவளின் கணவன் உட்பட, யாரும் தடை விதிப்பது சரியன்று. திருமணம் வழியே உறவுகள் விரிவடைவது, ஆணுக்கு மட்டுமல்லாமல் பெண்ணுக்குமே! இதை உணர்ந்த குடும்பங்களில், மகிழ்ச்சி மென்மேலும் பெருகும்.*

*வசனம் 23:23*
*"... வாங்கு ... விற்பனை செய்யாதே ... விலைகொடுத்துப் பெறு" –*
*பார்க்க, 4:4-9 மற்றும் குறிப்புகள்.*
*ஞானத்தின் அருமை பெருமைகளை எண்ணி, அதனை அடைவதை வலியுறுத்தும் சாலமோன் அரசர்.*

*பெற்ற ஞானத்தை விற்க முடியுமோ என ஒருவர் எண்ணலாம்; வாழ்க்கையில் கடைப்பிடிக்காத எதுவும் காணாமல் போகும், இல்லாது ஒழியும்.*

*வசனம் 23:25*
*"உன்னைப் பெற்றவளைக் களிகூரச் செய்வாயாக" –*
*பிள்ளைகளின் வெற்றி, தந்தைக்கு மகிழ்ச்சி என்றால், தாய்க்குக் களிப்பு! ஏனெனில் பிள்ளைகள் வளர்ப்பில் தாயின் பங்களிப்பு அதிகம். இன்றைய உலகில், வீட்டு வேலைகளை முடித்து, பணிபுரியும் இடத்தில் பொறுப்புகளைச் செவ்வனே செய்து, தன் பிள்ளைகளின் நலங்களைப் பேணி, அவர்களை வளர்த்தெடுக்கும் கடமையையும் நிறைவேற்றுபவர் தாய்.* ***அதிகமாகப் பாடுபடுபவரே, அதன் பலனில் அதிகமாக மகிழ்வுறுவார்.***

*வசனம் 23:26-28*
*பாலியல் சீர்கேட்டைத் தொடர்ந்து சாடும் சாலமோன், 2:16-19, 5:1-23, 6:20 ~ 7:27. மேலும் பார்க்க, 9:13-18 & 22:14.*

*வசனம் 23:29-35*
*பார்க்க, 20:1 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, வ.19-21, 21:17, 31:4-5; 1 சாமுவேல் 25:36-37; திருப்பாடல் 75:8; எசாயா 5:11&22, 28:7; எபேசியர் 5:18.*
*பைபிளில் வேறு எங்கும் காண முடியாத அளவுக்கு, மதுப் பழக்கத்தின் கொடிய விளைவுகளை விவரித்து, சாலமோன் ஞானி தீட்டிய விரிவான, தெளிவான, கூரிய சொல்லோவியம். கொடுக்குள்ள, கசந்த திரவம்*

*தொண்டைக்குள்ளே இறங்குவதை -ஒரு குடிகாரனைத் தவிர- யார்தான் இனிது எனச் சொல்ல முடியும்?*

*இன்றைக்குப் போதை உலகம் என்பது விரிவடைந்து விட்டது. பன்னாட்டு அளவிலான கஞ்சா, அபின் போன்றவை மட்டுமல்லாமல், கொடைக்கானல் போன்ற நகர்களில் ஒருவகைக் காளான்களும் போதைப் பொருளாக உள்ளன. இருப்பினும், எளிதில் கிடைப்பதாகவும், சட்டப்படியானதாகவும் மது அருந்துதல் உள்ளது.*

*மனிதன் ஏன் போதையைத் தேடுகிறான்? வேதனையும் வலியும் தரும் இவ்வுலக வாழ்க்கையில் அவற்றை அவன் மறக்க விழைகின்றான் (31:6-7); வாழ்வின் முடிவற்ற தேடலை முடிவுக்குக் கொண்டுவர இதனை ஒரு குறுக்கு வழியாக அவன் எண்ணுகிறான். ஆனால் தேடலும் வலியும் வாழ்விற்கு இன்றியமையாதவை - முடிவற்றவை.*

***வலி இருக்கும் வரைதான் உடலில் உயிர்; வலியை உணரும் வரைதான் வாழ்க்கை - அதற்கான போராட்டம். வலியை மரத்துப் போகச் செய்யும் எதுவும், நம்மைக் கடவுளிடமிருந்து பிரிப்பதுவே. வலியை உணரும் வரைதான் மன்றாட்டு. அடுத்தவரின் வலியை உணராத ஒருவர், அவருக்காக மன்றாடிக் கடவுளோடு போராட முடியுமா?***

*எனவே உள்ளத்தின் வலியை மரத்துப் போகச் செய்யும் எந்தவொரு போதைக்கும் விலகி ஓடுவதே மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை.*

## முதுமொழி # 19
## (தீயோரைச் சேராமை)

*1 தீயோர் வளமுடன் இருப்பதைக் கண்டு மனம் வெதும்பாதே; அவர்களுடன் உறவு பாராட்டவும் விரும்பாதே. அவர்களுடைய தோழனாயிருக்க விரும்பாதே. 2 அவர்கள் மனம் கொடுமை செய்வதையே நினைத்துக்கொண்டிருக்கும்; அவர்கள் பேச்சு, தீமை விளைவிக்கும் பேச்சு.*

## முதுமொழி # 20
## (ஞானத்தின் சிறப்பு)

*3 ஞானம் வீட்டைக் கட்டும்; மெய்யறிவு அதை உறுதியாக அமைக்கும். 4 அருமையும் நேர்த்தியுமான பல பொருள்களால் அறிவு தன் அறைகளை நிரப்பும்.*

## முதுமொழி # 21
## (ஞானமே வலிமை)

*5 வீரரைவிட ஞானமுள்ளவரே வலிமைமிக்கவர்; வலிமை வாய்ந்தவரைவிட அறிவுள்ளவரே மேம்பட்டவர். 6 ஏனெனில், போரில் வெற்றிபெற ஆழ்ந்த சிந்தனை தேவை; கவனத்துடன் வகுக்கும் திட்டமே வெற்றிக்கு அடிப்படை.*

## முதுமொழி # 22
## (ஞானத்தின் இயல்பு)

*7 ஞானம் மூடருடைய அறிவெல்லைக்கு அப்பாற்பட்டது; எனவே, அவர் வழக்குமன்றத்தில் வாய் திறக்கமாட்டார்.*

## முதுமொழி # 23
## (தீமையைக் கருக்கொள்ளும் வஞ்சகம்)

*8 தீமைசெய்யத் திட்டமிடுபவன் வஞ்சனையாளன் என்னும் பெயர் பெறுவான். 9 மூடர்கள் பாவத்தைத் தவிர வேறெதற்காகவும் திட்டமிடுவதில்லை; ஒழுங்கீனரை மக்கள் அருவருப்பார்கள்.*

## முதுமொழி # 24
## (கடும் அலைகளை எதிர்கொள்ள ஆயத்தமாதல்)

*10 நிறைவுள்ள காலத்தில் உன் மனம் சோர்வடையுமானால், குறைவுள்ள காலத்தில் உன் ஆற்றல் இன்னும் குன்றிப்போகுமன்றோ?*

## முதுமொழி # 25
## (இறைநீதிக்காக நிற்றல்)

*11 கொல்லப்படுவதற்கு இழுத்துச் செல்லப்படுவோரைத் தப்புவிக்கப்பார்; கொலைக்களத்திற்குக் கொண்டு செல்லப்படுவோரைக் காப்பாற்றப்பார். 12 "அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்று சொல்வாயானால், இதயத்தில் இருப்பதை அறிபவர், உன் எண்ணத்தையும் அறிவார் அல்லவா? உன் உள்ளத்தைப் பார்க்கிறவர், அதை அறிவார் அல்லவா? ஒவ்வொருவருடைய செய்கைக்கும் ஏற்றபடி அவர் பயனளிப்பார் அல்லவா?*

## முதுமொழி # 26
## (தேனினும் இனிய ஞானம்)

*13 பிள்ளாய்! தேன் சாப்பிடு, அது நல்லது; கூட்டினின்று ஒழுகும் தேன் உன் வாய்க்குத் தித்திப்பாய் இருக்கும். 14 ஞானமும் அறிவும் உனக்கு*

*அவ்வாறே இனிமையாயிருக்கும். அவற்றை நீ அடைந்தால் முடிவில் உனக்குப் பயன் கிடைக்கும்; உன் நம்பிக்கை வீண்போகாது.*

## *முதுமொழி # 27*
## *(நல்லோரின் சிறப்பு)*

*15 கயவர் போல் பதுங்கியிருந்து நல்லவர் வீட்டைக் கெடுக்கப் பார்க்காதே; அவர் குடியிருப்பைப் பாழாக்கி விடாதே. 16* ***நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார்;*** *பொல்லார் துன்பம் வந்தவுடன் விழுந்துவிடுவர்.*

## *முதுமொழி # 28*
## *(தடுமாறும் எதிரியைத் தாங்குதல்)*

*17 உன் எதிரி வீழ்ச்சியுறும்போது நீ மகிழாதே; அவர் கால் இடறும்போது களிகூராதே. 18 நீ அப்படிச் செய்வாயானால், ஆண்டவர் அதைக் கண்டு உன் மீது சினம்கொள்வார்; அவருக்கு அவர் மீது இருக்கக்கூடிய சினம் தணிந்து போகும்.*

## *முதுமொழி # 29*
## *(தீயோரின் செழிப்பை விலக்குதல்)*

*19 தீயோரை முன்னிட்டு எரிச்சல் அடையாதே; வளமுடனிருக்கும் பொல்லாரைக் கண்டு மனம் வெதும்பாதே. 20 தீயவருக்கு வருங்காலத்தில் நல்வாழ்வு இராது; ஏனெனில் பொல்லாருடைய விளக்கு அணைந்து போகும்.*

## *முதுமொழி # 30*
## *(இறையச்சம் மேன்மை தரும்)*

*21 பிள்ளாய்! ஆண்டவருக்கும் அரசனுக்கும் அஞ்சி நட; கிளர்ச்சி செய்வாரோடு உறவுகொள்ளாதே. 22*

*ஏனெனில், திடீரென்று அவர்களுக்குக் கேடு வரும்; அந்த இருவரும் எத்தகைய கேட்டை வருவிப்பார்களென்பது யாருக்குத் தெரியும்?*

## *(பல்வகை முதுமொழிகள்)*

*23 ஞானிகளின் வேறு சில முதுமொழிகள்:*
*நீதித்தீர்ப்பு வழங்கும்போது ஓர வஞ்சனை காட்டுவது நேரியதல்ல. 24 குற்றம் செய்தவரை நேர்மையானவர் எனத் தீர்ப்பளிக்கும் நீதிபதியை மனிதர் சபிப்பர்; உலகனைத்தும் வெறுக்கும். 25 ஆனால், குற்றம் செய்தவரைத் தண்டிக்கும் நீதிபதிக்கு நலமுண்டாகும்; நற்பேறும் கிடைக்கும்.*

*26 நேர்மையான மறுமொழி கூறுபவரே அன்போடு அரவணைக்கும் நண்பராவார்.*

*27 வாழ்க்கைத் தொழிலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்; வயலை உழுது பண்படுத்து;* **பிறகு** *உன் வீட்டைக் கட்டியெழுப்பத் தொடங்கு.*

*28 தக்க காரணமில்லாதபோது அடுத்திருப்பாருக்கு எதிராகச் சான்று சொல்லாதே; உன் வாக்குமூலத்தில் அவருக்கு எதிராக உண்மையைத் திரித்துக் கூறாதே. 29 "அவர் எனக்குச் செய்தவாறே நானும் அவருக்குச் செய்வேன்; அவர் செய்ததற்கு நான் பதிலுக்குப் பதில் செய்வேன்" என்று சொல்லாதே.*

*30 சோம்பேறியின் விளைநிலம் வழியாக நான் நடந்து சென்றேன்; அந்த மதிகேடருடைய திராட்சைத் தோட்டத்தினூடே சென்றேன். 31 அதில் எங்கும் முட்செடி காணப்பட்டது; நிலம் முழுவதையும் காஞ்சொறிச் செடி மூடியிருந்தது; அதன் சுவர் இடிந்து கிடந்தது. 32 அதை நான் பார்த்ததும் சிந்தனை செய்தேன்; அந்தக் காட்சி எனக்குக் கற்பித்த பாடம் இதுவே: 33 இன்னும் சிறிது நேரம் தூங்கு; இன்னும் சிறிது நேரம் உறங்கு; கையை முடக்கிக்கொண்டு*

*இன்னும் சிறிது நேரம் படுத்திரு. 34* **அப்பொழுது** *வறுமை உன்மீது வழிப்பறிக் கள்வனைப்போலப் பாயும்; ஏழ்மை நிலை உன்னைப் போர் வீரனைப் போலத் தாக்கும்.*

*நீதிமொழிகள் 24:1-34*

## சிந்தனைக்கு

*வசனம் 24:1-2*
*மேலும், வ.19-20.*
*ஒப்பிடுக, 23:17 மற்றும் குறிப்பு.*

*எரிச்சல், பொறாமை மட்டும் இங்குக் குறிப்பிடப்படவில்லை; கூடுதலாக, தீயோரின் நலமும், வளமும் கருதியோ, தீயோர் என்று அறிந்தும் அவர்களுக்கு இன்றைய பொருள்சார் சமுதாயத்தில் கிடைக்கும் செல்வாக்கு / தகுதி கருதியோ, அவர்களோடு நட்புப் பாராட்டக் கூடாது; ஏனெனில் அது அவர்களைப் போலவே தீமை செய்யும் நாட்டத்தை ஏற்படுத்தி விடும். மனம் தூய்மை, செய்வினை தூய்மை இரண்டும், இனம் தூய்மை தூவா வரும் (குறள்#455).*

***நட்பு பாராட்டுதல் வேறு; திருப்பணி வேறு. பிணியாளர்க்கே மருத்துவர் வேண்டும்; எனவே தீயோரிடமும் ஊழியம் செய்ய வேண்டும்; ஆனால், நமது உள்ளம் தீமையை நாடிவிடக் கூடாது.***

*வசனம் 24:3-4*
*வீட்டைக் கட்டும் ஞானம், 9:1-6; வளம் பெருக்கும் ஞானம், 8:21; அது போன்ற இல்லத்தரசி, 31:10-31.*

*தீய வழியில் வரும் வளத்தைப் பாராதே என்று முந்தைய முதுமொழியில் சொன்ன சாலமோன்,*

*இங்கு ஞானத்தின் வழியில் பெருகும் வளத்தைச் சுட்டிக்காட்டுகிறார். நமது உள்ளத்தின் நாட்டம் எங்கே?*

*வசனம் 24:5-6*
*பார்க்க, 11:14 & 21:22 மற்றும் குறிப்புகள்.*
*தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் (குறள்#464).*

*வசனம் 24:7*
*பார்க்க, 14:6 மற்றும் குறிப்பு. மேலும், மூடர் தங்கள் மூடத்தனமான செயல்களை வாதிட வழியின்றி, வழக்காடு மன்றத்தில் வாய் திறக்க மாட்டார்கள்.*

*இன்றைக்கு வழக்காடு மன்றங்களில், தீர்ப்பிடும் இடத்தில் அமர்ந்திருப்போரின் ஞானம்தான் எத்தகையது!*

Δ
*"...வழக்கு மன்றம்..." –*
*OV, நியாயஸ்தலம்; மூலமொழியில், (நகர்) வாயில்.*

*வசனம் 24:8-9*
*விரிவாக, பார்க்க, 6:12-15 மற்றும் குறிப்பு.*

*வசனம் 24:10-12*
*இரண்டு முதுமொழிகள் என்ற போதிலும், இணைத்துப் பார்க்கும்போது, ஏனையோரின் துயர்மிகு நிலையில், நமது செயலற்ற மனநிலை இந்த வசனங்கள் வழியே கண்டிக்கப்படுகிறது. ஃபேன்னி கிராஸ்பி எழுதிய அருமையான பாமாலை:*
*Rescue the perishing,*
*Care for the dying,*
*Snatch them in pity from sin and the grave,*
*Weep over the erring one, lift up the fallen,*
*Tell them of Jesus the mighty to save.*

வசனம் 24:10
ஒப்பிடுக, எரேமியா 12:5. ஒப்பிட்டு உணர்க, 2 கொரிந்தியர் 11:23-30.
பின்வாங்குவோமானால், இறை ஆற்றல் அருளப்பட்டோரை நோக்கி ஆண்டவர் எழுப்பும் கேள்வி: "எலியா! நீ இங்கே என்ன செய்கிறாய்?" (1 அரசர்கள் 19:9)

இறைமக்கள் என்று சொல்லிக் கொள்ள நாம் இன்னும் செல்ல வேண்டிய தொலைவு எவ்வளவு என்று எண்ணிப் பார்ப்போமா? தன் தோழனையும் தளர்வுறச் செய்யாதபடி, அச்சமுற்றுச் சோர்ந்திருப்பவன் தன் வீட்டிற்குத் திரும்பிச் செல்லட்டும் என்று அனுப்பிவிட்டால் (இணைச் சட்டம் 20:8), இன்றைக்கு நம் வீட்டிற்கும் தொல்லை வந்து கதவைத் தட்டுமே!

வசனம் 24:11-12
ஒப்பிடுக, திருப்பாடல் 82:3-4; எசாயா 58:5-7.

கொல்லப்படுவதற்கு இழுத்துச் செல்லப்படுவோர் யார்?
ஸ்டேன் ஸ்வாமி போல நாட்டிற்கு எதிராகக் “கலகம்” செய்தோரா?
“மாட்டிறைச்சி” வைத்திருந்தோர் என அடித்து இழுத்துச் செல்லப்பட்டோரா?

இதற்கெல்லாம் நமது மறுமொழி என்ன? குஜராத்திலும் மணிப்பூரிலும் நடந்தவை எல்லாம், நாடெங்கும் நடக்கும் வரை -நம் ஒவ்வொருவரின் வீட்டுக் கதவுகளைத் தட்டும் வரை- நமது அமைதி தொடருமா?

வசனம் 24:12
பார்க்க, 5:21 & 21:2 மற்றும் குறிப்பு.

*வசனம் 24:13-14*
*பார்க்க, திருப்பாடல் 19:10-11, 109:103&111; எரேமியா 15:16. மேலும் பார்க்க, 23:18; திருப்பாடல் 58:11.*

*இளைஞர் அறிந்த ஒன்றை உவமையாகச் சொல்லி அவர்கள் அறியாத ஒன்றைப் புரிந்து கொள்ளச் செய்தல். தேன், இனிய சுவையுள்ளது மட்டுமல்ல, அது உடலுக்கு நலம் தருவது. அதுபோலவே, ஞானமும் இனியது, வாழ்க்கைக்குப் பயன் சேர்ப்பது. நம்பிக்கையூட்டி நல்வழியில் நடக்க நெறிப்படுத்துவது.*

*வசனம் 24:15-16*
*நல்லோரின் பெருமை அவர்களுக்கு ஆண்டவரோடு உள்ள ஐக்கியமே, பார்க்க, 23:11 மற்றும் குறிப்பு.*

*வசனம் 24:16*
*பார்க்க, மீக்கா 7:8.*
*பொல்லாருக்கான எச்சரிக்கை, திருப்பாடல் 34:19-20; எரேமியா 25:27.*

Δ
*"நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார்" – மனிதர்கள் எவரே ஆயினும் விழுதல் இயல்பு; அவர்களுள் நல்லோர், தங்கள் நேர்மையாலும், அறிவுத் தெளிவினாலும், இறைநம்பிக்கையின் உறுதியாலும் எழுந்து நிற்பர்; இலக்கை நோக்கிய தங்கள் பயணத்தை, தளர்வின்றி விடாது தொடர்வர்.*

*வசனம் 24:17-18*
*இணைத்து வாசிக்க, 25:21-22. பார்க்க, விடுதலைப் பயணம் 23:4-5; யோபு 31:29; திருப்பாடல் 37:24; ஒபதியா 1:12; மத்தேயு 5:44. இணை, 17:5.*

*"உன்மீது நீ அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூரு" என்பதில் எதிரியும் இருக்கிறார்; அவருக்கான இறைத் திட்டம் என்ன என்பது நமக்குத் தெரியாதே!*

வசனம் 24:19-20
பார்க்க, வ.1-2 மற்றும் குறிப்பு.

வசனம் 24:21-22
விரிவாக, சபை உரையாளர் 8:2-5; உரோமையர் 13:1-7; மேலும் பார்க்க, 1 பேதுரு 2:17.
Δ
"கிளர்ச்சி செய்வாரோடு உறவு கொள்ளாதே" – யாரோடு சேரலாம் என்பதில் எச்சரிக்கையோடு செயல்பட சாலமோனின் அறிவுரை.

**பைபிள் வழியே ஒரு வரலாற்றுப் பார்வை:**
இந்தப் பகுதியின் (அதி.23 ~ 24) நீதிமொழிகள் வேற்று ஞானிகள் சொன்ன முதுமொழிகளின் தொகுப்பு என்பதை நாம் அறிவோம். இஸ்ரயேலின் அரசர்களின் காலத்தில் கிளர்ச்சி கண்டிக்கப்பட்டதா என்பது நம்முன் உள்ள கேள்வி. அவர்களின் முதல் அரசர் சவுல்; தாவீது உட்பட எவரும் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவில்லை.

தாவீது யூதர்களின் அரசராக முடிசூட்டிக் கொண்ட பிறகு, அவருக்கு எதிராகக் கிளர்ச்சி எழுந்தது; சவுலின் மகன் இஸ்பொசேத்து கிளர்ச்சியாளரின் தலைவனாக, இஸ்ரயேலின் அரசனாக இருந்தான். இரண்டு அரசர்களுக்கும் இடையே, ஏழரை ஆண்டுகள் போர்கள் நடந்தன. அப்னேர் கொலை செய்யப்பட்ட பிறகு அந்தக் கலகங்கள் முடிவுக்கு வந்தன; மொத்த இஸ்ரயேலுக்கும் தாவீது அரசரானார். பிறகு, தாவீதுக்கு எதிராக அப்சலோம் கிளர்ச்சி செய்து, தான் கொல்லப்படும் வரை சிறிது காலம் அரசனாகவும் இருந்தான்.

கிளர்ச்சிகளுக்கு நடுவேதான் சாலமோன் அரசரானார். அவருக்குப் பிறகு, ரெகபெயாம் அரசரானார்;

*மீண்டும் யூதா - இஸ்ரயேல் பிரிவினைக்கும் தொடர் போர்களுக்கும் இவர் காரணமானார்.*

*அதுமுதல், இறைவாக்கினர் காலமும் தொடங்குகிறது. எலியா மற்றும் எலிசா, இறைவாக்கினரின் உச்சம். இவர்கள் உட்பட எந்த இறைவாக்கினரும் ஆட்சி உரிமை கோரவில்லை – ஆனால் அரசர்களின் தவறுகளுக்கு எதிராகத் தொடர்ந்து மக்கள் நடுவே செயல்பட்டனர் என்பது அரசர்கள் நூல்களில் வெளிப்படும் வரலாறு. அரசனுக்கு எதிராக அரசனைத் திருப்பொழிவு செய்ததையும் நாம் அறிவோம் (2 அரசர்கள் 9:1-10).* ***இறைவாக்கு உரைப்பது மட்டுமல்லாமல், அரசியல் பொறுப்பும் சாமுவேல் உட்பட அனைத்து இறைவாக்கினருக்கும் இருந்துள்ளது.*** *சாமுவேல் உட்படப் பலரும் மக்களால் கொண்டாடப்பட்ட இறைவாக்கினர் என்பதைப் பழைய ஏற்பாட்டில் நாம் காண முடியும். இதன் நீட்சியாகவே கிறிஸ்து இயேசுவின் ஊழியம் அமைகிறது. அவர் கிறிஸ்து என்பதால் அற்புதங்களும் அடையாளங்களும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன எனலாம்.*

*பைபிளுக்கு வெளியிலான வரலாறு என்பதும், வெவ்வேறு நாடுகளில், சமயத்திலும் ஆட்சியிலும்* ***ஆதிக்க மையங்களுக்கு எதிரான வரலாறே கிறித்தவ வரலாறு*** *என்பதை நாம் படித்து அறிந்து கொள்ள முடியும். அதன் உச்சமே பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய – மார்ட்டின் லூத்தர் போன்றோரால் – கிறித்தவம் பெற்ற எழுச்சி. அதன் வீச்சு, சமயத்தோடு நின்றுவிடவில்லை; அரசியல் தளத்திலும் மாறுதல்கள் நிகழ அது அடிப்படையாக அமைந்தது.*

*கிறிஸ்து இயேசு அளித்த கடுமையான அரசியல் அறிக்கை ஒன்றை லூக்கா 13:31-32ல் வாசிக்கிறோம். அங்கு அவர் ஏரோதை "நரி" என்று கடும் சொற்களால் குறிப்பிடுகிறார். அரசியல் அதிகாரம் கொண்ட*

*பரிசேயர்களோடு இயேசு எப்போதும் முரண்பட்டார். அவர் இறைமகன் என்பதால் முரண்பட்டார் என்று சொல்ல முடியாது; ஏனெனில் அவரே மானிட மகனாக வாழ்ந்தார். அப்படியானால் தன்னை முன்மாதிரியாக வைத்துச் சென்ற கிறிஸ்து நமக்குக் கற்றுத் தருவது என்ன?*

*இது மக்களாட்சியின் காலம். மன்னனின் விருப்பமெல்லாம் மக்கள் மீது இடப்படும் ஆணைகள் அல்ல. மாறாக, இன்றைக்கு நமக்கு எழுதப்பட்ட அரசியல் சட்டம் உண்டு. அந்த சட்டம் நாமே நமக்கு எழுதிக் கொண்டது ("We, the people of India..." என்றே அது தொடங்குகிறது). அப்படியானால், அந்த அரசியல் சட்டத்தைக் காப்பதும் முறையாகச் செயல்படச் செய்வதும் மக்களாகிய நமது கடமை. இஸ்ரயேலின் ஆளுகை என்பது யூத மரபில் வருவது, பைபிள் பார்வையில் அது மாறாதது. ஆனால் நமது ஆட்சி, மக்களாட்சி; எனவே அரசியல் சட்டத்தின் இறையாண்மை ஆள்பவர்களால் மதிக்கப்படுகிறதா என்று கண்காணிப்பது நமது கடமை. நாட்டின் குடிமக்களாக, நம்மில் யாரும் இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.*

*முதல் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்ட கே. டி. பால், விடுதலைப் போரில் காந்தியடிகளோடு பங்கேற்றவர். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர் என்று அவரைச் சொல்ல முடியுமா?*

*இந்திய மிசனரி சங்கத்தை (IMS) உருவாக்கிய, சீர்திருத்தத் திருச்சபைகள் ஒன்றிணையப் பாடுபட்ட, சீர்திருத்தத் திருச்சபைகளில் பேராயரான முதல் இந்தியர் வி. எஸ். அசரியா, இந்த நாடு ஒரு சமயச்*

*சார்பற்ற நாடாக உருவாகக் காங்கிரஸ் தலைவர்களோடு இணைந்து செயலாற்றியவர்.*

*விடுதலைப் போராட்ட வீரரும், காந்தியப் பொருளாதாரத்தை வடிவமைத்தவரும், முதல் திட்டக் குழுவின் உறுப்பினரும், நமது நாட்டின் கிராமப் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தவரும், சூழல் ஆர்வலருமான ஜே. சி. குமரப்பாவை நம்மில் எத்தனை பேர் அறிவோம்?*

*விடுதலைப் போராட்டக் காலத்தில், தமிழ் மண் தந்த மகத்தான கிறிஸ்தவத் தலைவர்கள் இவர்கள். அனைவரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, தங்கள் அழைப்பிற்கு உண்மையானவர்களாக, தங்கள் திருச்சபைக் கடமைகளையும் சிறப்பாக நிறைவேற்றியோர்.*

***வீடு > பணிபுரியும் இடம் > வீடு, ஓய்வுநாளில் ஆலயம் என்ற "வட்டத்துக்குள் வாழ்க்கை" என்று வாழ ஆண்டவர் நம்மை அழைக்கவில்லை.***

*படைப்பு அனைத்திற்கும் விடுதலையின் நற்செய்தி என்பதே நமக்கான அறைகூவல். நமது எண்ணங்களையும் வேண்டுதல்களையும் செயல்களையும் அந்த அறைகூவலின் அடிப்படையில் அமைப்போம். அப்போது, இறையரசு இந்த மண்ணில் மலர, நமது முதலடி தொடங்கும்.*

*வசனம் 24:23-34*
*முப்பது முதுமொழிகளுக்குப் பிறகு, சாலமோன் தொகுத்த வேறு சில முதுமொழிகள். இவை ஐந்து கருப்பொருள்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.*

*வசனம் 24:23-25*
*நீதியைத் திருப்புதலுக்கு எதிரான எச்சரிக்கை. பார்க்க, 17:15 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, லேவியர் 19:15; இணைச் சட்டம் 1:17, 16:19. கிறிஸ்து இயேசுவின் அருள்மொழி, யோவான் 7:24; பவுலடிகளின் அறிவுரை, 1 திமொத்தேயு 5:21. மேலும் பார்க்க, யாக்கோபு 2:1-9.*

*ஒவ்வொரு தீர்ப்பிலும் இறைநீதி வெளிப்பட வேண்டும்.*
*பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்பது தவறுக்குச் சரிக்குச் சரியான தண்டனை (Retributive Justice) எனும் தீர்ப்பு. தவறு செய்தவனைச் சீர்படுத்தும் தண்டனைத் தீர்ப்பு (Reformative Justice) என்பது வேறு வகை. மற்றொன்று, தவறு செய்தவனை நேரிய வழியில் நிலைநிறுத்தும் தண்டனைத் தீர்ப்பு (Restorative Justice). இன்றைய நமது தண்டனைச் சட்டங்களும், சிறைச்சாலைகளும் எவ்வாறு இருக்கின்றன?*

*நமது உச்ச நீதிமன்றம் எத்தனையோ முரணான - சாமானிய மக்களுக்கு எதிரான- தீர்ப்புகளை வழங்கியுள்ளது. இலட்சக்கணக்கான குடும்பங்களை உள்நாட்டு அகதிகளாக மாற்றி, பல இலட்சம் பேரைக் கண்ணீரில் கரைத்த ஒரு தீர்ப்பை, 2000ம் ஆண்டில் (வாஜ்பேயி தலைமையிலான ஒன்றிய அரசாங்கத்தின் ஆட்சியில்), சர்தார் சரோவர் அணை வழக்கில் நமது உச்ச நீதிமன்றம் தந்தது.* ***பெருநிறுவன மின் தேவை சரி என்று பார்க்கும் நாம், பல இலட்சம் மக்களின் கண்ணீரைக் காண மறுக்கிறோம்; நாட்டின் வளர்ச்சிக்கான விலையே இது என்று நம் இதயங்களைக் கடினப்படுத்துகிறோம்.*** *சிலரின் வளர்ச்சிக்காக, கோடிக்கணக்கான பாமர மக்களின் வாழ்க்கையைக் காவு கேட்கிறோம்.*
***கிறிஸ்து இயேசு யாருக்காக அழுதிருப்பார்?***

*வசனம் 24:26*

*நேர்மையான மறுமொழி ஞானமுள்ளோரின் பண்பு நலன். ஒப்பிடுக, 8:8-9.*

Δ

*"...அன்போடு அரவணைக்கும் நண்பர்..." –*

*OV, உதடுகளை முத்தமிடுகிறவன் - இது மூலச் சொற்களின் அடிப்படையில் உள்ளது. முத்தமிடுதல், அன்பின் பெருக்கம், அதன் உணர்வுப்பூர்வமான வெளிப்பாடு (தொடக்க நூல் 33:4; 1 சாமுவேல் 20:41).*

*வசனம் 24:27*

*தொழில், வீடு - எது அடிப்படை?*

*வாழ்வியல் பொருளாதாரத்தைக் கற்றுத் தரும் வசனம்.*

*ஒரு தொழிலைச் செய்யும் போது, அதன் வளர்ச்சிக்கு முதலீடு செய்ய வேண்டுமா அல்லது சொந்தமாக வீடு கட்டலாமா?*

*வசனம் 24:28-29*

*பார்க்க, 14:5 & 20:22 மற்றும் குறிப்புகள்; மேலும் பார்க்க, லேவியர் 19:11-12; மத்தேயு 5:38-48; உரோமையர் 12:17-21; எபேசியர் 4:25.*

*அநீதிக்குப் பதில் அநீதி செய்யலாமா? பாவிகளான நம்மை நமது அநீதிக்காகத் தண்டிக்காமல், பேரருளோடு மன்னித்து, நிலைவாழ்வின் நம்பிக்கையை நமக்குள் ஆண்டவர் விதைத்திருக்கிறாரே! அப்படியானால் நமது நீதி எப்படி இருக்க வேண்டும்?*

*வசனம் 24:30-34*

*சோம்பேறித்தனம், பார்க்க, 6:6-11 மற்றும் குறிப்புகள்.*

✝

# 20 நீதிமொழிகள் 25

*1 இவையும் சாலமோனின் நீதி மொழிகளே; இவை யூதாவின் அரசராகிய எசேக்கியாவின் அவையினர் தொகுத்து எழுதியவை.*

*2 மறைபொருள் கடவுளுக்கு மாட்சியாம்;*
*ஆய்ந்தறிதல் அரசருக்குப் பெருமையாம்.*
*3 அரசரின் உள்ளக் கிடக்கையை ஆராய்ந்தறிய மனிதரால் இயலாது;*
*அது வானத்தின் உயரத்தையும் கடலின் ஆழத்தையும் போன்றது.*

*4 வெள்ளியினின்று மாசை நீக்கி விடு; அப்பொழுது தட்டார் அதிலிருந்து அழகிய பொருளொன்றை உருவாக்குவார்.*
*5 அரசரின் அவையினின்று கெடுமதி உரைக்கும் பொல்லாரை அகற்றி விடு;*
*அப்பொழுது அவரது ஆட்சி நீதிவழுவா நெறியில் நிலைக்கும்.*

*6 அரசர் முன்னிலையில் உன்னைப் பெரியவரென்று காட்டிக் கொள்ளாதே;*
*பெரியோருக்குரிய இடத்தில் நில்லாதே.*
*7 பெரியவர் ஒருவருக்கு இடமுண்டாகும்படி நீ கீழிடத்திற்கு அனுப்பப்படுவதைவிட,*
*"நீ மேலிடத்திற்கு வா" என்று அழைக்கப்படுவதே உனக்கு மேன்மை.*

*8 ஏதோ ஒன்றைப் பார்த்தவுடன் உடனே வழக்கு மன்றத்திற்குப் போகாதே;*
*நீ கூறுவது தவறென்று வேறொருவர் காட்டிவிட்டால்*
*அப்பொழுது நீ என்ன செய்வாய்?*
*9 அடுத்திருப்பாரோடு உனக்குள்ள வழக்கை அவருடனேயே பேசித் தீர்த்துக்கொள்;*

வேறொருவரைப் பற்றிய மறைசெய்தியை
வெளிப்படுத்தாதே.
10 வேளிப்படுத்தினால் அதைக் கேட்பவர் உன்னை
இகழுவார்;
உனக்கு வரும் மானக்கேடு நீங்காது.
11 தக்க வேளையில் சொன்ன சொல்
வெள்ளித் தட்டில் வைத்த பொற்கனிக்குச் சமம்.

12 தங்கச் சங்கிலியும் பொற்கடுக்கனும்
ஓர் இணையாக அமைவது போல,
எச்சரிக்கை கூறும் ஞானியும்
அதை விருப்புடன் கேட்பவரும்
ஓர் இணையாக அமைவர்.

13 குளிர்ந்த பானம் கோடைக் காலத்தில் எப்படி
இருக்குமோ
அப்படியே உண்மையான தூதர் தம்மை
அனுப்பினவருக்கு இருப்பார்;
அவர் தம் தலைவருக்குப் புத்துயிரளிப்பார்.

14 கருமுகிலும் காற்றும் உண்டு;
ஆனால் மழை இல்லை;
கொடாமலே தன்னைக் கொடைவள்ளல்
என்பவனும் இவ்வாறே.

15 பொறுமை ஆட்சியாளரையும் இணங்கச் செய்யும்;
இனிய நா எலும்பையும் நொறுக்கும்.

16 தேன் கிடைத்தால் அளவோடு சாப்பிடு;
அளவை மீறினால் தெவிட்டிப் போகும்;
நீ வாந்தியெடுப்பாய்.
17 அடுத்திருப்பார் வீட்டுக்கு அடிக்கடிப் போகாதே;
போனால் சலிப்பு ஏற்பட்டு, அவர் உன்னை
வெறுப்பார்.

18 அடுத்திருப்பாருக்கு எதிராகப் பொய்ச் சான்று
சொல்பவர்,

*குறுந்தடியையும் வாளையும் கூரிய அம்பையும் ஒத்தவர்.*

*19 இக்கட்டுக் காலத்தில் ஒரு துரோகியை நம்புவது, சொத்தைப் பல்லையும் நொண்டிக் காலையும் நம்புவதற்குச் சமம்.*

*20 மனத்துயரமுள்ளவரைப் பாட்டுப் பாடச் செய்தல், குளிரில் உடைகளைக் களைவது போலவும், புண்ணில் காடியை வார்ப்பது போலவும் இருக்கும்.*

*21 உன் எதிரி பசியோடிருந்தால் அவனுக்கு உணவு கொடு;*
*அவன் தாகத்தோடிருந்தால் குடிக்கத் தண்ணீர் கொடு.*
*22 இவ்வாறு செய்வதால் அவன் தலைமேல் எரிதழலைக் குவிப்பாய்;*
***ஆண்டவரும் உனக்குக் கைம்மாறு அளிப்பார்.***

*23 வடகாற்று மழையைத் தோற்றுவிக்கும்;*
*புறங்கூறுதல் சீற்றப் பார்வையைத் தோற்றுவிக்கும்.*

*24 மாடி வீட்டில் நச்சரிக்கும் மனைவியோடு வாழ்வதைவிட,*
*குடிசை வாழ்க்கையே மேல்.*

*25 தொலைவிடத்திலிருந்து வரும் நற்செய்தி, வறண்ட தொண்டைக்குக் கிடைக்கும் குளிர்ந்த நீரை ஒக்கும்.*

*26 பொல்லாருக்கு இணங்கிவிடும் நேர்மையானவர், கலங்கிய ஊற்றை அல்லது பாழடைந்த கிணற்றை ஒத்திருக்கிறார்.*

*27 தேனை மிகுதியாகச் சாப்பிடுவது நன்றன்று;*
*புகழ்ச்சியை மிகுதியாக விரும்புவதும் நன்றன்று.*
*28 தன்னடக்கமில்லா மனிதர் -*
*அரண் அழிந்த, காவல் இல்லாப் பட்டணம்.*

## சிந்தனைக்கு

*வசனம் 25:1 ~ 29:27*
*பார்க்க, நூல் முன்னுரை. தொன்மையான எபிரேய மற்றும் சிரியாக் திருப்புதல்களில் "சாலமோனின் ஆழ்ந்த நீதிமொழிகள்" என்று இந்தப் பகுதி குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.*

*வசனம் 25:1*
*"எசேக்கியாவின் அவையினர்" –*
*OV, எசேக்கியாவின் மனுஷர்; KJV, men of Hezekiah.*

*தேர்ந்த படியெடுப்போரை எசேக்கியா (அவரே கவி எழுதுபவர், எசாயா 38:9) நியமித்து, அவர் காலம் வரை இருந்த பழைய ஏற்பாட்டு நூல்களைப் படியெடுத்தார் என்றும், அத்தகைய படிகளில், ஒவ்வொரு நூலின் முடிவிலும் எசேக்கியா என்பதின் சுருக்க எழுத்துகள் (ஹேத் + ஷாயின் + கோப் = HZK) காணப்படுகின்றன என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இறைவாக்கினர் எசாயா மற்றும் அரண்மனைப் பொறுப்பாளரான எலியாக்கிம், எழுத்தரான செபுனா (2 அரசர்கள் 18:18 & 19:2; எசாயா 22:15 & 36:3) போன்றோரின் மேற்பார்வையில் இத்தகைய திருப்பணி நடந்திருக்கலாம். இறைவாக்கினர் மீக்கா மற்றும் ஒசேயா இருவரும்கூட அதே காலத்தவர்களே.*
Δ
*"...தொகுத்து எழுதியவை" –*
*OV, "...பேர்த்தெழுதின..."; KJV, "... copied out."*
*சாலமோனால் எழுதப்பட்டு அல்லது சொல்லப்பட்டு, வழக்கத்தில் இருந்த அல்லது ஆவணங்களில் இருந்த -ஆனால் நூலாகத் தொகுக்கப்படாத- நீதிமொழிகள், எசேக்கியா அரசரின் அவையில் இருந்த மறை அறிஞர்களால் ஏற்கனவே இருந்த நூலுள் சேர்க்கப்பட்டன.*

*எசேக்கியா அரசரின் சமயச் சீர்திருத்தங்களையும் அதனால் ஏற்பட்ட மறுமலர்ச்சியையும் குறிப்பேட்டாளர் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார் (2 குறிப்பேடு 29 ~ 31). அவர் காலத்தில் வழக்கில் புழங்கிய சாலமோனின் நீதிமொழிகளை -அவை யூதா மக்களின் இறையறிவின் வளர்ச்சிக்கு இன்னும் உதவும் என்ற நம்பிக்கையில்- எசேக்கியா நூலில் சேர்த்திருக்கலாம். சாலமோன் அரசர் மறைந்து, கிட்டத்தட்ட முன்னூறு ஆண்டுகள் கடந்தும், இவை புழக்கத்தில் இருந்தன என்பதே இவற்றின் சிறப்பு. மேலும், எசேக்கியா அரசரின் பெருமை என்பது மக்களின் இறைவாழ்வை மறுமலர்ச்சி பெறச் செய்தது மட்டுமல்லாமல், இறைவார்த்தையை மீட்டு, அடுத்து வரும் காலங்களுக்கும் தலைமுறைகளுக்கும் உறுதியாக முன்னெடுத்து வைத்ததிலும் இருக்கிறது.*

*வசனம் 25:2-7*
*கடவுள், அரசர் மற்றும் அரசவை குறித்த நீதிமொழிகள்.*

*வசனம் 25:2*
*"மறைபொருள் கடவுளுக்கு மாட்சியாம்" –*
*பார்க்க, இணைச் சட்டம் 29:29; உரோமையர் 11:33.*
*மறைபொருளாக இருப்பதால் தான் பரம்பொருளை நாம் விடாமல் தேடுகிறோம்; மீண்டும் மீண்டும் பைபிளை வாசிக்கிறோம்; முழங்காலில் நின்று அவரின் ஒத்தாசையை நாடுகிறோம். "வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை. வெளியாகாமல் ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை" (மாற்கு 4:22).*

*அவர் நம்மைக் காணும் கடவுள்; அவர்தம் அருஞ்செயல்களைக் காண, நமது கண்களைத் திறக்கும் கடவுள். "நான் செய்ய இருப்பதை ஆபிரகாமிடமிருந்து மறைப்பேனா?" என்று வாக்குரைத்தவர் அவரல்லவா!* ***அப்படியானால், எல்லாவற்றையும் தம் அடியாருக்கு அவர்***

***வெளிப்படுத்துவாரா?*** *அல்ல, நமது வாழ்க்கையில் அவர்தம் திட்டம் நிறைவேற வேண்டிய அளவிற்கு அவர் நிச்சயமாக மறைபொருளை வெளிப்படுத்துவார்.*

*இது பைபிள் வாசிப்புக்கு மட்டுமல்லாமல், அவர்தம் அரும்பெரும் படைப்பாகிய பேரண்டத்தின் ஆய்வில் ஈடுபடும் அறிவியல் ஆய்வாளர்களுக்கும் பொருந்தும். எனினும் வெளிப்படாத மறைபொருளும் இருந்து கொண்டே இருக்கும்.*

*பைபிள் அல்லது திருவிவிலியத்தை, திருமறை என்று அழைத்தல் சரியா?*

Δ

*"ஆய்ந்து அறிதல் அரசருக்குப் பெருமை" –*
*பார்க்க, 8:15-16 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 2 குறிப்பேடு 1:11-12.*
*மறைபொருளை அறிவது, தொன்மையான அல்லது நிலவுடைமைக் காலத்தில், அரசருக்கு இன்றியமையாதது. போர்த் தலைவராக, எல்லைகளிலும் உள்நாட்டிலும் அமைதி நிலவச் செய்பவராக மட்டுமல்லாமல், நிதி நிர்வாகமும் நீதி செய்தலும் அரசரின் பணி. இவ்வாறு தனது குடிகளுக்கான சிறப்பான முடிவுகளை அரசரே எடுக்க வேண்டும்.*

*தாவீது அரசர் இறைச்சித்தம் அறிந்து செயலாற்றுவதில் ஆர்வம் காட்டினார்; அதற்காக அவர் குருவையும், அவர்கள் வழியாக ஏபோதையும் பயன்படுத்தினார் (சான்றாக, 1 சாமுவேல் 23:1-6). திருவுளம் ஆராயாமல் அவர் செய்த சில செயல்கள், அவருக்கு இன்னல்களை ஏற்படுத்தின என்றும் வாசிக்கிறோம் (சான்றாக, 2 சாமுவேல் 24:1-10). இறைச்சித்தம் அறிந்து வெற்றிகளை ஈட்டும் போது, அது அரசரின் பெருமை தானே! தங்கள் அரசரோடு ஆண்டவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து, மக்களும்*

*அரசருக்கு அஞ்சி, நேர்மையாக வாழ்வர் (பார்க்க, 1 அரசர்கள் 3:28).*

☦

*சொல்* **கேட்டு** *மக்கள் செயல்பட்டது முடியாட்சி என்றால், சொல்* **அறிந்து** *மக்கள் செயல்படுவது குடியாட்சி.* **அதற்காகவே, இன்று மாந்தர் யாவருக்கும் தூய ஆவியார் அருளப்பட்டிருக்கிறார். எனவே ஆவியாரின் துணையோடு ஆய்ந்து அறிந்து செயல்படுதல் நம் ஒவ்வொருவரின் பெருமை!**

*வசனம் 25:3*
*முந்தைய வசனத்தில் கடவுளின் மறைபொருளைப் பேசிய சாலமோன் இங்கு அரசரின் உள்ளக்கிடக்கை குறித்துப் பேசுகிறார். எவரும் எதிர்பாராத முடிவுகளை எடுப்போர் அரசர்கள்; அரசரின் ஆலோசகர்கள் கூட எதிர்பார்க்காத, வியத்தகு முடிவுகளையும் அரசர்கள் எடுக்கக்கூடும். ஆண்டவரின் பிரதிநிதிகளாகக் கருதப்படும் அரசர்கள், மக்களுக்கு நலம் பயக்கும் முடிவுகளை எடுத்தால் நாடும் மகிழ்வுறும்.*

*வசனம் 25:4-5*
*பார்க்க, 16:10&12, 20:8 மற்றும் குறிப்புகள்.*
*உவமை வழியே உணர்த்தப்படும் உண்மை.*
*இந்தத் திருமொழியை அடியொற்றி, மதிப்புயர் தூய வாழ்வை விளக்கும் பவுலடிகள், 2 திமொத்தேயு 2:21-22.*

*வசனம் 25:6-7*
*"தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்," என்று கிறிஸ்து இயேசு அருளிய விளக்கம், லூக்கா 14:7-11.*

*வசனம் 25:8-9அ*
*பார்க்க, 17:14 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, மத்தேயு 5:25.*

*திறந்த மனதுடன் ஒருவருக்கு ஒருவர் பேசுவதை விட, வழக்கு மன்றம் செல்வது இன்று எளிதாகத் தெரிகிறது. அந்த அளவுக்கு உறவுகளை உடைப்பதாக, தற்பெருமையும் அகந்தையும் இன்று பேருருக் கொண்டுள்ளன. இதனால் இன்று நமது திருச்சபைகளின் முடிவுகளும் முடக்கப்படுகின்றன.* **"நீங்கள் ஒருவர் மீது மற்றவர் வழக்குத் தொடருவதே உங்களுக்கு ஒரு தோல்வி,"** *என்கிறார் பவுலடிகள் (விரிவாக, 1 கொரிந்தியர் 6:1-7).*

*வசனம் 25:9ஆ-10*
*கிறிஸ்து இயேசுவின் அருள்மொழி, மத்தேயு 18:15. வேறொருவரைப் பற்றிய மறைசெய்தியை வெளிப்படுத்துதல், 11:13 & 18:8 மற்றும் குறிப்புகள். அதைக் கேட்டுக் கொண்டிருப்பவர், அவ்வாறு பேசுபவரை நம்பத்தகாதவராக முடிவு செய்வார்.*

*வசனம் 25:11*
*பார்க்க, 10:31-32, 15:1&23 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 25:12*
*கூறுபவர் – கேட்பவர் என இருவரின் தன்மைகளும் இங்கு சொல்லப்படுகின்றன. முந்தைய வசனத்தில் உரைத்தது போல, தக்க வேளையில், தக்க சொற்களை, ஏற்கும் வகையில் சொல்ல வேண்டும்; கேட்பவரும் சொல்பவரின் அருமை கருதி -தன் எதிர்கால நலன் கருதி- விருப்புடன் கேட்க வேண்டும். அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை, தேர்ந்து திறன் அறிந்து கொளல் (குறள்#441).*

*வசனம் 25:13*
*தூதுரைத்தல், பார்க்க, 13:17 மற்றும் குறிப்பு. மோசமான தூதுக்குச் சொன்ன உவமைகள், 10:26.*

*வசனம் 25:14*
*ஒப்பிடுக, 20:6 மற்றும் குறிப்பு.*

*நிறைவேற்றாத வாக்குறுதி; வெற்று வேட்டு; வாக்களித்து வழங்கப்படாத பரிசு – ஆனாலும் தொடர்ந்து தன்னை வள்ளல் போலக் காட்டிக் கொள்ளுவோர், வீணர். நயன் இலன் என்பது சொல்லும், பயன் இல பாரித்து உரைக்கும் உரை (குறள்#193). உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு, உள்ளம் இலாதவர் எய்தார் (குறள்#598).*

*வசனம் 25:15*
*பார்க்க, 15:1, 16:14 & 19:2 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 25:16-17*
*இரண்டு செயல்கள்; பிந்தைய செயலை விளக்கும் எளிய உவமையாக முந்தையது. அளவுக்கு விஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு.*

*வசனம் 25:16*
*பார்க்க, 24:13; அங்கு, தேன் இனிது என்று எடுத்துக்கொள்ள ஊக்கமூட்டிய சாலமோன், இங்கு அதனை அளவோடு உண்ணச் சொல்கிறார்; கூடுதலாக அதனை உண்பது ஒவ்வாமை தரும்.*

*வசனம் 25:17*
*உண்மையான அன்போடு நாம் இருந்தாலும், அடுத்தவருக்கு நமது செயல்கள் "அன்புத் தொல்லை" போல ஆகிவிடும் வாய்ப்பு உள்ளது. நெருக்கம் அன்பின் வெளிப்பாடு அல்ல. உறவைக் காப்பதே அன்பு. அன்பு ஒருபோதும் ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்துவிடக் கூடாது.*

*வசனம் 25:18*
*ஒப்பிடுக, திருப்பாடல் 57:4; அங்குப் பற்கள் என்று தாவீது குறிப்பிடுவது, சொற்களையும் தான். கெடுசொற்களுக்கு இங்கு உவமையாக, குறுந்தடி, வாள் மற்றும் கூரிய அம்பு.*

Δ

*"பொய்ச் சான்று" –*

*பார்க்க, 6:19 மற்றும் குறிப்பு.*

*வசனம் 25:19*
*நம்பத்தகாத ஒருவரை நம்புவது எத்தகைய வேதனையை வரவழைப்பது என்பதைப் பொருத்தமான இரண்டு உடல் வேதனைகளோடு ஒப்பிட்டு சாலமோன் விளக்குகிறார்.*

*வசனம் 25:20*
*துயர்மிகு நிலையில் பாடல் பாடக் கேட்ட நிகழ்வை, திருப்பாடல் 137:3-4 பகுதியில் வாசிக்கிறோம். அதுபோன்ற மனத்துயரை வெளிப்படுத்த சாலமோன் இங்கு இரண்டு உவமைகளைத் தந்து விளக்குகிறார்.*
Δ
*"புண்ணில் காடியை வார்த்து..." –*
*OV, வெடியுப்பின் மேல் வார்த்த காடி; KJV, vinegar upon nitre; NRSV, vinegar on a wound. NRSV மற்றும் செப்டுவஜிண்டு திருப்புதல்களில், துயர் அறுக்கும் உள்ளம் என்பதன் புரிதலுக்காக இந்த வசனம் இன்னும் உவமைகளோடு உள்ளது; பொருளிலும் இந்த வசனம் வேறுபடுகிறது: "துயருற்றவர் முன்பு ஒருவர் பாடல் பாடுதல் என்பது புண்ணில் காடியை வார்ப்பது போல இருக்கும்; கறையான் அரிக்கும் துணி போலவும், புழு அரிக்கும் மரம் போலவும், துயர் மனித உள்ளத்தை உருக்கும்."*

*வசனம் 25:21-22*
*வேறு சொற்களில், 24:17. கிறிஸ்து இயேசுவின் அருள்மொழியாக, மத்தேயு 5:43-48. பவுலடிகளின் எடுத்தாளுகை, உரோமையர் 12:20. மேலும் பார்க்க, 12:18 & 20:22 மற்றும் குறிப்பு.*
Δ
*"எரிதழலைக் குவிப்பாய்" –*
*தீமையை நன்மையால் வெல்லும் வழி (உரோமையர் 12:21). இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்து விடல் (குறள்#314). நம் எதிரிகளுக்கு நாம் நன்மை செய்யும்போது, அவர்களின் உள்ளமே*

*அவர்களைக் குத்திக் கிழிக்கும். அனலில் கடின உலோகமும் உருகுவது போல, எதிரியின் கடின உள்ளமும் நற்செயல்களால் மாறும்; உறவுகள் சீர்பொருந்தும்.*

*வசனம் 25:23*

*புறங்கூறுதல், பார்க்க, 11:13, 18:8 & 20:19 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, வ.9ஆ-10 மற்றும் குறிப்பு. இங்கு உறுதியானதோர் உவமையோடு விளக்கப்பட்டுள்ளது.*

*வசனம் 25:24*

*நச்சரிக்கும் மனைவியுடனான வாழ்க்கை; இணை, 21:9; பார்க்க, 19:13ஆ மற்றும் குறிப்பு.*

## ***நச்சரிக்கும் கணவன் குடும்பத்திற்கு மகிழ்ச்சி தருவானா?***

*வசனம் 25:25*

*ஒப்பிடுக, வ.13; பார்க்க, 15:30ஆ.*

*இங்கு நற்செய்தி எத்தகைய ஊக்கம் தரும் என்பதை உவமையோடு சாலமோன் விளக்குகிறார். அன்றைய காலத்தில், போரில் வெற்றி என்பதே பெரும்பாலும் தொலைவிலிருந்து வரும் நற்செய்தி. தொலைவிலிருந்து வணிகக் கப்பல் வருகிறது என்பதும் நற்செய்தியே (31:14). யாக்கோபுக்குத் தொலைவிலிருந்து கிடைத்த நற்செய்தி, தொடக்க நூல் 45:25-28.*

*வசனம் 25:26*

*பொல்லாருக்கு இணங்குதல் என்பதே நேர்மையாளரின் வீழ்ச்சி. அது அவருடைய மனக் குழப்பத்தின் விளைவு என்பதற்கு இங்கு சாலமோன் இரண்டு உவமைகளைத் தருகிறார். அநீதிக்கு இணங்கும் நேர்மையாளர், நீதியின் ஓட்டத்தை மடை மாற்றுகிறார்; மக்களின் நலவாழ்வைச் சீரழிக்கிறார்.*

*வசனம் 25:27*
*ஒப்பிடுக, வ.16.*
*புகழ்ச்சியை விரும்புவோருக்கு அறிவுறுத்தல். புகழ்ச்சியில் திளைப்போர் எளிதில் வீழ்த்தப்படுவர். மேலும் பார்க்க, தற்புகழ்ச்சிக்கு எதிரான அறிவுரை, 27:2. பெருமை பெருமிதம் இன்மை, சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல் (குறள்#979).*

*வசனம் 25:28*
*பார்க்க, 11:2 மற்றும் குறிப்பு; மேலும் பார்க்க, 16:32ஆ. தன்னடக்கம் (OV, இச்சையடக்கம்) ஆவியின் கனிகளில் ஒன்று (கலாத்தியர் 5:22-23). அடக்கமற்றோர் கடவுளின் கிருபையைப் பெற இயலாது. அடக்கம், அமர்அருள் உய்க்கும்; அடங்காமை ஆர்இருள் உய்த்து விடும் (குறள்#121).*

✝

## 20 நீதிமொழிகள் 26

*1 வேனிற் காலத்தில் பனி இருக்குமா?*
*அறுவடைக் காலத்திற்கு மழை பொருந்துமா?*
*அவ்வாறே மதிகேடருக்குப் புகழ் ஒவ்வாது.*

*2 சிட்டுக் குருவியும் அடைக்கலான் குருவியும்*
*பறந்து திரிவது போல,*
*காரணமின்றி இட்ட சாபமும் காற்றாய்ப்*
*பறந்துபோகும்.*

*3 குதிரைக்குச் சவுக்கடி, கழுதைக்குக் கடிவாளம்;*
*முட்டாளின் முதுகுக்குப் பிரம்பு.*
*4 மடையரின் கேள்விக்கு முட்டாள்தனமாகப்*
*பதிலுரைக்காதே;*
*உரைத்தால் நீயும் அவரைப் போல ஒரு மடையனே.*
*5 மடையரின் கேள்விக்கு*
*அவரது மடமையை உணர்த்தும் வகையில்*
*பதிலுரை;*
*இல்லாவிடில், அவர் தம்மை ஞானி என்று எண்ணிக்*
*கொள்வார்;*
*6 மூடரைத் தூதாக அனுப்புதல்,*
*தன் காலையே வெட்டிக் கேடு உண்டாக்கிக்*
*கொள்வதற்குச் சமம்.*
*7 ஊனக் கால்கள் தடுமாறி நடக்கும்;*
*அவ்வாறே மூடர் வாயில் முதுமொழியும் வரும்.*
*8 மூடருக்கு உயர்மதிப்புக் கொடுப்பவர்*
*கவணில் கல்லை இறுகக் கட்டி வைத்தவருக்குச்*
*சமம்.*
*9 மூடன் வாயில் முதுமொழி,*
*குடிகாரன் கையிலுள்ள முட்செடிக்குச் சமம்.*
*10 மூடனையோ குடிகாரனையோ வேலைக்கு*
*அமர்த்துபவர்,*
*வழிப்போக்கர் எவராயிருப்பினும்,*

*அவர் மீது அம்பு எய்கிறவரை ஒத்திருக்கிறார்.*
*11 நாய், தான் கக்கினதைத் தின்னத் திரும்பிவரும்;*
*அதுபோல மூடர் தாம் செய்த மடச்செயலையே*
*மீண்டும் செய்வார்.*
*12 தம்மை ஞானமுள்ளவரென்று சொல்லிக்*
*கொள்ளும்*
*யாரையாவது நீ பார்த்திருக்கிறாயா?*
*மூடராவது ஒருவேளை திருந்துவார்;*
*ஆனால் இவர் திருந்தவே மாட்டார்.*

*13 "வீதியில் சிங்கம் இருக்கிறது; வெளியே சிங்கம்*
*அலைகிறது"*
*என்று சொல்லிக் கொண்டிருப்பவர் சோம்பேறி.*
*14 கீல்பட்டையில் கதவு ஆடிக் கொண்டிருப்பது*
*போல,*
*சோம்பேறி தம் படுக்கையில் புரண்டு*
*கொண்டிருப்பார்.*
*15 சோம்பேறி உண்கலத்தில் கையை இடுவார்;*
*ஆனால் அதை வாய்க்குக் கொண்டுபோகச்*
*சோம்பலடைவார்.*
*16 விவேகமான விடையளிக்கும் ஏழு*
*அறிவாளிகளைவிட,*
*தாம் மிகுந்த ஞானமுள்ளவர் என்று நினைக்கிறார்*
*சோம்பேறி.*

*17 பிறருடைய சச்சரவுகளில் தலையிடுகிறவர்,*
*தெருவில் செல்லும் வெறிநாயின்*
*வாலைப் பிடித்து இழுப்பவருக்கு ஒப்பாவார்.*

*18 கொல்லும் தீக்கொள்ளியையும் அம்பையும்*
*எறியும்*
*பைத்தியக்காரனுக்கு ஒப்பானவர் யாரெனில்,*
*19 பிறனை வஞ்சித்துவிட்டு,*
*"நான் விளையாட்டுக்குச் செய்தேன்" என்று*
*சொல்பவரே.*

*20 விறகு இல்லாவிடில் நெருப்பு அணையும்;*

*புறங்கூறுபவர் இல்லாவிடில் சண்டை அடங்கும்.*
*21 கரியால் தழல் உண்டாகும்,*
*விறகால் நெருப்பு எரியும்;*
*சண்டை பிடிக்கிறவரால் கலகம் மூளும்.*
*22 புறணி கேட்பது பலருக்கு அறுசுவை உண்டி*
*உண்பது போலாம்.*
*அதை அவர்கள் பேராவலோடு விழுங்குவார்கள்.*

*23 தீய நெஞ்சத்தை மறைக்க நயமாகப் பேசுவது,*
*மட்பாண்டத்திற்கு மெருகூட்டிப் பளபளக்கச்*
*செய்வது போலாகும்.*
*24 பகையுணர்ச்சி உள்ளவர்*
*நாவினால் கபடத்தை நயம்படப் பேசுவார்;*
*உள்ளத்திலோ கபடம் மறைந்திருக்கும்.*
*25 அவர் நயமாகப் பேசினாலும் அவரை நம்பாதே;*
*அவர் உள்ளத்தில் அருவருக்கத்தக்கவை ஏழு*
*இருக்கும்.*
*26 அவர் தம் பகையை வஞ்சகமாக மறைத்து*
*வைத்திருப்பினும்,*
*அவரது தீயகுணம் மக்களிடையே*
*அம்பலமாகிவிடும்.*
*27 தான் வெட்டின குழியில் தானே விழுவார்;*
*தான் புரட்டின கல் தன் மேலேயே விழும்.*
*28 பொய் பேசும் நா உண்மையை வெறுக்கும்;*
*இச்சகம் பேசும் வாய் அழிவை உண்டாக்கும்.*

*நீதிமொழிகள் 26:1-28*

## சிந்தனைக்கு

*வசனம் 26:1-28*
*இந்தப் பகுதியில், முதல் வசனம் தொடங்கி, வசனங்கள் பலவும் ஒப்பீடுகளாக -உவமை ஒன்று சொல்லி உவமேயத்தை விளக்குவதாக- உள்ளன. தெளிவான புரிதலுக்கு அவை உதவுகின்றன.*

*வசனம் 26:1*

*இணைத்து வாசிக்க, வ.8. முரணான இரண்டு உண்மைகளை உரைத்து, அவ்வாறே மூடருக்குப் புகழ் தகாது என்கிறார், சாலமோன்.*

*வசனம் 26:2*

*காரணமின்றி இட்ட சாபம் –*

*இறை நீதிநெறிகளின் வழியாக, அறத்தின் அடிப்படையில் சாபம் அமைய வேண்டும். அப்படி அமையாத சாபம் குறித்து ஒருவர் அஞ்சத் தேவையில்லை.*

***இறைவழியில் நடப்போர் ஒருபோதும் சாபத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை.***

*"உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன்" என்பது ஆபிரகாமுக்கு ஆண்டவர் அருளிய வாக்கு (தொடக்க நூல் 12:3). இஸ்ரயேலரைச் சபிக்க அழைக்கப்பட்ட பிலயாம், "கடவுள் சபிக்காதவனை நான் எப்படிச் சபிப்பேன்?" என்று விலகிக் கொண்டான். சிமயி என்பவன் அநீதியாகத் தன்னை மிகவும் கேவலமாகப் பழித்தபோது, பொறுமையோடு தாவீது, "... அவன் பழித்துப் பேசியதற்காக எனக்கு அவர் (கடவுள்) நன்மை செய்வார்" என்று நம்பிக்கையோடு தன்னைத் தேற்றிக் கொண்டார் (2 சாமுவேல் 16:5-13).*

*புதிய ஏற்பாட்டு நம்பிக்கையாளர்களுக்கு கிறிஸ்து இயேசுவின் கட்டளை, "உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூறுங்கள்" என்பதே (லூக்கா 6:28). "மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்" என்று எழுதியுள்ளவாறு, நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி, நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார் (கலாத்தியர் 3:13).*

***ஆனால், நமது இன்றைய வாழ்க்கை, திருச்சட்டத்தின் வழியானதா? அல்லது ஆண்டவர் அருளிய மீட்பின் வழியானதா?***

*வசனம் 26:3-12*
*மூடர்கள் குறித்த விரிவான அறிவுரை.*

*வசனம் 26:3*
*பார்க்க, 10:13 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, திருப்பாடல் 32:9.*
*குதிரை மற்றும் கழுதை போன்றே, முட்டாளைப் பழக்கப் பிரம்பு, ஏனெனில் அவனுடைய புரிதலைத் தூண்டி அவனிடம் வேலை வாங்க முடியாது.*

*வசனம் 26:4-5*
*பார்க்க, 12:23 மற்றும் குறிப்பு. சேர்த்து வாசிக்க, வ.12&16.*
*ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட வசனங்கள் போல் தோன்றினாலும், ஒன்றில் ஒன்றைப் பொருத்திப் புரிந்துகொள்ள வேண்டிய வசனங்கள். எப்போது வ.4ன்படி அல்லது எப்போது வ.5ன்படி மறுமொழி தர வேண்டும் என்பதில் ஒருவரின் நுண்ணறிவு உள்ளது.*

*தங்களைத் தாங்களே ஞானிகள் என்று மக்கள் நடுவே காட்டிக்கொண்ட பரிசேயர் மற்றும் சதுசேயரை கிறிஸ்து இயேசு எவ்வாறு நடத்தினார் என்பது நமக்கு ஒரு பாடம், மத்தேயு 16:1-4.*

*வசனம் 26:6*
*சோம்பேறியைத் தூதாக அனுப்புவதை ஏற்கனவே விவரித்த சாலமோன் (10:26 மற்றும் குறிப்பு), இங்கு மூடரைத் தூதாக அனுப்புவதைக் குறிப்பிடுகிறார். வெவ்வேறு விதங்களில், சோம்பேறிகளும் மூடரும் எந்தவொரு ஆக்கப்பூர்வமான பொறுப்புக்கும் தகுதியற்றோர், வ.10.*

*வசனம் 26:7&9*

*மூடர் வாயில் முதுமொழி – இரண்டு உவமைகளைத் தந்து சாலமோன் விளக்குகிறார். எப்படிக் கால்கள் பாதிக்கப்பட்ட ஒருவர், தாங்கித் தாங்கி நடப்பாரோ, அதுபோல் மூடன், தெளிவற்றவனாக, தயங்கித் தயங்கிப் பேசுவான். குடிகாரனின் கையில் உள்ள முட்செடி, அவனையே புண்படுத்துவது போல, மூடனின் பேச்சு அவனையே பாதிக்கும்.*

*வசனம் 26:8*

*கவணில் கல்லை வைத்து எறியலாம், ஆனால் கவணில் கல்லைக் கட்டி விட்டால் எறிய முடியுமா? மூடருக்கு மதிப்பளிப்பவர் எத்தகையோராக இருப்பர்? செயல்திறனின்றி இருப்பர்.*

*வசனம் 26:10*

*இணைத்து வாசிக்க, வ.18-19.*

*மொழிபெயர்ப்புச் சிக்கலுள்ள ஒரு வசனம்.*

*<u>பொது மொழிபெயர்ப்பு</u>:*

*“மூடனையோ குடிகாரனையோ வேலைக்கு அமர்த்துபவர், வழிப்போக்கர் எவராயிருப்பினும் அவர் மீது அம்பு எய்கிறவரை ஒத்திருக்கிறார்.”*

*<u>OV</u>:*

*“பெலத்தவன் அனைவரையும் நோகப் பண்ணி, மூடனையும் வேலைகொள்ளுகிறான், மீறி நடக்கிறவர்களையும் வேலைகொள்ளுகிறான்.”*

*<u>KJV</u>:*

*“The great (God) that formed all (things), both rewardeth the fool and rewardeth transgressors.”*

*<u>NRSV</u>:*

*“Like an archer who wounds everybody is one who hires a passing fool or drunkard.”*

*<u>Septuagint</u>:*

*“All the flesh of fools endures much hardship; for their fury is brought to nought.”*

*மூடரை அல்லது குடிகாரரை வேலைக்கு வைப்பவர், வீதியில் வருவோர் போவோரிடம், தேவையற்றதைப் பேசி வம்பை விலை கொடுத்து வாங்குபவர்.*

*வசனம் 26:11*

*மடத்தனத்தை விட்டு விலகத் தெரியாத மூடர்களைக் குறிப்பிட, முகம் சுழிக்க வைக்கும் ஓர் உவமையை சாலமோன் பயன்படுத்துகிறார். இதே உவமையை, இன்றைய பொய்ப் போதகர்களின் செயல்களை விளக்கப் பேதுரு பயன்படுத்துகிறார் (2 பேதுரு 2:22). தனது வாக்குறுதியில் மீண்டும் மீண்டும் தவறிய பார்வோனுக்கு இந்த உவமை சிறப்பாகப் பொருந்தும் (விடுதலைப் பயணம் 8:8&15 மற்றும் தொடர் நிகழ்வுகள்).*

*வசனம் 26:12*

*பார்க்க வ.4-5 குறிப்பு, 13:7 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, வ.16; ஒப்பிடுக, 29:20.*

*வெண்மை (அறியாமை) எனப்படுவது யாது எனின், யாம் ஒண்மை (ஒளி உடைமை) உடையம் என்னும் செருக்கு (குறள்#844). தன்னையே ஞானி என்று பறைசாற்றுபவர் அல்லது தற்பெருமை கொண்டவர், கற்றலில் மூடரை விட மோசமானவர். தனக்குத் தெரியாது என்பவரே கற்றுக் கொள்வார்.*

*சோம்பேறித்தனத்தை மீண்டும் மீண்டும் கண்டிக்கும் சாலமோன், பெருமையையும் அதுபோன்றே கண்டிக்கிறார், 3:34, 8:13, 11:2, 13:10, 15:25, 16:5&18-19, 18:12, 21:4&24, 26:5,12&16, 29:23. அவ்வாறே கடவுளும் பெருமையுடையோரைத் தம்மிடமிருந்து விலக்குகிறார். இறைவேண்டலில் தன்னையே நீதியுள்ளவனாகக் காட்டிக் கொண்ட பரிசேயன், லூக்கா 18:11-12.*

*வசனம் 26:13-16*

*சோம்பேறிகளைக் கண்டிக்கும் சாலமோன், பார்க்க, 6:6-11 மற்றும் குறிப்புகள்.*

*இங்கு மிகவும் பொருத்தமான உவமைகளைச் சொல்லி அவர் விளக்குகிறார்: கீல்பட்டையில் ஆடும் கதவு போல, படுக்கையில் புரளும் சோம்பேறி, வ.14.*

*வசனம் 26:15*

*இணை, 19:24.*

*தட்டில் கைவைத்து, அதனை வாய்க்குக் கொண்டு போகாத சோம்பேறி - நாம் வாழைப்பழச் சோம்பேறி என்று சொல்வது போல!*

*வசனம் 26:16*

*தங்களைத் தாங்களே ஞானிகள் என்று உயர்த்திக் கொள்ளும் மூடர் போன்றே (வ.12) தங்களைக் கருதும் சோம்பேறிகள்.*

*வசனம் 26:17-28*

*தகாததும் தீதுமான சொற்கள், அவற்றின் விளைவுகளே இந்தப் பகுதியின் நீதிமொழிகள். சுடுசொற்களால் புண்படாதோர் உண்டோ! காணாத வாரத்தையைக் கட்டுரைக்க வேண்டா! புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டா! புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டா! (உலகநீதி#9 பகுதி)*

*வசனம் 26:17*

*ஒப்பிடுக, 25:17 மற்றும் குறிப்பு.*

*தலையீடு என்பதே இடையூறு; வரம்பு மீறிய செயல். சிக்கல் என்னவென்றே அறியாத ஒருவர், தனக்குத் தொடர்பற்ற சிக்கலில் தலையிடும்போது, அதன் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.*

Δ

*"...வெறி நாயின் வாலைப் பிடித்து இழுப்பவர்..." – OV, நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவன், மூலச் சொல்லின்படி; பொது மொழிபெயர்ப்பு, செப்டுவஜிண்டு வழியில் உள்ளது. எதுவாயினும், நாயிடம் கடிபடும் ஆபத்து உள்ளது.*

வசனம் 26:18-19
ஒப்பிடுக, வ.10. பார்க்க, 12:18 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, எபேசியர் 5:4.
விளைவைப் பொறுத்ததே விளையாட்டு அல்லது வேடிக்கை அல்லது நகைச்சுவை. மோசமான இழப்பையோ, துன்பத்தையோ ஏற்படுத்திவிட்டு, விளையாட்டாகச் செய்ததாகச் சொல்லித் தப்பிக்க முடியாது.

வசனம் 26:20-21
புறங்கூறுதல், ஒப்பிடுக, 22:10 & 30:33. மேலும் பார்க்க, 11:13 & 15:18 மற்றும் குறிப்புகள்.

வசனம் 26:22
புறணி கேட்பது, ஒப்புமை, 18:8 மற்றும் குறிப்பு.

வசனம் 26:23-25
சமாதானம் பேசும் உதடுகள் ஆனால் வஞ்சகத்தின் உறைவிடமான உள்ளம், பார்க்க, திருப்பாடல் 28:3 & 55:21; எரேமியா 9:8.

வசனம் 26:27
தன் வஞ்சக வலையில் தானே வீழ்தல், பார்க்க, 1:18-19 மற்றும் குறிப்பு; மேலும் பார்க்க, திருப்பாடல் 7:14-16, 35:7-8 & 141:10; சபை உரையாளர்:10:8-9.
மொர்தக்காய் மீது வஞ்சனையோடு, தான் நாட்டிய தூக்கு மரத்திலேயே தூக்கிலிடப்பட்ட ஆமான், எஸ்தர் 7:10.

வசனம் 26:28
பார்க்க, 29:6.
நீதிமொழிகள் நமக்குக் கற்பிப்பது: நேர்மையாளர் விழுவர் ஆனால் எழுவர்; தீயோரோ அழிவர் (24:16).

வசனம் 26:23-28
பார்க்க, 6:16-19 மற்றும் குறிப்புகள்.

*இந்தப் பகுதியின் திருமொழிகள் ஒவ்வொன்றும் தனித்துப் பொருள் கொண்டவை என்றாலும், இணைத்துப் பார்த்தலும் தகும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர், பொய்மையில் வாழ்வோர்; அவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் போன்றோர் (மத்தேயு 23:27). உள்ளே வெறுப்பையும் வஞ்சத்தையும் விதைத்து, பேராசை என்னும் உரமிட்டு வளர்த்துவரும் அவர்கள், வெளியே நயமாகப் பேசி இன்முகம் காட்டினாலும், அவர்கள் வளர்த்த வெறுப்பும் வஞ்சகமுமே அவர்களை விழுங்கிவிடும். தொடக்கத்தில் அவர்களுடைய இனிய சொற்களில் மயங்கியோரும், பின்னர் அவர்களின் பொய்மையை உணர்ந்து, அவர்களைச் சற்றும் நம்பமாட்டார்கள். அவர்கள் செழிப்போடு வாழ்ந்தாலும், அவர்களது வீழ்ச்சி மிகவும் கடுமையாக இருக்கும். "பாவத்துக்குக் கிடைக்கும் கூலி, சாவு; மாறாகக் கடவுள் கொடுக்கும் அருட்கொடை, நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு" (உரோமையர் 6:23).*

✝

# 20 நீதிமொழிகள் 27

*1 இன்று நடக்கப்போவதே தெரியாது;*
*நாளை நடக்கப் போவதை அறிந்தவன்போலப்*
*பெருமையாகப் பேசாதே.*
*2 உன்னை உன்னுடைய வாயல்ல;*
*மற்றவர்களுடைய வாய் புகழட்டும்;*
*உன் நாவல்ல, வேறொருவர் நா போற்றட்டும்.*
*3 கல்லும் மணலும் பளுவானவை;*
*மூடர் தரும் தொல்லையோ*
*இவ்விரண்டையும்விடப் பளுவானது.*
*4 சினம் கொடியது;*
*சீற்றம் பெருவெள்ளம் போன்றது;*
*ஆனால் பொறாமையின் கொடுமையை*
*எதிர்த்து நிற்க யாரால் இயலும்?*
*5 வெளிப்படுத்தப்படாத அன்பை விட,*
*குற்றத்தை வெளிப்படையாகக் கண்டிக்கும்*
*கடிந்துரையே மேல்.*
*6 நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம்*
*கொண்டவை;*
*பகைவர் தரும் முத்தங்களோ வெறும் முத்தப்*
*பொழிவே.*
*7 வயிறார உண்டவர் தேனையும் உதறித் தள்ளுவார்;*
*பசியுள்ளவருக்கோ கசப்பும் இனிக்கும்.*
*8 தம் வீட்டை விட்டு வெளியேறி அலைந்து*
*திரிபவர்,*
*தன் கூட்டை விட்டு வெளியேறி*
*அலைந்து திரியும் குருவிக்கு ஒப்பானவர்.*
*9 நறுமணத் தைலம் உள்ளத்தை மகிழ்விக்கும்;*
*கனிவான அறிவுரை மனத்திற்குத் திடமளிக்கும்.*
*10 உன் நண்பரையும் உன் தந்தையின் நண்பரையும்*
*கைவிடாதே;*
*உனக்கு இடுக்கண் வரும் காலத்தில்*
*உடன்பிறந்தான் வீட்டிற்குச் செல்லாதே;*
*தொலையிலிருக்கும் உடன்பிறந்தாரைவிட*
*அண்மையிலிருக்கும் நண்பரே மேல்.*

*11 பிள்ளாய், நீ ஞானமுள்ளவனாகி என் மனத்தை மகிழச் செய்;*
*அப்பொழுது நான் என்னைப் பழிக்கிறவருக்குத் தக்க பதிலளிப்பேன்.*
*12 எதிரில் வரும் இடரைக் கண்டதும் விவேகமுள்ளவர் மறைந்து கொள்வார்;*
*அறிவற்றோர் அதன் எதிரே சென்று கேட்டுக்கு ஆளாவர்.*
*13 அன்னியருடைய கடனுக்காகப் பிணையாக நிற்கிறவனுடைய ஆடையை எடுத்துக்கொள்;*
*அதை அந்தக் கடனுக்காகப் பிணையப் பொருளாக வைத்திரு.*
*14 ஒரு நண்பரிடம் விடியுமுன்போய் உரக்கக் கத்தி அவரை வாழ்த்துவது,*
*அவரைச் சபிப்பதற்குச் சமமெனக் கருதப்படும்.*

*15 ஓயாது சண்டைபிடிக்கும் மனைவி,*
*அடைமழை நாளில் இடைவிடாத் தூறல் போன்றவள்.*
*16 அவளை அடக்குவதைவிடக் காற்றை அடக்குவதே எளிது எனலாம்;*
*கையால் எண்ணெயை இறுகப் பிடிப்பதே எளிது எனலாம்.*

*17 இரும்பை இரும்பு கூர்மையாக்குவது போல,*
*ஒருவர்தம் அறிவால் மற்றவரைக் கூர்மதியாளராக்கலாம்.*
*18 அத்திமரத்தைக் காத்துப் பேணுகிறவருக்கு அதன் கனி கிடைக்கும்;*
*தம் தலைவரைக் காத்துப் பேணுகிறவருக்கு மேன்மை கிடைக்கும்.*
*19 நீரில் ஒருவர் தம் முகத்தைக் காண்பார்;*
*அதுபோல, தம் உள்ளத்தில் ஒருவர் தம்மைக் காண்பார்.*
*20 பாதாளமும் படுகுழியும் நிறைவு பெறுவதேயில்லை;*

*ஒருவர் கண்களின் விருப்பமும் நிறைவு பெறுவதில்லை.*
*21 வெள்ளியை உலைக்களமும்*
*பொன்னைப் புடைக்குகையும் சோதித்துப் பார்க்கும்;*
*ஒருவரை அவர் பெறுகின்ற புகழைக் கொண்டு*
*சோதித்துப் பார்க்கலாம்.*
*22 மூடனை உரலில் போட்டு*
*உலக்கையால் நொய்யோடு நொய்யாகக்*
*குத்தினாலும்,*
*அவனது மடமை அவனை விட்டு நீங்காது.*

*23 உன் ஆடுகளை நன்றாகப் பார்த்துக் கொள்;*
*உன் மந்தையின்மேல் கண்ணும் கருத்துமாயிரு.*
*24 ஏனெனில், செல்வம் எப்போதும் நிலைத்திராது;*
*சொத்து தலைமுறை தலைமுறையாக*
*நீடித்திருப்பதில்லை.*
*25 புல்லை அறுத்தபின் இளம்புல் முளைக்கும்;*
*மலையில் முளைத்துள்ள புல்லைச் சேர்த்துவை.*
*26 ஆடுகள் உனக்கு ஆடை தரும்;*
*வெள்ளாட்டுக் கிடாயை விற்று விளைநிலம் வாங்க இயலும்.*
*27 எஞ்சிய ஆடுகள் உனக்கும் உன்*
*குடும்பத்தாருக்கும்*
*தேவைப்படும் பாலைக் கொடுக்கும்;*
*உன் வேலைக்காரருக்கும் பால் கிடைக்கும்.*

*நீதிமொழிகள் 27:1-27*

## சிந்தனைக்கு

*நட்பு குறித்த வசனங்கள் அமைந்த பகுதி, வ.5-6,9-10,14&17. நட்பு உண்மையை உணர்த்துகிறது; அறிவூட்டுகிறது; இடுக்கணில் கைகொடுக்கிறது; எனவே, சகோதரத்துவத்தை விட நட்பு மேலானது. ஒருவர் தனது நண்பர்களை மட்டுமல்லாமல், தன்*

*தந்தைக்குத் துணை நின்ற நண்பர்களையும் கைவிடாது காக்க வேண்டும்.*

*வசனம் 27:1*
*நாளை என்பது ஆண்டவரின் கரங்களில்; எனவே நாளை நடப்பதை அறிந்தவன் போல் காட்டிக் கொள்ளக்கூடாது, 16:9 & 19:21 மற்றும் குறிப்புகள்.*

*நாளைக்கு எனப் பொருள் குவிப்போருக்கு எதிராகக் கிறிஸ்து இயேசுவின் உவமை, லூக்கா 12:16-21. மேலும் பார்க்க, யாக்கோபு 4:13-16. "...நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளைய கவலையைப் போக்க, நாளை வழி பிறக்கும்" (மத்தேயு 6:34).*

*வசனம் 27:2*
*முந்தைய நீதிமொழி முடியும் இடத்தில், இந்தத் திருமொழி தொடங்குகிறது. ஒப்பிடுக, 25:27. பார்க்க, 2 கொரிந்தியர் 10:12&18.*

*வசனம் 27:3*
*கல்லையும் மண்ணையும் விட, மூடர் பெருஞ்சுமை.*

*வசனம் 27:4*
*சினத்தைவிட, சீற்றத்தைவிடத் தீயது ஒருவர் கொள்ளும் பொறாமை. கீழ்ப்படியாமைக்கு அடுத்து வெளிப்பட்ட பாவச் செயலின் அடிப்படை உணர்வு - எரிச்சல், வெஞ்சினத்தைத் தூண்டும் உணர்வு பொறாமை, தொடக்க நூல் 4:5; 1 யோவான் 3:12. மேலும் பார்க்க, 3:31 & 14:30 மற்றும் குறிப்புகள். சகோதர சகோதரிகள் நடுவே, கண்டிக்கத்தக்க தீய பண்பு - பொறாமை, 1 கொரிந்தியர் 3:3, கலாத்தியர் 5:26, 1 பேதுரு 2:1 (OV, 2:2). மேலும் பார்க்க, 1 கொரிந்தியர் 13:4-5.*

*வசனம் 27:5-6*
*பார்க்க, 28:23; திருப்பாடல் 141:5.*

*தவறுகளுக்காகக் கடிந்து கொள்ளுதல் சிறந்தது மட்டுமல்ல, அதுவே அன்பின் வெளிப்பாடு; அங்கு அறிவு மட்டுமல்லாமல், அன்பும் பெருகும், 9:8. மேலும் பார்க்க, லேவியர் 19:17; மத்தேயு 18:15. நற்செய்தியின் பரவலுக்காக, பேதுருவைக் கடிந்து கொண்ட பவுல், கலாத்தியர் 2:14.*

*வசனம் 27:6*

*பகைவர் தரும் முத்தம், பார்க்க, யூதாசின் முத்தம், மத்தேயு 26:47-49.*

*வசனம் 27:7*

*பசி ருசி அறியாது. ஆனால் இங்குப் பசி மட்டும் சொல்லப்படவில்லை; கொஞ்சத்திலும் நிறைவு பெறும் உள்ளமே உயர்ந்தது, சபை உரையாளர் 5:12.*

*வசனம் 27:8*

*வீடானாலும் குருவியின் கூடானாலும், அது தருவது பாதுகாப்பு உணர்வு. அதிலிருந்து விலகித் திரிவோர், ஆபத்துகளை எதிர்கொள்ள நேரிடலாம்; இழப்புகளைச் சந்திக்கலாம் - மனம் திருந்திய மைந்தன் போல (லூக்கா 15:11-19).*

*வசனம் 27:9*

*கனிவான அறிவுரை, 16:21 & 24:13-14 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 27:10*

*பார்க்க, 17:17, 18:24 & 24:26 மற்றும் குறிப்புகள். நட்பைக் கொண்டாடும் சாலமோன்! தனது நண்பர்களை மட்டுமல்லாமல், தன் தந்தையின் நண்பர்களையும் மேன்மைப்படுத்த சாலமோன் இளையோரை அழைக்கிறார். அதோடு தாயின் நண்பர்களையும் கொண்டாட வேண்டும்.*

*வாழ்வின் கடினமான போராட்டங்களில் துணை நிற்பது நட்பு. பள்ளி, கல்லூரி, பணியிடம், தொழில், திருச்சபை - இப்படி எங்கும் கைதூக்கி நிறுத்துவது நட்பு. உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் கலைவதாம் நட்பு (குறள்#788).*

*யோனத்தான் - தாவீது நட்பு, பைபிளின் சிறந்த நட்பு. ஒரு நண்பனிடம் பேசுவது போல் மோசேயிடம் கடவுள் பேசியதாக வாசிக்கிறோம், விடுதலைப் பயணம் 33:11.*
*கிறிஸ்து இயேசு தமது சீடர்களை நண்பர்கள் என்றே அழைத்தார், நண்பர்களாகவே நடத்தினார் (லூக்கா 12:4; யோவான் 15:15); சிறந்த அன்பு என்பது ஒருவர் தன் நண்பர்களுக்காகத் தனது உயிரைக் கொடுப்பதுவே என்று அவர் நட்பைப் போற்றினார் (யோவான் 15:13); அன்புடையார், என்பும் பிறர்க்கு உரியர்.*

***அத்தகைய அன்பை விட்டு நம்மைப் பிரிப்பது எது?***

Δ

*"... உடன்பிறந்தாரை விட..." -*
*வகுப்பறையில் அல்லது பணிபுரியும் இடங்களில் எல்லாம் உடன்பிறந்தார் உடன் இருக்க முடியாது; ஆனால் நண்பர்களோ அங்கு இங்கு என்று இல்லாமல், எங்கும் நிறைந்திருப்பர்! கருவிலேயே பகைமை பாராட்டும் உடன்பிறப்பு இருக்கலாம் (ஏசா - யாக்கோபு); ஆனால், பகைமை பாராட்டினால், அது நட்பே அல்ல!*

*சகோதரன் தன் சகோதரனுக்கு உதவினால் அது கடமை; ஆனால், நண்பன் தன் நண்பனுக்கு உதவினால், அது உரிமை! உதவிகள் உறவைக் கெடுக்கும்; ஆனால் உதவிகளே நட்பின் பெருமை!*

*வசனம் 27:11*
*பார்க்க, 10:1 மற்றும் குறிப்பு.*
*மகன் என்றாலும் மகள் என்றாலும், அவர்கள் தங்கள் ஞானத்தை வெளிப்படுத்தும் போது, பெற்றோர்*

*மகிழ்வர்; தங்களைப் பழித்தோர் முன், பெருமிதம் கொள்வர்.*

*வசனம் 27:12*
*இடருக்கு விலகுதல், பார்க்க, 14:16 & 22:3 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 27:13*
*இணை, 20:16; அதன் குறிப்பைப் பார்க்க.*

*வசனம் 27:14*
*நட்பே ஆயினும் காலம் கருதிச் செயல், 25:20.*
*தனது செயலால், அவன் தன் நண்பனைப் பெருமைப்படுத்தாமல், தன்னைத் தானே பெருமைப்படுத்துகிறான்.*

*வசனம் 27:15-16*
*பார்க்க, 19:13ஆ மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 21:19 & 25:24 மற்றும் குறிப்புகள்.*

*இங்குத் தரப்பட்டுள்ள உவமையின் மொழி (அடக்குதல்) இன்றைய வாழ்வுக்கு ஒவ்வாத ஒன்று. ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுப்போர் நல்வாழ்வைப் பெறுவர்.*

*மனைவி என்பதை விட* ***வாழ்விணையர்*** *என்ற பொதுச் சொல்லைப் பயன்படுத்துதல் நன்று. நச்சரிக்கும் மனைவியைக் கொண்ட கணவன், வீட்டில் இருக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்ள வழியுண்டு; ஆனால் அத்தகைய கணவனைக் கொண்ட மனைவி, வீட்டை விட்டு எங்கே போவார்?*

*எனவே, வாழ்விணையரில் எவரிடம் குறை இருந்தாலும், அவர் அதனைப் பொறுப்புணர்வுடன் தன்னிடமிருந்து அகற்றி, இல்லறத்தைக் கடவுளின்*

*மாட்சிமிகு நல்லறமாக வளர்க்க இடைவிடாது முயல வேண்டும்.*

*வசனம் 27:17*
*நட்பின் விளைவு, ஒருவருக்கு ஒருவர் அறிவைப் பகிர்ந்து, அறிவில் வளர்தல். பயிலும் பருவத்தில், இத்தகு நட்பு, இருவரும் வாழ்க்கையில் முன்னேற உதவும்.*

*பலுகிப் பெருகி வரும் இன்றைய தொழிற் பிரிவுகளில், புதிய புதிய மாற்றங்களைக் கற்றுத் தேர இத்தகைய அறிவுசார் நட்பு உதவும். இரும்பை இரும்பால் கூர்தீட்டுதல் போல், அறிவால் அறிவை வளர்த்தல், இங்கு ஓர் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.*

*வசனம் 27:18*
*தன் மன்னர் அகஸ்வேரை அழிக்கத் தீட்டிய சதியிலிருந்து காத்த மொர்தக்காய், தாமதமே ஆனாலும், மேன்மைப்படுத்தப்பட்டார் (எஸ்தர் 6:1-12). மேலும் பார்க்க, மத்தேயு 25:21; லூக்கா 12:42-44; யோவான் 12:26; 2 திமொத்தேயு 4:7-8.*

*வசனம் 27:19*
*பார்க்க, யோபு 33:3; மத்தேயு 12:34; லூக்கா 6:45.*
*வெள்ளத்து அனைய மலர் நீட்டம், மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு (குறள்#595). எண்ணங்களே ஒருவரின் உள்ளத்தின் உயர்வைக் காட்டுவது. எண்ணங்களிலும், சொற்களிலும், செயல்களிலும் ஒருவரின் உள்ளமே வெளிப்படுவதால், நமது உள்ளத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்.*

***கடவுள் உறையும் இடமாக உள்ளத்தைப் பேண வேண்டிய நாம், ஆகாததும் தகாததுமான எண்ணங்களை அனுமதிக்கலாமா?***

*வசனம் 27:20*

*கண்தான் உடலுக்கு விளக்கு, லூக்கா 11:34. உள்ளம் விழையும் எத்துணை காட்சிகளாலும், நிறைவு ஏற்படுவதில்லை (சபை உரையாளர் 1:8); மாறாக, நாம் மீட்டுக் கொள்ள முடியாத காலமும், அரிய ஆற்றலுமே இவற்றில் வீணாகின்றன. ஆகையால் நமக்கு ஒளி தரவேண்டியது இருளாக இராதவாறு நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும், லூக்கா 11:35.*

*வசனம் 27:21*

*ஒப்பிடுக, 17:3. புகழ்ச்சிக்கு மயங்காதோர் உண்டோ! புகழ்ச்சி ஒருவரை வீழ்த்த எய்யப்படும் அம்பு! புகழப்படும் போது, விழிப்போடு இருப்பவரே தன்னைக் காத்துக் கொள்வார்.*

*வசனம் 27:22*

*ஒப்பிடுக, 26:11. மேலும் பார்க்க, எரேமியா 5:3.*

*நெல்லை உரலில் போட்டு இடித்தால், உமியை அகற்றி அரிசியைப் பெறலாம். ஆனால் அதுபோல எத்தனை பிரித்தெடுக்கும் முறைகள் இருந்தாலும், மூடரிடமிருந்து மடமையை அகற்ற அவற்றால் முடியாது.*

*வசனம் 27:23-27*

*இஸ்ரயேலின் அன்றைய உழவுத் தொழில் குறித்த திருமொழிகள், 12:10-11.*

*கடின உழைப்பும் இறையருளுமே நல்ல விளைச்சலை இறையாசியாகப் பெறும். எபிரேயரின் அடிப்படைத் தொழில், ஆடு வளர்ப்பு. அதன் திரட்சியால் அவர்கள் நிலங்களையும், வேறு கால்நடைகளையும் வாங்கினர். நிலம் வாங்கினாலும், குடும்பத்தின் தேவைகளுக்காகவும், தொடர்ந்த வளத்திற்காகவும், ஆடு வளர்ப்பு அவர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.*

*வசனம் 27:24*

*செல்வத்தின் நிலையாமை, 23:4-5 மற்றும் குறிப்பு.*

*வசனம் 27:25*
*பார்க்க, திருப்பாடல் 104:14. கால்நடை வளர்ப்பே முதன்மைத் தொழில் என்பதால், மலைகளில் புல் அரிந்து கோடைக்காலத் தீவனமாகச் சேர்த்து வைப்பது இஸ்ரயேலில் வழக்கம். பொதுவாக இந்தப் பணி, மார்ச் - ஏப்ரல் மாதங்களில் செய்யப்படும். தாள் அரியப்பட்ட பூண்டிலிருந்து, மழைக்காலத்தில், மலைகளில் மீண்டும் புல் தழைத்து வளரும்.*

*வசனம் 27:26-27*
*பார்க்க, 31:15-16. மேலும் பார்க்க, 24:27 மற்றும் குறிப்பு.*

✝

# 20 நீதிமொழிகள் 28

*1 பொல்லாங்கு செய்தோரை எவரும் பின்தொடர்ந்து செல்லாதிருந்தும்,*
*அவர்கள் ஓடிக்கொண்டே இருப்பார்கள்;*
*நேர்மையானவர்களோ அச்சமின்றிச் சிங்கம் போல் இருப்பார்கள்.*
*2 ஒரு நாட்டில் அறிவும் விவேகமுமுள்ள தலைவர்கள் இருந்தால்,*
*அதன் ஆட்சி வலிமைவாய்ந்ததாய் நிலைத்திருக்கும்;*
*ஆனால் ஒரு நாட்டினர் தீவினை புரிவார்களாயின்,*
*ஆளுகை அடுத்தடுத்துக் கைமாறிக் கொண்டே இருக்கும்.*
*3 ஏழைகளை ஒடுக்கும் கொடிய அதிகாரி,*
*விளைச்சலை அழிக்கும் பெருமழைக்கு ஒப்பானவன்.*
*4 நீதிபோதனையைப் புறக்கணிப்போரே,*
*பொல்லாரைப் புகழ்வர்;*
*அதைக் கடைப்பிடித்து நடப்போர் அவர்களை எதிர்ப்பர்.*
*5 தீயோருக்கு நியாயம் என்றால் என்ன என்பதே தெரியாது;*
*ஆண்டவரை வழிபடுபவரோ எல்லாவற்றையும் நன்குணர்பவர்.*
*6 முறைகேடாய் நடக்கும் செல்வரைவிட,*
*மாசற்றவராய் இருக்கும் ஏழையே மேல்.*
*7 அறிவுக்கூர்மையுள்ள மகன்*
*நீதிச் சட்டத்தைக் கடைப்பிடித்து நடப்பான்;*
*ஊதாரிகளோடு சேர்ந்துகொண்டு திரிபவன்*
*தன் தந்தைக்கு இழிவு வரச் செய்வான்.*
*8 அநியாய வட்டி வாங்கிச் செல்வத்தைப் பெருக்குகிறவரது சொத்து,*
*ஏழைகளுக்கு இரங்குகிறவரைச் சென்றடையும்.*
*9 ஒருவர் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படியாதிருப்பாரானால்,*
*கடவுளும் அவர் வேண்டுதலை அருவருத்துத் தள்ளுவார்.*

*10 நேர்மையானவர்களைத் தீயவழியில் செல்லத் தூண்டுபவர்,*
*தாம் வெட்டின குழியில் தாமே விழுவார்;*
*தீது செய்யாதவர்கள் வளம்பட வாழ்வார்கள்.*
*11 செல்வர் தம்மை ஞானமுள்ளவர் என்று எண்ணிக்கொள்வார்;*
*உணர்வுள்ள ஏழையோ அவரது உண்மையான தன்மையை நன்கறிவார்.*
*12 நேர்மையானவர்கள் ஆட்சியுரிமை பெற்றால் மக்கள் பெருமிதம் கொள்வர்;*
*பொல்லார் தலைமையிடத்திற்கு வந்தால்,*
*மற்றவர்கள் மறைவாக இருப்பார்கள்.*
*13 தம் குற்றப் பழிகளை மூடிமறைப்பவரின் வாழ்க்கை வளம் பெறாது;*
*அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார்.*
*14 எப்போதும்* ***கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர்*** *நற்பேறு பெறுவார்;*
*பிடிவாதமுள்ளவரோ தீங்கிற்கு உள்ளாவார்.*
*15 கொடுங்கோல் மன்னன் ஏழைக் குடிமக்களுக்கு முழக்கமிடும் சிங்கமும் இரைதேடி அலையும் கரடியும் போலாவான்.*
*16 அறிவில்லாத ஆட்சியாளர்*
*குடிமக்களை வதைத்துக் கொடுமைப்படுத்துவார்;*
*நேர்மையற்ற முறையில் கிடைக்கும் வருவாயை வெறுப்பவர்*
*நீண்டகாலம் வாழ்வார்.*
*17 கொலை செய்தவன் தப்பியோடுவதாக எண்ணிப் படுகுழியை நோக்கி விரைகிறான்;*
*அவனை எவரும் தடுக்க வேண்டாம்.*
*18 நேர்மையாக நடப்பவருக்குத் தீங்கு வராது;*
*தவறான வழியில் நடப்பவர் தீங்கிற்கு உள்ளாவார்.*
*19 உழுது பயிரிடுகிறவர் நிரம்ப உணவு பெறுவார்;*
*வீணானவற்றில் காலத்தைக் கழிப்பவர்*
*எப்போதும் வறுமை நிறைந்தவராய் இருப்பார்.*
*20 உண்மையுள்ள மனிதர் நலன்கள் பல பெறுவார்;*

*விரைவிலேயே செல்வராகப் பார்க்கிறவர்*
*தண்டனைக்குத் தப்பமாட்டார்.*
*21 ஓரவஞ்சனை காட்டுவது நன்றல்ல;*
*ஆனால் ஒரு வாய்ச் சோற்றுக்காகச் சட்டத்தை*
*மீறுவோருமுண்டு.*
*22 பிறரைப் பொறாமைக் கண்ணோடு பார்ப்பவர்*
*தாமும் செல்வராக வேண்டுமென்று துடிக்கிறார்;*
*ஆனால் தாம் வறியவராகப் போவதை அவர்*
*அறியார்.*
*23 முகப்புகழ்ச்சி செய்கிறவரைப் பார்க்கிலும்*
*கடிந்துகொள்ளுகிறவரே முடிவில் பெரிதும்*
*பாராட்டப்படுவார்.*
*24 பெற்றோரின் பொருளைத் திருடிவிட்டு,*
*"அது குற்றமில்லை" என்று சொல்கிறவன்,*
*கொள்ளைக்காரரைவிடக் கேடு கெட்டவன்.*
*25 பேராசை கொண்டவன் சண்டை மூளச் செய்வான்;*
*ஆண்டவரையே நம்பியிருப்பவர் நலமுடன்*
*வாழ்வார்.*
*26 தன் சொந்தக் கருத்தையே நம்பி வாழ்பவன்*
*முட்டாள்;*
*ஞானிகளின் நெறியில் நடப்பவரோ தீங்கினின்று*
*விடுவிக்கப்படுவர்.*
*27 ஏழைகளுக்குக் கொடுப்பவருக்குக் குறைவு*
*எதுவும் ஏற்படாது;*
*அவர்களைக் கண்டும் காணாததுபோல் இருப்பவர்*
*பல சாபங்களுக்கு ஆளாவார்.*
*28 பொல்லார் தலைமையிடத்திற்கு வந்தால்,*
*மற்றவர்கள் மறைவாக இருப்பார்கள்;*
*அவர்கள் வீழ்ச்சியுற்றபின்*
*நேர்மையானவர்கள் மீண்டும் ஆட்சிக்கு*
*வருவார்கள்.*

*நீதிமொழிகள் 28:1-28*

## சிந்தனைக்கு

*சாலமோன் அரசரின் நீதிமொழிகள் தொகுப்பில், இறுதி இரண்டு அதிகாரங்கள்; நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசுஇயல் பேசும் திருமொழிகள் அடங்கிய பகுதி. இந்த அதிகாரங்களின் பல வசனங்களும், ஒரு திருமொழியின் இரண்டு சொற்றொடர்களில், முதற்பாதியின் நேர்மாறான பொருள்படும் உண்மையை விளக்குவதாக மறுபாதி உள்ளது (Antithetical Proverbs / முரணிசைவான நீதிமொழிகள்). அதிகாரம் 10 முதல் 15 வரை, இத்தகைய நேர்மாறான வசனங்கள் உள்ளன என்பதை முன்னரே குறிப்பிட்டோம்.*

Δ

*தீயோர் (எதிர்) நேர்மையாளர் குறித்த வசனங்களும், ஏழ்மை குறித்த வசனங்களும் இந்தப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன.*

*வசனம் 28:1*
*இணைத்து வாசிக்க, லேவியர் 26:17&36; திருப்பாடல் 14:4-6, 53:4-5.*
*பொல்லாங்கு செய்வோர், தங்களுக்குத் துணையாக வருவோர் உண்டோ என்கிற கவலையின்றி, தங்கள் பாதையில் தொடர்ந்து ஓடுகிறார்கள்; "தீங்கிழைக்கும் யாவரும் ... என் மக்களை விழுங்கப் பார்க்கிறார்களே!" என்று தாவீது பதறுகிறார் (திருப்பாடல் 53:4). அத்தகைய நிலையில், இங்கு சாலமோன் குறிப்பிடுவது போல், நேர்மையாளர் அச்சமின்றி வாழ்கிறார்களா? தெளிவடைய வாசிக்க, மத்தேயு 10:28.*

*வசனம் 28:2*
*பார்க்க, யோபு 12:16-25.*
*தீவினை மிகும் போது, ஆண்டவர் இடைபடுவார்; ஆனால் எளியோர் மற்றும் நேர்மையாளரின் கூக்குரல் எழ வேண்டுமே (விடுதலைப் பயணம் 2:7&9).*

*மணிப்பூர் மாநிலத்தில் திருச்சபைகள் எரித்து அழிக்கப்பட்டன; ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் சொந்த நாட்டில் ஏதிலிகளாக வெளியேறினரே? நமது ஜெபங்கள் எங்கே?*

*கிரஹாம் ஸ்டெயின்சுக்காகப் பதறிய நாம், இந்த மண்ணின் தொன்மைக் குடிகளுக்காகப் பதறவில்லையே?*

*வசனம் 28:3*
*மொழிபெயர்ப்புச் சிக்கலுள்ள ஒரு வசனம்.*
Δ
*"ஏழைகளை ஒடுக்கும் கொடிய அதிகாரி" –*
*OV, ஏழைகளை ஒடுக்குகிற தரித்திரன். ஏழைகள் என்பதற்குச் சொல்லப்பட்ட மூலச்சொல், roosh / ரூஷ்; ஏழை, தேவையில் அல்லது குறைவோடு இருப்போர் என்று பொருள்படும். தரித்திரன் என்று OVல் சொல்லப்பட்டதன் மூலச்சொல், dal / டல்; இதற்கு ஊசலாடு அல்லது பின்தொடர் என்று பொருள்படும். பொது மொழிபெயர்ப்பில், "ஏழைகளை ஒடுக்கும் கொடிய அதிகாரி" என்பது செப்டுவஜிண்டு வழியில் உள்ளது.*

*ஒப்பிட்டு உணர்க, மத்தேயு 18:23-33.*
*செல்வமும் செல்வாக்கும் மிக்க வலியோருக்காக, கொடிய வரிகளை விதித்து, ஏழைகள் மென்மேலும் ஒடுக்கப்படுவர். விளைச்சலை அழிக்கும் பெருமழை என்பது நயமான உவமை. தனது செல்வக் குவிப்பிற்காக சாலமோன் கடைப்பிடித்த வழிமுறைகள், அவரது மறைவுக்குப் பிறகு, நாடு உடையக் காரணமாக ஆயிற்று என்பதை மறக்க வேண்டாம் (1 அரசர்கள் 11:29 ~ 12:19).*

*பன்னாட்டு நிறுவனங்களின் பல இலட்சம் கோடிக் கடன்கள் தள்ளுபடி, புதிய நாடாளுமன்றக் கட்டடம், முதன்மை அமைச்சர் பறக்க இரண்டு உயர்வகை விமானங்கள், பெருகும் அன்னியக் கடன்கள் மற்றும்*

அவற்றுக்கான வட்டி - இவை எல்லாவற்றுக்கும் நிதி செலுத்துவோர் யார்?

பன்னாட்டுச் சந்தையில் எரிபொருள் விலை மிகவும் குறைந்துள்ள போதிலும், கடந்த மூன்று ஆண்டுகளாகக் கூடுதல் விலை செலுத்துவோர் யார்?

ஆண்டுதோறும் புதிய வரிகளைக் கண்டுபிடிக்கும் நமது ஆட்சியாளர்களின் திறனை என்னவென்று சொல்வது! (சான்றாக, வெளிநாடு செல்வோருக்கு, அடுத்த ஆண்டு முதல், குடியுரிமைத் தக்கவைப்பு வரி! உழைப்பாளர்களாக வெளிநாடுகளுக்குச் சென்று, தங்கள் கடின உழைப்பால், அன்னியச் செலவாணியையும் உள்நாட்டுப் பொருளாதாரத்தையும் உயர்த்தும் அயல்வாழ் இந்தியர்கள் மீது கூடுதல் சுமையாக இது அமையும்.) மன்னவன் முறை கோடிச் செய்யின், உறை கோடி வானம் பெயல் ஒல்லாது (குறள்#559).

வசனம் 28:4
ஒப்பிடுக, வ.12&28. மேலும் வாசிக்க, அதிகார அமைப்புக்கு எதிராக நின்ற கிறிஸ்து இயேசு (லூக்கா 13:31-33) மற்றும் யோவான், (மத்தேயு 3:7-10 & 14:3-4); பவுலடிகளின் அறிவுரை, எபேசியர் 5:11.
குகைக்குள் மறைந்து கொண்டிருந்த எலியாவை, கொடுங்கோன்மைக்கு எதிராகச் செயல்பட அழைத்த கடவுள், 1 அரசர்கள் 19:9-18.

நீதிபோதனையைக் கடைப்பிடிப்போர் பொல்லாரை எதிர்த்து நிற்பார்களா? மறைந்து வாழ்வார்களா?
எதிர்த்து நிற்க வேண்டும்; தேவைப்பட்டால் நீதியின் வெற்றிக்கான மன்றாட்டோடு, மறைந்து வாழ வேண்டும். மறைந்து வாழ்வதிலும் காத்திருத்தலிலும் **சுகம் கண்டு விடாமல்,** செயலில் இறங்குவதற்கான கடவுளின் குறிப்பறிவதில் ஆர்வத்துடன், காலம் கருதி இருக்க வேண்டும்.

*மனச் சமாதானம் ஏதும் செய்து கொள்ளாமல், முதுமையும் நடுக்க நோயும் வாட்டினாலும், சாவு வரை அநீதியை எதிர்ப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். நமது விடுதலை மற்றும் வெற்றி வாழ்வுக்காக அருள்நாதர் தமது இன்னுயிரை ஈந்தாரே! நமது இன்னுயிரைத் துயருறும் நமது சகோதர சகோதரிகளுக்குத் தர நாம் கடனாளிகளாக இருக்கிறோமே! (1 யோவான் 3:16)*

*வசனம் 28:5*
*நீதிநெறிகளை அறிதல், 1:1-6 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, திருப்பாடல் 92:5-7, 119:100; எசாயா 6:9-10, 44:18.*
*நாமோ, தூய ஆவியாரால் உண்மையான அருள்பொழிவு பெற்றிருப்பதால், அறிவு பெற்றிருக்கிறோம், 1 யோவான் 2:20&27.*

*வசனம் 28:6*
*ஒப்புமை, 19:1. மேலும் பார்க்க, 15:16 மற்றும் குறிப்பு.*

*வசனம் 28:7*
*பார்க்க, 10:1 மற்றும் குறிப்பு.*

*வசனம் 28:8*
*ஒப்பிட்டு உணர்க, 19:17 மற்றும் குறிப்பு.*
*இஸ்ரயேலருக்குள் வட்டிக்குக் கடன் கொடுக்க முடியாது - வட்டிக்கு விடுதல் கண்டிக்கத்தக்கது, விடுதலைப் பயணம் 22:25; இணைச் சட்டம் 23:19; நெகேமியா 5:1-13; எசேக்கியேல் 18:8&13.*
***இன்றைக்கு நமது பழக்கம் என்ன?***

*வசனம் 28:9*
*பார்க்க, 15:8 மற்றும் குறிப்பு. திருப்பாடல் 66:18, 109:4-7. முந்தைய வசனத்துடன் ஒப்பிடுக; நீதியுள்ள செயலா? செல்வம் சேர்த்தலா? இந்த இரண்டிற்கும் இடையில், சரியான தெரிவே நமது வாழ்வைத் தீர்மானிக்கிறது.*

வசனம் 28:10
பொல்லாரின் உறுதியான அழிவு, திருப்பாடல் 7:14-16; பாவத்தைச் செய்யத் தூண்டுவோருக்கு, கிறிஸ்து இயேசுவின் எச்சரிக்கை, லூக்கா 17:1-2; இடறலுக்கு இடம் கொடாமல், உறுதியாக வாழ அறைகூவல், எபிரேயர் 6:11-12; 1 பேதுரு 3:8-9.

வசனம் 28:11
பார்க்க, 3:7 மற்றும் குறிப்பு.
செல்வர் மட்டுமல்ல, எவரும் தன்னைத் தானே, ஞானி எனத் தீர்த்துக் கொள்ள முடியாது.

வசனம் 28:12
பார்க்க, வ.4ன் குறிப்பு.

வசனம் 28:13
நமது விடுதலை வாழ்வின் அடிப்படை, திருப்பாடல் 32:3-5; 1 யோவான் 1:8-10. மேலும் பார்க்க, திருப்பாடல் 103:13; எசாயா 49:15.

வசனம் 28:14
முந்தைய வசனத்துடன் தொடர்புடைய வசனம்.
கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர் நற்பேறு பெற்றவர் (திருப்பாடல் 1:1-6; மத்தேயு 5:3-12).

வசனம் 28:15-16அ
பார்க்க, சபை உரையாளர் 10:16; எசாயா 3:12. மேலும் பார்க்க, வ.3ன் குறிப்பு.
கொடுங்கோன்மையான ஆட்சியின் கீழ், மக்களின் நிலையை இங்கு சாலமோன் காட்சிப்படுத்துகிறார். ஆகாபு - ஈசபேல் இணையரின் ஆட்சிக் காலம், இஸ்ரயேலின் மோசமான, கொடுங்கோன்மையான ஆட்சிக் காலம்; வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின், ஒருவந்தம் ஒல்லைக் கெடும் (குறள்#563). கடுமொழியும், கையிகந்த தண்டமும், வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம் (குறள்#567).

*வசனம் 28:16*
*"அறிவில்லாத ஆட்சியாளர்" –*
*மோசேயின் திருச்சட்டத்தினை அறியாமல் ஆட்சி செய்வோர்; அரசனுக்கான விதிமுறைகள், இணைச் சட்டம் 17:14-20.*

*வசனம் 28:17*
*பவர் திருப்புதலில், இந்த வசனம் மாறுபட்டு உள்ளது. "bore" / "போர்" என்ற எபிரேயச் சொல், குழி, கிணறு என்று பொருள்படும். குழி என்பது சாவு அல்லது படுகுழி (பாதாளம்) என்றும் பொருள்படும். "பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு" என்ற அடிப்படையில் இங்கு 'படுகுழி' என்று பொருள்கொள்ளுதல் சிறப்பு. மேலும் பார்க்க, திருப்பாடல் 28:1.*

*வசனம் 28:18*
*பார்க்க, 10:9 மற்றும் குறிப்பு.*
Δ
*"... தவறான வழியில் ..." –*
*OV, மாறுபாடான இரு வழியில்; aw-kash / ஆகஷ்; perverse, distorted, crooked என்று பொருள்படும்.*

*வசனம் 28:19*
*பார்க்க, 12:11 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 14:23 மற்றும் குறிப்பு.*
*உழைப்பாளர் (எதிர்) வீணாகக் காலம் கழிப்பவர். கால விரயம் செய்பவர்கள் சோம்பேறிகளைப் போன்றோரே. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். முயற்சி திருவினை ஆக்கும், முயற்சி இன்மை, இன்மை புகுத்தி விடும் (குறள்#616).*

*வசனம் 28:20*
*பார்க்க, 13:11 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 23:4-5 மற்றும் குறிப்பு.*

*சான்றாகப் பார்க்க, நாபோத்தின் திராட்சைத் தோட்டம், 1 அரசர்கள் 21:1-29. மேலும் பார்க்க, அபக்கூக்கு 2:6.*

*வசனம் 28:21*
*பார்க்க, 18:5 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, எசேக்கியேல் 13:19.*

Δ
*"ஒரு வாய்ச் சோற்றுக்காக..." –*
*இங்குக் கையூட்டைக் குறிக்கிறது.*

*வசனம் 28:22*
*பார்க்க, 3:31 மற்றும் குறிப்பு.*

*வசனம் 28:23*
*பார்க்க, 27:5-6 மற்றும் குறிப்பு.*

*வசனம் 28:24*
*பெற்றோரின் பொருள் பிள்ளைகளின் உரிமையா?*
*முதிர்வயதில், பெற்றோரின் உடமைகளைப் பறித்துக் கொண்டு, அவர்களை விரட்டிவிடும் போக்கும் சமுதாயத்தில் உள்ளது. பெற்றோரைக் கைவிடும் போக்கை கிறிஸ்து இயேசு கண்டிக்கிறார், மத்தேயு 15:3-6.*

*வசனம் 28:25*
*பேராசை கொண்டோர், கட்டுப்படுத்த முடியாத தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளச் சதித்திட்டம் தீட்டுவர் (6:14); வெறுப்பை விதைப்பர்; மோதல்களை வளர்ப்பர். மேலும் பார்க்க, பவுலடிகளின் விரிவான விளக்கம், 1 திமொத்தேயு 6:3-6.*

*வசனம் 28:26*
*பார்க்க, 3:5 மற்றும் குறிப்பு. ஒப்பிடுக, 1:32-33 மற்றும் குறிப்பு.*

*வசனம் 28:27*
*பார்க்க, 19:17 & 21:26 மற்றும் குறிப்புகள்.*
Δ
*"...கண்டும் காணாதது போல் இருப்பவர்..." –*
*பொது இடங்களில் பிச்சை எடுப்போரைப் பலரும் இப்படித்தான் நடத்துகின்றனர். அப்படிப்பட்டோர் மீது சாபம் வந்து அமரும். மேலும் பார்க்க, 3:27-30 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 28:28*
*ஒப்பிடுக, வ.12; பார்க்க, வ.4ன் குறிப்பு.*
Δ
*"...நேர்மையானவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவார்கள்" –*
*நம்பிக்கையூட்டும் சொற்கள். ஆனால் ஆட்சி மாற்றம் வரும் என்று ஏதும் செய்யாமல் இருக்கக்கூடாது; இறைவேண்டல் இன்றியமையாதது; அதோடு ஏற்ற வேளையில் செயலூக்கமும் வேண்டும்.*

*எலியாவின் காலத்தில், பாகாலுக்கு அடிபணியாத 7000 பேரை, அன்று ஆண்டவர் வைத்திருந்தார். அதுபோல, இன்றும் இந்த நாட்டில் நல்லாட்சி மலர ஜெபிக்கும் ஆயிரக்கணக்கான தம் மக்களை ஆண்டவர் வைத்திருப்பார்.* ***ஆனால் எலியாக்கள் எங்கே? அவர்கள் குகைக்குள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?*** *முந்தைய காலங்களில் காணப்பட்ட சபைகளின் ஐக்கியம் எங்கே? 72 மணி நேர ஜெபக் கூடுகைகள் எங்கே? இன்னுமா திருச்சபைகள் எரிக்கப்படக் காத்திருக்க வேண்டும்?*

✝

# 20 நீதிமொழிகள் 29

*1 பன்முறை கண்டிக்கப்பட்டும்
ஒருவர் பிடிவாதமுள்ளவராகவே இருந்தால்,
அவர் ஒருநாள் திடீரென அழிவார்;
மீண்டும் தலைதூக்கமாட்டார்.
2 நேர்மையானவர்கள் ஆட்சி செலுத்தினால்,
குடிமக்கள் மகிழ்ச்சியுடனிருப்பார்கள்;
பொல்லார் ஆட்சி செலுத்தினால்
அவர்கள் புலம்பிக் கொண்டிருப்பார்கள்.
3 ஞானத்தை விரும்புவோர் தம் தந்தையை
மகிழ்விப்பர்;
விலைமகளின் உறவை விரும்புகிறவர் சொத்தை
அழித்துவிடுவார்.
4 நியாயம் வழங்குவதில் அரசர் அக்கறை
காட்டினால் நாடு செழிக்கும்;
அவர் வரி சுமத்துவதில் அக்கறை காட்டினால் நாடு
பாழாய்ப் போகும்.
5 தமக்கு அடுத்திருப்போரை அவர்கள் எதிரிலேயே
அளவுமீறிப் புகழ்கிறவர் அவரைக் கண்ணியில்
சிக்கவைக்கிறார்.
6 தீயவர் தம் தீவினையில் சிக்கிக் கொள்வர்;
நேர்மையாளரோ மகிழ்ந்து களிகூர்வர்.
7 ஏழைகளின் உரிமைகளைக் காப்பதில்
நேர்மையாளர் அக்கறை கொள்வர்;
இவ்வாறு அக்கறைகொள்வது பொல்லாருக்குப்
புரியாது.
8 வன்முறையாளர் ஊரையே கொளுத்திவிடுவர்;
ஞானமுள்ளவர்களோ மக்களின் சினத்தைத்
தணிப்பார்கள்.
9 போக்கிரியின்மீது ஞானமுள்ளவர் வழக்குத்
தொடுப்பாராயின்,
அவர் சீறுவார், இகழ்ச்சியோடு சிரிப்பார், எதற்கும்
ஒத்துவரமாட்டார்.
10 தீங்கறியாதவனைக் கொலைகாரர் பகைப்பர்;
நேர்மையானவர்களோ அவருடைய உயிரைக் காக்க
முயல்வார்கள்.*

*11 அறிவில்லாதவர் தம் சினத்தை அடக்கமாட்டார்;*
*ஞானமுள்ளவரோ பொறுமையோடிருப்பதால்,*
*அவர் சினம் ஆறும்.*
*12 ஆட்சி செலுத்துகிறவர்*
*பொய்யான செய்திகளுக்குச் செவிகொடுப்பாராயின்,*
*அவருடைய ஊழியரெல்லாரும் தீயவராவர்.*
*13 ஏழைக்கும் அவரை ஒடுக்குவோருக்கும்*
*பொதுவானது ஒன்று உண்டு;*
*இருவருக்கும் உயிரளிப்பவர் ஆண்டவரே.*
*14 திக்கற்றவர்களின் வழக்கில் அரசர் நியாயமான*
*தீர்ப்பு வழங்குவாராயின்,*
*அவரது ஆட்சி பல்லாண்டு நீடித்திருக்கும்.*
*15 பிரம்பும் கண்டித்துத் திருத்துதலும் ஞானத்தைப்*
*புகட்டும்;*
*தம் விருப்பம் போல் நடக்கவிடப்பட்ட பிள்ளைகள்*
*தாய்க்கு வெட்கக்கேட்டை வருவிப்பர்.*
*16 பொல்லாரின் ஆட்சி தீவினையைப் பெருக்கும்;*
*அவர்களது வீழ்ச்சியை நல்லார் காண்பர்.*
*17 உன் பிள்ளையைத் தண்டித்துத் திருத்து;*
*அவர் உனக்கு ஆறுதலளிப்பார், மனத்தை*
*மகிழ்விப்பார்.*
*18 எங்கே இறைவெளிப்பாடு இல்லையோ,*
*அங்கே குடிமக்கள் கட்டுக்கடங்காமல் திரிவார்கள்;*
*நீதிபோதனையின்படி நடப்பவர் நற்பேறு பெற்று*
*மகிழ்வார்.*
*19 வெறும் வார்த்தைகளினால் வேலைக்காரர்*
*திருந்தமாட்டார்;*
*அவை அவருக்கு விளங்கினாலும் அவற்றைப்*
*பொருட்படுத்தமாட்டார்.*
*20 பேசத் துடிதுடித்துக் கொண்டிருப்பவரை நீ*
*பார்த்திருக்கிறாயா?*
*மூடராவது ஒருவேளை திருந்துவார்;*
*ஆனால் இவர் திருந்தவேமாட்டார்.*
*21 அடிமையை இளமைப் பருவமுதல் இளக்காரம்*
*காட்டி வளர்த்தால்,*
*அவர் பிற்காலத்தில் நன்றிகெட்டவராவார்.*

*22 எளிதில் சினம் கொள்பவரால் சண்டை*
*உண்டாகும்;*
*அவர் பல தீங்குகளுக்குக் காரணமாவார்.*
*23 இறுமாப்பு ஒருவரைத் தாழ்த்தும்;*
*தாழ்மை உள்ளம் ஒருவரை உயர்த்தும்.*
*24 திருடனுக்குக் கூட்டாளியாயிருப்பவர் தம்மையே*
*அழித்துக் கொள்கிறார்;*
*அவர் உண்மையைச் சொன்னால்*
*தண்டிக்கப்படுவார்;*
*சொல்லாவிடில், கடவுளின் சாபம் அவர்மீது விழும்.*
*25 பிறர் என்ன சொல்வார்களோ என்று*
*அஞ்சிக்கொண்டு நடப்பவர்*
*கண்ணியில் சிக்கிக்கொள்வார்;*
*ஆண்டவரை நம்புகிறவருக்கோ அடைக்கலம்*
*கிடைக்கும்.*
*26 பலர் ஆட்சியாளரின் தயவை நாடுவதுண்டு;*
*ஆனால் எந்த மனிதருக்கும் நியாயம் வழங்குபவர்*
*ஆண்டவர் அன்றோ?*
*27 நேர்மையற்றவரை நல்லார் அருவருப்பர்;*
*நேரியவழி நடப்போரைப் பொல்லார் அருவருப்பர்.*
*நீதிமொழிகள் 29:1-27*

## சிந்தனைக்கு

*வசனம் 29:1*
*கண்டிக்கப்பட்டும் பிடிவாதமாக இருந்து உயிர்விட்ட ஏலியின் மகன்கள், 1 சாமுவேல் 2:24-25 & 4:11.*

*கயமைக்காக மீண்டும் மீண்டும் கண்டிக்கப்படும் கயவரைக் குறித்து இங்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. ஒப்பிடுக, 6:12-15 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 2 குறிப்பேடு 36:14-16.*

*28 & 29 அதிகாரங்கள், நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசுஇயல் பேசும் திருமொழிகள்*

அடங்கிய பகுதி என்று ஏற்கனவே பார்த்தோம். இந்த வசனத்திற்கும் அது பொருந்தும்.

வசனம் 29:2
28:12 மற்றும் 28:28 திருமொழிகளுக்கு இணையான திருமொழி.
பொல்லாரின் ஆட்சியில், குடிமக்களின் புலம்பல்களைப் பொல்லார் தங்கள் செவிகளில் போட்டுக் கொள்வதில்லை. ஏழைகளின் குரல் அம்பலத்தில் ஏறாது. ஆனால், குடியாட்சியில் குடிமக்களின் விழிப்புணர்வே நல்லாட்சியை ஏற்படுத்தும். **அதற்கான பெரும் பொறுப்பு நேரிய மக்களுக்கு உள்ளது** என்பதே நாம் உணர வேண்டிய செய்தி. அதே வேளையில், **புலம்பலின் விளைவு நோன்பும் மன்றாட்டுமாக இருக்க வேண்டும்** என்பதே இறை ஆற்றல் செயல்படும் வழி (ஒப்பிடுக, எஸ்தர் 4:3 & 8:15-17).

வசனம் 29:3
ஒப்பிடுக, 10:1 மற்றும் குறிப்பு. பின்பகுதி, இணைத்து வாசிக்க, 31:3அ.

வசனம் 29:4
இஸ்ரயேலின் முடியாட்சியில், திருச்சட்டமே ஆளுகை செய்வது; அதன் அடிப்படையில், நியாயம் வழங்குவது அரசரின் கடமை.

இன்றைய குடியாட்சி முறையில், நியாயமான சட்டங்கள் இயற்றுவது தேர்ந்தெடுக்கப்பட்டோரின் கடமை; அவற்றை நியாயமாகச் செயல்படுத்துவது ஆளுவோரின் கடமை; தவறு நேரிடும்போது, நியாயத்தை நிலைநிறுத்துவது நீதிமன்றங்களின் கடமை; தவறுகளைச் சுட்டிக்காட்டுவது, ஊடகங்களின் கடமை, நேர்மையாளர்களின் கடமை. அரசமைப்பின் இந்த இயங்கியல் இன்று செம்மையாக உள்ளதா? நாம் அந்த அளவுக்கு விழிப்புணர்வோடு இருக்கிறோமா? ஏழைகள்,

ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் செயல்படுவதே நியாயம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா?

Δ

*"அவர் வரி சுமத்துவதில் அக்கறை காட்டினால்..." – OV, பரிதானப் பிரியனோ; KJV, receiveth gifts; NIV, greedy for bribes; NRSV, makes heavy exactions; Septuagint, a lawless man / transgressor. மூலச் சொல், ter-oo-maw / டெரூமா என்பதற்கு, present, offering, oblation என்று பொருள்.*

நீதிமொழிகள் நூலில், இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல். மற்ற நூல்களில், கடவுளுக்குப் படைக்கும் தொடர்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல். எனவே, ஒவ்வொரு மொழிபெயர்ப்பிலும் பொருத்தப்பாடு அடிப்படையில் இதற்குப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது எனலாம்.

வரி சுமத்துவதில் இலக்கு வைத்துச் செயல்படுவதையும், தொழில்நுட்ப வசதிகள் அனைத்தையும் வரிவசூலுக்குப் பயன்படுத்துவதையும், மாதாமாதம் வரிவசூல் எவ்வளவு உயர்ந்துள்ளது என்று பார்த்துப் பெருமையோடு அறிக்கை வெளியிடுவதையும் இன்றைய காலத்தில் நாம் பார்க்கிறோம். ஆட்சியாளர்களின் இத்தகைய மனநிலையை எப்படிச் சொல்வது?

Δ

வரி என்பதா? பரிதானம் என்பதா?

அரசர்களின் காலம் என்பதால், வரி என்றே சொல்லலாம். வரிச் சுமை குறித்து நாம் ஏற்கனவே குறிப்பிட்டோம், பார்க்க, 28:3 குறிப்பு.

குடியாட்சியின் காலத்தில், பல்வேறு தளங்களில் நிலவுகின்ற, பரிதானம் / கையூட்டு என்றும் சொல்லலாம்.

*புதிய இந்தியாவில், தேர்தல் பத்திரங்கள் என்றும் சொல்லலாம். கோலொடு நின்றான் இரவு, வேலொடு நின்றான் இடு என்றது போலும் (குறள்#552).*

*வசனம் 29:5*
*புகழ்ச்சி, பார்க்க, 25:27 மற்றும் 27:21ன் குறிப்புகள். புகழ் ஒரு போதை; அதைச் சிறுவயதிலிருந்தே நாம் நமது பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்கிறோம்.*

*பெரும் பொறுப்புகளில் அமரும் நல்லோர் பலரும் இந்தப் புகழ் தரும் மயக்கத்திலிருந்து விடுபடாத நிலையில், சிக்கலில் மாட்டிக் கொள்ள வாய்ப்புண்டு. ஒவ்வொரு தலைக்கும் ஏற்ற குல்லாய் எத்தர்களிடம் உள்ளது என்பதை நேர்மையுள்ளோர் ஒருபோதும் மறக்கக்கூடாது. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள்#423).*

*வசனம் 29:6*
*சிக்குதல் குறித்த அடுத்த வசனம். பார்க்க, 21:18 மற்றும் குறிப்பு.*

*வசனம் 29:7*
*ஏழைகளின் சார்பில் செயல்பட்ட யோபின் முன்மாதிரியான செயல்பாடு, பார்க்க, யோபு 29:16. மேலும் பார்க்க, 31:8-9; திருப்பாடல் 41:1.*

*வசனம் 29:8*
*இணைத்து வாசிக்க, 16:14.*
*ஊரை என்ன, ஒரு மாநிலத்தையே வன்முறையாளர்கள் கொளுத்தி விடுவார்கள். ஊடகங்களில் செய்தி வராமல் அரசாங்கங்கள் பார்த்துக் கொள்வார்கள்.*

*ஞானமுள்ளவர்கள் செய்யக்கூடியது என்ன? ஒப்பிட்டு உணர்க, வ.9!*

*வசனம் 29:9*
*போக்கிரியின் போக்கு; அவர்கள் ஒருபோதும் ஞானமுள்ள நேர்மையாளரின் செயல்களுக்கு அஞ்சுவதில்லை. ஏனெனில், காவல்துறையின் பல்வேறு அமைப்புகள், நீதிமன்றங்கள் என அரசு இயந்திரங்களைத் தங்களுக்கு ஏற்பச் செயல்படும் வகையில் பொல்லார் வளைத்து விடுவர்.*

*வசனம் 29:10*
*தீங்கறியாதவன் - கொலைகாரன்; காயின் - ஆபேலை நினைவூட்டும் திருமொழி. பார்க்க, 1 யோவான் 3:12.*

*வசனம் 29:11*
*சினம், பார்க்க, 12:16 மற்றும் குறிப்பு. ஒப்பிடுக 16:32 மற்றும் குறிப்பு.*
*ஆறுவது சினம்; அதுவே அதன் இயல்பு. பொழுது சாய்வதற்குள் சினம் தணியட்டும் (எபேசியர் 4:26ஆ).*

*வசனம் 29:12*
*சான்றாக வாசிக்க, 1 அரசர்கள் 22:5-6.*

*ஆட்சியாளரும் பொய்மையும்:*
*மெய்மையின் காலங்கள் மாறி, மெய்நிகர் (virtual reality) மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பக் காலங்களில் நாம் வாழ்ந்து வருகிறோம். அரச அடக்குதலுக்கு ஆட்பட்டு, அழுது சோர்ந்து போன நமது மல்யுத்த வீரர்கள் சிரித்துக்கொண்டே பயணிப்பது போன்ற காட்சித் திரிபுகளை நாம் கண்டிருக்கிறோம். பொய்யான செய்திகளுக்குச் செவிகொடுத்தல் மட்டுமல்லாமல், பொய்களைப் பரப்புவோராகவும், பொய்மையைக் கட்டமைப்போராகவும் ஆட்சியாளர்கள் அமைந்தால், அது தீதினும் தீது.*

*வசனம் 29:13*
*ஒப்பிடுக, மத்தேயு 5:45.*
Δ

*"இருவருக்கும் உயிரளிப்பவர் ஆண்டவரே" – OV, அவ்விருவருடைய கண்களுக்கும் கர்த்தர் வெளிச்சம் கொடுக்கிறார்; KJV, the Lord lighteneth both their eyes; NRSV, the Lord gives light to the eyes of both.*

*ஏழைகளுக்கு எதிர்கால நம்பிக்கை என்னும் ஒளியை அளிக்கும் ஆண்டவர், அவர்களை ஒடுக்குவோர்க்கோ, தங்களை மாற்றிக்கொள்ள நல்வாய்ப்பாகவே வாழ்வளிக்கிறார்.*

*வசனம் 29:14*
*ஒப்பிடுக வ.4ன் குறிப்பு.*
**கடவுளாகிய ஆண்டவர் எப்போதும் திக்கற்றவர்களின் இறைவர்; ஏழைகளின் தெய்வம்; ஒடுக்கப்பட்டோரின் கடவுள். நீதி, நியாயம் என்பது ஒடுக்கப்பட்டோர் சார்ந்ததே!** *(மேலும் பார்க்க, 15:25 மற்றும் 17:5ன் குறிப்புகள்; எசாயா 11:1-4).*

*வசனம் 29:15*
*பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்துதல், பார்க்க, 13:24 & 22:15 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 29:16*
*பார்க்க, 28:28 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 21:12 மற்றும் குறிப்பு.*

*வசனம் 29:17*
*ஒப்பிடுக, வ.15.*
*கண்டித்தல் பெற்றோருக்கு வலி தருவது; அந்த வலியின் ஊற்று, கண்டித்தலில் இல்லை,* ***அவர்களின் பிள்ளைகள் தவறு செய்கிறார்களே என்ற பதட்டத்தில் இருக்கிறது.***

*தவறு களையப்பட வேண்டுமானால், கண்டிக்க வேண்டும்; கண்டித்தலின் விளைவு பிள்ளைகளின் நல்வாழ்வு, பெற்றோரின் மகிழ்ச்சி.*

வசனம் 29:18
பார்க்க, 8:32; மேலும் பார்க்க, 1 சாமுவேல் 3:1; திருப்பாடல் 74:9; புலம்பல் 2:9; எசேக்கியேல் 7:26; ஆமோஸ் 8:11-12.

இறைவெளிப்பாடு இல்லாமையால் மட்டுமல்ல, இறைவெளிப்பாட்டுக்குச் செவிகொடாமையாலும் தீய ஆட்சி நடக்கும்; இதனை நாம் இஸ்ரயேலின் அரசாட்சிகளில் காண்கிறோம். எப்போதெல்லாம் அரசர்கள் இறைவெளிப்பாட்டுக்குச் செவிசாய்த்தார்களோ அப்போதெல்லாம் நாடு இறையருளில் களிகூர்ந்தது.

தாம் செய்ய இருப்பதைத் தமது அடியாருக்கு வெளிப்படுத்தக் கடவுள் விரும்புகிறார்; ஆனால், இன்றைக்கு நமது நாட்டில், இறைவெளிப்பாட்டை வெளிப்படுத்துபவர்கள் எங்கே?

வசனம் 29:19
அடிமை அல்லது வேலையாள் குறித்த திருமொழி; மேலும் வ.21.

தன் தலைவன் சொல்வது புரிந்தாலும், தன் மனம் போன போக்கில் வேலை செய்யும் பணியாள் - அத்தகையோர் கண்டித்துச் சரி செய்யப்பட வேண்டும் என்பது இங்கு தொக்கி நிற்கிறது.

இன்றைய காலத்தின் நிலைமைகள் வேறு; அடிமைத்தனம் தடை செய்யப்பட்டுள்ளது. வீட்டு உதவியாளர் உட்பட அனைவரின் உரிமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே, நமது தீர்வுகள் சட்டத்திற்கு உட்பட்டு இருக்கவேண்டும். அதற்கு மேல், இன்று எந்தப் பணிக்கு வருவோரும் ஓரளவுக்கேனும் படித்தவர்கள் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

**"தன்னில் அன்புகூர்வது போல் பிறரிலும்" என்பதே பாகுபாடுகள் கடந்து அனைவரையும் ஒன்றிணைக்கும் மந்திரம். அன்போடும் மரியாதையோடும் நடத்தப்படும் பணியாளர் ஒருபோதும் எதிலும் தவற மாட்டார்.**

*வசனம் 29:20*
*ஒப்பிடுக, 26:12 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 17:27, 19:2 & 21:5; யாக்கோபு 1:19.*

*கத்தும் நாய்க்குக் காரணம் தேவையில்லை, தன் நிழலைக் கண்டும் கத்தும்! பதறிக் கொட்டுவார்கள் சிலர்; உளறிக் கொட்டுவார்கள் சிலர். மூடத்தனத்திலும் மோசமான மூடத்தனம் சொற்களைக் கொட்டுதல். மூடத்தனத்திலும் திருத்த முடியாத மூடத்தனம் இது என்கிறார் சாலமோன்.*

*வசனம் 29:21*
*"...அவர் பிறகாலத்தில் நன்றி கெட்டவராவார்" – OV, முடிவில் அவன் தன்னைப் புத்திரனாகப் பாராட்டுவான்; மூலச் சொல், maw-nohn / மானோன்; இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு சொல்; வாழைத் தூரிலிருந்து வாழைக்கன்று கிளர்ந்து எழுவது போல் என்று பொருள்படும். எனவே வாரிசு எனலாம்.*

*பிள்ளைகளே கண்டித்து வளர்க்கப்பட வேண்டுமானால், தன் வீட்டிலேயே வளரும் பணியாளரின் பிள்ளைகள் எப்படி வளர்க்கப்படவேண்டும்!*

*வசனம் 29:22*
*ஆத்திரம் அறிவுக்குப் பகை. அது தவறான முடிவுகளுக்கு வழிவகுக்கும். மேலும் பார்க்க, 15:1&18 மற்றும் குறிப்புகள்.*

*வசனம் 29:23*
*போற்றுதலுக்குரிய பண்புநலன் தாழ்மை. தாழ்மையுள்ளோரை விரும்பும் ஆண்டவர் அவர்களை உயர்த்துகிறார். பார்க்க, 15:33 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, யோபு 22:29; திருப்பாடல் 147:6; தானியேல் 4:30-33; மத்தேயு 23:12; லூக்கா 14:11, 18:10-14; திருத்தூதர் பணிகள் 12:21-23; 1 பேதுரு 5:5-6.*

*வசனம் 29:24*
*திருடனுக்குக் கூட்டாளியாக இருப்பவர், ஒப்பிடுக, லேவியர் 5:1.*

*வசனம் 29:25*
*பிறர் பொருட்டு நேரிடும் அச்சம்; சான்றாக, ஆபிரகாம், தொடக்க நூல் 12:11-19 & 20:1-10. கிறிஸ்து இயேசுவின் ஊக்கம் தரும் அருள்மொழி, லூக்கா 12:4.*

*வசனம் 29:26*
*ஆள்வோரின் கடைக்கண் பார்வைக்குக் காத்திருப்போர் மறந்துவிடும் ஒன்று: ஆள்வோருக்கும் வெற்றி அருளுபவர் ஆண்டவர் (யோபு 36:5-7; திருப்பாடல் 20:9). ஆள்வோர் ஆனாலும், நீதித் தலைவர்கள் ஆனாலும் நியாயம் மறுக்கப்பட வாய்ப்புகள் உண்டு. அப்படிப்பட்டவர்களிடமிருந்தும் குடிமக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யக்கூடியவர் கடவுள்.*

*வசனம் 29:27*
*நல்லார் பொல்லாரையும், பொல்லார் நல்லாரையும் வெறுப்பர்; ஆனால் நல்லார் சார்பாக ஆண்டவர் செயல்படுவார் (திருப்பாடல் 1:6, 97:10 & 139:21-22).*

*{இந்தத் திருமொழியோடு சாலமோனின் நீதிமொழிகளின் இரண்டாம் தொகுப்பு நிறைவு.}*

# 20 நீதிமொழிகள் 30

*1 மாசாவைச் சார்ந்த யாக்கேயின் மகன் ஆகூரின்
மொழிகள்:
அவர் ஈத்தியேல், ஊக்கால் என்பவர்களுக்குக் கூறிய
வாக்கு:
2 மாந்தருள் மதிகேடன் நான்;
மனிதருக்குரிய அறிவாற்றல் எனக்கில்லை.
3 ஞானத்தை நான் கற்றுணரவில்லை;
கடவுளைப்பற்றிய அறிவு எனக்கில்லை.
4 வானத்திற்கு ஏறிச்சென்று மீண்டவர் யார்?
தம் கைப்பிடிக்குள் காற்றை ஒருங்கே கொணர்ந்தவர்
யார்?
கடல்களை மேலாடையில் அடக்கிவைத்தவர் யார்?
மண்ணுலகின் எல்லைகளைக் குறித்தவர் யார்?
அவர் பெயரென்ன? அவருடைய மகன்
பெயரென்ன?
நீதான் எல்லாவற்றையும் அறிந்தவனாயிற்றே!*

*5* **கடவுளின் ஒவ்வொரு வாக்கும் பரிசோதிக்கப்பட்டு
நம்பத்தக்கதாய் விளங்குகிறது;
தம்மை அடைக்கலமாகக் கொண்டவர்களுக்கு
அவர் கேடயமாயிருக்கிறார்.**
*6* **அவருடைய வார்த்தைகளோடு ஒன்றையும்
கூட்டாதே;
கூட்டினால் நீ பொய்யனாவாய்;
அவர் உன்னைக் கடிந்துகொள்வார்.**

*7 வரம் இரண்டு உம்மிடம் கேட்கிறேன், மறுக்காதீர்;
நான் சாவதற்குள் அவற்றை எனக்கு அளித்தருளும்.
8 வஞ்சனையும் பொய்யும் என்னை விட்டு
அகலச்செய்யும்;
எனக்குச் செல்வம் வேண்டாம், வறுமையும்
வேண்டாம்;
எனக்குத் தேவையான உணவை மட்டும் தந்தருளும்.
9 எனக்கு எல்லாம் இருந்தால், நான்,
"உம்மை எனக்குத் தெரியாது" என்று மறுதலித்து,*

"ஆண்டவரைக் கண்டது யார்?" என்று கேட்க
நேரிடும்.
நான் வறுமையுற்றால், திருடனாகி,
என் கடவுளின் திருப்பெயருக்கு இழிவு வருவிக்க
நேரிடும்.

10 வேலைக்காரரைப்பற்றி அவர் தலைவரிடம்
போய்க் கோள்சொல்லாதே;
சொன்னால், அவர் உன்மீது பழிசுமத்துவார்; நீயே
குற்றவாளியாவாய்.

11 தந்தையைச் சபிக்கிற, தாயை வாழ்த்தாத மக்களும்
உண்டு.
12 மாசு நிறைந்தவராயிருந்தும்
தம்மைத் தூயோர் எனக் கருதும் மக்களும் உண்டு.
13 கண்களில் இறுமாப்பு, பார்வையில் ஆணவம்
- இத்தகைய மக்களும் உண்டு.
14 பற்கள் கூரிய வாள்,
கீழ்வாய்ப் பற்கள் தீட்டிய கத்தி
- இவற்றை உடைய மக்களும் உண்டு;
அவர்கள், நாட்டிலுள்ள ஏழைகளை
விழுங்கிவிடுவார்கள்;
உலகிலுள்ள எளியோரைத் தின்று விடுவார்கள்.

15 அட்டைப்பூச்சிக்கு, "தா, தா" எனக் கத்தும் இரு
புதல்வியர் உண்டு;
ஆவல் தணியாத மூன்று உண்டு;
"போதும்" என்று சொல்லாத நான்காவது ஒன்றும்
உண்டு.
16 அவை: பாதாளம், மலடியின் கருப்பை, நீரை
அவாவும் வறண்ட நிலம்,
"போதும்" என்று சொல்லாத நெருப்பு ஆகியவையே.

17 தகப்பனை ஏளனம் செய்யும் கண்களையும்
வயது முதிர்ந்த தாயை இகழும் விழிகளையும்
இடுகாட்டுக் காக்கைகள் பிடுங்கட்டும்,
கழுகுக் குஞ்சுகள் தின்னட்டும்.

*18 எனக்கு வியப்பைத் தருவன மூன்று உண்டு;
என் அறிவுக்கு எட்டாத நான்காவது ஒன்றும் உண்டு.
19 அவை: வானத்தில் கழுகு மிதத்தல்,
கற்பாறைமேல் பாம்பு ஏறுதல்,
நடுக்கடலில் கப்பல் மிதந்து செல்லுதல்,
ஆண்மகனுக்குப் பெண்மீதுள்ள நாட்டம்
ஆகியவையே.*

*20 விலைமகள் நடந்துகொள்ளும் முறை இதுவே:
தவறு செய்தபின் #அவள் குளித்துவிட்டு,#
"நான் தவறு எதுவும் செய்யவில்லை" என்பாள்.*

*21 உலகத்தை நிலைகுலைப்பவை மூன்று;
அது பொறுக்க இயலாத நான்காவது ஒன்றும் உண்டு:
22 அரசனாகிவிடும் அடிமை, உண்டு திரியும் கயவன்,
23 யாரும் விரும்பாதிருந்தும் இறுதியில் மணம்
முடிக்கும் பெண்,
உரிமை மனைவியின் இடத்தைப் பறித்துக்
கொள்ளும் அடிமைப் பெண்.*

*24 சிறியவையாயினும் ஞானமுள்ள சிற்றுயிர்கள்
நான்கு உலகில் உண்டு:
25 எறும்புகள்: இவை வலிமையற்ற இனம்;
எனினும், கோடைக் காலத்தில்
உணவைச் சேமித்து வைத்துக் கொள்கின்றன.
26 குறுமுயல்கள்: இவையும் வலிமையற்ற இனமே;
எனினும், இவை கற்பாறைகளுக்கு இடையே
தம் வளைகளை அமைத்துக் கொள்கின்றன.
27 வெட்டுக்கிளிகள்: இவற்றிற்கு அரசன் இல்லை;
எனினும், இவை அணி அணியாகப் புறப்பட்டுச்
செல்லும்.
28 பல்லி: இதைக் கைக்குள் அடக்கி விடலாம்;
எனினும், இது அரச மாளிகையிலும் காணப்படும்.*

*29 பீடுநடை போடுபவை மூன்று உண்டு;
ஏறுபோல நடக்கின்ற நான்காவது ஒன்றும் உண்டு:*

*30 விலங்குகளுள் வலிமை வாய்ந்ததும்*
*எதைக் கண்டும் பின்வாங்காததுமான சிங்கம்;*
*31 பெருமிதத்துடன் நடக்கும் சேவல்;*
*மந்தைக்குமுன் செல்லும் வெள்ளாட்டுக்கடா;*
*படையோடு செல்லும் அரசன்.*

*32 நீ வீண் பெருமைகொண்டு மூடத்தனமாக*
*நடந்திருந்தாலும்,*
*தீமை செய்யத் திட்டம் வகுத்திருந்தாலும்,*
*உன் வாயை பொத்திக் கொண்டிரு.*
*33 ஏனெனில், மோரைக் கடைந்தால் வெண்ணெய்*
*திரண்டுவரும்;*
*மூக்கை நெரித்தால் இரத்தம் வரும்;*
*எரிச்சலூட்டினால் சண்டை வரும்.*

*30:20ல், # ... # 'அவள் சாப்பிட்டபின் வாயைத் துடைத்துவிட்டு' எனவும் மொழிபெயர்க்கலாம்.*
*நீதிமொழிகள் 30:1-33*

## சிந்தனைக்கு

*வசனம் 30:1-33*
*உருவகங்களாகப் பல செய்திகளை வெளிப்படுத்தும் முதுமொழிகள் அடங்கிய ஒரு பகுதி. நீதிமொழிகள் 30 மற்றும் 31ம் அதிகாரங்கள், வேற்றின ஞானிகளின் படைப்புகள் என்பது பொதுவான கருத்து. நீதிமொழிகள் நூலின் பின்னிணைப்பு என்று இந்த இறுதி இரு அதிகாரங்களைக் கருதுவோர் உண்டு.*

*வசனம் 30:1*
*யாக்கே, ஆகூர், ஈத்தியேல் மற்றும் ஊக்கால் என்போர் குறித்து நாம் அறியத்தக்க குறிப்பு ஏதும் பைபிளுக்குள் இல்லை. அடிப்படையில், வேற்றின ஞானி ஒருவர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, மோசேயின் திருச்சட்டத்தில் கற்றுத் தேர்ந்து*

*வழங்கிய முதுமொழிகளின் தொகுப்பு இந்தப் பகுதி எனலாம்.*

Δ

*OVல், 'உபதேச வாக்கியங்கள்' (KJVல், the prophecy, NIVல், the oracle) என்று சொல்லப்பட்டதன் மூலச் சொல், mas-saw / மாசா என்பது.*

*இந்த வசனத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புக் குறிப்புகள் தேவையாக உள்ளன. அவற்றை மொழிபெயர்ப்புச் சிக்கல் என்பதா? நய்யாண்டி என்பதா? உருவகம் என்பதா?*

Δ

*மாசா –*

*மேலும் பார்க்க, 31:1.*

*இந்த மூலச்சொல், KJVல், burden / song / carry / set / tribute / prophecy (இங்கு மட்டும்) என்றெல்லாம் பொருள்கொள்ளப்பட்டுள்ளது. பொது மொழிபெயர்ப்பில் இச்சொல், 'மாசாவைச் சேர்ந்த' என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. மாசா என்பது மெரிபா என்றும் அழைக்கப்படும் ஓர் இடம், விடுதலைப் பயணம் 17:7. அல்லது இஸ்மயேலின் மகன்களில் ஒருவரான (பார்க்க, தொடக்க நூல் 25:14 & 1 குறிப்பேடு 1:30), மாசா என்பவர் வாழ்ந்த, வட அரேபியாவில் உள்ள ஓர் இடம். எதுவாயினும், இந்த இடம் இஸ்ரயேலின் எல்லைகளுக்கு அப்பால் உள்ள ஓர் இடம். அதன் அடிப்படையில், இந்த இரண்டு அதிகாரங்களின் நீதிமொழிகளை எழுதியோர் இஸ்ரயேலர் அல்லர். மாறாக, அரேபிய வழியில் வந்தோர் தந்த நீதிமொழிகள்; இங்கு சொல்லப்படும் யாக்கே அல்லது ஆகூர் (மேலும் இலமுவேல், 31:1) வேற்றினத்தார் ஆயினும், இறைவரை ஏற்றுக்கொண்டு, அதுவரையில் இருந்த எபிரேய வேதங்களை ஏற்றுக்கொண்டு, கற்றுத் தேர்ந்திருக்கக் கூடும் என்று பைபிள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.*

Δ

*யாக்கே –*

*அனேகமாக, அரேபிய வழியில் வந்த ஒரு பெயர். இதன் பொருள் 'கவனத்தோடு கடவுள் வழியில்' நடப்பவர். இந்த ஒரு வசனத்தைத் தவிர பைபிளில் வேறு எங்கும் இப்பெயர் இடம்பெறவில்லை.*

Δ

*ஆகூர் –*

*சேர்த்த அல்லது சேர்க்கப்பட்ட என்று பொருள்படும். சமகால ஞானிகளின் முதுமொழிகளை சேர்க்கிறவராக சாலமோன் இருந்தார் என்பதை முன்னரே பார்த்தோம் (பார்க்க, 22:17 ~ 24:34 பகுதிக்குரிய முன்னுரை). அந்த அடிப்படையில், ஆகூர் என்பது சாலமோன், தானே தன்னைக் குறிக்கச் சூட்டிக் கொண்ட ஒரு பெயர் என்னும் கருத்து உள்ளது. அதே அடிப்படையில், 'கவனத்தோடு கடவுள் வழியில்' எனும் யாக்கே எனும் சொல், தாவீதைக் குறிக்க சாலமோன் தெரிந்துகொண்ட பெயராகவும் இருக்கலாம் என்றும் கருதுகின்றனர். எப்படிப் பொருள்கொண்டாலும், இந்தத் திருமொழிகள் வெவ்வேறு ஞானிகளிடமிருந்து சேர்க்கப்பட்டவை என்ற பொருள் மாறவில்லை.*

Δ

*ஈத்தியேல் –*

*மேலும் பார்க்க, நெகேமியா 11:7.*

*இங்கு, ஈத்தியேல் (eeth-ee-ale) என்பது, 'கடவுளே, நான் சோர்ந்து போனேன்' என்பதைக் குறிக்கப் பயன்பட்டது.*

Δ

*ஊக்கால் –*

*oo-kawl; ஆவலோடு விழுங்குதல் என்று பொருள்படும். உருவகமாக, 'ஆவலோடு எதிர்பார்த்து நொந்து போனவர்' எனலாம்.*

Δ

*ஈத்தியேல் என்னும் சொல் இருமுறை வருவதன் அடிப்படையிலும், அடுத்து வரும் வசனங்களின் தொடர்பிலும், "மாசாவைச் சேர்ந்த யாக்கேயின் மகன் ஆகூரின் மொழிகள்: நான் சோர்ந்து போனேன்,*

*கடவுளே! நான் சோர்ந்து போனேன்; நான் நொந்து போனேன்," என்று சொல்லலாம்.*

*உருவகங்களின் அடிப்படையில் இந்த வசனத்தை இவ்வாறும் பெயர்க்கலாம்:*
**'இறைமொழிகளின் வழியே கடவுளைத் தேடித் தேடிச் சோர்ந்து போனோருக்கும், நொந்து போனோருக்கும், தாவீதின் மகனான சாலமோன் சேகரித்த முதுமொழிகள்'** *எனலாம்.*
*(என்ன துணிகரம் என்று எவரும் என் மீது பாய வேண்டாம்! இது பலரின் எண்ணங்களை உள்வாங்கிய ஒரு பாமரனின் புரிதல் மட்டுமே!)*

*வசனம் 30:2-4*
*தேடல் உள்ள ஒருவர், தன்னையும், பேரண்டத்தையும், கடவுளையும் உணர்தலின் ஒரு வெளிப்பாடு.*

*வசனம் 30:2-3*
*கடவுளை அல்லது ஞானத்தை அடையும் வழி, 'தான் ஒன்றுமில்லை' என்று உணர்வதுதான். அனைத்தும் அறிந்தோருக்கோ, 'எல்லாம் தனக்குத் தெரியும்' என்று எண்ணுவோருக்கோ, தற்பெருமை கொண்டோருக்கோ, கடவுள் எந்தவொரு வெளிப்பாட்டையும் தருவதில்லை (எரேமியா 1:6; 1 கொரிந்தியர் 1:19-21 & 8:2; யாக்கோபு 4:6).*

*வசனம் 30:3*
*"...கடவுளை..." –*
*OV, பரிசுத்தரை; மூலச் சொல் kaw-doshe / காடோஷ்; sacred, holy என்று பொருள்படும். பெயர்ச்சொல்லாக, கடவுள், துறவி, வானவர் என்று பொருள்படும்.*

*வசனம் 30:4*
*பார்க்க, யோபு 38 ~ 39.*

*யோபுக்குக் கடவுள் எழுப்பிய கேள்விகளைப் போல, ஆகூர் எழுப்பும் கேள்விகள். மேலும் பார்க்க, திருப்பாடல் 104:2-3; எசாயா 40:12-14.*

Δ

*"வானத்திற்கு ஏறிச் சென்று மீண்டவர் யார்?" –*
*மறுமொழியாகப் பார்க்க, யோவான் 3:13; எபேசியர் 4:8-9.*

Δ

*"அவருடைய மகன் பெயரென்ன?" –*
*இது கேட்கப்பட்ட காலத்தில், இக்கேள்விக்கான மறுமொழியை எவரும் அறிந்திருக்க மாட்டார்.*

*வசனம் 30:5-6*
*திருச்சட்டத்தையும், தொடக்க முதல் தாவீதின் காலம் வரை உள்ள இஸ்ரயேலின் வரலாற்றில் வல்லவரின் வழிநடத்துதல் பற்றியும், அறிந்து உணர்ந்த ஒருவரின் முதுமொழிகள்.*

*வசனம் 30:5*
*ஆபிரகாமின் வாழ்க்கையில் உறுதிப்பட்ட வாக்கு, தொடக்க நூல் 15:1. மேலும் பார்க்க, திருப்பாடல் 12:6, 18:30, 19:8, 84:11, 115:11 & 119:140.*

*வசனம் 30:6*
*பார்க்க, இணைச் சட்டம் 4:2 & 12:32: திருவெளிப்பாடு 22:18-19.*

*வசனம் 30:7-9*
*நீதிமொழிகள் நூலில் இடம்பெற்றுள்ள ஒரே மன்றாட்டு. இறைப்பற்றின் அடிப்படையில், தனது வாழ்க்கைக்கான தேவைகளை வேண்டும் ஞானி.*

*வரலாற்று நூல்களில் சாலமோன் கடவுளிடம் வேண்டியது, ஞானத்தையும், அறிவையும். இங்கு ஞானி கேட்பது, இரண்டு: வறுமையும் வேண்டாம், செழிப்பும் வேண்டாம். அங்கு, சாலமோன் தான் வேண்டாத, செல்வத்தையும், சொத்தையும்,*

புகழையும் அருளைப் பெற்றார் (2 குறிப்பேடு 1:7-12). கேட்டதற்கும் மிகுதியாகப் பெற்றதன் விளைவுகளால், சாலமோன் அரசரின் விருப்பங்கள் திசை மாறினவோ!

இன்றைய காலத்தில், உணவு - உடை - இருப்பிடம் மட்டுமே ஒருவருடைய தேவைகள் என்று சொல்ல முடியாது. நாம் வாழ்வது தொழில்நுட்பக் காலம். ஒருவரின் சராசரி வாழ்க்கைக்கே பல மின்னணு உபகரணங்கள் தேவைப்படுகின்றன. இவையெல்லாம் தேவை என்று ஆனபோதிலும், தேவைகளைச் சுருக்கி, ஏழைகளையும் ஊழியங்களையும் தாங்கி வாழ்வதே சிறந்தது.

**இறை ஆட்சி வருக என மன்றாடுவது மட்டுமல்லாமல், அதனைக் கட்டுவதும் நமது கடமை அல்லவா!**

வசனம் 30:7
"...இரண்டு..." –
இங்குத் தொடங்கி, எண்களைப் பயன்படுத்தும் ஞானி.

வசனம் 30:8
சேர்த்து வாசிக்க, மத்தேயு 6:11; 1 திமொத்தேயு 6:6-8; எபிரேயர் 13:5. மேலும் பார்க்க, பிலிப்பியர் 4:19.

வசனம் 30:9
மன மேட்டிமையும் ஆண்டவரை மறத்தலும்; ஒப்பிடுக, இணைச் சட்டம் 8:12-14 மற்றும் நெகேமியா 9:25-26. மேலும் பார்க்க, ஓசேயா 13:6.

வசனம் 30:10
அடிமை அல்லது வேலைக்காரரைப் பற்றி, அவருடைய முதலாளியிடம் அவதூறு அல்லது கோள் சொல்லுதல். இது ஆண்டவர் வெறுக்கும் செயல், திருப்பாடல் 101:5.

*வசனம் 30:11-14*
*கெடுமதி கொண்ட மக்களில் சிலரை, வகைப்படுத்தும் ஞானி.*

*வசனம் 30:11*
*இணைத்து வாசிக்க, வ.17. பார்க்க, 20:20 மற்றும் குறிப்பு.*

*வசனம் 30:12*
*பார்க்க, 16:2 மற்றும் குறிப்பு.*
*தங்களைத் தாங்களே தூயோர் என்று சொல்லிக் கொண்டு, தங்கள் செயல்பாடுகளை ஆண்டவரின் பார்வையில் சீர்தூக்கிப் பாராதோர், அவருடைய தீர்ப்புக்கு உரியர், எரேமியா 2:35.*

*தன் பார்வையில் தன் சகோதர சகோதரிகளைத் தீர்ப்பிட்ட பரிசேயன், அப்போதே ஆண்டவரால் தீர்ப்பிடப்பட்டான், லூக்கா 18:10-14.*

*ஆலய ஆராதனைகளில் நமக்கு நினைவூட்டப்படும் திருமொழிகள், 1 யோவான் 1:8-10. மேலும் பார்க்க, தீத்து 1:15-16.*

*வசனம் 30:13*
*ஆணவம், இறுமாப்பு, பார்க்க, 6:17 & 11:2 மற்றும் குறிப்புகள். இவர்கள் ஆண்டவரின் தண்டனைக்குத் தப்பார், எசாயா 13:11. மேலும் பார்க்க, எசாயா 2:11 & 5:15.*

*வசனம் 30:14*
*மக்களை விழுங்கப் பார்க்கும் தீயோர், திருப்பாடல் 14:4; மேலும் பார்க்க, திருப்பாடல் 57:4.*
*பொல்லாரின் பற்களை உடைக்க மன்றாடும் நல்லார், திருப்பாடல் 3:7.*
*எப்படியெல்லாம் எளியோர் வேட்டையாடப்படுகின்றனர் என்பதை விளக்கும் இறைவாக்கினர், ஆமோஸ் 8:4-6; மீக்கா 2:1-3 & 3:2-3.*

*இன்றைக்கு, ஐந்து ரூபாய்க்கு ஒரு மாச்சில்லுப் பொட்டலம் (biscuit packet) வாங்கும் ஏழைச் சிறுமியின் கைகளிலிருந்தும் ஜிஎஸ்டி வரி பறிக்கப்படுகிறது. ஆண்டவர் மௌனமாக இருப்பாரோ?*

*வசனம் 30:15-16*
*மீண்டும் எண் விளையாட்டுத் திருமொழிகள்.*
*"வாயைப் பிளந்திருக்கும் பாதாளம்," எசாயா 5:14; மேலும் பார்க்க, 27:20அ; அபக்கூக்கு 2:5.*
*இலட்சங்களில் மனிதர்களை விழுங்கிய கொள்ளை நோயிலிருந்து இந்த ஆண்டுதான் (2023) மீண்டிருக்கிறோம். பனிப்பாறைகள் உருகுவதால், வரும் காலங்களில் இதுபோன்ற கொடிய கிருமிகளை மீண்டும் நாம் எதிர்கொள்ள நேரிடும் என்பதை நினைவில் வைப்போம்.*

Δ

*"மலடியின் கருப்பை" –*
*பார்க்க, திருப்பாடல் 127:4-5.*
*அதற்கு எழுதப்பட்ட குறிப்பு:*
*குழந்தைப் பேறு ஓர் ஆசி எனில் நமது சமுதாயத்தில், குழந்தைப் பேறின்மை ஒரு சாபமா?*

*இன்றைக்கு இந்தச் சிக்கல் பல குடும்பங்களிலும் நிலவுகிறது. அந்தக் காலத்துப் போரிடும் சமுதாயங்களில், குழந்தைப் பேறு அவசியமான ஒன்று. இன்று நாம் பாடுபடுவது, உள்ளங்களை வெல்ல, ஆத்துமாக்களைச் சேர்க்க. விண்ணரசு விரிவடையப் பாடுபடும் நமக்கு, இதுபோன்றவை ஒரு குறையே அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.*

*ஓர் உவமையாகச் சொல்லப்பட்டாலும், இந்த வாக்கு உண்மையானது: "பிள்ளை பெறாத மலடியே, மகிழ்ந்து பாடு; பேறுகால வேதனை அறியாதவளே, அக்களித்துப் பாடி முழங்கு; ஏனெனில், 'கைவிடப்பட்டவளின் பிள்ளைகள், கணவனோடு*

*வாழ்பவளின் பிள்ளைகளைவிட ஏராளமானவர்கள்,''' என்கிறார் ஆண்டவர். (எசாயா 54:1)*

Δ

*"நீரை அவாவும் வறண்ட நிலம்" –*
*உலகின் ஆடைத் தொழில்களுக்கு மட்டும் 44 டிரில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது! ஆடை மற்றும் அலங்காரத் தொழில்களுக்கு மட்டும், உலகின் மொத்தத் தொழிற்சாலைகளின் நீர்த் தேவைகளில், 20% செல்கிறது.* ***உலகெங்கும் பெருகிவரும் இதுபோன்ற ஆடம்பர நுகர்வுத் தேவைகளை நிறைவேற்ற, ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் நிலங்கள் வறண்டு வருகின்றன. அவற்றைச் சீர் செய்ய எவ்வளவு நீர் தேவைப்படும்?***

Δ

*"போதும் என்று சொல்லாத நெருப்பு" –*
*உலகின் தூய காற்று உலவும் கனடா நாட்டில், அருகிலுள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டை அச்சுறுத்தும் அளவுக்குப் பெரும் காட்டுத் தீ பரவி வருகிறது. உலக வெப்பமயமாதலின் விளைவாக, உலகெங்கும் அவ்வப்போது இதுபோன்ற காட்டுத்தீயின் பேரழிவுகள் நிகழ்கின்றன. நாமோ இதுபற்றிய அக்கறையின்றி, நாமும் நமது குடும்பமும் நன்றாக வாழ்ந்தால் போதுமென்று, குளிரூட்டப்பட்ட அறைகளில் இந்த உலகை இன்னும் வெப்பமூட்டுகிறோம். நன்கு சம்பாதித்து நான்கு வீடுகள் கட்டுவோம்; ஆனால், வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்க மாட்டோம். மாந்தர் குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து மறைக்குமாம் கண்டூர் மரம் (மூதுரை#30ஆ).*

*நன்றியற்றவர்களாக, நாம் வாழும் உலகை நாமே அழித்தால், பண்படுத்தவும், பராமரிக்கவும், பாதுகாக்கவும் நிலத்தை நம்மிடம் ஒப்புவித்த ஆண்டவர், நம்மை மெச்சுவாரா?*

*வசனம் 30:17*
*பார்க்க, வ.11; லேவியர் 20:9.*
*பெற்றோரை மதிக்காத பிள்ளைகளுக்கு மிகக் கொடுமையாக அறம்பாடும் ஞானி.*
*வசனம் 30:18-19*
*மீண்டும் எண் விளையாட்டுத் திருமொழிகள்.*

*தடயமற்ற தடங்கள்!*
*அன்றைய வியப்பும் வினாக்களும்; தேடல் பெருகப் பெருக ஆண்டவர் மனிதத்தின் அறிவுக் கண்களைத் திறக்கிறார். அதன் விளைவாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில், கி.மு. பத்தாம் நூற்றாண்டில் எண்ணிப் பார்க்க முடியாத உயரங்களைக் கி.பி. 21ம் நூற்றாண்டில் எட்டியிருக்கிறோம்.*

*தொழில்நுட்ப உயரங்களை எட்டிய நாம் மானுடத்தின் உயரங்களை எட்டினோமா?*

*வசனம் 30:19*
*OVயில், ... வழி... வழி... வழி... வழி... என்றும், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ...way ...way ...way ...way என்றும் உள்ள நிலையில், பொது மொழிபெயர்ப்பு ஒவ்வொன்றுக்கும் ஏற்ற தனிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளது.*

*வசனம் 30:20*
*ஒப்பிடுக, வ.12.*
*உணர்கிற எவரும் தூயோராக முடியும் – மீட்பரின் அருள் பெற்றால், யோவான் 8:3-11.*

Δ

*"...தவறு செய்தபின், அவள் குளித்து விட்டு..." –*
*OV, அவள் தின்று, தன் வாயைத் துடைத்து; உண்ணுதல் என்பது உருவகமாகப் பாலுறவைக் குறிக்கிறது என்று சிலர் கூறுகின்றனர். பொது மொழிபெயர்ப்பில், இந்த வசனம் செப்டுவஜிண்டு வழியில் உள்ளது.*

*வசனம் 30:21-23*
*மீண்டும் எண் விளையாட்டுத் திருமொழிகள்.*

Δ

*"அரசனாகிவிடும் அடிமை" –*
*மக்களாட்சியின் காலத்தில் ஆளக்கூடிய இடத்திற்கு எவரும் உயர முடியும். ஆனால் அவ்வாறு உயர்பவர் மக்களாட்சியின் மாண்பைக் காத்தல் நலம். பார்க்க, 19:10 மற்றும் குறிப்பு.*

Δ

*"உண்டு திரியும் கயவன்" –*
*உண்டு திரிபவனை மூடன் என்று சொல்வதைவிட, கயவன் என்பதே தகும். "உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது," 2 தெசலோனிக்கர் 3:10.*

Δ

*"யாரும் விரும்பாதிருந்தும் இறுதியில் மணம் முடிக்கும் பெண்" –*
*இன்றைய சூழலில், இருபாலருக்கும் இந்த நிலை உள்ளது; மணமாகத் தாமதமாகும் பெண்ணின் நிலையை விட, ஆணின் நிலை பரிதாபமானது, துயரமானது.*

*இணையின்றி எதனையும் கடவுள் படைக்கவில்லை என்பதே படைப்பின் மாட்சி. குறிப்பாக, மனிதரை ஆணும் பெண்ணுமாகவே கடவுள் படைத்தார், தொடக்க நூல் 1:27. எனவே துணை கிட்டவில்லை என்பது ஆணுக்கோ பெண்ணுக்கோ தனிப்பட்ட குறை அல்லவே அல்ல. நமக்குப் புலப்படாத அந்தத் துணையை ஆண்டவர் வெளிப்படுத்த மன்றாடுவோம்.*

Δ

*"உரிமை மனைவியின் இடத்தைப் பறித்துக் கொள்ளும் அடிமைப் பெண்" –*
*சாரா (எதிர்) ஆகார் (தொடக்க நூல் 16). இது இறைத்திட்டம் அல்ல என்பதை நாம் அறிவோம்.* ***இதற்கு ஆகார் காரணமில்லை*** *என்பதையும் நாம் அறிவோம். இறைப் பிரசன்னத்தில் செய்த, மணநாளின் உடன்படிக்கையை நினைவில்*

கொண்டு, அதன் தூய்மையைப் பேணுதலே வாழ்விணையரின் சிறப்பு.

வசனம் 30:24-28
எண் விளையாட்டு நீதிமொழிகள்.
உருவகமான நீதிமொழிகள்.
சிறியதும், வலிமையற்றதுமான உயிரினங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய, வாழ்விற்கான படிப்பினைகள்.
Δ
எறும்புகள் –
பார்க்க, 6:6-8 மற்றும் குறிப்பு.

அற்ற காலத்திற்காக ஏற்ற காலத்தில் அவசியமானவற்றைச் சேகரித்து வைத்தல், 27:24; செழிப்பான காலத்தில் வறட்சியான காலங்களை எதிர்நோக்கிச் செயல்பட்ட யோசேப்பு (தொடக்க நூல் 41:38-49).
Δ
குறுமுயல்கள் –
பார்க்க, திருப்பாடல் 104:18.
பாதுகாப்பான இடத்தைக் கண்டறிந்து, இருப்பிடத்தை அமைத்தல்.

கற்பாறைகளிடையே பதுங்கி வாழ்ந்த தாவீது; அதனால், ஆண்டவரையே கற்பாறையாகக் கண்ட தாவீது, 2 சாமுவேல் 22:2,32&47; மேலும் பல திருப்பாடல்கள்.
Δ
வெட்டுக் கிளிகள் –
ஒன்றிணைந்து இசைவாக, ஒரு படைத்திரள்போல் செயல்படுதல், யோவேல் 2:2-9. படைகள் அவ்வாறு இசைந்து பாய்ந்து செல்லுதல் வெற்றியைத் தரும். பற்றுறுதியாளருக்கும் ஒன்றிப்பு இன்றியமையாதது, 1 கொரிந்தியர் 1:10; எபேசியர் 4:3.
Δ

*பல்லிகள் –*
*அரண்மனையே என்றாலும், இவைகள் இருப்பதைத் தடுக்க முடியாது.*

*வசனம் 30:28*
*பல்லி –*
*OV, சிலந்திப் பூச்சி; மூலச்சொல், sem-aw-meeth / செமாமித்; இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல்; தெளிவான பொருள் இல்லை. பொது மொழிபெயர்ப்பு, செப்டுவஜிண்டு வழியில் உள்ளது.*

*சிலந்தி, வலை பின்னி வாழும்; வலையோடு அதனை அகற்றி விடலாம். ஆனால் பல்லிகளை அரண்மனையிலிருந்து ஒழிக்க முடியாது.*

*வசனம் 30:29-31*
*எண் விளையாட்டு நீதிமொழிகள்.*
*வலிமைமிக்க சில உருவகங்கள்.*
*வெள்ளாட்டுக் கிடா தலைமைப் பண்பில் தேர்ந்தது, எரேமியா 50:8.*

*வசனம் 30:31*
*சேவல் –*
*OV, போர்க் குதிரை; KJV, greyhound (ஓர் இன நாய்); மூலச்சொல், zar-zeer / ஷார்ஷீர்; இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல்; தெளிவான பொருள் இல்லை. பொது மொழிபெயர்ப்பு செப்டுவஜிண்டு வழியில் உள்ளது.*

*வசனம் 30:24-31*
*உயிரினங்கள் மற்றும் விலங்குகள் என்று சொல்லப்பட்டாலும், அவற்றின் பண்புநலன்களை நமது ஆன்மீக வாழ்வுக்குப் பொருத்திப் பார்த்தல் நலம். வாசிக்க, 1 கொரிந்தியர் 12:22-25.*

*மென்மைக்கே வண்மை! வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்; வேழத்தில் பட்டு உருவும் கோல் (வேல்) பஞ்சில் பாயாது; நெட்டிருப்புப் பாரைக்கு (கடப்பாரை) நெக்கு விடாப் பாறை, பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும் (நல்வழி#33).*

*சிறியனவும் வலுவற்றவையுமான உயிரினங்கள் வாழ்வதிலும் பலுகிப் பெருகுவதிலும் பெரிய சிக்கல் ஏதுமில்லை. ஆனால், சரணாலயங்களும் பாதுகாப்பு இயக்கங்களும் வலிமையான விலங்குகளுக்கே தேவைப்படுகின்றன.*

***கடவுளும் ஆதிக்கமிக்கோரின் கடவுளாக இல்லாமல், அடக்குமுறைக்கு உள்ளானோரின் கடவுளாகவே இருக்கிறார்.***

*வசனம் 30:32-33*
*பார்க்க, 6:12-15, 15:1 & 29:22 மற்றும் குறிப்புகள்.*

*"வாயைப் பொத்திக் கொண்டிரு" என்பது, தீயவற்றை நிறுத்திக் கொள்வது தான். பார்க்க, யோபு 40:4-5.*

*பெருமை, மடமை, கயமை – இவை எதுவும் ஆண்டவர் விரும்பும் பண்பு அல்ல. இவை அனைத்தின் விளைவும் தீதே! எனவே, மோசமான எதிர் விளைவுகளைச் சந்திக்குமுன், இத்தகைய தீய பண்புகளைக் கைவிட ஞானி ஆகூர் அழைக்கிறார்.*

✝

## 20 நீதிமொழிகள் 31

*1 மாசாவின் அரசனான இலமுவேலின் மொழிகள்;*
*இவை அவனுடைய தாய் தந்த அறிவுரைகள்:*
*2 பிள்ளாய், என் வயிற்றில் பிறந்தவனே,*
*என் வேண்டுதலின் பயனாய்க் கிடைத்த என்*
*பிள்ளாய்,*
*நான் சொல்வதைக் கவனி.*

*3 உன் வீரியத்தையெல்லாம் பெண்களிடம்*
*செலழித்து விடாதே;*
*அரசரை அழிப்பவர்களை அணுகாதே.*

*4 இலமுவேலே, கேள், அரசருக்குக் குடிப்பழக்கம்*
*இருத்தலாகாது;*
*அது அரசருக்கு அடுத்ததன்று;*
*வெறியூட்டும் மதுவை ஆட்சியாளர் அருந்தலாகாது.*
*5 அருந்தினால், சட்டத்தை மறந்து விடுவார்கள்;*
*துன்புறுத்தப்படுவோருக்கு நீதி வழங்கத்*
*தவறுவார்கள்.*
*6 ஆனால் சாகும் தறுவாயில் இருப்பவருக்கு*
*மதுவைக் கொடு;*
*மனமுடைந்த நிலையில் இருப்பவருக்கும் திராட்சை*
*இரசத்தைக் கொடு.*
*7 அவர்கள் குடித்துத் தங்கள் வறுமையை*
*மறக்கட்டும்;*
*தங்கள் துன்பத்தை நினையாதிருக்கட்டும்.*

*8 பேசத் தெரியாதவர் சார்பாகப் பேசு;*
*திக்கற்றவர்கள் எல்லாருடைய உரிமைகளுக்காகவும்*
*போராடு.*
*9 அவர்கள் சார்பாகப் பேசி, நியாயமான தீர்ப்பை*
*வழங்கு;*
*எளியோருக்கும், வறியோருக்கும் நீதி வழங்கு.*

*10 திறமைவாய்ந்த மனத்திடமுள்ள*
*மனையாளைக் காண்பது மிக மிக அரிது;*

*அவள் பவளத்தைவிடப் பெருமதிப்புள்ளவள்.*
*11 அவளுடைய கணவன்*
*அவளை மனமார நம்புகிறான்;*
*அவளால் அவனுக்கு*
*நலமும் வளமும் பெருகும்.*
*12 அவள் தன் வாழ்நாள் முழுவதும்*
*அவனுக்கு நல்லதையே செய்வாள்;*
*ஒரு நாளும் தீங்கு நினையாள்.*
*13 கம்பளி, சணல் ஆகிய பொருள்களைத்*
*தானே தேடிக் கொணர்வாள்;*
*தன் வேலை அனைத்தையும்*
*தானே விருப்புடன் செய்வாள்.*
*14 அவளை ஒரு வணிகக் கப்பலுக்கு ஒப்பிடலாம்;*
*அவள் உணவுப் பொருள்களைத்*
*தொலையிலிருந்து வாங்கி வருவாள்.*
*15 வைகறையில் துயிலெழுவாள்;*
*வீட்டாருக்கு உணவு சமைப்பாள்;*
*வேலைக்காரிகளுக்குரிய*
*வேலைகளைக் குறிப்பாள்.*
*16 ஒரு நிலத்தை வாங்கும்போது*
*தீர எண்ணிப்பார்த்தே வாங்குவாள்;*
*தன் ஊதியத்தைக் கொண்டு*
*அதில் கொடி முந்திரித் தோட்டம் அமைப்பாள்.*
*17 சுறுசுறுப்புடன் அவள் வேலை செய்வாள்;*
*அயர்வின்றி நாள் முழுதும்*
*ஊக்கம் குன்றாது உழைப்பாள்.*
*18 தன் உழைப்பு நற்பலன் தரும்*
*என்பது அவளுக்குத் தெரியும்;*
*அவள் தன் வீட்டில்*
*ஏற்றிவைத்த விளக்கு*
*ஒருபோதும் அணையாது.*
*19 இராட்டினத்தைத் தானே பிடித்து*
*வேலை செய்வாள்;*
*நூல் இழைகளைத்*
*தன் விரல்களால் திரிப்பாள்.*
*20 எளியவனுக்கு உதவிசெய்யத்*
*தன் கையை நீட்டுவாள்.*

வறியவனுக்கு வயிறார உணவளிப்பாள்.
21 குளிர்காலத்தில் அவள் வீட்டாரைப்பற்றிய
கவலை அவளுக்கு இராது;
ஏனெனில், எல்லார்க்கும்
திண்மையான கம்பளிப் போர்வை உண்டு.
22 தனக்கு வேண்டிய போர்வையைத்
தானே நெய்வாள்;
அவள் உடுத்துவது
பட்டாடையும் பல வண்ண உடைகளுமே.
23 அவளை மணந்த கணவன்
ஊர்ப் பெரியோருள் ஒருவனாய் இருப்பான்;
மக்கள் மன்றத்தில்
புகழ்பெற்றவனாயும் இருப்பான்.
24 அவள் பட்டாடைகளை நெய்து விற்பாள்;
வணிகரிடம் இடுப்புக் கச்சைகளை
விற்பனை செய்வாள்.
25 அவள் ஆற்றலையும் பெருமையையும்
அணிகலனாகப் பூண்டவள்;
வருங்காலத்தைக் கவலை இன்றி
எதிர்நோக்கியிருப்பாள்.
26 அவள் பேசும்போது
ஞானத்தோடு பேசுவாள்;
அன்போடு அறிவுரை கூறுவாள்.
27 தன் இல்லத்தின் அலுவல்களில்
கண்ணும் கருத்துமாய் இருப்பாள்;
உணவுக்காகப் பிறர் கையை
எதிர்பார்த்துச் சோம்பியிருக்கமாட்டாள்.
28 அவளுடைய பிள்ளைகள்
அவளை நற்பேறு பெற்றவள்
என வாழ்த்துவார்கள்;
அவளுடைய கணவன் அவளை மனமாரப்
புகழ்வான்.
29 "திறமை வாய்ந்த பெண்கள் பலர் உண்டு;
அவர்கள் அனைவரிலும் சிறந்தவள் நீயே"
என்று அவன் சொல்வான்.
30 எழில் ஏமாற்றும்,
அழகு அற்றுப் போகும்;

*ஆண்டவரிடம் அச்சம் கொண்டுள்ள*
*பெண்ணே புகழத்தக்கவள்.*
*31 அவளுடைய செயல்களின்*
*நற்பயனை எண்ணி*
*அவளை வாழ்த்துங்கள்;*
*அவளது உழைப்பை*
*மக்கள் மன்றம் பாராட்டுவதாக.*

*நீதிமொழிகள் 31:1-31*

## சிந்தனைக்கு

*வசனம் 31:1-9*
*இந்த அதிகாரத்தின் முதல் பகுதி:*
*அறிமுகம் (வ.1-2),*
*ஆள்வோரின் –*
*பெண் வேட்கைக்கு எதிராக (வ.3),*
*குடிப்பழக்கத்திற்கு எதிராக (வ.4-7),*
*ஏழைகளுக்கு நீதி தருதல் எனும் அடிப்படைப் பொறுப்பு (வ.8-9).*

*வசனம் 31:1*
*"மாசா" –*
*பார்க்க, 30:1 குறிப்பு.*

Δ

*"மாசாவின் அரசனான இலமுவேல்" –*
*இஸ்மயேலின் மகனான மாசா (தொடக்க நூல் 25:14; 1 குறிப்பேடு 1:30) என்பவரின் வழிமரபில் வந்த, வட அரேபியாவில் ஒரு நிலப்பகுதியை ஆண்ட மன்னனாக இருக்கலாம்.*

Δ

*"அவனுடைய தாய் தந்த அறிவுரைகள்" –*
*அரசனின் அன்னையின் சிறப்பான செயல்பாடு, 1 அரசர்கள் 1:11-31.*
*மாசாவின் மன்னனான இலமுவேலின் தாய்; பெயர் குறிப்பிடப்படவில்லை; இஸ்ரயேலின் வரலாற்றில்,*

*ஞானம் மிகுந்த பெண்களாக, இறைவாக்கினராக, மிரியாம், தெபோரா மற்றும் சல்லூமின் மனைவி குல்தா போன்றோர் அறியப்பட்டனர். வேற்றினப் பெண்ணான சேபாவின் அரசி, ஞானத்தைத் தேடி எருசலேம் வந்தார். ஞானமான பாடலைப் பாடியவராக அன்னா திகழ்ந்தார். இங்கு ஞானமிகு முதுமொழிகளை வழங்கியவராக மன்னர் இலமுவேலின் தாய் விளங்குகிறார். தங்கள் பிள்ளைகளை ஞானத்தோடு வளர்ப்பவர்களாக, அன்னையர் திகழ்கின்றனர், 1:8 & 6:20; மேலும் பார்க்க, இணைச் சட்டம் 6:6-7; 1 சாமுவேல் 1:21-28; 2 திமொத்தேயு 1:5&3:15.*

*ஓர் அன்னையின் முதுமொழிகளோடு நீதிமொழிகள் நூல் நிறைவடைகிறது என்பது இந்நூலின் கூடுதல் சிறப்பு.*

*வசனம் 31:2*
*"என் வேண்டுதலின் பயனாய்க் கிடைத்த" –*
*சாம்சன் மற்றும் சாமுவேல் போல, வேண்டுதலின் பயனாய்ப் பிறந்த மகன், இலமுவேல். இலமுயேல் (lem-oo-ale) என்பதற்கு, கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவன் அல்லது கடவுளுக்கு உரியவன் என்று பொருள்.*

*குடிப்பழக்கத்திற்கு விலக அறிவுறுத்தும் தாயை வ.4ல் பார்க்கிறோம்; அது, நசரேயப் பொருத்தனையின் விளைவாக இருக்கலாம் என்று சொல்வோர் உளர். இலமுவேலின் தாய் வேற்றினத்தவர் என்பதால் இவ்வாறு கருத இடமில்லை.*

*வசனம் 31:3*
*ஆற்றலைப் பெண்களிடம் இழத்தல், பார்க்க, 5:7-11, 7:26-27; இணைச் சட்டம் 17:17; சாலமோனைக் குறித்து, 1 அரசர்கள் 11:1-8; நெகேமியா 13:26.*

வசனம் 31:4-5
பார்க்க, 20:1 & 23:29-35 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, ஒசேயா 4:11.
இதற்கு முன்னர் பொதுவாகக் கண்டிக்கப்பட்ட மது அருந்தும் பழக்கம், இங்குக் குறிப்பாக ஆள்வோருக்குத் தடுக்கப்படுகிறது. ஏனெனில், மது அருந்தும் ஆட்சியாளரும் நீதித் தலைவர்களும், தங்கள் மயக்க நிலையில் நீதியைப் புரட்டுவர். மேலும் மது வளர்க்கும் நட்புறவாலும் நடுநிலை தடுமாறும்.

மதுவால் தடுமாறும் தலைவர், எஸ்தர் 1:5-22. மேலும் பார்க்க, சபை உரையாளர் 10:16-17; எசாயா 5:11-12&22-23.

வசனம் 31:6-7
மது அருந்துதலுக்கு ஒரு விதிவிலக்கை இங்கு இலமுவேலின் தாய் தருகிறார்.

சாவின் வேதனையில் மது அருந்தத் தருதல், யோவான் 19:29.

வசனம் 31:7
"அவர்கள் குடித்துத் தங்கள் வறுமையை மறக்கட்டும்" –
இன்றைய ஆதிக்க உலகில், மது மற்றும் போதைப் பொருட்கள் பெருகி வருவதன் காரணம். "கஞ்சி குடிப்பதற்கிலார், அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்" என்ற நிலையில், ஏழைகள் இருப்பது மடமை; அந்த நிலையில் தங்கள் குடிமக்களை வைத்திருப்பது ஆட்சியாளர்களின் திறமை. **கற்றோரையும் மடமையில் ஆழ்த்துவது போதை.**

கடந்த சில ஆண்டுகளாக, இந்தியாவிற்குள் வரும் போதைப் பொருள்களின் அளவு மிகுதி; பதின்ம வயதில், மாணவர்கள் நடுவிலும் இப்பழக்கம் ஏற்பட

*வழிவகுக்கப்பட்டு வருகிறது என்பது நாம் கவலைப்பட வேண்டிய செய்தி.*

*விழிப்போடு இருப்பவர் பேறுபெற்றோர், திருவெளிப்பாடு 16:15. விழிப்புணர்வோடு வாழ நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறோம், 4:23&34, 16:17; மாற்கு 13:33&37; 1 கொரிந்தியர் 16:13; எபேசியர் 6:18; கொலோசையர் 4:2; 1 பேதுரு 5:8; 2 பேதுரு 1:13; திருவெளிப்பாடு 3:3.*

*கிறிஸ்து இயேசு நம்மைப்* ***"பாம்புகளைப் போல முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப் போல் கபடு அற்றவர்களாகவும் இருக்க"*** *அறிவுறுத்துகிறார் (மத்தேயு 10:16).*

***உங்கள் மதியை மதுவில் மயக்கினால், நீங்கள் இத்தகைய நுண்மதியோடு வாழ இயலுமா?***

*வசனம் 31:8-9*
*பார்க்க, 16:10-15, 24:23-25, 29:7 மற்றும் குறிப்புகள். ஏழை எளிய மக்களின் சார்பில் செயல்பட மீண்டும் மீண்டும் ஆள்வோர்க்கான அழைப்பு.*

*வசனம் 31:10-31*
*இந்த அதிகாரத்தின் இரண்டாம் பகுதி; நீதிமொழிகள் நூலின் இறுதிப் பகுதி. நூலின் தனித்துவமான ஒரு பகுதி - எபிரேய மொழியில், அகர வரிசைக் கவிதையாக (acrostic poem) அமைந்ததொரு பகுதி.*

*தன் மகனுக்குப் பெண் தேடும் தாய், அந்தப் பெண்ணில் அவர் தேடும் பண்புநலன்களைப் பட்டியலிட்டது போன்ற ஒரு கவிதை. "Who can find a virtuous woman?" / "குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்?" என்பது அந்தக் கவிதையின் நோக்கத்தை வெளிப்படுத்தும் நல்ல தொடக்கம்.*

பெண் தேடுதல் வேறு எங்கேயும் விட, நமது நாட்டில் மிகப் பெரிய சவால். அது மகனுக்கு மனைவியைத் தேடுவது மட்டுமல்ல; குடும்பத்திற்கு ஏற்ற குடும்பத்தைத் தேடுவது! அதுபோக, பையனுக்கும் பெண்ணுக்கும் பத்துப் பொருத்தம் பார்க்க வேண்டும்; ஜாதகம் சாதகமாக இருக்க வேண்டும்; வேறு சபையாக இருந்தாலும் நமது ஜாதியாக இருக்க வேண்டும்! எந்த அளவுக்கு நாம் இதுபோன்ற மூடத்தனங்களை நம்மிலிருந்து விலக்கி வைத்திருக்கிறோம்?

பெண்ணின் பண்புநலன்களைக் கண்டறிவது மிகவும் கடினம். பெண் தேடுவோர் இதில் சோர்ந்து போய் விடுவர். இதற்கு எளிய தீர்வு உண்டு: **கடவுள் முன் முழங்காலில் நில்லுங்கள். அவர் சிறந்த பெண்ணைக் காட்டுவார்.** வ.30ல் ஞானி சொல்வது போல, இறைவாழ்வில் பெண்ணின் வளர்ச்சி என்ன என்று பாருங்கள். நல்ல மருமகளைக் காண்பீர்கள். உங்கள் மகளையும் அவ்வாறே வளருங்கள், **அவள் ஒரு நல்ல குடும்பத்தைக் கட்டுவாள்.**

வசனம் 31:10
"திறமை வாய்ந்த மனத்திடமுள்ள மனையாள்" –
OV, குணசாலியான ஸ்திரீ; KJV, virtuous woman. மூலச்சொல், khah-yil / **கயில்;** இது army, valour, host, valiant, forces, strength, riches, wealth, power, substance, strong என்றெல்லாம் பொருள்படும். KJVல் நான்கு வசனங்களில் மட்டுமே virtuous என்ற பொருளில், அதுவும் பெண் தொடர்பில், இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (12:4, 31:10&29; ரூத் 3:11).

ஆண் என்றால், ஆற்றல்மிக்க, வலிமை வாய்ந்த, செல்வம் நிறைந்த என்று பொருள்படுத்திவிட்டு, பெண் என்றால் பண்புள்ள என்று பொருள்

*கொள்வதா என்ற கேள்வி எழும். ஆனால் இந்தப் பகுதியை வாசிக்கும் போது, பெண்ணின் பண்புநலன்களை மட்டும் பேசாமல், அறிவுடைய, செயல்திறன்மிக்க, உளவுறுதி கொண்ட, இறையச்சமிக்க* **ஓர் உழைக்கும் பெண்ணைக் குறித்தே** *இலமுவேலின் தாய் பேசுகிறார் என்பது தெளிவாகும். அந்த வகையில், பொது மொழிபெயர்ப்பு சரியாக உள்ளது.*

*பண்புநலன்கள் நிறைந்த பெண் யார்?*

🌈 *தன் கணவனின் நம்பிக்கைக்கு உரியவள் அவள், வ.11-12.*

🌈 *தன் குடும்பத்தின் மீது கரிசணை மிக்கவள் அவள், வ.13-15. பெரிய குடும்பம் என்பது பணியாளர்களையும் உள்ளடக்கியது தானே!*

🌈 *நுண்ணறிவு மிக்கவள் அவள், வ.16.*

🌈 *தன் குடும்பத்தை முன்னேற்ற ஊக்கத்தோடு உழைப்பவள் அவள், வ.17-19.*

🌈 *பரிவுடையவள் அவள், வ.20.*

🌈 *முன்னெச்சரிக்கையோடு செயல்படுபவள் அவள், வ.21.*

🌈 *தற்சார்போடு வாழ்பவள் அவள், வ.22.*

🌈 *செயல்திறனோடு தன் குடும்பத்தைப் பேணுவதால், அவளுடைய கணவன் அர்ப்பணிப்போடு சமுதாயப் பணிகளில் சிறப்புப் பெறுவான், வ.23.*

🌈 *வணிகத் திறன் கொண்டவள் அவள், வ.24; விற்பனைத் திறன் என்பது, தேவைப்படும் பொருளை நல்ல தரத்தோடு, வேண்டிய அளவில் உற்பத்தி செய்து, அதற்கேற்ற விலைக்கு விற்று, குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவது. இதையெல்லாம் ஒரு பெண்ணே செய்ய முடியுமா என்று கேள்வி எழுந்தால், அதற்கான விடை, வ.15ல் உள்ளது.*

🌈 *பண்பமை நடை கொண்டவள் அவள், வ.25.*

🌈 *கனிவும் ஞானமும் நிறைந்தவள் அவள், வ.26.*

🌈 *தன் கருமமே கண்ணாக இருப்பவள் அவள், வ.27.*

🌈 *ஊராரின் போற்றுதலுக்கு மட்டுமல்லாமல், பெற்ற பிள்ளைகளின் போற்றுதலுக்கு மட்டுமல்லாமல், கொண்ட கணவனின் போற்றுதலுக்கும் உரியவள் அவள், வ.28-29.*

🌈 *அவள்தன் ஆற்றல்மிகு உழைப்பிற்கும், உலகு போற்றும் நற்செயல்களுக்கும் அடிநாதமாக விளங்குவது, அவள் கொண்ட இறையச்சமே, வ.30-31.*

*வசனம் 31:10*
*விலைமதிப்பற்றது ஞானம், 2:4; பண்புநலன்மிக்க மனையாளும் விலைமதிப்பற்றவள்.*

*வசனம் 31:11-12*
*ஒப்பிடுக, 12:4 & 18:22 மற்றும் குறிப்புகள்.*
*மனைவியிடம் கணவனின் நம்பிக்கை:*

** அவனுக்கு நலமும் வளமும் அவளால் பெருகும்.*

** தன் கணவனுக்கு அவள் நல்லதையே செய்வாள்.*

** தன் கணவனுக்கு அவள் கொஞ்சமும் தீங்கு நினையாள்.*

*வசனம் 31:13-14*
*தேடிக் கொணர்தல் – பணியாளர் உட்படத் தனது குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் தேவையான நுகர்வுப் பொருட்களைத் தேடிக் கொணர்தல்.*

Δ

*வணிகக் கப்பல் –*
*கப்பல் போக்குவரத்தை நடத்துவோரின் அன்றைய பணிகளில் அடிப்படையானது, வணிகம். தனது*

*நாட்டில் கிடைக்காத பொருட்கள் எவை, அவை எங்கே சிறப்பாகக் கிடைக்கும் என்று அறிந்து அவற்றை வாங்கித் தனது நாட்டிற்குக் கொண்டு வந்து விற்றல் என்பது கப்பல் வணிகரின் தொழில். அப்படித் தொழில் செய்வோரின் கொள்முதல் அறிவைக் கொண்டவள் இல்லாள். மேலும் பார்க்க, வ.18&24.*

Δ

*"வேலை அனைத்தையும் விருப்புடன், தானே செய்வாள்" –*
*வேறு எவரின் தலையீடு இன்றி, தூண்டுதல் இன்றி, தன்னியல்பாகத் தன் பணிகளைச் செய்பவள், மனையாள்.*

*வசனம் 31:15*
*தன்னைச் சார்ந்து வாழ்வோரின் நலன்களில் உள்ள அக்கறை மட்டுமன்றி, நாளின் பணிகளின் பொருட்டு, அவற்றைச் செய்ய இருக்கும் பணியாளர்களை மேலாண்மை செய்வதற்காக, வைகறையில் எழுவாள் தலைவி. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு (கொன்றைவேந்தன்#86).*

*ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு எழுப்பும் கேள்விக்கு, சான்றாக விளங்கும் பெண், லூக்கா 12:42.*

*வசனம் 31:16*
*எதிர், 24:30-31; மேலும் பார்க்க, 10:4.*
*நிலத்தின் அமைப்பு, மண்வளம், நீர்வளம் போன்றவற்றையும், தான் விரும்பும் பயிருக்கு ஏற்ற நிலமா என்பதையும் ஆய்ந்து அறிந்து நிலத்தை வாங்கும் பெண்.*

*வசனம் 31:17-19*
*வ.15ன் தொடர்ச்சியாக விளக்கம் பெறும் ஊக்கமிகு உழைப்பு. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும், அசைவு இலா ஊக்கம் உடையான் உழை (குறள்#594). 'ஒரு*

*செயலைச் செய்வது வெற்றி அல்ல; அதனை மகிழ்ச்சியாகச் செய்வதே வெற்றி' என்கிறார் அன்னை தெரேசா.*

*வசனம் 31:18*

*"... வீட்டில் ஏற்றி வைத்த விளக்கு ..." –*

*வீட்டில் விளக்கு ஏற்றும் பெண், நல்ல மருமகளின் அடையாளமாக ஆசிய நாடுகளில் சொல்லப்படுவது.*

*வசனம் 31:19*

*"... தானே வேலை செய்வாள்; ...தன் விரல்களால் திரிப்பாள்" –*

*எந்த வேலையையும் செய்யத் தெரிந்த ஒருவரே, பணியாளர்களைப் பட்டறிவோடு வழிநடத்த இயலும்.*

*மீண்டும் மீண்டும் நூற்றலும் நெய்தலும், வ.13,21-22&24; பெண்கள் ஈடுபட்ட தொழில், நீதித் தலைவர்கள் 16:13-14.*

*வசனம் 31:20*

**உழைப்பின் நோக்கம் செழிப்பு அல்ல, மாறாக ஏழைகளுக்கு இரங்குதல்,** *22:9.*

*மேலும் பார்க்க, 19:17; இணைச் சட்டம் 15:11; யோபு 31:16-20; உரோமையர் 12:13; எபேசியர் 4:28; எபிரேயர் 13:16.*

*இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே (நறுந்தொகை#58); உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல் (நறுந்தொகை#10).*

*வசனம் 31:21*

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும் (குறள்#435). எறும்புகள் மழைக்காலத்திற்கென, கோடையிலேயே உணவைச் சேகரித்து வைக்கும் (6:6-8 & 30:25 மற்றும் குறிப்புகள்). அதுபோல, ஆண்டுக்கு ஆண்டு, குடும்பத்தின்*

*பெருகும் தேவைகளுக்கு ஏற்ப, குளிர்காலத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வைக்கும் குடும்பத் தலைவி.*

*வசனம் 31:22*
*தனக்கேற்ற எடுப்பான வண்ண உடைகளைத் தானே அல்லது தனது மேற்பார்வையில் நெய்து உடுத்தும் இல்லத் தலைவி.*
Δ
*பட்டாடை –*
*OV, மெல்லிய புடவை; KJV, silk; shaysh, shesh-ee / ஸேய்ஷ், ஸேஷீ. இங்கு மட்டுமே, KJVல் silk என்றுள்ள சொல், பொதுவாக நார்ப்பட்டு என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது.*

*வசனம் 31:23*
*நல்ல மனையாள் அமையப்பெற்ற ஒருவன், சமுதாயத்தில் உயர்வு பெறுவான். தொன்மைச் சமுதாயத்தில், ஆண்களின் பணி, உழவும் போரும். இல்லம் மற்றும் உழவு வேலைகளைத் தாங்கிப் பிடிக்கும் மனைவி அமையப்பெற்ற ஒருவன், முழுமையாகப் போர் மற்றும் பொதுப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி உயர்வு பெறுவான்.*

*குடும்பப் பொறுப்புகளோடு, தொழிற்துறை ஒன்றிலும் செயல்பட்டு, ஈடுபாட்டோடு சமுதாயக் கடமையையும் சிறப்பாக ஆற்றும் மாண்பமை மாதரும் இன்றைய உலகில் இருக்கின்றனர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது. பன்முகத்தன்மை என்பது பெண்களுக்கு இயல்பாக அருளப்பட்டது!*
Δ

*"மக்கள் மன்றம்" –*
*மேலும், வ.31.*
*OV, நியாயஸ்தலம், வ.31ல், வாசல்; KJV, in the gates; பார்க்க, 1:21 குறிப்பு.*

*வசனம் 31:24*

*தனது தேவைக்கும், தன் குடும்பத்தின் தேவைக்கும், தானத்திற்கும் விஞ்சி உழைக்கும் தலைவி, பிறரின் தேவைக்கும் ஆடைகளை நெய்து விற்பனை செய்து பொருளீட்டுவாள்.*

Δ

*பட்டாடை –*

*OV, புடவை; KJV, fine linen; மூலச்சொல், saw-deen / ஸாடீன்; மூடுதல் என்று பொருள்படும்; வாணிபச் சூழல் கருதி, மெல்லிய நார்ப்பட்டு என்று பொருள் கொள்ளலாம். மெல்லிய நார்ப்பட்டு, செல்வச் செழிப்பின் அடையாளம் (2 சாமுவேல் 1:24).*

*வசனம் 31:25*

*திட்டமிடலும் செயல்திறனும் கொண்ட தலைவி, வருங்காலத்தை உறுதியோடு எதிர்கொள்வாள். செயலாற்றலும், வெற்றியும், சமுதாயத்தில் எட்டிய உயரமும், அவளது பெருமித நடையில் தெரியும்.*

*வசனம் 31:26*

*அவளுடைய பேச்சில் அன்பும் நுண்ணறிவும் வெளிப்படும் (12:18, 16:24, 25:15; யாக்கோபு 3:2).*

*வசனம் 31:28-29*

*பிள்ளைகள் அன்னையிடம் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துதல் இயல்பு. ஆனால் கணவனாக நம்மில் எத்தனை பேர் மனைவியினால் பெறும் நன்மைகளுக்கு அவருக்கு நன்றி சொல்கிறோம்? இங்கே குறிப்பிட்டுள்ள நற்பண்புகள் பலவும் கொண்டவராக நம் ஒவ்வொருவரின் வாழ்விணையர் திகழ்வது திண்ணம்; ஏனெனில் அது ஆண்டவரின் பெரிதான கிருபை!*

*குடும்பத்தின் வளத்திற்காக உழைப்பது தலைவரின் கடமை; அதுபோலவே, குடும்பத்தின் நலத்திற்காகப் பாடுபடுவது மனைவியின் கடமை என்கிற உணர்வே கணவன் - மனைவி இருவரிடையேயும் நிலவுகிறது.*

இது இணையரின் வாழ்க்கையை இயந்திரத்தனமாக மாற்றிவிடும்.

மணவாழ்க்கையில் இன்பம் கொழிக்க, மெல்லுணர்வுகளை எழுப்புங்கள்; அமைதி நிலவ, கரம் கோர்த்து ஜெபியுங்கள்.

வசனம் 31:30
“எழில் ஏமாற்றும், அழகு அற்றுப் போகும்” –
பார்க்க, 6:25, 11:16.

Δ

ஆண்டவரிடம் அச்சம், 1:7 மற்றும் குறிப்பு; மேலும் பார்க்க, திருப்பாடல் 19:9; 25:12; 61:5; 103:11; 111:10; 115:13; 128:4.
நீதிமொழிகள் நூல் நெடுகிலும் இறையோடும் நூலின் கருப்பொருள். இது **ஞானத்தின் திறவுகோல் மட்டுமல்ல; நற்பேறு அனைத்திற்கும் ஊற்றுக்கண்.**
"ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம்; அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர் நல்லறிவுடையோர்; அவரது புகழ் என்றென்றும் நிலைத்துள்ளது." (திருப்பாடல்கள் 111:10)

வசனம் 31:31
இப்படி ஒரு பெண்ணைத் தலைவியாகப் பெற்ற குடும்பத்தினர் மட்டுமல்லாமல், ஊரும் உறவும் வாழ்த்தட்டும்! இங்கும் பாராட்டப் பெறுவது, பெண்ணின் உழைப்பு! இறையச்சத்திற்கு அடுத்த நிலையில் இந்நூல் வலியுறுத்துவதும் உழைப்பே!

உழைப்பே உயர்வு!

# சபை உரையாளர் / பிரசங்கி

# 21 சபை உரையாளர் 00

## முன்னுரை

*நீதிமொழிகள் நூலின் முன்னுரையில், அந்த நூல் பிரசங்க பீடங்களை ஈர்ப்பதில்லை, ஆனால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நீதிமொழிகள் நூலை வாசிக்க உற்சாகமூட்டுவர் என்று பார்த்தோம். பைபிளில் வாசிக்கச் சற்றும் ஆர்வம் காட்டாத ஓரிரு நூல்கள் உண்டு என்றால், அவற்றில் சபை உரையாளர் / பிரசங்கி நூலும் ஒன்று! அப்படி இந்த நூலை வாசித்திராதோரும், இதன் வசனங்களைக் கேள்விப்பட்டிராதோரும், இந்த நூலின் சில படிப்பினைகளைப் போகிற போக்கில் உதிர்ப்பதைக் கேட்கலாம்: "போகும் போது கொண்டு போகவா போகிறோம்" & "சூரியனுக்குக் கீழ் எதுவும் புதிது இல்லை." ஆக நமது மனப்போக்கிற்கு மாறான போதனை எதுவும் சபை உரையாளர் நூலில் இல்லை.*

*உணர்வுகளின் அடிப்படையில், வாழ்வின் நிலையாமையை இந்த நூல் வழிநெடுகிலும் உணர்த்துகிறது என்பர். நிலையாமை குறித்து நீதிமொழிகள் (10:22ன் வசனக் குறிப்பு) நூலில் நாம் பார்த்தோம்:* ***நிலையற்ற பொருளைக் கொண்டு, நிலைவாழ்வைப் பெறுதலே பாடுபட்டுச் செல்வம் ஈட்டலின் இலக்கு.*** *நிலைவாழ்வைப் பெற, இறையச்சமும் கடவுளுக்குக் கீழ்ப்படிதலும் அடிப்படையானவை. தொடர்ந்து ஞானி வலியுறுத்துவது அதுவே.*

Δ

*ஒன்றுக்கு ஒன்று முரணான எண்ணங்களை ஞானி இந்த நூலில் முன்வைப்பதை நாம் காணலாம். முரணாக இருந்தாலும், ஒவ்வொன்றும் நம் வாழ்க்கையில் நடக்கக்கூடிய மெய்மையே என்பதை நாம் உணரலாம்.*

***நூலின் தலைப்பு:***

*சபை உரையாளர் அல்லது பிரசங்கி என்பதற்குரிய மூலச்சொல், ko-heh-leth / கோஹெலெத்; இது பழைய ஏற்பாட்டில், இந்த நூலில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு சொல் (1:1,2&12; 7:27; 12:8,9&10). இதற்கு சபையில் உரையாற்றுபவர் அல்லது போதிப்பவர் என்று பொருள் கொள்ளலாம். அந்த அடிப்படையில், சபை உரையாளர் அல்லது பிரசங்கி என்று இந்நூல் பெயர் பெறுகிறது.*

***நூலின் ஆசிரியர்:***

*நூலின் முதல் வசனம், "தாவீதின் மகனும், எருசலேமின் அரசருமாகிய" என்று தொடங்குகிறது. நேரடியாகப் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும் அது சாலமோனைக் குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். திருமொழி 12:9ல், நூலாசிரியர் தன்னைப் பற்றி, ஞானமுள்ளவர் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் பார்க்க, 1:12&16. இந்நூலின் ஆசிரியர் சாலமோன் அல்லர் என்று சொல்வோர் உளர் என்றாலும், வலுவான சான்றுகள் எதுவும் அவர்களிடம் இல்லை.*

***நூலின் காலம்:***

*சாலமோன் அரசரின் இளமைக் காலத்தில் எழுதப்பட்டது இனிமைமிகு பாடல் / உன்னதப் பாட்டு நூல்; நடுவயதினராக அவர் எழுதியது நீதிமொழிகள் நூல்; முதிர் வயதில் அவர் எழுதியது சபை உரையாளர் / பிரசங்கி எனும் இந்த நூல் என்பது பொதுவான கருத்து.*

Δ

*"இந்த நூலின் எபிரேயச் சொற்பயன்பாடு காலத்தால் பிந்தியது; இந்த நூலில் சில பார்சி சொற்கள் இடம் பெற்றுள்ளன" என்று எபிரேய மொழி அறிஞர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். எனவே சிறைமீண்ட காலத்தில் இந்த நூல் எழுதப்பட்டிருக்கலாம் என்ற*

*கருத்து உண்டு. தத்துவங்களின் தெளிவான புரிதலுக்காக, எஸ்ரா போன்ற எவராயினும் அத்தகைய சொற்களைச் சேர்த்து இருக்கலாம் என்று அதற்கு மறுமொழி உரைப்போரும் உண்டு!*

**நூலின் நோக்கமும் கருப்பொருளும்:**
*இறுதியில் இடம்பெறும் நூலின் தொகுப்புரையாக உள்ள, திருமொழிகள் 12:9-14 பகுதியே, நூலாசிரியரின் நோக்கமாக உள்ளது. உண்மை எது என்பது குறித்த தேடலும் அறிதலுமே நூலின் கருப்பொருள்.*

*இறையிருப்பைக் குறித்த எந்தக் கேள்வியையும் இந்த நூல் எழுப்பவில்லை; ஆனாலும் நூலெங்கும் இறைத்துதியோ, இறைவாழ்த்தோ கிடையாது. அதுபோலவே, உடன்படிக்கை குறித்த யாதொரு குறிப்பும் நூலில் இல்லை; இறைவரின் உடன்படிக்கைப் பெயரான யாவே (ஆண்டவர் / கர்த்தர்) எங்கும் குறிப்பிடப்படவில்லை; பொதுப் பெயரான எலோஹிம் (கடவுள்) மட்டுமே நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**நூலின் சொற்பயன்பாடு:**
*"வீண், முற்றிலும் வீண், எல்லாமே வீண்" / "மாயை, மாயை, எல்லாம் மாயை" – இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல், heh-bel / hab-ale (ஹெபெல் / ஹேபேல்). இது, KJV, NRSV மற்றும் ESV திருப்புதல்களில் vanity என்றும், NIV மற்றும் NLT திருப்புதல்களில் meaningless என்றும் பொருள்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சொல்லே இந்நூலில் அதிகமுறைகள் இடம்பெறுவது. பழைய ஏற்பாட்டில் 72 முறை இடம்பெறும் இச்சொல், ஞான இலக்கியங்களில் மட்டும் 54 முறை இடம்பெறுகிறது. அவற்றுள், இந்நூலில் மட்டும், 39*

முறை இடம்பெறுகிறது. இனிமைமிகு பாடல் நூலில் இச்சொல் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சபை உரையாளரின் கூற்றுப்படி,

- எல்லாம் வீண் (1:1-11)
- ஞானம் வீண் (1:12-18)
- இன்பம் வீண் (2:1-11)
- ஞானமும் மதிகேடும் வீண் (2:12-16)
- பாடுபடுவது வீண் (2:17-26)
- முன்னேற்றமும் வீண் (4:13-16)
- பொருளும் உலக வாழ்க்கையும் வீண் (5:8 ~ 6:12)

Δ
ஏற்ற காலம் குறித்த கவிதைபோல 3:1-8 விளங்குகிறது. அந்தக் கவிதைக்கு விளக்கமாக, அதனைத் தொடர்ந்து வரும் வசனங்கள் இடம்பெறுகின்றன.

Δ
நீதிமொழிகள் நூலில் நாம் வாசிக்கிறது போன்ற, ஒப்பீடு செய்து வழங்கப்படும் அறிவுரைகள் ஆங்காங்கே உள்ளன; பார்க்க, 2:24, (3:22,) 4:3,6,9&13, 5:5,6:3,9(&11), 7:1,2,3,5,8&10, 8:15, 9:4,16&28, 10:11.

***நூலின் அமைப்பும் பகுப்பும்:***

*நூலின் சில பகுதிகள் கவிநடையிலும், சில பகுதிகள் உரைநடையிலும் அமைந்துள்ளன. எப்படி நூலின் அமைப்பு மாறி மாறி வருகிறதோ, அதுபோலவே நூலின் போக்கும், ஞானியின் மனநிலையும், அவர் எழுப்பும் கேள்விகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. எளிமை கருதி, பின்வருமாறு ஒரு பகுப்பை நாம் செய்யலாம்:*

*1. வாழ்க்கையின் நிலையாமை, 1:1 ~ 2:26*

*2. ஈறில் காலமும் மனித வாழ்வின் நிலையாமையும், 3:1 ~ 4:16*
*3. படைப்பாளரும் படைக்கப்பட்டோரும், 5:1 ~ 6:12*
*4. ஞானத் திருமொழிகள், 7:1 ~ 10:20*
*5. ஞானமுள்ளோரின் செயல்கள், 11:1-8*
*6. இளையோருக்கு அறிவுரை, 11:9 ~ 12:8*
*7. ஞானியின் தொகுப்புரை*

Δ

*இது ஒரு பொதுவான பகுப்பு. ஒவ்வொரு பகுதியிலும், பல துணைப் பிரிவுகளாக ஞானியின் எண்ணங்கள் உள்ளன; அவற்றை அந்த அந்த அதிகாரத்தில் பார்ப்போம்.*

***மனதில் கொள்ளச் சில வசனங்கள்:***

*(எச்சரிக்கை: பாடுகள் நிறைந்த மனித வாழ்வில், மனிதருக்கு இயல்பாக எழுகிற உணர்வுகளை வெளிப்படுத்துவது, சபை உரையாளர் நூல். எனவே இந்த நூலின் மொழி, ஊக்கம் தருவதாக, ஆவிக்கு அனலூட்டுவதாக இராது. எனவே வாசிப்பில் கவனம் தேவை!)*

*1:8 அனைத்தும் சலிப்பையே தருகின்றன; அதைச் சொற்களால் எடுத்துரைக்க இயலாது. எவ்வளவு பார்த்தாலும் கண்ணின் ஆவல் தீர்வதில்லை; எவ்வளவு கேட்டாலும் காதின் வேட்கை தணிவதில்லை.*

*1:18 ஞானம் பெருகக் கவலை பெருகும்; அறிவு பெருகத் துயரம் பெருகும்.*

*2:21 ...ஞானத்தோடும் அறிவாற்றலோடும் திறமையோடும் ஒருவர் உழைக்கிறார்; உழைத்துச் சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவருக்கு விட்டுச் செல்கிறார். அவரது உழைப்பும் வீணே.*

*3:11 கடவுள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செம்மையாகச் செய்கிறார்; காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார். ஆயினும், கடவுள் தொடக்கமுதல் இறுதிவரை செய்துவருவதைக் கண்டறிய மனிதரால் இயலாது.*

🔥

*3:20 எல்லா உயிர்களும் இறுதியாகச் செல்லும் இடம் ஒன்றே. எல்லாம் மண்ணினின்றே தோன்றின; எல்லாம் மண்ணுக்கே மீளும்.*

🔥

*4:4 மனிதர் ஏன் இவ்வளவு பாடுபட்டு உழைக்கின்றனர் என்பதையும் கண்டறிந்தேன். இதற்குக் காரணம் மனிதரிடையே காணப்படும் போட்டி மனப்பான்மையாகும். இது வீண்செயல்; காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*

🔥

*4:12 தனிமனிதரை வீழ்த்தக்கூடிய எதிரியை இருவரால் எதிர்த்து நிற்க முடியும். முப்புரிக் கயிறு அறுவது கடினம்.*

🔥

*5:5 கொடுத்த வாக்கை நிறைவேற்றாமற் போவதைவிட, வாக்குக் கொடாமல் இருப்பதே மேல்.*

🔥

*5:10 பண ஆசை உள்ளவருக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் ஆவல் தீராது; செல்வத்தின்மேல் மிகுந்த ஆசை வைப்பவர் அதனால் பயனடையாமல் போகிறார். இதுவும் வீணே.*

🔥

*6:9 இல்லாத ஒன்றை அடைய விரும்பி அலைந்து திரிவதைவிட உள்ளதே போதும் என்ற மனநிறைவோடு இருப்பதே மேல். ஆனால், இதுவும் வீணே; காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*

🔥

*6:11 பேச்சு நீள நீள, அதன் பயன் குறைந்துகொண்டே போகும். அதனால் மனிதர் அடையும் நன்மை என்ன?*

*7:1 விலையுயர்ந்த நறுமணத் தைலத்தைவிட நற்புகழே மேல். பிறந்த நாளைவிட இறக்கும் நாளே சிறந்தது.*

*7:10 "இக்காலத்தைவிட முற்காலம் நற்காலமாக இருந்ததேன்?" என்று கேட்காதே; இது அறிவுடையோர் கேட்கும் கேள்வியல்ல.*

*7:29 நான் தெரிந்துகொண்டதெல்லாம் இதுவே. கடவுள் மனிதரை நேர்மையுள்ளவராகவே படைத்தார். ஆனால் வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தும் மனிதர் தேடிக்கொண்டவையே.*

*8:11 மக்கள் தீமைசெய்யத் துணிவதேன்? தீமைசெய்வோருக்கு விரைவிலேயே தண்டனை அளிக்காததுதான் இதற்குக் காரணம்.*

*9:10 நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய்; அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய். ஏனெனில், நீ நெருங்கிக் கொண்டிருக்கும் பாதாளத்தில், எவரும் செயல்புரிவதுமில்லை; சிந்தனை செய்வதுமில்லை; அறிவு பெறுவதுமில்லை; அங்கே ஞானமுமில்லை.*

*10:1 கலத்திலிருக்கும் நறுமணத் தைலம் முழுவதையும், செத்த ஈக்கள் முடைநாற்றம் வீசும்படி செய்துவிடும்; அதுபோல சிறிய மதிகேடும், மேன்மையான ஞானத்தைக் கெடுத்துவிடும்.*

*10:10 மழுங்கிய கோடரியைத் தீட்டாமல் பயன்படுத்தினால், வேலை செய்வது மிகக்*

*கடினமாயிருக்கும். ஞானமே வெற்றிக்கு வழிகோலும்.*

*11:2 உன் பணத்தைப் பிரித்து ஏழெட்டு இடங்களில் முதலாக வை. ஏனெனில், எங்கு, எவ்வகையான இடர் நேரும் என்பதை நீ அறிய இயலாது.*

*11:4 காற்று, தக்கவாறு இல்லையென்று காத்துக்கொண்டே இருப்போர், விதை விதைப்பதில்லை; வானிலை தக்கபடி இல்லை என்று சொல்லிக்கொண்டே இருப்போர் அறுவடை செய்வதில்லை.*

*11:9 இளையோரே! இளமைப் பருவம் மகிழ்ச்சியோடு இருப்பதற்கே. இளமையின் நாள்களில் உள்ளக் களிப்புடன் இருங்கள். மனம் விரும்புவதைச் செய்யுங்கள்; கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால், நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்.*

*12:1 ஆகையால், உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே. "வாழ்க்கை எனக்கு இன்பம் தரவில்லையே" என்று நீ சொல்லக்கூடிய துயர நாள்களும் ஆண்டுகளும் வருமுன், அவரை உள்ளத்திலே நினை.*

*12:12 பிள்ளாய்! மேலும் ஓர் எச்சரிக்கை; நூல்கள் பல எழுதுவதால் பயன் ஒன்றுமில்லை. மிகுதியான படிப்பு உடலுக்கு இளைப்பு.*

*12:13 இவை அனைத்திற்கும் முடிவுரையாக ஒன்று கூறுகிறேன்; கடவுளுக்கு அஞ்சி நட; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படி. இதற்காகவே மனிதர் படைக்கப்பட்டனர்.*

***இறுதியாக ஒரு பார்வை:***

*இந்நூலின் திருமொழிகள், ஊழ்வலிக் கோட்பாடு சார்ந்தவையாக (Fatalistic) - அவாமுறிவு மனப்பான்மையைத் தூண்டுவனவாக (Pessimistic) - குறுகிய பற்று வெறியேற்றுவனவாக (Chavinistic) - நிகழ்வாழ் மெய்மைக் கோட்பாடு (Existentialism) சார்ந்தவையாக - இன்பம் துய்த்தலே மேன்மை (Hedonism) என உருவேற்றுவனவாக - பண்புநல வெறுப்பைப் (Cynicism) பேசுவனவாக – ஆணாதிக்கம் (Male Chauvinism) தூண்டுவனவாக - இன்னும் இங்குச் சொல்லப்படாத எதிர்மறை உணர்வுகளை ஊக்குவிப்பனவாக நாம் உணரக்கூடும். வெவ்வேறு காலங்களில் உணர்ந்த முரணான மனநிலைகளை ஒரு தொடராகப் பேசுவனவாக இந்நூலின் வசனங்கள் இருக்கக்கூடும்.*

*வெவ்வேறு உணர்வுகளை விளக்கிக் காட்டும் ஞானி, இவை எல்லாமே ஓர் அடிப்படை உண்மையை உணராததன் விளைவே என்று தெளிவுபடுத்துகிறார் (11:9 ~ 12:14). நிறைவாக அவர் அவ்வாறு வலியுறுத்துவது இறையச்சம்; அதுவே நூலின் அடிநாதமாக இழையோடுவது (பார்க்க: 3:14, 5:7, 7:18, 8:12&13). கடவுளுக்கு அஞ்சி, அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்போர் நல்வாழ்வு வாழ்வர்; இதற்காகவே மனிதர்கள் படைக்கப்பட்டனர்.* ***இவ்வாறு தனது நீதிமொழிகள் நூலில், தான் பெரிதும் வலியுறுத்திய இறையச்சமும் கடவுளுக்குக் கீழ்ப்படிதலுமே வாழ்வின் அடித்தளம் என்பதை அறுதியிட்டுக் கூற இந்நூலை சாலமோன் இயற்றினார் என்பது தெளிவு.***

*"நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் அருளிலும் அறிவிலும் வளர்ச்சி அடையுங்கள். அவருக்கே இன்றும் என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்."*

*"பெத்சூர்," ஒசூர்,* — *அன்பன்,*

*28-09-2023* ✝ *க. வி. பால் பாஸ்கர்*

# 21 சபை உரையாளர் 01

## (வாழ்க்கை பயனற்றது)

*1 தாவீதின் மகனும் எருசலேமின் அரசருமாகிய சபை*
*உரையாளர் உரைத்தவை:*

*2 வீண், முற்றிலும் வீண்,*
*என்கிறார் சபை உரையாளர்;*
*வீண், முற்றிலும் வீண்,*
*எல்லாமே வீண்.*
*3 மனிதர் தம் வாழ்நாள் முழுவதும்*
*பாடுபட்டு உழைக்கின்றனர்;*
*ஆனால், அவர்கள்*
*உழைப்பினால் பெறும்*
*பயன் என்ன?*
*4 ஒரு தலைமுறை மறைகின்றது;*
*மறு தலைமுறை தோன்றுகின்றது;*
*உலகமோ மாறாது*
*என்றும் நிலைத்திருக்கின்றது.*
*5 ஞாயிறு தோன்றுகின்றது;*
*ஞாயிறு மறைகின்றது.*
*பிறகு தன் இடத்திற்கு*
*விரைந்து சென்று*
*மீண்டும் தோன்றுகின்றது.*
*6 தெற்கு நோக்கிக் காற்று வீசுகின்றது;*
*பிறகு வடக்கு நோக்கித் திரும்புகின்றது.*
*இப்படிச் சுழன்று சுழன்று வீசித்*
*தன் இடத்திற்குத் திரும்புகின்றது.*
*7 எல்லா ஆறுகளும்*
*ஓடிக் கடலோடு கலக்கின்றன;*
*எனினும், அவை*
*ஒருபோதும் கடலை நிரப்புவதில்லை;*
*மீண்டும் ஓடுவதற்காக*
*உற்பத்தியான இடத்திற்கே திரும்புகின்றன.*
*8 அனைத்தும் சலிப்பையே தருகின்றன;*

*அதைச் சொற்களால்
எடுத்துரைக்க இயலாது.
எவ்வளவு பார்த்தாலும்
கண்ணின் ஆவல் தீர்வதில்லை;
எவ்வளவு கேட்டாலும்
காதின் வேட்கை தணிவதில்லை.
9 முன்பு இருந்ததே
பின்பும் இருக்கும்;
முன்பு நிகழ்ந்ததே
பிறகும் நிகழும்.
புதியது என்று
உலகில் எதுவுமே இல்லை.
10 ஏதேனும் ஒன்றைப்பற்றி,
"இதோ, இது புதியது"
என்று சொல்லக் கூடுமா?
இல்லை. அது ஏற்கனவே,
நமது காலத்திற்கு முன்பே,
பல்லாயிரம் ஆண்டுகளாக
இருப்பதாயிற்றே!
11 முற்காலத்தவரைப் பற்றிய நினைவு
இப்போது யாருக்கும் இல்லை;
அவ்வாறே,
வரும் காலத்தவருக்கும்
தமக்கு முந்திய காலத்தவரைப் பற்றிய
நினைவு இருக்கப் போவதில்லை.*

## *(சபை உரையாளரின் அனுபவம் - ஞானத்தின் வரையறை / எல்லைகள்)*

*12 ஞானம், மூடத்தனம், மதிகேடு ஆகியவற்றை நான் ஆராயத் தலைப்பட்டேன். ஓர் அரசன் தனக்கு முன்னிருந்த அரசர் செய்ததைத் தவிர வேறென்ன செய்வான்?*
*13 ஒளி இருளை விட மேலானதாய் இருப்பதுபோல, ஞானமும் மதிகேட்டைவிட மேலானதாய் இருக்கக் கண்டேன்.*

*14 ஞானிகளின் கண்கள் ஒளி படைத்தவை; மூடரோ இருளில் நடப்பவர். ஆயினும், ஒருவருக்கு நேர்வதே மற்றெல்லாருக்கும் நேரிடும் என்று நான் கண்டேன்.*

*15 மூடருக்கு நேரிடுவது போலவே*
*எனக்கும் நேரிடும்.*
*அப்படியானால் நான்*
*ஞானத்தில் வளர்ந்தது எதற்காக?*
*அதனால் பயனென்ன என்று சிந்தித்து,*
*அதுவும் வீணே*
*என்ற முடிவுக்கு வந்தேன்.*

*16 ஞானிகளையோ, மூடரையோ யாரும் நினைவில் வைத்திருப்பதில்லை. வருங்காலத்தில் அனைவரும் மறக்கப்படுவர். மூடர் மடிவதுபோல ஏன் ஞானிகளும் மடியவேண்டும்?*
*17 எனவே, நான் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டேன். மேலும், உலகில் செய்யப்படுபவை யாவும் எனக்குத் தொல்லையையே கொடுத்தன. எல்லாம் வீண்; யாவும் காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*

*18 நான் இவ்வுலகில் எவற்றையெல்லாம்*
*செய்து முடிக்க உழைத்தேனோ*
*அவற்றின் மீதெல்லாம்*
*வெறுப்புக் கொண்டேன்.*
*ஏனெனில், அவற்றை*
*எனக்குப்பின் வருகிறவர்களுக்கு*
*விட்டுச் செல்ல வேண்டுமென்பது*
*எனக்குத் தெரியும்.*

*சபை உரையாளர் 1:1-18*

# சிந்தனைக்கு

*வசனம் 1:1 ~ 2:26*
*இந்தப் பகுதியின் பல வசனங்கள், ஞானியின் தன்வரலாற்றுக் குறிப்புகள் போல உள்ளன. இதே தொனியிலான திருமொழிகள் நூலெங்கும் உள்ளன எனினும், இங்கு அவை ஒரே தொகுப்பாக உள்ளன. அவர் இஸ்ரயேலின் அரசரான தாவீதின் மைந்தன், 1:1; தாவீதின் மைந்தருள் அரசராக அமர்ந்தவர், 1:1&12; எருசலேமிலிருந்து ஆட்சி செலுத்திய அரசருள் ஆகச் சிறந்த ஞானி, 1:16; கட்டுமானம் மற்றும் நீர் மேலாண்மையில் மிகப்பெரிய திட்டங்களை நிறைவேற்றியவர், 2:4-6; எண்ணிறந்த அடிமைகளைக் கொண்டவர், 2:7; எவரும் வைத்திராத மந்தைகளை உடையவர், 2:7; பெரும் அளவில் செல்வம் குவித்தவர், 2:8; பெருநிலத்தை ஆளுகை செய்தவர், 2:8; சுருக்கமாக, எருசலேமின் மிகப்பெரிய செல்வந்தர், 2:9.*

*இங்கு சாலமோன் தன்னைப் பற்றிச் சொல்லாத மற்றொரு வாழ்க்கைக் குறிப்பு: அவர் 700 அரச குலப் பெண்களை மனைவியராகவும், 300 பெண்களை வைப்பாட்டிகளாகவும் கொண்டவர் (1 அரசர்கள் 11:3).*

*தன்னை உயர்த்திக் கொள்ள இவ்வளவு பெருமைகளையும் ஞானியாகிய சாலமோன் குறிப்பிடாமல், இப்படியொரு நூலைச் சமைக்கத் தனக்குள்ள தகுதியாகவே இவற்றை அவர் குறிப்பிடுகிறார். இந்த இடத்தில், சாலமோன் குறித்த கிறிஸ்து இயேசுவின் கூற்றைப் பொருத்திப் பாருங்கள், மத்தேயு 6:28-29.*

*வசனம் 1:1*
*முதல் வசனத்திலேயே தன்னைப் பற்றிய அறிமுகத்தை அளிக்கும் ஞானி! சபை உரையாளர்*

*(பெயர்க் குறிப்பு, முன்னுரை பார்க்க) என்று தன்னை அவர் அறிமுகப்படுத்துவதால், அவர் மக்களோடு உரையாடலில் இருந்தமை புலனாகிறது.*

*வசனம் 1:2*
*நூலின் நோக்கத்தை அதிரடியாக முன்வைக்கும் சாலமோன். மீண்டும் பார்க்க, 12:8.*
*அனேகமாக வாழ்வின் இறுதிக் காலத்தில் இருக்கும் ஞானி, தனது வாழ்க்கையை எடையிட்டுப் பார்த்து, இந்த முடிவுக்கு வருகிறார்.*

*கற்றார்க் காமுறும் ஞானத்தோடு, செல்வத்தைக் குவித்த சாலமோனின் இந்த அறிக்கையோடு, தனது வாழ்வின் ஆதாயமான அனைத்தையும் கிறிஸ்துவின் பொருட்டு இழந்து (பிலிப்பியர் 3:7-8), சிறையில் விசாரணைக்காகக் காத்திருந்த பவுலடிகளின் அறிக்கையை ஒப்பிடுக, 2 திமொத்தேயு 4:7-8.*

*வசனம் 1:3-11*
*சபை உரையாளரின் முதல் கவிதை.*

*வசனம் 1:3*
*OV, சூரியனுக்குக் கீழே; KJV/NIV/NLT/ESV/NRSV, under the sun.*
*எபிரேயத்தில், takh-ath / ட(க்)கத் என்பதற்கு under, below, bottom என்றும், sheh-mesh / ஷெமெஸ் என்பதற்கு brilliant, sun என்றும் பொருள். "பரிதியின் கீழ்" என்ற சொற்றொடர் வழியே, தான் இந்த நூலில் எழுப்பும் விவாதம் தன் நாடும் தன் மக்களும் கடந்து உலகோருக்குப் பொதுமையானது என்பதை சபை உரையாளர் வெளிப்படுத்துகிறார்.*

Δ
*பற்றுறுதியாளராகிய நமக்கு பைபிள் தூயது. மொழியியலாளருக்கோ அது சிறந்ததோர் இலக்கியம். வரலாற்று ஆய்வாளருக்கோ நல்லதொரு வரலாற்றுத் தகவு. இப்படி ஒவ்வொரு*

துறையினருக்குமான பைபிளின் தொடர்பைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

அதிலும் ஞான இலக்கியங்கள் என்பவை – ஞான நூல்கள் மட்டுமல்ல, இலக்கிய நூல்கள். யோபு முதல் இனிமைமிகு பாடல் வரையுள்ள இந்த நூல்களில், பெரும் பகுதி கவிதை நடையில் எழுதப்பட்டுள்ளது. கவிதை நடை என்பதன் ஒரு சிறப்பு: மீண்டும் மீண்டும் தொனிக்கும் ஒலி அல்லது சொல் ஓசை நயம்.

அந்த விதத்தில், *under the sun* / சூரியனுக்குக் கீழே என்ற சொற்றொடரைத் தவிர்த்ததோ, எளிமையாக "உலகில்" என்று குறிப்பிடுவதோ பொது மொழிபெயர்ப்புக்குச் சற்றும் சிறப்புச் சேர்க்கவில்லை. 29 முறை வழங்கப்படும் இந்தச் சொற்றொடர், மொத்த பைபிளிலும் இந்நூலுக்கே உரிய சிறப்பு!

Δ

நீதிமொழிகள் நூலில் சோம்பலைக் கடுமையாகச் சாடிய சாலமோன், இங்கு உழைப்பின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுகிறாரோ? அவ்வாறல்ல, நாம் சிந்திக்க ஒரு கேள்வியை எழுப்புகிறார். முயற்சிகளின் பலன், உள்ளத்தின் மகிழ்ச்சி என்று அவரே குறிப்பிடுகிறார், 2:10.

Δ

"... உழைப்பினால் பெறும் பயன் என்ன?" –
OV, "பலன்"; KJV, "profit"; மூலச்சொல், *yithron* / இத்ரோன்; பழைய ஏற்பாட்டில், இந்த நூலில் மட்டுமே, 10 முறை இடம்பெறும் சொல்; *profit / gain / excellent / better* என்று பொருள்படும்.

ஆதாயம் / இலாபம் என்பது ஒரு வணிகச் சொல்; ஆதாயம் மற்றும் இழப்புக் கணக்கை (Profit and Loss Account) வாழ்வில் பார்க்க முடியுமா? இதற்கு மறுமொழியைக் கிறிஸ்து இயேசு தருகிறார், மாற்கு 8:34-36. இன்னும் எளிமையாக விளக்கும்

பவுலடிகளின் வாக்கையும் வாசிக்க, பிலிப்பியர் 1:21, 3:8.

Δ

உழைப்பு குறித்து இங்குத் தொடங்கி இந்த நூல் நெடுகிலும் சபை உரையாளர் விவாதிக்கிறார், விமர்சிக்கிறார். அதுபோலவே மனிதர் மேற்கொள்ளும் முயற்சிகளையும் அவர் கேள்விக்கு உள்ளாக்குகிறார்.

வசனம் 1:4-11

வாழ்வின் நிலையாமையைக் குறித்த பாடல்.

வசனம் 1:4-8

"... தலைமுறை ... உலகம் ... ஞாயிறு ... காற்று ... ஆறுகள் ... கடல் ... " என்று, படைப்பை நினைவுகூரும் சபை உரையாளர், அவற்றின் செயல்பாடுகளில் மிகவும் சலிப்படைகிறார்.

படைப்பில் நம் உள்ளம் களிகூருகிறதா? சலிப்படைகிறதா? பார்க்க, திருப்பாடல் 8:1-9, 136:5-9, 147:7-10&16-18, 148:1-10.

வசனம் 1:4

வாழ்ந்து மறையும் மாந்தரும், நிலைத்து நிற்கும் நிலவுலகும்.

ஒருவரின் வாழ்வின் நெடுகிலும் விடாது தொடரும் கார்நிழலாகச் சாவைச் சபை உரையாளர் காண்கிறார், 2:16,18&21, 3:2&18-20, 5:15-16, 6:12, 7:1-2, 8:8, 9:2-6&12, 12:5-7.

வசனம் 1:6

ஓர் உவமையாக, 11:5.

வசனம் 1:8

"எவ்வளவு பார்த்தாலும் கண்ணின் ஆவல் தீர்வதில்லை" –

*பார்க்க, 4:8, 5:10; மேலும் பார்க்க, நீதிமொழிகள் 27:20 மற்றும் குறிப்பு.*
*மின்னணுக் கருவிகளில் மூழ்கித் தவிக்கும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று. முதலாம் பாவத்தின் தூண்டலில் முதன்மையானதும் பார்வையே! ஐம்புலன்களின் இச்சைகளில் அடக்கக் கடினமானது, கண்களின் இச்சை.*

*வசனம் 1:9*
*"முன்பு நிகழ்ந்ததே பிறகும் நிகழும்" –*
*இணை, 3:15.*
*"History repeats" என்பர். வரலாறு மீளும் - தன்மையிலும் வீச்சிலும் உயர்தளத்தில்- நிச்சயமாக வரலாறு மீளும்.*

*வசனம் 1:9இ-10*
*எது இன்று புலப்பட்டதோ, அது ஏற்கனவே இருந்தது. எது இன்று கண்டுபிடிக்கப்பட்டதோ, அது ஏற்கனவே இருந்தது. இல்லாத அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடிக்கவில்லை. இருந்த கடலில்தான் இந்தியாவுக்குச் செல்லும் வழியை வாஸ்கோடகாமா கண்டுபிடித்தார். பிளக்கக்கூடிய அணுவைத்தான் எப்படிப் பிளப்பது என்றும், வெளிவரும் ஆற்றலை எவ்வாறெல்லாம் பயன்படுத்துவது என்றும் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.*
Δ
*இப்படிச் சொல்வது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியையும், புதிய புதிய கண்டுபிடிப்புகளையும் குறைத்து மதிப்பிடுவது அல்ல. மாறாக, படைப்பு தனக்குள் மறைபொருளாக ஏற்கனவே வைத்துள்ள சவால்களை அறியத் தூண்டுவதுதான்.*

***முயற்சி செய்யும் எவர்க்கும், படைப்பில் தாம் பொதிந்து வைத்துள்ள ஆழ்ந்த மறைபொருளை ஆண்டவர் வெளிப்படுத்துவது உறுதி.***

பாடும் சலிப்பும் விரட்டும் வாழ்வில், ஊக்கம் தரும் புதியனவற்றைக் கடவுளாகிய ஆண்டவரே நமக்கு அருளுகிறார், எரேமியா 31:31-34.

கிறிஸ்துவில் புதிய வாழ்வைப் பேறாக அடைந்த நாம் அடைந்ததும் இனி அடையக் காத்திருப்பதுமான புதியன –
* புதிய படைப்பு, 2 கொரிந்தியர் 5:17
* புதிய உடன்படிக்கை, மத்தேயு 26:28; லூக்கா 22:20; 1 கொரிந்தியர் 11:25; 2 கொரிந்தியர் 3:6; எபிரேயர் 9:15
* புதிய தூய்மை, 1 கொரிந்தியர் 5:7
* புதிய பெயர், எசாயா 62:2; திருவெளிப்பாடு 2:17
* புதியதொரு மனித இனம், எபேசியர் 2:15
* உதவிக்கான புதிய படை, திருப்பாடல் 91:11-12
* புதிய கட்டளை, யோவான் 13:34
* வாழ்வுக்கான புதிய வழி, 10:20
* புதிய இயல்பு, எபேசியர் 4:24
* அனைத்தும் புதியன, 2 கொரிந்தியர் 5:17, திருவெளிப்பாடு 21:5
எனவே, ஊக்கம் பெறுவோம்: அவருடைய கிருபைகள் ஒவ்வொரு விடியலிலும் புதியன!

வசனம் 1:11
மீண்டும், 2:16.
வாழ்க்கை குறுகியது என்பது எந்த அளவுக்கு உண்மையோ, அதே அளவுக்கு மனிதர்களின் நினைவுகளும் குறுகியன. காலங்கடந்து நமது நினைவுகளில் வாழும் சாதனையாளர்கள் உளர் எனினும், நம்மில் எத்தனை பேருக்கு அவரவரின் பூட்டன் யார் என்று தெரியும்?
Δ
மானிடரின் மறதி குறித்து இங்குக் குறிப்பிட்டிருந்தாலும், பைபிள் நம்மை மீண்டும் மீண்டும் நினைவுகூர அழைக்கிறது – அற்புதங்களை அருளும் கடவுளை நினைவுகூர வேண்டும்; அவர்தம் ஆசிகளை நினைவுகூர வேண்டும்; அவர்தம்

கட்டளைகளை நினைவுகூர வேண்டும் (இணைச் சட்டம் 5:15, 6:12 & 8:11).

வசனம் 1:12 ~ 6:9
மனிதப் பாடுகள் எல்லாம் "வீண்" அல்லது "காற்றைப் பிடிக்கும் முயற்சி" என்பதை வலியுறுத்தும் பகுதி.

வசனம் 1:12-18
நடந்தவை குறித்த ஆய்வும், அறிவையும் ஞானத்தையும் குறித்த தேடலும், பெருங்கவலையையே தருகிறது என்கிறார் ஞானி.

இறைக் கட்டளையை மீறி, அறிவு மரத்தின் கனியைப் பறித்து உண்ட ஆதாமுக்கு, உடனே தான் ஆடையின்றி இருப்பதை அறிந்ததனால் கவலையே ஏற்பட்டது. ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்ட பிறகு, அன்றாடத் தேவைகளுக்கான தேடலும் ஏமாற்றமும் கவலைகளும் பயங்களும் பெருகின.

அறிவு பெருகத் துயரம் பெருகும் எனும் சாலமோன், ஞானத் தேடலின் நன்மைகளைக் குறித்துக் கூறுவது, 7:11-12&19.

அப்படியானால், ஞானமும் அறிவும் பெருகுவது கவலையா, துயரா?
களிப்போ, சலிப்போ – எதனைத் தேடுகிறோம் என்பதில் இருக்கிறது.
கடவுளுக்கு ஏற்புடையவற்றைத் தேடுவோருக்கு, இவ்வுலகில் தேவைப்படுவனவும் கொடுக்கப்படும், பார்க்க, மத்தேயு 6:33-34.

இப்பகுதியின் வசனங்களை இன்னும் இரண்டாகப் பிரிக்கலாம்:

* மனித முயற்சியின் பயனின்மை, வ.12-15
* ஞானத்தின் பயனின்மை, வ.16-18

*வசனம் 1:12*

*இங்குத் தொடங்கி, சாலமோன் தன் கூற்றாக (தன்னிலை ஒருமையில்) எழுதுகிறார். இந்த மொழிநடை, நூலின் இறுதிப்பகுதியில், வசனம் 12:7 வரை தொடர்கிறது.*

Δ

*"... அரசனாய் இருந்தேன்" –*

*கடந்த காலத்தில் தன்வரலாற்றைக் குறிப்பிடும் சாலமோன். அரசராக இருந்த போதிலும், மூப்பின் தளர்ச்சியின் பொருட்டு, ரெகபெயாம் நடைமுறையில் அரசனாகச் செயல்பட்டிருக்கக் கூடும்.*

*வசனம் 1:13*

*பார்க்க, 3:10; தொடக்க நூல் 3:19. மேலும் பார்க்க, 7:25, 8:16-17.*

*பைபிளில் நாம் வாசிக்கிறபடி, கீழ்ப்படியாமையின் விளைவு, மனிதன் மீதும், மண் மீதும் விழுந்த சாபம். இப்போது மேலும் நாம் சலிப்புற்று, இன்னும் நமது மீறுதலைப் பெருக்க வேண்டுமா?*

Δ

*"இவ்வுலகில்..." –*

*மேலும் பார்க்க, 2:3, 3:1.*

*OV, வானத்தின் கீழ்; KJV / NIV / ESV / NRSV, under heaven; மூலச்சொல் naw-than / நா(த்)தன், வானம் என்று பொருள்படும். வ.3ல், பரிதிக்குக் கீழே என்பதற்கு என்ன நேர்ந்ததோ, அதுவே இங்கு நேர்ந்துள்ளது.*

Δ

*"...கடவுள்..." –*

*இஸ்ரயேலரோடு உடன்படிக்கை செய்துகொண்டதன் உடன்படிக்கைப் பெயரான யாவே / ஆண்டவர் / கர்த்தர் என்பது இந்நூலில் இடம்பெறவில்லை. மாறாக, அவர்தம் பொதுப் பெயரான எலோஹிம் / கடவுள் / தேவன் என்பது 36 திருமொழிகளில் 40 முறை இடம்பெறுகிறது. உடன்படிக்கையை நினைவூட்டும் திருமொழிகள்*

*உண்டு எனினும், இந்நூல் மானிடர் அனைவருக்குமானது.*

Δ

*"...மானிடர்..." –*

*மேலும் பார்க்க, 3:19, 9:12.*

*OV, மனுபுத்திரர்; KJV, sons of man; மூலச்சொற்களின்படி ஆதாமின் மைந்தர்; பழைய ஏற்பாட்டில், இறைவாக்கு நூல்களில், குறிப்பாக எசேக்கியேல் நூலில் அதிகம் இடம்பெறும் சொற்றொடர்.*

Δ

*"... நடக்கிற எல்லாவற்றையும் ஞானத்தின் துணை கொண்டு கூர்ந்து ஆராய்..." –*

*ஏதாவது ஒன்று நடக்கும்போது, நாம் என்ன செய்கின்றோம்? உணர்ச்சிவயப்பட்டு எதிர்வினை ஆற்றுகிறோமா? நுண்ணறிவின் வழியில் சீர்தூக்கி முடிவெடுத்துச் செயல்படுகிறோமா? கடவுள் அருளிய ஞானத்தின் அடிப்படையில் எண்ணிப் பார்ப்பவராக இருக்கும் ஒருவரால், இஸ்ரயேல் மற்றும் அமெரிக்காவால் தூண்டப்பட்டு எடுக்கப்படும், சமூகப் பொருளாதார அரசியல் முடிவுகளை ஆதரிக்க முடியுமா?*

***நினைவில் கொள்வோம்: கடவுள் சமயம் சார்ந்தவர் அல்லர்!***

Δ

*"... கூர்ந்து ஆராய்வதில்..." –*

*OV, விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு; KJV, seek and search out; எபிரேயத்தில், daw-rash / டாரஷ் & toor / டூர் என்று இரண்டு செயல்களாகச் சொல்லப்பட்டுள்ளது.*

*ஒரு செயல் நடந்தால், என்ன நடந்தது என்று பகுப்பாய்வு செய்வதும், அடுத்து இனிச் செய்ய வேண்டியதை முடிவுசெய்து நிறைவேற்றுவதும் இன்றியமையாதவை.*

*வசனம் 1:14*

*"...காற்றைப் பிடிக்க முயல்வதற்கு..." –*
*1:12 ~ 6:9 பகுதியில், தொடரும் ஒரு சொற்றொடர், வ.17, 2:11,17&26, 4:4,6&16, 6:9.*
*OV, மனதுக்குச் சஞ்சலமுமாய்; KJV, vexation of spirit. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல், roo-akh / ரூவா. இச்சொல், spirit, breath, wind, mind, air, anger – இன்னும் வேறு சில பொருள்களையும் தருவது.*

*வசனம் 1:15*

*இந்த வசனத்திற்கு மறுமொழிபோல ஞானி உரைப்பது, 7:13.*

Δ

*இந்த வசனமும், வ.18ம் தனித்து, ஒரு கவிதை போல எபிரேயத்தில் உள்ளன. அன்றைக்கு வழக்கில் இருந்த சொலவடைகளை சாலமோன் பயன்படுத்தி இருக்கலாம்.*

*வசனம் 1:16-17*

*பார்க்க, 2:9; 1 அரசர்கள் 3:12-13 & 4:29-31.*
*ஞானம் அல்லது அறிவுத் தேடலை சாலமோன் ஒரு குறையாகக் கண்டார் என்று சொல்ல முடியாது; பொருந்தாத ஞானத்தை அவர் குறிப்பிடுகிறார் எனலாம்; பார்க்க, 2:15 & 7:16.*

*வசனம் 1:16*

*"எனக்கு முன் எருசலேமில் அரசராயிருந்த..." –*
*சாலமோனுக்கு முன்பாக தாவீது மட்டுமல்லாமல், கீழ்க்கண்டோரும் எருசலேமிலிருந்து ஆட்சி செலுத்தினர்:*

* *மெல்கிசெதேக், தொடக்க நூல் 14:18*
* *அதோனி செதக், யோசுவா 10:1*

*வசனம் 1:17*

*"மடமையையும் மதிகேட்டையும் அறிய முயன்றேன்" –*
*பார்க்க, 2:1-3&12; மேலும் பார்க்க, 7:23&25.*

*உலகில் கிடைக்கும் எந்த ஒன்றின் எல்லையையும் அறிய முயன்ற ஞானி சாலமோன், தனது வாழ்க்கையில் ஆண்டவருக்குச் சினமூட்டிய தனது செயல்களை இங்குக் குறிப்பிடுகிறாரா? (1 அரசர்கள் 11:1-8)*

*வசனம் 1:18*
*மேலும் பார்க்க, 12:12.*
*அறிவு ஒருவருக்குப் பெருகும் போது, இதற்கு முன்னர் அவர் எவ்வளவு மதியற்று இருந்தார் என்பதை அவர் உணர்வதால், அவர் மிகவும் துயரடைகிறார். ஒரு காலத்தில் சரி என்று அவர் எண்ணிய செயல், இப்போது தவறாகப்படுவதால், கவலையே மிஞ்சுகிறது.*

✝

# 21 சபை உரையாளர் 02

## (உலகின் இன்பமும் செல்வமும் வீண்)

*1 "இன்பத்தில் மூழ்கி அதன் இனிமையைச்*
*சுவைப்போம்; நெஞ்சே! நீ வா!" என்றேன். அதுவும்*
*வீண் என நான் கண்டேன்.*
*2 சிரித்துக் களித்தல் மதிகெட்ட செயல் என்றேன்;*
*இன்பம் நன்மை பயக்காது என்றேன்.*
*3 ஞானத்தின் மீதுள்ள ஆவலை விட்டுவிடாமலே,*
*மதுவால் உடலுக்குக் களிப்பூட்டவும் மதிகெட்ட*
*திட்டத்தில் ஈடுபடவும் தலைப்பட்டேன்; மக்கள்*
*தங்கள் குறுகிய உலக வாழ்க்கையில் செய்யக்கூடிய*
*நலமான செயல் எதுவென்று அறிவதற்காக இவ்வாறு*
*செய்யலானேன்.*
*4 பெரிய காரியங்களைச் செய்து முடித்தேன்;*
*எனக்கென்று வீடுகளைக் கட்டினேன்; திராட்சைத்*
*தோட்டங்களை அமைத்தேன்.*
*5 எனக்கென்று தோட்டம், பூங்கா பல அமைத்து*
*அவற்றில் எல்லா வகையான பழமரங்களையும்*
*நட்டேன்;*
*6 தோப்பில் வளரும் மரங்களுக்கு நீர்*
*பாய்ச்சுவதற்காகக் குளங்களை வெட்டினேன்;*
*7 ஆண் பெண் அடிமைகளை விலைக்கு*
*வாங்கினேன்; என் வீட்டிலேயே பிறந்த*
*அடிமைகளும் எனக்கு இருந்தார்கள்; ஏராளமான*
*ஆடுமாடுகளும் எனக்கு இருந்தன. எனக்குமுன்*
*எருசலேமில் இருந்த எவருக்கும் அத்தனை*
*ஆடுமாடுகள் இருந்ததில்லை.*
*8 வெள்ளி, பொன், மன்னர்களின் செல்வம்,*
*மாநிலங்கள் ஆகியவற்றையும் சேர்த்துக்*
*கொண்டேன். இசைவல்ல ஆடவரும் பெண்டிரும்*
*என்னைப் பாடி மகிழ்வித்தனர். மகிழ்வூட்டும்*
*மங்கையரையும் வைத்திருந்தேன்.*

*9 இவ்வாறு என் செல்வம் வளர்ந்தது. எருசலேமில் எனக்குமுன் இருந்த எல்லாரையும்விடப் பெரிய செல்வனானேன். எனினும், எனக்கிருந்த ஞானம் குறைபடவில்லை.*
*10 என் கண்கள் விரும்பின அனைத்தையும்*
*அவற்றிற்கு அளித்தேன்.*
*எந்த மகிழ்ச்சியையும்*
*என் மனத்திற்குக் கொடுக்க*
*நான் தவறவில்லை.*
*என் முயற்சி அனைத்தும்*
*என் உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டியது.*
*இதுவே என் முயற்சிகளுக்கெல்லாம்*
*கிடைத்த பலனாகும்.*
*11 நான் செய்த செயல்கள் யாவற்றையும்*
*அவற்றைச் செய்வதற்கு*
*நான் எடுத்த முயற்சியையும்*
*நினைத்துப் பார்த்தபோதோ,*
*அவை யாவும் வீண்*
*என்பதைக் கண்டேன்.*
*அவை அனைத்தும்*
*காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்;*
*முற்றும் பயனற்ற செயல்களே.*

## *(ஞானம், மதிகேடு – ஓர் ஒப்பீடு)*

*12 நான் ஞானம், மூடத்தனம், மதிகேடு*
*ஆகியவற்றை ஆராயத் தலைப்பட்டேன்.*
*ஓர் அரசன்*
*தனக்கு முன்னிருந்த அரசர் செய்ததைத் தவிர*
*வேறென்ன செய்வான்?*
*13 ஒளி இருளை விட*
*மேலானதாய் இருப்பதுபோல,*
*ஞானமும் மதிகேட்டைவிட*
*மேலானதாய் இருக்கக் கண்டேன்.*
*14 ஞானிகளின் கண்கள் ஒளி படைத்தவை;*
*மூடரோ இருளில் நடப்பவர்.*
*ஆயினும், ஒருவருக்கு நேர்வதே*

*மற்றெல்லாருக்கும் நேரிடும்*
*என்று நான் கண்டேன்.*
*15 மூடருக்கு நேரிடுவது போலவே*
*எனக்கும் நேரிடும்.*
*அப்படியானால் நான்*
*ஞானத்தில் வளர்ந்தது எதற்காக?*
*அதனால் பயனென்ன என்று சிந்தித்து,*
*அதுவும் வீணே என்ற முடிவுக்கு வந்தேன்.*
*16 ஞானிகளையோ, மூடரையோ*
*யாரும் நினைவில் வைத்திருப்பதில்லை.*
*வருங்காலத்தில் அனைவரும் மறக்கப்படுவர்.*
*மூடர் மடிவதுபோல*
*ஏன் ஞானிகளும் மடியவேண்டும்?*
*17 எனவே, நான் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டேன். மேலும், உலகில் செய்யப்படுபவை யாவும் எனக்குத் தொல்லையையே கொடுத்தன. எல்லாம் வீண்; யாவும் காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*

## *(உழைப்பு வீண்)*

*18 நான் இவ்வுலகில் எவற்றையெல்லாம் செய்துமுடிக்க உழைத்தேனோ அவற்றின் மீதெல்லாம் வெறுப்புக் கொண்டேன். ஏனெனில், அவற்றை எனக்குப்பின் வருகிறவர்களுக்கு விட்டுச் செல்ல வேண்டுமென்பது எனக்குத் தெரியும்.*
*19 அவர்கள் ஞானமுள்ளவராய் இருக்கலாம் அல்லது மதிகேடராய் இருக்கலாம்; யாருக்குத் தெரியும்? எத்தகையவராய் இருப்பினும், நான் இவ்வுலகில் ஞானத்தோடு உழைத்து அடைந்த பயன்களுக்கெல்லாம் அவர்களே உரிமையாளர் ஆவர்.*
*20 என் உழைப்பும் வீணே. நான் உலகில் செய்த எல்லா முயற்சிக்காகவும் மனமுடைந்துபோனேன்.*
*21 ஏனெனில், ஞானத்தோடும் அறிவாற்றலோடும் திறமையோடும் ஒருவர் உழைக்கிறார்; உழைத்துச்*

*சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவருக்கு விட்டுச் செல்கிறார். அவரது உழைப்பும் வீணே.*
*22 இது பெரிய அநீதி. உலகில் அவர் செய்த எல்லா முயற்சிக்காகவும் வகுத்த செயல் திட்டங்களுக்காகவும் அவருக்குக் கிடைக்கும் பயனென்ன?*
*23 வாழ்நாளெல்லாம் அவருக்குத் துன்பம்; வேலையில் தொந்தரவு; இரவிலும் அவரது மனத்திற்கு அமைதியில்லை. எல்லாம் வீணே.*

*24 உண்பதையும் குடிப்பதையும் தம் உழைப்பால் வரும் இன்பத்தைத் துய்ப்பதையும்விட, நலமானது மனிதருக்கு வேறொன்றுமில்லை. இந்த வாய்ப்பும் கடவுள் தந்ததே எனக் கண்டேன்.*
*25 அவரின்றி ஒருவருக்கு எப்படி உணவு கிடைக்கும்? அவரால் எப்படி இன்பம் துய்க்க இயலும்?*
*26 கடவுள் தம் விருப்பத்திற்கேற்ப நடப்பவருக்கு ஞானத்தையும் அறிவாற்றலையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறார். பாவம் செய்கிறவருக்கோ செல்வத்தைச் சேர்த்து வைக்கும் வேலையைக் கொடுக்கிறார்; ஆனால், அச்செல்வம் தம் விருப்பத்திற்கேற்ப நடப்பவருக்கு விட்டுச் செல்வதற்கே. இதுவும் வீணே; காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*

*சபை உரையாளர் 2:1-26*

## சிந்தனைக்கு

*வசனம் 2:1-11*
*செல்வமும் அது தரும் இன்பமும் எத்தகையன என்று ஆய்ந்து பார்க்கும் ஞானி.*

*வசனம் 2:1*
*பெரும் விளைச்சலில் மனம் நிறைந்த செல்வனின் சொற்களாக கிறிஸ்து இயேசு தமது உவமையில் குறிப்பிட்டது, லூக்கா 12:19.* **தமக்காகவே செல்வம்**

***சேர்ப்பவர், கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதோர்*** *என்று கிறிஸ்து நமக்கு அந்த உவமையில் கற்பிக்கிறார், லூக்கா 12:21.*

*வசனம் 2:2*
*பார்க்க, நீதிமொழிகள் 14:13.*

Δ

*"சிரித்துக் களித்தல்..." –*
*வீண் / பயனற்றது போன்ற சொற்கள் மட்டுமல்லாமல், சிரித்தல், களித்தல், நல்லது போன்ற சொற்களும் இந்நூலில் அதிகம் இடம்பெற்றுள்ளன. ஆயினும், இந்த உணர்வுகளின் மீது ஆதிக்கம் செலுத்துவது, வீண் என்ற உணர்வே.*
*வசனம் 2:3*
*பார்க்க, 1:17, 3:12-13, 5:18, 6:11-12.*

Δ

*"ஞானத்தின் மீதுள்ள ஆவலை விட்டுவிடாமலே" –*
*மதுவுக்குத் தன்னை இழந்து விடவில்லை என்று சாலமோன் குறிப்பிட்டாலும், ஞானியின் தவறான முயற்சி. ஞானத்திற்கும் மதிகேட்டிற்கும் தொடர்பு ஏது? (வ.13-14).* ***ஞானம் ஆண்டவர் அருளுவது; மதிகேடு இவ்வுலக வழக்கங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்வது.*** *ஞானத்தை அடைவதிலிருந்து நாம் நமது கவனத்தைச் சிதற விடுவது என்பது ஆண்டவரை விட்டு விலகுவது. எனவே எச்சரிக்கை!*

Δ

*"...மதிகெட்ட திட்டத்தில் ஈடுபட..." –*
*மதிகெட்ட செயல்களைச் செய்யத் திட்டமிட வேண்டும்; குற்றங்களில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க, எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஞானமுள்ள செயல்களைச் செய்ய கடவுளிடம் அடைக்கலம் ஆவதும், அவருடைய வழிகளில், நாம் செய்யும் செயல்களில் அர்ப்பணிப்போடு ஈடுபடுவதும் போதுமானது.*

Δ

*"...நலமான செயல் எதுவென்று அறிவதற்காக..." – மேலும் பார்க்க, 6:12.*
*இறைவாக்கினரின் நினைவூட்டல், பார்க்க, மீக்கா 6:8.*

*வசனம் 2:4-8*
*சாலமோன் அரசரின் அரும்பெரும் செயல்கள் வரலாற்று நூல்களில் பட்டியலிடப்பட்டுள்ளன, பார்க்க, 1 அரசர்கள் 9 ~ 10 மற்றும் 2 குறிப்பேடு 8 ~ 9. மேலும், அவர் செய்த ஆண்டவர் அருவருக்கும் செயல்கள், பார்க்க, 1 அரசர்கள் 11:1-8.*

∆

*இன்றைய உலகில் பணம் படைத்த ஒவ்வொருவரும் "பெரிய காரியங்கள்" என்று எண்ணித் திட்டமிட்டு, எல்லாரும் சராசரியாகச் "சாதிக்கும்" செயல்கள். இவ்வாறு செய்யவே நாம் ஒவ்வொருவரும் பயிற்றுவிக்கப்படுகிறோம்; பெற்றோர், உறவினர், கல்விச் சாலைகள் – எவரும் விதிவிலக்கின்றி, இதே வழியில் செல்லவே ஒவ்வொருவரையும் ஊக்கமூட்டுகின்றனர்.*

∆

***நாம் நமது ஜெபங்களிலும், நமது ஆண்டவர் நமக்குச் செய்யுமாறு வேண்டிக்கொள்ளும் "பெரிய காரியங்கள்" எவை?***

*வசனம் 2:4*
*பார்க்க, 1 அரசர்கள் 7:1-12.*

*வசனம் 2:8*
*பார்க்க, 1 அரசர்கள் 9:26-28, 10:10-12,14-15,21-22&25.*

∆

*"...இசைவல்ல ஆடவரும் பெண்டிரும்..." – செல்வங்களை மட்டுமல்ல, கவின்கலைத் திறன்களை நமக்கு ஆண்டவர் அருளுவது, அவற்றை அவர்தம் மாட்சி விளங்க நாம் பயன்படுத்துவதற்கே! ஆனால் சாலமோன் அரசர் தன் குடிகளின் திறன்களை எவ்வாறு பயன்படுத்தினார்?*

**இன்றும் நடப்பது என்ன?**
**திருச்சபைகளில் இசை கற்றுக் கொண்டு, "கலைச்சேவை" செய்யத் திரை மற்றும் ஊடகத் துறைகளுக்குச் செல்வோர் நம்மிடையே உண்டே!**

*வசனம் 2:9-10*
*ஞானமும் இச்சைகளும் சேர்ந்து இருப்பவை அல்ல; இச்சைகளை அடக்குவதே ஞானம். அதனால்தான் பேதுரு, ஞானத்தோடு இச்சையடக்கத்தை அறிவுறுத்துகிறார், 2 பேதுரு 1:6. கிறிஸ்துவின் திருமொழிகளில், மாற்கு 4:18-19.*

*வசனம் 2:9*
*ஒப்பிடுக, 1:16. மேலும் பார்க்க, 1 அரசர்கள் 10:23; 2 குறிப்பேடு 9:22. தமது வாக்கில் உண்மையுள்ள கடவுளாகிய ஆண்டவர் சாலமோனுக்கு அருளியவை, 1 அரசர்கள் 3:13; 2 குறிப்பேடு 1:12.*

*வசனம் 2:10*
*ஒப்பிடுக, 3:22, 5:18, 9:9.*

Δ

*"...முயற்சி..." –*
*KJV, labour; aw-mawl / ஆமால்; கடும் உழைப்பு, பெரும் பாடு, அயராத உழைப்பு, விடாமுயற்சி எனலாம். பழைய ஏற்பாட்டில் இந்த நூலில் அதிகம் இடம்பெறும் சொல்.*

*வசனம் 2:11*
*விடாமுயற்சியோடும் கடும் உழைப்பாலும் பெற்ற செல்வங்கள் இன்பம் அளித்தாலும், அவை உள்ளத்தில் நிலைத்து இருப்பதில்லை; காலத்திற்கும் நீடித்து வருவதில்லை. இதற்கா இத்தனை பாடு என்ற உணர்வே மேலிடுகிறது.*

*வசனம் 2:12-17*
*ஞானத்தையும் மதிகேட்டையும் ஆய்ந்து பார்த்த ஞானி, ஞானமே சிறந்தது என்று கண்டார்; ஆனால்*

*சாவு என்று வரும்போது, இரண்டுமே பயனற்றது என்று ஏமாற்றம் அடைந்தார். இங்கு, மதிகேடு என்று ஞானி எடுத்துரைப்பவை, அவர் வ.4-8 பகுதியில் உரைத்தவையே.*

Δ

*சாவு பயன் என்றால், வாழ்வது பயனற்றதா? பிறந்த நாளை விட இறக்கும் நாளே சிறந்தது (7:1) என்கிறார் ஞானி. பவுலடிகளும், கிறிஸ்து இயேசுவோடு இருப்போம் என்கிற நம்பிக்கையின் உறுதியில், சாவே சிறப்பானது என்கிறார்; எனினும், கிறிஸ்துவின் ஊழியத்தின் பொருட்டு, இன்னும் வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்கிறார் (பிலிப்பியர் 1:23-24).*

## ***இன்றைக்கு, வாழ்தலுக்கான நமது தெரிவு எதுவாக இருக்கிறது?***

*வசனம் 2:12*
*ஒப்பிடுக, 1:9.*

Δ

*"ஓர் அரசன் தனக்கு முன்னிருந்த அரசர் செய்ததைத் தவிர வேறென்ன செய்வான்?" –*
*சவுல் அரசர் செய்ததை தாவீது அரசர் செய்தாரா? தாவீது அரசர் செய்ததை சாலமோன் அரசர் செய்தாரா? இப்படித் தொடர்ந்து கேள்விகளை எழுப்பலாம். இஸ்ரயேலின் அரசர்கள் அனைவரிலும், ஆண்டவர் விரும்பும் வழியில் ஆட்சி செய்தவராக தாவீது விளங்கினார் என்று வரலாற்று நூல்களில் நாம் பார்க்கிறோம். தாவீதின் வழியில் சாலமோன் ஏன் நடக்கவில்லை?*

Δ

*இந்தக் கேள்வி எந்தவொரு பொறுப்பில் இருப்போருக்கும் பொருந்தும்.*

*நீங்கள் ஆற்றும் பணியில், கடவுளுக்கு ஏற்புடைய வழியில் நீங்கள் செயல்படுகிறீர்களா?*

*வசனம் 2:13*
*ஞானத்தின் சிறப்புகளைக் கூறும் சபை உரையாளர், 7:11-12&19, 9:18, 10:10.*

*வசனம் 2:14-15*
*மனிதர் எத்தகையோராக இருந்தாலும், நேரிடுவன அனைத்தும் பொதுவானவை, 9:2-3.*

*சாவு மட்டும் அனைவருக்கும் பொதுவானது அல்ல – சோர்வு, தளர்வு, நோவு, விபத்து, மூப்பு என, நேரிடும் எதுவும் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானது.*

*வசனம் 2:14*
*ஞானமுள்ளோர் ஒளி பெற்றோர், 8:1.*

*வசனம் 2:16*
*மதிகேடரைப் போலவே ஞானிகளும் சாகின்றனர், திருப்பாடல் 49:10.*

*வசனம் 2:17*
*"நான் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டேன்" – கடவுளின் பேரருளால் ஞானத்தைப் பெற்றவர், மதிகேட்டை முயற்சித்தாலும் தன் ஞானத்தைக் காத்துக் கொண்ட சாலமோன், இப்படி ஓர் அறிக்கையிடுதல் முரணானது. பார்க்க, வாழ்க்கையை வெறுத்த யோபு, யோபு 6:9; அதுபோன்ற நிலையில் மோசே, எண்ணிக்கை 11:14-15. செயலூக்கம் தரும் கிறிஸ்து இயேசுவின் அறைகூவல், லூக்கா 14:26.*

*வசனம் 2:18-23*
*எடுத்த முயற்சிகள், கொடுத்த உழைப்பு, செய்த சாதனைகள், பெற்ற பாராட்டுகள் என்று அனைத்தையும் பயனற்றதாகச் செய்யும் சாவு!*

*பெரிய காரியங்களைத் திட்டமிட்டு, பெருமுயற்சி எடுத்து நிறைவேற்றிய சாலமோன் (வ.4-8), ஒருவர் தான் வாழும் நாட்களில், அரும்பாடுபட்டுச்*

*சேர்த்தவை அனைத்தையும், தனக்கு அடுத்துத் தனது இடத்திற்கு வரும் ஒருவருக்கு -இவை எதற்கும் எந்தவொரு முயற்சியும் செய்யாத ஒருவருக்கு- விட்டுச் செல்ல வேண்டியதிருக்கிறது என்று வருந்துகிறார். தான் முயன்று சாதித்தவற்றின் மீதே அவருக்கு இது வெறுப்பை ஏற்படுத்தியது. வீணான தனது முயற்சிகளுக்காக அவர் மனமுடைந்து போனார். தனக்கு நேர்ந்த அநீதியாக அவர் இதனை உணர்ந்தார். பார்க்க, திருப்பாடல்கள் 39:6, 49:10; லூக்கா 12:20. தெளிவடைய வாசிக்க, 1 திமொத்தேயு 6:6-10.*

*வசனம் 2:19*
*செல்வம் சேர்த்து வைப்போருக்கும், அதைக் காப்பாற்ற இயலாத பிள்ளைகளைப் பெற்றோருக்கும் இயல்பாக ஏற்படும் கவலை, இங்கு சாலமோனுக்கு வருகிறது. இந்த நினைவில், அமைதியான இரவிலும் அவரது மனத்திற்கு அமைதியில்லை (வ.23).*

Δ
*"... மதிகேடராய் இருக்கலாம்..." –*
*அரசர் சாலமோனுக்கு தன் மகன் ரெகபெயாம் குறித்து இந்த எண்ணம் இருந்ததா என்பதை நாம் அறியோம் – ஆனால் இதனை உறுதிப்படுத்துவதாகவே அமைந்தது, அவனது வாழ்க்கை (1 அரசர்கள் 12:14, 14:22-30). "ஓ... சாலமோனே! மனிதருள் மாபெரும் ஞானியாக இருந்தும், அந்த ஞானத்தைக் குறைவாகப் பயன்படுத்தியவனே! எழுநூறு மனைவிகள் இருந்தும் உனக்கு இருந்ததோ ஒரே மகன்! பெரும் செல்வத்தையும் அரசுரிமையையும் பெற்ற அவனோ, மூடரிலும் மூடன்!" (ஆடம் கிளார்க்)*

*வசனம் 2:22*
*இணையான கேள்விகள், 1:3, 3:9.*

*வசனம் 2:23*
*பார்க்க, யோபு 5:7, 14:1.*

*வசனம் 2:24-26*

*இந்தக் குறுகிய வாழ்காலத்தில், நலமான யாதொன்றையும், அது எவ்வளவு சிறிதாயினும், நன்றியுள்ள உள்ளத்தோடு மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள, ஒவ்வொருவரையும் சாலமோன் அழைக்கிறார்.*

*வசனம் 2:24*

*"உண்பதையும் குடிப்பதையும்..." –*

*இந்த நூலில், சாலமோன் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் ஒன்று, 3:12-13&22, 5:18, 8:15, 9:7. இங்குக் குடிப்பது என்ற சொல், மதுக் குடிப்பதைக் குறிப்பதல்ல; அவர்களின் வழக்கப்படி, உணவோடு திராட்சை இரசம் குடிப்பதைக் குறிப்பது.*

Δ

*"இந்த வாய்ப்பும் கடவுள் தந்ததே..." –*

*OV, "இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது."*

*கடவுளின் கரம், ஆண்டவரின் கரம், அவருடைய வலக்கரம் – இது ஒரு சொற்றொடராக, ஞான இலக்கிய நூல்களில் காணப்படுவது; இன்று ஒரு சொலவடைபோல உலகோரால் எடுத்தாளப்படுவது.*

*வசனம் 2:25*

*"அவரின்றி ஒருவருக்கு எப்படி உணவு கிடைக்கும்? அவரால் எப்படி இன்பம் துய்க்க இயலும்?" –*

*மொழிபெயர்ப்புச் சிக்கலுள்ள ஒரு வசனம்.*

*OV, "என்னைப் பார்க்கிலும் சம்பிரமமாய்ச் சாப்பிடத் தக்கவன் யார்? என்னைப் பார்க்கிலும் துரிதமாய்ச் சம்பாதிக்கத் தக்கவன் யார்?"*

*KJV, "For who can eat, or who else can hasten (hereunto), more than I?"*

*NIV, "for without him, who can eat or find enjoyment?"*

*Septuagint, "For who shall eat, or who shall drink, without him?"*

*NRSV, "for apart from him, who can eat or who can have enjoyment?"*

*NKJV, "For who can eat, or who can have enjoyment, more than I?" (அடிக்குறிப்பு: "without him" as in some Hebrew Manuscript, LXX, Syriac, Jerome). – இந்த அடிக்குறிப்பின் அடிப்படையில், இந்த வசனத்தை நாம் புரிந்து கொள்ளலாம்.*

*வசனம் 2:26*
*ஒப்பிடுக, யோபு 27:16-17; நீதிமொழிகள் 28:8.*

*"கடவுள் ... அளிக்கிறார்" –*
*நலமானவற்றை நல்லோருக்கு அருளுபவர் கடவுளே! இந்த நூலில் மீண்டும் மீண்டும் சாலமோன் குறிப்பிடும் இறைவரின் தன்மை, 3:11&13, 5:18&19, 6:2, 8:15, 12:11. இந்நூலில் மட்டுமல்லாமல், ஞான இலக்கியங்களில் அதிகம் வலியுறுத்தப்படுவது, "நலன்களைக் கடவுளே அளிக்கிறார் / அருளுகிறார்" என்பது.*
Δ
*இதற்கு மாறாக நாம் இந்த உலகில் பார்க்கிறவற்றையும் -நல்லார் தண்டிக்கப்படுவதையும் பொல்லார் பயனடைவதையும்- ஞான இலக்கிய நூல்களில் வாசிக்கிறோம், 8:14; திருப்பாடல் 73:1-13.*

*ஆயினும், ஒருவர் செல்வம் சேர்த்தாலும், அதன் பயனைக் கடவுள் விரும்பும் ஒருவரே பெற முடியும் என்று சாலமோன் உறுதியாக உரைக்கிறார் (8:12). பயனுறுதல் என்பது நீதி வழங்கும் கடவுளின் கரங்களில் உள்ளது என்பதே சபை உரையாளரின் முடிவாக இருக்கிறது (11:9 & 12:14).*

✝

# 21 சபை உரையாளர் 03

## (ஒவ்வொன்றுக்கும் ஒரு காலம்)

*1 ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு.*
*உலகில் நடக்கும்*
*ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும்*
*ஒரு காலமுண்டு:*
*2 பிறப்புக்கு ஒரு காலம்,*
*இறப்புக்கு ஒரு காலம்;*
*நடவுக்கு ஒரு காலம்,*
*அறுவடைக்கு ஒரு காலம்;*
*3 கொல்லுதலுக்கு ஒரு காலம்,*
*குணப்படுத்தலுக்கு ஒரு காலம்;*
*இடித்தலுக்கு ஒரு காலம்,*
*கட்டுதலுக்கு ஒரு காலம்;*
*4 அழுகைக்கு ஒரு காலம்,*
*சிரிப்புக்கு ஒரு காலம்;*
*துயரப்படுதலுக்கு ஒரு காலம்,*
*துள்ளி மகிழ்தலுக்கு ஒரு காலம்;*
*5 கற்களை எறிய ஒரு காலம்,*
*கற்களைச் சேர்க்க ஒரு காலம்;*
*அரவணைக்க ஒரு காலம்,*
*அரவணையாதிருக்க ஒரு காலம்;*
*6 தேடிச் சேர்ப்பதற்கு ஒரு காலம்,*
*இழப்பதற்கு ஒரு காலம்;*
*காக்க ஒரு காலம்,*
*தூக்கியெறிய ஒரு காலம்;*
*7 கிழிப்பதற்கு ஒரு காலம்,*
*தைப்பதற்கு ஒரு காலம்;*
*பேசுவதற்கு ஒரு காலம்,*
*பேசாதிருப்பதற்கு ஒரு காலம்;*
*8 அன்புக்கு ஒரு காலம்,*
*வெறுப்புக்கு ஒரு காலம்;*
*போருக்கு ஒரு காலம்,*
*அமைதிக்கு ஒரு காலம்.*

*9 வருந்தி உழைப்பவர் தம் உழைப்பினால் அடையும் பயன் என்ன?*

*10 மனிதர் பாடுபட்டு உழைப்பதற்கெனக் கடவுள் அவர்மீது சுமத்திய வேலைச் சுமையைக் கண்டேன்.*
*11* ***கடவுள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செம்மையாகச் செய்கிறார்; காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார். ஆயினும், கடவுள் தொடக்கமுதல் இறுதிவரை செய்து வருவதைக் கண்டறிய மனிதரால் இயலாது.***
*12 எனவே, மனிதர் தாம் உயிரோடிருக்கும்போது, இன்பம் துய்த்து மகிழ்வதைவிடச் சிறந்தது அவருக்கு வேறொன்றும் இல்லை என அறிந்துகொண்டேன்.*
*13 உண்டு குடித்து உழைப்பால் வரும் பயனைத் துய்க்கும் இன்பம், எல்லா மனிதருக்கும் கடவுள் அளித்த நன்கொடை.*
*14 கடவுள் செய்யும் ஒவ்வொன்றும்*
*எப்போதும் நிலைத்திருக்கும்*
*என்பதை நான் அறிவேன்.*
*அதனோடு கூட்டுவதற்கோ*
*அதனின்று குறைப்பதற்கோ எதுவுமில்லை.*
*தமக்கு மனிதர் அஞ்சி நடக்க வேண்டுமென்று*
*கடவுள் எல்லாவற்றையும் செய்திருக்கிறார்.*
*15 இப்போது நடப்பது*
*ஏற்கெனவே நடந்ததாகும்.*
*இனி நடக்கப் போவதும்*
*ஏற்கெனவே நடந்ததாகும்.*
*நடந்ததையே கடவுள்*
*மீண்டும் மீண்டும்*
*நடைபெறச் செய்கிறார்.*

## *(அநீதி மற்றும் சாவின் மறைபொருள்)*

*16 வேறொன்றையும் உலகில் கண்டேன்.*
*நேர்மையும் நீதியும் இருக்கவேண்டிய இடங்களில்*
*அநீதியே காணப்படுகிறது.*

*17 "கடவுள் நல்லாருக்கும் பொல்லாருக்கும்*
*தீர்ப்பு வழங்கப் போகிறார்.*
*ஏனெனில், ஒவ்வொரு காரியத்திற்கும்*
*ஒவ்வொரு செயலுக்கும்*
*அவற்றிற்குரிய காலத்தை*
*அவர் குறித்திருக்கிறார்" என்று*
*எனக்குள் சொல்லிக் கொண்டேன்.*
*18 "மனிதர் விலங்கைப் போன்றவர் என்பதைக் காட்டுவதற்காகவே கடவுள் அவருக்குச் சோதனைகளை அனுப்புகிறார்" என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.*
*19 மனிதருக்கு நேரிடுவதே விலங்குக்கும் நேரிடுகிறது; மனிதரும் மடிகிறார்; விலங்கும் மடிகிறது. எல்லா உயிர்களுக்கும் இருப்பது ஒரு வகையான மூச்சே. விலங்கைவிட மனிதர் மேலானவர் இல்லை; எல்லாம் வீணே.*
*20 எல்லா உயிர்களும் இறுதியாகச் செல்லும் இடம் ஒன்றே. எல்லாம் மண்ணினின்றே தோன்றின; எல்லாம் மண்ணுக்கே மீளும்.*
*21 மனிதரின் உயிர்மூச்சு மேலே போகிறது என்றும் விலங்குகளின் உயிர் மூச்சு கீழே தரைக்குள் இறங்குகிறது என்றும் யாரால் சொல்ல இயலும்?*
*22 ஒருவர் தம் வேலையைச் செய்வதில் இன்பம் காண்பதே அவருக்கு நல்லது என்று கண்டேன். ஏனெனில், அவ்வேலை அவருக்கெனக் குறிக்கப்பட்டுள்ளது. அவர் இறந்தபின் நடப்பதைக் காண அவரைத் திரும்ப யாரும் கொண்டு வரப்போவதில்லை.*

*சபை உரையாளர் 3:1-22*

## சிந்தனைக்கு

*வசனம் 3:1-11*
*7 வசனங்கள் - 14 இணைமுரண்கள் - 28 நிகழ்வுகள்: பதினான்கு இணைமுரணான நிகழ்வுகளை*

*முன்வைத்து, அவற்றுக்குப் பின்னிருந்து செயல்படும் கடவுளின் இறையாண்மையை (பார்க்க, திருப்பாடல் 139) ஒரு சிறிய பாடலாக இங்கு சாலமோன் பாடுகிறார். விளக்கம் பெறும் ஒவ்வொரு நிகழ்வும், குறிப்பிட்ட சமயத்தில், ஒரு காலத்தில் நடப்பவை. இவற்றுள், பிறப்பும் இறப்பும் நீங்கலாக, அனைத்தும் மனிதரால், மனிதரின் விருப்பத்தின்படி நடப்பவை. எனவே, இவை அனைத்திற்கும் உரிய இறைத் தீர்ப்பை மனிதர் பெறுவர், வ.17. ஒவ்வொரு நிகழ்வுக்கும் குறிப்பிட்ட நேரமும் காலமும் உண்டு. மனிதர் ஒருமுறை செய்ததை, மறுமுறை கலைத்துப் போடுகிறார்கள் அல்லது காலமோ இயற்கையோ அதனைப் பயனற்றதாக மாற்றிவிடுகிறது. இவ்வாறு மனிதரின் செயல்கள் அனைத்தும் ஒரு காலத்தில் பயனற்றதாக மாறுகின்றன. ஆனால் கடவுளின் படைப்போ காலங்காலமாக நிலைத்து நிற்கிறது.*

Δ

*புதிய ஏற்பாட்டில், காலம் குறித்த அறிவுரைகள், யோவான் 12:35-36; கலாத்தியர் 1:4; எபேசியர் 5:16; கொலோசையர் 4:5. வாழ்க்கை குறுகியது; காலம் பொல்லாதது; எனவே ஒவ்வொரு நாளையும் கடவுளை அடைய ஆதாயப்படுத்தி வாழ்வோம்.*

*வசனம் 3:1*

*மீண்டும், வ.17. மேலும் பார்க்க, 8:6.*

Δ

*முதல் வசனத்தில், நேரம் (OV, காலம், மூலச்சொல் zem-awn / சேமான், காலம் அல்லது நேரம்); காலம் (OV, சமயம், மூலச்சொல் ayth / ஆய்த், குறிப்பிட்ட நேரம் அல்லது நீண்ட காலம்; இந்த மூலச்சொல்லே இனிவரும் வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது). இந்தச் சொற்பயன்பாடுகளின் அடிப்படையில், இந்த இரண்டு மூலச்சொற்களும் குறிப்பிட்ட நேரத்தைக் குறிக்கவும், காலத்தைக் குறிக்கவும் மாறி மாறிப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*வசனம் 3:2*

*பார்க்க, யோபு 14:5; எபிரேயர் 9:27.*

*பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே, தங்கள் வாழ்வின் ஆதாரமாக மனிதர் ஈடுபடும் இயல்பான உற்பத்திச் செயல்பாடு, நடவும் அறுப்பும்.*

Δ

*இந்தப் பகுதியில் குறிப்பிடப்படும் இதர செயல்களைப் போலவே, பிறப்பு மற்றும் இறப்பையும் மனிதச் செயலாக விளக்கம் செய்வோர் உள்ளனர். இறக்க ஒரு காலம் என்பதை அவ்வாறு சொல்லக்கூடும் என்றாலும், பிறப்பை எவ்வாறு அப்படிச் சொல்ல முடியும்? எத்தனையோ உயர் மருத்துவ முறைகள் வந்த பிறகும், குழந்தை பிறக்காது என்ற நிலைமை உள்ளதே! எனவே, விதிவிலக்குகள் இருந்தாலும், பிறப்பும் இறப்பும் அடிப்படையில் கடவுளின் கரங்களில் உள்ளன.*

*வசனம் 3:3*

*இடிக்க ஒரு காலம், எசாயா 5:5; எரேமியா 18:7&9.*

*வசனம் 3:4*

*பொதுவாக, பிறப்போடும் இறப்போடுமான தொடர்பில் மனிதர் செய்பவை.*

*கூடுதலாக, பவுலடிகளின் அறிவுறுத்தல், உரோமையர் 12:15. கிறிஸ்துவின் ஆறுதலான வாக்கு, மத்தேயு 5:4. இன்றைய பற்றுறுதியாளருக்கான எதிர்நோக்கும் தேறுதலும், 1 தெசலோனிக்கர் 4:13-18.*

Δ

*பிறப்பில் களிப்பு, ரூத் 4:13-15.*

*வசனம் 3:5*

*"கற்களை எறிய ... சேர்க்க..." –*

*கரடுமுரடான நில அமைப்பைக் கொண்டது இஸ்ரயேல் நாடு; மண் திருத்தி நிலத்தைப் பண்படுத்தி உழவுத் தொழிலை முன்னெடுப்பது சவாலானது (எசாயா 5:2).*

Δ

"கற்களைச் சேர்க்க..." –
எதிரிகளின் விளைநிலங்களை அழிக்க அன்று செய்யப்பட்ட செயல், 2 அரசர்கள் 3:19&25.

Δ

"அரவணையாதிருக்க..." –
மந்தை மேய்க்கவும், போர்க் காலங்களிலும், இல்லறத்தை விட்டுவிலகி ஆண்கள் வாழ்வதுண்டு.

Δ

சிந்திக்க:
பார்க்க, 1 கொரிந்தியர் 7:5. திருமணமானவர்கள், தங்களைக் கடவுளோடு இணைத்துக் கொள்ள, தங்கள் இணையரைப் பிரிய வேண்டுமா?

வசனம் 3:6
"தூக்கியெறிய..." –
சேர்க்கும் பொருள்கள் எல்லாக் காலங்களிலும் பயனுள்ளதாக இருக்க முடியாது. தேவைக்கு ஏற்பப் பழையன கழிதலும் நடக்கும்.

வசனம் 3:7
"கிழிப்பதற்கு..." –
துயரச் செய்திகளின் விளைவு, சான்றாகப் பார்க்க, 2 சாமுவேல் 13:31; யோபு 1:20, 2:12.

Δ

"... பேசாதிருக்க ..." –
பார்க்க, ஆமோஸ் 5:13; மேலும் சில அறிவுரைகள், நீதிமொழிகள் 4:24, 15:28, 17:28, 21:23, 23:9, 24:7&28, 25:9&11, 27:1, 30:32.

வசனம் 3:8
தனியொருவருவருக்கு என்று வரும்போது அன்பை முன்னிருத்தும் அரசர் சாலமோன், தேசிய இனம் என்று வரும்போது போரை முன்னிலைப்படுத்துகிறார்.

வசனம் 3:9
இணை, 1:3, 2:11.

*வசனம் 3:10-15*

*காலங்கள்தோறும் செயல்படும் கடவுளை, முந்தைய வசனங்களின் அடிப்படையில் ஒப்பிட்டு ஒரு விளக்கம்.*

*வசனம் 3:9-10*

*நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் உழைப்பின் பயன், 1:3&13, 2:23&26, 4:8, 5:14, 8:15.*

*வசனம் 3:11*

*'என் காலங்கள் உமது கரத்தில் இருக்கின்றன,' என்றுரைத்த தாவீதைப் போல, கடவுளையும் காலத்தையும் தொடர்புபடுத்தி மற்றுமொரு அருமையான திருமொழியை சாலமோன் தருகிறார்.*

Δ

*கடவுளின் செயல்கள் அனைத்துமே நல்லவையாக இருக்கின்றன, தொடக்க நூல் 1:3-31. கீழ்ப்படியாமை மற்றும் மீறுதல் வரும்வரை, மனித வாழ்க்கையும் இனிமையாக, கேடின்றி இருந்தது.*

Δ

*"காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார்" –*

*எதனை எப்போது செய்ய வேண்டும் என்ற உணர்வு, மனிதருக்குக் காலங்காலமாக வரும் இயல்பு. பிறந்த மனிதன் வளர வளர, இந்த உணர்வும் அவனுக்குள் காலத்திற்கு ஏற்ற மாற்றங்களோடு வளர்கிறது, 1 கொரிந்தியர் 13:11. எந்தக் காலத்தில் எதனை எதிர்நோக்க வேண்டும் என்ற உணர்வை நாம் பெற, அவர்தம் வார்த்தை இன்று நம் கரங்களில்; யூடியூப் உபதேசங்களில் அல்ல!*

Δ

*"கடவுள் ... செய்து வருவதைக் கண்டறிய மனிதரால் இயலாது" –*

*பார்க்க, யோபு 5:9; உரோமையர் 11:33. மேலும் பார்க்க, 7:23-24, 8:16-17.*

*வசனம் 3:12-13*
*இன்பம் துய்த்தல், 2:3&24.*

*வசனம் 3:12*
*"எனவே, மனிதர் தாம் உயிரோடிருக்கும்போது, இன்பம் துய்த்து மகிழ்வதைவிடச் சிறந்தது அவருக்கு வேறொன்றும் இல்லை என அறிந்துகொண்டேன்" –*
*OV, மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைசெய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்;*
*NLT, So I concluded there is nothing better than to be happy and enjoy ourselves as long as we can.*
*NRSV திருப்புதலும் NLT போன்ற பொருள்கொண்டது. நன்மை செய்வதைப் பற்றி இந்நூலில் இதுவரை சாலமோன் ஏதும் பேசவில்லை என்பதையும், இன்பம் துய்த்தலைக் குறித்தே அவர் பேசி வருகிறார் என்பதையும் நினைவில் கொண்டால், இத்தகைய புரிதல் சரியே என உணர்வோம்.*

*வசனம் 3:14*
*பார்க்க, யாக்கோபு 1:17.*
*மனிதரின் வாழ்க்கை நிலையற்றது; அவர்களைப்போலவே, அவர்களின் செயல்களும் நிலைநிற்பதில்லை. ஆனால், மனிதரால் எந்தத் தாக்கத்தையும் குறுக்கீட்டையும் செய்ய முடியாத, கடவுளின் செயலான படைப்பின் இயக்கமோ என்றென்றும் நிலைத்திருந்து, அவருடைய மாட்சியைப் பாடிப் புகழும்.*
Δ
*"தமக்கு மனிதர் அஞ்சி நடக்க..." –*
*நீதிமொழிகள் நூலில் போலவே, இந்த நூலிலும் சபை உரையாளர் சாலமோன் அறிவுறுத்துவது; மேலும் பார்க்க, 5:7, 12:13 மற்றும் முன்னுரை.*

*வசனம் 3:15*
*பார்க்க, 1:9.*

*வசனம் 3:16-17*
*நீதி வழங்கும் அமைப்புகள் மீது ஞானி சாலமோனின் பார்வை. அங்குச் செய்யப்படும் நீதியில் நேர்மை இல்லை என்று அவர் சொல்கிறார்.*

*இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டை தாவீது அரசர் மீதும் அவருடைய ஆட்சி அமைப்பின் மீதும் வைத்து, அப்சலோம் நாட்டைக் கைப்பற்றியதை நாம் அறிவோம், 2 சாமுவேல் 15:2-6. ஆனால் ஞானி சாலமோன், அரசராகிய தன் மீதும் தன் ஆட்சி அமைப்பின் மீதும் ஓர் ஆய்வு அறிக்கையை வைக்கிறார்.*

*இஸ்ரயேலின் ஆட்சி அமைப்பு, மோசேயின் திருச்சட்டத்தின் வழியில் செயல்படுவது. அப்படியானால், மோசேயின் திருச்சட்டத்தின் வழியில் தாங்கள் செயல்படவில்லை என்கிறாரா, சாலமோன் அரசர்? அல்லது மோசேயின் திருச்சட்டம் நீதி செய்தாலும், அதில் நேர்மை இல்லை என்று சபை உரையாளர் சொல்கிறாரா? இறைவாக்கினர் வழியாக மோசேயின் திருச்சட்டங்கள் குறித்த இறைவெளிப்பாடு, எரேமியா 7:22-23. கிறிஸ்து இயேசு சொன்னதையும் நினைவில் கொள்ளுங்கள், மத்தேயு 19:7-8; மேலும், இணைச்சட்டம் 24:1-4.*
Δ

*தொன்மைச் சமுதாயத்தில், அரசனே நீதி அமைப்பின் உச்சம், இணைச் சட்டம் 17:18-19. இன்றைய உலகில், மக்களாட்சியில், ஆட்சி அமைப்பு வேறு; நீதிமன்ற அமைப்பு வேறு. நீதித் தீர்ப்புகளே சட்டமாக வாய்ப்பு உண்டு என்ற போதிலும், சட்டம் இயற்றும் அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அமைப்பினுடையது. அப்படியானால், பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சட்டங்களே இயற்றப்படும்!*
🕎

*"நீதி வழங்குவோர் நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டாமா?"*
*நமது நாட்டில் அரசியல் அமைப்புச் சட்டத்தைக் காக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்றாலும், நீதிமன்றங்களுக்கு அதுவே அவற்றின் அடிப்படைக் கடமை, பொறுப்பு. தங்களின் அடுத்த பதவிக்கான நுழைவுத் தேர்வுகளை எழுதிக் கொண்டிருக்கும் நீதிபதிகளால் அரசியல் அமைப்புச் சட்டத்தையும் நீதி நேர்மையையும் காப்பாற்ற முடியாது!*

*நமது செல்பேசிகளில் ஒரு தெரிவு உண்டு: தொழிற்சாலை மீளமைப்பு (Industrial Reset). இந்த உலகிற்கு அதுபோன்ற ஒரு செயலை தமது தீர்ப்புகளின் வழியில் செய்பவர், கடவுள். அவரே தாம் விரும்பும் நேர்மையான மாற்றங்களை நமக்குச் செய்வார்.*

*வசனம் 3:16*
*இதன் விளக்கமாக, 5:8.*

*வசனம் 3:17*
*தீர்ப்பு எழுதும் எவரும் தீர்ப்புக்கு உட்பட்டவரே; ஏனெனில் தம் படைப்பு அனைத்திற்கும் நீதி வழங்குபவர் கடவுள், 11:9, 12:14; தொடக்க நூல் 18:25; திருப்பாடல் 96:13; மத்தேயு 16:27; உரோமையர் 2:6-10; 2 கொரிந்தியர் 5:10; 2 தெசலோனிக்கர் 1:6-9.*

*வசனம் 3:18-22*
*விலங்குகளோடு மனிதர்களை ஒப்பிட்டு ஒரு படிப்பினை: பிறப்பும் இறப்பும் இரு வகையினருக்கும் பொது; வாழ்க்கைக்கான போராட்டமும் பொது; விலங்குகளின் நுகர்வு அவைகளின் வாழ்க்கைக்கான தேவைகளை நிறைவு செய்வதோடு முடிந்து விடுகிறது; ஆனால் மனிதர்களின் நுகர்வு, அவர்களின் தேவைகளைக் கடந்து, அவர்கள் இன்பம் பெறுவதில்*

*நிறைவடைகிறது. அந்த அடிப்படையில், வாழும் வரை இன்பம் பெறுவதே நல்லது என்கிறார் சபை உரையாளர்.*

*வசனம் 3:19*
*பார்க்க, திருப்பாடல் 49:12&20.*

*வசனம் 3:20*
*பார்க்க, தொடக்க நூல் 3:19; திருப்பாடல் 103:14.*

*வசனம் 3:21*
*ஒப்பிடுக, 12:7.*
Δ
*"... யாரால் சொல்ல இயலும்?" –*
*மீண்டும் மீண்டும் ஞானி எழுப்பும் வினா, 2:19, 6:12, 8:1; பழைய ஏற்பாட்டில், 1 அரசர்கள் 3:9; எஸ்தர் 4:14; யோபு 26:14; திருப்பாடல் 90:11, 106:2; நீதிமொழிகள் 20:24, 24:22; யோவேல் 2:14.*

*வசனம் 3:22*
*பார்க்க, 2:10&24, 5:18, 6:12.*
Δ
*"அவ்வேலை அவருக்கெனக் குறிக்கப்பட்டுள்ளது" – பவுலடிகளின் விளக்கம், கொலோசையர் 3:23-24.*

*விலங்குகளோடு மனிதர்களை ஒப்பிட்டு ஒரு விளக்கம் தந்த ஞானி, இவ்விரு வகையினர் இடையே உள்ள வேறுபாடுகள் எதனையும் குறித்துப் பேசவில்லை. தொடர்ந்து அவர், இன்பம் துய்த்தல் என்பதில் மட்டும் தனது கவனத்தைக் குவித்து வருகிறார் என்பதை நினைவில் கொண்டு வாசித்தல் சிறப்பு.*

## (ஒடுக்குமுறை தீது)

*1 பிறகு நான் இவ்வுலகில் நடக்கும் கொடுமைகளையெல்லாம் பார்த்தேன்.*
*இதோ! மக்கள்*
*ஒடுக்கப்பட்டுக் கண்ணீர் சிந்துகிறார்கள்.*
*அவர்களைத் தேற்றுவார் எவருமில்லை.*
*அவர்களை ஒடுக்குவோர் கை ஓங்கி இருந்ததால்,*
*அவர்களைத் தேற்றுவார் எவருமில்லை.*
*2 ஆகையால், இன்று உயிரோடு வாழ்கிறவர்களின் நிலைமையைவிட*
*ஏற்கெனவே மாண்டு மறைந்துபோனவர்களின்*
*நிலைமையே மேலானது என்றேன்.*
*3 இவ்விரு சாராரின் நிலைமையைவிட*
*இன்னும் பிறவாதவர்களின் நிலைமையே சிறந்தது.*
*ஏனெனில், அவர்கள் இவ்வுலகில் நடக்கும்*
*கொடும் செயல்களைப் பார்க்கும் நிலையில் இல்லை.*

## (கடின உழைப்பு எனும் மடத்தனம்)

*4 மனிதர் ஏன் இவ்வளவு பாடுபட்டு உழைக்கின்றனர் என்பதையும் கண்டறிந்தேன். இதற்குக் காரணம் மனிதரிடையே காணப்படும் போட்டி மனப்பான்மையாகும். இது வீண் செயல்; காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*
*5 தம் கைகளைக் கட்டிக்கொண்டு*
*பட்டினிகிடந்து மடிகிறவர் மடையர்*
*என்று சொல்லப்படுகிறது.*
*6 காற்றைப் பிடிக்க முயல்வது போன்ற*
*பயனற்ற உழைப்பு*
*இரு கை நிறைய இருப்பதைவிட*
*மன அமைதி*
*ஒரு கையளவு இருப்பதே மேல்.*

## *(தனித்திருத்தல் பயனற்றது)*

*7 உலக வாழ்க்கையில் வேறொரு காரியமும்
வீணென்று கண்டேன்:
8 ஒருவர் தனி மனிதராக வாழ்கிறார்.
அவருக்குப் பிள்ளையுமில்லை,
உடன்பிறந்தாருமில்லை;
என்றாலும், அவர் ஓயாது உழைக்கிறார்.
ஆனால், தமக்கிருக்கும் செல்வத்தால்
ஒருபோதும் மனநிறைவடைவதுமில்லை;
தாம் இவ்வாறு உழைப்பதும்
எவ்வகையான இன்பத்தையும் அனுபவியாமல்
இருப்பதும்
யாருக்காக என்று அவர் எண்ணிப் பார்ப்பதுமில்லை.
இது வீணானதும் வருந்தத்தக்கதுமான வாழ்க்கை
அன்றோ?*

## *(சேர்ந்து வாழ்தலின் நன்மைகள்)*

*9 தனி மனிதராய் இருப்பதை விட
இருவராய் இருப்பது மேல்.
ஏனெனில், அவர்கள் சேர்ந்து உழைப்பதால்,
அவர்களுக்கு மிகுந்த பயன் கிடைக்கும்.
10 ஒருவர் விழுந்தால்,
அடுத்தவர் அவரைத் தூக்கி விடுவார்.
தனி மனிதராய் இருப்பவர் விழுந்தால்,
அவரது நிலைமை வருந்தத்தக்கதாகும்;
ஏனெனில், அவரைத் தூக்கி விட எவருமில்லை.
11 குளிரை முன்னிட்டு
இருவர் ஒன்றாய் படுத்துச்
சூடு உண்டாக்கிக்கொள்ளலாம்;
தனி மனிதனுக்கு எப்படிச் சூடு உண்டாகும்?
12 தனி மனிதரை வீழ்த்தக்கூடிய எதிரியை
இருவரால் எதிர்த்து நிற்க முடியும்.
முப்புரிக் கயிறு அறுவது கடினம்.*

## *(பாராட்டு பயனற்றது)*

*13 வயது சென்ற*
*அறிவுரை கேளாத முட்டாள் அரசரைவிட,*
*விவேகமுள்ள ஏழை இளைஞனே மேலானவன்.*
*14 சிறையில் கைதியாயிருந்தவர்*
*அரியணை ஏறியதும் உண்டு;*
*அரசுரிமையுடன் பிறந்தவர்*
*வறியவராவதும் உண்டு.*
*15 ஆனால், இந்த உலகில் வாழும் மக்கள்*
*அனைவரும்*
*அந்த அரச பதவியை ஏற்ற*
*இளைஞனின் சார்பில் இருந்ததைப் பார்த்தேன்.*
*16 அவன் ஆண்ட மக்களின் எண்ணிக்கைக்கு*
*வரையறையே இல்லை.*
*அவன் காலத்திற்குப்பின் வந்த மக்களோ*
*அவனில் மனநிறைவடையவில்லை.*
*இதுவும் வீணே;*
*காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*
*சபை உரையாளர் 4:1-16*

## சிந்தனைக்கு

*வசனம் 4:1-16*
*பரிதியின் கீழ், தான் கண்ட சில முரண்களை இங்கே ஞானி பதிவிடுகிறார். அவை தனி மனிதர் தொடர்பிலும், மனித உறவுகள் சார்ந்தும், நிகழ்பவை. முதல் மூன்று பகுதிகளில், ஒடுக்கப்பட்டோரைத் தேற்றுவார் இல்லை; போட்டி போட்டு உழைப்போருக்கு ஓய்வில்லை; தனித்து வாழ்வோருக்குத் துணையாளர் இல்லை!*

*வசனம் 4:1-3*
*காலங்கள்தோறும் ஒடுக்குமுறை அன்றாட நியமமாகிவிட்ட உலகில், அதிலிருந்து தப்புவோர் பிறவாதோரும் மரித்தோருமே என்கிறார் ஞானி.*

*சாலமோன் அரசரின் ஆட்சியிலும் ஒடுக்குமுறை இருந்தது என்பதையும், அவருடைய மகன் ரெகபெயாம் இன்னும் கடுமையான ஒடுக்குமுறை செய்யும் விருப்போடு இருந்தான் என்பதையும் வரலாற்று நூல்களில் வாசிக்கிறோம், 1 அரசர்கள் 4:7,22-23&27-28, 5:13-14, 9:15&22-23, 12:3-4&14.*

*சாலமோனின் ஆட்சிக் காலத்தில் அமைதி நிலவும் வளமான நாடாக இஸ்ரயேல் திகழ்ந்த போதிலும், மக்கள் ஒடுக்குமுறைக்கு ஆளாகினர் என்பது,* **இவ்வுலகில் பொற்கால ஆட்சி என்று சொல்லப்படும் எந்தவொரு ஆட்சியும் எப்படி இருந்திருக்கும் என்பதற்கு ஒரு சான்று.** *அடக்குமுறையை அறிந்திருந்த அரசர் சாலமோன் போலவே, ஆள்வோர் எப்போதும் மக்களின் அவல நிலையை அறிந்தே இருக்கின்றனர்; அது தங்களின் ஆட்சியின் ஓர் இயல்பு அல்லது நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமானது என்று நம்பியிருக்கின்றனர்.*

Δ

*நாட்டின் மொத்த உற்பத்தி (GDP), தனிநபர் வருமானம் (PCI) போன்ற காரணிகளால் இன்றைக்கு நாட்டின் வளம் அளவிடப்படுவதில்லை. மாறாக, நல்லாட்சி அல்லது மக்களின் நல்வாழ்வை உறுதி செய்யும் ஆட்சி என்பதைக் கண்டறிய, மனித மகிழ்ச்சிக் குறியீடு (Human Happiness Index), உலக அளவிலான பட்டினிக் குறியீடு (World Hunger Index) போன்றவை அளவீடாக உள்ளன. அதன்படி, நமது நாட்டின் நிலைமை என்ன? இது இந்தியாவின் அமிழ்த காலமா?*

*வசனம் 4:1*

*ஒப்பிடுக, 3:16, 5:8 & 8:9; மேலும் பார்க்க, இணைச் சட்டம் 24:14; 1 சாமுவேல் 12:3-4; எரேமியா 21:12; ஒசேயா 12:7; ஆமோஸ் 4:1; மீக்கா 2:2.*

*வாழ்க்கை பயனற்றது மட்டுமல்லாமல், கொடூரமானது என்பதைச் சொல்லும் ஞானி.*

அதேவேளையில், ஒடுக்கப்பட்டோரின் புலம்பலைக் கேட்டு, பாதுகாக்க விரையும் கடவுள், திருப்பாடல் 12:5.

Δ

வாழும் நாட்களில் இன்பம் துய்த்தலே நலம் என்று அறிவுறுத்தும் சாலமோன், 2:24, 3:12-13; ஆனால் அனுதினமும் ஒடுக்கப்பட்டு துயருறும் மக்கள் என்ன இன்பம் பெற இயலும்?

Δ

"அவர்களைத் தேற்றுவார் எவருமில்லை" –
கண்ணீர் சிந்தும் மக்களைத் தேற்ற ஒருவரும் இல்லை என்று தனது இயலாமையை வெளிப்படுத்தும் அரசர் சாலமோன்!

இன்றும் மணிப்பூர் பற்றி எரிகிறது; படைப் பிரிவினரின் தடுப்புகளை மீறி, மாநிலக் காவல்துறையினர் முகாம் புகுந்து ஒடுக்கப்பட்டோரைத் தாக்குகின்றனர். நமது நாட்டின் தலைநகருக்கு அருகில் இந்த நாட்டின் குடிகளுக்கு எதிராகச் சமுதாயக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன; இவற்றை ஆள்வோரே முன்னின்று நடத்துகின்றனர் - கனரக வாகனங்களைக் கொண்டு, சிறுபான்மையினர் வீடற்றோராக வீதிகளில் நிறுத்தப்படுகின்றனர்; நீதிமன்ற ஆணைகளைச் செயல்படுத்தவேண்டிய அரசாங்கங்களே அவற்றை நிராகரிக்கின்றன. உண்மைகளைப் பேசுவோரும் எழுதுவோரும் அச்சுறுத்தப்படுகிறார்கள். ஒடுக்குவோரின் கை ஓங்கி இருக்கிறது. ஆற்றுப்படுத்தும் மாநில முதலமைச்சர்கள் / நாட்டின் முதன்மை அமைச்சர் எங்கே? அமைதிக்கான அவர்களின் அறைகூவல் எங்கே? ஆண்டவரே, நீதியை நிலைநாட்டும்! (திருப்பாடல் 73:17-20)

வசனம் 4:2
இடுகாட்டில் நிலவும் சமநிலை, யோபு 3:11-22. மேலும் பார்க்க, எரேமியா 20:14-18.

மணிப்பூர் போன்ற கலவர மண்ணில், மாண்டோர் மறைந்து போகின்றனர்; சடலங்களும் கிடைப்பதில்லை; அல்லது அழுவோர் பிணவறைகளுக்குச் சென்று அவற்றைப் பெற முடிவதில்லை. தப்பிப் பிழைத்தோர், கூரைகள் இன்றிக் காடுகளில் வாழ்கின்றனர் – வளத்தைத் தேடி நகருக்கு வந்த வனவாசிகள், இன்று எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி, காடுகளுக்குள் அடித்து விரட்டப்பட்டனர். வாழ்வின் ஆதாரங்களையும், உடமைகளையும், உரிமைகளையும் இழந்தோரைவிட, உயிரை இழந்தோரின் நிலை மேலானதன்றோ!

வசனம் 4:3
பிள்ளை பெறாமை நன்று எனும் ஒரு காலம் வரும், லூக்கா 23:29.
மணிப்பூர் காடுகளில் அல்லது ஆக்கிரமிப்பின் கோரத்தால் அன்றாடம் சிதைவுறும் பாலஸ்தீனத்தில், அடிப்படை வசதிகளின்றிப் பிறக்கும் குழந்தைகளின் நிலை எவ்வளவு கொடுமையானது!

வசனம் 4:4-16
முதல் வசனமும் இறுதி வசனமும் "வீண்," "காற்றைப் பிடிக்க முயல்வது" என்று அமைய, வாழ்வில் உழைப்பின் பயனற்ற தன்மையை எடுத்துரைக்கும் வசனங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு.

வசனம் 4:4-6
போட்டி போட்டு மிகையாக உழைப்பதையும் சோம்பிச் செயலற்று இருப்பதையும் ஒப்பிடும் ஞானி.

பணிப்பற்றாளர்களும் பணிப்பைத்தியங்களும் (careerists and workaholic) எங்கும் நிறைந்திருக்கின்றனர். போட்டி நிறைந்த உலகில் வெற்றி பெற உழைப்பதாக நம்பி, தங்கள் வாழ்நாளில் தாங்கள் திரும்பப் பெறமுடியாத

*நன்மையின் நாட்களை இவர்கள் இழக்கின்றனர். இத்தகைய கடின உழைப்பை விடவும் மன அமைதியே மேலானது என்கிறார் சபை உரையாளர்.*

*வசனம் 4:5*
*சோம்பேறித்தனம் குறித்த பல அறிவுரைகளை சாலமோன் நீதிமொழிகள் நூலில் வழங்கியுள்ளார்; சான்றாக, நீதிமொழிகள் 6:6-11.*

Δ
*"...பட்டினி கிடந்து மடிகிறவர்" –*
*OV, தன் சதையைத் தின்கிறவன்; OV, மூலச்சொற்களின்படியும், பொது மொழிபெயர்ப்பு (மேலும் NIV மற்றும் NLT), பொருளின் அடிப்படையிலும் உள்ளன.*

*வசனம் 4:6*
*பார்க்க, நீதிமொழிகள் 16:8. ஒப்பிடுக, நீதிமொழிகள் 30:7-9.*

*வசனம் 4:7-8*
*ஒப்பிடுக, 5:10; திருப்பாடல் 39:6; நீதிமொழிகள் 27:20.*
Δ
*தனிமை விரும்பிகள் வேறு, தனித்து வாழ்வோர் வேறு.*
*பைபிள் ஒருபோதும் தனித்து வாழ்வோரைக் குறித்துப் பேசவில்லை. தனித்திருப்பது நல்லதல்ல என்றே ஆதாமுக்கு ஏவா படைக்கப்பட்டார். குடும்பமாகவும், குமுகாயமாகவும், பின்னர் சபையாகவும் வாழும் வாழ்க்கையையே பைபிள் நெடுகிலும் வாசிக்கிறோம் – அதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

*ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவும் தம் விண்ணகத் தந்தையோடு தனித்துத் தியானிக்க விரும்பினார். எனவே, தனிமை விரும்பிகள், படிக்கவோ இறைமன்றாட்டுக்கோ தனிமையை நாடலாம். ஆனால் தனித்து வாழ*

*விரும்புவோர்? அத்தகையோரின் உழைப்பும் வாழ்க்கையும் பயனற்றது. ஒப்பிடுக, 2:18-21. இன்பம் துய்த்தலே உழைப்பின் பயன் என்பதை ஏற்கனவே வலியுறுத்தும் ஞானி, தானும் அனுபவிக்காமல், சேர்த்த செல்வத்தை விட்டுச் செல்ல எவரும் இல்லாத நிலையில், அவரின் உழைப்பும் செல்வமும் பயனற்றது என்கிறார்.*

*வசனம் 4:9-12*

*சேர்ந்து வாழ்ந்ததால் மட்டுமே மானுடம் முன்னேறுகிறது. தொழில்நுட்பத்திலும் தொழில் துறைகளிலும் வளர்ந்து பயன் விளைகிறது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!*

*துணையாளரால் விளையும் சில நன்மைகளை இங்கு ஞானி எடுத்துரைக்கிறார். உறவின் நெருக்கம் உலகின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ள உதவுகிறது; உள்ளத்தை இலேசாக்குகிறது. புறக்கணிப்பும் தனிமையும் தகர்க்கப்பட்டு, பாதுகாப்பு உணர்வு உண்டாகிறது.*

*வசனம் 4:11*

*எச்சரிக்கை: இங்குப் பாலின உறவு எதையும் ஞானி குறிப்பிடவில்லை. இது ஒரு பாலைநிலப் பயண அனுபவம் எனலாம். கடுமையான காலங்களில், தனித்திருப்பதைவிடத் துணைக்கு ஒருவரோ சிலரோ இருப்பது, ஆறுதலையும் ஆற்றலையும் தரக் கூடியது. சேர்ந்து செயல்படுவதன் மூலம் கடினமான வேலைகளையும் எளிதாகச் செய்யலாம். ஆபத்து நேரிடின் இணைந்து அதனை மேற்கொள்ளலாம். பராமரிப்புப் பணிகளைப் பகிர்ந்து கொள்ளலாம். சேர்ந்து செயல்படுவது பாதுகாப்பு உணர்வைத் தரும்.*

*வசனம் 4:13-16*

*ஒருவர் அடையும் பெருமையும் புகழ்ச்சியும் அவர் மீது தங்கியிருப்பதில்லை என்பதை ஞானி சுட்டிக் காட்டுகிறார்.*

*வசனம் 4:13*

*அறிவுரை கேளாத முட்டாள் அரசன் ஆகாப், 1 அரசர்கள் 22:8.*

*விவேகமுள்ள இளைஞர் யோசேப்பு, தொடக்க நூல் 37:2.*

Δ

*ஒன்றை விட ஒன்று மேல் என்று சொல்லும் ஒப்பீட்டு அறிவுரைகள், நீதிமொழிகள் நூலில் சாலமோன் கடைப்பிடித்த ஓர் உத்தி (பார்க்க, நீதிமொழிகள் 16:19 மற்றும் குறிப்பு). அதே உத்தியில் அமைந்த திருமொழிகள், பார்க்க, 2:24, 3:22, 4:3,6,9&13, 5:5, 6:3,9&11, 7:1,2,3,5,8&10, 8:15, 9:4,16&18, 10:11.*

*வசனம் 4:14*

*ஆளுநராக அரியணை ஏறிய கைதி, தொடக்க நூல் 41:37-44.*

Δ

*இளவரசர்களில் ஒருவன் அரசனாக அரியணையில் அமரும் போது, மற்ற இளவரசர்கள் அனைவரும் அரண்மனைகளைத் துறப்பர்; நாட்டை விட்டு வெளியேறும் நிலையோ, உயிர்விடும் நிலையோ நேரிடும்.*

*வசனம் 4:15-16*

*அரியணையில் அமர்ந்தோரை அதிகார அமைப்பில் இருப்போரும், மக்களும் பாராட்டி மகிழ்வர். அரியணை போகும்போது, பாராட்டுகளும் பறிபோகும். புதிதாக ஓர் அரசர் வந்த பிறகு, முன்னவர் செய்த நன்மைகளை எவரும் நினைவுகூர்வதில்லை. இவ்வாறு, ஒருவர் பெறும் பாராட்டுகளும் பயனற்றவையே, நிலையற்றவையே என்கிறார் ஞானி.*

✝

# 21 சபை உரையாளர் 05

## (கவனத்தோடு கடவுளை அணுகுதல்)

*1 கடவுளின் கோவிலுக்குச் செல்லும்போது விழிப்புடனிரு. மதிகேடரைப்போலப் பலிசெலுத்துவதை விட, உள்ளே சென்று கேட்டறிவதே மேல். ஏனெனில், அவர்கள் தாங்கள் செய்த தீவினைகளை உணர்வதில்லை.*

*2 கடவுள் முன்னிலையில்*
*சிந்தித்துப் பாராமல்*
*எதையும் பேசாதே;*
*எண்ணிப் பாராமல்*
*வாக்குக் கொடுக்காதே.*
*கடவுள் விண்ணுலகில் இருக்கிறார்;*
*நீயோ மண்ணுலகில் இருக்கிறாய்;*
*எனவே, மிகச்சில சொற்களே சொல்.*
*3 கவலை மிகுமானால் கனவுகள் வரும்;*
*சொல் மிகுமானால் மூடத்தனம் வெளியாகும்.*
*4 கடவுளுக்கு நீ ஏதாவதொரு வாக்குக்*
*கொடுத்திருந்தால்,*
*அதை நிறைவேற்றுவதில் காலந்தாழ்த்தாதே.*
*ஏனெனில், பொறுப்பின்றி நடப்போரிடம்*
*அவர் விருப்பங்கொள்வதில்லை.*
*என்ன வாக்குக் கொடுத்தாயோ*
*அதைத் தவறாமல் நிறைவேற்று.*
*5 கொடுத்த வாக்கை நிறைவேற்றாமற்*
*போவதைவிட,*
*வாக்குக் கொடாமல் இருப்பதே மேல்.*

*6 வாய் தவறிப் பேசிப் பழிக்கு ஆளாகாதபடி பார்த்துக்கொள்; தவறுதலாய்ச் செய்துவிட்டேன் என்று வானதூதரிடம் சொல்லும்படி நடந்துகொள்ளாதே. உன் பேச்சின் பொருட்டுக் கடவுள் உன்மீது சினங்கொண்டு, நீ செய்தவற்றை அழிக்கும்படி நடந்துகொள்வானேன்?*

*7 கனவுகள் பல வரலாம்; செயல்களும் சொற்களும்
எத்தனையோ இருக்கலாம்.
நீயோ கடவுளுக்கு அஞ்சி நட.*

## *(நீதியற்ற ஆளுகை)*

*8 ஒரு மாநிலத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுவதையும்
அவர்களுக்கு நீதி நியாயம்
வழங்கப்படாதிருப்பதையும் நீ காண்பாயானால்
வியப்படையாதே. ஏனெனில்,
அலுவலர்களுக்குமேல் அதிகாரிகள் உள்ளனர்
என்றும், அவர்களுக்கும் மேலதிகாரிகள் உள்ளனர்
என்றும் சொல்வார்கள்.
9 "பொதுநலம்", "நாட்டுத் தொண்டு" என்ற
சொற்களும் உன் காதில் விழும்.*

## *(நிறைவு தராச் செல்வம்)*

*10 பண ஆசை உள்ளவருக்கு
எவ்வளவு பணம் இருந்தாலும்
ஆவல் தீராது; செல்வத்தின்மேல்
மிகுந்த ஆசை வைப்பவர்
அதனால் பயனடையாமற்போகிறார்.
இதுவும் வீணே.*

## *(பயனற்ற மிகைச் செல்வம்)*

*11 சொத்து பெருகினால்
அதைச் சுரண்டித் தின்போரின்
எண்ணிக்கையும் பெருகும்.
செல்வர்களுக்குத் தங்கள் சொத்தைக்
கண்ணால் பார்ப்பதைத் தவிர
வேறு என்ன பயன் உண்டு?
12 வேலை செய்கிறவரிடம்
போதுமான சாப்பாடு இருக்கலாம்
அல்லது இல்லாதிருக்கலாம்;
ஆனால் அவருக்கு*

*நல்ல தூக்கமாவது இருக்கும்.*
*செல்வரது செல்வப் பெருக்கே*
*அவரைத் தூங்கவிடாது.*

## *(துன்பம் தரும் செல்வம்)*

*13 உலகில் ஒரு பெருந்தீங்கை நான் கண்டேன்.*
*ஒருவர் சேமிக்கும் செல்வம்*
*அவருக்குத் துன்பத்தையே விளைவிக்கும்.*
*14 ஒருவர் ஒரு நட்டம் தரும் தொழிலில் ஈடுபட்டுத்*
*தம் செல்வத்தை இழக்கிறார்.*
*அவருக்கு ஒரு பிள்ளை உள்ளது.*
*ஆனால் அப்பிள்ளைக்குக் கொடுப்பதற்கோ*
*ஒன்றுமில்லை.*
*15 மனிதர் தாயின் வயிற்றிலிருந்து*
*வெற்றுடம்போடு வருகின்றனர்;*
*வருவது போலவே*
*இவ்வுலகை விட்டுப் போகின்றனர்.*
*அவர் தம் உழைப்பினால் ஈட்டும் பயன்*
*எதையும் தம்மோடு எடுத்துச் செல்வதில்லை.*

*16 இது கொடிய தீங்காகும்.*
*அவர் எப்படி வந்தாரோ*
*அப்படியே மீளுகிறார்;*
*காற்றைப் பிடிக்கப் பாடுபடுகிறார்.*
*17 அவர் அடையும் பயன் என்ன?*
*வாழ்நாள் முழுவதும்*
*இருள், கவலை, பிணி, எரிச்சல், துன்பம்.*

## *(செல்வத்தை அருளுபவர் கடவுளே)*

*18 ஆகையால், நான் இந்த முடிவுக்கு வந்தேன்; தமக்குக் கடவுள் வரையறுத்திருக்கும் குறுகிய வாழ்நாளில் மனிதர் உண்டு குடித்து, உலகில் தம் உழைப்பின் பயனைத் துய்ப்பதே நலம்; அதுவே தகுந்ததுமாகும்.*

*19 கடவுள் ஒருவருக்குப் பெருஞ்செல்வமும் நல்வாழ்வும் கொடுத்து, அவற்றை அவர் துய்த்து மகிழும் வாய்ப்பையும் அளிப்பாரானால், அவர் நன்றியோடு தம் உழைப்பின் பயனை நுகர்ந்து இன்புறலாம். அது அவருக்குக் கடவுள் அருளும் நன்கொடை.*
*20 தம் வாழ்நாள் குறுகியதாயிருப்பதைப்பற்றி அவர் கவலைப்படமாட்டார். ஏனெனில் கடவுள் அவர் உள்ளத்தை மகிழ்ச்சியோடிருக்கச் செய்கிறார்.*

*சபை உரையாளர் 5:1-20*

## சிந்தனைக்கு

*வசனம் 5:1-7*
*திருக்கோவிலுக்குச்* ***"செல்"****லுவதில் விழிப்புணர்வோடு இருப்பதில் தொடங்கி, கடவுளுக்கு அஞ்சி* ***"நட"*** *என முடியும் பகுதி. சொல்லுக்கும் செயலுக்கும் இடையே இருக்கும் வேறுபாடுகளை ஆய்ந்து களைய நம்மை அழைக்கும் திருமொழிகள்.* ***சாட்சி சொல்வதற்கும், சாட்சியாக வாழ்வதற்கும் இடையே இருக்கக்கூடிய முரண்களைக் களையத் தூண்டும் பகுதி.***

*"மதத்தைக் கடைப்பிடிக்கிறோம்" என்ற பெயரில் நேரிய உணர்வற்று, ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறதைக் கடைப்பிடிக்காமல் விட்டுவிட்டால், நமது விசுவாச வாழ்க்கை பயனற்றது என்று எச்சரிக்கிறார் சபை உரையாளர். பார்க்க, மத்தேயு 15:8-9, 23:2-33.*

*வசனம் 5:1*
*இறைப் பிரசன்னத்தை எவ்வளவு பயத்தோடும் தாழ்மையோடும் அணுக வேண்டும் என்பது குறித்த அறிவுரை, பார்க்க, விடுதலைப் பயணம் 3:5-6; 1*

*சாமுவேல் 15:22; திருப்பாடல் 50:8-9; நீதிமொழிகள் 15:8, 21:27; எசாயா 1:11-20; ஒசேயா 6:6. கீழ்ப்படிதல் இன்றிக் கேட்டறிய முடியாது.*

Δ

*"தொடங்குமுன் தொடங்குவதே பயனுள்ள, ஏற்புடைய இறைவழிபாடு" (அலெக்சாண்டர் மெக்லரென்). ஓய்வுநாள் வழிபாட்டுக்கு முந்தைய நாளில் ஆயத்த ஆராதனை நடத்தும் வழக்கம் இப்போது கடைப்பிடிக்கப்படுகிறதா என்று தெரியவில்லை. ஆனால், வழிபாட்டுக்கு வரும் ஒவ்வொருவரும் அதற்குரிய ஆயத்தத்தோடு கோவிலுக்குள் நுழைய வேண்டும்.*

*வசனம் 5:2*

*பார்க்க, நீதிமொழிகள் 20:25 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்பு.*

*நமது காணிக்கை மன்றாட்டில் இடம்பெறும் ஒரு வாசகம்: "உம்மிடத்தில் வாங்கி உமக்கே கொடுக்கிறோம்"; நாம் எதைக் கொடுப்பதை ஆண்டவர் விரும்புகிறார்?* ***நிச்சயமாகவே, நீதியுள்ள அவர், நமது நீதியுள்ள செயல்களை விரும்புகிறார்; அவற்றின் வழியே, விண்ணரசு இந்த மண்ணில் கட்டப்படுவதை அவர் விரும்புகிறார்; அதற்காகவே அவர் நம் ஒவ்வொருவரையும் அழைத்தும் இருக்கிறார்.***

*அப்படி அழைக்கப்பட்ட நாம், அந்த அழைப்பை உதாசீனப்படுத்திவிட்டு, நன்றிக் காணிக்கை, ஸ்தோத்திரக் காணிக்கை என்றும், பொருத்தனை செய்தும், காணிக்கை படைப்பது எந்த அளவுக்கு அவருக்கு உவப்பளிக்கும்? நமது காணிக்கைகளில், சாட்சிகளில் மகிமைப்படுவது யார்?*

Δ

*அதிலும், காணிக்கையாகவும், பொருத்தனையாகவும் கடவுளுக்குப் பணத்தையும் பொருளையும் செலுத்த ஊக்குவிக்கும் சபைகளைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். ஊழியத்திற்குப் பணமும் பொருளும்*

*தேவையே; ஆனால் அதனிலும் தேவை: ஊழியர்கள். ஆண்டவரின் அங்கலாய்ப்பு – "அறுப்பு மிகுதி; ஆட்களோ கொஞ்சம்" என்பதே.* ***ஊழியம் சபைகளை எழுப்ப வேண்டும்; சபைகள் ஊழியங்களை எழுப்ப வேண்டும்.***

*வசனம் 5:3*
*சொற்களின் மிகுதி, பார்க்க, நீதிமொழிகள் 10:19. கிறிஸ்து இயேசுவின் அருள்மொழி, மத்தேயு 5:37.*
*பாகாலின் பொய்வாக்கினரின் வழிபாட்டுக்கும், எலியாவின் மெய்வழிபாட்டுக்கும் (1 அரசர்கள் 18:25-38) இடையே உள்ள உண்மையை நாம் உணரவேண்டும். கிறிஸ்து இயேசுவின் வழிகாட்டுதல், மத்தேயு 6:7-8.*
Δ
*கனவுகள் –*
*வ.3 எதிர் வ.7.*
*நினைவில் கொள்க, யோசேப்பின் கனவுகள் மற்றும் கனவுகளின் பொருளை வெளிப்படுத்த அவருக்கு அருளப்பட்ட ஆற்றல்.*

*சோம்பேறி காண்பது பகல் கனவு; துயருற்ற உள்ளத்தின் உளைச்சலால் வருவது அச்சமூட்டும் கனவு; இடர்களுக்கு இடையே ஆண்டவருக்கு அர்ப்பணித்து வாழும் வாழ்க்கையில் வருவது – வெளிப்பாடுகள் தந்து ஆற்றுப்படுத்தும் கனவு.*

*வசனம் 5:4-5*
*பார்க்க, எண்ணிக்கை 30:2; இணைச் சட்டம் 23:21-23; திருப்பாடல் 50:14, 66:13-14, 76:11. மேலும் பார்க்க, வ.1 மற்றும் குறிப்பு.*

*வசனம் 5:5*
*ஒப்பிடுக, திருத்தூதர் பணிகள் 5:4.*
*நமது வாழ்வின் ஆதாரங்களைக் கடவுளே நமக்கு அருளுகிறார் எனினும், அதை நமது உரிமையாகவே அருளுகிறார். நமது உரிமையே ஆயினும், அதற்கு*

*நாம் கணக்குக் கொடுக்கக் கடன்பட்டவர்கள் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.*

*வசனம் 5:6*
*ஒப்பிடுக, நீதிமொழிகள் 6:2.*

Δ

*"...வானதூதர்..." –*
*OV, தூதன்; மூல மொழியில், mal-awk / மலாக்; கடவுள் அனுப்பிய தூதர் என்று பொருள்படும் எனினும், இறைவாக்கினர், குரு, ஆசான் என்றும் பொருள்படும்.*

*வசனம் 5:7*
*பார்க்க, 12:13 மற்றும் குறிப்பு.*

*வசனம் 5:8 ~ 6:9*
*வாழ்வில் சந்திக்க நேரிடும் நிலைகளைச் சுருக்கமாக எடுத்து வைத்து, அவற்றின் நிலையற்ற தன்மைகளை சபை உரையாளர் வெளிப்படுத்தும் பகுதி.*

*வசனம் 5:8*
*பார்க்க, 3:16 மற்றும் குறிப்பு; மேலும் பார்க்க, திருப்பாடல் 12:5, 58:11, 82:1.*

Δ

*"...வியப்படையாதே" –*
*நெறிமுறைகளைக் கடைப்பிடித்து, கடவுளுக்கு அஞ்சி வாழத் தலைப்படும் ஒருவர், நெறியற்ற சமுதாயத்தைக் கண்டு வியப்படைய வேண்டாம் என்று சபை உரையாளர் அறிவுறுத்துகிறார். உள்ளத்தில் பேராசை வீற்றிருக்கும் வரை, இந்த உலகம் நீதியற்றதாகவே இருக்கும். உள்ளங்களைக் குறித்த எச்சரிப்பு, 7:20, 9:3.*

*வசனம் 5:9*
*"'பொது நலம்', 'நாட்டுத் தொண்டு' என்ற சொற்களும் உன் காதில் விழும்" –*
*மொழிபெயர்ப்புச் சிக்கலுள்ள ஒரு வசனம்.*

*<u>OV</u>, பூமியில் விளையும் பலன் யாவருக்குமுரியது, ராஜாவும் வயலின் பலனால் ஆதரிக்கப்படுகிறான்.*
*<u>KJV</u>, "Moreover the profit of the earth is for all: the king himself is served by the field."*
*<u>ESV</u>, "But this is gain for a land in every way: a king committed to cultivated fields."*
*<u>NIV</u>, "The increase from the land is taken by all; the king himself profits from the fields."*
*<u>NRSV</u>, "But all things considered, this is an advantage for a land: a king for a plowed field."*
*<u>Septuagint</u>, "He that loves silver shall not be satisfied with silver: and who loved gain, in the abundance thereof? This is also vanity."*

Δ

*"'பொது நலம்', 'நாட்டுத் தொண்டு' என்ற சொற்களும் உன் காதில் விழும்" –*
*இன்றைக்கு மனித உரிமைகளுக்கு எதிராகச் செயல்படுவோர் எழுப்பும், ஈர்ப்புடைய வெற்று முழக்கங்கள்.*

*வசனம் 5:10 ~ 6:6*
*வறுமையின் வாட்டத்தை அல்லாமல், செல்வத்தைத் தொடர்ந்து வரும் துயரைப் பேசும், உலகின் அன்றைய பெரும் செல்வந்தரான சபை உரையாளர். செல்வமும் வாழ்வும் குறித்த சிறியதோர் அருளுரை! இரண்டும் நிலையற்றவை என்பதே இதன் சாரம்!*

*வசனம் 5:10-20*
*செல்வம் சேர்த்தலின் பயனற்ற நிலை – ஏனெனில்:*
* செல்வம் சேர்த்தல் முடிவற்றது, வ.10*
* செல்வத்தோடு சேரும் கூட்டம், வ.11*
* செல்வம் காத்தல் எனும் தொல்லை, வ.11*
* சேர்த்த செல்வம் என்ன ஆகுமோ எனும் கவலை, வ.12*
* இழப்பிலிருந்து மீள்தல் அரிது, வ.14*
* மொத்த இழப்பையும் கொணரும் சாவு, வ.15*

எனவே அளவான செல்வமும் நிறைவான வாழ்வுமே சிறப்பு, நீதிமொழிகள் 30:7-9.

வசனம் 5:10
செல்வத்தில் நிறைவடையாத மனம், 4:8. மேலும் பார்க்க, யோபு 20:20; திருப்பாடல் 52:7; பவுலடிகளின் அறிவுரை, பிலிப்பியர் 4:11-12; 1 திமொத்தேயு 6:8-9.

தங்கள் குறுகிய வாழ்நாளைச் செல்வத்தைத் தேடிச் சேர்ப்பதிலேயே செலவிட்டு, வாழ்வின் நலன்களைச் சுவைக்காமல் மாயும் மனிதர். கிறிஸ்து இயேசுவின் எச்சரிக்கை, லூக்கா 12:15.

வசனம் 5:11-12
ஒப்பிடுக, 6:1-2.

வசனம் 5:11
செல்வம் சேரத் தேடி வந்து சேரும் உறவுகள், யோபு 42:11. இது எந்த அளவுக்கு ஒருவருக்கு நலம் பயக்கும்?

வசனம் 5:12
தூக்கத்தைத் துரத்தும் செல்வம்!
மேலும் மேலும் செல்வத்தைச் சேர்க்கும் வழிகளைக் கண்டறிய வேண்டும்; சேரும் செல்வம் சேதாரம் ஆகாமல் காக்க வேண்டும்; இந்தக் கேள்விகளும் கவலைகளும் ஒருவரின் தூக்கத்தை விரட்டி விடுகின்றன. விண்ணரசில் செல்வங்களைச் சேர்க்க அழைக்கும் கிறிஸ்து இயேசு, மத்தேயு 6:19-20.

வசனம் 5:13-14
பார்க்க, யோபு 5:5; திருப்பாடல் 109:9-12.
இஸ்ரயேல் நாட்டின் நிலம், யாக்கோபின் வழிமரபுகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டது; வழிவழியாக வருவது; அதனை ஒருவர் இழப்பது என்பது கடவுளின் ஆசியை இழப்பது போன்றது. இதற்காகவே மீட்பின் ஆண்டாகிய யூபிலி ஆண்டில்,

*ஒருவர் இழந்த நிலம் அவருக்கே மீண்டும் வந்து சேரும் (லேவியர் 25:8-13). ஆனால் தனது சொத்தை இழந்து, மகனை நிலமற்றவனாக விட்டுச் செல்லும் தந்தையின் துயர் எத்தகையது? (நீதிமொழிகள் 11:29).*

Δ

*முயன்று பாடுபட்டுச் செல்வம் சேர்த்தல் எவ்வளவு உறுதியோ, அவ்வளவு உறுதி செல்வத்தின் இழப்பு! சேர்த்த செல்வம் எவ்வளவு இருந்தாலும், அதை விட்டுவிட்டுத்தான் ஒருவர் இவ்வுலகை விட்டுப் போக முடியும்! (வ.15)*

*வசனம் 5:13*

*அமைதியின்மையை மட்டுமன்றி, துயரங்களையும் தரும் செல்வம். சேர்த்து வாசிக்க, வ.17. ஆதலால், பயனை நுகர்ந்து இன்புற, ஆண்டவர் அருளினால் மட்டுமே ஆகும், வ.18-20.*

*வசனம் 5:14*

*"...நட்டம் தரும் தொழில்..." –*

*இழப்பை நாடி எவரும் ஒரு தொழிலில் ஈடுபடுவதில்லை. தொழில் இழப்பு நேரிடப் பல புறக்காரணிகள் இருக்கலாம். அரசின் பணமதிப்பிழப்பாலும், புதிய வரிக் கொள்கையாலும், தொற்றுநோய் முழு அடைப்பாலும், கோயம்புத்தூர், திருப்பூர் போன்ற நகர்களில், பல ஆண்டுகளாகச் சிறப்பாகத் தொழில் செய்தவரும், சில மாதங்களில் வீதிக்கு வந்ததுண்டு. இதே காலத்தில், ஆள்வோரின் கடைக்கண் பார்வையைப் பெற்ற சமூகத்தினர், அரசின் சார்புநிலையைப் பயன்படுத்திக்கொண்டு, நாடெங்கும் வளம் கொழிக்க வாழ்கின்றனர். தொழில் வளர்ச்சி என்பது முயற்சி மற்றும் உழைப்பு சார்ந்ததாக மட்டும் இன்று இல்லை.*

*வசனம் 5:15*

*வெறும் கையனாக வந்து, வெறும் கையனாக இறத்தல் எனும் உலகளாவிய உண்மை, யோபு 1:21;*

*திருப்பாடல் 49:17; 1 திமொத்தேயு 6:7. கிறிஸ்து இயேசுவின் எச்சரிக்கை, லூக்கா 12:15-21.*

*வசனம் 5:16-17*
*உழைப்பும் வீணே, 1:3, 4:4-6; திருப்பாடல் 127:2.*

*வசனம் 5:18*
*உண்டு குடித்துக் களித்தலே உழைப்பின் பயன், 2:3&10, 3:13&22. நாம் கடைப்பிடிக்க வேண்டிய, இதற்கு மாறான பவுலடிகளின் அறிவுரை, 1 திமொத்தேயு 6:17.*

*வசனம் 5:19*
*பார்க்க, 2:24 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 3:12-13, 6:2; 1 குறிப்பேடு 29:12; யோபு 31:2.*

*வசனம் 5:20*
*வாழும் காலத்தில், உழைப்பின் பயனில் உள்ளத்திற்கு மகிழ்ச்சி அருளும் கடவுள், இணைச் சட்டம் 12:7.*

Δ

*உள்ளத்தில் மகிழ்ச்சி –*
*பார்க்க, 2:10&26, 9:7, 10:19.*
*செயல்களில் மகிழ்ச்சி, 2:1-2&10, 11:9.*

✝

# 21 சபை உரையாளர் 06

## (மனநிறைவு தராச் செல்வம்)

*1 உலகில் மனிதரைக் கவலையில் ஆழ்த்திக்கொண்டிருக்கும் ஒரு தீங்கைக் கண்டேன்.*
*2 கடவுள் ஒருவருக்குச் செல்வத்தையும் நல்வாழ்வையும் மேன்மையையும் கொடுக்கிறார். ஆம், அவர் விரும்புவதெல்லாம் அவருக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றைத் துய்க்கவோ கடவுள் அவருக்கு வாய்ப்பளிப்பதில்லை. அடுத்தவர் ஒருவர் அவற்றைத் துய்த்து மகிழ்கிறார். இங்கே பயனின்மையும் கடுந்துயரமும் காணப்படுகின்றன.*

## (மனநிறைவு தராக் குழந்தைகள்)

*3 ஒருவருக்கு நூறு பிள்ளைகள் இருக்கலாம். அவர் நீண்ட ஆயுளுடனும் வாழலாம். அவர் நெடுங்காலம் உயிரோடிருந்தும், தமக்குள்ள செல்வத்தால் இன்பம் அடையாமலும், இறந்தபின் அடக்கம் செய்யப்படாமலும் மறைவாரானால், அவரைவிடக் கருச்சிதைந்த பிண்டமே மேல் என்கிறேன்.*
*4 அப்பிண்டம் தோன்றுவதால் பயனில்லை. அது இருளில் மறைகிறது; அதன் பெயரை இருள் மூடிவிடும்.*
*5 அது கதிரவனைக் கண்டதுமில்லை; எதையும் அறிந்ததுமில்லை. ஆனால் அதன் நிலை அவருடையதை விட மேலானது.*
*6 வாழ்கையில் இன்பம் துய்க்காமல் இரண்டாயிரம் ஆண்டுகள் உயிர் வாழும் மனிதர் கூட அதைவிட மேலானவர் இல்லை. ஏனெனில், இருவரும் ஒரே இடத்திற்கு செல்கின்றனர் அல்லவா?*

## (மனநிறைவு தரா உழைப்பு)

*7 வயிற்றுக்காகவே*

*ஒருவர் வேலை செய்கிறார்;*
*ஆனால் அவருக்குப் போதுமான*
*உணவு கிடைப்பதில்லை.*
*8 இப்படியிருக்க, மதிகேடரைவிட*
*ஞானமுள்ளவர் எவ்வகையில் மேலானவர்?*
*அல்லது ஏழை ஒருவருக்கு*
*மனிதர்முன் திறமையுடன் நடந்துகொள்ளத்*
*தெரிந்திருந்தும்,*
*அதனால் அவருக்குப் பயனென்ன?*

## *(மனநிறைவு தரா எதிர்காலம்)*

*9 இல்லாத ஒன்றை அடைய விரும்பி*
*அலைந்து திரிவதைவிட*
*உள்ளதே போதும் என்ற*
*மனநிறைவோடிருப்பதே மேல்.*
*ஆனால், இதுவும் வீணே;*
*காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.*

*10 இப்பொழுது நடக்கும் ஒவ்வொன்றும்*
*நெடுங்காலத்திற்கு முன்பே*
*முடிவு செய்யப்பட்டதாகும்.*
*மனிதர் யாரென்று நமக்குத் தெரியும்.*
*தம்மைவிட வலிமை வாய்ந்தவருடன்*
*வாதாட அவரால் இயலாது.*
*11 பேச்சு நீள நீள,*
*அதன் பயன்*
*குறைந்துகொண்டே போகும்.*
*அதனால் மனிதர் அடையும் நன்மை என்ன?*

*12 மனிதருடைய வாழ்நாள் குறுகியது; பயனற்றது;*
*நிழலைப்போல மறைவது.*
*அதில் தமக்கு நலமானது எது என்பதை யாரால்*
*அறியக் கூடும்? தம் மறைவிற்குப் பிறகு உலகில்*
*என்ன நடக்கும் என்பதை யாரால் தெரிந்து கொள்ள*
*இயலும்?*

*சபை உரையாளர் 6:1-12*

## சிந்தனைக்கு

*வசனம் 6:1-6*
*பாடுபட்டுச் செல்வம் சேர்த்ததை நுகர்ந்து இன்புறாமல் இறப்பவரை, உயிரற்ற பிண்டத்தோடு ஒப்பிடும் ஞானி.*

*நிலத்தை வாங்கித் தரிசாக விடுதல், வீடுகளைக் கட்டிப் பூட்டி வைத்தல், வாகனங்களை வாங்கி வரிசையில் நிறுத்துதல், பணக்கட்டுகளைப் படுக்கைக்கு அடியில் அடுக்குதல், பொருட்களை வாங்கிப் பரணில் ஏற்றுதல் – இன்னும் இவ்வாறெல்லாம் தன் குறுகிய வாழ்காலத்தில் பாடுபட்டுப் பெற்றவற்றை, அனுபவிக்க முடியாத ஒருவன், கருச்சிதைந்த பிண்டத்தை விடக் கீழானவன் என்கிறார் ஞானி.*

*வசனம் 6:1*
*பார்க்க, 5:13.*

*வசனம் 6:2-3*
*ஒருவருடைய செழிப்பின் அடையாளங்களான, செல்வம், புகழ், குழந்தைகளோடு நீண்ட ஆயுள் – எல்லாம் இருந்தும், அவற்றின் இன்பங்களைப் பெறாத மனிதனை ஞானி இங்கு குறிப்பிடுகிறார்.*

*வசனம் 6:2*
*பார்க்க, 2:21-22. மேலும் பார்க்க 5:19 மற்றும் குறிப்பு.*
Δ
*"அடுத்தவர் ஒருவர் அவற்றைத் துய்த்து மகிழ்கிறார்" – சான்றாக, திருடு போன அல்லது போரில் கொள்ளையிடப்பட்ட செல்வங்கள், அவற்றைச் சேர்த்தவர்க்கு எந்தப் பயனையும் தராது போகின்றன.*

*வசனம் 6:3*
*ஒருவருடைய இறப்பு எவ்வளவு சிறப்பாக அமைகிறது என்பதே அவர் வாழ்ந்த வாழ்க்கையை*

*விளக்குகிறது. கேவலமான ஓர் இறப்பை எதிர்கொள்ளும் ஒருவரைவிடச் சிதைந்து பிறந்த பிண்டம் மேலானது; ஏனெனில் இந்த உலகில் அவர் வாழ்ந்த வாழ்க்கையே பயனற்றுப் போகிறது.*

Δ

*இறந்த பின் அடக்கம் செய்யப்படாமல் போகும் இழிநிலை, 2 அரசர்கள் 9:35; அதுவே ஒரு சாபமாக, இணைச் சட்டம் 28:25-26; 1 அரசர்கள் 14:10-11; எசாயா 14:19-20; எரேமியா 16:4, 22:19.*

Δ

*கருச்சிதைந்த பிண்டம், ஒப்பிடுக, 4:3; மேலும் பார்க்க, யோபு 3:16; திருப்பாடல் 58:8.*

*வசனம் 6:4-6*

*ஒப்பிடுக, 2:14-15*

Δ

*ஒரே இடம் –*

*பார்க்க, 3:20.*

*ஈராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து நூற்றுக் கணக்கில் பிள்ளைகளைப் பெற்ற இன்பம் துய்க்காத ஒருவரையும், ஒரு நாள்கூட வாழ வாய்ப்பின்றிப் பிறந்த ஒரு பிண்டத்தையும், ஒப்பிட்டு, இருவரும் போகும் இடம் படுகுழியே என்கிறார் சபை உரையாளர்.*

*வசனம் 6:7*

*உழைக்கத் தூண்டும் வயிறு, பார்க்க, நீதிமொழிகள் 16:26.*

*வசனம் 6:8*

*பயனற்ற செல்வம் போலவே, பயனற்றுப் போகும் ஞானத்தைக் குறித்து வினா எழுப்பும் சபை உரையாளர்! ஞானமுள்ளவர் தனது ஞானத்தின் வழியில் செயல்படாமல், வேறு வழியில் செயல்பட அல்லது செயலற்று இருக்க நேரிடுகிறது. இவ்வாறு ஞானம் பயனற்றுப் போகிறது.*

*வசனம் 6:9*

*கற்பனைகளைக் கனவுகளாக்கி அவற்றைப் பிடிக்கப் பறக்கும் வெறியோடு வாழும் வாழ்க்கையை சபை உரையாளர் குறிப்பிடுகிறார்.*

*வசனம் 6:10 ~ 7:14*

*ஒப்பீட்டுத் திருமொழிகள் நிறைந்த ஒரு பகுதி. வாழ்க்கையில் சிறந்தவைகளைத் தெரிந்து கொள்ள, வாழ்வின் நிகழ்வுகளின் வழியே நம்மை அழைத்துச் செல்லும் ஒரு பகுதி.*

*வசனம் 6:10*

*"இப்பொழுது நடக்கும் ஒவ்வொன்றும் நெடுங்காலத்திற்கு முன்பே முடிவு செய்யப்பட்டதாகும்" –*

*ஒப்பிடுக, 1:9-11, 3:15 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, யோவான் 17:24; 1 கொரிந்தியர் 2:7; எபேசியர் 1:4; 1 பேதுரு 1:20.*

Δ

*"...வலிமை வாய்ந்தவருடன் வாதாட..." –*

*பார்க்க, யோபு 9:1-4&32, 40:3-5, 42:1-6; எசாயா 45:9; எரேமியா 49:19.*

Δ

*"தம்மைவிட வலிமை வாய்ந்தவருடன் வாதாட அவரால் இயலாது" –*

*<u>OV</u>, "தன்னிலும் பலத்தவரோடே போராட அவனால் கூடாது";*

*<u>KJV</u>, "neither may he contend with him that is mightier than he";*

*<u>ESV</u>, "and that he is not able to dispute with one stronger than he";*

*- மூலச்சொல், deen, doon / டீன், டூன்; to rule எனப் பொருள்படும்; மேலும், to judge / to strive / to execute / to contend / to plead என்றும் பொருள்கொள்ளலாம்.*

*வசனம் 6:11-12*

*பார்க்க, 3:21-22.*

*மூன்று கேள்விகள்! அவற்றுள், 'யார் அறிவார்' என்பது நான்கு முறை (2:19, 3:21, 6:12, 8:1) இந்த நூலில் எழுப்பப்படும் கேள்வி! இதற்கு மறுமொழி போல, இந்த நூலில், 'மனிதர் அறியார்' எனும் மறுமொழி ஏழுமுறை இடம்பெற்றுள்ளது (3:11, 7:14, 8:17, 9:1,12&15, 10:14).*

*வசனம் 6:11*
*"பேச்சு நீள நீள..." –*
*<u>OV</u>, "பெருகப் பண்ணுகிற அநேக விசேஷங்கள்;"*
*<u>KJV</u>, "many things that increase;"*
*<u>ESV</u>, "the more words;"*
*<u>Septuagint</u>, "many things that increase;"*
*எபிரேயத்தில், daw-bawr / டாபார்; word / thing / act / matter / chronicle / nothing / commandment என்றெல்லாம் பொருள்கொள்ளப்பட்டுள்ளது. OV, KJV போன்றவை, செப்டுவஜிண்டு வழியில் பொருள்கொண்டுள்ளன.*

*வசனம் 6:12*
*ஒப்பிடுக, 3:22.*
*செப்டுவஜிண்டு பைபிளில் இந்த வசனம் அடுத்த அதிகாரத்தின் முதல் வசனமாக உள்ளது.*
Δ
*"நிழலைப் போல மறைவது" –*
*பார்க்க, திருப்பாடல் 39:6, 102:11; யாக்கோபு 4:14.*
Δ
*"...தமக்கு நலமானது எது என்பதை யாரால் அறியக் கூடும்?" –*
*சாவின் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வி.*

*வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மில் பலரும் அவரவர் நம்பிக்கையின் அடிப்படையில், இந்தக் கேள்விக்கு மறுமொழி தரக்கூடும். ஆனால் அது சரியாக இருக்குமா?*

*சந்தேகத்தை விதைப்பது இந்தக் கேள்வியின் நோக்கம் அல்ல; நமது காலங்கள் கடவுளுடைய*

*கரத்தில் இருக்கின்றன என்பது மட்டுமல்ல, நம் ஒவ்வொருவரின் மறுமையும் அவருடைய கரத்தில்தான் இருக்கின்றன. நிழல்போல நகரும் நமது வாழ்வில், நாம் செய்யக்கூடியது இதுதான்: அது அவருக்குக் கீழ்ப்படிதலும், அஞ்சி நடப்பதுமே! (12:13-14)*

✝

# 21 சபை உரையாளர் 07

## (எதிரெதிர் நிலையில் ஞானமும் மதிகேடும்)

*1 விலை உயர்ந்த நறுமணத் தைலத்தைவிட
நற்புகழே மேல்.
பிறந்த நாளைவிட
இறக்கும் நாளே சிறந்தது.
2 விருந்து நடக்கும் வீட்டிற்குச் செல்வதைவிடத்
துக்க வீட்டிற்குச் செல்வதே நல்லது.
ஏனெனில், அனைவருக்கும் இதுவே முடிவு
என்பதை
உயிருடன் இருப்போர் அங்கே உணர்ந்துகொள்வர்.
3 சிரிப்பைவிடத் துயரமே நல்லது.
துயரத்தால் முகத்தில் வருத்தம் தோன்றலாம்;
ஆனால், அது உள்ளத்தைப் பண்படுத்தும்.
4 ஞானமுள்ளவரின் உள்ளத்தில்
துக்க வீட்டின் நினைவே இருக்கும்;
மூடரின் உள்ளத்திலோ
சிற்றின்ப வீட்டின் நினைவே இருக்கும்.*

*5 மூடர் புகழ்ந்துரைப்பதைக் கேட்பதினும்
ஞானி இடித்துரைப்பதைக் கேட்பதே நன்று.
6 மூடரின் சிரிப்பு,
பானையின்கீழ் எரியும் முட்செடி
படபடவென்று வெடிப்பதைப் போன்றது;
அதனால் பயன் ஒன்றுமில்லை.
7 இடுக்கண் ஞானியையும் பைத்தியக்காரனாக்கும்;
கைக்கூலி உள்ளத்தைக் கறைப்படுத்தும்.*

*8 ஒன்றின் தொடக்கமல்ல,
அதன் முடிவே கவனிக்கத் தக்கது;
உள்ளத்தில் பெருமைகொள்வதைவிடப்
பொறுமையோடு இருப்பதே மேல்.
9 உள்ளத்தில் வன்மத்திற்கு இடங்கொடாதே;
மூடரின் நெஞ்சமே வன்மத்திற்கு உறைவிடம்.*

*10 "இக்காலத்தைவிட*
*முற்காலம் நற்காலமாயிருந்ததேன்?"*
*என்று கேட்காதே;*
*இது அறிவுடையோர் கேட்கும் கேள்வியல்ல.*
*11 மரபுரிமைச் சொத்தோடு*
*ஞானம் சேர்ந்திருத்தல் வேண்டும்;*
*இதுவே உலகில் வாழும்*
*மக்களுக்கு நல்லது.*
*12 பணம் நிழல் தருவதுபோல*
*ஞானமும் நிழல் தரும்;*
*ஞானம் உள்ளவருக்கு அதனால் வாழ்வு கிடைக்கும்;*
*அறிவினால் கிடைக்கும் பயன் இதுவே.*

*13 கடவுளின் செயலைச் சிந்தித்துப்பார்.*
*அவர் கோணலாக்கினதை நேராக்க*
*யாரால் இயலும்?*
*14 வாழ்க்கை இன்பமாய் இருக்கும்போது*
*மகிழ்ச்சியோடிரு;*
*துன்பம் வரும்போது*
*நீ நினைவில்கொள்ள வேண்டியது:*
*'அடுத்து என்ன நடக்கும் என்பதை*
*நீ தெரிந்துகொள்ளாவண்ணம்,*
*கடவுள் இன்பத்தையும் துன்பத்தையும்*
*மாறி மாறி வரவிடுகிறார்.'*

## *(தீவிரம் தணிக்கும் ஞானம்)*

*15 என் பயனற்ற வாழ்க்கையில்*
*நான் எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன்:*
*நேர்மையானவர்*
*நேர்மையுள்ளவராய் இருந்தும்*
*மாண்டழிகிறார்.*
*தீயவரோ*
*தீமை செய்கிறவராய் இருந்தும்*
*நெடுங்காலம் வாழ்கிறார்.*

*16 நேர்மையாய் நடப்பதிலும்*

*ஞானத்தைப் பெறுவதிலும்*
*வெறி கொண்டவராய் இராதீர்.*
*அந்த வெறியால்*
*உம்மையே அழித்துக்கொள்வானேன்?*
*17 தீமை செய்வதிலும் மூடராயிருப்பதிலும்*
*வெறி கொண்டவராய் இராதீர்.*
*காலம் வருமுன் நீவிர்*
*ஏன் சாகவேண்டும்?*
*18 ஒன்றைப் பற்றிக்கொண்டிருக்கும்போது,*
*அதற்கு மாறானதைக் கைவிட்டுவிடாதீர்.*
*நீவிர் கடவுளுக்கு அஞ்சி நடப்பீரானால்*
*அனைத்திலும் வெற்றி பெறுவீர்.*

## *(ஞானத்தின் வலிமை)*

*19 ஒரு நகருக்குப்*
*பத்து ஆட்சியாளர் தரும்*
*வலிமையைவிட,*
*ஞானமுள்ளவருக்கு ஞானம்*
*மிகுதியான வலிமை தரும்.*

*20 குற்றமே செய்யாமல்*
*நல்லதையே செய்யும் நேர்மையானவர்*
*உலகில் இல்லை.*

*21 பிறர் கூறுவதையெல்லாம்*
*காதுகொடுத்துக் கேட்காதீர்.*
*அவ்வாறு செய்தால்*
*உம் வேலைக்காரர்*
*உம்மை இகழ்ந்ததையும்*
*நீவிர் கேட்க நேரிடும்.*
*22 நீவிர் எத்தனைமுறை*
*பிறரை இகழ்ந்தீர் என்பது*
*உமக்கே நன்றாய்த் தெரியும்.*

*23 இவற்றையெல்லாம்*
*என் ஞானத்தால்*

*சீர்தூக்கிப் பார்த்தேன்.*
*நான் ஞானியாகிவிடுவேன்*
*என்று நினைத்தேன்.*
*24 ஆனால், என்னால் இயலாமற் போயிற்று.*
*ஞானம் நெடுந்தொலையில் உள்ளது;*
*மிக மிக ஆழமானது.*
*அதை யாரால் கண்டுபிடிக்க முடியும்?*
*25 நான் ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.*
*ஞானத்தையும்*
*காரண காரியத்தையும் பற்றிய*
*விபரத்தை ஆராய்ந்து காண்பதில்*
*சிந்தனையைச் செலுத்தினேன்.*
*கொடியவராயிருத்தல்*
*மூடத்தனம் என்பதையும்*
*மதிகேடரைப்போலச் செயல்புரிதல்*
*அறிவுகெட்ட நடத்தை என்பதையும்*
*தெரிந்துகொண்டேன்.*

*26 சாவைவிடக் கசப்பானதொன்றைக் கண்டேன்.*
*அதுதான் பெண்.*
*அவள் உனக்குக் காட்டும் அன்பு*
*ஒரு கண்ணியைப் போல*
*அல்லது ஒரு வலையைப் போல*
*உன்னைச் சிக்க வைக்கும்;*
*உன்னைச் சுற்றிப் பிடிக்கும்.*
*அவளின் கைகள்*
*சங்கிலியைப்போல*
*உன்னை இறுக்கும்.*
*கடவுளுக்கு உகந்தவனே*
*அவளிடமிருந்து தப்புவான்.*
*பாவியோ அவளின் கையில் அகப்படுவான்.*
*27 "ஆம், நான் ஒன்றன்பின் ஒன்றாய்*
*ஆராய்ந்து இதைக் கண்டுபிடித்தேன்"*
*என்கிறார் சபை உரையாளர்.*
*வேறு ஆராய்ச்சிகளும் செய்தேன்;*
*அவற்றால் மிகுந்த பயன் அடையவில்லை.*
*28 ஆனால் ஒன்று தெரிந்தது.*

*மனிதன் எனத் தக்கவன்*
*ஆயிரத்தில் ஒருவனே என்று கண்டேன்.*
*பெண் எனத் தக்கவள்*
*யாரையுமே நான் கண்டதில்லை.*

*29 நான் தெரிந்துகொண்டதெல்லாம் இதுவே.*
***கடவுள் மனிதரை நேர்மையுள்ளவராகவே படைத்தார்.***
***ஆனால் வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தும் மனிதர் தேடிக்கொண்டவையே.***

*சபை உரையாளர் 7:1-29*

## சிந்தனைக்கு

*வசனம் 7:1 ~ 10:20*
*ஞானத் திருமொழிகள்; ஞானமும் வீணே என்றுரைத்த சபை உரையாளரின் ஞானமிகு உரை.*

*வசனம் 7:1-4*
*சாவின் தொடர்பில் சபை உரையாளரின் சில மொழிகள்.*

*வசனம் 7:1அ*
*பார்க்க, நீதிமொழிகள் 22:1 மற்றும் அந்நூலின் வசனக் குறிப்பு.*
*நறுமணத் தைலம் வைக்கப்பட்ட அறையே அதன் நறுமணத்தால் நிறைந்திருக்கும்; அந்த அறையிலிருந்து தைலம் அகற்றப்பட்டாலும் அதன் நறுமணம் எளிதில் அகலாமல், கமழ்ந்து கொண்டே இருக்கும். அதனிலும் சிறந்தது புகழ்; ஒருவர் ஓரிடத்திற்கு வந்து சேருமுன்பே, அவர்தம் புகழ் அங்குப் பரவுகிறது. அவர் அங்கிருந்து அகன்ற பிறகும், அவருடைய புகழ் அங்கேயே தங்கி இருக்கிறது. புகழ் வீச்சின் எல்லை, நகராகவோ,*

*நாடாகவோ, உலகாகவோகூட இருக்கிறது. தோன்றின் புகழோடு தோன்றுக!*

*வசனம் 7:1ஆ*

*ஒப்பிடுக, 4:1-3 மற்றும் குறிப்புகள்.*

*பிறப்புக்குப் பிறகு நிச்சயமான ஒன்று, இறப்பு.*

*வாழ்தல் – சாதல் என்ற முரண் முடிவுக்கு வருவதே இறப்பு.*

*பிறக்கும் நாளில் அந்தச் சிசுவுக்குத் தனிப்பட்ட பெயரோ புகழோ இருப்பதில்லை; ஆனால் இறக்கும் நாளில், அவருடைய இலக்கும் நோக்கும் ஓட்டமும் முடிவுக்கு வருகிறது. இறந்தவருடைய வாழ்க்கை, வாழ்வோரின் முழுமையான மதிப்பீட்டிற்கு உள்ளாகிறது. அவரின் நலம் நாடியோரும், அவரால் பயன் பெற்றோரும் திரண்டு வருவதில், அவர் வாழ்ந்த வாழ்க்கையின் சிறப்பு வெளிப்படுகிறது.*

*அதிலும், நாமோ இறப்புக்குப் பிறகு இறைவரோடு இணைந்திருப்போம் என்ற எதிர்நோக்கில் வாழ்வோர், 2 கொரிந்தியர் 5:6-10 & பிலிப்பியர் 1:21-23; நிலை வாழ்வைப் பெற வாழும் நமக்கு, இறந்த நாளே சிறந்தது. "ஆட்டுக்குட்டியானவரின் உயிர்-நூலில் பெயர் எழுதப்படுதலே நமக்கு நற்பெயர்; இனிமையான தைலங்களில் சிறந்ததைவிடச் சிறந்தது அதுவே!" (ஸ்பர்ஜின்)*

Δ

*"குழந்தை பேசுமுன், அதற்கு வரவிருக்கும் துயரங்களை முன்னுரைப்பது போல, பிறந்தவுடன் வீரிட்டு அழுகிறது" (ஜான் டிரேப்). "குழந்தைக்குரிய திறன்களும் எதிர்நோக்குகளும் இருந்தாலும், அதன் கண்ணீர் ஒரு தீக்குறியாக அமைகிறது" (டேவிட் குஷிக்).*

*வசனம் 7:2அ*

*விருந்து நடக்கும் வீடும், துக்க வீடும் பகிர்வின் இடங்கள்: ஓரிடத்தில் உணவு பகிரப்படுகிறது, மற்றோரிடத்தில் துக்கம் பகிரப்படுகிறது. இரண்டும்*

அன்பின் அடிப்படையில் அமைந்தவையே. துக்கமடைந்தோர் துயர் குறைந்து ஆறுதல் அடைவதால் துக்க வீட்டிற்குச் செல்வதே நல்லது.

வசனம் 7:2ஆ
ஒப்பிடுக, திருப்பாடல் 90:12.

துக்க வீடு ஒருவருக்கு அறிவு தெளியும் இடம். வாழ்க்கையின் நிலையாமையை ஒருவரின் சாவு முரசறைந்து அறிவிக்கிறது. நாளும் நேரமும் குறித்துத் துல்லியமாக நாம் எத்தனையோ பெரும் செயல்களைச் செய்ய முடியும். ஆனால் சாவு ஒருவரின் கைகளில் இல்லை; எத்தனையோ தற்கொலை முயற்சிகள் தோல்வி அடைவதை நாம் அறிவோம்.

செயலைத் தள்ளிப் போடும் பழக்கம் எல்லாருக்கும் உண்டு; இன்றே, இப்போதே என்று சாவு ஒருவருக்கு உணர்த்துகிறது. எனவே சாவச்சம் செயலூக்கம் தருகிறது. சாவச்சம் இறையச்சத்தையும் தோற்றுவிக்கிறது. கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ வழிநடத்துகிறது.

வசனம் 7:3
துயரத்தை இரண்டாக வகைப்படுத்தி விளக்குகிறார் பவுலடிகள், 2 கொரிந்தியர் 7:10. சிரிப்பைவிட வருத்தம் நல்லது; அதனிலும் நல்லது, நல்விளைவுகளைத் தரும் வருத்தம்.

வசனம் 7:4
இருக்கும் இடத்தில் நிலைகொள்ளாமல், விரும்பும் இடத்திற்குப் பறக்கும் மூடரின் மனம்.

வசனம் 7:5
ஞானமுடையோரின் கண்டிப்பின் சிறப்பும், அதனால் அடையும் மேன்மையும், திருப்பாடல் 141:5-6; நீதிமொழிகள் 13:18, 15:31-32.

*வசனம் 7:6*
*பார்க்க, 2:2. முட்செடி ஒலியோடு எரியும்; ஆனால் அது தேவையான அளவுக்கு வெப்பம் தராது. அதுபோன்று, மகிழ்வூட்டாததுவே மூடரின் சிரிப்பு.*

*வசனம் 7:7*
*"இடுக்கண் ஞானியையும் பைத்தியக்காரனாக்கும்" – இன்ப துன்பங்கள் போன்ற உணர்வுகளைக் கடந்தவனே ஞானி. வாழ்க்கையின் அழுத்தங்களில் ஒருவன் பைத்தியமாவான் என்றால், அவன் ஞானியே அல்ல என்பது எனது தாழ்மையான கருத்து. மூலச்சொல் khaw-kawm / காகாம்; இதற்கு ஞானி என்று மட்டுமல்ல, cunning / unwise என்றும் பொருள் உண்டு (சான்றாக KJVல் பார்க்க, எசாயா 3:3).*

Δ

*கைக்கூலி –*
*OV, பரிதானம் (கையூட்டு).*
*கையூட்டு வாங்காதே என்பது இறைக்கட்டளை, விடுதலைப் பயணம் 23:8; இணைச் சட்டம் 16:19. மேலும் பார்க்க, நீதிமொழிகள் 15:27, 17:8&23; எசாயா 1:23. கூடுதல் விளக்கத்திற்கு, நீதிமொழிகள் 29:4ன் குறிப்பு பார்க்க.*

*வசனம் 7:8அ*
*ஒப்பிடுக, வ.1ஆ மற்றும் யோபு 8:7.*
*ஓர் இயக்கம் அல்லது ஒரு நிகழ்வு குறித்து இங்குச் சபை உரையாளர் பேசுகிறார். எந்த ஒன்றின் தொடக்கமும் அற்பமாக இருக்கும்; பின்னாளில் அதன் வளர்ச்சியோ, நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு பிரம்மாண்டமானதாக இருக்கும். மேலும், யாதொன்றும் அதன் எச்சத்தால் அறியப்படும்.*

*வசனம் 7:8ஆ*
*பொறுமையே சிறப்பு, பார்க்க, நீதிமொழிகள் 14:29; கலாத்தியர் 5:22; எபேசியர் 4:2*

*வசனம் 7:9*
*பார்க்க, நீதிமொழிகள் 14:17; யாக்கோபு 1:19.*
*சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள், திருப்பாடல் 4:4. பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும், எபேசியர் 4:26. ஆறுவது சினம்; வளர்வது வன்மம். எனவே சினம் வன்மமாக உள்ளத்துள் உறையவிடாமல் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.*

*வசனம் 7:10*
*"இக்காலத்தைவிட முற்காலம் நற்காலமாக இருந்ததேன்?" –*
*ஒப்பிடுக, 1:9, 3:15.*
*இது கடவுளுக்கு எதிரான முறையீடு. அதுவும் இன்றைய நாட்களில் நமது செவிகளில் அதிகமாக ஒலிப்பது!*

*இதற்கு யார் பொறுப்பு? குறைப்பட்டுக்கொள்ளும் நாம் ஒவ்வொருவரும்தானே! ஆண்டவர்தம் பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது அல்லவா! (திருப்பாடல் 89:2) மேலும் பார்க்க, திருப்பாடல்கள் 100:5; 103:17, 117:2; எசாயா 54:10; புலம்பல் 3:22.*

Δ

*மேலும் ஒப்பிடுக, யோபு 8:8-10, 15:7.*
*முந்தைய நாட்கள் நலமாக இருந்தமைக்கான ஆதாரம் என்ன? அது எந்த அளவுக்கு நம்பக்கூடியது? தானே தன்னைப் பற்றியும் தன் ஆட்சியைப் பற்றியும் செதுக்கி வைத்துக்கொண்ட கல்வெட்டுகளை இன்று ஒருவர் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? திரிபுறும் செவிவழிச் செய்திகளை ஏன் அப்படியே நம்ப வேண்டும்?*

Δ

***பழைமைவாதிகளாக வாழ்வது பிற்போக்கானது; பழைமையிலிருந்து கற்றுக்கொண்டு முன்னோக்கிய இலக்குகளை நோக்கி, நிகழ்காலத்தில் வாழ்வதே சிறப்பு!***

*வசனம் 7:11*

*ஞானத்தின் சிறப்பு, 2:13, 7:19, 9:18, 10:10. மேலும் பார்க்க, நீதிமொழிகள் 8:35 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்பு.*

Δ

*"மரபுரிமைச் சொத்தோடு ஞானம் சேர்ந்திருத்தல் வேண்டும்" –*

*2:18-23 வசனங்களில், சபை உரையாளர் வெளிப்படுத்திய கவலையின் நீட்சி; மதியற்றோர் செல்வத்தைக் காக்கும் வழிகளை அறியார்; இறையச்சமற்ற அவர்கள், கடவுளுக்கு ஏற்புடைய வழிகளில் செல்வத்தைச் செலவிட அறியார்.*

*வசனம் 7:12*

*பார்க்க, நீதிமொழிகள் 3:18 மற்றும் அந்நூலின் வசனக் குறிப்பு.*

Δ

*"நிழல்" –*

*OV, கேடகம்; KJV, defence; மூலச்சொல், tsale / ஷல்; நிழல், உருவகமாக, பாதுகாப்பு.*

*வசனம் 7:13*

*பார்க்க, 1:15; மேலும் பார்க்க, யோபு 12:14; எசாயா 40:4.*

Δ

*"கடவுளின் செயலைச் சிந்தித்துப் பார்" –*

*இது கடவுளின் படைப்பு தொடர்பான வசனம் அல்ல; பராமரிப்புச் செயல்பாட்டில் எழும் வசனம். பார்க்க, 3:11. இதன் தொடர்பில், ஒரு விளக்கமாக அடுத்த வசனம் உள்ளது.*

*வசனம் 7:13-14*

*ஒப்பிடுக, இணைச் சட்டம் 28:47.*

*கோணலானவை நேராக்கப்பட வேண்டும்; நலமான நாட்களில் ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்; துன்பமான நாட்களில், நம்மை நாமே சீர்தூக்கிப் பார்த்து, நன்மைகளின் உறைவிடமான கடவுளின்*

*நற்பண்புகளை நம் வாழ்வில் கடைப்பிடித்து, இறைத் திட்டம் நம் வாழ்வில் நிறைவேறக் காத்திருப்போம்.*

*வசனம் 7:15*
*இந்த வசனத்திற்கு ஒரு விளக்கத்தை, சபை உரையாளரே தருகிறார், 8:12-14. மேலும் பார்க்க, 3:16 ~ 4:3.*

*வசனம் 7:16-19*
*ஒப்பிடுக, எசாயா 59:14.*
*நேர்மையாக இருப்பதை அவ்வப்போது கைவிடவோ, வெறிகொண்டு கேடு விளைவிக்காமல், அளவாகக் கேடிழைக்கலாம் என்றோ சபை உரையாளர் சொல்வதாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அவரே 3:7ல் அறிவுறுத்துவது போல, வேளைக்கு ஏற்றவாறு, தங்கள் சுயநீதியைச் சார்ந்து செயல்படாமல், கடவுளைச் சார்ந்து செயல்பட அவர் அழைப்பதாக நாம் பொருள் கொள்ளலாம்.*

*வசனம் 7:16*
*விளக்கமாக ஓர் உவமை, பார்க்க, நீதிமொழிகள் 25:16; பவுலடிகள் தரும் விளக்கம், உரோமையர் 12:3; பிலிப்பியர் 3:6. மேலும், சாலமோனின் அனுபவம், 1:16-17. மேலும் பார்க்க, நீதிமொழிகள் 16:22.*

*வசனம் 7:17*
*தீயோரை விழுங்கக் காத்திருக்கும் தீங்கு, யோபு 15:20-34; மேலும் பார்க்க, திருப்பாடல் 55:23.*

*வசனம் 7:18*
*"ஒன்றைப் பற்றிக்கொண்டிருக்கும்போது, அதற்கு மாறானதைக் கைவிட்டுவிடாதீர்" –*
*மொழிபெயர்ப்புச் சிக்கலுள்ள ஒரு பகுதி. வ.15 முதல் 18 வரை உள்ள திருமொழிகளை ஒவ்வொரு திருப்புதலிலும் வாசிக்க இதில் உள்ள சிக்கல் விளங்கும்.*

*<u>OV</u>, "நீ இதைப் பற்றிக்கொள்வதும் அதைக் கைவிடாதிருப்பதும் நலம்."*
*<u>KJV</u>, "It is good that thou shouldest take hold of this; yea, also from this, withdraw not thine hand."*
*<u>ESV</u>, "It is good that you should take hold of this, and from that withhold not your hand."*
*<u>NET</u>, "It is best to take hold of one warning without letting go of the other warning;"*
*<u>Septuagint</u>, "It is well for thee to hold fast by this; also by this defile not thine hand."*

Δ

*"நீவிர் கடவுளுக்கு அஞ்சி நடப்பீரானால் ..." –*
*நூலின் வழியாக சாலமோன் வலியுறுத்தும் ஒழுக்கம், 3:14, 5:7, 8:12-13, 12:13.*

*வசனம் 7:19*
*விரிவாக, 9:13-18; மேலும் பார்க்க, நீதிமொழிகள் 21:22.*

*வசனம் 7:20*
*"குற்றமே செய்யாமல் நல்லதையே செய்யும் நேர்மையானவர் உலகில் இல்லை" என்பது, பைபிள் வலியுறுத்தும் கருதுகோள், 9:3; அவருடைய இறைமன்றாட்டில் அவரே ஏறெடுத்தது, 1 அரசர்கள் 8:46; 2 குறிப்பேடு 6:36. அரசர் தாவீதின் மொழிகளில், திருப்பாடல் 14:2-4, 143:2. மேலும் பார்க்க, நீதிமொழிகள் 20:9; உரோமையர் 3:23; 1 யோவான் 1:8.*

*வசனம் 7:23*
*தன்னைத் தானே ஞானி என்று நினைத்துக் கொள்ளுதல், உரோமையர் 1:22.*

*வசனம் 7:24*
*பார்க்க, உரோமையர் 11:33; மேலும் பார்க்க, யோபு 28:12&23-28; 1 கொரிந்தியர் 1:19-25, 2:4-8; 1 திமொத்தேயு 6:16.*

*தானே ஒரு ஞானியாக இருந்த போதிலும், எல்லைகளை அறியக் கூடாதபடி, ஆழ்ந்து, விரிந்து, பரந்த கடவுளின் ஞானத்தை வியந்து பார்க்கிறார், சபை உரையாளர்.*

*வசனம் 7:25*
*முதல் பகுதி, இணை, 1:17.*

*வசனம் 7:26-28*
*தீவிரம் தணித்து, ஞானமாக நடக்க அறிவுறுத்தும் சாலமோன் (வ.15-18), இங்கு படைப்பின் சமநிலையைக் குலைக்கும் ஒரு போக்கைக் கையாளுகிறார்.*

*தம் உருவில் மானிடரைப் படைத்த கடவுள், ஆணும் பெண்ணுமாகப் படைத்த கடவுள், முழுமையடைந்த தமது படைப்பை நலமென்று உறுதி செய்தார் (தொடக்க நூல் 1:27-31 & 5:1-2). ஆனால் இங்கு சாலமோன், தன்னோடு படைப்பனைத்தையும் ஆளுகை செய்யப் படைக்கப்பட்ட பெண்ணை, கசப்பு என்றும், தகுதியற்றவர் என்றும் இழிவு செய்து, ஓர் அரசராக அக்கூற்றை முத்திரையிடுகிறார் எனில், கடவுளுக்கு எதிராக அவதூறு செய்கிறார் என்று அவரை நாம் சொல்லலாம் அல்லவா?*

*ஆண் பெண் உறவில், சூறையாடும் வேட்கையோடு செயல்படுவது ஆணே! இது காலங்கள்தோறும் தொடரும் உண்மை; ஆணாகப் பிறக்கும் ஒவ்வொருவரின் இயல்பு இதுவே!*

*பெண்களை நுகர்வுப் பண்டமாகத் தன் வாழ்நாளில் பயன்படுத்திய ஞானி சாலமோனிடம் இதற்கு மாறான கூற்றை நாம் எதிர்பார்க்க முடியாது.*

*இத்தகைய இறைக்கோட்பாட்டுத் திரிபை சாலமோன் மட்டும் செய்யவில்லை; பெண்ணே*

*முதலில் பாவத்தில் விழுந்தார் என்று குறைப்படும் பவுலடிகளும் செய்கிறார் (1 திமொத்தேயு 2:13-14).*

*கடவுளின் கட்டளைக்கு எதிராக ஏவா தன் செவிகளைச் சாய்த்து, அதன்படியே செயல்பட முனைந்த போது ஆதாம் அதனை எதிர்க்கவில்லையே; மாறாக, அதற்கு அவர் இணங்கி நடக்கவில்லையா? அப்படியானால், விலக்கப்பட்ட கனியை உண்ண வேண்டும் என்ற இச்சை பெண்ணுக்குள் அப்போதுதான் விதைக்கப்பட்டது; ஆனால் அதற்கு முன்பே அந்த எண்ணம் கொண்டவராக ஆதாம் இருந்தார் என்று சொல்லலாம் அல்லவா!*

Δ

*சமநிலையில் படைக்கப்பட்ட பெண்ணைச் சமமென்று ஏற்றுக் கொள்வதற்கு எதிராக, ஆண் காலங்காலமாக ஏதேனும் சர்ச்சையை எழுப்புகிறான். அதற்கு எத்தகைய ஞானியும் விதிவிலக்கு அல்ல. சாலமோன் காலத்திய சமூகத்திலும், பெண்கள் எத்தகைய ஆளுமை கொண்டோராக இருந்தனர் என்பதை நீதிமொழிகள் நூலில் (31:10-31) பார்க்கிறோம். தகைசால் பெண்கள் சாலமோன் காலத்திற்கு முன்பே இருந்தனர் என்பதை பைபிளில் நாம் வாசிக்கிறோம். இந்தப் புரிதலோடு இந்த வசனங்களை வாசித்தல் நல்லது.*

*வசனம் 7:26*
*நீதிமொழிகள் நூலில் தான் சொல்லிய செய்தியை வலியுறுத்தும் சாலமோன், நீதிமொழிகள் 5:3-4. இதற்கு மாறாக, சாலமோனின் அறிவுரை, 9:9.*

*வசனம் 7:27*
*இணை, 1:1-2.*

*வசனம் 7:28*
*பார்க்க, நீதிமொழிகள் 20:6.*

*வசனம் 7:29*
*பார்க்க, 3:11; தொடக்க நூல் 1:27-31, 3:6-7.*
*படைப்பு நலமானது.*
*ஆனால், மானுட வாழ்வின் சிக்கல்கள் அனைத்தும் மனிதர் தேடிக்கொண்டவையே என்ற அறிக்கையோடு தனது உரையை சபை உரையாளர் முடிக்கிறார்.*

# 21 சபை உரையாளர் 08

*1 ஞானமுள்ளவருக்கு யார் நிகர்?
உலகில் காண்பவற்றின் உட்பொருளை
வேறு யாரால் அறிய இயலும்?
ஞானம் ஒருவன் முகத்தை ஒளிமயமாக்கும்;
அதிலுள்ள கடுகடுப்பை நீக்கும்.*

## *(அரசனுக்கு அடங்கி நட)*

*2 கடவுளின் பெயரால் நீ ஆணையிட்டுக் கூறியபடி,
அரசனுக்கு அடங்கி நட. அரசன் தான்
விரும்புகிறபடியெல்லாம் செய்பவன்.
3 எனவே, அவன் முன்னிலையிலிருந்து
பதற்றப்பட்டுப் போய்விடாதே. அவனை எதிர்த்துக்
கிளர்ச்சி செய்யாதே.
4 மன்னன் சொல்லுக்கு மறுசொல் இல்லை.
எனவே, "ஏன் இப்படிச் செய்கிறீர்?" என்று
அவனை யார் கேட்க முடியும்?
5 அவனது கட்டளைக்குக் கீழ்ப்படியும்வரை
உனக்குத் தீங்கு வராது.
அவன் சொல்வதைச் செய்வதற்குரிய
காலத்தையும் வழியையும் ஞானமுள்ளவன்
அறிவான்.
6 ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காலமுண்டு;
செய்யவேண்டிய முறையும் உண்டு.
ஆனால் அவல நிலையிலுள்ள மனிதனால்
என்ன செய்யமுடியும்?
7 ஏனெனில், வாழ்க்கையில் என்ன நடக்கும்
என்று அவனுக்குத் தெரியாது.
அது எப்படி நடக்கும் என்று
அவனுக்குச் சொல்வாருமில்லை.
காற்றை அடக்க
எவனாலும் இயலாது.
8 அதுபோல, தன் சாவு நாளைத்
தள்ளிப்போடவும் எவனாலும் இயலாது.*

*சாவெனும் போரினின்று*
*நம்மால் விலகமுடியாது;*
*பணம் கொடுத்தும் தப்ப முடியாது.*

## *(ஆய்ந்தறிய இயலாத கடவுளின் செயல்கள்)*

*9 உலகில் செய்யப்படும் செயல்கள் அனைத்தையும் பற்றிச் சிந்தனை செய்தபோது, இவற்றையெல்லாம் கண்டேன். ஒருவன்மேல் ஒருவன் அதிகாரம் செலுத்துவதால் துன்பம் விளைகிறது.*
*10 பொல்லார் மாண்டபின் அடக்கம் செய்யப்படுகின்றனர். அடக்கம் செய்தவர்கள் கல்லறைத் தோட்டத்திலிருந்து வீடு திரும்பி, அந்தப் பொல்லார் தீச்செயல் புரிந்த ஊரிலேயே அவர்களைப் பாராட்டிப் பேசுகிறார்கள். எல்லாம் வீணான செயலே.*
*11 மக்கள் தீமை செய்யத் துணிவதேன்? தீமை செய்வோருக்கு விரைவிலேயே தண்டனை அளிக்காததுதான் இதற்குக் காரணம்.*
*12 பாவி நூறு முறை தீமைசெய்து நெடுங்காலம் வாழ்ந்தாலும்,* ***கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்களே*** *நலமுடன் வாழ்வார்கள் என்பதை நான் அறிவேன். ஏனெனில், அவர்கள் அவருக்கு அஞ்சி நடக்கிறார்கள். ஆனால்,*
*13 தீயவர்கள் நலமுடன் வாழமாட்டார்கள்; நிழல் நீள்வதுபோல அவர்களது வாழ்நாள் நீளாது. ஏனெனில், அவர்கள் கடவுளுக்கு அஞ்சி நடப்பதில்லை.*
*14 வேறொரு பொருத்தமற்ற காரியமும் உலகத்தில் காணப்படுகிறது. சில வேளைகளில் பொல்லாருக்குரிய தண்டனை நல்லாருக்குக் கிடைக்கிறது. நல்லாருக்குரிய பயன் பொல்லாருக்குக் கிடைக்கிறது. இது பொருத்தமற்றது என்கிறேன்.*
*15 எனவே, மனிதர் களிப்புடனிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். உண்பதும் குடிப்பதும் களிப்பதுமேயன்றி, மனிதருக்கு உலகில் நலமானது வேறெதுவுமில்லை. உலகில் கடவுள் அவருக்கு*

*அருளும் வாழ்நாளில், அவரது உழைப்புக்குக் கிடைக்கும் நிலையான பயன் இதுவே.*
*16 நான் ஞானத்தை அடையவும் உலகில் நடப்பதை அறியவும் முயன்றபோது இதைக் கண்டதில்லை:*
*ஒருவர் அல்லும் பகலும் கண் விழித்திருந்து பார்த்தாலும், கடவுளின் செயலை அவரால் புரிந்துகொள்ள இயலாது.*
*17 மனிதர் எத்துணை முயன்றாலும் அவரால் அதைக் கண்டுகொள்ள இயலாது.*
*ஞானமுள்ளவர்கள் அது தங்களுக்குத் தெரியும் என்று சொல்லிக் கொள்ளலாம்.*
*ஆனால் அவர்களுக்கும் அது தெரியாது.*
*சபை உரையாளர் 8:1-17*

## சிந்தனைக்கு

*வசனம் 8:1*
*ஞானத்தின் விளைவு, நீதிமொழிகள் 4:8-9.*
Δ
*ஒளிரும் முகம், விடுதலைப் பயணம் 34:35; திருத்தூதர் பணிகள் 6:15. ஆரோனிய ஆசி, எண்ணிக்கை 6:25.*
*தமக்கு அஞ்சி, தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் அடியவருக்குக் கடவுள் அருளும் ஞானம், அவர்களுடைய உள்ளத்தைத் தெளிவித்து முகத்தை ஒளிர்விக்கும்.*

*வசனம் 8:2-5*
*மேலும் பார்க்க, உரோமையர் 13:1-7; தீத்து 3:1; 1 பேதுரு 2:13-14.*
*அரசனுக்கு அஞ்சி நடக்க வலியுறுத்தும் திருமொழிகள். நீதிமொழிகள் நூலில், திருமொழிகள் 24:21-22ல், ஆண்டவருக்கு மட்டுமல்லாமல் அரசனுக்கும் அஞ்சி நடக்கச் சுருக்கமாக உரைக்கப்பட்ட அறிவுரையை, இங்கு சபை உரையாளர் சாலமோன் விரிவாக எடுத்துரைக்கிறார்.*

**அதேவேளையில், கடவுளுக்கு எதிரான வழியில் ஆட்சி மன்றத்தில் இருப்போர் ஆணையிட்டால், நாம் மேம்பட்ட ஆணைக்கே கட்டுப்பட்டோராகச் செயல்படக் கடமைப்பட்டோர், திருத்தூதர் பணிகள் *4:18-20 & 5:29.***

Δ

*மக்களாட்சியின் காலத்தில் மக்களே தங்களை ஆள்வோரைத் தீர்மானிக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஆளவந்தோர் அடிமை செய்வோராக மாறிவிடுகின்றனர். அப்போது மக்கள் ஒடுக்குமுறைகளைச் சகித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பொறுமையோடு அடுத்த வாய்ப்பு வரக் காத்திருக்கின்றனர். விரிவான விளக்கம் பெறப் பார்க்க, நீதிமொழிகள் நூலுக்கு எழுதப்பட்ட குறிப்பு, 24:21-22 பகுதி.*

*வசனம் 8:2*

*"கடவுளின் பெயரால் நீ ஆணையிட்டுக் கூறியபடி…" – தலைமை மாறும்போது குடிகள் தங்கள் அரசப்பற்றைக் கடவுளின் பெயரால் ஆணையிட்டு அறிக்கையிடுவது அன்றைய வழக்கம், யோசுவா 1:16-18; 2 சாமுவேல் 5:1-2. மேலும் பார்க்க, விடுதலைப் பயணம் 22:11; 2 சாமுவேல் 21:7; 1 அரசர்கள் 2:42-43; 2 அரசர்கள் 11:17; எசேக்கியேல் 17:18.*

*கடவுளுக்குக் கட்டுப்படுவது போல, ஆள்வோருக்கும் மக்கள் அடங்கியே வாழ்கின்றனர்; ஆனால், இறை ஆற்றலுக்கு அஞ்சி ஆளுவோராகப் பசப்புவோரே மக்களைத் துன்புறுத்துவோராக இருக்க முடியும்.*

*வசனம் 8:3*

*இணை, 10:4.*

*உடல்மொழி மற்றும் நடத்தையின் வழியாக, ஆள்வோருக்கு அல்லது மேனிலை அலுவலருக்கு*

எதிர்ப்பை வெளிப்படுத்திவிடாமல் இருக்க எச்சரிக்கை.

வசனம் 8:4-5
ஆள்வோர்க்கு எதிராக வினா எழுப்பாதிருக்க அறிவுரை.
இதற்கு மாறாக, சவுல் அரசரைக் கேள்வி கேட்ட இறைவாக்கினர் சாமுவேல், 1 சாமுவேல் 13:11&13; தாவீது அரசரைக் கேள்வி கேட்ட யோவாபு, 2 சாமுவேல் 19:1-7, 24:3.
பெருங்கேடு ஏதும் நிகழாதிருக்க, ஏற்ற வகையில் கேள்வி எழுப்பப்பட வேண்டும்.

வசனம் 8:6-8
மீண்டும் மனித வாழ்வின் நிலையாமையை குறித்த சபை உரையாளரின் அங்கலாய்ப்பு.

வசனம் 8:6
பார்க்க, 3:1,11&17 மற்றும் குறிப்புகள்.

வசனம் 8:7
ஒருவருடைய எதிர்ப்பு உணர்வினால் நேரிடக் கூடிய கேடு, 6:12; நீதிமொழிகள் 24:22.

வசனம் 8:8
பார்க்க, திருப்பாடல் 49:7.
ஒவ்வொருவரின் வாழ்விலும் தவிர்க்க முடியாத ஒன்று சாவு; இருப்பினும், போருக்குச் செல்வோருள் எதிர்பாராத சாவைத் தவிர்க்க ஏற்படுத்தப்பட்ட விதிவிலக்குகள், இணைச் சட்டம் 20:5-8.

வசனம் 8:9
ஒப்பிடுக, 4:1 மற்றும் குறிப்பு. கிறிஸ்து இயேசு நமக்குக் காட்டும் வாழ்வியல் முறை, மத்தேயு 20:25-27. ஆலய ஆயர்களுக்கான நடைமுறைக் குறிப்புரை, 1 பேதுரு 5:2-3.

*துன்பம் விளைவது ஒருவர் மீது ஒருவர் அதிகாரம் செலுத்த முயலும்போது என்று சபை உரையாளர் முடிவு செய்து அறிவிக்கிறார்.*

*ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும் வரை துன்பம் இல்லை. ஆனால் அதே அன்பின் பெயரால் ஆதிக்கம் செலுத்த முயலும்போது, விரிசலும் துன்பமும் விளைகிறது. சமுதாய அளவிலும், விதிகளுக்கு உட்பட்டு ஆளுகை செய்வதில் சிக்கல் ஏதும் வருவதில்லை; ஆனால் அதுவே அதிகாரமிக்க ஆளுகையாக மாறும்போது, அடக்குமுறையிலும் துன்புறுத்தலிலும் முடிகிறது.*

*வசனம் 8:10*
*"பொல்லார் மாண்டபின் அடக்கம் செய்யப்படுகின்றனர். அடக்கம் செய்தவர்கள் கல்லறைத் தோட்டத்திலிருந்து வீடு திரும்பி அந்தப் பொல்லார் தீச்செயல் புரிந்த ஊரிலேயே அவர்களைப் பாராட்டிப் பேசுகிறார்கள். எல்லாம் வீணான செயலே" –*
*இணைத்து வாசித்து அறிக:*
*<u>OV</u>, "பரிசுத்த ஸ்தலத்துக்குப் போக்குவரவு செய்த துன்மார்க்கர் அடக்கம்பண்ணப்பட்டதைக் கண்டேன், அவர்கள் அப்படி செய்துவந்த பட்டணத்திலேயே மறக்கப்பட்டுப்போனார்கள், இதுவும் மாயையே."*
*<u>KJV</u>, "And so I saw the wicked buried, who had come and gone from the place of the holy, and they were forgotten in the city where they had so done: this (is) also vanity."*
*<u>ESV</u>, "Then I saw the wicked buried. They used to go in and out of the holy place and were praised in the city where they had done such things. This also is vanity."*
*<u>NIV</u>, "Then too, I saw the wicked buried—those who used to come and go from the holy place and receive praise in the city where they did this. This too is meaningless."*

*<u>NRSV</u>, "Then I saw the wicked buried; they used to go in and out of the holy place, and were praised in the city where they had done such things."*
*<u>Septuagint</u>, "And then I saw the ungodly carried in to the tombs, and that out of the holy place: and they departed, and were praised in the city, because they had done thus: this also is vanity."*
*<u>Living Bible</u>, "I have seen wicked men buried and as their friends returned from the cemetery, having forgotten all the dead man's evil deeds, these men were praised in the very city where they had committed their crimes!"*

Δ

*மதிப்புமிகு சவ அடக்கமே பொல்லாருக்குத் தகாதது என்ற தொனி இந்த வசனத்தில் இருப்பது நோக்கத் தக்கது (பார்க்க, 6:3 மற்றும் குறிப்பு). மேலும் பார்க்க, யோபு எழுப்பும் கேள்வி, யோபு 21:28-33.*

Δ

*மறக்கப்படும் இறந்தோர், 2:16, 9:5.*

Δ

*"... அந்தப் பொல்லார் தீச்செயல் புரிந்த ஊரிலேயே, அவர்களைப் பாராட்டிப் பேசுகிறார்கள்" –*
*இறப்புக்குப் பிறகு பொல்லாரும் பாராட்டப் பெறுவது இவ்வுலகில் நாம் காணும் ஒரு முரண். தீயோர் சாகும்போது, அவர்கள் செய்த **ஏதாவது சில** நல்ல செயல்களைச் சொல்லி அவர்களைப் பாராட்டுவது ஓர் உலகவழக்கு. அவ்வாறு இந்த உலகோர் செய்வதைச் சபை உரையாளர் வியந்து பார்க்கிறார்.*

*சாவுக்குப் பிறகு இங்கு வாழ்வோரால் பொல்லாரும் பாராட்டப்படுவார்கள் எனில், நல்லோராகவே வாழ்வோர், தங்கள் சாவில் அடையும் வேறு சிறப்புதான் என்ன!*

*வசனம் 8:11*
*அரசராக சாலமோன் இஸ்ரயேலின் தலைமை நீதிபதி; தனது ஆட்சியில் மட்டுமல்லாமல்*

*உலகெங்கும் நீதி வழங்கல் இருக்கும் அன்றைய நிலையை இங்கு குறிப்பிடுகிறார்.*

*இந்த நிலை இன்றைக்கு இன்னும் மோசமாகி உள்ளதை நாம் காண்கிறோம். விசாரணை நீதிமன்றம், உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வழியாக ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்க 18 ஆண்டுகள் ஆனது; அதற்கு முன்னரே, அந்த வழக்கின் முதல் குற்றவாளி, மீண்டும் 11 ஆண்டுகள் அதே மாநில முதலமைச்சராக இருந்து இறந்து போகிறார்! என்னே நீதி!*

*இதுபோன்ற தாமதங்களைத் தவிர்க்க, விரைவு விசாரணை நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் நீதி -இல்லையில்லை- தீர்ப்பு விரைவாக வருகிறதா?*

Δ

*கடவுள், கருணை மிக்கவர்; அருள் நிறைந்தவர்; பொல்லார் தங்கள் வழிகளை விட்டு விலகி நேரிய வழிக்கு வர, அவர் பொறுமையோடு இருக்கிறார், எசாயா 26:10.*

*ஆண்டவர் செய்யும் தாமதத்தைப் பொல்லார் தங்களுக்கான அங்கீகாரமாகக் கொண்டு, இந்தச் சமுதாயத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள். திருந்தி வாழக் கொடுக்கப்பட்ட காலம் கடந்தும் அவர்கள் சற்றும் பயமற்றுத் தங்கள் பொல்லாத வழிகளில் தொடரும்போது, அவர்களைக் கடவுள் நியாயம் தீர்க்கிறார், திருப்பாடல் 50:21. ஆக எந்த வகையில் பார்த்தாலும், இந்த உலகில், பொல்லாருக்கான தீர்ப்பு தாமதமாகிறது; நீதி பின்னாகத் தள்ளப்படுகிறது.*

*வசனம் 8:12-14*

*நல்லோருக்கு மண்ணில் வாக்களிக்கப்பட்ட நெடுவாழ்வு, இணைச் சட்டம் 4:40; திருப்பாடல் 37:11&18-19; நீதிமொழிகள் 1:33; எசாயா 3:10; மத்தேயு 25:34&41. ஆனால் சபை உரையாளர் காணும்*

*வாழ்வில், தகுதியற்ற விதத்தில், நல்லாரின் பயன் பொல்லாருக்குப் போகிறது, வ.14.*

*வசனம் 8:12-13*
*இரண்டு வசனங்களில் மும்முறை சொல்லப்படும் இறையச்சம்; மேலும் பார்க்க, 3:14, 5:7, 7:18, 12:13.*
*Δ*
*நல்லோரின் நலவாழ்வு, எசாயா 65:20; உரோமையர் 2:5-7.*

*வசனம் 8:14*
*நல்லாருக்குக் கிடைக்கும் பொருத்தமற்ற பயன்கள், 2:14, 3:16-22, 7:15, 9:1-3; திருப்பாடல் 73:13-14. யோபு எழுப்பிய விவாதத்தில், இந்த வசனம் எழுப்பும் கேள்வி விரிவாகப் பேசப்பட்டதை நாம் வாசிக்க முடியும், யோபு 21 ~ 24.*

*வசனம் 8:15*
*உண்டு குடித்துக் களித்தலே வாழ்வின் நலம் என்ற முடிவுக்கு மீண்டும் வரும் சபை உரையாளர், 2:24, 5:18-19.*

*வசனம் 8:16-17*
*கடந்த காலங்களின் பல்வேறு எண்ண ஓட்டங்களின் ஊடே கடவுளின் செயல்களை ஆய்ந்து பார்த்தும் அவற்றின் உட்பொருளைக் கண்டறிய முடியாது என்ற முடிவுக்கு வரும் சபை உரையாளர், 1:13, 3:10-11, 7:25&29, 11:5. மேலும் பார்க்க, யோபு 5:9.*

*"கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது!*
*அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை!*
*அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை!*
*அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை!"*
*(உரோமையர் 11:33)*

*மேலும், "மறைவானவை நம் கடவுளாகிய ஆண்டவருக்கு உரியவை. வெளிப்படுத்தப்பட்டவையோ, இத்திருச்சட்டத்தின் வார்த்தைகளைக் கடைப்பிடிக்குமாறு, நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவை."*
*(இணைச் சட்டம் 29:29)*

✝

# 21 சபை உரையாளர் 09

## (பிறந்த அனைவருக்கும் பொதுவானது சாவு)

1 இவையனைத்தையும் ஆழ்ந்து எண்ணிப்பார்த்தேன். நல்லாரும் ஞானமுள்ளவர்களும் செய்வதெல்லாம், - அவர்கள் அன்புகொள்வதும் பகைப்பதும்கூட- கடவுளின் கையிலேதான் இருக்கிறது. இனி வரப்போவது என்ன என்பது யாருக்கும் தெரியாது.
2 விதித்துள்ளபடிதான்
எல்லாருக்கும் எல்லாம் நேரிடும்.
நேர்மையானவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும்,
நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும்,
மாசற்றவர்களுக்கும் மாசுள்ளவர்களுக்கும்,
பலி செலுத்துகிறவர்களுக்கும் பலி
செலுத்தாதவர்களுக்கும்,
விதித்துள்ளபடிதான் நேரிடும்.
பொல்லார்க்கு நேரிடும் விதிப்படியே
நல்லார்க்கும் நேரிடும்.
நேர்ந்து கொள்ளத் தயங்குகிறவருக்கு நேரிடும்
விதிப்படியே,
நேர்ந்து கொள்ளுகிறவருக்கும் நேரிடும்.
3 விதித்துள்ளபடிதான் எல்லாருக்கும் நேரிடும். இதுவே உலகில் நடக்கிற அனைத்திலும் காணப்படுகிற தீமை. மேலும், மக்கள் உள்ளங்களில் தீமை நிறைந்திருக்கிறது. அவர்கள் உயிரோடிருக்கும் வரையில், அவர்கள் மனத்தில் மூடத்தனம் இருக்கிறது. திடீரென்று அவர்கள் இறந்து போகிறார்கள்.
4 ஆயினும், ஒருவன் உயிரோடிருக்கும் வரையில் நம்பிக்கைக்கு இடமுண்டு. செத்துப்போன சிங்கத்தைவிட உயிருள்ள நாயே மேல்.
5 ஆம், உயிருள்ளோர்
தாம் இறப்பது திண்ணம் என்பதையாவது அறிவர்;
ஆனால், இறந்தோரோ எதையும் அறியார்.
அவர்களுக்கு இனிமேல் பயன் எதுவும் கிடையாது;

*அவர்கள் அறவே மறக்கப்படுவார்கள்.*
*6 அவர்களுக்கு அன்பு, பகைமை, பொறாமை எதுவும் இல்லை.*
*இப்பரந்த உலகில் நடக்கும் எதிலும் அவர்கள் பங்கெடுக்கப் போவதில்லை.*

## (வாழ்க்கை கையிலிருக்கும்போதே அனுபவி)

*7 ஆகவே, நீ நன்றாய்ச் சாப்பிடு;*
*களிப்புடனிரு;*
*திராட்சை இரசம் அருந்தி மகிழ்ச்சியுடனிரு;*
*தயங்காதே.*
*இவை கடவுளுக்கு உடன்பாடு.*
*8 எப்போதும் நல்லாடை உடுத்து.*
*தலையில் நறுமணத் தைலம் தடவிக்கொள்.*
*9 இவ்வுலக வாழ்க்கை வீணெனினும், உனக்குக் கிடைத்துள்ள வாழ்நாள் முழுதும், நீ உன் அன்பு மனைவியோடு இன்புற்றிரு. ஏனெனில், உன் வாழ்நாளில் உலகில் நீ படும்பாட்டிற்கு ஈடாகக் கிடைப்பது இதுவே.*
*10 நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய்; அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய். ஏனெனில், நீ நெருங்கிக் கொண்டிருக்கும் பாதாளத்தில், எவரும் செயல்புரிவதுமில்லை; சிந்தனை செய்வதுமில்லை; அறிவு பெறுவதுமில்லை; அங்கே ஞானமுமில்லை.*

*11 உலகில் வேறொன்றையும் கண்டேன்:*
*ஓட்டப் பந்தயத்தில் விரைவாக ஓடுபவரே வெற்றி பெறுவார் என்பதில்லை.*
*வலிமை வாய்ந்தவரே போரில் வெற்றி அடைவார் என்பதில்லை.*
*ஞானமுள்ளவருக்கு வேலை கிடைக்கும் என்பதில்லை.*
*அறிவுள்ளவரே செல்வம் சேர்ப்பார் என்பதில்லை.*
*திறமையுடையரே பதவியில் உயர்வார் என்பதில்லை.*

*எவருக்கும் வேளையும் வாய்ப்பும் செம்மையாய் அமையவேண்டும்.*
*12 தமக்குத் துன்பவேளை எப்போது வருமென்று ஒருவருக்கும் தெரியாது.*
*வலையில் அகப்படும் மீன்களைப் போலவும்,*
*கண்ணியில் சிக்கும் பறவைகளைப் போலவும்*
*அவர் சிக்கிக்கொள்வார்.*
*எதிர்பாராத வகையில் அவருக்குக் கேடு காலம் வரும்.*

## *(வெற்றி தரும் ஞானம்)*

*13 நான் கண்ட வேறொன்றும் உண்டு:*
*இவ்வுலகில் ஞானம் எவ்வாறு மதிக்கப்படுகிறது என்பதை, அது நன்கு எடுத்துக்காட்டுகிறது.*
*14 சிறிய நகர் ஒன்று இருந்தது. அதில் இருந்த மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. வலிமை வாய்ந்த மன்னன் ஒருவன், அதன்மேல் படையெடுத்து வந்தான்; அதை முற்றுகையிட்டுத் தாக்கினான்.*
*15 அந்நகரில் ஞானமுள்ளவன் ஒருவன் இருந்தான். ஆனால் அவன் ஓர் ஏழை. அவன் தன் ஞானத்தால் நகரைக் காப்பாற்றியிருக்கக்கூடும். ஆயினும், அவனைப் பற்றி எவரும் நினைக்கவில்லை.*
*16 வலிமையைவிட ஞானமே சிறந்தது என்பதே என் கருத்து.*
*அந்த ஏழையின் ஞானம் புறக்கணிக்கப்பட்டது;*
*அவன் சொல்லை எவரும் கவனிக்கவில்லை.*
*17 மூடர்கள் கூட்டத்தில்*
*அதன் தலைவன் முழக்கம் செய்வதைக் கேட்பதைவிட,*
*ஞானமுள்ளவர் அடக்கமுடன் கூறுவதைக் கேட்பதே நன்று.*
*18 போர்க் கருவிகளைவிட ஞானமே சிறந்தது.*
*ஆனால் ஒரே ஒரு தவறு,*
*நன்மைகள் பலவற்றைக் கெடுத்துவிடும்.*

*சபை உரையாளர் 9:1-18*

## சிந்தனைக்கு

*வசனம் 9:1-6*
*திருமொழி 8:14ல் முன்வைத்த கருத்தை, சபை உரையாளர் இங்கு இன்னும் விரிவாகப் பேசுகிறார்.*

*வசனம் 9:1*
*"... அனைத்தும் கடவுளின் கையில் ..." –*
*பார்க்க, இணைச் சட்டம் 33:3; யோபு 12:10.*
*பொறுமை மிகுந்தவரும் பதறித் தவறு செய்ய நேரிடும். ஞானம்மிக்கவரும் நெருக்கடியான நிலையில், தவறான முடிவு எடுக்கக்கூடும். எனவே மாண்பமை மாந்தரின் முடிவுகள் கூட, கடவுளின் கையிலேதான் இருக்கின்றன.*

*வசனம் 9:2*
*பொது மொழிபெயர்ப்பில், இந்த ஒரு வசனத்தில், "விதிப்படி" / "விதித்துள்ளபடி" என்ற சொல் நான்கு முறை இடம்பெறுகிறது. அடுத்த வசனத்திலும் "விதித்துள்ளபடிதான்" என்பது மேலும் ஒரு முறை இடம்பெற்றுள்ளது. (மொத்த பைபிளிலும் Fate என்ற சொற் பயன்பாடு குறித்து சில புகழ்பெற்ற மொழிபெயர்ப்புகளில் தேடிய போது, இந்த வசனத்தில் இல்லாவிட்டாலும், வேறு சில இடங்களில் fate என்ற சொல் ESV / NRSV போன்ற திருப்புதல்களில் இடம்பெற்றுள்ளது.)*

*"விதிப்படி" என்பது ஊழ்வலிக் கோட்பாடு (Fatalism); அது பைபிள் முன்வைக்கும் இறையியல் அல்ல. கடவுள் மீது உள்ள விசுவாசத்தோடு அவருடைய கிருபையைச் சார்ந்து வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. மொழிபெயர்ப்புப் பிழை, கோட்பாட்டுப் பிழையைத் தோற்றுவிக்கும் என்பதற்கு இந்த வசனம் ஒரு சான்று.*

*OV, ஒரே விதமாய்; KJV, one event; event என்பதற்கு mik-reh / மிக்ரெ என்ற மூலச்சொல்*

பயன்படுத்தப்பட்டுள்ளது. *Something met with / accident / fortune / something befallen / chance / event* என்று ஸ்டிராங்க் பொருள்கொள்கிறார்.

Δ

சபை உரையாளர் சாலமோன் கண்டறிந்து சொல்லும் முடிவு, எதிர் எதிர் நிலையில் வாழ்வோருக்கும் பயன் ஒன்று போலவே இருக்கிறது என்பதாகும். அதற்காக அவர், செயல்பாடுகளின் அடிப்படையில் எதிரெதிர் நிலையில் மனிதர்களை வைத்து விளக்குகிறார். 2:14-15 வசனங்களில் சபை உரையாளர் எடுத்து வைத்த கருத்து இங்கு இன்னும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் பார்க்க, யோபு 21:7; திருப்பாடல் 73:3&12-13; மலாக்கி 3:15.

வசனம் 9:3

"... தீமை நிறைந்திருக்கிறது. ... மூடத்தனம் இருக்கிறது" –

பார்க்க, 7:20; மாற்கு 7:20-23; உரோமையர் 1:29-32.

அறிவு என்னும் திறனை மனிதருக்குக் கடவுள் வழங்கியதே பகுத்து ஆய்ந்து, நேரிய வழியில் வாழ்வதற்கே! ஆனால் "இதயமே அனைத்திலும் வஞ்சகம் மிக்கது; அதனை நலமாக்க முடியாது. அதனை யார்தான் புரிந்துகொள்வர்?" (எரேமியா 17:9). மேலும் வாசிக்க, மத்தேயு 25:14-30.

வசனம் 9:4-6

சாவு குறித்து மேலும் வாசிக்க, யோபு 10:20-22; புதிய ஏற்பாட்டுப் பார்வை, 2 கொரிந்தியர் 5:6-8; பிலிப்பியர் 1:21-23; திருவெளிப்பாடு 6:9-11, 7:9-17.

Δ

பிறந்த ஒவ்வொருவருக்கும் சாவு என்பதே உறுதியான முடிவு. அதற்கு முன் ஒருவர் வாழும் வாழ்க்கையே நம்பிக்கைக்குரியது. மரணத்திற்குப் பிறகு எவரும் எதனையும் உணரப் போவதில்லை; எதையும் செய்ய வாய்ப்பே இல்லை. இறந்தோருக்காகச் செய்யும் மன்றாட்டுகளும் வீண். இறந்தோருக்காக நாம் மன்றாடும் போது, "மீண்டும்

*அவரை முகமுகமாகப் பார்ப்போம்" என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம். இறந்தவரோ மன்றாடுபவரோ, ஆண்டவருக்கு வலப்புறம் பிரிக்கப்படுவோமா, இடப்புறம் பிரிக்கப்படுவோமா என்று சொல்ல முடியுமா? எனவே இருமனத்தோராய்க் குந்திக் குந்தி நடவாமல், மேலானவைகளை நாடி, அழைப்பின் உறுதியோடு, வாழும் நாட்களில் உண்மையான வழியில் நடப்போம்.*

*வசனம் 9:4*
*"... ஒருவன் உயிரோடிருக்கும் வரையில் நம்பிக்கைக்கு இடமுண்டு" –*
*தெளிவிற்கு வாசிக்க, 2 சாமுவேல் 12:15-23. மேலும் பார்க்க, யோவான் 9:4.*

Δ
*வாழ்வின் சிக்கலுக்குத் தீர்வு இங்கு உள்ளது. "இயேசு 2023 செப்டம்பர் 17ல் வருகிறார்" / "_____ ஆண்டு பிறக்கும் போது இந்த உலகம் அழியும்" என்றெல்லாம் மீண்டும் மீண்டும் கேள்விப்படுகிறோம்;* ***இவ்வாறு பலரும் கடவுளுக்கு நாள் - நேரம் குறிக்கிறார்கள்.***

*ஆனால் மானிடராகப் பிறக்கும் ஒவ்வொருவரும் எதனை எண்ணிப் பார்க்க வேண்டும்? இன்றிரவோ அல்லது இப்பொழுதேவோ உயிர் போகலாம் என்பதுதான் வாழும் மனிதர் முன்னால் எப்போதும் உள்ள சவால். எனவே, ஒவ்வொருவரும் தங்களை ஆண்டவருக்கு அர்ப்பணித்து வாழ, இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!*

*வசனம் 9:7-10*
*ஞானத்தையும் அறிவையும் தெரிந்து தெளிவதில் தன் சிந்தையைச் செலுத்திய அரசர் சாலமோன், அவற்றை விட்டுவிடாமல், மடமையையும் மதிகேட்டையும் அறிந்து கொள்ள முனைந்த போது (வாசிக்க, அதிகாரம் 2), தெரிந்துகொண்ட வாழ்விற்கான*

அறிவுரைகள். எச்சரிக்கையோடு வாசிக்க வேண்டிய வசனங்கள் – ஏனெனில், இவற்றில் இறை அனுபவம் ஏதும் கிடைப்பதில்லை. மனிதரின் இதுபோன்ற முயற்சிகளால் பயனேதும் விளைவதில்லை என்பதனை சாலமோனின் கூற்றுகளே வெளிப்படுத்துகின்றன (பார்க்க, 2:24 எதிர் 2:26, 3:12-13 எதிர் 3:19, 5:18-19 எதிர் 5:16-17, 8:15 எதிர் 8:16-17).

வசனம் 9:7
உண்டு குடித்துக் களித்தலே வாழ்வின் பயன், 2:24, 5:18-19, 8:15, 10:19.

வசனம் 9:8
களிப்பின் சிறப்பு, தூய ஆடையும், தைலமும், திருப்பாடல் 45:7-8.

Δ

ஆள் பாதி, ஆடை பாதி!
ஆண், பெண் எவராயினும் கண்ணியமான, நேர்த்தியான ஆடைகளை அணிய வேண்டும். தொன்மையான காலங்களில், நேர்த்தியான ஆடைகளை உடுத்தினாலும், பார்த்த தொழில்களின் நிமித்தம் ஆடைகள் கிழிதலும், விரைவாக அழுக்கடைதலும் உண்டு. எனவேதான் சபை உரையாளர் இதனைக் குறிப்பிடுகிறார்.

Δ

"எப்போதும் நல்லாடை உடுத்து. தலையில் நறுமணத் தைலம் தடவிக் கொள்" -
OV, "உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக."
மூலச்சொல் law-bawn / லாபான், வெண்மை என்று பொருள்படும்.
அதுபோன்றே, மூலச்சொல் sheh-men / ஷெமன் என்பது, பொதுவாக எண்ணெய் என்றும், மிகச்சில இடங்களில் தைலம் / நறுமணத் தைலம் என்றும் பொருள்கொள்ளப்பட்டுள்ளது.

- இதன் அடிப்படையில் வெண்ணிற ஆடை மற்றும் எண்ணெய் என்று பொருள்கொள்ளுதல் சரியாக இருக்கும். சபை உரையாளர் சொல்ல வருவது: வெப்பமிகு வாழ்விடங்களில், உடலுக்கு நலம் பயக்கும் என்பதால், 'தலைக்கு நன்கு எண்ணெய் பூசி, வெண்ணிற ஆடை உடுத்தி வாழு' என்பதாகும்.

வசனம் 9:9
"...நீ உன் அன்பு மனைவியோடு இன்புற்றிரு" –
பார்க்க, நீதிமொழிகள் 5:18-19 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்புகள். மேலும் பார்க்க, எபேசியர் 5:25.

நலமான உள்ளம் பெற, நல்ல இல்லம் வேண்டும்; நல்ல இல்லத்தின் அடிப்படை, நல்ல இல்லறம். இல்லறம் எனும்போது, அது இருவர் சார்ந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்று சொல்லக் கேட்டிருப்பது போல, இங்கு சபை உரையாளரின் கூற்று உள்ளது. ஏனெனில், இந்த அறத்தை மீறுவோர் இன்றும் பெரும்பாலும் ஆண்களாக இருக்கின்றனர். இந்த நிலை முற்றிலும் மாற, ஆண் பிள்ளைகளை வளர்க்கும் முறை முற்றிலும் மாற வேண்டும். அதன் தொடக்கப்புள்ளி போல, சபை உரையாளரின் திருமொழி உள்ளது.

வசனம் 9:10
செய்ய நினைக்கும் செயல், பார்க்க, உரோமையர் 12:11; கொலோசையர் 3:17.

வசனம் 9:11
ஒப்பிடுக, ஆமோஸ் 2:14-15.
ஆற்றல், வலிமை, ஞானம், அறிவு, திறமை – எவரும் விரும்பும் சிறப்புகளை எடுத்துரைத்து, இவைகளால் மட்டும் இவ்வுலக வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது என்றுரைக்கும் சபை உரையாளர்.
Δ

*"எவருக்கும் வேளையும் வாய்ப்பும் செம்மையாய் அமைய வேண்டும்" –*
*இந்த உலகில் பிறக்கும் எவருக்கும் வாய்ப்பு சமமாக இருக்கிறதா?*

*வேளை அமைவது என்பது நுண்ணறிவு சார்ந்தது என்றாலும், இங்கு சபை உரையாளரே சுட்டிக் காட்டுவது போல, அது ஒருவரின் கைகளில் இல்லை.* **ஆனால் வாய்ப்பு எல்லாருக்கும் சமமாக இருக்க வேண்டும்.** *சம வாய்ப்புக்கான போராட்டம், இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் அவருடைய வீட்டிலிருந்து தொடங்குகிறது.*

*பாலினம், நிறம், இனம், மதம், ஜாதி என்ற யாதொன்றாலும், பிறப்பின் அடிப்படையில், எவருக்கும் வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்பதே* **உலகெங்கும் இறையடியார்களின் போராட்டமாக** *(Feminist Theology, Black Theology, Minjung Theology, Dalit Theology, Queer Theology and so on) இருக்கிறது.*

*வசனம் 9:12*
*பார்க்க, 8:7. முந்தைய வசனத்தில் குறிப்பிட்ட "வேளை" என்பதை மீண்டும் அழுத்தமாக எடுத்துரைக்கும் சபை உரையாளர்.*

*வசனம் 9:13-18*
*ஓர் உவமையின் வழியாக, ஞானம் இந்த உலகோரால் எவ்வாறு மதிக்கப்படுகிறது என்று விவரிக்கும் சபை உரையாளர்.*

*வசனம் 9:13*
*ஒப்பிடுக, 2:13.*

*வசனம் 9:14*
*வரலாற்றோடு ஒப்பிடுக: பெண் ஒருவரின் அறிவுக் கூர்மையால், இஸ்ரயேல் நாட்டின் படைத்*

*தலைவரின் சீற்றத்திலிருந்து, சிறிதான ஆபேல் நகர் காக்கப்படல், 2 சாமுவேல் 20:16-22.*

*வசனம் 9:15-16*

*ஏழை சொல் அம்பலத்தில் ஏறாது என்பது பழமொழி.*

Δ

*பார்க்க, நீதிமொழிகள் 11:14 & 21:22 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்புகள்; மேலும் பார்க்க, நீதிமொழிகள் 15:22, 20:18, 24:5-6.*

Δ

*எளிமையான பின்னணியிலிருந்து வந்த கிறிஸ்து இயேசுவின் அருள்மொழிகள், அவர் வாழ்ந்த ஊரில் அவருடைய பின்னணியின் பொருட்டுப் புறக்கணிக்கப்படுதல், மாற்கு 6:2-3.*

*வசனம் 9:17 ~ 10:15*

*மடமை குறித்துச் சபை உரையாளரின் திருமொழிகள்.*

*வசனம் 9:17*

*தெளிந்த நீரோடை சலசலவென ஓடும்; ஆர்ப்பரித்து ஓடும் காட்டாறு தெளிவற்ற கலங்கிய வெள்ளமாக, பயன்படுத்தத் தகாததாக இருக்கும். போலியும் பொய்மையுமான பெருங்குரலில் கூறப்படும் ஆரவாரமான முழக்கத்தை ஆவலோடு கேட்க விரும்புவோர், உண்மையும் நல்வாழ்வுக்குமான ஞானிகளின் தெளிவான மெல்லிய குரலுக்குச் செவிசாய்ப்பதில்லை.*

*வசனம் 9:18*

*"...ஒரே ஒரு தவறு, நன்மைகள் பலவற்றைக் கெடுத்துவிடும்" –*

*கீழ்ப்படியாமை எனும் தவறினால் கெடும் நன்மைகள், யோசுவா 7:1-26; 2 அரசர்கள் 21:2-17.*

Δ

*இதுபோன்ற தொனியில் வரும் மற்றுமோர் எச்சரிப்பின் வசனம்: திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்போர், ஒன்றில் தவறினாலும்,*

அனைத்தையும் மீறியவராக இருக்கிறார், யாக்கோபு 2:10.

Δ

தவறுகிற எவரும் தீர்ப்புக்கு உட்பட்டவரே. ஆனால் இரக்கமுடையோர் இரக்கம் பெறுவர் (மத்தேயு 5:7). தீர்ப்புக்கு ஆளாகாதிருக்க, இப்போது யாரையும் தீர்ப்பிட வேண்டாம்; எந்த அளவையால் அளக்கிறோமோ, அப்படியே அளவிடப்படுவோம்! (மத்தேயு 7:1-2)

# 21 சபை உரையாளர் 10

## (மதிகேடு பற்றிய சில குறிப்புகள்)

*1 கலத்திலிருக்கும் நறுமணத் தைலம் முழுவதையும்
செத்த ஈக்கள் முடைநாற்றம் வீசும்படிச் செய்துவிடும்.
அதுபோல சிறிய மதிகேடும்
மேன்மையான ஞானத்தைக் கெடுத்து விடும்.
2 தக்கன செய்வதையே
ஞானியரின் உள்ளம் நாடும்;
தகாதன செய்வதையே
மூடரின் உள்ளம் நாடும்.
3 மூடர் தெருவில் நடந்தாலே போதும்;
அவரது மடமை வெளியாகிவிடும்.
தாம் மூடர் என்பதை
அவரே அனைவருக்கும் காட்டிடுவார்.
4 மேலதிகாரி உன்னைச் சினந்து கொண்டால்,
வேலையை விட்டுவிடாதே.
நீ அடக்கமாயிருந்தால்,
பெருங்குற்றமும் மன்னிக்கப்படலாம்.*

*5 உலகில் நான் கண்ட தீமை ஒன்று உண்டு.
அது உயர் அலுவலரின் தவற்றால் விளைவது.
6 மூடர்களுக்கு உயர்த்த பதவி அளிக்கப்படுகிறது;
செல்வர்கள் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள்.
7 அடிமைகள் குதிரைமீதேறிச் செல்வதையும்,
உயர்குடிப் பிறந்தோர் அடிமைகளைப்போலத்
தரையில் நடந்துசெல்வதையும்
நான் கண்டிருக்கிறேன்.*

*8 குழியை வெட்டுவார் அதில் தாமே வீழ்வார்.
கன்னமிடுவோரைக் கட்டுவிரியன் கடிக்கும்.
9 கற்களை வெட்டி எடுப்பவர்
கற்களால் காயமடைவார்.
மரத்தை வெட்டுபவர்
காயத்திற்கு ஆளாவார்.*

*10 மழுங்கிய கோடரியைத் தீட்டாமல்
பயன்படுத்தினால்
வேலைசெய்வது மிகக் கடினமாயிருக்கும்.
ஞானமே வெற்றிக்கு வழிகோலும்.*

*11 பாம்பை மயக்குமுன் அது கடித்துவிட்டால்,
அதை மயக்கும் வித்தை தெரிந்திருந்தும் பயனில்லை.
12 ஞானியரின் வாய்மொழி
அவருக்குப் பெருமை தேடித்தரும்.
மூடரோ தம் வாயால் கெடுவார்.
13 அவரது பேச்சு மடமையில் தொடங்கும்;
முழு பைத்தியத்தில் போய் முடியும்.
14 மூடர் வளவளவென்று பேச்சை வளர்ப்பார்;
என்ன பேசப்போகின்றார் என்பது
எவருக்கும் தெரியாது.
அதற்குப்பின் என்ன நடக்கும் என்பதை
எவராலும் சொல்ல இயலாது.
15 மூடர் அளவுமீறி உழைத்துத் தளர்ந்து போவார்.
ஊருக்குத் திரும்பிப் போகவும் வகை அறியார்.*

## *(அதிகாரமும் செல்வாக்கும் பெற்றோர் குறித்த ஞானம்)*

*16 சிறு பிள்ளையை அரசனாகவும்
விடிய விடிய விருந்துண்டு களிப்பவர்களைத்
தலைவர்களாகவும் கொண்ட நாடே!
நீ கெட்டழிவாய்.
17 உயர்குடிப் பிறந்தவனை அரசனாகவும்
உரிய நேரத்தில் உண்பவர்களை,
குடித்து வெறிக்காது
தன்னடக்கத்தோடு இருப்பவர்களைத்
தலைவர்களாகவும் கொண்ட நாடே!
நீ நீடு வாழ்வாய்.
18 சோம்பேறியின் வீட்டுக் கூரை ஒழுகும்;
பழுது பார்க்காதவரின் வீடு இடிந்து விழும்.
19 விருந்து மனிதருக்கு மகிழ்ச்சி தரும்;
திராட்சை மது*

*வாழ்க்கையில் களிப்புத் தரும்;*
*பணம் இருந்தால் தான் எல்லாம் கிடைக்கும்.*

*20 தனிமையிலுங்கூட*
*அரசனை இகழாதே;*
*படுக்கையறையிலுங்கூடச்*
*செல்வர்களை இகழ்ந்து பேசாதே.*
*வானத்துப் பறவைகள்*
*நீ கூறியதை எடுத்துச் செல்லும்;*
*பறந்து சென்று*
*நீ சொன்னதைத் திரும்பச் சொல்லும்.*

*சபை உரையாளர் 10:1-20*

## சிந்தனைக்கு

*வசனம் 10:1*
*முந்தைய வசனத்தின் இரண்டாம் பாதியும், இந்த வசனத்தின் இரண்டாம் பாதியும் ஒத்தமைவதைத் தியானிக்க.*

Δ

*சிறிய மதிகேட்டால் விளைந்த கேடு, 2 அரசர்கள் 20:12-19.*

Δ

*"நறுமணத் தைலம்" –*
*OV, பரிமள தைலம்; KJV, apothecary; மூலச்சொல், raw-kakh / ராகக்; தூய திருப்பொழிவு எண்ணெய், விடுதலைப் பயணம் 30:25; வேறு எதற்கும் பயன்படுத்தக் கூடாத இந்தத் தைலத்தை, சபை உரையாளர் இங்கு குறிப்பிட்டிருக்கக் கூடாது எனும் அறிஞர்கள் சிலர் உள்ளனர். தூயதைத் தூயதாகக் கூடுதல் கவனத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டுமே – அதுபோன்றது தானே, தூயாதி தூயவர் அருளும் ஞானமும்!*

*வசனம் 10:2*

*உள்ளத்தின் நாட்டத்தை அடிப்படையாக வைத்து, ஒருவரை ஞானியா மதிகேடரா என்பதை விளக்கும் சபை உரையாளர்.*

Δ

*OV, "... வலது கை... இடது கை..." –*

*வலது - இடது எனப் பிரிப்பதும், வலது என்பதுவே சரி அல்லது உயர்வு என்பதும் ஒரு தொன்மையான வழக்கம் (பார்க்க, தொடக்க நூல் 48:13-14; மத்தேயு 25:33-34&41). இந்த வழக்கம் மாறி, இன்றைக்குப் பிற்போக்கானது வலது என்றும் முற்போக்கானது இடது என்றும் குறிப்பிடப்படுகிறது என்பது ஒரு நகைமுரண்.*

*வசனம் 10:3*

*பார்க்க, நீதிமொழிகள் 13:16, 18:2. ஒப்பிடுக, வ.15.*

*ஒருவரின் நடையும் உடல்மொழியும் அவர் ஞானியா மதிகேடரா என்பதை வெளிப்படுத்திவிடும்.*

*வசனம் 10:4*

*பார்க்க, 8:3; நீதிமொழிகள் 25:15; மேலும் பார்க்க, 1 சாமுவேல் 25:21-35.*

*உயர் அலுவலர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய முறையை இங்கு எடுத்துரைக்கும் சபை உரையாளர். அவர்களுடைய வினைக்கு எதிர்வினையாற்றாமல், உணர்வோடு இசைவான போக்கைக் கடைப்பிடிக்க அவர் அறிவுறுத்துகிறார் (to be responsive and not reactive).*

*வசனம் 10:5*

*முந்தைய வசனத்தில் குறிப்பிட்டதன் எதிர்நிலையை இங்கு சபை உரையாளர் முன்வைக்கிறார். கடைநிலை ஊழியர்களை விட, மேல்நிலை அலுவலர் ஒருவர் செய்யும் சிறிய தவறும், பெரும் தீங்கை விளைவிக்கும்.*

Δ

மீண்டும் மீண்டும் சபை உரையாளர் குறிப்பிடும் ஆள்வோரின் தவறு, வ.4,6-7,16-17&20, 3:16, 4:1-3&13, 5:8-9, 8:2-6&10-11, 9:17.

வசனம் 10:6-7
ஒப்பிடுக, விடுதலைப் பயணம் 18:21; பார்க்க, எஸ்தர் 3:1 மற்றும் அதன் விளைவுகள். மேலும் பார்க்க, 9:11; நீதிமொழிகள் 19:10, 30:22.
முந்தைய வசனத்தில் சொல்லப்பட்ட, உயர்நிலையில் காணப்படும் தவறுக்கான ஒரு காரணத்தை, சபை உரையாளர் இங்கு முன்வைக்கிறார்.

வசனம் 10:7
"உயர்குடிப் பிறந்தோர் அடிமைகளைப்போலத் தரையில் நடந்து செல்வதையும் நான் கண்டிருக்கிறேன்" –
அப்சலோம் செய்த கலகத்திற்குப் பிறகு, இளைஞன் சாலமோன் தனது தந்தையோடு, வெறுங் கால்களோடு நடந்து, எருசலேம் நகரைவிட்டு வெளியேறியதை நினைவுகூர்ந்திருக்கலாம் (2 சாமுவேல் 15:23&30).

வசனம் 10:8-9
பார்க்க, திருப்பாடல் 7:14-16, 57:6; நீதிமொழிகள் 5:22, 26:23-27. மேலும் பார்க்க, ஆமோஸ் 5:19.
ஒருவரின் உள்ளத்தில் தீமை உறைந்திருக்கும் போது, தீய எண்ணத்தோடு அவர் செய்யத் திட்டமிடும் தீங்கு, அவருக்கே கேடாக முடியும்.

வசனம் 10:10
ஒப்பிடுக, 9:16.
எந்தச் செயலிலும் இறங்குமுன், அந்தச் செயலைச் செய்வதற்கான கருவி, ஆயத்தம் செய்யப்பட வேண்டும். முன்னாயத்தமின்றிப் பணியில் இறங்கினால், நேர விரயமும், உடல் அலுப்புமே ஏற்படும்; இறங்கிய செயலில் வெற்றி கிட்டாது.

*வசனம் 10:11*
*முந்தைய இரண்டு வசனங்களோடு ஒப்பிடுக. செயலைச் செய்வதற்கான திறனும் ஆற்றலும் இருந்தும், எதிரியின் எச்சரிக்கை உணர்வால் அல்லது அதனைச் சரியாகக் கணிக்கத் தவறுவதால், தோல்வியடைய நேரிடும் என்பதை சபை உரையாளர் சுட்டிக்காட்டுகிறார். அதுபோன்ற தருணங்களில், அவருடைய திறன் பயனற்றதாகிறது.*

*வசனம் 10:12-15*
*அளவற்ற ஆனால் பயனற்ற பேச்சே மூடரின் தன்மை; அளவுக்கு மீறி அவர்கள் பாடுபட்டாலும் (வ.15) பயனேதும் விளைவதில்லை.*

*வசனம் 10:12*
*பெருமை தரும் இன்மொழிகள், நீதிமொழிகள் 10:32, 22:11; லூக்கா 4:22.*

Δ

*தங்கள் வாயால் கேடுரும் மூடர், நீதிமொழிகள் 10:14&32,18:7.*

*வசனம் 10:14*
*சொற்களின் மிகுதி, 5:3; நீதிமொழிகள் 15:2.*

*வசனம் 10:16*
*பார்க்க, எசாயா 3:4-5, 5:11.*
*இரண்டு நிலைகளில் உள்ளோர் உயர் பொறுப்புகளுக்குத் தகுதியற்றோர் என்று சபை உரையாளர் இங்குக் குறிப்பிடுகிறார்: ஒன்று, பொறுப்புகளை உணராத சிறு / இளவயதினர்; மற்றொன்று, களியாட்டத்தை நாடும் மனதுடையோர். முதலாம் வகையினர், தங்கள் கடமையை அறியாதோர்; அடுத்த வகையினர், தங்கள் கடமையில் தவறுவோர்.*

Δ

*தொழில் சாம்ராஜ்யங்களை உடையோரும், தங்கள் வாரிசுகளை நேரடியாக உயர் பதவிகளில் அமரச்*

*செய்யாமல், கீழிருந்து படிப்படியாக உயர்த்துவதை நாம் அறிவோம்.*

Δ

*இளவயது பயிலுதலின் காலம்; அண்மையில் ஒரு சிறு வயதுப் பிரசங்கியார் உருவாக்கப்பட்டிருக்கிறார் / கொண்டாடப்படுகிறார். ஊழியத்திற்கான அழைப்பை ஒருவர் எந்த வயதில் வேண்டுமானாலும் பெறலாம்; ஆனால் ஒரு கணமான ஊழியத்திற்கான ஆயத்தம் வேண்டும்; சொல்லிக் கொடுப்பதையும் கேட்டதையும் பிரசங்கிப்பது ஊழியம் அல்ல. அது ஆண்டவரின் காலடியில் அமர்ந்து, தூய ஆவியாரின் துணையோடு, வார்த்தையின் நுண்பொருளை உணர்வது. அந்த அனுபவத்தை உணர்ந்து அனுபவிக்காமல், பெரிய பிரசங்கிகளைப் போலித்தனமாகப் பின்பற்றி நடித்துப் பழகுவது கொஞ்சமும் நல்லதல்ல.*

*தந்தையின் பாணியைப் போலியாகப் பின்பற்றும் நடிப்புப் பிரசங்கிகளும் நம்மிடையே உள்ளனர்; இத்தகையோர் தங்கள் நடிப்பில் வெற்றி பெறலாம், காணிக்கைகளைக் குவிக்கலாம் – ஆனால் ஒருபோதும் ஆவிக்குரிய பணியைச் செய்ய முடியாது. எனவே இவ்வுலகத் தோற்றங்களிலும் வெற்றிகளிலும் மயங்க வேண்டாம்.*

Δ

*"...விடிய விடிய விருந்து..." –*

*<u>OV</u>, "அதிகாலமே உண்கிறவர்";*

*<u>KJV</u>, "eat in the morning"; மூலச்சொல், bo-ker / போக்கர், (properly) dawn, daybreak; generally, morning. அதிகாலமே உண்ணுதல் என்பது, கடவுளைத் தொழுது கொள்வதை விடுத்து, உணவை முதலிடத்தில் வைப்பது எனலாம். மேலும் பார்க்க, எரேமியா 21:12.*

*வசனம் 10:17*

*"... உரிய நேரத்தில் உண்..." –*

*சாலமோன் மட்டுமே, சுட்டும் நற்பழக்கம் (மேலும் பார்க்க, நீதிமொழிகள் 23:19-21 மற்றும் அந்நூலுக்கு*

*எழுதப்பட்ட குறிப்புகள்); உயர் பொறுப்பில் இருப்போர் மட்டுமல்லாமல் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியதொரு நற்பழக்கம்.*

*இன்றைய நவீன, பரபரப்பான வாழ்க்கையில் இதெல்லாம் முடியுமா என்கிற கேள்வியின்றி, ஒவ்வொருவரும் இதற்கு முயற்சி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், இரவு 8 மணிக்கு மேல் திட உணவு அல்லது பெருந்தீனி எதையும் உண்ண வேண்டாம் என்றாவது -தங்களுக்கே நலமுண்டாக- முடிவு செய்ய வேண்டும்.*

Δ

*"...குடித்து வெறிக்காது..." -*
*பார்க்க, நீதிமொழிகள் 20:1, 23:29-35, 31:4-7 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்புகள்.*
*மதுவுக்குச் சற்றும் இடம் தராதீர்கள்; நமது சுய உணர்வை மங்கச் செய்யும் எதுவும், நம்மைத் தூய ஆவியாரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகச் செய்யும். எனவே, மது உட்பட, உணர்வை மங்கச் செய்யும் எந்தவொரு பழக்கத்தையும் விட்டொழியுங்கள்.*

Δ

*"...உயர்குடிப் பிறந்தவனை அரசனாக..." –*
*<u>OV</u>, ராஜா குலமகனுமாய்;*
*<u>KJV</u>, son of nobles; வழி வழியில் ஆட்சி உரிமை என்பது தாவீதின் வழிமரபுக்கு மட்டுமே கடவுள் ஏற்படுத்தினார்; தாவீதுக்கான அந்த வாக்கும், கிறிஸ்து இயேசுவில் நிறைவேறிவிட்டது.*

***அனைவருக்கும் தூய ஆவியார் அருளப்பட்ட நிலையில், பிறப்பின் அடிப்படையிலான தகுதி முற்றிலும் அகற்றப்பட்டு விட்டது.** ஆனாலும், ஒரு புகழ்பெற்ற ஊழியர் மரித்தபோது, அவருடைய பேரனின் தலையில் தமிழ்நாட்டின் சில தலைசிறந்த ஊழியத் தலைவர்கள் கைவைத்து, மரித்த ஊழியருக்கு அருளப்பட்ட ஆவி, இரட்டிப்பாக இவருக்கு வழங்கப்பட ஜெபித்தார்கள்!*

*இதுபோன்ற மூடத்தனங்களை என்னவென்று சொல்வது!?*

*நான் ஜெபிக்காமல் எனக்குத் தூய ஆவி எப்படி அருளப்படும்?*
***ஒருவரின் இரட்சிப்பிற்காக மற்றவர் ஜெபிக்க முடியும், ஜெபிக்க வேண்டும். ஆனால் ஆவியார் அருளப்பட ஒவ்வொருவரும் தனக்குத் தானே ஜெபிக்க வேண்டும்; அப்படி ஜெபிக்காததால்தான், கைவைக்குதல் என்பதே அவமாகிறது.***

*வசனம் 10:18*
*சோம்பேறித்தனம், பார்க்க, 4:5; மேலும் பார்க்க, நீதிமொழிகள் 6:6-11 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்புகள்.*

Δ

*"'நாளைக்குச் செய்வோம்' என்று இறைப்பணியாற்றும் எவரும் இருந்ததில்லை," என்கிறார் ஸ்பர்ஜின். "சோம்பியிருக்க மனிதன் படைக்கப்படவில்லை; சோம்பியிருக்க அவன் தெரிந்து கொள்ளப்படவில்லை; சோம்பியிருக்க அவன் மீட்கப்படவில்லை; சோம்பியிருக்க அவனுக்கு வாழ்வு அருளப்படவில்லை; சோம்பியிருக்க கிருபையால் அவன் தூயோனாக்கப்படவில்லை," என்று அவரே மேலும் அழுத்தம் திருத்தமாக உரைக்கிறார்.*

Δ

*"பழுதுபார்க்காதவரின் வீடு இடிந்து விழும்" – சோம்பலில் ஒரு வகை, செய்ய வேண்டிய பணிகளைத் தள்ளிப்போடுதல். அவ்வாறு தள்ளிப் போடுவதால், பெரிய இழப்பையும் எதிர்கொள்ள நேரிடும் என சபை உரையாளர் எச்சரிக்கிறார்.*

*வசனம் 10:19*
*திராட்சை மது, பார்க்க, 2:3; நீதித் தலைவர்கள் 9:13.*
*மதுவோ விருந்தோ, தனித்து அனுபவிக்க முடியாது; எனவே பெரும் பொருள் செலவு செய்ய வேண்டும்!*

*அதற்கேற்ற அளவுக்கு ஒருவர் சம்பாதிக்க வேண்டும்! சம்பாதிப்பதை விரும்பும் எவரும், இன்னும் பொருள் சேர்க்க விரும்புவாரே அல்லாமல், பாடுபட்டு ஈட்டிய செல்வத்தை அழிக்க விரும்பமாட்டார்.*

*வசனம் 10:20*

*முந்தைய வசனத்தின் தொடர்பில் இந்த வசனத்திற்குப் பொருள்கொள்ளலாம் – களிப்பையும் செழிப்பையும் விரும்புவோர், ஒருபோதும் செல்வாக்கும் செல்வமும் நிறைந்தோருக்கு எதிராக நிற்க மாட்டார்.*

Δ

*"...அரசனை... செல்வர்களை இகழ்ந்து பேசாதே" – மோசேயின் சட்டமாக, விடுதலைப் பயணம் 22:28; பவுல் அதனை நினைவூட்டுவதாக, திருத்தூதர் பணிகள் 23:5.*

*விரிவாக, பார்க்க 8:2-5 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, நீதிமொழிகள் 24:21-22 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்புகள்.*

✝

# 21 சபை உரையாளர் 11

## (ஞானமாகப் பணம் சேர்த்தல்)

*1 உன் பணத்தை வைத்துத் துணிந்து*
*கடல் வாணிபம் செய்;*
*ஒருநாள் அது வட்டியோடு திரும்பிவரும்.*
*2 உன் பணத்தைப் பிரித்து*
*ஏழெட்டு இடங்களில் முதலாக வை.*
*ஏனெனில், எங்கு, எவ்வகையான*
*இடர் நேருமென்பதை*
*நீ அறிய இயலாது.*

*3 வானத்தில் கார்முகில் திரண்டு வருமாயின்,*
*ஞாலத்தில் மழை பெய்யும்.*
*மரம் வடக்கு நோக்கி விழுந்தாலும்*
*தெற்கு நோக்கி விழுந்தாலும்*
*விழுந்த இடத்திலேதான் கிடக்கும்.*
*4 காற்று தக்கவாறு இல்லையென்று*
*காத்துக்கொண்டே இருப்போர்,*
*விதை விதைப்பதில்லை;*
*வானிலை தக்கபடி இல்லை*
*என்று சொல்லிக்கொண்டே இருப்போர்*
*அறுவடை செய்வதில்லை.*

*5 காற்றின் போக்கையோ,*
*கருவுற்ற பெண்ணின் வயிற்றில்*
*உயிர் வளரும் வகையையோ*
*நீ அறிய இயலாது;*
*அவ்வாறே, அனைத்தையும் செய்கிற*
*கடவுளின் செயல்களையும்*
*உன்னால் அறியமுடியாது.*
*6 காலையில் விதையைத் தெளி;*
*மாலையிலும் அப்படியே செய்.*
*அதுவோ இதுவோ*
*எது பயன்தரும் என்று*

*உன்னால் கூறமுடியாது.*
*ஒருவேளை இரண்டுமே*
*நல்விளைச்சலைத் தரலாம்.*

## *(இளமையில் களித்திரு)*

*7 ஒளி மகிழ்ச்சியூட்டும்;*
*கதிரவனைக் கண்டு*
*கண்கள் களிக்கும்.*
*8 மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும்,*
*அவன் தன் வாழ்நாளெல்லாம்*
*மகிழ்ச்சியுடன் இருக்கட்டும்.*
*இருள் சூழ்ந்த நாள்கள்*
*பல இருக்கும் என்பதையும்*
*அவன் மறக்கலாகாது.*
*அதற்குப்பின் வருவதெல்லாம் வீணே.*

*9 இளையோரே!*
*இளமைப் பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே.*
*இளமையின் நாள்களில்*
*உள்ளக் களிப்புடனிருங்கள்.*
*மனம் விரும்புவதைச் செய்யுங்கள்;*
*கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள்.*
*ஆனால்,*
*நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும்*
*உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார்*
*என்பதை மறவாதீர்கள்.*
*10 மனக் கவலையை ஒழியுங்கள்.*
*உடலுக்கு ஊறு வராதபடிக்*
*காத்துக் கொள்ளுங்கள்;*
*குழந்தைப் பருவமும்*
*இளமையும் மறையக் கூடியவையே.*

*சபை உரையாளர் 11:1-10*

## சிந்தனைக்கு

*வசனம் 11:1-6*
*வாழ்வின் நிகழ்வுகளில் நிலவும் நிலையற்ற தன்மைகளைக் குறிப்பிடும் சபை உரையாளர், அறிய முடியாது / கூற முடியாது என்ற சொற்களை நான்கு முறை பயன்படுத்துகிறார், பார்க்க, வ.2,5(2)&6.*

*வசனம் 11:1-2*
*இந்த இரு வசனங்களும் பூடகமாகப் பொருள் தருவனவாக உள்ளன. மொழியாக்கங்கள் பலவும், நேரடியாக வரும் பொருளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது. பொது மொழிபெயர்ப்பு, பூடகமான பொருளை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதற்கு இணையாக, ஜேம்ஸ் மொஃபெட் என்பாரின் புதிய திருப்புதலும் (MNT), New English Translation (NET) மற்றும் New English Bible (NEB) போன்றவையும் உள்ளன.*

Δ
*பல பொருளாதார வல்லுனர்கள் இன்றைக்கு வலியுறுத்தும் முதலீட்டுக் கோட்பாடுகளை 3000 ஆண்டுகளுக்கு முன்பு சாலமோன் அரசர் போகிற போக்கில் சொல்லி இருப்பது வியப்பிற்குரியது. இடருக்குள்ளாக வாய்ப்புள்ள முதலீடாக இருந்தாலும், அதில் பொருளீட்ட வழி உண்டு; எனவே திறந்த மனதோடு, சாதக பாதகங்களை ஆய்ந்து, முதலீடுகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து வாணிபம் செய்ய சபை உரையாளர் அறிவுறுத்துகிறார்.*

*வசனம் 11:1*
*"...கடல் வாணிபம் செய்" –*
*OV, "தண்ணீர்கள் மேல் போடு"; KJV, "cast ... upon the waters"; எபிரேயச் சொல், shaw-lakh / ஷாலக்; பெரும்பாலும் இது send (away / for / forth) என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. சில இடங்களில் cast*

*(away / out)* என்று *KJV* திருப்புதலில் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அனுப்புதல் என்றால் ஏதோ ஒன்றை யாரோ ஒருவருக்கு அனுப்புதல்.

Δ

*"உன் பணத்தை..." –*

*OV, "உன் ஆகாரத்தை"; KJV, "thy bread";* மூலச்சொல், *lekh-em /* லெகெம்; இங்குப் பயன்பாட்டின் அடிப்படையில், உணவு தானியங்கள் என்று கொள்ளலாம். உழவே இன்றும் என்றும் மனிதருக்கு ஆதாரமான தொழில். அதில் இலாபம் பார்த்து, அந்தப் பணத்தை முதலீடு செய்வதுவே அன்றைய வழக்கம்.

Δ

கப்பல் கட்டிக் கடல் வாணிபத்தில் வெற்றிகரமாக ஈடுபட்ட இஸ்ரயேலின் அரசர் சாலமோன் *(1* அரசர்கள் *9:26-28, 10:11&21-22; 2* குறிப்பேடு *8:17-18, 9:21).* (யோசபாத்து கடல் வாணிபம் செய்ய முனைந்தான், ஆனால் அதில் அவன் தொடக்கத்திலேயே தோற்றுப் போனான், *1* அரசர்கள் *22:48; 2* குறிப்பேடு *20:35-37).*

பொன், வெள்ளி, தந்தம் போன்ற பொருள்களோடு, குரங்கு, மயில் போன்ற விலங்குகளையும் வெளிநாடுகளிலிருந்து கொணர்ந்து, அண்டை நாடுகளில் விற்று, சாலமோன் அரசர் பொருளீட்டி இருக்கக்கூடும் (தேர் மற்றும் குதிரைகளை வாங்கி விற்றது போல, *1* அரசர்கள் *10:28-29).*

Δ

ஆக, அரசர் சாலமோன் கடல் வாணிபத்தில் ஈடுபட்டதை விரும்பாதோர் அல்லது எதிர்த்தோர் அன்று இருந்திருக்கக்கூடும். இந்த வசனத்தின் மொழி நடை உணர்த்துவது அதுவே; வாழ்க்கையின் ஆதாரங்களைத் தண்ணீரில் எறிந்தாலும், அது பயன் தரும் என சபை உரையாளர் தெளிவுபடுத்துகிறார்.

மேலும் பார்க்க, நீதிமொழிகள் *11:24.*

*வசனம் 11:2*
*"உன் பணத்தைப் பிரித்து ஏழெட்டு இடங்களில் முதலாக வை" –*
*இன்றைய முதலீட்டுக் கோட்பாடு.*

*ஒரு முதலீட்டு வாய்ப்பு, இடர் மிக்கதாகவும், அதிக ஆதாயம் தருவதாகவும் இருக்கும்; மற்றொன்று, இடர் குறைவானதாகவும், குறைந்த ஆதாயம் தருவதாகவும் இருக்கும். ஆதாயத்தில் மட்டுமே மனத்தைச் செலுத்தி, முதலை இழந்துவிடக் கூடாது. எனவே முதலீடுகளை ஏழு அல்லது எட்டுப் பகுதிகளாகப் பிரித்து, முதலின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சாலமோன் உரைக்கிறார்.*

Δ

*இந்த இரண்டு பொருளாதாரக் கோட்பாடுகளும் யூதர்கள் மீது செலுத்தும் தாக்கம் மிகுதி. பணமீட்டுவதில் அவர்கள் எவ்வளவு வெறிகொண்டு இருந்தார்கள் என்பதை நாம் புதிய ஏற்பாட்டிலும் பார்க்கிறோம் (யோவான் 2:13-16; மாற்கு 11:15-17; மத்தேயு 21:12-13; லூக்கா 19:45-46).*

*பல நாடுகளிலும் சிதறடிக்கப்பட்ட யூதர்கள் அந்த அந்த நாடுகளின் வணிகத்தையும் பொருளாதாரத்தையும் தங்கள் கட்டுப்பாட்டில் இன்றுவரை வைத்திருக்கிறார்கள். யூதர்களின் பணமீட்டும் வெறிகுறித்து, ஷேக்ஸ்பியர் எழுதிய மேக்பத் நாடகத்தில் நாம் வாசிக்க முடியும் (அது நாடகம் என்பதால் முழுவதும் கற்பனை என்று எண்ண வேண்டாம்). போன நூற்றாண்டில் உலகின் பல நாடுகளில் யூதர்கள் வெறுக்கப்பட அவர்களின் கறாரான லேவாதேவித் தொழில் ஒரு காரணம். ஆனாலும், சையனியர் (Zionists) மற்றும் சையனிய ஆதரவாளர்களின் இடைவிடாத பரப்புரைகளால், இவர்களின் சமூக ஊடகச் செயல்பாடுகளால்,*

*உலகெங்கும் இன்று யூத ஆதரவு நிலை என்பது கட்டமைக்கப்பட்டுள்ளது.*

*முதல் இரண்டு திருமொழிகளுக்கு நான் தந்த குறிப்புகள் அதிகமான விவாதங்களை எழுப்பின. இவ்விரு வசனங்களும் பகிர்வையும் ஈகையையும் குறிக்கின்றன என்ற பொதுவான புரிதலை இவற்றின் வழியாக நான் உணர முடிந்தது. அதற்கு என் மறுமொழி:*

*சபை உரையாளர் நூலில், சாலமோன் ஞானி முன்வைக்கும் வாழ்க்கைச் சுழற்சி, அறிவுத் தேடல் - உழைப்பு - பொருளீட்டுதல் - உண்ணுதல் - குடித்தல் - களித்தல் - சாதல். இந்நூலில், பலி செலுத்துதல் போன்ற இறைக்கட்டளைகளை ஒருமுறை மட்டுமே குறிப்பிடுகிறார். இவற்றின் அடிப்படையில், இந்த வசனங்கள் பொருளீட்டுதல் குறித்தே பேசுகின்றன என்று உணரலாம். KJV அடிப்படையில் விளக்கம் தந்த மாத்யூ ஹென்றி, வசனத்தின் அடிப்படையில் முதல் விளக்கத்தையும், இரண்டாவது விளக்கமாக உழவுத் தொழில் சார்ந்தும், மூன்றாவது விளக்கமாக கடல் வாணிபத்தையும் குறிப்பிடுகிறார்.*

Δ

*இந்த வசனத்திற்கு அரேபிய விளக்கம் ஒன்று உள்ளது: மொஹமது-பின்-ஹசன் என்பவர் நாள்தோறும் ரொட்டித் துண்டுகளை ஆற்றில் போடுவார்; பின்னாட்களில், அவனுடைய தத்து மகன் ஆற்றில் இழுத்துச் செல்லப்பட்டான்; நல்வாய்ப்பாக ஒரு பாறையைப் பிடித்துத் தப்பியபோது, அவன் பசியால் வாட, அப்போது ஆற்றில் மிதந்து வந்த ரொட்டித் துண்டுகளை உண்டு, அவன் உயிர் தப்பினான்; ஆதலால் ஆற்றில் போடும் ரொட்டித் துண்டுகளால் பயனுண்டு!*

*- இதுபோன்ற அறிவுக்கு ஒவ்வாத விளக்கங்களைப் புறந்தள்வது சிறப்பு.*

*வசனம் 11:3*
*மரம் எந்தப் பக்கத்தில் விழுந்தாலும், மரவேலைக்கோ, எரிபொருளாகவோ பயன்தரப் போகிறது. தேவையற்ற கவலை எதற்கு?*

Δ

*மரம் விழுதல் இங்கு சாவைக் குறிக்கிறது. மரம் போல, பயன் தரும் வாழ்க்கை வாழ்வோரின் சாவு எப்படி இருந்தாலும், அவர்கள் தங்கள் நேரிய வாழ்விற்குரிய பயனை அடைவர்.*

*வசனம் 11:4*
*நாளும் பொழுதும் நலிந்தோர்க்கு இல்லை என்பது நமது மொழி வழக்கு. நாள், பொழுது, ஜாதகம் என்று பார்த்து நிற்போர், முற்றிலும் சாதகமான சூழல் அமையாமல், செயலைத் தொடங்காமலே தோல்வி அடைவர்.*

Δ

*சூழ்நிலைகளில் கவனம் குவிக்காமல், நம் கவனத்தை ஆண்டவர்தம் பேரன்பில் நிலைநிறுத்துவோம். எத்தகைய சூழ்நிலையிலும் நம்மை வெளிக்கொணர வல்லது இறையருள். பார்க்க, மத்தேயு 14:22-31.*

*வசனம் 11:5*
*காற்றின் போக்கு, கிறிஸ்து இயேசுவின் எடுத்தாளுகை, யோவான் 3:8.*

Δ

*கருவில் இருக்கும்போதே காணும் கடவுள், திருப்பாடல் 139:14-16.*

*வசனம் 11:6*
*உழவுத் தொழிலில் விதைப்பு நமது கையில் உள்ளது. விளைச்சல் எந்த அளவுக்கு இருக்கும் என்று எதிர்பார்த்து -விதைத்த அளவுக்கான விளைச்சலை எதிர்பார்த்து- விதைக்க முடியாது. இயற்கை சார்ந்த தொழிலாகவே விவசாயம் உள்ளது. எனவே, நமது முயற்சியை நாம் முடிவு செய்து, பெரிய அளவில் செயல்படலாம்; பயனோ நம் கையில் இல்லை.*

*வசனம் 11:7 ~ 12:8*
*இளையோருக்கான சபை உரையாளரின் அறிவுரை.*

*வசனம் 11:7*
*"ஒளி மகிழ்ச்சியூட்டும்" –*
*"நேர்மையாளருக்கென ஒளியும், நேரிய உள்ளத்தோர்க்கென மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டுள்ளன."*
*(திருப்பாடல் 97:11)*

*வசனம் 11:8*
*"மனிதன் ... மகிழ்ச்சியுடன் இருக்கட்டும்" –*
*பார்க்க, 9:7*
Δ
*இந்த வசனத்தின் பின்பகுதி, 12:1 வசனத்தின் பின்பகுதியோடு ஒத்திருப்பதை வாசித்து அறிக.*

*வசனம் 11:9*
*"இளையோரே!" –*
*சாலமோனின் அழைப்பு – இதைவிட நெருக்கமாக, நீதிமொழிகள் 1:8, 2:1, 3:1 மற்றும் சில வசனங்கள்.*
Δ
*"...மகிழ்ச்சியோடிரு... களிப்புடனிரு... விரும்புவதைச் செய்" –*
*சபை உரையாளர் தானே திட்டமிட்டுச் செய்தவை, பார்க்க, 2:1-10; அதேவேளையில், மோசேயின் எச்சரிக்கை, பார்க்க, எண்ணிக்கை 15:39.*
Δ
*"...உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார்" –*
*பார்க்க, 3:17, 12:14; மேலும் பார்க்க, உரோமையர் 14:10.*

*வசனம் 11:10*
*"... ஊறு வராதபடி காத்துக் கொள்ளுங்கள்" –*
*பார்க்க, 2 கொரிந்தியர் 7:1; 2 திமொத்தேயு 2:22.*
Δ

*"குழந்தைப் பருவமும் இளமையும் மறையக் கூடியவையே" –*
*பார்க்க, திருப்பாடல் 39:5; எழுந்து மறையும் நீர்க்குமிழி போன்ற வாழ்வில், இளமைப் பருவம் என்பது இன்னும் குறுகிய காலமே!*

✝

# 21 சபை உரையாளர் 12

## (இளமையில் களித்திரு - தொடர்ச்சி)

*1 ஆகையால்,
உன்னைப் படைத்தவரை
உன் இளமைப் பருவத்தில் மறவாதே.
"வாழ்க்கை எனக்கு
இன்பம் தரவில்லையே"
என்று நீ சொல்லக்கூடிய
துயர நாள்களும் ஆண்டுகளும் வருமுன்
அவரை உள்ளத்திலே நினை.
2 அதாவது,
கதிரவன், பகலொளி, நிலா,
விண்மீன்கள் ஆகியவை
உனக்கு மங்கலாய்த் தெரியுமுன்னும்,
மழைக்குப்பின் மேகங்கள்
இருண்டு வருவதுபோலத் தோன்றுமுன்னும்,
3 வீட்டுக்காவலர் நடுக்கங்கொள்ள,
வலியோர் தளர்வுறுமுன்னும்,
அரைப்போர் மிகச் சிலராகித்
தம் வேலையை நிறுத்திக்கொள்ள,
பலகணி வழியாகப் பார்ப்போர்
ஒளி இழந்துபோகுமுன்னும்,
4 தெருச்சந்தடி கேளாவண்ணம்
கதவுகள் அடைத்துக்கொள்ள,
சிட்டுக்குருவியின் கீச்சொலியும்
உறக்கத்தைக் கலைக்க,
இன்னிசைக் கருவி இசைக்கும் மகளிர்
அனைவரும் ஓய்ந்துபோகுமுன்னும்,
உன்னைப் படைத்தவரை உள்ளத்தில் நினை.*

*5 மேட்டைக் கண்டு அச்சங்கொண்டு
தெருவில் நடப்பதை நினைத்துத்
திகில் கொள்ளுமுன்னும்,
வாதுமை மரம் பூப்பூக்குமுன்னும்,*

*வெட்டுக்கிளியைப்போல நடை தட்டுத்தடுமாற,*
*ஆசையெல்லாம் அற்றுப்போகுமுன்னும்,*
*உற்றார் வீதியில் அழுது புலம்ப*
*நீ முடிவற்ற ஓய்வுக்குச் செல்லுமுன்னும்,*
*உன்னைப் படைத்தவரை உள்ளத்தில் நினை;*
*6 வெள்ளிக் கயிறு அறுந்து,*
*பொன் விளக்கு கீழே விழுந்து*
*உடைவதற்கு முன்னும்,*
*குளத்தருகில் குடம் உடைந்து நொறுங்க,*
*கிணற்றருகில் உருளை உடைந்து விழுமுன்னும்,*
*7 மண்ணினின்று வந்த உடல்*
*மண்ணுக்கே திரும்பு முன்னும்,*
*கடவுள் தந்த உயிர்*
*அவரிடமே திரும்புமுன்னும்*
*உன்னைப் படைத்தவரை உள்ளத்தில் நினை.*
*8 வீண், முற்றிலும் வீண்*
*என்கிறார் சபை உரையாளர்;*
*எல்லாமே வீண்.*

## *(சபை உரையாளரின் தொகுப்புரை)*

*9 சபை உரையாளர் ஞானமுள்ளவராயிருந்ததோடு தாம் அறிந்தவற்றைத் தொகுத்துத் தந்தார்.*
*10 சபை உரையாளர் இனிய நடையில் எழுத முயன்றுள்ளார். உண்மையை ஒளிவு மறைவில்லாமல் எழுதிவைத்திருக்கிறார்.*
*11 ஞானமுற்றவர்களின் சொற்கள் ஆயரின் கோல்போல் வழிநடத்தும். தொகுத்து வைத்த முதுமொழிகள் பசுமரத்தாணிபோல உள்ளத்தில் பதியும். அவை ஒரே ஆயரால் அளிக்கப்பட்டவை.*

*12 பிள்ளாய்! மேலும் ஓர் எச்சரிக்கை; நூல்கள் பல எழுதுவதால் பயன் ஒன்றுமில்லை. மிகுதியான படிப்பு உடலுக்கு இளைப்பு.*

*13 இவையனைத்திற்கும் முடிவுரையாக ஒன்று கூறுகிறேன்:*

**கடவுளுக்கு அஞ்சி நட;**
**அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படி.**
**இதற்காகவே மனிதர் படைக்கப்பட்டனர்.**
*14 நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும்,*
*மறைவான செயலுக்குங்கூட,*
*அது நல்லதோ தீயதோ எதுவாயினும்,*
*அனைத்திற்கும் கடவுளே தீர்ப்பு வழங்குவார்.*

*சபை உரையாளர் 12:1-14*

## சிந்தனைக்கு

*வசனம் 12:1-7*

*11:8ல் சபை உரையாளர் குறிப்பிட்ட, இருள் சூழ்ந்த நாட்களை இங்கு விவரிக்கிறார். வாழ்வின் கடைசிப் பகுதியில் இருக்கும் அவர் – செயலாற்ற இயலாத இறுதிக் காலத்தில் அல்லாமல், ஆற்றலும் ஆக்கமும் விளங்கும் இளமைக் காலத்திலேயே படைத்தவரை நினைத்துச் செயல்பட இளையோருக்கு அறைகூவல் விடுக்கிறார்.*

Δ

*"நினை", "நினை" என்று ஒரு செயலைச் சொல்லும் இரு திருமொழிகள் – அவற்றுக்கு இடையே, நம் வாழ்வின் இடர்களை உணர்த்தும் உருவகங்கள் நிறைந்த, கவித்துவமான திருமொழிகள். இதன் வழியே, சபை உரையாளர் வலியுறுத்தும் செய்தி, இளமையிலேயே உன்னைப் படைத்தவரை நினை. கவிதையில் திளைத்து விடாமல், சபை உரையாளர் தரும் செய்தியை மனதில் நிறுத்துங்கள்: "இளமையிலேயே படைத்தவரை நினை."*

*பதின்பருவத்தில், நாம் படிக்கும் இடங்களில், கடவுள் - ஆலயம் என்ற வாஞ்சை உள்ளவர்களை, "அவன் இப்பவே சாமியார் ஆயிட்டான்" என்று மற்ற மாணவர்கள் எள்ளி நகையாடுவதுண்டு. "இந்த வயதில் இதெல்லாம் எதற்கு?" என்றும், "வயதான*

பிறகு இதெல்லாம் பார்த்துக் கொள்ளலாம்" என்றும் இளைஞர்கள் சொல்வதுண்டு. ஆனால் சாலமோன் அரசர், அதற்கு மாறான போதனையை இங்குத் தருகிறார். இதனைவிடக் கடினமான எச்சரிக்கையைக் கிறிஸ்து இயேசு தருகிறார்: "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும்...". கடவுளுக்கு ஏற்புடையவராகத் தங்களைச் சீரமைத்துக் கொள்ள, ஆணோ பெண்ணோ, இளவயதினரோ முதியோரோ, இன்றே, இப்போதே சரியான நேரம். எனவே, நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள காலத்தை ஆதாயம் செய்துகொள்வோம்.

Δ

*முதுமையின் இடர்பாடுகள், பார்க்க, 2 சாமுவேல் 19:35.*

*முந்தைய அதிகாரத்தில் நாம் வாசித்தது போல, இந்த அதிகாரத்திலும் பல உருவகங்கள் உள்ளன:*

*வ.2ல், வயோதிகத்தின் பார்வைக் குறைவு மற்றும் தோற்ற மயக்கத்தையும்;*

*வ.3ல், வீட்டுக் காவலர் என்பது வலிமைமிகு கைகளையும், வலியோர் என்பது உறுதிமிக்க கால்களையும், அரைப்போர் என்பது பற்களையும், பலகணி வழியாகப் பார்ப்போர் என்பது கண்களையும்;*

*வ.4ல், சந்தடி கேளாவண்ணம் கதவுகள் அடைத்தல் என்பது செவித்திறன் இழப்பையும், உறக்கத்தைக் கலைக்கும் சிட்டுக்குருவியின் கீச்சொலி என்பது மெல்லிய ஒலிக்கும் அஞ்சித் தூக்கத்தை இழப்பதையும், இசைக்கருவி இசைக்கும் மகளிர் ஓய்ந்து போதல் என்பது குரல் நாண்கள் தளர்ந்து பேச்சற்றுப் போவதையும்;*

*வ.5ல், தெருவின் மேட்டைக் கண்டு என்பது உள்ளம் சோர்ந்து நடை தளர்வதையும், தெருவின் குறுக்கே விழும் நிழல் என்பது திகிலூட்டுவதையும், வெண்ணிறத்தில் பூத்த வாதுமை மரம் என்பது முழுவதும் நரைத்த முடியையும் குறிப்பவை.*

*வ.6ல், வெள்ளிக் கயிறு அறுந்து பொன் விளக்கு உடைவது, தண்ணீர் எடுக்கக் குளத்திற்குச் சென்று அங்கே குடம் உடைவது, கிணற்றில் நீரிறைக்கையில் உருளை உடைவது – இந்த மூன்று உருவகங்களும் உயிர் போவதைச் சுட்டுபவை.*

*வசனம் 12:1*
*ஒப்பிடுக, 11:8; மேலும் பார்க்க, நீதிமொழிகள் 22:6; புலம்பல் 3:27.*

Δ

*பழைய ஏற்பாட்டில் இங்குதான் முதன்முறையாகக் கடவுள் படைப்பாளராகக் குறிப்பிடப்படுகிறார். மேலும் பார்க்க, எசாயா 40:28, 43:15.*

*வசனம் 12:2*
*ஒருவரின் முதுமையில் மட்டுமல்லாமல், உலகின் நிறைவுக் காலத்திலும் ஒளி மங்கும், எசாயா 5:30, 13:10; எசேக்கியேல் 32:7-8; ஆமோஸ் 8:9; மீக்கா 3:6.*

*வசனம் 12:2-7*
*வயது மூப்பின் காலத்தில், உடலிலும் உள்ளத்திலும் ஒருவருக்கு நேரிடும் தளர்வு, அயர்வு, சோர்வு மற்றும் நோவுகளை தொடர் உருவகங்களால் சபை உரையாளர் விவரிக்கிறார். அந்த விவரணை, ஒருவரின் சாவில் நிறைவடைகிறது.*

*வசனம் 12:5*
*முடிவற்ற ஓய்வு, யோபு 10:21.*

Δ

*உற்றார் வீதியில் அழுது புலம்புதல், பார்க்க, தொடக்க நூல் 50:10; எரேமியா 9:17; ஆமோஸ் 5:16.*

*வசனம் 12:6*
*மேலுள்ள முன்னுரையைப் பார்க்க. அதுபோக, உருவகமான வேறு வகையிலும் இந்த வசனத்தை விளக்க இயலும்.*

"...வெள்ளிக் கயிறு அறுந்து..." –
விளக்கைத் தொங்க விடும் சங்கிலி என்று நேரடியாகவும், மனிதர் நிற்க மற்றும் செயல்பட உறுதுணையாக இருக்கும் தண்டுவடம் என்று உருவகமாகவும் இதற்குப் பொருள் கொள்ளலாம்.

Δ

"...பொன் விளக்கு..." –
OV, பொற்கிண்ணி. உருவகமாக மூளையைக் குறிக்கக் கூடும்.

Δ

"...குடம் உடைந்து..." –
உருவகமாக, இதயத் தாக்குதல் என்று பொருள் கொள்ளலாம்.

Δ

"...கிணற்றின் உருளை உடைவது..." –
ஆரங்கள் கொண்ட உருளை உருவகமாக, இதயத்தின் தமணி மற்றும் சிரைகள் செயல் இழப்பைக் குறிப்பதாகக் கருதலாம்.

வசனம் 12:7
பார்க்க, தொடக்க நூல் 2:7, 3:19; திருப்பாடல் 146:4. மேலும் பார்க்க, 3:20; எண்ணிக்கை 16:31-32; யோபு 20:8-9&11, 34:14-15; செக்கரியா 12:1.

வசனம் 12:8-14
தான் தொடங்கிய இடத்திற்கு (1:1-2), வ.8ல் வந்த சபை உரையாளர், மீண்டும் தன்னிலை ஒருமை நடையில், தான் இதுவரை எழுதியவற்றைத் தொகுத்து, நூலுக்கான தனது முடிவுரையை எழுதுகிறார்.

வசனம் 12:8
பார்க்க, 1:2 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, திருப்பாடல் 62:9.

*வசனம் 12:9*
*பார்க்க, 1 அரசர்கள் 4:32. மேலும் பார்க்க, 1:12 ~ 2:26.*

*வசனம் 12:10*
*"...இனிய நடையில்..." –*
*OV, இதமான வார்த்தைகள்; உண்மையைச் சொல்ல வேண்டும், யோவான் 17:17; சொல்வதை இனிமையான மொழியில் சொல்ல வேண்டும், கொலோசையர் 4:6. ஏனெனில் ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை மட்டுமல்லாமல், தெளிதேனினும் இனிமையானவை, திருப்பாடல் 19:9-10.*

*வசனம் 12:11*
*"...ஒரே ஆயர்..." –*
*OV, ஒரே மேய்ப்பன்; கடவுளைச் சுட்டும் சபை உரையாளர் (திருப்பாடல் 23:1-6, 80:1); அந்த ஆயரே நமக்கு ஞானத்தை அருளுபவர், நீதிமொழிகள் 2:6.*
Δ
*இந்த உலகில் வாழ்வோரை நல்வழியில் நெறிப்படுத்த கடவுளே ஆயர்களை ஏற்படுத்துகிறார், எரேமியா 3:15, 23:1-4.*

*வசனம் 12:12*
*"பிள்ளாய்!" –*
*OV, என் மகனே! நீதிமொழிகள் நூல்களில், இளையோரின் கவனத்தை ஈர்க்க, சாலமோன் மீண்டும் மீண்டும் பயன்படுத்திய விளிப்புச் சொல்; பார்க்க, நீதிமொழிகள் 1:8 மற்றும் அந்நூலுக்கு எழுதப்பட்ட குறிப்பு.*
Δ
*"நூல்கள் பல எழுதுவதால் பயன் ஒன்றுமில்லை. மிகுதியான படிப்பு உடலுக்கு இளைப்பு" –*
*OV, "அநேகம் புத்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு." இவற்றுள் "முடிவில்லை" என்று சொல்வதே சரியானது (மூலச்சொல், kâtes / காட்ஸ் என்பது,*

*extremity / border / end / finite என்றெல்லாம் பொருள்படும்; அதோடு, எதிர்மறைப் பொருள்தரும் ay-yin / அயின் என்கிற ஒட்டு உள்ளதால், no end / முடிவில்லை என்பதே சரி.)*

Δ

*அச்சடித்த மற்றும் மின் நூல்கள் மிகுந்த இன்றைய வாசிப்பின் பயனற்ற நிலை அன்றைக்கும் இருந்ததோ! சாலமோன் அரசர் மட்டுமே மூவாயிரம் நீதிமொழிகளையும் ஆயிரத்து ஐந்து பாடல்களையும் எழுதினார் (1 அரசர்கள் 4:32); அவரைப் போல இன்னும் பலரும் திருப்பாடல்களையோ, நீதிமொழிகளையோ, வரலாற்று இலக்கியங்களையோ (2 குறிப்பேடு 9:29) எழுதியிருக்கலாம். ஆனால் அவற்றால் விளைந்த பயன் என்ன என்று சாலமோன் எண்ணி இருக்கக்கூடும்.*

Δ

*அப்படியானால், நூல்கள் பயனற்றவையா? வாசிப்பு உடலுக்கு இளைப்பா? அப்படியொரு முடிவுக்கு நாம் வந்துவிட முடியுமா?*

*நூல்கள் அந்த அந்தக் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. அதேவேளையில், நற்சிந்தனையையும், உண்மையையும் பேசும் நூல்கள், காலம் கடந்தும் வாசிக்கப்படும், பேசப்படும், கொண்டாடப்படும், இன்னும் காலங்கள் கடந்து நிலைத்து நிற்கும். மானுடவியல், சமூகவியல், அரசியல், அறிவியல், மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆய்வுகள் நூல்களாக எழுதிவைக்கப்பட்டதினாலே, ஒரு காலத்தின் அறிவு அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தப்பட்டு, காலங்காலமாக அறிவு வளர்ச்சி சாத்தியமாகிறது. படியெடுத்துப் பாதுகாக்கப்பட்டதால், சில ஆயிர ஆண்டுகள் கடந்தும் நமது கரங்களில் தவழும் பைபிள், நமது உள்ளங்களை நிறைத்து, மெய்வாழ்வின் வழியில் நம்மை நடத்துகிறது.*

Δ

*சாலமோன் நூல்கள் பல எழுதிப் பயனென்ன என்று கேட்பது, வேறொரு வகையில் சரியாகத் தோன்றுகிறது. அறிவியல் நூல்கள் பெருகுவது போலவே, போலி அறிவியலையும் கற்பனாவாதங்களையும் வளர்க்கும் நூல்களும் பெருகி வருகின்றன. வரலாற்று நூல்கள் பெருகுவது போலவே, புனை சுருட்டு / புரட்டு நூல்களும் பெருகுகின்றன. புராணங்களே வரலாறு என்று நிறுவ நிறைய நூல்கள் வெளிவருகின்றன. ஒருவர் ஒன்றைக் குறித்து ஒரு நூல் எழுதினால், அதை மறுத்து நால்வர் நான்கு நூல்களை எழுதுகிறார்கள்! மேலும், நூற்றுக்கணக்கான மொழிகள் - அவைகளில் வெளிவரும் பல்லாயிரக்கணக்கான நூல்கள். குறுகிய காலமே வாழும் ஒரு மனிதனுக்கு, இத்தனை நூல்களினால் கிடைக்கும் பயன் என்ன? அதுபோக, எல்லாராலும் நாற்பது வயதிற்குள் இருபதாயிரம் நூல்களைப் படிக்க முடியுமா என்ன!*

Δ

*எனவே தெரிந்தெடுத்து வாசிப்பதிலும், அறிந்து தெளிந்த உண்மையை மட்டுமே எழுதுவதிலும் ஒருவர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் – உறுதியோடு இருக்க வேண்டும். ஒருவரின் நுண்ணறிவையும் நம்பிக்கையையும் வளர்க்க உதவாத எந்தவொரு நூலும் பயனற்றது என்று சொல்லலாமா!*

Δ

*பக்தி விருத்தி அல்லது பற்றுறுதியின் வளர்ச்சிக்கு நூல்கள் எந்த அளவுக்குப் பயன் தரும்? நம் விசுவாசத் தகப்பன் ஆபிரகாம், அவரே விசுவாசத்தின் தகப்பன் என்று நம் அனைவராலும் கொண்டாடப்படுபவர் – ஆனால் அவர் வாசித்த நூல் எது? அசைக்க முடியாததாக இருந்தால் மட்டுமே அது விசுவாசம். அதையே ஆபிரகாமின் வாழ்க்கை கற்றுத்தரும் பாடம் என்பதை எழுதப்பட்ட வார்த்தை வழியாகவே நாம் அறிந்து கொள்கிறோம்.*

Δ

*ஆங்கிலத்தில் பைபிளுக்கு நூற்றுக்கணக்கான விளக்கவுரை நூல்கள் உள்ளன – இனிமேலும் புதிது*

*புதிதாக வெளிவரலாம். மேத்யூ ஹென்றி என்பார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய, 24000 பக்கங்கள் கொண்ட (சின்னஞ்சிறு எழுத்துகளில் 5633 பக்கங்கள்) விளக்கவுரை இன்றுவரை வாசித்துச் சிலாகிக்கப்படுவது – நிறைவான, உற்சாகமான வாசிப்பு உணர்வைத் தருவது. ஒவ்வொரு வசனத்திற்கும் இணை வசனங்களைக் கோர்த்து, இன்றைக்கு எனக்கு இருப்பது போல, எந்தவொரு கணினியின் துணையுமில்லாமல் அவர் எழுதியுள்ள விளக்கவுரை, வாசிப்போருக்கு மலைப்பூட்டுவது. கடவுளையும், அவர்தம் வார்த்தையையும் குறித்து எழுதுவதற்கு மேத்யூ ஹென்றி முடிவுமல்ல; வாரன் வியர்ஸ்பி போல, அதற்குப் பிறகு எழுதியோரின் எழுத்துகள் பயனற்றவையும் அல்ல. இவர்களின் எழுத்துக்களை மட்டும் அல்லாமல், இன்னும் பல திருமறை அறிஞர்களின் எழுத்துருக்களை வாசிப்பது இளைப்பும் அல்ல.*

*ஒவ்வொரு நாளும், வேத வாசிப்பும், தியானமும் மட்டும் அல்லாமல், இவை போன்ற துணை நூல்களை வாசிப்பதும் இனிமையான, பயனுள்ள அனுபவத்தைத் தருவது; நமது ஒவ்வொரு நாள் வாழ்க்கைக்கும் புதிய பொருள் சேர்ப்பது, புத்துணர்வூட்டுவது.*

Δ

*சீர்திருத்தத் தந்தை மார்ட்டின் லூத்தர், பற்றுறுதி வாழ்க்கையில் நாம் வளர வகுத்த எளிமையான கோட்பாடுகள்:*

*"கிருபையால் மட்டுமே";*

*"மீட்பரால் மட்டுமே";*

*"விசுவாசத்தால் மட்டுமே";*

*"இறைமாட்சியால் மட்டுமே";*

*"வார்த்தையால் மட்டுமே".*

*இவற்றில், "வார்த்தையால் மட்டுமே" என இறுதியாகச் சொல்லப்பட்டாலும்,* ***வார்த்தை வாசிப்பே, உண்மையை உணர அடிப்படையானது.*** *வாட்சப் வழியாக ஒவ்வொரு நாள் காலையிலும் சில*

பல வேதப் புரட்டு உபதேசங்கள் வந்து கொட்டும் இந்நாட்களில், அவை வேதத்திற்கு எவ்வளவு முரணானவை என்று ஒருவர் அறிந்து தெளிவடைய, வேத வாசிப்பும் ஆவியானவரின் துணையும் இன்றியமையாதது.

நமது அறிவை வளர்த்துக் கொள்ள ஆயிரம் நூல்கள் இருக்கலாம்; ஆனால் வார்த்தையில் வளர நமது கரங்களில் தவழ்வது திருமறையே! அதனை வாசிப்பது ஒருபோதும் இளைப்பு அல்ல; எனவே வேதத்தை வாசித்து விசுவாசித்தில் வளருவோம்.

வசனம் 12:13-14
தனது வாழ்க்கையின் அனுபவங்களின் அடிப்படையில் ஒரு நீண்ட உரை போல பல வினாக்களைத் தொடுத்த சபை உரையாளர், அனைத்திற்கும் சுருக்கமான முடிவாக இந்த இரண்டு திருமொழிகளை அமைக்கிறார்.

வசனம் 12:13
"கடவுளுக்கு அஞ்சி நட; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படி" –
பார்க்க, இணைச் சட்டம் 6:2, 10:12-13; மீக்கா 6:8.

யோபு முதல் சபை உரையாளர் வரை அமைக்கப்பட்ட ஞான இலக்கியங்களில், KJV திருப்புதலின் அடிப்படையில், நேரடியாக இறையச்சம் இடம்பெறும் திருமொழிகள்:
யோபு நூலில், 4:6, 6:14, 23:15, 28:28;
திருப்பாடல்கள் நூலில், 5:7, 19:9, 22:23&25, 25:14, 31:19, 33:8&18, 34:7&11, 60:4, 61:5, 64:9, 67:7, 96:9, 102:15, 103:17, 111:5&10, 119:63&120, 135:20, 145:19;
நீதிமொழிகள் நூலில், 1:7&29, 2:5, 8:13, 9:10, 10:24&27, 14:26-27, 15:16&33, 16:6, 19:23, 22:4, 23:17;
சபை உரையாளர் நூலில், 5:7, 12:13.

*- இந்த வசனங்கள் சார்ந்தும் தொடர்ந்தும் இன்னும் பல வசனங்கள் உள்ளன. (கடவுளுக்குக்) கீழ்ப்படி, (கட்டளைகளைக் / திருச்சட்டத்தைக்) கடைப்பிடி என்பனவும் இந்த நூல்களில் தொடரும் கருப்பொருள் என்பதை நாம் அறிவோம்.*

Δ

*கடவுளுக்கு அஞ்சி, அவருடைய திருச்சட்டத்தைக் கைக்கொண்டு வாழ்வோர் –*

** சுயநீதியைச் சார்ந்து வாழ மாட்டார்கள், 7:16*

** பொருள் தேடி அலைந்து திரிய மாட்டார்கள், 5:10&15, 6:9*

** அதிகாரப் போக்கில் நடக்க மாட்டார்கள், 8:9*

** கொடுமை செய்யத் துணிய மாட்டார்கள், 4:1-3*

** தீமை செய்யத் துணிய மாட்டார்கள், 8:11-12*

** சிரித்துக் களித்து வாழ மாட்டார்கள், 2:2*

** கடவுளைத் தேடாமல் இளமையை வீணடிக்க மாட்டார்கள், 12:1*

Δ

*"இதற்காகவே மனிதர் படைக்கப்பட்டனர்" –*
*<u>OV</u>, எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே; <u>KJV</u>, for this (is) the whole (duty) of man; duty அல்லது கடமை அல்லது படைக்கப்பட்ட என்று சொல்வதற்குரிய மூலச்சொல் ஏதும் இல்லை. வசனத்தின் கருப்பொருளுக்கு அழுத்தம் தரும் வண்ணம் திருப்புதல் ஒவ்வொன்றும் அமைந்துள்ளது.*

*வசனம் 12:14*
*மேலும் பார்க்க, 3:17, 11:9; மத்தேயு 12:36; திருத்தூதர் பணிகள் 17:30-31; உரோமையர் 2:16; 1 கொரிந்தியர் 4:5; 2 கொரிந்தியர் 5:10; எபிரேயர் 4:12-13.*

*முந்தைய வசனத்தில் உள்ளது உள்ளபடி நேர்மறையாக மனித வாழ்வின் நோக்கத்தைக் குறிப்பிட்ட சபை உரையாளர், இங்கு கீழ்ப்படியாமையின் விளைவைக் குறிப்பிடுகிறார். படைப்பில் ஆதாம் மற்றும் ஏவாவின் முதல் மீறல்*

*கீழ்ப்படியாமையே என்பதையும், அதற்காக அவர்கள் அப்போதே தண்டிக்கப்பட்டனர் என்பதையும் நாம் அறிவோம்.*

Δ

*அந்தரங்கம் அல்லது மறைவான செயல் என்பதே, ஒருவர் தானாக வெளிப்படுத்தாத செயல் - அவ்வளவே. எந்தவொரு மறைவான செயலையும், அனிச்சையாகத் தனது உடல்மொழி மற்றும் வாய்மொழியின் தன்மை வழியாக ஒருவர் வெளிப்படுத்திக் கொண்டேதான் இருக்கிறார். நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் அதனை உணர்ந்தே இருப்பர். முக தாட்சண்யம் கருதி அதனை யாரும் வெளிப்படுத்த மாட்டார்கள். எனவே, இந்த விதத்தில் எவரும் தான் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்டதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். இந்த உலகோரின் வழிகளில் வாழ்வோர், இவ்வுலகோர் முன்பு எவ்வளவுதான் சாமர்த்தியமாக நடந்து கொண்டாலும், கடவுளே நியாயம் தீர்ப்பார். ஏனெனில் அவர் பட்சபாதம் செய்கிறவர் அல்லவே! (இணைச் சட்டம் 10:17)*

*சாலமோன் அரசர் சுமார் இருபது வயதிற்குள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார் (மேத்யூ பூலே); நாற்பது ஆண்டுகள் அவர் மொத்த இஸ்ரயேலையும் அரசாண்டார் (1 அரசர்கள் 11:42; 2 குறிப்பேடு 9:30). எனவே தனது அறுபதாம் அகவையில் அவர் காலமாகி இருக்கக்கூடும். ஞானத்தில் ஒருவர் தேர்ந்த முதிர்ச்சி பெற இது சரியான வயதா என்று நம்மில் சிலர் நினைக்கலாம்.*

*தனது ஆட்சியை இரத்தம் சிந்தித் தொடங்கிய சாலமோன், உடனேயே உள்நாட்டில் அமைதி நிலவச் செய்து விட்டார். தாவீதின் காலத்திலேயே அருகமை நாடுகளோடு நல்லுறவு ஏற்பட்டுவிட்டது. மேலும் அதனைத் தனது திருமண உறவுகளின் வழியாக சாலமோன் உறுதி செய்தார். மாட்சிமிகு ஆலயம்,*

*அழகிய அரண்மனைகள் மற்றும் எழில்மிகு வனங்களைக் கட்டி எழுப்பி, பல நாடுகளில் பெரும் புகழை ஈட்டினார். இவற்றிலெல்லாம் அவருடைய ஞானம் விளங்கியது. அதனால் கவரப்பட்டு, பல நாடுகளிலிருந்து ஞானிகள் அவருடைய ஞானத்தைப் பகிர்ந்து கொள்ள வந்தனர்.*

*பகிர்வதில் உறுதியடைவதும், பெற்றுக் கொள்வதில் வளர்வதும் ஞானம். எனவே, ஞானம் அவருள் பேருருக் கொண்டு வாழ்ந்தது.*

*அவர் எவ்வளவு சிறப்பாக உண்டு குடித்துக் களித்தவர் என்பதை பைபிளிலேயே நாம் வாசிக்கிறோம். இவ்வுலக சுகபோகங்களின் எல்லைகளை அறிந்த ஞானி ஒருவரின் வாழ்க்கை தரும் ஆற்றல்மிகு செய்தி:*

***கடவுளுக்கு அஞ்சி நட.***

*மோசேயில் தொடங்கிய இந்தச் செய்தி, யோபு நூல் (23:15) தொடங்கி, ஞான நூல்களின் உறுதியும் இறுதியுமான செய்தியாகப் (யோபு 28:28; திருப்பாடல் 111:10; நீதிமொழிகள் 1:7&29, 9:10) பேருருக் கொள்கிறது. மெய்ஞானிகள் ஆயினும், விஞ்ஞானிகள் ஆயினும், கடவுளுக்கு அஞ்சி நடங்கள்; இதுவே சபை உரையாளர் விடுக்கும் நல்வாழ்விற்கான ஒரே செய்தி.*

Contact Information:
WhatsApp & Telegram: +919443338739
Facebook: https://facebook.com/groups/orae.vazhi/
Email: paul_palk@yahoo.co.in

நூலிலிருந்து ஒரு துளி:

சபை உரையாளர் 9:11 – இறுதிப் பகுதி

'எவருக்கும் வேளையும் வாய்ப்பும் செம்மையாய் அமைய வேண்டும்'

இந்த உலகில் பிறக்கும் எவருக்கும் வாய்ப்பு சமமாக இருக்கிறதா?

வேளை அமைவது என்பது நுண்ணறிவு சார்ந்தது என்றாலும், இங்கு சபை உரையாளரே சுட்டிக் காட்டுவது போல, அது ஒருவரின் கைகளில் இல்லை. ஆனால் வாய்ப்பு எல்லாருக்கும் சமமாக இருக்க வேண்டும். சம வாய்ப்புக்கான போராட்டம், இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் அவருடைய வீட்டிலிருந்து தொடங்குகிறது.

பாலினம், நிறம், இனம், மதம், ஜாதி என்ற யாதொன்றாலும், பிறப்பின் அடிப்படையில், எவருக்கும் வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்பதே உலகெங்கும் இறையடியார்களின் போராட்டமாக *(Feminist Theology, Black Theology, Minjung Theology, Dalit Theology, Queer Theology and so on)* இருக்கிறது.

நன்கொடை: ₹ **350.00**